Q7.w
N10
119789

பிஸ்மில்லாஹி.

ஹஸ்ரத் ஹபீபு நபிமுஹம்மது முஸ்தபா
சல்லல்லாகு அலைஹி, வ, ஆலிஹி, வ,
அஸ், ஹாபிஹி வசல்லம் அவர்களின்
சிறியதந்தையாகிய

அமீர்ஹம்ஜாஜங்க்

முதற்பாகம்.

இஃது,

கும்பகோணத்தைச்சார்ந்த கோவிக்தகுடி ம-ா-ா-ஸ்ரீ,
கதீப் அமீன்சாகிப் அவர்களின்
குமாரர்களாகிய,

ஹகீம் ஸைக்தாவூத் சாகிபு
ஹகீம்முகம்மதுஷம்சுத்தீன்சாகிபு

இவர்களால் ஹிந்தி பாஷையிலிருந்து
தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.

சென்னை-ருவே:
லண் ஆப் இண்டியா அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.
1910.

Registered Copy Right.

விலை ரூபா 1-8-0.] வி-பி-சார்ஜ் அணா-4.

நெ-14. ஆரிமுத்துமேஸ்திரி தெருவு, மதராஸ். N. C.

பிஸ்மில்லாஹி.

ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலருக்கும் தெரிவிப்பது யாதெனில், 1867-வது வருஷத்திய 25-வது ஆக்டின் 20-வது பிரிவின் 6-வது விதியின் பிரகாரம் இத்தூலை காப்பி ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கின்றது. ஆகையால் இத்தூலுக்குடையவராகிய ஹகீம் ஷைக்தாவூத் சாகிபு ஹகீம் முஹம்மது ஷம்ஷுத்தீன்சாகிபு உத்தரவின்றி இதை வேறுவிதமாக மொழிபெயர்த்தலும் அல்லது, இதிற் கண்டிருக்கிற பாகங்களைப் பிறர் அச்சிடுதலும் கூடாது. அப்படி அச்சிட்டால் அதனால் உண்டாகும் நஷ்டத்தை வசூல் செய்யப்படும்.

எழுது விலாசம்.

ஹகீம் ஷைக்தாவூத்சாகிபு.

ஹகீம் முஹம்மதுஷம்ஷுத்தீன்சாகிபு.

கெ-27. அப்பமேஸ்திரிதெரு,

மாபுஸ்கான்தேவடி, மதராஸ்.

11 9 10
2 9 23

(பிஸ்மில்லாஹி)

கூடலூர். தண்டிகைக்கவிராஜ பண்டிதரென்னும்

ஞான வித்வான்ந்தப்பசங்க

அஷ்டாவதானம்.

THE REGISTRAR OF BOOKS
REGISTERED
26 MAY 1910
MADRAS.

சதகு. முஹம்மதப்துல் காதிறுப்புலவரவர்கள்

இயற்றிய

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

செருக்கடலைக் கடந்தகரத்தரபியர் தங்கோத்ர
சிங்கமெனும் அமீர்ஹம்ஜா ஜங்கெனும்போர்க்கடலில்
பெருக்கமுறுங் கடலேழுங் கண்டுளமேநடுங்கிப்
பேரோசை கொண்டுவாய்ப் பினற்றவிதகாறும்
இருக்கிறதென் றுலகுடையா றிறுதயத்தைப்போது
மிலங்குபுகழ்ச் சரித்திரத்தை ஹிந்தியிலேயின்றுந்
திருக்குடந்தைக் கடைத்தகோ விந்தீகுடிதீனேர்
தினங்களிக்குங் கத்திபு அமீன்ஸாஹிபின்ற.

சந்ததிகளாயுலகில் வர்தருண சாஸ்தர்
சகலகலா வகத்தியன்தன் வந்திரியும்போன்றோர்
சுந்தரஞ்சேர் செண்ணியில்லூ நாதிமிசுரான
சுரியானி பலாத்தூரி ஹக்கிம்களானோர்
கந்தரம்போற் கொடித்தருளுங் கையம்மதிமெய்யர்
கனகர்வைரு தாவூத்ஷுஷாத்தீன்சாஹேப்
செந்தமிழால் மதுரமிகு வாசகமாலச்செய்தே
தெகமணித்தம் விரித்திட்டார் சிறந்திலங்குமாதோ.

ஷை கூடலூர் தண்டிகைக்கவிராஜ பண்டிதரவர்களின் குமார்ராகிய,
யூஸுப், ஸாஹிவித்திசங்க ராஜ்வைத்திய சாலைக்கதிபராகிய,

S. M. குலும் கர்கிறுப்பண்டித ரவர்களியற்றிய

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

அடலரசர் தெடிகளெலாம் நடுங்கத்தீர்க்கும்
அமீர்ஹம்ஜா ஜங்கெனும்போ ராட்டந்தன்னை
கடலுலகர் கண்டிதைப்போற் சண்டைவேறு
கண்டதில்லைக் கேட்டதில்லை யெனக்கொண்டாட
தடமகுட ரும்பரவும் ஹக்கீம்ஷெய்கு
தாஹத சாஹிபுடன் ஷம்ஷுத்தீனும்
நெடியஹிந்தி யாபினின்றுந் தமிழிலாக்கி
நீட்டினர் வசனமதாய்க் காட்டினரே.

கூடலூர். யூனானி மெடிகல் ஹால்

தண்டிகை கவிராஜ பண்டிதரவர்களின்

பௌத்திரிகேயரில் சிரேஷ்ட்ராகிய

A. S. முஹம்மது ஜெயினுலகவுஸ்

பாவலரவர்களியற்றிய,

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

வானகம் விளங்குஞ்சோதி மக்கமுவா முறபிகோத்தப்
பூகாயுதமென் றேத்தும் புகழுமீர் ஹம்ஜாவின்போ
ரானதை யறபில்நின்று மரியநற்றமிழிலாக்கி
தேனகர் யாரும்போற்ற சித்தமே மகிழ்ந்தளித்தார்.
கற்பூரம் நெளபல்நானக் நாணக்சந்தர் விவேக
அற்புதக் காதைவைத்தி யாமிர்த போதினிச்சீர்
சொற்பெறு மாஹிஜாபின் சுந்தரச் சரிதமாதி
பற்பெரு நூலுஞ்செய்தே பாரெலாம் பரத்திநின்றார்.

மாவிந்தப் புயத்தர்வேத வாக்கியர் குப்பகோணு
கோவிந்தக் குடிகத்திபு குலனமீன் ஸாஹிபின்ற
மாவிந்துங் குமார்சென்னை பஹாவவு டதத்தின்சால்ல
காவந்தாம் ஹுக்கீம்கள் தூய கருத்தினர் பெருத்தவாபூவுக். (3)

சீதசக்திர முகத்தார் செந்தமிழ்ப் புலவராலும்
பூதலத் தரசராலும் புகழ்மெட லனைகபெற்றோர்.
நீதகற்றிடுந் திறத்தார் வெய்குதா ஹுதசாஹிப்
காதலன் ஷம்ஷுத்தீனுங் கலிவல்லார் மலிவில்லாரே. (4)

மதுரை ஜில்லா-செம்பூர்.

தமிழ்ப்பண்டிதர், ம-ள-ள-ஸ்ரீ,

வீ. ஆறுமுகஞ்சேர்வை யவர்களியற்றிய

அறுசீர்க்கழி நேடிலடி யாசிரிய விருத்தம்.

தண்டரளச் சங்குலவு சாகரஞ்சூழ் தாரணியிற்
சால்சீத்தார்
எண்டிசையு மொளிபரப்பு மாதித்த னெனத்தவத்தா
லிசையிற் றோன்றிப்
பண்டறத்தி னெறிகடந்தார் தமைமடித்து நன்மார்க்கம்
பரவச் செய்த
திண்டிறத் தகீர்ஹம்ஜா வெனுங்குரிசில் சரிதமதைச்
சீர்த்தி மேவ.

தந்தமுள வரபிலிருந் துவப்பினெடு தமிழ்மொழியிற்
சாரச் செய்து
அந்தமுள நல்வசன மாக்கியச்சிட் டெல்லோர்க்கு
மூழங் கீந்தார்
கந்தரஞ்சார் தண்டலைசூழ் கோவிந்த குடிவிளக்காக்
கருத வந்த
சுந்தரஞ்சார் கத்தீப மீன்வள்ளல் தவமுதிர்வாழ்
றோன்றி நாளும்.

சென்னையில்வந் துலகுவப்பத் தமிழ்முனிகொண் கணென்
செப்ப மேலா
மன்னுபல் வவுட்தங்க ளியற்றிபெங்கு மனுப்பியிசீச
மலிந்து செல்வம்
கன்னயமாக் கைகூட வாழ்வெய்து ஷெய்குதா
வூதீசாஹேப்
பன்னலமார் ஷமுஷூத்தீ னெனுஞ்பெரிய நிவர்பெருமை
பகீரப் பாற்றே.

மதராஸ் கலியுகவர்த்தமானி பத்திராதிபராயிய
சுந்தர ஜேய வீர சூர தீர கவிராஜ
கந்தசாமிபிள்ளை அவர்களால் இயற்றிய

சாற்றுக்கவி.

பதிநான்கு சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

திருவளரும் சொர்க்கபுரி யெனுமக்க நகரிற்
சிறந்தபுக ழோங்கு முஸ்லீம்
தீனுலா அப்துல்முக்க தல்லிபு புத்ரனுப்
தீர்மூட னேஜனித்து
டெருமசேர் மெஹர்னிகார் தனேமணக் துலகினில்
சேசுபுக ழானந்தமாய்ப்
பெட்புமீம் வியாகித்தா ஸைனும்புரவீ தனிலேறி
பூவுலகில் ஜெயமடைந்த
அருமைசேர் குறைஷிவங் கிஷதிலக ரென்னும்
அமீர்ஹம்ஜா திவ்யசரிதை
ஆதரா லிந்தியி லிருந்தநே யாவரும்
அன்புட னுணர்வதற்குத்
தருமகுண கத்தீப் ஏமீன்சு ஹிப் புத்ரர்கள்
ஷைக்தாவூத் ஷேஷூதீனும்
தமிழ்பாஷை தனிலியற் றியதைகண் காணித்த
தாணியோர் வாழ்த்துவாரே.

பிஸ்மில்லா ஹிற்ரஹ்மா னிற்ரஹீம்.

அமீர்ஹம்ஜா ஜங்கம்.

பதிநான்குசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

சீரிலகு வாவியுஞ் சோலைசூழ்ந் திடுதிவ்ய
சிங்கார மாய்விளங்கும்
தீனுலா வியமக்க நகரிற் பிறந்துலகு
சீருடன் வாழ்வதற்குப்
பேரிலகு ஜெயவீர செம்மல்ஹம் ஜாசரிதை
பேசுபுகழ் செந்தமிழினுல்
பெரிலக யான்பாட வெனதுநந்த் தாவினில்
பெருமைதந் தருள்புரியுமென்
நேரிலகு மனதினி லமர்த்திடுமென் னிறைவனே
நேமிவா னெங்குமுள்ள
நேர்ந்திடும் ஜீவர்க ளனேத்தையும் படைத்திடும்
ஞானந்த மானசோதி
காரிலகு மேகமிடை மழைபொழியும் வாறுபோல்
கழறிடவு மிச்சரிதையை
கர்த்தனே துணைபுரியும் ஹையுல் கையுமீர்
கபூருர் ரஹீமானவா.

அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன் அவ்ஸலாத்து
வஸ்ஸலாமு அலாரசூலிஹி ஸைபதினு முஹம்மதின்
வஅலா ஆலிஹி வஅஸ் ஹபிஹி வஸல்லம்
சம்மாபஅத்,

அல்லா சுப்ஹான ஹூவத்த ஆலாவினுடைய உதவியை
கொண்டும் இச்சரித்திரத்தை எழுத்த ஆரம்பம் செய்கிறேன். இனி
றுண் ஞானங்கும் சொற்சோர்வு, பதச்சோர்வு, இலக்கண பிழைகள்
ருந்திடினும் கல்வியிற் சிறந்த பெரியோர்கள் குறைகூறாமற் நிருத்தி
வரித்துக் கொள்வாரென வணக்கமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

நூல் வரலாறு.

சீருலாவிய பரதகண்டத்திற் சிறப்புற்றோங்கும் கங்கையென பொற்நகர் புரந்தானும் புகழ்ந்துரைப்பக் கல்வியிற் சிறந்த கவிஞர்களாற் ககனபுரியோவென்றனுதினமும்புகழ்ந்து பனுவலியற்றிமகிழ்வெய்தி சகலலோகங்களுக்கெல்லாம் சிரசாகிய மக்கமாநகரிற்சேர்ந்த ஈரான் தேசத்திலிருக்கும் மதாயின் என்னும் பட்டணத்தில் பக்தியிற் சிறந்தவனுய் தானகர்ம பரோபகாரம்புரியும் வள்ளலெனக் கீர்த்திவாய்ந்து குடிகளிடத்தில் ஆதிலொருகடமை யேற்று துஷ்டநிக்ரக சிஷ்ட பரிபாலனனுப் சிற்றரசர் நிறைசெலுத்த நிரவீரப்பிரகாசமாய் நவரத்ன மணிமகுடம் சிரசிற்சூடி செங்கோற்கர்ந்தாங்கி தக்தின்மீதமர்ந்த அரசரிமை புரிகையில் அவனுடைய பெருமையும் அருமையும் புகல்வதற்கு ஆயிரம்நாவடைத்தும்போதியுமோவெனின்; யாவர்தான்பகர்வாராயினும் சிலவற்றைச் சுருக்கமாய்ச் சொல்வதாயினும். அஃதெவ்விதமெனின், அந்த மதாயின் பட்டணத்தைப் பரிபாலனஞ்செய்துக்கொண்டிருந்த கிப்பாதேகாம்ருன் என்று சொல்லப்படுகின்ற அவனுடைய இராஜரீகத்தின் சேர்மையோ மிகவும் காருண்யமுடையதாகவும், அவ்வரசன் குடிபடைகளின்மீது அதிக கிருபையுடையவனும், நீதியில் தயாதிதியைப்போலவு மிருப்பவனுகையால், தர்க்குணங்கள், தர்ச்சேஷ்டைகள், தர்வியாதி, தர்மரணம், வறுமை முதலாகிய அக்கிரமங்களெல்லாம் அந்த மதாயின் பட்டணத்தின் மனிதர்களைத் தீண்டுவதற்கு பயந்து மனிதசஞ்சாரமில்லாத கானகங்களின் குகைகளில் பிரேதம்போலசைவற்றுத் தூங்கிக்கொண்டிருப்பதை அந்த மதாயின் பட்டணத்தில் வறுமையாளராகிய ஏழை, எளியோர், பக்கீர்களும் பிணியென்றுகேழ்க்கி வழக்கமின்றியவராய்லகூடாதி பிரபுக்களாயிருப்பார்கள், 'சுவர்க்கம் நரகம்' உண்டென்று யாவருக்குங் கேள்வியே யொழிய நேரிற்கண்ணாற் பார்த்தவ ரொருவருமில்லையல்லவா? அவ்விதமாய்ப்பக்கீர், பிசைக்காரரெனும் பெயர் மாத்திரம் அந்நகரத்தார் கேள்விப்பட்டிருப்பார்களேயல்லாமல் கண்ணாற் காண்பதரிது? முதலுடைய சீமான்கள் ஜக்காத் என்னும் தானதர்மம் செய்யவிரும்பினுல் அந்த வாங்கிக்கொள்ளத் தகுதியுடைய ஏழைகள் கிடைப்பது சிரமமாயிருந்தது, பலமுடையவர்களும் பலமற்றவர்களு நீதியில் ஒற்றுமையா யிருந்தார்கள். புராவும், வல்லூறும் ஒரு பலூசரத்தில் கூடியிருந்து முட்டையிட்டு குஞ்சுபொரிக்கும்படி.

யாயும், பெரியோர்கள் சிறியோர்களெல்லாம் ஒருமனதையுடையவர்களாய் ஒற்றுமையாயும், ஒருவருடைய நன்மையை ஒருவர் எதிர்பார்க்காமலும், இரவும் பகலும் வீடுகள், கடைகள், பஜார்கள் முதலாகிய இடங்களிலெல்லாம் 'உருவினைத்தியை உரையிற்போடாமல்' காவற்புரியும் சிப்பாய்களின் நேத்திரங்கள் எவ்விதம் விழி சிருக்குமோ? அவ்விதமே அந் நகரத்தரசனுடைய நீதியானது [illegible]துபோற் காணப்படும். ஆனல், அயலூர்வாசிகளாகிய திருடர்கள், வம்பர்கள், முறடர்கள், சண்டிகள், அநீதமுடையவர்கள், அஸ்மாத்தாய் வந்தாலும் நீதமென்னும் சம்மதையில் அரையுண்டு மாவாக் காற்றில் பறந்துபோய் விடுவதுபோலி அந்நகரமென்பதே அவ்வூரிலில்லாமலும், திருட்டென்னும் வாக்கியமே அவ்வூரின் குடிபடைகளின் வாக்கியத்திலில்லாமலும், வழிநடைக்காரர்கள் பாதையில் ஏதாயினும் ஒரு பொருள் கண்டெடுத்தால் அதை தாங்கள் அபகரித்தால் பாபமென்று அந்தப் பொருளுடையவர்களைத் தேடிக் கொடுக்கத் திரிந்தலையும்படியாயும், வீரபராக்ரமமும் மற்ற பயில்வானுமும் ருஸ்தும்கொப்பாகிய அதிவீரபராக்ரமமுடைய பயில்வானின் சமுகத்தில் அடிக்கினும், பலீவினமுடைய கிழவனைப்போல் தாழ்மையாயிருக்கவும், அந்த மதாயின் பட்டணத்தில் கிப்பாதேகாம்ருன் என்னும் அரசன் நீதியுடனே இராஜரீகஞ் செய்துக்கொண்டிருந்தனை, அம்மன்னன்சமுகத்தில் நாற்பதுமந்திரிகளும், அறிவுநிறைந்த புதுமாதுர்யவல்லவர்களாயிருக்கும் 700 ஹக்கீமகளெனனும் வைதியர்களும் அவ்வரசனின்தர்பாரில் எப்போதும் ஆஜராயிருப்பார்கள். அவ்வைத்தியர்கள் எப்பேர்ப்பட்டவர்களெனில், பலதூன, அரிஸ்து முதலாகியஉலகபிரசித்திபெற்ற ஹக்கீம்களும் அவ்வைத்தியர்களுக்குமுன்னுல் ஒன்றுந் தெரியாத 'தாலிபுல் இலம்' என்னும் வித்தியாசாலையில் கல்வியுணரும் மாணுக்கர்கட் கொப்பாய் பதிக்குமபடியாயிருந்ததோடு ஜூரிவிலும் பொதுவிலும் உலகத்தில் தமகு நிகரொருவருமில்லையென் றிருந்தார்கள். அவர்கள வைதியதத்துவத்திலும், மற்ற எவ்விதவிஷயத்திலும், ஜாலிநூஸ், அல்லூஸ, பீஸாகூர்ஸ் முதலியவர்களே தங்களுக்கு நிகரல்லாவெனறு நிணக்கக்கூடியவர்களாயிருந்தார்கள். இன்னும் அந்த ராஜனிடத்தில் எழுநூறு தர்ஜுமாகாரர்களும், அவர்கள் ஒவ்வொருவரும் உஸ்தாதுகளுக்கு உஸ்தாதாகவு மிருந்தார்கள். இன்னம் நாலாயிரம் பயில்வான்களுமிருந்தார்கள். அவர்கள் எப்படிப்பட்டவ ரெனில், ஸாம், நரியிரஸ்தும்,

ஜால் முதலியவல்லமையுடைய புகழ்பெற்ற பயில்வான்களும், அவர்களின் சமுகத்தில் வந்தால் தங்கள் கேடகத்தைச் சமர்க்களத்தில் எரிந்துவிட்டு அடிமைபென்னும் பாவளி காதி லணிந்துக்கொண்டு தலைகுனிந்து வணக்கத்துடனே நிற்கும்படியாயுமிருந்தார்கள். இன்னும் அவ்வாசனுக்கு முந்நூறு இராஜாக்கள் பகுதிசெலுத்தவும், உத்திரவுக்கு சிரம் சாய்ப்பவர்களாயு மிருந்தார்கள்.

இன்னும், பத்துலக்ஷம் ரனவீரர்களாகிய பௌஜ்களும், பதினாயிரமகுலாம்களு மிருந்தனர்கள். அந்தகுலாம்கள் எப்பேர்ப்பட்டவர்களானால் அதி ராதனமாகிய பசுந் தங்கமிழைத்த சரிகையில் கஷீதாகேலிகள்செய்த இடைக் கட்டுகளை யுடையவர்களாய் நவரத்தினங்கள் விழைத்த பொற்பணி பூஷணலங்கிர்த மணிந்து காண்போர் வியப்புறுந் தனமைபாய் கிப்பாதே காம்ரூன் பாதுஷாவின் தர்பாரில் ஆஜராயிருப்பார்கள். அவர்களனைவரும் தமது பாதுஷா தம்மக்குக் குறிப்பிடும் தொழிற்குத் தயாரான முஸ்திப்புடன் ஆஜராயிருப்பார்கள். இததகைய நகரில் காஜாபக்தேஜமாலென்று வைத்திய சாஸ்திரத்தில் தேர்ச்சியுடைய ஹக்கீம் ஒருவரிருந்தனர். அவ் வைத்தியர், ஹஜரத் தானியால் அலேஸ்ஸலாமுடைய வம்மிஷத்திற் பிறந்து கல்வியிலும், வைதியத்திலும், ஜோவியத்திலும் அதிக தேர்ச்சியடைந்தவராய், அவருக்கு நிகரானவர் உலகமெங்கணுமில்லையென்று சொல்லும்படியான வல்லவராயிருந்தனர்.

இத்தகைய சாமார்த்தியமுடைய காஜாபக்தே ஜமாலென்னும் வைத்தியருடத்தில் அந் நகரத்தரசனுகிய கிப்பாதே காம்ரூன்பாதுஷா முதன்மந்திரியாகிய அல்கஸ் என்பவன், அதிக அன்புபாராட்டி தன்மா சரீரத்தைக் கவ்விக்கொண்டிருப்பதுபோலும், கண் இமையைப்பற்றி யிருப்பதுபோலவும், மிகமுற்ற சதையும்போல ஒற்றுமையாயிருந்து, அந்த காஜாபக்தேஜமாலென்னும் வைத்தியரிடத்தில் சகலவிதமான வித்தியாலக்ஷண கலைகளும், வைத்தியமும், ஜோதிஷசாஸ்திரமும், இன்னும் அவரிடத்திலிருக்கும்படியான சகலமான வித்தையையும் தான் கற்றுக்கொண்டு அவ் வைத்தியனை இரகஸ்யம் பகலும் ஹிர்தயத்திலே வைத்துக்கொண்டிருப்பவனைப்போல மஹாவிஸ்வாசியாய் கண்ணிலும், சில சமயம் பார்வையைவிட்டிருக்கும் உயிராவது சில சமய உடலை விட்டிருக்குமென்றாலும், இந்த அல்கஸ் மாத்திரம் காஜாபக்தேஜமாலென்னும் வைத்தியரை மற

வாமல் தனது மனைவாக்குக்காய மிம்முன்றையும் அவரிடத்தில் வைத்திருந்தனன். இவ்விதமா யிருக்கையில், சிலகாலஞ் சென்றபின் அந்த அல்கஸ்மென்பவன், ராஜ்முடைய கல்வியில் பூரணபடிப்பினையுடையவனும் தேர்ச்சி யடைந்திருந்தான்.

இங்ஙனம், முதன் மந்திரியாகிய அல்கஸ் நிலை இவ்விதமாயிருக்கையில், அவன் காஜாபக்தேஜமாலுடைய வார்த்தைகளில் முதன்மையானவனென்று பிரஸித்தி பெற்றிருந்தனன். இப்பேர்ப்பட்ட அருமையான வித்தைகளெல்லாம் பிராகிய காஜாபக்தே ஜமாலிடத்தில் கற்றுக்கொண்டவனுகையால், ஓர்நாள் அந்த அல்கஸ் அவரை நோக்கி, எனது பிர! முர்ஷதே! இவ்திரவு என்னுடைய மனமானது மிகவும் கலக்கமுண்டையதாய் திகில்கொண்டு யிருந்தது. ஆகையால், யான் தங்களுடைய நிருநாமத்திற்காக ஜோஸியக்கட்டளையை உருட்டிக் கணக்கெடுத்துப் பார்த்தேன். தங்களுடைய சித்தாராவென்னும் நக்ஷத்திரமானது மிடிமையில்தரிக்கப்பட்டதாய்க் கண்டேன். சில தினங்களுக்கு உமது வாழ்நாள் கஷ்டத்திலிருக்கிறதாக தெரிவருகிறது. அஃதெவ்விதமெனின், நாற்பதுநாள்வரையில் நக்ஷத்திரமானது அம்மிடிமையின்வீட்டிலேயே தரிக்கப்பட்டிருக்கும். ஆகையால் தாங்கள் அம்மிமையின் நாட்கள் கழியும்வரையில் வீட்டைவிடுத்து வெளியில் போகக்கூடாதென்றும், அந்நியர் வார்த்தையைக்கேட்கக்கூடாதென்றும், தமது பிரிய சிஷ்யனுகிய நானும் இந்த நாற்பதுநாள்முடியுமட்டாயினும் தங்களைவிட்டுப் பிரியாமலும் தமது ஸ்ரீபதத்திலேயே எனது வீட்டைவிட்டு வெளி கிளம்பாமலும் தங்களை சந்திக்காமலு மிருப்பேனென்றும் சொன்னன். இவ் வசனங்களைக்கேட்ட காஜாபக்தேஜமாலென்னும் வைத்தியர். அரசனுடைய முதன்மந்திரியும், தன்னுஷாகிர்துமாகிய அல்கஸ் சொற்படியே அன்றையதினமுதல் தங்கள் வீட்டுக்கதவைப் பந்தனஞ் செய்துக்கொண்டு தன்னுடைய [illegible] நிப்பதுகளையும் நீக்கி வீட்டை விடுத்து வெளியில்போகாமலிருந்தனர். இவ்விதம் மூப்பத்தொன்பது நாட்களும், கழித்தபிறகு அவர் பிடித்த மிடிமை திரசை விடுத்து நங்கியிருந்தது. நாற்பதாம்நாள் அவருக்கு வீட்டிற்குள்ளிருக்க பிரியமில்லாததால் சற்றுநேரம் யோசித்து இந்நகரில் நமக்கு அன்பும் பிரியமுள்ளவர்கள் அல்கஸ் மந்திரியைத் தவிர மற்றொருவருமில்லாத படியால் அவரைப்போய்க் கண்டு சந்தித்து வருவோமென்ற எண்ணத்துடனே அஸாவென்னும் தடிக்கம்பை கையில் பிடித்தவராய் பட்

டனத்தின் வழியைவிட்டு நல்ல காற்று சுகத்தைத்தேட சமுத்திரக் கரையோரமாய் நடந்துசென்றார். அச்சமயத்தில் வெய்யலின் காங்கையான நேரமாயிருந்தபடியால் "அந்த வெய்யலின் கடுமை தாங்க முடியாமல் ஓர் மரத்தின்நீழலில் உட்கார்ந்தார். அவ்வேளையில் அவர் கண்ணுக்கு ஒரு கட்டடம் அதிக பெரிதாய் காணப்பட்டது. ஆனல் அக்கட்டடத்தில் நான்குகுவர்களும்விழுந்து இடிந்து பாழ் வீடாய் தெரிந்தது. அவ்விடானது முழுவதும் இடிந்திருந்தாலும் ஓர் அரை மாத்திரம் நான்குசுவர்கள் அமைந்தவையாய் மேற்கூரையும் இல்லாதாயிருந்தது. அம்மதெவ்விதமெனின், ஆசான்களுடையமனமானது எவ்விதமாய் மாசு மருவற்று காலியாயிருக்குமோ அவ்விதமாய் யாதொரு மனிதசஞ்சார மற்றதாயிருந்தது. அவ்வீட்டின் அரையின் வாசற்படியானது செங்கல்லினல் மூடப்பட்டிருந்தது. அப்பொழுது, காஜாபக்தேஜமாலானவர் அவ்வாசற்படியின் கற்களை கையினல் இளறிப்பார்க்கும்போது அதற்குள் ஒரு சிறுதவுதெரிந்தது அந்தக்கதவுக்குப் பூட்டுமிட்டிருந்தது. அதனை காஜாபக்தேஜமால் ஒருகல்லினல் உடைத்து திறக்க எண்ணமுடையவராய் அந்தப் பூட்டின்மேல் கையைவைத்தார். அது நாள்பட்ட பூட்டானபடியால்தரு ப்புபிடித்து மக்கியிருந்தது. அவர் கைவைத்தவுடனே பூட்டுடைந்து கீழேவிழுந்தது. உடனே காஜாபக்தேஜமால் கதவைத்திறந்து உள்ளே நுழைந்தார். அதில் ஒரு சாங்கமிருக்கக்கண்டு அதனுட்சென்று பார்க்கையில் அந்த சாங்கத்திற்குள் ஏழு கஜானுக்களென்னும் திரவிய மிருக்கக்கண்டு இவைகள் சத்தாதுடைய கஜானுவோவென்னினைந்து அதிலிருந்து யாதொரு வஸ்துவையும் எடுக்காமல் திரும்பி இச்செய்திகளை தனக்கு அதிக அன்னியோன்னியனும் ஷாஹிர்துமாகிய அல்கஸ் மந்திரிபிடத்தில் சொல்ல வேணுமெனக் கருதி மந்திரிவீட்டை நாடிவந்தார்.

காஜாபக்தே ஜமாலைக்கண்ட அல்கஸ்ஸெனினும் முதன் மந்திரியானவன், மஹா சந்தோஷமுள்ளடந்து மிக மரியாதையுடன் வரவழைத்து அவரை சிம்மாசனத்தில் அமர்த்தி மிகவும் அன்புபாராட்டியவனுய் எனது அன்புள்ள நண்பரே தங்களுக்கு இன்றையதினத்தில் நாற்பதாம்நாள் முடிவாகியிருக்க, தாங்கள் இவ்வளவு பிரயாசையுடன் யாதுகாரியமாய் வெகுதூரத்தில் இந்தமிஸ்ர்தேசத்தை விட்டிற்கு வருகலாயினீர்? நானேயதினம் மிஸ்ர்தேசத்தை யான் தமது வீட்டிற்குவந்து தங்களுடைய திருவடிகளை தரிசிக்க சித்தமாய்க்கார்த்துக்கொண் டிருக்கிறேனென்று மிகவும் வாஞ்சையுடன் சொன்னுன். அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற காஜாபக்தே ஜமாலானவர் மந்திரியாகிய அல்கஸை நோக்கி, பிரவும் அன்புடனே பற்பல விதமாகிய நன்மார்க்கவிஷயங்களை போதித்துக்கொண்டிருந்தபிறகு தாம் வழியில்கண்ட கஜானுவின் செய்தியைத்தும் இஞ்சிற்றேனும் மறைவுகவின்றி ஒளித்திடாமற் சொல்லிவிட்டு அப்பா! அல்கஸே! என்னுடைய கல்லகாலத்தின் சுகஜீத்திமானது, இப்பொழுது அலங்கி அந்த திரவிபக் குவியலெனும் கஜானுவானது, எனக்குத் தோன்றலாயின. ஆனல் அந்த கஜானுவோ இத்தேசத்தையாளும் சுமதி பாதுஷாவாகிய கிப்பாதே காப்ருனென்பவரின் ஆளுகைக்குள் சிருப்பதினல் எண்னைப்போல் மிடிமையாளர்களுக்கு எவ்விதமாய்ச் சித்திக்கப்போகிறதென்றும், அதையான் அபகரிக்க எவ்வளவும் சக்தியற்றவனு யிருக்கிறேனென்றும் தாங்கள் இவ்வரசனின் மந்திரியாயும், சகல சுகசுதந்திரத்திற்கும் உரியவராயு மிருக்கிறபடியால் தங்களுக்கே அத்திரவிய முழுமையும் கொடுத்துவிட என் மனப்பூர்த்தியான எண்ணமுடையவனு யிருக்கிறேன். தாங்கள் என்மீதில் கிருபை கூர்ந்து அதில் எவ்வளவு எக்கச்சக்கம் செய்கிறீர்களோ! அவைகளை மஹா பிரீதியோடு யான் பெற்றுக்கொள்ளுகிறேனென்று சொன்னுர்.

இவ்விதம் கஜானுவின் போசையைக் கேள்வியுற்ற அல்கஸ்ஸெனும் முதன் மந்திரியானவன் மஹா சந்தோஷசாகரத்தில் மூழ்கியவனும், இனிமேல் நமக்கு யாதொரு குறைவு மில்லை யென்னுமனமகிழ்ந்து மதங்கொண்ட யானைபோல ஆசனத்தை விட்டெழுந்து எவ்வாளர்களை வரவழைத்து இரண்டு குதிரைகளைத் தயார்செய்யச் சொல்லி ஒன்றில் காஜாவை ஏற்றச்செய்து மற்றொன்றில் தானும் சவாரியாகி காஜாவுடனே கஜானுவிருக்கும் இடத்தைநாடிக் காட்டின்வழியே போய்க்கொண் டிருக்கையில், காஜாபக்தேஜமாலானவர் அல்கஸை கஜானுவிருக்கும் இடத்தில் அழைத்துக்கொண்டுபோய் இதோ காணிபீரெனப் புகன்றனர்.

அவர்சொல்லைக் கேள்வியுற்ற அல்கஸ் மனம் பூரித்தவனுய்க் குறிப்பித்த இடத்தை எட்டிப்பார்த்த வுடனே மனக்திடுக்கிட்டு ஆ! தென்ன அச்சரிய மென்று காபரப்பட்டு ஒன்றுக்கோற்றவனுய் சற்றுநேரம் நிதானித்து, சந்தோஷமெனும் பூரிப்பால் திரேகம், விம்மிவெடித்து இறந்துபோய்விடும்படியான விதமாய் திகைத்திருந்

தான். ஆனால் அவனுக்கு தனது ராஜனுடைய க்ஷேமம் மனதில் இல்லாதிருக்கில் க்ஷேமமே மவுத்தாகிவிடுவா னென்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால் அல்கஸ்ஸென்னும் மந்திரியானவன் சற்றுநேரம் ஆலோசித்து இன்றையதினம் ஆண்டவன்மீது திருஷ்டிசுழற்றி எகுசானென்னும் நன்கொண்டதந்தானென்று மதித்து, இந்த காஜாபக்தேஜமாலுக்கு இந்த கஜானாவினுடைய இரகஸ்யம் தெரிந்துகொண்டிருப்பதினால் எவ்விதமாயிருந்தாலும், பாதுஷாவிடம் போகன்றால், நமக்கு இவற்றில் கொஞ்சமும் சித்திக்காது. எல்லாம் அரசனுடைய கஜானாவில் சேர்ந்துவிடுவதுடன் நாமும் அரசனுக்கு பகையாளியாய் விடுவோம். நமது மந்திரி உத்தியோகமும் இங்கி நமது கழுத்துக்குச் சித்தியுற்றுவிடுவதுடன், நாம் பழமையாய் சம்பாதித்துச் சேர்த்துவைத்திருக்கும் ஆஸ்தி, பூஸ்திதிகள், பாவையும் அரண்மனை பொக்கிஷத்தில் சேர்த்துக்கொண்டு நமது பெண்சாதி பிள்ளைகளையும் ஊரைவிட்டுத் துரத்தி பாதேதிகோலமாக்கிவிட்டு, என்னுடைய வீடுவாசல்களையும் அபகரித்துக்கொண்டு என்னுடைய பெயரை எங்குமில்லாமற் செய்து விடுவானே. இவ்விதமாய் நேரிட்டால் யாமென்னசெய்வது, அன்றியும், அறிவுடையோர்கள் வெள்ளம்வருமுன்னே அணைகோலிக் கொள்வாரென கல்வியிற் சிறந்த ஷோர்களு மெழுதிவைத்திருக்கும் பழமொழிகளையும் நன்றாய்க் கவனித்திருக்கிறோமல்லவா? ஆகையால், கண்ணிருந்தும் கேணியில் விழுந்திருந்தோர் தன்மையாய் இந்தத் தன்பத்தில் குட்படாமலிருக்க தகுந்த முயற்சியானவழி யென்னவென்றால் இந்த காஜாபக்தே ஜமாலென்பவனை வெட்டி இந்த இடத்திலேயே போட்டுவிட்டு, இந்த கணக்கிலடங்காத கஜானாவை உடனேஎடுத்து மூட்டைகட்டிக் கொண்டுபோய் வீட்டில் பத்திரம் செய்துக்கொள்வோமானால், இந்த ரகஸ்யம் யாருக்கும் வெளிப்படாது என்றெண்ணி யவனுப் திடீரென்று காஜாபக்தேஜமாலைப் பிடித்துத் தோளைவளைத்து உட்கார்த்து வாளையுருவி கழுத்தில் வைத்தான். அப்போது காஜாவானவர் இதைதான் கர்ச்செய்கைகளைப் பார்த்து பிரமித்து, ஆ! அல்கஸ்ஸென்னும் மந்திரியே! உனக்கென்ன இருந்திறேனும் நற்குணம் பொருந்தியிலையே யான் உனக்கு நன்மைசெய்வதற்குப் பிரயாசை பெடுத்துக்கொண்டதற்கு நீ நிமகசெய்யலாமோ பது பரமல்லவோ அவரவர்செய்யும் நன்மைதீமைகளை அல்லாஹ் ஹானகுவத்தாலா பார்த்துக்கொண்டிருக்கிறானே அவ்விதமிருக்க,

யான்புரிந்த இம்மாதிரிக்கு பதில் இதைதானுக்கும், யான் தங்களுக்கு செய்தகுற்றமென்ன, யாதுகாரணத்தினால் என்னுழுத்தை அறுக்கவிரும்புகின்றீரென்று பலவிதமாகிய நியாயங்களைப் போதித்தும் தனது உயிரைக்காக்கவேண்டி வெகுபரிதாபமாய்ப்புகன்றும், அந்தக் காதகனான்னெஞ்ச முடைய அல்கஸென்பவன் கொஞ்சமும் மனமிரக்கமல் அவ்வயோதிகராகிய காஜாபக்தே ஜமாலின் கழுத்தை யறுக்கத் துணிந்தான். அப்பொழுது அந்தப்பெரியவர் கனம்பதவி கஸ்தூரியினுடத்தில் அகப்பட்டுத் தத்தளிக்கும் ஆட்டைப்போல் கதறி பதறியழுது, இப்பொழுது யாம் இந்தபாதி கையிலிருந்து தப்பித்துக்கொள்வதற் கிலாது. இன்னும் ஒருநிமிஷத்தில் கொன்று விடுவானென் றெண்ணி மனமிடைந்தவராய், ஆ! அல்கஸ் நீ இத்தனை காலாய் என்னிடத்தில் மஹா விஸ்வாசமுடையவனு யிருந்து கடைசியாய் நீ என்னைக் கத்தல்செய்வதற்கு துணிந்துவிட்டாயே நீ என்னுடைய பழியைச் சமத்தி அலையப்போகிறாய், ஆனாலும் என்னுடைய இரண்டு ரகசியத்தையும் வார்த்தையும் கேட்டு பொப்புக்கொண்டால் யான்சொல்கிறே னென்றுசொன்னார் அதைக் கேள்வியுற்ற வன்னெஞ்சன் அந்த ரகசியத்தென்ன சிக்கிரம்சொல் உன்னுடைய வாழ்நாள்களெல்லாம் முடிந்துவிட்டது. இனி தாமதப் படலாகாது. அதீதத்துடைய வாளாகிறது கொலைசெய்வதற்கு அதிக கூர்மையாய் விளங்குகின்றது என்று பேரிடி முழக்கம்போற் சொன்னான். அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற காஜாபக்தேஜமால் அந்த பாதகனுடைய அல்கஸை நோக்கி ஓ! அல்கஸே என்னுடைய வீட்டில் இன்றையதினத்தின் வஜீபனத்திற்கும் வழியில்லை. அதிக்குப் பானை முழுதும் ஓர் மணி கோதுமையும் கிடையாது. ஆண்டவனுக்காக ஏதாகிலும் என்வீட்டிற்கு கொடுத்தனுப்பிவிடு, அந்த எழைகளை சோரித்துக் கொல்வாய், இரண்டாவது ரகசியத் தென்னவென்றால், என்பெண்சாதி ஹமலாயிருக்கிறாள் அவளுக்கு நீ சொல்லிவிடவேண்டியது, அதாவது ஆண்குழந்தை பிறந்தால் அதன்பெயர் புஜ்ருத்தீன் என்றும் பெண்குழந்தை பிறந்தால் பெற்றவர்களின் பிரியம்போல் வைத்துக் கொள்ளவு மென்றும் சொல்லிவிட வேண்டியதென்றுசொல்லிவிட்டுக் கண்களைமூடிக்கொண்டு கலிமா ஷஹாதத்தை ஓத ஆரம்பித்து வாய் ஓயாமல் ஓதினார். அப்பொழுது அம்மஹா பாதகனுடைய கன்றியற்ற மூதேவி லகுனத்தைப்பெற்ற அல்கஸ்ஸென்பவன் முன்பின் யோசியாமல் காஜாபக்தே ஜமாலுடைய தலைவேறு

உடல்வேறாக வாளாயுதத்தினல்வெட்டி அவ்விடத்திலேயே போட்டு விட்டு அவர் எறிவர்த குதிரையையும் வெட்டி இருதுண்டங்களாக்கி அவ்விடத்திலேயே போட்டுவிட்டு அவ்வறையின் கதவுகளை முன்போல மூடிவிட்டு சடல்பக்கமாய்ப்போய்வாளாயுதத்தில் உள்ள இரத்தங்களையும், தன் கையிலுள்ள இரத்தங்களையும் கழுவிவிட்டு, அற்பவாழ்வுக்காகத் தன்னுடைய எமனை இழந்தவனுய் தனது குதிரையின்மீது சவாரியாகி அரண்மனையிற் போய்ச் சேர்ந்து அதிக மகிழ்ச்சியானந்தத்தோ டிருந்தான். மறுதினம், குதிரைசவாரி செய்துகொண்டு அத்தக் கஜானு விருக்கும் பாழ் அரண்மனையிற் போய்ச்சேர்ந்து அதைப்பார்த்துவிட்டு, தனதுவீட்டின் கஜானு அதிகாரஸ்தனை வரவழைத்து, ஹே! கஜான்சி! இவ்விடத்தில் நமக்காக ஓர் தோட்டமும் அதின் மத்தியில் ஓர் பங்களாவும், கட்டித் தயாராக வேண்டும். அந்த தோட்டத்தின் நான்கு கூவர்களும் சங்கேமர்மர் யென்னும் கல்லினுல் செய்யவேண்டும். அதற்குள்ளாகும் பங்களாவோ பேரேழுயினுல் கட்டவேண்டும். அதில் விதவிதமாகிய விநோதசாமான்களும் வைக்கவேண்டியது. இன்னும், அபூருபமான வஸ்துக்கள் எல்லாம் வைக்கவேண்டுமென்று சொல்லி வாய் மூடுமுன் அதிகாரத்தலைவன் வேலையாட்களை நியமித்து தச்சர்களையும், கொற்றர்களையும், கொல்லர்களையும் வரவழைத்து அல்கஸ் விருப்பத்திற் கிசைந்தபடியான சகலமுதலானவை யாவும் கொடுத்து வேலையை ஆரம்பித்து சில தினங்களில் அல்கஸ் உத்தரவுப்படியே சுற்று மதிற்சுவர்களும், பூந்தோட்ட கந்தவனமும், மத்தியில் பங்களாவும் தயாராய் முடித்துவிட்டார்கள்.

இத்தனை அதிவிநோத அபூர்வ சுவரத்ன கனிதமயமாயிருக்கும் கந்தவனத்தைக் கண்ணுற்ற அல்கஸ் என்பவன் ஆனந்தபாவசமமடைந்தவனுய் அந்த தோட்டத்திற்கு 'பாகே பேதாத்' யென்று பெயரிட்டு தனது இஷ்டத்திற் கிசைந்தவிதமாய் சுகானுபவங்களை அனுபவித்துக்கொண்டிருந்தான். இப்படியிருக்கையில், காஜாபக்தே ஜமாலுடைய வீட்டிற்குப்போய் அவருடைய மனைவியை அருகிலழைத்து அம்மா! உமது கணவனுடைய காஜாபக்தே ஜமாலே யான் வியாபாரஞ் செய்துகொண்டு வருவீரென நிலதிரவியசகாயஞ்செய்து சிவதேசத்திற்கு அனுப்பினேன். அவரும் வியாபாரவிஷயத்தில் திறந்தவரானபடியால் அதிக லாபத்துடனே வருவார். அவர் வருதலைவரையிலும் உம்முடைய வீட்டுசெலவுக்கு யானே திரவியகோசம் செய்கிறேனென்று கொஞ்சம் அஸ்ரபிகளைக்கொடுத்துவிட்டு, அம்மா உமது புருஷன் வியாபாரத்திற்குப் போகும்பொழுது ஓர் காரியத்தை சொல்லிவிட்டுப்போனர். அதென்னவென்றால் உம்முடைய வயற்றில் பிறக்கும் பிள்ளை ஆண்குழந்தையானல் அதற்கு புஜ்ருச்மெஹர் என்று பெயரிடச் சொன்னர். ஆகையால் இவை யனைத்தும் மனதில் ஞாபகப்படுத்திவு செய்துக்கொள்ளுவீர் உமக்குவேண்டி யிருந்தால் என்னிடத்தில்வந்து வாங்கிக்கொள்ளுவென்று மிகவும் உத்தமஸ்திரீபோல தைரியவார்த்தை சொல்லிவிட்டுத் தனது மாளிகைக்குப் போய்விட்டான்.

புஜ்ருச்மெஹர்ப்பிறப்பும் அவருடைய காமர்த்தியமும்.

அறுசீரடி ஆசிரியவிருத்தம்.

தாரணியின் மாந்தர்புகழ் காஜாபக் தேஜமால்
தனயனுக
பிறந்த புஜ்ருச் மெஹர் சவுக்தரிய சமர்த்தமைந்த
பெருமையாவும்
காதலத்தின் கமலமென வுக்கனின்றன் செயலீலை
கலிவல்லோரும்
துறந்தவரும் யோகிகளும் ஞானிகளும் மனமகிழ
சொல்லுவோமே.

அல்லா சுப்ஹானகுவ த்தஆலாவினுல் சிருஷ்டியாகிய உலகிலுள்ளவும் பறவைகளிற் சிறந்து மனிதர்களின் செவிக்கினிமையாகப் பாடும் புல்புல் என்னும் பக்ஷியானது பேசுந்தன்மையுள்ள முக்கையுடைய கலமென்னும் எழுதுகோல் கையில்பிடித்த ஆலிமகென்னும் வேதாந்திகளும் வாக்குச்சாதுர்யத்தையுடைய மஹாவல்லமைசாலிகளாகிய கல்விக்கனஞ்சிரோமணிகளும் வித்வசிரோன்மணிகளும் எழுதுகிறார்கள் அல்லாசுப்ஹானகுவ த்தஆலாவினுடைய அருள்உதவியைக்கொண்டும் வேலைகளிலெல்லாம் தெளிவான கல்லவேளை வந்தவிட்டது, அஃதென்னவேலை எனில், காஜாபக்தே ஜமால் என்பவரின் உத்

தம பத்தினியாகிய அம்மாளின் கெற்பமானது பூரணமாகி வெளிப்படும் வேளையாகிய நாள்களில் நிறந்தகாளாகிய வெள்ளிக்கிழமை தினம் நல்ல முகூர்த்தத்தில் காஜாபக்தே ஜமாலுடைய பீத்தினியின் வயற்றி லிருந்து பூரணச்சந்திரோதயம் போலுற்ற அதி மேண்மையுடைய அதிர்ஷ்ட பாக்கியங்களெல்லாம் திரண்டோருருவாயமைந்து ஆண் உருவாய் அவதரித்து இவ்வுலகினில் பிறந்தார். அப்பாக்கிய சிசுவானது பிறந்த உடனே காஜாவின் மனைவி சிசுவின் அழகு சவுக்தரிய ரூபலகவண்ய முதலிய சற்குறிகளையும் தன் பத்தாவின் முகச்சாயலையும் உடைய அக்குழந்தையை பார்த்தவுடனே தன் கணவனுடைய ரூபகம் மனதிற்றோன்றி ஆனந்தபரவசமடைந்து கண்ணீர் ரூப்பெருக அழுதனள். பிறகு அழகமைந்த தனது புத்திரனைப்பார்த்து தன்னுயிரை ஒருபொருட்டாயெண்ணுமல் விளக்கினெளியிற் போய்ச் சூழ்ந்துமாளும் கொசுக்களுக்கொப்பாய் தனது பாலகனின் மீது தன்னுயிரை பலிகொடுக்குந் தன்மையாய் அதிக அன்புபாராட்டி வளர்த்துவருங்காலையில் தனக்கு இப்போப்பட்ட நெருமத்தாகிய புத்திரனை தந்ததற்காக அல்லாகுத் தஆலாவை இரவும் பகலும் சுக்கூர் செய்துவந்தார்கள்.

இவ்விதமாய்க் குழந்தை வளர்த்துவருகையில் ஓர்நாள் தனது கணவனுடைய நகியத்தென்னும் ஓக்கியத்தின்படியே தானின்ற குழந்தைக்கு புஜ்ருத்மெஹர்" என்னும் திருநாமத்தையிட்டு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் ஆதரித்து வளர்த்துவந்தார்கள். அவ்விதமாய் வளர்த்துவரும்நாளையில் சர்வபரிபூரண தயாபரராகிய ரஹக்த அலாவினுடைய உதவியைக்கொண்டும் அப்பாலகன் வளர்த்துவரும்காலில் அச்சிறுவனைக் காண்போரனைவரும், அல்லாஹுதஆலா தன்னுடையகுதரத்தினால் இவ்விதமாகிய அழகமைந்த திக்கார ரூபலக்ஷணமமைந்த குழந்தையையும் படைத்தானல்லவோவென், ஆச்சரிய முற்றவர்களாய் அவ் வல்லாகுந்த அல்லாவைப்புகழ்ந்து வெட்கத்தினால் நாணமுற்றவர்களாய் தங்கள் திருமுகங்களை மறைத்துக்கொள்வார்கள். இவ்விதமாய் அழகு சவுந்தரியத்தோடு வளர்த்துவரும்காலில் புஜ்ருத்மெஹருக்கு வயது ஐந்து நிறைந்துவந்தது. அன்னாள்களில் குழந்தையின் தாயார், பாலகனுக்கு இன்னும் கர்ப்பிக்கவெண்ணி பிறந்த வித்யாசாதர்யமுடைய ஓர் உன்னதமிடத்தில் கொண்டுபோய் விடுத்து, தங்களுடைய நிலைமையும் தான்

தாஜாபக்தே ஜமாலுடைய மனைவியென்றும், அவருடைய புத்திரன் இக் குழந்தையென்றும் புகன்று, இன்னும் தமது சவிஸ்தார மனைத்தும் ஆதியோடந்தமாய்ச்சொல்லி பரிதாபமடைந்தனர். அவ்வார்த்தைகளைக் கேள்வியுற்ற அந்த உஸ்தாதானவர், அப்படியா வெண்ணு மனமகிழ்ந்து ஆனந்த பரவசமடைந்து கண்களில் நீர்பெருக மஹா சந்தோஷமடைந்தவராய் தாயே, நீங்கள் தங்களுடைய காஜாபக்தே ஜமால் என்பவர் என்னுடைய உஸ்தாதென்பதை இவ்வூராரனைவரும்அறிவார்கள். ஆகையால் என்தாமே இக்குழந்தைக்கு வித்தைகற்றுக்கொடுப்பது என்மீது வாஜிபென்னும் கடனுமிட்டது. ஆகையால் தாங்கள் இனி யாதொன்றுக்கும் விசனப்படவேண்டாம். அல்லாகுத்தஆலாவினுடைய உதவியைக்கொண்டும் எனக்குத் தெரிந்தவரையில் கர்ப்பித்துவிடுகிறேன். தாங்கள் யாதொரு ஆலோசனையும் செய்யவேண்டாமென்று அந்தஅம்மாளை விட்டிற்கு அனுப்பிவிட்டு பின்னரை தம்மிடத்தில் வைத்துக்கொண்டு இன்னும் கர்ப்பித்து வருகலானார். புஜ்ருத்மெஹரெனும் குழந்தையோ நாள் முழுவதிலும் ஓதவும் எழுதவும் தனக்குரிய விளையாட்டென மதித்திருப்பதையன்றி, ஒருநிமிஷமாவது வீண்காலம்போக்கும் தன்மையெனும் விளையாட்டினில் காலங் கழிப்பதில்லை. இவ்விதமாய் புதல்கால முழுவதிலும் உஸ்தாத் ஓதுவிக்கும் படிப்பின்மீதில் மனதவைத்துபடித்தானவுடனே அந்திப்பொழுதில் மதரசாவில் ஓதுதலை நிறுத்திவிட்டு வீட்டிற்கு விடப் போகும்போது புஜ்ருத்மெஹரும் தமது வீட்டிற்குப்போய் தன் தாயார் கஷ்டப்பட்டுச் சம்பாதித்து சமைத்துவைத்திருக்கும் உணவைப் புசித்துவருவார். இவ்விதமிருக்கும் நாள்களில் ஒருநாள் தன்தாயாரிடம் யாதொன்று மில்லாதபடியால் ஒன்றும்சமைக்கவில்லை. ஆகையால் புஜ்ருத்மெஹர் பசி உன்கொடுமையால் தாயாரைநோக்கி அம்மா எனக்குப் பசிபொறுக்கூடவில்லையே? ஏதாவதிருந்தால் கொடுங்களென்று கேட்டார். அதற்குத் தாயார். என்கண்மணியீன்ற மகனே! தற்சமயம் உன்பசி தணிக்கும்படியான உணவு என்னிடம் ஒன்றும் கிடையாது. என் செய்வேனென்று கண்ணீர்சொரிந்துக் கதறிபதறிவிழுந்தார்கள். அந்த மஹா விசனகரமான கெடுதியைக்கேள்வியுற்ற பாலகன் மாதாவை நோக்கி அம்மா நமதுவிட்டில் ஏதாவது வஸ்துக்களிருந்தால் கொடுப்பீராகில் யான் அவைகளையிற்று நமது உணவிற்காக வேண்டியவை யனைத்தும் வாங்கிக்கொண்டு வருகிறேனென்றார்.

இவ்விதமாய்த் தமது அன்பான மகன் சொன்ன செய்தியைக் கேள்வியுற்ற அந்த உத்தமி மஹா சந்தோஷ மடைந்தவளாயினும் தமதுநிர்வாகம் மிடிமையா யிருப்பதினால் அந்தப் பிள்ளையைப் பார்த்து, கல்புக்குகந்த மகனே! தூரதேசம் நமது வஜீபனத்திற்கு வகை தேடுதற்கு விடைபெறும்படியாண வஸ்துக்களை உமது தந்தை யாதொன்றும் வைத்துவிட்டுப் போகவில்லையே. ஆகையால், யான் எதைக் கொடுப்பேன் மகனேயென்று மனவிசாரமாய்ப் புகன்றதோடு இன்னம்சொல்கிறார்கள் ஆனல், உனது நானுவினுடைய ஓர் கிதாபுமாத்திரம் அதோவிருக்கும் மாடத்தில் வைத்திருக்கிறது. அநேக காலங்களுக்குமுன் எழுதப்பட்ட பழைய கிதாபு அதை உன்னுடைய தகப்பனுர் அநேகதடவை எடுக்க கினைந்தார். அவர் அதைவெடுக்க அருகில்வரும் நேரமெல்லாம் அந்த கிதாபிலிருந்து ஒருகருநாகம் ஜிவ்வென்றெழிக் கிளம்பி புஸ்னைச் சீறி படமெடுத்துக் கொத்தவரும் ஆகையால் அவர் பயந்து பேசாமல் வந்துவிடுவார். உன்னுல் அந்தக் கிதாபை எடுக்கமுடியுமானல் அதனை ஏடுத்துக்கொண்டுபோய் கல்வியிற் சிறந்த படிப்பாளிகளிடம் விற்கிரயம் செய்து வருவாயாகில் அதன் கிரயமாகிய திரவியத்தை வைத்துக்கொண்டு வெகுநாளைக்கு பசிஎன்றிய உணவுபுசித்து ஜீவித்திருக்கலாம். இன்றையதினத்தினுஅத்தென்னும் காலமும்கழிக்கலாம். ஆனல் அந்தக்கிதாபு தவிற வேறெருரு வஸ்துவும் கிடையாது. என்று சொல்லிவிட்டார்கள். தாயின் வார்த்தையைக் கேள்வியுற்ற புஜ்ருச்மெஹர் உடனே யெழுந்து போய் அந்தக்கிதாபை எடுத்தார் அதிலிருந்து யாதொரு பூச்சி புழுவும்கூட காணப்படவில்லை. பின்பு இரண்டொரு தாள்களைத்திறந்து படித்தார் முதல் முதல் கல்லும் கரைந்துருகும்படி அழுதார். பிறகு ஓர் கடிதாசிலைப் படித்துவிட்டு ஒயாமல் சிரித்தார். இப்படியாகிய கோலங்களைப்பார்த்த தாயானவள் பிரம்மித்து ஐயையோநமதுபுத்திரனுக்கு ஏதோ பைத்தியம்பிடித்ததோ வேறுயாதேனும் வைத்தீர்ன குணமாய்விட்டதோ என் றெண்ணியவளாய் வாய்விட்டலறி அடா மகனே? மகனே? உன்க்கென்ன வந்துவிட்டதடா மகனே! உன்னை நம்பி யானிவ்வுலகத்தில் ஜீவித்திருக்கிறேன். நீயும் என்னை மோசஞ் செய்யாதே யப்பா மகனேயென்றேங்கி விம்மியழுது ஐயையோ! யாராகிலும் வைத்தியர்களில்லையா? மந்திரவாதிகளில்லையா? சிக்கிரமாய் அழைத்து வருவீர்களென்று பதைபதைத்து அடிதடித்துக் கதறிப் பதறியழுது கண்ணீர்த்தளும்பக் கலங்கி கூச்சலிடுந் தாயை

நோக்கி புஜ்ருச்மெஹரானவர் ஆச்சரியமடைந்து அம்மா! தாங்கள்யாதுகாரணத்திற்காக இத்தகையச் சித்தப்பிரம்மையுற்றவர்களைப்போல் கலங்குகின்றீர்கள். எனக்கு பைத்தியமுமில்லை, பேய் பிசாசம் பிடிக்கவுமில்லை, அல்லாகுத்தஆலா கார்த்துக்கொண்டிருக்கிறன். சர்வமும் படைத்த ரஹ்மானுகிறவன் மிகவலுப்பமானவன் அவன் நம்முடைய மிடிமையென்னும் தரித்திரத்தை வெகு சீக்கிரத்தில் நீக்கி சுகத்தென்னும் சவுக்கியத்தைவைப்பான். தாங்கிக்கொண்டிருக்கும் நம்முடைய சித்தாரு வென்னும் சுகந்திரமானது விழித்துக்கொள்ளும் வக்து வந்துவிட்டது. தோல்துகளெல்லாம் சந்தோஷமாகவும், தசைமன்களெல்லாம் துக்கப்படவுமாகிய வேளை இதோ வந்துவிட்டது. தாங்களுடைய அடிமைப்பாகிய எனக்கு பைத்தியமுமில்லை ஏன்புத்தி மாறவுமில்லை. ஆனல்மில்லின் சிரித்ததற்கும் அழுததற்கும் காரணம் யாதெனில் இந்தக்கிதாபை படித்ததனல் சகலாசய்யமான காரணங்களும் எனக்குத் தெரிந்து விட்டது. அழுதது எதற்காகவானல் என்னுடைய தந்தையை அல்கலேன்னும் மந்திரியானவன் அநியாயமாய்க் கொன்றுவிட்டான். இத்தனை நாளாய் எனது பிதாவினுடைய உடல் கபனுமில்லாமல் விழுந்துகிடக்கிறது. அத்தரும அந்தச் சடலத்தை தின்னவுமில்லை யான் அழுததற்கும் சிரித்ததற்கும் காரணம் இதுதான்.

ஆகையால், என் தகப்பனைக் கொன்றவனைப் பழிக்குப் பழிவாங்கி, இந்தகனி அரசுபுரியும் கிப்பாதே காம்ரூன் பாதுஷாவுக்கு மந்திரியாகுவேன். இனி நமது வஜீபனத்திற்காக தாங்கள் கவலைப்படவேண்டாம். நமக்கு ஆண்டவன் கொடுத்தது மிகவாக மிருக்கிறது, தாங்களும் புசித்து இன்னும் அனேக ஏழைகளுக்கும் கொடுப்பீர்களென்று தாயாருக்கு தைரியவார்த்தைகளைச் சொல்லிவிட்டு ஒருவேலைக்காரனை தன்னுடன் அழைத்துக்கொண்டு ஓர் வியாபாரியினுடைய கடைக்குப்போய் அவனை நோக்கி, ஓய் வியாபாரியே? இனி ஒவ்வொருநாளும் இம் மனுவி வந்தவுடனே எவ்வளவு கோதுமை மாவு சர்க்கரை நெய் முதலிய வஸ்துக்கள் கேட்கின்றனளோ அவ்வளவும் கொடுத்தனுப்பு. அதன் கிரயத்தை வாங்கவேணுமென்னும் எண்ணத்தைமாத்திரம் வைக்காதேயென்றார். அப்பொழுது வியாபாரி, சிறுபிள்ளையாகிய புஜ்ருச்மெஹரை நோக்கி, யான் உமது இஷ்டப்படியே கொடுத்துக்கொண்டு வந்தால் அதன் கிரயமாகிய தொகை

எப்பொழுதுதான் எனக்குக் கிடைக்குமென்றான். புஜ்ருச்மேஹர் அந்தவியாபாரியை நோக்கி, ஐயா! தாங்கள் என்னிடத்தில் நியம் வாங்குவேனென்றது ஆச்சரியத்தை விளைவிக்கின்றது. உனது உண்மையான குற்றத்தை அரசனிடம் தெரிவித்தேனேயாமால் உனது ஆஸ்தி பூஸ்திதி யாவும் பறிகொடுத்துவிட்டு உன்னுடைய உயிரையும் இழந்துவிடுவாயே யென்றனர். அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற வர்த்தகன் திகைத்து, அடடா எதென்ன ஆச்சரியம்! அப்பா! யானென்ன குற்றஞ்செய்தேன்? என்றான், புஜ்ருச்மேஹர் சொல்லுகின்றார். வியாபாரியே சிலகாலத்திற்கு முன், சான்சான் என்னும் சாட்டுப்புறத்தானிடம் ஆயிரம்மணங்கு கோதுமையை வாங்கிக்கொண்டு அவனுக்கு விஷத்தைக்கொடுத்து சாகச்செய்தாய் அனியாயமாய் முதல் சேர்ப்பதற்காக நான்குமக்களையும் தகப்பனையும் கொன்றுவிட்டாய் இந்த இரகஸ்யம் இராஜாவுக்குத் தெரியப்படுத்தினால் நீஎப்படியாவாய் என்று கேட்கவே வியாபாரி சற்று நிதானித்து இச்சிறுவனுக்கு யாவரோ தெரிவித்துவிட்டனர்; இனி வீண் கபுரா செய்துவிட்டால் கலகம் வெளியாவதுடன் கழுத்துக்கும் கத்திவருமென்று பயந்தவனாய் ஆ! ஹா! நீதென்ன ஆச்சரியம் இக்கக்ரியம் கடந்து வெகுகாலமாகிறதே இவ்விஷயத்தை எனது உயிர்த்துணைவியாகிய பெண்சாதிக்கும் தெரிவிக்கவில்லையே இவனுக்கு எவ்விதமாகவோ தெரிந்துவிட்டதே அந்தக் கிரியங்களின் அந்த இரகஸ்யங்கள்யாவும் அருகிலிருந்து பார்த்தவனைப்போற் சொல்லுகின்றானே இவனிடத்தில் யாம் எப்படி மறைக்கக்கூடும் என்று பற்பலவிதமாய் யோசித்துத் தன் தலைப்பாகையை கழட்டி புஜ்ருச்மேஹர் பாதத்தில் வைத்து நாயகமே என்னை இரக்ஷிக்கவேணும், தாங்கள் என்குற்றத்தை மன்னிப்பதோடு என் குடும்பத்தையும் காப்பாற்றவேண்டும், இந்தக் கடையும், இதிலுள்ள தான்யாதிகளும் எனது வீடுவாசலும், ஆஸ்தி, பூஸ்தி முதலாகியவைகளும் தங்களுடையவைகளே தாங்கள் பிஸ்தீனே எப்படி நடப்பிக்க உத்தரவளிக்கின்றீர்களோ அதுபோல்நடக்கச்சித்தமாய்க்காத்திருக்கிறேன். தாங்கள் எனது குற்றமாகிய இரகஸ்யத்தை மாத்திரம் மறைத்துவிடவேண்டியது என்று மிகவும் மரியாதையுடன் கெஞ்சிக் கேட்டுக்கொண்டான் புஜ்ருச்மேஹர் அவ்வியாபாரியிடம் சொல்ல வேண்டியவைகளைச் சொல்லிவிட்டு தன் வேலைக்காரியை அழைத்துக்கொண்டு ஓர் கலாமிகாரனிடம்போய் அவனைநோக்கி ஐயா தாங்கள் இன்னதொரும் இந்த வேலைக்காரியினிடத்தில் நல்ல கொழுப்பானதாகவும் திறமானதாகவும் இருக்கும் ஆட்டுக்கறியில் ஒரு மணங்கு கொடுத்தனுப்ப வேணுமென்றார். காலாயிகாரன் புஜ்ருச்மேஹரைப் பார்த்து அப்பா! நீசொன்னதுபோலவே யான்இனந்தோறும் ஒருமணங்குகறி கொடுத்தனுப்பினால் அதனுடைய கணக்கு எப்போது பார்க்கிறது பணம் எப்போது தருவது யென்றான். புஜ்ருச்மேஹர் சொல்லுகிறார். நீ கவுஸ்கலாபான் என்பவனிடத்தில் ஆயிரக்கணக்கான தம்பாடுகள் வாங்கிக்கொண்டு அவன் நியம் கேட்டபோது அவனைக் கொன்று உன்னுடைய கடையின் அரையில் புதைத்து விட்டாயல்லவா? அவனுடைய ரூபாய்களில் எத்தனையோ மோசஞ்செய்து எடுத்துக்கொண்டாய் அந்த ரகஸ்யமான உனது குற்றத்தை இவ்வூர் அதிகாரிக்குத் தெரியப்படுத்தினால் உன் கதி எவ்விதமாகும் இவையனைத்தும் கவனியாமல் என்னிடத்திலேயா கறிக்குக் நியம் கேட்டாய் என்னே இன்னுனென்றும் தெரிந்துகொள்ளாமல் என்னிடத்தில் மனதைரியமாய்க் கறியின் நியத்தைக் கொடுக்கவேண்டுமென்று கேட்பது ஆச்சரியமல்லவோ யென்றார். அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற சாயிகாரன் திடுக்கிட்டு மெய்மறந்து சைசோர்ந்து, நிகைத்து காவுதளற புஜ்ருச்மேஹருடைய இருபாதத்தையும் கண்டு இரண்டு கையினாலும் தாவிப் பிடித்துக்கொண்டு எனது அறிவீனத்தினால் செய்த குற்றமாகியது இந்த இரகஸ்யத்தை நாத்திரம் வெளிவிடாமல் தங்கள் மனதில் மறைத்துவைத்துக்கொண்டு என்னைக் காப்பாற்றவேண்டும் இன்றையதினத்திலிருந்து தங்களுக்கு வேண்டுமான கறிகள் யான் கொடுத்தனுப்புகிறேன். இன்னும் என்னுடைய வீடுவாசல் ஆஸ்தி பூஸ்திதியாவும், உமது பாதாரவிந்தத்திற்கு காணிக்கையாய் சமர்ப்பித்து விட்டேன். தாங்கள் எவ்விதமாய் உத்தரவளிக்கின்றீர்களோ அவ்விதமே நடக்க வழியன் கார்த்துக்கொண்டிருக்கிறேன்என்று மிகவும்கெஞ்சி கேட்டுக்கொண்டான் புஜ்ருச்மேஹர் இவனுக்கு சொல்லவேண்டிய தெல்லாம் சொல்லிவிட்டு, ஓர் சாப்புகாரனிடத்தில் சென்று அவனுக்கும் அதுபோல அவனுடைய அச்சங்க அக்கிரமத்தைசொல்லவே அவனும் பயந்து புஜ்ருச்மேஹரை வணங்கி கேட்டுக்கொண்டான்.

பாதுஷாவுக்கு அல்கஸ் மந்திரி தன் தோட்டத்தில் விருந்துசொல்லி அழைப்பது.

விருத்தம்.

வஞ்சகம் சூதுமோசம் வாய்த்திடும் அல்கஸ் மென்போன்
எஞ்சலில் லாததோட்டம் எனும்பாகெ பேதரத் தன்னில்
மிஞ்சிடும் புகழமைந்த மேன்மைசேர் பாதுஷாவை
தஞ்சமாய்ப் பணிந்து வேண்டி தாவத்துக் கழைத்திட்டானே.

இங்ஙனம் இவ்விதமா யிருக்கையில் முன்னம் காஜாபக்தே கமாலிக் கொன்றுவிட்டு அவரால் கிடைத்த திரவியத்தை செலவு செய்துக்கொண்டிருக்கும் முதல் மந்திரியாகிய அல்கலேன்பவ னுடைய சங்கதியை இனி சொல்லத்தொடங்குவோம். அஃதெவ்விதமெனில் அழகுபொருந்திய விதவிதமான பூக்கள் பிறைக்குள்ள பூங்காவனத்தித் கொப்பாகிய சரித்திரங்களே அப் பூங்காவனத்தின் மேடுபள்ளங்களில்லாத சமதரைக் கொப்பாகிய கடதாசியில் அப்பூங்காவனத்தின் கண் ஆங்காங்கு பலவிதபூஞ்செடிகளே பத்திரத்தியாய்த் தரிக்கவைக்கும் நாவனையாய் எழுத்தில் வல்லவர்களாகிய வித்வசிரோன்மணிகள் எழுதுகிறார்கள். அஃதெவ்விதமென்றால், புஜருச்மேஹர் ஒவ்வொருவனும் தம்முடைய உத்திரவின்படியே கஷ்டக்காரர்களால் அனுப்பப்படும் குறைவற்றி ஆகாராதிகளே மீதிபடுத்தி வைக்காமல் சமயல்செய்து உத்தரவளித்து தானும் தன்தாயாரும் புசிப்பதோடினமும் ஒவ்வொருவேளையும் இஷ்டஜன மித்ருஜன பந்துபெயர்களுக்கும் வயிறார அன்னமிட்டு காலம் கழித்துவரும் காலையில் அல்கஸ்மந்திரியின் உத்திரவின்படியே தோட்டமும் புங்களாவும் இன்னும் அவன் மனதிற் கிசைத்தவைகளும் முடிவானதும் அதன் பிறகு மந்திரியானவன் அவைகளைப்பார்த்து இந்தத்தோட்டம் சுத்தாதுகட்டிய சுவர்க்கத்திற்கும் நீடுசொல்லலாமென பூரிப்புடையவனுய்த் தின் ஞன்யாவுடைய எண்ணங்களே சுத்தமாய்மறந்து தன்சந்தோஷத்தினால் அவன் அணிந்திருக்கும் சட்டைகள் தேகம் பிடிக்காமல் கிழித்துக்கொண்டு வெளியில் பிதுங்கிவிட்டன. அப்பொழுது ஒருவன் அவன் கிட்பாதே காம்ருனென்னும் பாஷாவிடத்தில் சொல்லந்தடங்கினன். அஃதென்னவெனில் உலக ரக்ஷகரான பாதுஷாக்களுக்கெல்லாம் பாதுஷாவாகிய எனது இறைவனே இந்த

குலாமானவன் தங்களுடையதவலத்தின் நெஅமத்தால் ஒருதோட்டம் முன்டுபண்ணி இருக்கிறேன் அதில் விதவிதமாகிய பழவர்க்க செடிகளும் பூஞ்செடிகளும் அநேக விதவிதமாய் வைத்து உற்பத்திசெய்து அதிவிநோதமாகிய தோட்டமுண்டாக்கினேன் அநேகதூரங்களுக்கு அப்பாலிருந்து அதிக திரவியங்கள் செலவுசெய்து விதவிதமாகிய செடிகள் தருவித்து அதிவிநோத ஆச்சரியமாகிய ஏற்பாடுகள் செய்யும்படியாகிய வல்லவர்களே அத்தோட்டத்தில் வேலைசெய்யும்படியாய் அமைத்திருக்கின்றேன் ஆயிர கணக்காகிய திரவியங்களே கணக்கில்லாமல் செலவுசெய்து உஸ்தாதென்னும் வேலைசெய்பவர்களே ஆயிரக்கணக்காய் தருவித்தமைத்திருக்கின்றேன். அதில் ஒவ்வொருவர்களும் தன்னே வெல்ல இவ்வுலகத்தில் ஒருவர்களும் பிறக்கவில்லையென்னும் மமதைகொள்ளும்படியாகிய பிறந்த தொழிலாளிகளாய் இருக்கின்றார்கள். அவர்கள் அமைத்திருக்கும் கொடிச்செடிகளின் பந்திவிசைகள் சித்திரவேலையில் வல்லவர்களாகிய மானியே, பஸ்ஜாத்தென்னும் கண்ணிற் காணுதன்வதனைக் கண்டதுபோல் உண்மைக்கு உண்மையாய் ஓர் அணுவும் பிசகில்லாது சித்திரம் எழுதும் வல்லவர்களும் கூடப்பார்த்து வெட்கத்தினால் தலைகுனிந்து போவார்கள். இவ்வித அழகிய தோட்டம் உற்பத்திசெய்தும் அதே பேனுடைய நேத்திரங்களுக்கு அது திருப்திகரம் இல்லாமல் யோசனைதங்கி சோம்பிப்போரும் பாவனையாய் காணப்படுகிறது. அஃது எதுவரையிலானால் ஜில்லேசுபதினாலு கலிபத்தூர் நற்மானியாகிய தங்களின் பாதாரவிந்தகமலங்கள் அத்தோட்டத்தில் எதுவரையில் படாமலிருக்கிறதோ அதுவரையில் அடியேனுக்கு அப்படியாய் தோணப்படுகிறது உண்மையாய் அடிமையானவன் உறுதிசெய்துகொண்டிருக்கிறேன் ஹலரத்தக்காகானேஜஹானென்னும் உலக அதிபதியாகிய டிகுடாநிபதி தாங்கள் மாலிநேரங்களில் சுகத்திற்காக உலாவும் நாவனையாய் அத்தோட்டத்திற்குவந்து தங்கள்கிருபாநோக்கத்தை அருளிச்செய்தால் குலாமாகிய என்னுடைய பெருமைபானது வானலோகத்தினளவு பிரபல்லிய மாகிவிடும். தங்களுடைய பாதங்களின் பாக்கத்தினால் அத்தோட்டத்திற்கு பஹார் உண்டாகிவிடும் ஒவ்வொரு புஷ்பங்களும் இதின் மொக்குகளும் அவை அவைகளின் வர்ணங்களே அப்பொழுதுதான் வெளியாக்கும் குலாமாகிய னன்மீது கிருபைசெய்து அத்தோட்டத்திற்கண் னுள்ள பழவர்க்கங்களில் இரண்டொன்றை தாங்கள் அருந்தியிர்களாகில் அடியே

முதற்றான் வழியக்காரனுகிய என்முமாது ஹாசிஸ்காரும் என்மனம் திருப்திகரமடையும் என்று மிகமிக வணக்கமாய் வணங்கி கேட்டுக் கொண்டான். இவ்விதம் வேண்டிக் கொண்ட மந்திரியுடைய வேண்டுகோளுக்கிணங்கிய பாதுஷா அப்படியே ஆகட்டுமென்று ஒப்புக்கொண்டார் அப்பொழுது அவன் வணங்கி தஸ்லீம் செய்து நஜர்கொடுத்து விடைபோய் விட்டான்.

பின்பு, மீதரிட்டத்திற்கு சென்று தாஅவத்திற்காகுமான வஸ்துக்களைதயார்செய்து ஆரம்பித்தான். ஸ்திரனங்களில்லல்லாம் தயாராய் விட்டது. விதவிதமாகிய பலாவுதலும் வகை வகைகளாகிய பழவர்க்கங்களும் தட்டம் தட்டமாய் நிறைத்துவைத்திருந்தது ஆடல் பாடல்களிற் நிறந்தவர்களையெல்லாம் அழைத்து தயார்செய்யும்படி உத்திரவரினை. பாணவேடிக்கை செய்பவர்களைவரவழைத்து கச்சேரிக்கு இடங்களில் சவ்கிதமாகிய பாணங்களமைக்கலாமென்று இடம் திட்டப்படுத்தி, விதவித பிரகாசம்பொருந்திய வெளிச்சங்க ளமைக்கப்படும் பாகங்களைதிட்டப்படுத்தி பலவித ஒளிவிளக்கப்பொருந்திய வெளிச்சங்க ளமைக்கப்பட்டன. ஆயிர கணக்கான கண்ணாடி விளக்குகளும் அமைக்கப்பட்டன. வால்சேட்டுகளும், ஸ்பட்டர்களும், குளோப்புகளும் ஆங்காங்கு விமரிசையாய் தரிக்கப்பட்டன. பின்பு, உலகபிரசித்திபெற்ற முகுடமுடி மன்னர்கள் நிறைகட்டப் பூலோகம் புகழ்பெற்ற மன்னவனுகிய கிப்பாதே காம்ருன் பாதுஷாவானவன் தன் மந்திரி பிரதானிகளோடு நாட்டியப் பெண்கள் நடனமாட கவரி வெஞ்சாமரைவீச ரதகஜ துரகபதாதிகளோடு புறப்பட்டு, பாரசேபதத் தென்னும் தோட்டத்தை நாடிநடந்து அல்கஸ்ஸாடையுடைய வேண்டுகோளைபூர்த்திசெய்தான் பாதுஷாவரவே அல்கஸ்ஸாதியான வன் பாதுஷாவுக்காக ஓர் தக்த்து தயார்செய்திருந்தான். அந்த வைரம், வைடூரியம், கோமேதகம், புஷ்பராகம், நீலம், மாகதம், முத்துமாலியவரத்னங்களினு லமைக்கப்பெற்றிருந்தது. அத்தக்த்தின் நான்கு மூலைகளிலும் நான்கு மயில்கள் பச்சை மாகதத்தினு லமைத்து இருந்தன, மயில்களின் சிரகுகளிலு அதிக விலையுயர்ந்த தங்கத்தினுலாகிய சித்திரவேலை செய்து மத்தியில் மன்னும் குமுஞ்சான் கிண்ணங்களமைத்து யிருந்தது. ஒவ்வொருமயிலின் முன்னும் தங்கத்தினுலாகிய பூக்கொட்டிகளமைத்து அதில்மரங்கள் முத்தினுலும் இலைகள் பச்சை மாகதத்தினுலும், கிளைகள் மாணிக்கத்தினுலும்,

பூக்கள், காய்கள், பழங்களெல்லாம் வைரம் - வைடூரியம் - மாணிக்கம் முதலாகிய இரத்தினங்களினால் அதிஉன்னதமாகிய வேலைகள்செய்து வைக்கப்பட்டிருந்தன. அவைகளைப் பார்ப்போர் இவை மனிதனால் உற்பத்திசெய்தனவுகள் அல்ல, ஈண்டவனுடைய குதரத்தினால்உண்டாகியதென்று நினைக்கும்படியாயிருந்தது அப்பொழுது பாதுஷா உடைய சகாரி அத்தோட்டத்தினுருகில் சமீபித்தபோது, அல்கஸ்மந்திரியானவன் பாதுஷா வருவதை முன்னால் தெரியப்படுத்தும்படியாய் ஏற்கெனவே அமைத்திருந்த ஒற்றர்கள் ஒவ்வொரு நிமிஷமும் பாதுஷாவின் வரவை அல்கஸ் மந்திரிக்கு அறியச் செய்துக்கொண்டிருந்தார்கள். அருகில் சமீபித்தவுடன் அல்கஸ்ஸாம் அவனுடைய மகன் முதலாகிய இனத்தவர்களுடன் எதிர்கொண்டழைப்பதற்கு இவ்வோர் இனமும் தங்கத்தினுல் கச்சாவேலைசெய்த பல சத்தினங்களை வரிசை வரிசையாக கோர்த்து தொங்கட்ட மிட்டிருக்கும் படியாகிய மேல் போர்வைகளுடைய அதிக வலுப்பமாகிய யானைத்திரள்களும் அதிக வேகமும் அழகும் உடைய மிக உன்னதமாகிய தாஜீ, இக்ருக்தி, அரபி, காட்டியாவார், கச்சி, சோகோ, துர்க்கி, ஈஜிதி, எமனிமுதலாகிய இத்தேசத்தின் பாராஜாரி குதிரைகளும் 125 வகையுடைய டாக்கன் குதிரைகள் கூஹி, ரங்க்பூர், பைசோ, ஆலாம், நங்கூன், தீபேத், ஜாவா, புக்காரு முதலாகிய தேசங்களின் டாக்கன் மட்டங்களும் ஸ்பெயின்கள் சன்குகதிகளாகிய பாதங்களை படவிட்டமல் காற்றைநிகர்த்த வேகத்தையுடைய பரிகள் பந்திபந்திபாய் ஒவ்வொன்றின் தேகமானது பருத்து உருண்டு இன்னி தேவுகளை ஒத்ததாயும் பாதம் பூமியில் தரிகொள்ளாமல் படபடப்புடையவைகளையும் அவைகளின் நீண்களெல்லாம் பொற் சரிகையினுலும் பற்பல தங்க ஆபரணங்களில் விலையுயர்ந்த இரத்தினங்களமைத்து அதன் தோலுகளில் முத்துக்களைகோர்த்து, தெற்றிக்கி கல்கிதுருக்களும், பட்டா, இம்ச்சி, பாஸ்பந்த், லஹக்கல்களும் கழுத்தில் முத்துமாலைகளும் பட்டிகளில் கலாபூத் ஜாரிவேலைசெய்த மேல் போர்வைகளும், அதின்மேல் பலவான இரத்தினங்களினழுத்தம் நாலு கால்களுக்கும் தங்கத்தினுலாகிய பாதசரங்களும் வண்டையங்களும் அணிந்து தேகமுழுவதும் தங்கச்சரிகை இழைத்த உடைகளை யணிந்த சிப்பாய்கள் முரியகத்துடன் குதிரையொன்றிற்கு இரண்டுபேர்களாகவும் சுடுக அதிலேறி அரபி, பதுதாதி, கோகானி, மார்வாடி, ஜேபூரி, பேகானேரி முதலாகிய தேசங்களின் ஒட்டகங்கள் அதிக ஆபரம் பூண்டி

பந்தியாய் இழைகள்தோறும் தங்கக்கம்பிகளில் மோமிபா வேலைசெய்து கார்ச்சிப்பிவேலைகள் கண்ணைக்கவரும்படிசெய்த அதில் இடைக்கிடை கவாத்தங்கள் இழைத்து தங்கச்சரிகை குஞ்சுகள் சுற்றிலும் தொங்கும்படியாகிய ஜமல்கானி முதலின்கண் தாங்கி நீண்ட கழுத்துகளில் முத்துமாலை வைரமாலைகள் விலங்கவும், அநேக விசித்திர வேலையமைத்த அதிநூதனமாகிய சரிகை இழைகளையும் ஆடைபரணங்களையும் உடைய சிப்பாய்கள் ஒவ்வொன்றின் முன்னிலும் பின்னிலும் இரண்டிரண்டு பெயர்களாகவும் வரிசைக்கிரமமாய் நடக்கவும் இவைகளின் நடுவில் அனேகம் ஹப்சிகளின்தலையில் பசும்பொன்னுலாகிய தப்குகளில் வைரம், வைடூரியம், நீலம், மரகதம், புஷ்பராகம், முதலாகிய விலையுயர்ந்த இரத்தினங்கள் பதித்து அமர்ந்துவரவும், இன்னும் அனேக ஹப்சிகளின் சிரசில் இரத்தினங்க ளிழைத்த பொற்தட்டங்களில் குருசானி, இஸ்பகானி, கஜ்வேனி, பூர்த்துகாலி, குஜ்ராத்தி, அலிமானி, மகரிபி, ஜானுபி, மிஸர், முதலாகிய தேசத்தின் வாளாயுதங்களும் பலவித ஆயுதாதிகளும் பதித்து வரவும், இன்னும் அனேக ஆயிரம் பரிஜாதிகளை நீக்கத்த அழகிய முடைய மாதர்களின் சிரங்களில் விலையேறப்பெற்ற பொற்தட்டங்களில் கின்காப், ஜர்பப்தி, சனுஜட், மல்மு, குல்பதன், குல்ஜார், குஞ, ஜேபா, ருமால், துப்பட்டா, பனுருஸ்பட்க்கா, குஜராத்தி, ஜாம்தானி, காம்தானி, முகுமதி, ச்சண்பேலி, சனம்சக்கன், தோர்சுமார், தருந்தாம், மல்மல், கஜ், ஜனு, ஜாயின்குக், தன்ஜேப், முதலாகிய பொற்சரிகைகளாலமைத்த விலையுயர்ந்த உடைகளைநிறைத்து எடுத்துவரவும், இன்னும் அனேக பொற்தட்டங்களில் போஷாக், சர்மாய், துஷாலா ருமால், பட்கா, குலபந்த், ஜாமதார், செல்லி, கிபா, லியாதா, கலிச்சா, அபா, அச்கன், முதலாகிய தனி தங்கசரிகை பின்னித்த விலையுயர்ந்த வஸ்திராபரணங்களை நிறைத்து மஹரிபுதேசத்து மெல்லிய இடைகளையுடைய அழகிற்சிறந்த ரூபவதிகளாகிய தாதிப்பெண்கள் சிரங்களில் எடுத்துவரவும் முன்பின்னுமாதர்கள் நடந்து செல்லவும், பதினெட்டுவகை மேளவாத்தியம் பலவிதம் முழங்கவிமானத்தின் கால்களை அல்கல் மந்திரி பிடித்துவருக பாதுஷாவரும் பாதையை முன்னேக்கிச் சென்று பாதுஷாவை அழைத்து தோட்டத்திலுட்போய்ச் சேர்ந்தார்கள். அப்போது, கிப்பாதே கும்ருல் பாதுஷா வானவன் அத் தோட்டத்தைப்பார்த்து அதிக சந்தோஷமுற்றவனுய் மந்திரி சொல்லியபடி யாவும் சரியாக யிருக்கக்கண்டு அதிக சந்தோ

ஷத்துடன் மனதில்எண்ணுகிறன். இத்தோட்டமானது பூரண சுகத்தைக் கொடுக்கக்கூடியதாயும் உல்லாசமாய் உலாவிவரத் தருந்தாயும் மிகவலங்காரமான தோட்டந்தானென்று களிப்படைந்து நான்கு பக்கங்களும் திரும்பிப்பார்த்தான். அத்தோட்டத்தின்கதவு சந்தனப் பலகையில் சித்திரவேலை மிக உன்னதமாய்ச்செய்து அதின் நடுவில் வெள்ளி தங்கத்தினுல் பூவேலைகள் அற்புதமாய்ச் செய்திருந்தது. நான்குபக்கத்தின் சுவர்களும் சங்கே மற்மற் யென்னும் விலையுயர்ந்த கல்லினுல் கட்டப்பட்டிருந்தது. அவ்வவ் விடங்களிலுள்ள நான்கு சுவற்றின் கதவுகளிலும் தங்கத்தினுல் பூவேலைசெய்து அதின்நடுவில் பலவகை இரத்தினங்க ளழுத்தியிருந்தது. சுவர்களின் சுற்றிலும் இரத்தினங்களால் பலவகை பூஞ்செடிக ளனமத்திருந்தது. அச்செடிகளின் இலைகளும், இலைகளும், பச்சை மரகதத்தினுலும் மொக்குகளும், புஷ்பங்களும், சிவந்த மாணிக்கத்தினுலும் செய்யப்பட்டிருந்தது. அம்மரங்களின் இலைகளில் பலவகை இரத்தினங்களினுல் புல்புல், லால், மைனு, கும்ரி, பஞ்சவர்ணக்கிளிகள், முதலாகியபக்ஷிகளமைத்து அவைகள் சிறகுகளை விரித்துதறி தத்தம் குரலெழுப்பிக்களிப்பிப் பாடிக்கொண்டமைபோல் அமைத்திருந்தது. சுவற்றின் இத்தபாகங்களில் தங்கத்தம்பிகளில் பலவித வர்ணமான வேலைசெய்த வஸ்திரங்கள் பத்தல்களமைத்து அப் பத்தல்களில் பட்டுக்கயிறுகளினுல் பலவித கொடி, இலை, செடி, முதலியவைகளனமைத்து அதி உன்னதமாய்ப் பார்ப்பவர்களின் மனதைக் கவர்ச்செய்யும் வண்ணமாயிருந்தது. அவைகளில் கொடிமுந்திரி செடிகளில் அதன் பழக் குலைகள் முத்தினுலமைத்து அவைகளில் மஸ்தாசு முதலியவைகள் படாமல் மக்மல், அத்லஸ், முலாகிய பற்பல பட்டுகளினுல் பைகளனமைத்து அவைகளிலடைத்து முடியிருந்தது. சரிகைகளால் பூவேலைசெய்த கயிற்றின் முனைகளில் முத்துகுஞ்சங்க ளனமைத்துக் கட்டியிருந்தது. அத்தோட்டத்தில் பத்திபத்தியாயமைத்திருந்த விதவிதசெடிகளின் அழகு எவ்விதமாயிருந்ததென்றால், இரசம் பூரிய பலவர்ண தண்ணீரூற்றுகள் வரிசைக்கிரமமாய் குயிலல்குயிலலாய்க் குவித்து அவைகளின்நடுவில் இடைக்கிடை அனேகம் ஆயிரம் பிரகாசம்பொருந்திய விளக்குகள் இயற்றிய பாவனையாயிருந்தது.

இவ்விதம் அழகான தோட்டத்தை பார்ப்பவர்களுடைய கண்களின்பார்வை சுழலானது கடந்துசெல்லும் வேகத்தினுல் அத்தோ

ட்டத்தின் பூமிகளிருக்கும் சமதரையின் ஒழுங்கினுல்கால்கள்தமோறி குடியர்களின் நடை தமோறுவதுபோல எத்திசையை நாம் பார்க்கவில்லையென்றுதியங்கி தமோறின்றது தோட்டங்களின் பலபாகங்களிலும் பலவிதவர்ண மணிகளாலில் பச்சை, சிகப்பு, கறுப்பு, நீலம், ஊதா, மஞ்சள், வெள்ளை, முதலாகிய வெள்ளி, பொன், முலாமிழைத்த மணல்களினுல் போத்தியுண்டாக்கி அவைகளில் விதவிதபல்வர்ண பூஞ்செடிகள் பத்திபத்தியாய் நிறுத்தி அச்செடிகள் நிறைய கண்ணோப்பதிக்குமபடியாகிய குலேல்லாலா, நடர்மான், ஜாபி, தாலுதி, பாபூனு, கேந்தா, ஹஜாரு, பிர்க்கி, பல்பா, மோத்தியா, மோகரு, சம்பேலி, ஜூஹி, சூசன், ரூபிபேல், சூயுத்தி, தித்திக்கி, கேவ்டா, குலேமேந்தி, கல்கா, பரங், தோப்ப ஹரியா, அர்ஜங், சப்போ, சூரிஜ்மக்கி, நர்கிஜ், நாஜ்போ, பத்மினி, அப்ரசி, ஜாபருன், குலேச்சிருகான், என்னும் எண்ணிலடங்காத புஷ்பச்செடிகளும், அச்செடிகளின் பாத்திகளோவெனில் அதிலுற்றுமருதோன்றிச் செடிகளே நெருக்கலாய்ப் பதிபண்ணவைத்து அவைகளை ஒரு வேடிக்கை விநோதமாய்க் கத்தரித்து வேலியாக்கப்பட்டிருந்தது. அப்பாதைகளின் சான்று முலைகளிலும் மிழம்பூமரங்களை தழையச்செய்து அதிமுல் பாத்திகளை மூடச்செய்திருந்தது. அதற்கு பக்கங்களில் சருவமரங்களும் இன்னம் ஓங்கிவளர்ந்து, சுகண்டியாகிய காற்றை உண்டுபண்ணக்கூடிய அநேக மரங்களை யமைத்திருந்தது. அம்மரங்களோ வளர்ந்து வானத்தையளாவி மேகத்தோடு வசனித்துக்கொண்டிருக்கும்படியாய்க் காணப்பட்டது. அத்தோட்டத்தின் பூக்களில் நின்றும் உண்டாகும் வாசனையால் தோட்டத்தில் இருப்பவர்களின் வாய்களில் சல்லியாலாவென்னும் வாக்கியம் முழங்கிக்கொண்டிருந்தது. செடிகளின் கொப்பு நுனிகளிலுள்ள பூக்கள் ஒன்றோடொன்று முகத்தோடு முகம்வைத்து முத்தியிடுவதுபோல் கொப்புகள் எதிரெதிரே தமிர்ந்து வளைந்து ஒன்றோடொன்று சேர்ந்திருந்தது, பழவர்க்க செடிகளில் பலவிதபழங்கள் பழுத்து வாலிபப் பெண்கள் ஊஞ்சலாடும்பொழுது காற்றினுல் ஆடைபறந்து மார்திறந்து இளஸ்தனங்களை தொடுவதற்கு ஆசையால் மயங்கும் வாலிபர்கண்டு இச்சித்து அவைகளில் தமது கரங்கள் செல்லச்செய்வதுபோல கனிகள் சாய்ந்தாடும்பொழுது அக் கனிகளைப் பறித்துப் புசிக்க இச்சைகொள்வார்கள். அவைகளைப் பறிக்கக் கரங்களை நீட்டிச்செல்வதும் மரங்களின் கொப்புகளில் அநேகவித புறவைகள் கனிகளைப்புசித்து அதன் இன்பருசியால் ஆனந்தமடைந்து பலவிதராகங்

களோடு பாடவும் ஆங்காங்கும் பறவையினங்கள் தங்கள் பேதங்களைக்கண்டு சிறகுகளாலிரித்து நடனமிட்டு ஆடவும் பல பிடங்களிலும், செடிகளிலிருந்து உதிரும் இலைமுதலாகிய குப்பைகளை உடனுடனே தத்து சுத்திசெய்வதற்காக மானுஷொத்த நடையையுடைய மயிலையொத்த அழகுபொருந்திய வாலிட இளம்பெண்கள்கையில் பொற்கூடை எந்திரிற்கவும், செடிகளுக்குப் பாய்ச்சுதற்கோண்டிருக்கும் நீர்க்கால்வாயின் அருகுகளில் கொக்கு, நாரை, மடையான், உள்ளான், சிரவி, வாலாட்டி, கானங்கோழி, செம்புகம், வக்கா, தூமைக்கடா முதலாகிய நீர்வாழும் ஜெந்துக்களோப் புசிக்கும் பறவைகள் வரிசை வரிசையாயிருக்கவும் பலயிடங்களிலும் இவ்விப்பாறுவதற்காக சங்கேமற்மற் என்னும் கற்களினுல் மேடைகள் அமைக்கப்பட்டிருந்தது.

ஒவ்வொரு மேடைகளின் முன்பில் ஹௌஜ் என்னும் குளங்களமைத்து அவைகள் நிறைய பன்னீர்முதலாகிய வாசனைநீர்களை ஒவ்வொருகாலும் புதுப்பித்திக்கொண்டிருக்கும்படியாயும் அதற்குமேலில் தங்கத்தினுல் பறவைகளைப்போல்செய்து அவைகளின் சொண்டுகளாகிய மூக்குகளில் காளிஞ்சா உண்டுபண்ணி அதில் நின்றும்வெளிப்படும் ஜலமானது அதிக மேன்மைபொருந்திய வாசனையுடையதாயும் பார்ப்பவர்களின் கண்கள் குளிர்ந்திருகொண்டிருக்கது, மனமானது சந்தோஷத்தின்மேல் சந்தோஷம் பொங்கிக்கொண்டிருந்தது. அத்தோட்டத்தின் நடுவில் விலையுயர்ந்த சோரோஜா கல்லினுல் ஒரு அற்புதங்களடங்கிய பங்களா நிருபத்திசெய்திருந்தது. இவ்வுலகத்தில் அதைப்போன்ற பங்களா எவ்விடத்திலும் செய்யப்படவில்லையென்று புகழப்பட்டதாயிருந்தது. அப்பங்களாவைச்சுற்றிலும் உயர்ந்த மக்மல்பட்டில் சங்கசாகையால் கார்சுப்பிவேலை செய்யப்பட்ட பருதாவால் மூடப்பட்டிருந்தது. அதின் அறைகளில் வெள்ளி பொன்னினுல்செய்த சுப்பாக்கள் அருகுகளில் கட்டிய மிக விலையுயர்ந்த சரிகைவேலைசெய்த பருதாக்கள் தொங்கவிட்டிருந்தது. யாகூத்தினுல் வேயங்களமைத்து சரிகையூகளினுல் கோர்த்து அப்பருதாக்களை தூக்கி கட்டப்பட்டிருந்தது. அப்பங்களாவின் நடுமத்தியில் 7-லக்ஷம் அஷ்ரபிகள் செலவுசெய்து ஒரு மேடை தயார்செய்திருந்தது. மேடைமேலில் அமிநகம் கோடி ஜவாஹிர்க எழுத்திய புசும் பொன்னினுலமைத்த தகத்தொன்று சமைத்திருந்தது. பாதுஷா அத்தமேடையில் அமைத்திருக்கும் சிம்மாசனத்தில் வந்திருந்தான். அப்பொழுது அவ்விடம் ஹாஜராயிருந்தவர்கள் யாவரும் நஜரென்

வளித்தார் அதுபோல் புஜ்ருச்மேஹரெழுந்து அல்கலை விடுசேர்த்து
பக்தியாரகையழைத்து அல்கலையுடைய மனைவிக்குக் காண்பித்து,

நீங்களும் உங்கள் ஆஸ்திகளும் பாதுஷாவின் உத்திரவுபடி எனக்கு சொந்தமானவைகளாகையால் அவைகளில் எனக்கு யாதொரு தரும் பும்வேண்டியதில்லை எல்லாம் நீங்களே ஒப்புக்கொண்டு சுகமே ஜீவித் திருங்கள். ஆனால் இந்த பக்தியாரக் பிரபுவுக்கு யான் வாக்களித்திருக்கின்றேன். அல்லாடைய புத்திரியை உனக்கு நிக்காஹ் செய்து கொடுக்கிறேனென்று, ஆகையால் உங்கள் மகளை அந்த பக்த்தியாரக் என்பவனுக்குக்கல்யாணஞ்செய்து கொடுத்துவிடுங்கள். அந்தப்பெண் வயிற்றில் ஓர் ஆண்குழந்தை பிறக்கும், அந்தக் குழந்தைக்கு கல்வி முதலாகிய இல்முகளும் உபதேசம் கற்றுக்கொடுத்து அந்தக் குழந்தைக்கு பாதுஷாவின் சமுகத்தில் பிரதிநிதித்துவ உத்தியோகத்தை வாங்கிகொடுப்பேனென்றார். இவ்விஷயங்களனைத்தையும் கேட்டிருந்த அபிஸ் பூனிவியானவள் நாயகமே யானும் என்னுடைய ஆஸ்தி பிராட்டி முதலாகியயாவும் தங்களுடையவைகள் அதேன் பெண்ணிய தங்களுடைய பாக்கியிருக்கின்றன் தங்கள் பிரியம் யாருக்குக் கலியாணஞ்செய்து கொடுக்க வேணுமோ அவர்களுக்குத்தமது இஷ்டம்போல் கலியாணஞ்செய்து கொடுக்கலாம் இதற்கு யாதும் தடைனடையாது. என்றரைத்தாள், உடனே அப்பெண்ணை அந்த வேலைக்காரனுகிய ஹபஷிக்கு விவாகம் முடித்துவைத்துவிட்டு புஜ்ருச்மெஹர் தம்முடைய வீடு சேர்ந்து தம்மைப்பெற்ற மாதாவிடத்திற் போய் அரண்மனையில் நிகழ்ந்தவை யாவும் ஆதியோடந்தமாய் ஒன்றேனும் விடாமல் விபரம் விபரமாய்ப் புகன்றார்.

இவ்விசேஷ விஷயங்களனைத்தும் கேள்விற்ற தாயார் புத்திர னுக்குத் திருஷ்டிகழித்து, ஆனந்தநிகந்தி அல்லாகுவுக்த ஆலாவை அதிகமாய்ப் புகழ்ந்து, மகனை முத்தி மார்போடனைத்து மகிழ்ச்சியா யிருந்தார்கள். இங்ஙன மிருக்க புஜ்ருச்மெஹர் அல்லாடைய மகளை ஹபஷிக்குக் கல்யாணஞ் செய்துகொடுத்து, அவர்கள் ஆஸ் திகளையாவையும் அவன்மனைவிக்கு நன்குடையாயிப்த்து மகிழ்ச்சியா யிருக்கும்படி செய்தாரென்ற செய்தி பாதுஷாவுக்கு எட்டிய பொழு து, பாதுஷா புதுமையாகி புஜ்ருச்மெஹருடைய சாத்குணம், தயாளம், போராசையில்லாமை முதலாகிய நன்னடக்கைகளை யோசித் து, மிகவும்புகழ்ந்தார். இவ்விதமாய் சிலநாட் சென்ற பின்புவழக்கம் போல தர்பாரில் மந்திரிகள் ஹக்கீம்கள், பயில்வான்கள், சிப்பாய்கள்,

மற்றுமுண்டான யாவரும் ஆஜராஞர்கள். அப்பொழுது பாதுஷா வானவர் யாவரையும்பார்த்து சொல்கின்றார். யாதெனில் பக்தேஜமா லுடைய புத்திரர் பெருந்தன்மை யுடையவராயும், ஹிம்மத்தில் மிகுத்தவராயும் இந்தராஜ்யத்தில் அதிகப்பட்டவர்கள் யாருமில்லை. அவர் ஒருவர்தான் நமதுவசமிருக்கின்றார் ஹாஜாபக்தே ஜமால் என் பவரின் அருமை புதல்வன் ஹக்கீம் ஜாமால் என்பவரின் பெனத்திர ணுகவு மிருக்கின்றார். இவ்வுலகம் இல்லாமலில் தன்னைவிட வேறே யொருவரு மில்லையென்று யாவரும் சொல்லும்படி யிருக்கின்றார். அமானிதம் கார்த்து ஒப்பிப்பவர்கள் இன்னாரையில் அவரைவிட ஒரு வரையும் நாம்ராணையில்லை நிம்மதிருமுமாகிய அல்கஸ்டைய முதல் கள் முழுவதும் அந்த புஜ்ருச்மெஹருக்கு நாம் கன்குடையளித்தோம் அவைகளையெல்லாம்ஒரு தரும்புகூட தான் எடுத்துக்கொள்ளா மல் அல்கஸ்டைய பெண்சாதி பிள்ளைகளுக்கு பக்ஷீஸ் செய்துவிட் டார். இன்னம் கல்வியில் நகவு, சாப்மன்திக், அக்லாக், ரியாஜி, மஆனி, ஹியத், ஹின்சா, அதப்கிஸாப், ஹிக்மத், ரமல், நுஜூம் முதலாகிய பலபல இல்மிலும் தேர்ந்திருக்கின்றார். இவைகளில் மாத் திரம் உஸ்தாதாக இருக்கின்றரென்று பெண்ணவேண்டாம். அதல் லாமலும் இன்னம் ஜியாசத், மதனிஇலம், இல்மேஜயிஸ், குப்சூரத்புல வர்த்தன்மை மாயி வழல்கி என்னும் உள்நாடு வெளிநாட்டுவிஷயங்களை ஆராய்ச்சிசெய்யும் தன்மை எவ்வளவோ அளவற்றவிஷயங்களை மன தில் எத்தனைநாளானலும்மறக்காமல் கியீரபகசக்தி, சதாவத்து, ஜவா ன்மர்திதனம், யாவரிடத்திலும் பீதால்பியா யிருப்பதிலும் முஹப்ப த்துள்ளவர் நிஜம் சொல்பவர், வாய்திறந்து பேச ஆரம்பித்தால் யா வரும் அவர் வாயைப்பார்த்துக்கொண்டே யிருப்பார்கள். அப்படிப் பட்ட இன்பமாகிய மதுரமொழியை யுடையவர் இவ்விதம் சகல காரி யங்களும் அறிந்தவராகிய ஒருமனிதன் இந்தாமில் மிகசொஞ்சமா யிருக்கும் தவிற அவர் கயிபென்னும் மறைத்தவிஷயத்தை அறிந்து சொல்பவராயு மிருக்கின்றார். இதற்குமுன் நம்முடையசல்தனத்தில் எவ்வளவோ வஜீர்மார்கள் இருக்கின்றார்கள். அவர்கள் யாவரும் அறிவில்லாதவர்களாயும், யோசனையற்றவர்களாயும் அரசன் சமுகத் தில் உட்கார லாயக்கில்லாதவர்களாகவும் காரியமிருக்கும் சமயத் தில் ஹீலாவென்னும் பலஜாலம் செய்தே! ஏமற்றுபவர்களாயும், சோம்பேரிகளாயும் இருக்கின்றார்கள். ஆகையால் நாம் அந்த புஜ்ருச் மெஹரை வஜீராக்கிக்கொள்ளயோசிக்கின்றோம்என்றார், அப்போது

சபையோர்யாவரும் எழுந்து, இரம்வணங்கி பாதுஷாவே தாங்கள் யோசித்தகாரியம் மிகவும் நல்ல யோசனையாக விருக்கும், இந்நாளில் அப்பேர்ப்பட்ட ஒரு மனிதன் அகப்படுவது அருமை தங்கள் அக்கல்யென்னும் புத்திக்கு எதிர் சொல்பவர்கள் ஒருவருமில்லை. தங்கள் யோசனைவரையில் பட்டும் புத்தியுடையவர்கள் இவ்வுரில் யாருமில்லை. எங்கள் யாவருக்கும் தங்களுடையோசனை அதிக பக்ஷ தாகிருக்கின்றது அதுபோல் செயலாற்றுவோம்யென்றார்கள். பாதுஷாவானவர் உடனே புஜுருச்மெஹரை வரவழைத்து, அவருக்கு மந்திரியுடைய கில்அத்து என்று சொல்லப்படும் உடைகளையாவும் வெகுமதியளித்து, பாதுஷாவுடைய வலதுபக்கத்தில் ஆசனம்கொடுத்து உட்காரவைத்தார். பின்பு தர்பார்கலைந்தது பார்வரும் அவரவர் வீடுகளுக்கு சென்றார்கள் புஜுருச்மெஹரும் தம்முடைய வீடுசென்று, தன் தாயாரிடத்தில் நடந்த விஷயங்கள் யாவும் சொல்லி, பாதுஷாவால் வெகுமதிகொடுக்கப் பட்டவைகளையும் காண்பித்தார். அவைகளைக் கண்ணுற்ற மாதசிரோன்மணி யெப்பொழுதும் உறுவென்னும் சுத்தியாய். இருப்பவர்களானகையால் அவ்விடத்திலேயே இரண்டுரக்அத்து நபில்தொழுது அந்த ஏக துவித தத்துவ, உத்தம, உல்லாசு, சல்லாபனை அல்லாருத் தஆலா வினிடத்தில் சுகூர் செய்தாயா! காலிக்குலேலுன்னஹார்! யா! ரப்பேகாசாஸ்! யாமாலிக்கேபேனியாஜ்! அல்ஹம்துலில்லா அல்ஹம்து லில்லாஹி உன்னை தூய்மையாக்குகின்றேன் யோகிறவன் அநமியத்தில் அகமியமானவன், அத்தரங்கத்தி லந்தரங்கமாகி அதிகபிரகாசமாய் அகிலமெங்கும் பிரகாசித்துநிற்பவன். மெய்யை மெய்யாக்குபவன் ஒக்கை ஹக்கில் சேர்ப்பவன். கையறிந்து கைசெய்பவன். சர்வை யறிந்து, சர்வசெய்பவன். கூலி கொடுப்பவனில் மிக அழகான கூலிகொடுப்பவன். சபாசெய்தோரை யறிந்தவன் சன்மார்க்கமுடையோரை சன்மார்க்கத்தில் நடத்தாட்டிவைப்பவன். எழுவை தனவர்தனுக்குகின்றவன். தயாபரனவன், எழுமுதல் வலியோர்யாவரையும், என்னையும், இச்சரித்திரம் தமிழிலெழுதிய அடிமையையும், எந்நாளும் இடைவிடாது ஏந்திகார்த்தருள்புரியும் கபூருர் ராஹீமானவன் என்னும் இன்னம் பலவாறு புகழ்ந்து போற்றி தந்திசெலுத்தினர்கள். பின்பு புஜுருச்மெஹரானவர் பாதுஷாவினுடைய ஆன்மனைக்கு பிரதி தினமும் சென்று தம்முடைய காரியத்தில் மிக ஜாக்ரதையோடும் நடந்துவந்தார்.

கிப்பாதேகாம்ரூன் பாதுஷா தன்மனைவியை துரத்திவிடும் பாடு.

கனகத்தனி லெக்காரூ தட்டிவெட்டிடும் கிப்பாது
தானெரு நாள்வனத்தில் தனித்தவன் செல்லும்போது
மானகாரூ மன்னவன் மனைவிமேல் மனம்வெறுத்து
தானவனுடன் துரத்தும் தன்மையைப் புகலுவோமே.

அகவல்.

அகிலகட லுலக மனைத்தையும் மனைத்த
முகமுதல் துய்யவன்-ஓய்விலா தயாளன்
மலைகடல் மரம்செடி மற்றெலாம் படைத்து
திருமறை யிரக்கிய தெள்ளிய ரகுமான்
மண்ணுல கந்தனில் மனுக்களை யமைத்து
விதவித ரூபமாய் வேற்றுமை யாக்கி
கானது போல கீடல்திட லாக்கவும்
தானது தரும்பாய் தரிதத்தில் மாற்றவும்
இயல்பினை யுடைய இறையவன் செயலை
என்னென் றுரைம்பேன் என்ரஹ்மான் புகழ்
வல்லவன் குதரத் தெல்லாம் திருவாட்டமே.

சுப்ஹா னல்லா அல்லாருத் தஆலா யெப்பேர்ப்பட்டவன் பாருங்கள். இராஜனை பிச்சைக்காரனுக்கவும், பிச்சைக்காரனை இராஜனுக்கவும் தரித்திரனை குபேரனுக்கவும், குபேரசம்பத் தடையவனை தரித்திரனுக்கவும் ஒரு கொடி பொழுதில் கூடுமான வல்லமையுடைய அலீமுல் ஹக்கீமாகயிருக்கும். எப்படியானல் இப்பாது பாதுஷாவினுடைய மனைவி, நிலஹரமுடையூ சரித்திரத்தை முகாந்திரமாக எடுத்துக்காண்பிப்போம். பாதுஷாமனீம்கண்டுதன்னுடைய அதிரூபலாவண்ய சௌந்தரியாயிய மெஹரூருரெனக்கென்று சொல்லப்பட்ட பெண்ணையும் அவளுடன் சேர்ந்த ஹபஷியையும் உயிர்வதை செய்த நள்தொடித்து பெண்களிடத்தில் பற்றுதலில்லாமலும் நம்பிக்கையற்றவராயும் வெறுத்திருந்தார். ஆனலும் தனக்கு அதிக அன்புபொருந்திய நிலரூமென்னும் பெண்ணிடத்தில் மாத்திரம் கொஞ்சம் விஸ்

வாசமுடையவுறும் முன்போல் பேச்சவார்த்தையில்லாவிட்டாலும், முன்னிலும் நாலிலொருபங்கு பிரியமுடையவரா யிருந்தார். அப்படி யிருக்குங்காலத்தில் ஒருநாள் பாதுஷாவானவர் சிக்காரென்று சொல்லப்படும் வேட்டைக்குப் போக எண்ணி மந்திரி முதலாகியவர்களுக்கு எச்சரித்தனர். அரசரின் உத்திரவின்படியே அவர்களனை வரும் யுத்தபாணிகளாக வேட்டைப்படைகளாகிய (பாஜ், ஜரீ, லக்கர், ஜக்கட், பைசரி, குஜாலி, கூளி, பைரவ், நிக்ரு, வல்வத்தான், கச்சேதனி, சினேபூஜ்) முதலாகிய பறவைகளைப் பிடிக்கும் பக்ஷிகளும், விதவிதமாகிய வேட்டைநாய்களும், பிறுத்தை, புலி, செங்காய் ஓநாய், முதலாகிய மிருகங்களைப் பிடிக்கும் மிருகங்களையும் அவைகளை அதனதன் அந்தஸ்த்திற்குத் தகுந்த கூண்டுகளிலும் இன்னம் வேண்டிய ஆயுதாதிகளுடனும் புறப்பட்டுச்சென்று அதிக தூலீதூர வழிகளைக்கடந்து மலைச்சாரலிலையடுத்து வசதையாகிய ஸ்தானம்பார்க்கையில் ஒருமலையானது லெகு விஸ்தாரமாய்க் காணப்பட்டது. அம் மலைச்சிகரத்திலேறிப் பார்க்கையில் அது பரந்து விரித்து அதிக விஸ்தீர்ணமாய் மரஞ்செடிகளடர்ந்து விதவிதமாகியபூக்களுலகுலேயாய் தொங்கவிட்டுக்கொண்டிருக்கும் புஷ்பங்களடர்ந்த செடிகளும் சிகப்பு மஞ்சள் நீலம் குலாபிமுதலாகிய பலவர்ண புஷ்பங்களைத்தாங்கி நிற்கும் வகைவகையாகிய சிறு பூச்செடிகளும் மல்லிகை முல்லை இருவாகி செண்பகம் பாதிரி புன்னை மகிழம்முதலாகியனவிலடங்காத நற்சுகச்செடி கொடிகளும் ஆங்காங்கு பந்திபந்தியாய் ஒங்கி வளர்ந்து தழைத்து நிற்கும் காட்டுமரங்களும் பல பாகங்களிலுமிருந்து மிகத் துல்லிதமாகிய சுனைகள் வடிந்து சேர்ந்து அநேகம் கால்வாய்கள் செல்லவும் அவைகளில் பலபாகங்கள் ஒன்றுசேர்ந்து ஆறுகளாக நாற்றிசைகளிலும் செல்வதும் அவ்வாற்றங்கரைகள் தோறும் வரிசைவரிசையாய் சாய்ந்திருக்கும் தாழை, அரளி, நொச்சி, இச்சி, அத்தி, நாணல், கொறுக்கை, கோரை, கோங்கிலம், மாந்தப்புல், வசம்பு, அரத்தை, இலாமிச்சை, வெட்டி, விளா, களா முதலாகிய பற்பலவிதப் பூண்டுகளும் செடிகளும் அமைத்து பார்ப்பவர்கள் புதுமையுறுமிந்த யாது இராஜாக்களுடைய தோட்டமோ? இராஜாக்களாலும், இவ்விதவிநோததோட்டம் உண்டுபடுத்தமுடியாதே ஒருக்கால் இராஜாக்களுக்கெல்லாம் இராஜாவாகிய அல்லாஹுத்தஆலா தனக்கு இஷ்டமானபடி எவ்வெவ்விடங்களில் எவ்வெவ்விதமாயமைத்த நாடென்றாலே அவ்வவ்விதமாயமைத்து அருள் காக்கியாய் மனிதர்களுக்குக் காண்பிக்கின்றான். ஆ! நிஜம் இது அந்த அல்லாஹுத்தஆலாவினுடைய காக்கியாகிய குதரத்துகளில் நின்றுமுள்ளவைகளி லொன்றுதானென்று சொல்லும்படியா யிருந்தது. அவ்விதஅலங்காரமாகிய மலைசிகரத்தில் மூயில், குயில், மாடப்புறு, மணிப்புறு, செம்புகம், கொண்டலாத்தி, புல்புல், டையர், வானம்பாடி, கரிச்சான், கிட்டு, பட்டுகிட்டு, லால், புல்புலேஜர்த், மைனு, மதாரி, ஆக்தை, கூகை, மறங்கொத்தி, காடை, கவுதாரி, பருந்து, கழுகு, அரிகானுமிலக்காடை, பஞ்சரட்டான், பஞ்சவர்ணக்கிளி, மலையப்பான், செம்மடையான, உள்ளான், சிறுவி, கோரைகுத்தி, வக்கா, கொக்கு, சாரை, கீழைக்கடா, செங்காகாவர, கலிமான், குளிமான், சருவைமான், ஆட்டுமான், மரை, முயல், காட்டாடு, காட்டெருமை, நரி, மரகாய், சூள்ளாரி, கரடி, புலி, முள்ளம்பன்றி, ஓநாய், பலிப்பாம்பு, மந்தி, குரங்கு முதலாகிய பற்பல விதமாகிய பக்ஷிகளும் மிருகக்கூட்டமாகிய விலங்கினங்களும் ஆங்காங்கு மரம், செடிகளிலும், தரைகளிலும், தண்ணீருள்ளபோதங்களிலும் பாடவும், மேயவும், உறங்கவும், ஆடவும், அகவும், அடைகாக்கவும், இரைதேடவும், இன்னம் அவை யவைகளுக்குரிய தொழில்களைச் செய்து ஆனந்தத்துடனிருக்கக்கண்ட பாதுஷா அவ்விடத்திலேயே கூடாரமடித்து இரங்க உத்திரவுசெய்தார். பாதுஷாவின் சொற்பிரகாரமே யாவரும் அவ்விடத்தில் தரங்கியிருந்தார்கள். அவ் வேளையில் பாதுஷாவுக்கு எதிரில் மிகவும் மெலிந்து வீறுப்புகள் பூவும் தோல்களைத் தன்பாவிழுத்து, அவ் வெலும்புகள் வெளியில் வர ஆரம்பிப்பதுபோல் அதிக தூர்ப்பலமடைந்து யற்பி வதங்கி, சற்றும் சதையில்லாமல், மெத்தக் கிழவனுய் தலையில் ஓர் விறகு கட்டை சுமந்து தள்ளாடி தள்ளாடி நடந்து வரக்கண்ட பாதுஷா அவனை அழைத்து பரிதபப்பட்டு ஒப் பெரிய மனிதனே நீ எத்தனூர்? உன் பெயரென்ன உனக்கு இத்தவிர்க்காப்பியகாலத்தில் சம்சாரஜீவனஞ்செய்யத்தக்க மனிதனில்லையாவென்று கேட்டார். இவ்வார்த்தையைக் கேட்ட கிழவன் பாதுஷாவைப்பணிந்து, பிரபு! தங்களை இன்னரென்று தெரியவில்லை. அதிருக்கட்டும் யாராயிருந்தாலும் எனக்கதைக் கொன்றுமில்லை. தாங்கள் பாதுஷாவைப்போலிருந்து இந்த ஏழையின்மீது அன்புகூர்ந்து கேட்டபடியால், அடிமையின்மீது இவ்வளவு கிருபைவைத்து கேட்ட பிரபு யாரென்று தெரிந்துகொள்ள விரும்பினேன் இத்திசையில் விருக்கும் யான் விரும்பி யாதபலன்? ஒன்று

மில்லை. யானீ இக்காட்டில்வசிக்கும் ஓர் ஏழை எனக்கு ஓர்பெண்சாதி உண்டு அவள் 10-15-பெண்பிள்ளைகளைப் பெற்றாளே பொழிய ஓர் ஆணுவது பெறவில்லை. என் பெண்சாதியோ ஒரு வேளையான் வியாதியதிகரித்து படுத்துக்கொண்டால் அவ் வியாதியோடு தலைம்பிர்களை யெல்லாம்பிய்த்து, மொட்டைத்தலையாக்கி கட்டை விளக்குமாத்தால் மொட்டு மொட்டென்றுசாத்தி சம்பாரித்து வாடா கிழவா வென்று தூரத்துவாள் யானும் அடிவுதை பட்டுக்கொண்டு ஒன்றும்பேசாமல் இக்காட்டினிடமாக வந்து பட்டமாங்கீர் வெட்டிகட்டி இதோ தெரியும் கிப்பாது பாதஷாவுடைய பட்டணத்தில் கொண்டுபோய் காது பணத்திற்குவிற்று, அதற்குத்தவிட்டுசோட்டிகளைவாங்கி செல்லேஷ் சென்று வாசற்படி ஏறுமுன் என் 15-மக்களும் மனைவியும் அவைகளைப் பிய்த்துப்பிடுங்கி தின்றுவிடுவார்கள், அப்பால் எனக்குகிடைப்பது அரிதாய்விடும். ஆகையால் வீட்டிற்குபோகுமுன் வழியிலேயே ஒரு சொட்டியைத்தின்று ஜலமருந்துவோமென்றாலும், அப்போதும் ஆபத்தான அடி உதையே கிடைக்கும். பெண்சாதியோவெனில் பேரிதைச்சவிட்டு ஏண்டா கிழவா எங்கள் வயற்றைப்பார்க்கிலும் உன்வயறு அவ்வளவு பெரிதா? எவ்வளவு தின்றாயோ என் கிழவா இத்தனைப் பிள்ளைகளைப் பெற்றாய்? என்றடிப்பாள். அடி! பாவி! யானு பெற்றேன்? நீயல்லவோ பெற்றாயென்று ஒருவார்த்தை சொல்லிவிட்டால் அப்போதே கடகெடுத்து என்னைக் குனியவைத்து குத்து குத்தென்று முதுகு வீங்கும்படியாய்க் குத்துவாள். ஆகையால் யான் ஒன்றும் பேசாமல் எனது வழக்கப்படியே தினந்தோறும் காடுபணத்திற்கு விறகு விற்று சோட்டிகளை வாங்கி யான்தின்னுமலே அப்படியே கொண்டுபோய்க்கொடுத்துவிடுவேன். எனது சிறிய மக்கள் மாத்திரம் தகப்பனென்ற வில்வாசத்தை மறவாமல்தனது பரமாகிய சொட்டியில் காலி லொருபங்கு மீதியாக்கி வைத்திருந்து எனது தாய்க்கும் சமக்கையார்களுக்கும் தெரியாமல் கொடுப்பாள். யான், இவ்விதமாக ஜீவனஞ்செய்யும் ஏழைஜபா! ஒருகாலைக்காகிலும் இந்த விறகுசுமை இக்காடுபணத்திற்கு விற்குமென்று வெகுவாய்ப் பிரயாசைப்பட்டாலும், அந்த காடுபணத்திற்கே விற்கியமாகிறதே தவிர அதிகமாய் விற்கிறதில்லை, ஓர் நாள் பாதஷா அவர்களுக்குக் குழந்தை பிறந்தென்று ஏழைகளுக்கு அன்னமிட்டார்கள். அன்றையதினம் யானும் ஓர்ஏழையாய்ச்சேர்ந்துபோய் வயறுநிறைபபூர்த்தியாய்ப் புசித்துப் பசியாறினேன். அவர்கள் காது பூரி கொடுத்தார்கள்.

எனக்குத் தூனி கிடையாதபடியால் பக்கத்தில் வைத்துக்கொண்டு பக்கியில் பசியாறினேன். அந்த காதுபூரியையும் எவனோ அபகரித்துக்கொண்டு போய்விட்டான். இவ்விதமாகிய என்னிதியை என் கேட்கின்றீர்கள். என்னைப்போன்றமனிதன்உலகத்தில் இருக்கக்கூடாது என்றான். பின்னும் பாதஷா கிழவனைநோக்கி உன்னுடைய பெயரென்னவென்றுகினான். அதற்குகிழவன் பிரபு! அதிலென்னவிருக்கிறது. என் அப்பனுக்கு யூசன் ஒருவன்தான் மகன் யாரோ ஓர்தந்தியாகியிடத்தில்போய் ஜாதகம் கேட்டாராம் அந்தஜாதியூசி சுவடியைப்பார்த்து (கிப்பாது) என்று பெயர் வை. அவன் பின்னுக்கு நல்லாயிருப்பானென்றானாம். என் தகப்பனும் அப்படியே பெயர் வைத்துக் கூப்பிட்டான். என்னைப் பாருங்கள் முன்னுக்கு எப்படியிருக்கின்றேனோ அப்படியே பின்னுக்கு மிருக்கின்றேன் தாங்களை பாருங்களென்று முன்னும் பின்னுமாய் முதுகையும் முகத்தையும் திருப்பித் திருப்பி காண்பித்தான். பாதஷா சிரித்து, சரி சும்மா யிருவென்று கிழவனைக் கையமர்த்தி பக்கத்திலிருந்த புஞ்சுக்மேஹரை பார்த்து காஜாவே! இஃதென்ன புதுமை ஆச்சரியமாயிருக்கின்றதே என்னுடைய பெயரும் கிப்பாது இவன் பெயரும் கிப்பாதென்கின்றான். யான் இருப்பது என்ன அந்தஸ்து, இவ் வயோதிகன் யிருக்கும் கிலைமை யென்ன, அவன் பெயரைக் கேட்டால் புட்டத்தைத் திருப்பிக் காண்பிக்கிறான் புத்தியிலும் அவ்வளவு கூர்மையாகிய உலக்கைக் கொழுந்தாகத்தான் இருக்கின்றது. அதுயாது காரணம் பாருமென்றார். உடனே புஞ்சுக்மேஹர் கணக்குபோட்டுபார்த்து பாதஷாவே தாங்கள் பிறந்தது புர்ஜேஹறமல்லென்னும் நக்ஷத்திரம், அந்த நக்ஷத்திரத்தில் சூரியனும், சந்திரனும், ஒன்றுப்சேர்ந்திருந்தார்கள். அப்படியிருக்கும்வேளையில் பிறந்தபின்னை அஷ்டதிசை பரிபாலிக்கும்,எனஜோதிபாவார்கள், இக் கிழவன் புர்ஜேஹறத் என்ற நக்ஷத்திரத்தில் பிறந்தவன். அந் நக்ஷத்திரத்தில் சூரியனும், சந்திரனும் தனித்தனி பிரிந்துகின்றது அவ்வேளையி லுதிக்கும் பிள்ளையான்று, தரித்திரனகிறிருக்கும். ஆனல் புர்ஜேஹறமனும், புர்ஜேஹறும் ராசியில் சிற்றோக்குறைய ஒற்றுமைப்பட்டதாயிருக்கிறபடியால் இக்கிழவனுடைய ஹக்கில் கொண்ணூருக்குமேல் அல்லாஹறத் தஆலா ஒரு சம்பத் தண்டுபண்ணுவானென்றார்.

இவ்வனம் இவ்விதமாய்ப் பாதஷா விசாரித்துக்கொண்டிருக்கையில், பாதஷாவினுடைய பத்தினியாகிய திலராமென்பவள் அரு

இலிருந்தபடியால் பாதுஷாவை நோக்கி, ஜஹாம்பனுவாகிய பாதுஷா வே! தாங்கள் சற்றுபோசித்துபார்க்கவேண்டும். அஃது யாதெனில், நகூதத்திரத்திலும் ராசியிலும் ஒன்றுமில்லை ஒரு அடியாளுக்கு இடைக்கும் அவன் பத்தினி சிநேகிதனுடையவளாயின் அவன் சம்பத்துடையவனாயிருப்பான். மேற்கூறிய அவள் தரித்திரத்தை யடைந்தவளாயில் அவனும் தரித்திரத்தை யடைந்தவனாயிருப்பான். இவ்விதமாகவே நமது பெரியோர்களால் கேள்வியும் திருக்கின்றோம். அன்றியும் ஒருத்திசந்தரியுடையவளாயிருக்கில் அது புருஷனுடைய அதிர்ஷ்டத்தாலுண்டானதென்று துணிவேண்டும் ஆகையால் நமது த்திரத்திலும் வேளையிலும் யாது இருக்கிறதென்றாள். இவ்வார்த்தையைக் கேள்வியுற்ற சுல்தானுனவருக்கு முன்னமே பெண்கள்மீது வெறுப்புண்டாகி யிருக்கிறதென்று கூறியுள்ளோமல்லவா? அவற்றிற் கிணங்க இப்பொழுது அதிக கோபமுண்டு அத்தோபாக்கினியை அவிக்க பெண்கள் விஷயத்தில் தன்னகத்தில் நிர்மலன்னும் தயாளமாகிய ஜலமில்லாதபடியால் அத்தீயானது பின்மேலும் மூண்டு பெரிய வர்மித்தபடியால் அவ்வக்கினி சுவாலையானது தன்னருகில் வீற்றிருந்த யாவரையும் விட்டுவிட்டு பத்தினியாகிய திலராம்மீது தாவிய பாவனையாய் பாதுஷா மின்னற்கொடியாளாகிய மின்சாரவல்லினள். திலராமைநோக்கி, அடீ! யாதுரைத்தாய். ஆஹா! உன்னிடம் வந்தவசத்தால்தான் யான் இவ்வுரசாகுமி பூமியின்றேனென் றெண்ணியிருக்கின்றாயோ? அப்படியானால் இதோ உன்னை நீக்கிவிட்டேன். நீ இந்தக் கிழவனுடன் ஓடிப்போய்விடு. என்னால் இவ்வேழை தரித்திரன் என்னப்போல் ஐஸ்வரியவந்த னுட்டும் பார்ப்போம் யென்றதோடு பாந்திப்பெண்களை விடுத்து இவள் உள்ளாடை தவிர, மற்ற ஆடையாபரணங்களில் ஓரிழை பொற்சரிகை நூலும் காணக்கூடாதவண்ணமாய் யாவையும் ஒன்றேனும் விடாமல் கழற்றி விடுவிக்களென்று ஆஜ்ஞாபித்தார். அவர்களும் அரசனுத்திரனின் படியே திலராம் அணிந்திருக்கும் உள்ளாடைதவிர, மற்ற ஆடையாபரணங்கள் யாவையும் ஒன்றேனும் விடாமல் உரிந்துக்கொண்டு விட்டு விட்டார்கள். ஹா! என்ன பரிதாபம், தனக்கு இக் கெதி நேரிடுமென்று தெரியாத உத்தமிக்கு இக்கெதி நேரிடவும் மின்னலைப்போல் திடீரெனமறைந்து ஓர் செடிமறைவில் நின்றுகொண்டு விறகுதலையனை யழைத்து, ஓய்முதியவரே அல்லாஹுத் தஆலாவுமக்கு நற்காலத்தையுண்டாக்கி யிருக்கின்றான் நீர் உம்மிடமிருக்கும் கர்தைத்துணியில் பாதி

எனக்குத் தாரும் அதனை மேல் போர்வையாய் போர்த்துக் கொண்டு உன் பின்வருகிறேன். இதுவரையில் நீ படைத்த கஷ்டங்கள் யாவும் இனி யும்மைவிட்டகன்றுவிட்டதென்றாள்.

இவ்வார்த்தையைக் கேள்வியுற்ற விறகுதலையன் ஐயோ இதுவும் ஒன்தலைவிதியோ இதோ என்கர்தையில் பாதித்தருகிறேன் இதை வாங்கியுடுத்திக்கொள்ளென்று பாதிக் கர்தையை கிழித்து தூடுத்து செல்லுகின்றான். அம்மா உங்கள்கூட விருந்த அந்தப் பிரபுடத்தில் யான் சொல்லியவைகள் யாவும் நீங்களறிந்திருப்பீர்களல்லவா? என்னுடைய மஹிஷி பொல்லாதவள், எத்தனையோ கட்டை விளக்குமாறுகள் தூள் தூளாகிப் போய்விட்டது, இப்பொழுது இருப்பது ஒரு விளக்குமாறுதான். உங்களை யான் என்னுடன் அழைத்துக்கொண்டு போவேனுகில் என் பெண்சாதி கோபித்து, அடா! கிழட்டுஒவ்வாளே உனக்குயான் ஒருபெண்சாதி போதாதா? கல்ல அழகியாய் இன்னொரு பெண்ணையும் அழைத்துவந்தாயா, நீ கொண்டுவரும் ரொட்டியில் யாங்கள் வயறுவளர்ப்பதே கஷ்டமாயிருக்கின்றதே இவளுக்கும் எங்கே போகின்றது என்று இப்பொழுதிருக்கும் அவ் விளக்குமாறும் பொடிப்பொடி யாகும்வரையில் அடித்து நொறுக்குவாளம்மா அந்த விளக்குமாறும் போய்விட்டால் அதற்கும்கூலி எங்கேபோய் சம்பாதிப்பேன் தாயே! நீளங்கேபாவது போய்விடு வெறுமாலல் என் கர்தையையும் யான் மறபடியும் கேட்க மாட்டேனென்றான். இவ்வார்த்தையைக் கேள்வியுற்ற திலாராம் ஒருவாறு தன்மனைதேற்றி ஆறுதலோடு சொல்லுகின்றாள். ஓய் பெரியவரே! உம்மை யான் கணவனுக கொள்ளேன். யான் யாரென்று நீர் இன்னம் அறியவில்லைபோல் காண்கிறது இனி யான் உமக்குச் சொல்லுதை விபரமாய்க்கேளும் இங்கராதிபதியாகிய கிப்பாதி சம்பூன் பாதுஷாவினுடைய மஹிஷி உம்மிடத்தில் இவ்வளவு நேரம்வசனித்தவர் அந்த ஏகாதிபதியே, என்னுடைய காலவித்தியாசமானது நீங்கச் செய்தது, ஒருவன் எவ்வளவுக்கு முன்னால் கஷ்டத்தையனுபவிக்கின்றானோ அவ்வளவுக்கும் பின்னுக்கு சுகத்தையனுபவிப்பான். இனி உம்முடைய கஷ்டகாலம் கிவர்த்தியானது, என்னையும் அரசனிடம் டகலச்செய்தது, இனி நீர் எனக்குத்தர்தையாகும், உமது தேவியார் எனக்குத்தாயாகும், உங்கள் விட்டிலிருக்கும் விளக்குமாறு ஒன்று மாருகிவிடும். இப்பொழுது இருக்கும் விளக்கு

மாறும்தூளாக்காது, நீரும் இனி அடிபடமாட்டீர். உம்முடையபெண் சாதிக்கு யான் தகுந்த அறிவைப்புகட்டி, அவளை உமக்குப் படிந்து நடக்கச்செய்வேன். நீர் ஒன்றுக்கும் பயப்படாமல் கட்வும் உம்முடைய வீட்டுக்கு யானும் வருகிறேனென்றான்.

இவ்வார்த்தையைக் கேள்வியுற்ற கிழவன் திடுக்கிட்டுமனமருண்டுதிகிலுகொண்டு, ஆ, அப்மணி! அவர்பாதசேவகயான் அவர்மூன்பில் என்னென்னபேரீமரியாதையில்லைமல்பேசினேனே என்பதேயேதும் கோபமாலாரோ? நீங்கள் அலர்பெண்சாதியா! அப்படிசொல்லு அசடாண்டாய்யா! இவ்வளவுபேச்சு பேச்சென்று சோளப்பொறி பொறிவதுபோல் வாய்பொறிந்தது அப்படிசொல்லு ஆனல் வாருங்கள் ராஜாத்தியிருக்குபட்டும்எனக்கு பயமில்லையென்று திலாமையழைத்துக்கொண்டு தன்வீட்டைநாடிச்சென்று குடிசையருகில் வரும்பொழுது கிழவன் வருவதும் அவன் பிந்நே ழியு சுந்தரி சட்டத்துணியுமற்று கடும்நாணத்துடன் கத்திகத்தி பிச்சி பிச்சி வருவதையும்பார்த்து அவன் மனைவியானவள் ஓடோடியும் வந்து தலைவிரிகோலமாய் கிழவன்கையை இடதுகரத்தினி லழுத்திபிடித்து வலதுகரத்திலிருந்த கட்டைவிளக்குமாற்றை ஓங்கி ஓங்கி பாழும் கிழவா! இவளாரடா சுந்தரி? இந்தப் பாழடைந்தமூஞ்சிக்கு பத்துபலம் கப்பு மஞ்சளா? நீ! வரண்டிக்கொண்டுவரும் வருமானத்திற்கு வெப்பாட்டியொருகேடா வென்று சொல்லி அடிக்க ஓங்குமுன் திலாரும் அருகில் வந்து தாயே என் அப்பனே அடியாதே உமது கணவனுக்கு யான் மனைவியாக வரவில்லை. உமதுபுத்திரிகளில் என்னையும் ஓர் புத்திரியாக பாவித்துக்கொள்ளுங்கள். இனி உங்கள் கஷ்டங்கள் யாவும் நிவர்த்தியாகிவிடும். யான் இக்காரத்தை யாரும் கிப்பாதுபாதுஷாவினுடைய பத்தினி உங்கள் நற்காலமானது என்னை உங்கள்வசம் அனுப்பிவைத்தது, எனக்காக நீங்கள் கஷ்டப்பட வேண்டியதில்லை. தாயே! கணவன் காலின்கீழ் சனத்தசுவர்க்கம் உண்டு கணவனைவணங்கி துதித்து அவர் திருவடியைப் பூசித்துக் கொண்டிருந்தால், அச்சுவர்க்கம் கிடைக்குமென்று பற்பலவிதமாகிய புத்திபுகட்டியே கிழவிகையில் வைத்திருந்த விளக்குமாத்தைக்கீழே யெறிந்துவிட்டு, திலாருமை உற்றுநோக்கினாள். இச்சமயத்தில் கிழவனுக்கு முன்னிருந்தபேதமை ருணம் மறைந்து புதிதாயமைந்த ஜவான்மர்தியாகிய வீரத்தன்மை இளம்பிடவே, யானைவரும்பின்னே மனியோசைவரும் முன்னே

வாழ்வுவரும் பின்னே மதி எட்டிவரும் முன்னே எண்பதற்கிணங்க கிழவன் துள்ளுகாளையைப்போ லெகிரி குதித்து பெண்சாதியை முறைத்துப்பார்த்து, என்னடி உருட்டுகிறாய், அடே! சிறுக்கி உள்ள நாளெல்லாம் என் அன்னத்தைத் தின்றுக்கொண்டு என்னையே இத்த அறுபதுவருஷ்காலமாய் அடித்து வருகிறாயே இது நியாயந்தானே? இத்தனைகாளாய்ப் பெண்சாதி ஆச்சுதே பென்று போறுத்து பொறுத்து பார்த்தேன். சீச்சி! காரியம் கேட்டுப்போகுது இனிவிட்டேனு பார் உன்னை அறுத்துக்கூறுபோட்டு வீசுகிறேன் பாரடி! ஆ! ஹா!! இவ்வளவு ஆச்சா? என்னடி வாடி என கனவுகண்டு முழித்தவன் போல கலக்கினுன் கனவன்கலக்கிய கலக்கைக்கண்ட மனைவியானவள் யோசித்து, தனது புருஷனுக்கு திடீலென்று இவ்வளவு தாஷ்டமுண்டானதைக் குறித்து, அதிக சந்தோஷமுற்றவளாய் என்பத்தாவே! இத்தனைகாளாய் இந்த புத்தியை எங்கே மேயவிட்டு விட்டிருந்தீர். இனி எனக்கு புத்திவந்துவிட்டது. உம்முடைய அன்னத்தைதின்று உமக்கு துரோகஞ்செய்தேன், என்னை மன்னிக்கவேண்டும் என்பிராணேசா! யென்று காலில்விழுந்து பணிந்து, மன்னிப்பு கேட்டுக்கொண்டு திலாமை நோக்கி அம்மா ராஜபத்தினியே உங்கள் பாதம் என்வாசற்படியில் பட்டபோதே எங்கள்கண்கள் திறந்து இதலம் இதுவிடர் ஏன்பதாய்விளங்கிவிட்டது. இனிநீங்கள் சொல்லியதுபோல் எங்களுக்கு நற்காலம்வந்துவிட்டதுயென்று திலாருமையழைத்து குடிசைக்குள்சென்று அன்றைபதினத்தைத் தழித்து மறுநாளுதயத்தில் எழுந்து யாவரும் காலைக்கடனை முடித்துக்கொண்டு அத்தினத்திற்குரிய உணவாதிகளைப் புசித்தபிறகு திலாருமென்பவள் கிழவனைநோக்கி அப்பனே இன்றையதினம் நீர்மிறகுவிற்கும்பணத்திற்கு சொட்டிவாங்காமல் கோதுமையை வாங்கி வாருமென்று அனுப்பிவைத்தாள் கிழவனும் அதற்பேல் காட்டிற்கேகி எரிதருப்புகளை வெட்டிகட்டாகட்டி சுமந்து விற்று அதன் கிரயமாகிய நாலணாவுக்கு கோதுமையைவாங்கி தணியில் மூடிக்கொண்டு வந்துசேர்ந்தான். அக்கோதுமையைத் திலாரா மெனும்பவளும், கிழவன் புத்திரிகளும் சேர்ந்து திருகையிலிட்டுதிரித்து மாவாக்கி அத்மாவை மூன்று பங்குசெய்து இரண்டுபங்கை வைத்துவிட்டு ஒருபங்கை ரொட்டிகள் செய்து, பாவரும் ஆவல்தீர நன்றுப்புசித்து ஒருநாளுமில்லாத சந்தோஷமுற்று திலாமை வெகுவாய்ப் புகழ்ந்து போற்றிக் கொண்டாடினர்கள். மற்ற இரண்டு நாளைக்கும் கோதுமை மாவு கைவச

மிருந்தபடியால் அவ்விரண்டு தினத்திலும் கிழவனே விறகுவெட்டி விற்று அப்பணத்திற்கு கம்பள மயிர்வாங்கி வரும்படி உத்தரவளித்தாள். அதுபோல் கிழவனும் அதிக சந்தோஷமுற்று இரண்டுதினத்திலும்விறகுவிற்றபணத்திற்கு கம்பளிமயிர்வாங்கி வந்தான். அந்த மயிரை திலாராம்வாங்கி கிழவன் மனைவி புத்திரிகளுடன் திரித்துக் கம்பளக் கயறுக்கினார்கள்.

இவ்விதமேநாள்தோறும் கிழவன் விறகுவிற்றுக்கொண்டுவரும் நாலணாவில் ஒருநாள் பணத்தை மூன்றுநாள் வழீபனம் செய்வதும், இரண்டுநாள்பணத்தை மயிர்வாங்கி கம்பளக்கயிர் திரித்து விற்பதுமாய் சிலநாள்செய்துவந்ததில் கம்பள கயறுவிற்ற பணங்கள் ஓர் மொத்தத்துகை சேர்ந்தது. அதில் சிலநாணயத்தை கிழவன் கையிற் கொடுத்து ஓர் கோவேறு கழுதைவாங்கி வரச்செய்து, ஐயா! இனி மேல் நீர்விறகுவெட்டி தலையில்சுமந்து விற்று வரவேண்டாம். காட்டில் விறகுவெட்டி இந்தக் கோவேறுகழுதைமேல் சுமத்தி பட்டணத்தில் கொண்டுபோய் விற்றுவாருமென் றுக்ஞாபித்தாள். கிழவனும் அவ்விதமேசெய்ய முன்னிலும் மும்மடங்கு அதிகமாய் லாபம் வரும்படியாயிற்று. இப்படி சிலகாட் கழிந்தபிறகு ஆயிரகணக்கான துகை ஏற்பட்டுவிட்டது. அப்பொழுது திலாரும் கிழவனையழைத்து, தக்தையரே நீரினி விறகுவெட்டி விற்கவேண்டாம் இன்றோறும் விறகுகளைவெட்டி அந்தக் காட்டில்தானே ஓர்மலைச்சாரலில் சேகரஞ் செய்து வாரும் இன்னம் சில தினங்களுக்குபின் மழைகால மேற்படப் போகின்றது. அப்பொழுது தகுந்த விலைக்கு விற்கக் கூடுமென்று சொன்னாள். அதுபோல் கிழவன் தினந்தோறும் விறகுகளைவெட்டி அக்காட்டினிடத்தில் ஓர்வகதியாகிய மலைச்சார்பில் சேகரம்செய்து வந்தான். இவ்விதம் செய்து வருவதனால் சிலதினங்களில் அந்த விறகுகள் ஏராளமாய்ச்சேர்ந்துவிட்டது, இதற்கிடையிற் கம்பளி கயறு விற்றபொருளினால் சில வீடுகளும் சிலகுலாம்களும், சிலகோவேறு கழுதைகளும் வாங்கி அச்சமயம் அக்காட்டில் வசிப்பவர்களில் இக்கி முவன்பிகவும், ஐஸ்வரியவானென்று யாவரும்மதிப்பாய்ச் சொல்லும் படியாய் இருந்து இப்படியிருக்கும் நாளையில் ஓர்நாள் திலாராம் கிழவனையழைத்து எனது தக்தையே நீர் இனிமேல் விறகுவெட்ட வேண்டாம் காட்டினிடமாய் வெட்டிச்சேர்த்துவைத்திருக்கும் விறகுகளை நமது கோவேறுகழுதைகளின் மீதேற்றி சுமத்திக்கொண்டு வந்

துவீட்டில் சேர்த்துவிடும். சமயம்வந்தபோது விற்றுவிடலாம். இல்லாதவரையில் நமது சிலவிற்கு ஆகட்டும். எப்படியாவது பார்த்துக் கொள்ளலாமென்றான். கிழவனும் அவ்விதமே கல்லதென்று சம்மதித்துகருதைகளையோட்டிக்கொண்டு காட்டினிடம்போனதாயினன்.

இங்ஙனம் இவ்விதமிருக்க, முன்பு திலாராமை பாதுஷா விறகு தலையனுடனே தரத்திலிடும் முன்பு வேட்டைக்குவந்து தன்னை மலைச்சிகரமானது, அதிக உன்னதமாகிய வசக்தஸ்தலமென்று முன்னமேயாம் கூறியுள்ளோம் அல்லவா? ஆகையால் பாதுஷா அடிக்கடி த்து அவ்விடத்திற்கே வேட்டையாட சிலகாலமாய் வந்துகொண்டிருந்தபடியால் கடைசிதடவையில் வந்தபொழுது கெண்டைபனியதினத்து, பாதுஷாமுதலாகிய பலஜனங்களும்பயமும் குளிரினால் விரைத்து ப்போகாத்து கதங்கள் நீட்டமுடக்க கஷ்டமாய் இருக்கும் சமயத்தில் ஏவலாளர்கள் நான்கு திசைகளிலும் ஓடி திரிக்த விறகு சேகரம் செய்கையில் கிழவன் சேர்த்து வைத்திருந்த விறகுபோர் மிகபெரிதாய் இருக்கக்கண்டு பாதுஷாவுக்கு அறிக்கைசெய்ய அவர்தம் சைன்யங்களுடன்வந்து, அவ் விறகுபோரைச் சுற்றிலும், தீயைப்பற்றவைத்துக் கொளுத்தி எரித்துவிட்டு யாவரும் குளிர்காய்ந்துகொண்டிருந்து பொழுது விடிந்தவுடனே புறப்பட்டு பட்டணம்போய்ச் சேர்ந்தார்கள்.

அப்பால் கிழவன், திலாரும்சொன்னதுபோல தனதுகோவேறு கழுதைகளை யோட்டிக்கொண்டுபோய் தான் சேர்த்துவைத்திருக்கும் விறகு குவியலைப் பார்க்க அது அனல்பற்றி எரிந்து கரியாய்ப் போய் இருக்கக் கண்ட கிழவன் வயிறெரிந்து, ஆ! என்றலறி யழுது பூமியில்விழுந்து, மூர்ச்சையாகி மறுபடியுமெழுந்து ஹாஷியாராகி, என் செய்வேன் ஆயுசுகாலமாய்த் தேடப்பட்ட விறகு குவியலையாரோ அனியாயமாய்க் கொளுத்திவிட்டு போனார்களே இனியாது செய்வோம். எல்லாம் கரியாய்விட்டதே என்னுடைய மகளுக்கு யாது உத்தரம்சொல்வேன் என்று, தலையிலும், முகத்திலும் மாரிமாரியடித்துகொண்டு கோவென்று கதறியழுது தானே கன்மனதை ஒருவாறுதேற்றிக்கொண்டு எரிந்து நீக்துகிடக்கும் சாம்பலையாவது இக்கோணிகளில் அள்ளிக்கொண்டுபோய் நமது புத்திரி திலாராமுக்கு காண்பிப்போமென்று பெண்ணி, தான் எடுத்தேகி பிருந்த

பைகளில் அந்தச்சாம்பல்களை அள்ளி அள்ளி நிறைக்கையில் அத்தி
டன் அம்மி குளவியுருவமாயும், குண்டுகோப்போல் உருண்டைவடி
வமாயும், அச்சாம்பலுடன்சேர்ந்து, கலந்துகிடந்தபடியால் அவைக
ளையும் மூட்டை ஒன்றுக்குபத்து கற்களாக ஜாக்கிபோட்டுக்கொண்
டுவந்துவிடுசேர்த்து, திலாரீம் முன்னல்வைத்து அம்பா விறகு குவி
யலை யாரோ கொளுத்திவிட்டார்கள். இதோ அதற்கு சாக்ஷியாக
அந்தச்சாம்பல்களில் காலுமுட்டை அள்ளிவந்திருக்கிறேன் பாருங்க
ளென்று கண்ணீர்த்ததும்ப கதறியழுதுக்கொண்டு மூட்டைகளை இற
க்கி அவிழ்த்துக்கொட்டினான். அதினுடன் கற்களும் விழக்கண்டு
திலாரும் இக்கற்கள் யாதென கிழவனைக் கேட்க்க, அம்மா! இவைக
ளைப்போன்ற கற்கள் ஏராளமாய் அச்சாம்பலுடன் கிடக்கின்றது.
ஏதாவதோர் வேலைகளுக்கும் இந்தக்கற்கள் உபயோகப்படுமென்று
யெண்ணி இதனுடன் கொஞ்சம் எடுத்துப்போட்டுக்கொண்டு வந்
தேன். என்றான். உடனே திலாரம் அக்கற்களிலொன்றை எடுத்துக்
காத்திலிருந்த கத்தியின்முனையினல்கீறிபார்க்கையில் அது தங்கக்கற்
களாய்க்காணப்பட்டது. ஆகையால், தன்மனதில் யெண்ணுகிறாள்,
இவர் விறகுகளை குவித்துவைத்திருந்த ஸ்தலமானது தங்கசுரங்கமா
கையால் தீமூண்டு எரியவே உருகிவழிந்து, குழிகளிலேபோலும், உ
ண்டைவடிவமாயும் கிடக்கின்றது, கிழவனுக்கு இதன் உண்மைதெரி
யாது, நல்லதிருக்கட்டுமென்று தந்தையே! இதைக்குறித்து நாங்கள்
விசனப்படவேண்டாம் அல்லாஹுத் தஆலா செய்வதெல்லாம் நல
மைக்காகவே யிருக்குமென்றுனைத்தான் முன்னோர்சொல்கிறார். இத்தகைய
விஷயங்களை ஆராய்ந்து பார்த்தறியவென்றும், உலகத்தார். ஆஹா!
இந்த ஏழையுடைய கஷ்டமாகிய இவ்விறகுகளை எரித்து சாம்பலாக்கி
விட்டானே ஏழையென்று பார்க்கவில்லையே இதுவும் அல்லாகுத்
தஆலாவுடைய செயல்தானே. யா! அல்லா! இப்படியும் செய்யலாமா
வென்று பரிதாபப்படுவார்களே தவிற அவ்விறகு எரிந்தது இன்ன
காரணத்திற்கென்று அறியுந்தன்மை இல்லைபல்லவா? தங்கத்தைக்
கண்டபின்னல்லவோ ஹு! ஆண்டவன் செய்தது நல்லது என்கின்
றார்கள். அதைக்காணுமுன் பரிதாபம்! பரிதாபம். பார்ப்பவர்கள்
வயறுபற்றியெரிகிறதே, ஆ! என்ன கஷ்டப்பட்டு இக்கிழவன் விறகு
சேகரித்திருப்பான் எத்தனையோநாள் பட்டபாட்டை நாசமாகிவிட்
டதையன்றும் பலவாறுசொல்வதுண்டு, மனிதர்களே! சற்றுகண்ணை
த்திறந்து பாருங்கள் அல்லாசெய்வதெல்லாம் நலமே தவிற இடெ

ன்றும்கிடையாது, நம்மனதிற்கு முழுவதுமே இடராகக்காணப்படும்
முழுவிஷயங்களையும், ஆராய்ந்துபார்த்தில், அதில் அல்லாஹுத்
தஆலாவுடைய நலவு சிப்பி வயற்றின் முத்தைப்போல் இலங்கிக்கொ
ண்டிருக்குமென்பது உண்மையென்பதீத கருத்து, பின்பு திலாரும்
கிழவனைநோக்கி தந்தையே நீர் நம்முடைய கோழிவரு கழுதைகளை
யோட்டிசென்று அவ்விடத்தில் எரிந்து கிடக்கிற சாம்பல்களை முழு
வதையும் அதனுடன்கிடக்கும் பெருங்கற்கள் உள்பட கிறு கற்களை
யும் பொறுக்கியெடுத்து பையில் போட்டு மூட்டைக் கட்டிக்கொண்டு
கோவேறு கழுதைகளின்மீது சுமத்தி வீட்டில் கொண்டுவந்து சேர்
ப்பித்துவிடுமென்று ஆக்ஞாபித்தாள். கிழவனும் அவ்விதமே நன்கை
னச் சம்மதித்து இரண்டு மூன்றுநாளைக்குள் கொஞ்சமும் விடாமல்
மூட்டை மூட்டையாய் வாரிக்கொண்டு வந்துவிட்டான். பொற்கட்டி
களாகிய அவைகள்யாவையும் அவ்வீட்டின் வாசலில் ஓர் (ஹௌலு)
செய்து அதனுள் வைத்து அதற்கு கதவு சாவி, முதலானியாவும்
செய்து பூட்டிட்டு சாவியைத்தன்வசம் வைத்துக்கொண்டு அத்தங்
கக் கட்டிகளில் கொஞ்சம் யெடுத்து ஓர் பெட்டிசெய்து அதில் வைத்
து பசருதேசத்தி லிருக்கும் பைசலென்னும் தட்டானுக்கு ஓர்
கடிதமெழுதி அப்பெட்டியில் வைத்தாள் அக்கடிதத்தின் வாசகமா
னது இத்தகையமைந்தன் கொண்டுவரும் தங்கங்களை அஷ்ரபிகளாக
மாற்றி அதிசீக்ரமாய் செய்து அனுப்பவேணுமென் றெழுதி கிழ
வனிடத்தில் கொடுத்து பசராதேசத்திற் கனுப்பிவிட்டாள். கிழவ
னும் திலாரம் உத்திரவின்படியே செல்லுகின்றான்.

அப்பால், திலாரம் கிழவனை யனுப்பியபிறகு அருகிலிருந்த
குலாமையனழைத்து அடா! குலாமே! நீ இச்சமயமே இப்பட்டிண
த்திற்குள்சென்று ஷரப்பிதியில் 1313-ம் கதவிலக்கமுள்ள வீட்டி
லிருக்கும் ஷரப்சேகில், என்பவனைக் கண்டு இக்கடிதத்தை அவன்
கையில் கொடுத்து அவனை அழைத்துவருவையென் றனுப்பினான்.
குலாமானவன் திலாரம்சொல்லிய குறிப்பின்படியேசென்று ஷரப்
சகிலென்பவனைக்கண்டு கடிதத்தைக் கொடுத்தான். அவனதை வா
ங்கி வாசித்துப்பார்த்து அவனுடன் புறப்பட்டுவந்து திலாரையும்
கண்டான். அப்போது திலாரம் சொல்லுகிறான். ஓய் சகிலே உம்
மாலாகும் காரியம் ஒன்றுண்டு, அஃதியாதெனில், இப்பொழுது யா
விருக்கும் இக்காடானது கத்தளவில் 100 - மைல் தூரமாயிருக்கின்

றது இந்த 100-மைல் விஸ்தீரணமுள்ள காட்டையும் வெட்டி சீர் திருத்தஞ்செய்து பட்டணமாக்குவதோடு யாங்கள் குடியிருக்கும் இத்தலத்தைசேர்த்து இதற்கு நான்குபுரத்திலுள்ள விஸ்தீரணமான பூமியையும் சேர்த்து நமது பாதுஷா அவர்களுடைய அரண்மனைக்குச் சமானமாகவே கிஞ்சித்தும் வித்தியாசமின்றி இரண்டும் ஒரே விதமாயிருக்கிறதே எதென்ன ஆச்சரியமென்று பூதலத்தோர் ஆச்சரியமுடைந்து சுக்தேகிக்குமபடியான ஓர் அரண்மனை இங்ஙனம் கட்டி வைப்பதுடன் பாதுஷா அரண்மனையில் என்னென்ன விதமானமரம், செடி, புல், பூண்டுகள் முதலானதும் அமைந்திருக்கின்றதோ அவ்விதமே இவ்வு தியமிக்கும் அரண்மனைக்கும் அமைத்திட வேண்டும். இந்த அரண்மனையைச் சுற்றிலும் பலபல விதமாகிய தெருக்களும், அரண்மனை, வீடு, வாசல், கடை, கடைத்தெருமுதலாகிய பட்டணமும், அதைச் சுற்றிலும் கோட்டை, கொத்தளம், அகழ், அகழ்க்கரையாவும் உண்டு செய்வதுடன் கோட்டை வெளியில் தரிசமங்களாகும் அமைத்து அந்திய நாடுகளுக்குஇன்திறாவென்னும் விளம்பரத்தின் அதன் மூலமாய் சகரேசானியே மதாயின்னென்னும் இத்தப் புதுப்பட்டணத்திற்கு யாவரேனும் புதிதாயிக் குடித்தனமாய் வருபவர்களுக்கு 100-தினாரும், ஓர் சிறந்தவீடும், 10-ஏக்கர் நஞ்சை பூமியும், இனம் கொடுப்பதுடன் மூன்றுவருஷம்வரையில் அவர்களிடமாதொரு வரி-இறை-முதலாகியயாதொன்றும்வாங்காமல் இனாமாவிடப்படுமென்று தெரியப்படுத்தவேண்டும். இன்னம் நமது புதிய அரண்மனைக்கு ஆகவேண்டிய சிப்பந்தி ஆள்களும் காவல்வீரர்களும் படைத்தலைவர், அணித்தலைவர், மந்திரி, பிரதானி முதலாகிய யாவரும் அதி விமரிசையாய் திட்டப்படுத்தவேண்டும். ஆஃ தெவ்விதமெனில், நமது சிப்பாது பாதுஷாவினுடைய அரண்மனையில் என்னென்ன விதமாயிருக்கின்றதோ அதேபிகாரமாய் அமைக்கவேண்டுமென்று சகலவிதமும் கறுப்பென்பவனுக்குச் சொல்லி இவ்வளவு காரியமும் மூன்றுமாதத்திற்குள் முடிக்கவேண்டும். இதற்காக எவ்வளவு திரவியம் வேண்டும். அதையும் கணக்கிட்டு முடித்து சீக்கிரம் அறிவித்தால் உடனே கொடுக்கப்படுமென்று சொன்னாள்.

இவ் வார்த்தைகளைக் கேட்ட சக்கில் என்பவன் முகமலர்ச்சியோடு இராஜபத்தினியை நோக்கி, கிருபாநிதான தாயே! தங்களுத்திரவுபடி முடித்துத்தர யாதும் தடைஇடையாது. இப்பெருத்த

விஷயத்தை முடிக்க ஏராளமான திரவியம் செல்லும் ஆகையால், ஒவ்வொரு தினத்திலும் செல்லும் தொகையைக் கணக்கிட்டு தங்கள் சமுகத்திற் சொல்லுகிறேன். தாங்கள் தினந்தோறும் தொழிலாளிகளுக்கு படியளந்து இரக்ஷிக்கவேண்டுமென்று பணிந்தனன். நிர்மாணமும் அவ்விதமே நன்கெனச் சம்மதித்து வேலையை ஆரம்பிப்பதற்கு நல்ல தினம்பார்த்து அத்தினத்தில் வேலை ஆரம்பிக்க உத்திரவு செய்தாள். அதுபோலவே சக்கிலி எதிர்பார்த்த ஆயிரக்கணக்கான தொழிலாளிகளுக்கார மேஸ்திரிகளை திட்டப்படுத்தி அதிகோசாகப்புடன் வேலை ஆரம்பித்து நடத்தி நிலாராமின் உத்திரவுப்படியே மூன்று மாதத்தில் பட்டணம் அரண்மனை ஆஸ்தான முதலாகிய யாவும் முடித்துவிட்டான். காளடைவில் பலலூர்குடிகளும்வந்து குடியேறி புதிய பட்டணத்தில் நிறைந்து கொஞ்சகாலைக்குள் பழய பட்டணமாகச் செய்துவிட்டனர். அரண்மனைக்கு வேண்டிய யாவும் சேகரம் செய்துவிட்டது இப்படி யிருக்கும் காலையில் பசாராதேசத்திற்குப் போயிருந்த இழவனும் வந்துசேர்ந்தான். அச்சமயம் நிலாராம் உத்திரவின்படியே அநேகர் இழவனை யெதிர்சென்றழைத்துவந்து அவன் அனித்திருந்த வஸ்திரங்களெல்லாம் களைந்துவிட்டு உடுத்திக்கொள்ளவேறொரு வஸ்திரங்கொடுத்து ஹமாம் என்னும் ஸ்நான அறைதனுள் அழைத்துசென்று சிலபணிவிடையாளர்கள் இழவனை வெந்நீரில் குளிப்பாட்டப் போகுமவேளையில் வயோதிகன் பயந்து, ஐயோ! யான் ஒரு குற்றமுஞ் செய்யாதிருக்க என்னை ஏன்கள் வெந்நீரில் முழ்த்தி என்சாகடிக்கபோகின்றீர்கள் என்று கதறியழுது பதறிநடுங்கி நின்றான். இதையறிந்த வேலைக்காரர்கள் நகைத்து பாதுஷாவே! தாங்கள் ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். தமது குமாரத்தியாகிய நிலாராம் அரசியின் உத்திரவுப்படியே தங்களுக்கு குளவெண்ணும் கற்சீட்டி விலையுயர்ந்த ஆடையாபரணங்களால் அலங்காரஞ்செய்து அந்தப்புரத்தில் அழைத்துவரும்படி ஆக்ஞாபித்திருக்கின்றார்கள். அதுவே தவிர தங்களுக்கு யாதொரு தீங்கும் நேரிடாது பயப்படவேண்டாமென்று தைரியம்கூறி முழுக்காட்டி பாதுஷாக்களுக்கணியும் விலையுயர்ந்த ஆடையாபரணங்கள் பூட்டி அந்தப்புரத்திற் கழைத்துப்போனார்கள். உடனே அனேக தாதிப்பெண்கள் தமது கரங்களில் விலையேறப்பட்ட பொற்பாத்திரங்களில் ஆலாத்தி யேந்தி எதிரில் வந்து திருஷ்டி கழித்து அந்தப்புரத்திற்கு அழைத்துச் சென்று இராஜஉடைகள் உடுத்தி சிம்மாசனத்தில் அமர்த்தினார்கள் நிலாராம்

சிப்பாய்களையழைத்து, இன்றுமுதல் இவரை கிப்பாது பாதுஷாவென் றழைப்பதைவிட்டு விறகுகலியனென்று யாவராயினும் கனவிலும் சொல்வார்களாகில் அவர்களுடைய நாக்கை யறுத்து கண்களைப்பிடுங்கிவிடப்படும். இன்றையதினம் சக்ராதிபதியாகிய புதிய கிப்பாது பாதுஷா சிம்மாசனத்தில்ஏறி அரசாளுகையை ஒப்புக்கொண்டு முடிசூட்டிய நாளாக விருக்குமென்று ஊர்முழுதும் தண்டோரா அறையும்படி உத்தரவுசெய்தனள். அவ்விதமே பறையறைவிப்போர்களும், இதுமுழுக்கம்போல பறையொலி யறட்ட யாவருக்குந் தெரியப்படுத்தலாயினர்.

பறையறைவித்தல்.

அகவல்.

திதிதிடுதிதிதிம் திடும்திடும்பாரச்
முடுகியேயொலிக்கும் முரசின்விபரம்
அடைவுடனேதுவோம் அனைவருங்கேளீர்
படைமன்னர்சூழ பாரினையாள
புதியகிப்பாது பூண்டனர்செங்கோல்
இதமுதற்கொண்டு இவ்வூர்மனிதர்கள்
கிப்பாதுபாதுஷாகீர்த்திவாய்ந்தோரென
செப்பாதுகாட்டில் சென்றெரிதுரும்பை
வெட்டியேகொணர்ந்து விறகுவிற்போனென
கிஷ்டம்புகல்வோர் நாசிகண்காவையும்
அறுத்தறுத்தலகை காய்கரிகழுகு
பருந்துகட்கிடுவோம் பாரிலுள்ளோர்களே.

இவ்விதமாகவே ஊர்முழுதும் தண்டோராயறைந்தனர்கள். அப்பால் ஒருநாள்நிலாராம் கிழவனையழைத்து அபூன்கையில்ஓர்காயிதமெழுதிகொடுத்து, தந்தையே! இந்தக் கடிதத்தை இந்நகரிலிப் பரிபாலனஞ்செய்யும் பாதுஷாவினுடைய முதல் மந்திரியாகிய புஜ்ருச்மெஹரைக்கண்டு அவரிடத்தில் கொடுத்து அவர்சொல்லும் விஷயங்களைக்கேட்டுக்கொண்டு வாருமென்றனுப்பினள். அதுபோல்வயோதிபன் அவ்விடம் சென்று புஜ்ருச்மெஹரைக்கண்டு கடிதத்தை அவரிடம் கொடுத்தான். அவர் அதைவாங்கி வாசித்துணர்ந்து முதியோனை ஆசனமீந்து இருக்கச்செய்து வர்தமானங்கள் யாவும்

விசாரித்து பின்பு புஜ்ருச்மெஹர் சொல்லுகின்றார். பெரியவரே! இராஜபத்திரி எழுதியிருக்கும் இக் கடிதத்தில் தங்களை பாதுஷாவிடம் அழைத்துக்கொண்டு போகுப்படி யெழுதியிருக்கின்றார்கள். அவ்விதமே தங்களை அழைத்துக்கொண்டுபோக யாதொரு தடையில்லை. யான் நாளையதினம் அரண்மனைக்குள்சென்று பாதுஷாவிடம் உத்தரவுபெற்றுக்கொண்டு வருகிறேன். பின்பு, தங்களை அழைத்துக்கொண்டு போகிறேன். தீர்காலையதினம் வாருமென்று அனுப்பினர். இதுவென்று முதியோன் புஜ்ருச்மெஹரிடம் விடைபெற்றுக்கொண்டு தன்வீட்டிற்குப்போய் நிலாராமிடத்தில் நடந்த சங்கதிகளெல்லாம் விபரமாய்ப் புகன்றனன்.

அவ்வசனங்களைக் கேள்வியுற்ற நிலாராம் அவ்விதமே நன்கெனச் சம்மதித்து அன்றைய தினத்திற்குரிய உணவாதிகள் யாவருடனும் புசித்தானபிறகு அன்றிரவுபோய் மறுநாள் உதயத்தில் சூரியன் உதயமானவுடனே யெழுந்து காலைக்கடனை முடித்துக்கொண்டு யாவரும் காலைவணக்கம் புசித்தான பிறகு மறுபடியும் தூதுவர்களை பாதுஷாவின் அரண்மனைக்கனுப்பி அவர் எவ்விதமாய் ஆடையாபரணமணிந்திருக்கின்றாரோ வென விசாரித்து, அவ்விதமே கிழவனுக்கும் ஆடையாபரணங்களணிந்துகொள்ளும்படி சிக்காரித்து தந்தையே! தாங்கள் பாதுஷாவிடம்சென்றால் வலதுகாலை முன்வைத்து சென்று மரியாதையோடுமிருந்து அவர் சொல்வதற்கெல்லாம் சிரமசைத்து மிகவும் தாழ்மையோடு வணங்கிக் கேட்டுக்கொண்டு வாருமென் றனுப்பிவைத்தான். அதுபோல கிழவன் பரிவாரங்கள் சூழ தாம் தாமென சென்று, புஜ்ருச்மெஹரைக் கண்டான். அவர் கிழவனை கைலாகுகொடுத்து அழைத்து ஆசனத்தில் அமர்த்தி விற்றிருக்கச்செய்து தாமும் பிரயாணமாகி பாதுஷாவினுடைய அரண்மனைவிற்சென்று காவலாளிகளால் கிழவன் இராஜ சமுகத்தில்வந்து பாதுஷாவைக் கண்டுகொள்ள வகிருக்கும் செய்தியைச் சொல்லியனுப்பினர். பாதுஷாவும் உள்ளே வரும்படி உத்தரவளித்தார். அதுபோல் செல்லும்போது ஆசாரவாசலை யடுத்து காலை பெயர்த்து வைக்கும்பொழுது இடதுகாலை முன்னேவைத்தான். உடனே நிலாராம் சொல்லிய நபிபத்து நியாயத்தில் வந்தபடியால் சட்டென்று வலதுகாலை முன்னேதூக்கி அக்கால் பூமியில் படுமுன் இடதுகாலைப் பின்னுக்கிழுத்தான். அச்சமயம் இரண்டொரு முன்பின்னை

ப்ப் பின்னிப் புட்டத்திலடிபட திடீரென பூமியில் விழுந்தான். உட
னே பாதுஷாவும் சபையின்கண் ஹாஜராயிருந்த மந்திரிபிரதானிகள்
யாவரும் கலீரென சிரித்தார்கள். ஆனல், அந்தக் கிழவனே புஜ்ருத்
மேஹர் தன்னுடன் துணைத்துக்கொண்டுவந்த மிகருமையைபெண்ணை
யாவரும் சிரிப்பதையடக்கி வருத்தமுற்றார்கள். பாதுஷா கிழவனை
அழைத்து சமூகத்தில் லிருக்கச்செய்து ஓர் கற்கண்டு கட்டியை பெ
த்துக்கிழவன் கையில் மரியாதை முறைப்படி கொடுத்தார். அவன்
அதனைவாங்கி காணுதகண்டு களிகூர்ந்ததுபோல உடனே வாயில்
வைத்துப் பற்கள் தெரிக்க நெறநெறவெனக்கடித்து சுவைத்து தின்
ருன். அதை யறிந்த பாதுஷா இவன் எவ்வளவும் மேலான அந்தஸ்
துக்கு வந்தவனல்லவென்று ஆலோசித்தவராய் மவுனமுற்றிருந்தார்.
பின்பு புஜ்ருச்மெஹர் பாதுஷாவினிடத்தில் உத்தரவு பெற்றுக்கொ
ண்டு தமது வீடுசெல்ல யெழுந்தார். உடனே கிழவனும் பாதுஷாவி
டத்தில் உத்தரவுபெற்றுக்கொண்டு தானும் யெழுந்து அவரவரிட
பிட மேகினர்கள்.

அப்பால் கிழவன் வீட்டிற்குவந்தவுடனே திலர்ராம் கிழ
வனே நோக்கி தந்தையே பாதுஷாவினிடத்தில் நடந்த சம்பவங்கள்
யாவும் தெரியப்படுத்துவீரென வினவினனள். கிழவனும் தான் இரா
சமுகத்தில் போய்வந்த சமாச்சாரமெல்லாம் ஒன்றேனும் விடாம
விபரமாய்ச் சொல்லிவிட்டான். அவையனைத்தும் கவனித்த திலர்
ராம் விசனமடைந்து, ஆ! ஹா!! என்னகாரியம் செய்தீர்? பாதுஷா
க்களிடத்தில் அதிக மரியாதையுடனும் பொறுமையுடனும் சென்று
சமயோசிதமாய் பேசிக்கொண்டிருந்து வரவேணுமென்று கட்டளை
யிட்டிருக்க அதைகவனியாமல் மனதிற்று வந்தபடி நடத்திவிட்டுவ
தீர். ஆயினும் சென்ற விஷயத்தை இனி கவனிப்பதில் பிரயோஜன
மில்லையென கருதி, சும்மாயிருந்து மறுகாளுதயத்தில் ஆயிரம்பொ
ற்றபக்குகளில் பொன்னை லிணைத்து நவரத்னங்களழுத்தி அதில்
ஜோதமாய்ச் செய்யப்பட்ட விதவிதமாகிய பழவகைகளைநிரப்பி அதி
விநோதவிசித்திரவேலைகளோ பொற்சரிகைகளால் செய்யப்பெற்ற மே
ற்போர்வைகள்மூடி ஒரேவயதையுடை அளவு ஒரேநிறம் பொருந்திய
ஆயிரம் ஹபஷி பயல்கள் சிரசில்வைத்து அவ்வாயிரம் ஹபஷிகளு
ரும் ஒரே நிறமாகிய பொற்சரிகைக ளிழைத்த பிபாசென்னும் உடை
யுடுத்தி கடுவில் நிறுத்தி அன்றைய தினம் கிப்பாதுபாதுஷா எவ்வித

ஆடையாபரணலங்கிர்தனை யிருக்கின்றாரோ அவ்விதமலங்காரமாய்க்
கிழவனுக்கும்செய்து, யானையின்மீதேற்றி நவரத்னகழித அலங்கார
முடைய ஆயிரம் ராபிக்குதிரைகளின்மீது ஆயிரம் ஜரிப்
புகள் நடக்க பின்னல் ஆயிரம் தருப்புகள்செல்ல, பேரிகை, கொடி,
சின்னம், எக்காளம், காளம், டங்கா, டிக்கா, தாளம், மத்தளம், பூரி,
துந்துமி, முதலாகிய பதினெண்வாத்தியம் முழங்க ஆலவட்டம், சா
மரை, கொடி, குடை தலைக்கு பின்னற்கொடியைப் பழிக்கும் இடை
யினையுடையவும் வில்லையும், கார்மேகத்தையும், கெண்டைமீனையும்,
வேலையும் எள்ளின்மலரையும் கோவைப்பழத்தையும் மல்லிகை அரு
ம்பையும் செந்தாமரைப்பூவின் நிறத்தையும், குழஞ்சி கனியையும்,
வலம்புரிசங்கையும், பளிங்கு கிண்ணத்தையும் பந்தையும், தென்னங்
குரும்பையையும், ஆலயிலையினையும், வாழைத்தண்டினையும், இகழ்
ந்துபழிக்கும் கூந்தலையும், புருவத்தையும், விழிகளையும் நாசியையும்,
உதடுகளையும், தந்தபந்திகளையும், முகத்தையும், தாள்வாய்க்கட்டை
யையும், கழுத்தையும், ஸ்தனங்களையும், அடிவயற்றையும்தடை
களையும் உடைய வாலிபப்பெண்கள் கவரிவீசவும், காட்டியமோடவும்,
மந்திரி பிரதானிகள்சூழ்தாம்தரமனைக்குழ்ந்தோடச்செய்தும்,
திலாரும் கிழவனைப்பார்த்து தாதையே! [illegible] இடம்
ருங்களுடன் புஜ்ருச்மெஹர் வீட்டிற்குச்சென்று அவையும் அழைத
துக்கொண்டு பாதுஷாவுடைய அரண்மனைக்கேகி, அதிகமரியாதை
புடன் பாதுஷாவால் கொடுக்கப்படும் எந்த வஸ்திரவடியும் மிகமரியா
தையோடும் வாங்கி சிரசிலும், கண்களிலுமொத்தி முத்தமிட்டு பத்தி
ரமாய் வைத்துக்கொண்டு இருகுகொண்டெழுந்தேகும். தாங்கள் பா
திஷா சமுகத்தில் சென்று சிலகோரம் பேசி பின்பு பாதுஷாவுக்கு
நமது அரண்மனையில் தாவத்தென்னும் விருந்துசொல்லி அவ்வி
ருந்தை ஒப்புக்கொள்ள வேணுமென்று அதிகமரியாதையோடு எழு
ந்து தஸ்லீம் செய்து கெஞ்சி கேட்டுக்கொள்வதோடு பாதுஷாவி
ருந்தை கபூல்செய்து பின்னும் மூகமலர்ச்சியோடு தஸ்லீம் செய்து
உட்காரவேண்டும் பின்பு புஜ்ருச்மெஹரெழுந்து பாதுஷாவிடத்தில்
உத்திரவுபெற்று வீட்டுக்குப் புறப்படும்போது தாங்களும் உத்திரவு
பெற்றுக்கொண்டு வந்து சேரவேண்டியது என்று அனுப்பிவைத்
தாள் கிழவன் அஷ்டதிக்கும் திடுதிடுவென்றதிர பார்ப்போர் ஏதே
ன்னபுதுமை புதுஅரசன் ஒருவன் சேனைகள்புடைசூழ வருகின்றான்.
நமது பாதுஷா கிப்பாதைப்போல்தானே யிருக்கின்றது. அவர்தானோ

இவர் அவர்களில் ஒருநாளும் இவ்வித ஆடம்பரத்துடன் வெளியில் நகர்வலமென்னும் ஊர்கோலம் செல்லவில்லையே இவர் வேறே எந்த தேசத்தரசனே தெரியவில்லையென மயங்குந் தன்மையாய்ச் சென்று புஞ்ருச்மேஹருடைய வீட்டிற்கேகி அவரையும் அழைத்துக்கொண்டு பாதுஷாவினுடைய அரண்மனைபிற் போய்ச்சேர்ந்து பாதுஷாவினுடைய உத்தரவுபெற்று உள்ளேசென்றார்கள். பாதுஷாவும் வரவழைத்து அருகிலிருத்தி பலவேச்சுகளும்பேசி, அச்சமயம் தமது கரத்திலிருந்த குறுமாகோட்டோர்வை கிழகிப்பாது கரத்திற்தார். அதை கிழவன் வாங்கிய உடனே திலராமுடைய ரகியத்தக் கியாபகத்தில் வந்தது உடனே அக்கட்டோர்வை சிரசிலும் கண்களிலும் ஒத்திக் கொள்வதற்கு பதிலாய்க் கவிழ்த்துக் கொண்டான் அக்கோட்டோர்வில் உள்ள சேர்வாவென்னும் சால்னுக்கள் யாவும் தலைப்பாகை, முகம், தாடிமுதலிய யாவையும் அருவருப்பாகி விட்டது உடனே பாதுஷா வேலைக்காரர்களை கொண்டும் அவைகளை சுத்தப்படுத்திச் செய்து பலவிஷயங்களைப் பேசிக்கொண்டிருந்தார். அப்பொழுது கிழவனெழுந்து மரியாதையோடு கைகட்டி தஸ்லிம்செய்து பாதுஷாவே! தங்கள் இக்ஷணமே [illegible] வீடேனுடையவீட்டில்தாவத்திற்கு வரவேண்டுமென்று [illegible] வீடேனுடையவீட்டில் பமோஸல்லுவேன்போல் பாக்கியசாலிகள் இவ்வுலகத்தில் யாருமே இருக்கார்களென்று யென்னுகிறேனென்றான். இவ்வார்த்தைகளை கேள்வியுற்ற பாதுஷாசந்தோஷப்பட்டவருவதாய் ஒப்புக்கொண்டார் பிறகு யாவரும் அவரவர்களிடம் சென்றார்கள். கிழவனும் தன் அரண்மனைசென்று நடந்தவைகள் யாவையும் படிப்படியாய் திலாராமிடம் சொன்னான். உடனே திலாராம் விருந்து செய்வதற்காகுமானியாவையும் திட்டப்படுத்த ஆக்கியாபித்தாள். அதுபோல் யாவும் தயாராய்க்கொண்டிருந்தது மறுநாளுதயத்தில் பாதுஷாவெழுந்து விறகுதலே கிப்பாதவின் வீட்டிற்கு தாவத்திற்கு போகவேண்டுமென்று மந்திரியாகிய புஞ்ருச்மேஹரிடம் தெரியப்படுத்தினர். அதுபோல் பரிவாரம் முதலாகிய யாவும் தயார் செய்யப்பட்டது மீலே யான உடனே பாதுஷாவும் புஞ்ருச்மேஹரும் மற்றுமுண்டான மந்திரி பிரதானிகள்சூழ அதிகாம்பீரமாய் யெழுந்தருளியாகிசென்று, கிழ கிப்பாதினுடைய அரண்மனையை அடைந்தபோது கிழவனும் தன்னுடைய அறுபத்தொன்று மந்திரிகளுடனேயும் புறப்பட்டு எதிர்சென்றழைத்து அதிக மரியாதையோடும் அரண்மனையை அடை

த்து உள்ளேயழைத்து செல்கையில் ஆங்காங்கு சுவர்கள் தோறும் தம்மையும் திலாராமையும் அதிவிநோதமாய்த் தம தரண்மனையில் எவ்விதஞ் சித்திரம் செய்திருக்கின்றதோ அவ்விதமே இவ்விடத்திலும் செய்திருப்பதையும், தமதரண்மனைக்கு எவ்விதத்திலும் கொஞ்சமும் வித்தியாசப்படாத இவ்வரண்மனையையும் அதன்சோடனைகளையும் பார்த்து ஆச்சரியப்பட்டவராய்த் திலாராமை மனதிலெண்ணி தியானித்தவராய்க் கவலையுற்று உடனே தென்று தமக்காக தயார்செய்து திடப்படுத்தி வைத்திருக்கும் விரிப்பின்மீது அவரீர்களும் முறைப்படி உட்கார்ந்தார்கள். உடனே ஷாபிவிரிப்பவர்கள் அதிஜாக்கிரதையாய் தஸ்தர்விரித்தார்கள் கிழகிப்பாது கவரத்தினங்களழுத்திய பொற்சிலிம்சியில் ஜலமெடுத்து வந்து பாதுஷாவினுடைய கைகால் மூப்முகம் சுத்தி செய்துக்கொள்ள ஜலம்கொடுத்தான்.

பின்பு, விலையுயர்ந்த பசும்பொற்றட்டுகளில் விதவிதபுலவுகளும், நான்பிரெட், ஜர்தா, ஷாமி, கபாப், ஜாலி, லௌஜ், பூரி, பேணி, லட்டு, இம்ருத்தி, ஹல்வா முதலாகிய மிட்டாய் திணுசுகளும் விதவிதஷர்பத்து வகைகளும் இன்னம் பெருஞ்சமூஸ்தலாகிய பலதேசத்தின் அதிமேன்மை பொருந்திய மேவாக்களும் கொண்டுவந்து பரத்தினார்கள். கிழவன் பாதுஷாவினுடைய அருகில் உட்கார்ந்து பாதுஷாவுக்கு பலவஸ்துக்களிலும் கொஞ்சம் கொஞ்சம் யெடுத்து வைத்து இதைப்புசியுங்கள் ஜஹான்பனா அதைவைத்துக்கொள்ளுங்கள் இதில் கொஞ்சம் எடுத்துக்கொள்ளுங்கள் யென்று பலவிதமாய் பாதுஷாவைஉபசரித்துவந்தான். கடையிலாயாலரும்பசியாறிமுடிந்தபின்பு பாதுஷா அவ்விடத்தின் சோடனைகளையும் பதார்த்தங்களுடைய அதிமேன்மையாகிய உருசிகளாங்களையும்வினித்து தன்னுடைய அரண்மனைக்கு யாதொரு வித்தியாசமில்லாத அரண்மனையும் அவ்வரண்மனை வாசல்தோறும் எங்குபார்த்தாலும் திலாராம் கிப்பாது பாதுஷா இருவருடைய விசித்திரவேடங்களும் தொங்கிக்கொண்டிருக்குவும்பார்த்து பாதுஷா மனம் தளும்பி தன் பத்தினியாகிய திலாராமுடைய எண்ணம்மீருத்து அதே கியாபகமாகவுமிருக்கும்வேளையில் அதிமேன்மையாகிய இனிய மெல்லிய இராக குரலினையுடைய பரிஜாதியை நிகர்த்த அழகமைந்த ரூபலாவண்யமுடைய நாட்டியப் பெண்கள் நடனம்புரியவும், பலவாத்தியங்கள்முழங்க ஆரம்பித்தது, அவ்வேளையில் இருளில் மின்னுத்தன்மையாய்ப் பாதுஷாவுக் தெதி

நில்கட்டியிருக்கும் பருதாவிற்கந்தபுரத்தில் பளீரென மின்னி மறைந்தது அதைக்கண்ட பாதுஷா கிழவனைநோக்கி இஃதார் இப்பொழுது மின்னலிப்போல படிதாமறைவில் சென்றது யெனகேட்டார். கிழவன் பாதுஷாவைநோக்கி எங்களிறையே தாங்கள் கண்டது என்னுடையமகள் அவளும் தங்களுடைய ஜிபாரத்துக்காக எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றாள். தங்களுக்கு மாத்திரம் இவ்வரண்மனையில் யாதொரு கோஷாபர்தாவும் இடையாது, தாங்கள் யாதொரு ஷக்கின்றியே தாராளமாய் உள்ளேசென்று அவளைப் பார்க்கலாமென்றான். உடனே பாதுஷாயெழுந்து அந்தப்புரத்திற் சென்றார். சற்று தூரத்திலிருந்து உற்றுநோக்கி மனதில்நினைக்கின்றார். இவளார்? இவளைப்பார்த்தால் நமது தீலாராமுடைய பாவனையாய்க்காணப்படுகிறது அவள்தானே இவள் அவளாலுல் இந்த இடத்தில் அவள் எப்படிவந்தாள். நல்லது முழுவதும் அறிந்தபின் நிச்சயிக்கவேண்டுமெ யெனினைத்து சென்று அவ்விடத்தில் அதிவினோத விசித்திரமாய் அலங்கரித்து இருக்கும் அறையில்சென்று அங்கமைத்திருக்கும் சப்ரகட்டு மஞ்சத்தின்மீது உட்கார்ந்து பக்கத்தில்மிக மரியாதையோடு நின்றிருந்த ரூபவதியைநோக்கி நன்னாகில் வரும்படி அழைத்தார். அவள் அருகில்வந்து, பாதுஷாவினுடைய பாதங்களிரண்டிலும் வீழ்ந்து அப்படியே பாதங்களிரண்டையும் பற்றிப்பிடித்தவளாய் விம்மியழுதாள். அப்படியழுதபெண்ணைத் தூக்கிவிட்டு பார்க்கையில் நான் நினைத்தபடியே தீலாராமா யிருக்கக்கண்டு ஏ! தீலாராம்! நீ இவ்விடத்தில் எவ்விதமாய் வந்தாய் உன்னுடைய சரித்திர மென்னவென்று வினவினார் உடனே தீலாராம் பாதுஷாவை விட்டகன்றநாள் தொடுத்து இதுவரையில் நடந்த சம்பவங்களெல்லாம் ஆதியோடந்தமாய் விபரம் விபரமாயுரைத்தாள் பாதுஷாகேட்டு தீலாராமுடைய சாமர்த்தியத்திற்காக அவளை மிக புகழ்ந்து சிலநேரம்வரையில் அவளுடன் வசனித்திருந்து பின்பெழுந்து சபாமண்டபத்தை யடுத்து தீலாராம் தாளம் கொட்டுவதில் மிக தேர்ச்சியுடையவளாகையால் பாதுஷா அவளைநோக்கி பெண்ணே! நீ தாளம் கொட்டக் கேட்க வேண்டுமென்று ஆக்ஞாபித்தார். உடனே தீலாராம் தாளத்தைக் கையிலெடுத்து தட்ட ஆரம்பித்தவுடனே அவ்விடத்தில் சபையில் ஆஜராயிருந்த சபையோர்கள் யாவரும் தன்னிலையை இழந்து பரவசமாகி ஆனந்தக்கடலில் மூழ்கியவர்களாய் உயிரை விட்டு உயிர் நீங்கியமையைப்போல் பிரமித்துவிட்டார்கள்.

26 MAY 2010

பின்பு பாதுஷா: ஆடல்பாடல்களை நிறுத்தும்படி ஆக்ஞாபித்து தன் மனைவி தீலாராமையும் கிழவியையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு தனது பரிவாரங்கள் சூழ தன்னரண்மனைக்குப் போயினார். அன்றைய தினத்திலிருந்து பெண்களின்மீது முன்பு கொண்டிருந்த வர்மத்தை நீக்கி பெண்களின்மீது சந்தோஷமாயிருந்தார். இப்படி இருக்கும் நாளையில் பாதுஷாவினுடைய நிறியதந்தையின் மகளாகிய மெஹத்தர் பானோவென்னும் பேரழகினையுடைய அதிசவுந்தர ரூபலாவண்யமுடைய பெண்ணை நிக்காகு செய்துக்கொண்டார். பின்பு சில தினங்களுக்குப் பிறகு மெஹத்தர்பானோ ஹமலானுள். அந்த ஹமல் நாளுக்குநாள் வளர்ந்து பத்துமாதமும் நிறைந்தது, மெஹத்தர்பானோவுக்கு பேறுகாலமடுத்து கோயாரம்பித்தவுடனே பாதுஷாவுக் கறிக்கைசெய்தார்கள். உடனே பாதுஷாவானவர் புஜருச்மெஹரை யன்புத்து தவாரீகென்னும் ஜாதகம் கணிப்பதற்கு தயார் செய்துக்கொண்டிருக்கும்படி உத்திரவு செய்தார். காஜாவாகிய புஜருச்மெஹரும் பிள்ளைபிறக்கும் வேளையை அறிவதற்காக, ஹிந்தி, பாங்கி, ரூமி, பிராஞ்சில், முதலாகிய தேசங்களின் கோமதியும் கருவிகளை வரவழைத்து, தயாராய் வைத்துக்கொண்டு நிரவென்னும் உருட்டிபார்க்கும் கட்டையை கையில் பிடித்தவராய் உட்கார்ந்திருந்தார். அல்லாஹுத் தஆலாவினுடைய உதவியைக்கொண்டுசூரியனும் சந்திரனும் இந்தக் குழந்தையினுடைய அழகுக்கு முன் நாம் செல்வோமாகில் யாவரும் நம்மை இகழ்வார்களென நினைத்து உலகத்தின்கண் வராமல் மறைந்திருக்கும் பாவனையாயிருக்கும் வேளையாகிய சுப்ஹு வேளையில் கோடிசூரிய ஜதயமானதுபோல் அஷ்ட ஐஸ்வரியங்கள் யாவும் திரண்டோர் உருவமாய் உலகத்தை ஓர் குடையிலாளும் திருவைநிறைந்த இருவிழியினையுடைய ஆண்குழந்தை புருஜேஹமல் என்னும் கடூத்திரத்தில் பூமியின்கண் உதயமானது இதனைக் கண்ணுற்ற நவரத்ன கஜிதமயமாய்த் துலங்கும் ஆடை ஆபரணங்களணிந்த பரிகனங்கள் அந்தக் குழந்தையை மடிமீ தெடுத்துக்கொண்டார்கள் அச்சமயம் காஜா புஜருச்மெஹர் உடனே அந்தக் குழந்தை பிறந்த நேரத்தை திட்டப்படுத்திக்கொண்டு ஜோஸியக்கட்டையையுருட்டி கணக்கெடுத்து பெருக்கிப் பார்க்கும்பொழுது அந்த லக்கினத்தில் சூரியனும் சந்திரனும் புருஜேஹமல் என்னும் ராசிவிட்டில் ஒன்றுபோலும் நின்றுகொண்டிருக்கவும், ஜோகரா, முன்கரி, உத்தாரத், ஜெரங்கி லங்கிகொண்டிருக்கவும்,

ஹல், மிர்தீ, இவ்வைக்து கிரகங்களும் புருஜோ அத்தென்னும் லக்னத்தில் ஒன்று யமைக்து நின்றது. இச் சந்தோஷக் குறிப்பை யறிந்த காஜாவானவர் என்றுமில்லாத சந்தோஷக்கடலில் மூழ்கியவ ராய், அவர்டைய தேகம்பூரித்து புளகாங்கிதமுற்று பாதுஷாவுக்கு சந்தோஷமென்னும் மங்களவார்த்தையுரைத்து சொல்லுகிறார். ஜூஹா ம்பலு இத்தக் குழந்தையின் ராசிபலனுயை ஜாதகமெல்லிதமெனில், உலகத்தையெல்லாம் ஓர் குடையின்கீழ் ஆளத்தக்க சர்வபாக்கிய மும்பெற்று அநேக தேச இராஜாக்களெல்லாம் கைகட்டி நிறையள க்கவும், நீதியில் நிறைநீதி யுடையவராகியும் எழுபதுவருஷம் எலித்த செங்கோல்தவறாது அரசுபுரிவார்.

இன்னும் தயை, தாக்ஷண்யம் நிறைந்தவராயும் சுகையில் பெரு ங்குடை யுடையவராயும் அஷ்டதிக்கும் போற்றிப்புகழும் மகுடமுடி மன்னனும் விளங்கிநிற்பார். ஆனல் தோல்தென்னும் ஓர் சிநேகித னுல் பலநாளும் மனக்கவலை யுற்றிருப்பார். பென்னும் இவ்விதமெல் லாம்பல்வாறுசொல்லி அத்தக்குழந்தைக்கு நிருநாமமிடஉத்தேசித்து இவருக்கு எவ்விதமான திருநாமமிடுவோமென ஆலோசித்தார். அவ் வேளையில் இரண்டு தூதர்கள் ஓடோடியும்வந்து பாதுஷாவிடத்தில் சிரம்வணங்கி, எங்களிறையே, தாங்கள் ஜலமருந்தும் (ஹவஜ்) இத் தினுளாள்ளில் ஜலமின்றிக்காய்ந்திருந்தது, இன்றைபதினமிரவென அந்த ஹவ்ஜில்யாவரும் ஆச்சரியப்படும்படியாய் அகஸ்மாத்தாய் கம் கீர்பெருகிவழிந்தோட ஆரம்பித்தது என்றுரைத்தார்கள். அருகிலிரு ந்து இச்செய்தியைக்கேட்ட புஜ்ருச்மெஹரானவர் இதுவும் ஓர் நற் சகுனமெனக்கருதி ஷஹஜாதாவின் திருநாமம் கௌவென்றால் புதி தாய் ஷோவான்யென்றால் ஜலம் அஜ்ஜலம் பெருகியோடத்தகுந்த தென அருத்தத்தாத்தக்க கௌஷோவாவென்று திருநாமமளைத்தார் இன்னும் சில ரூவிகள் எழுதுகிறார்கள். அக்குழந்தை பிறக்குமவேளை பாதுஷாவினுடையகரத்தில் ஜாஷெஹல்ராங்கென்னும் குடிப்புதிறைந்த கிண்ணமிருந்தபடியால் காஜா புஜ்ருச்மெஹர் பாதுஷாவைநோக்கிபா ர்வியாலையால் 'கிப்லே ஆலம் ஜாம்ருஹல்ரவான்ப்ர்மாயித்' என்றுசொ ன்னர் அதின்விபரம் சரத்திலேத்திபகிண்ணத்திலிருக்கும் ஷர்பத்தை குடித்துவிடுங்கள் அல்லது அனுப்பிவிடுங்களென்றுரைத்தது விருக் கும். அப்போது பாதுஷாவானவர் சந்தோஷித்து காஜாவுக்கு முஸ ஹபாகொடுத்து, லைஹஜாதாவின் திருநாமம் கௌஷோவானை

ன்றுசூட்டினுரென்கிதாபில் வருகிறது, உடனே அரண்மனையிலுள்ள வர்களும் நகரவாசிகளும் சந்தோஷிக்கும்படி, நகர்முழுதும் பதினெ ட்டுவித வாத்தியமும் முழங்க ஆரம்பித்தது, ஆங்காங்குலமக்களுள்ள வீதிகள்தோறும் சந்தோஷக் குறிப்பைக்காட்டும் ஜண்டாக்கள் நிறு த்தப்பட்டது. பட்டணமுழுதும் பாதுஷாவிற்குபாலன்பிறந்தார். அவர்பேர் கௌஷோவா வென்று கூட்டப்பட்டது வென்று பறை யறைவிப்பவர்கள் தண்டோரா அடித்தார்கள். அன்றையதினத்தில் வர்முழுவதும் ஓரே சந்தோஷமாய் மூனந்தித்துகொண்டிருந்தார் கள். பிரங்கிகள் மூலைக்குமூலை திடீர் திடீரென சப்தமுழங்க ஆரம் பித்தது. நகரவாசிகள் சந்தோஷமாய்ப் பேசும் கோஷ்டமான தவ ானுலகம்வரையிலும் நகார அடிக்கும் சப்தத்தைப்போல் முழங்கி யது. அரண்மனையில் விதவிதமான விருந்துகளும், ஆடல்பாடல் முதலாகிய சங்கீதாஷ கோஷ்டமானது நிறைவேற்றிக்கொண் டிருந் தது, அவ்வேளையில் வானுலகமானது குரியனையும், சந்திரனையும், ஓர் பறையாய்ப் பாவித்து அடிப்பதுபோல அன்றிரவும்பகலும் காணப்பட்டது, ஜோசார, முஸ்தரியென்னும் இரண்டு கிரகத்தின் செய்கையானது எழுவானித்திருள்ள வாசிகள் யாவரும் விபப் புறும்படி ஆடல்பாடல்களை வெகு விமரிசையாய் நடக்கச்செய்தது, பாதுஷாவானவர் தங்கள் கஜானுவைதிறக்க உத்திரவுசெய்து எழை யின்னென்ன, பக்கிர் புசாக்கள் முதலாகிய வரிலிருந்த தெரிக்கள் யாவரும், ஐஸ்வரியவந்தர்களாய் ஆகும்படியாய் தானதர்மம்செய்து அவர்களனைவரும் தங்களுக்கு போதுமென்று திருப்தி யடையும் வரையில் யாவருக்கும் ஜக்காத்தென்னும் தானதர்மம் செய்தார்கள். அதான் எப்படி விருக்கதாலில் மகாயின்யென்னும் பட்டணத்தில் எழையென்று சொல்லும் வாக்கியமானது கெவிமித் கேட்பது அறி தாயிருந்தது வெறுஜாதாபிறந்த சந்தோஷத்திற்காகவுவர் குடி படைகள் யாவரும் ஒருவருஷத்தின் கிலவிவரிய காலை இருமாய் விட்டுவிட்டது.

இவ்வனம்திக்க, கௌஷோவா பிறந்த பதினேராம்நாளின் சந்தோ ஷம்கொண்டாடும் வேளையில் தூதர்கள் மூலமாய் பாதுஷாவைப் பணிந்து, அல்கல்யாணடைய மனல்வயற்றின் ஓர் குழந்தைபிறந்த தென்று சொன்னர்கள். பாதுஷாவானவர்காஜாவைநோக்கி, சொல் லுகிறார் அல்கல்ஸிஜடைய மகள் வயற்றில் ஆண்குழந்தை பிறந்த

தாய்த் தெரியவருகிறது அக்குழந்தையை இப்பொழுதே உயிர்வதை செய்துவிடுவது நலமாகத்தோணுகிறது அல்லாமல் அந்தக்குழந்தை மாத்திரம் உயிர்பெற்றிருக்குமாகில் அநேக தீங்குகள் உண்டாவதோடு சமயம்பார்த்து தங்களுக்கு நேர்விரோதியாகி, வம்புவழக்குகள்தொடுத்து, தன்னுடைய பாட்டனுக்கு பதில்சொல்லி தங்களிடம் பதில் பறிவாங்கநினைப்பான். ஆகையால் யான் சொல்வதை கவனித்து மெள்ள தந்திரமாய் அக்குழந்தையை கொன்றுவிடுவதே நலமென்று உரைத்தார். அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற காஜாசொல்லுகிறார். பாதுஷாவே ஒருவன் குற்றஞ்செய்யுமுன் அவனுக்கு சஜாவென்னும் தண்டனைவிதிப்பது யெந்த மார்க்கத்திலும் கூடாதசாரியமாயிருக்கிறது, அன்றியும் யாதொன்றும் அறியாத அச்சிறுபாலகனை கத்தல்செய்வது எந்தவிதத்திலும் ஆகாதகாரியமாயிருக்கின்றது யென்றுசொன்னர். இவ்வசனங்களைக் கேள்வியுற்ற பாதுஷாவானவர் புஜருச்மேஹரை நோக்கி காஜாவே அந்த மூதேவி குழந்தையை இப்பொழுதே கொன்று விட்டால் நன்று யிருக்குமென்று எண்ணுகிறீர் அவ்விதம் செய்யாதவரையில் இன்று தெளித்து பசாதென்னும் கலகத்திற்கு ஆரம்பமாகி விட்டதென்று நிச்சயித்துக் கொள்ளும், அன்றியும், அந்த ஜாலிமான குழந்தை உயிருடனிருக்குமாகில் எந்த விதத்திலும் உமக்கு இடையூறுதேடி உம்மை உயிர்வதைசெய்ய கார்த்திக்கொண்டிருப்பானென்று நிஜமாய் மதித்துக் கொள்ளுமென்று சொன்னர். காஜாவானவர் பாதுஷாவை நோக்கி பாதுஷாவே அஃதெவ்விதமிருந்தாலும் இக்குழந்தையை நாம் கொல்வது எவ்விதத்திலும் ஆகாதகாரியமாயிருக்கிறதுயென்று மிகவும் குளிர்ந்த வார்த்தையாய்ச் சொல்லி அக்குழந்தையின் உயிரைக்காப்பாற்றினர்.

பின்பு, புஜருச்மேஹர் பாதுஷாவினிடம் உத்திரவு பெற்றுக் கொண்டு அல்கல்லுடைய மாளிகைக்குச் சென்று, பக்கியரீக் உடைய புதல்வனுக்கு பஃத்தக்பென்று நாமகரணமிட்டனர் அப்பொழுது ஸெளஹேரலானுக்கு காலவருஷமும் நாலுமாதமாகியிருந்தது பாதுஷா கல்வி கற்பித்துக்கொடுக்க புஜருச்மேஹரிடம் ஸெளஹேரவானை ஒப்பித்தார். அப்பால் சிலகாட்சியபின் காஜாவானவர் பஃத்தக் உடையகரத்தில் பாதுஷாவுக்கு கஜர் கொடுக்கும்படி ஆக்ஞாபித்தனுப்பிவைத்தார். இன்னும் இவனுடைய பாட்டனுடைய அல்கஸ்

டைய சொத்துக்கள் யாவையும் இந்த பஃத்தக்பென்பவனுக்கு கொடுக்கும்படியாய் பாதுஷாவிடம் சிபாரிசுசெய்தார். அன்றியும் ஸெஹஜாதாவின்கூட பஃத்தக் பென்பவனுக்கும் கல்வி கற்பித்துவரத் தொடங்கினர். இவ்விதமாகவே தினம்தோறும் புஜருச்மேஹர் அந்த இரண்டுகுழந்தைகளுக்கும்பேசுமின்மிமிஸ்டோடு லெம்மென்னும் கலவியைக் கற்றுக்கொடுத்து வந்தார் அக்காலயில் ஸெளஹேரவான் அதிகஉஷ்யாரானவனும் லாகக்உடையவனுமாய் மிகுதியான ஞாபசக்தியுடையவனுமாயிருந்தான். சில வருஷங்களுக்குள் முக்கியமான இல்மென்னும், ஷரப், கஹவ், மானி, மன்திக்கு, ஹிக்மத், அகப்,ரியாலி,தஜ்வீம், ருமல், ஹிஸ்ஸா,ஹைறபத், ஜொகரா பியா, தாவாரீஃ, முதலாகிய இல்மகளில் தேர்ச்சியடைந்தான். அன்றியும், விஜ்வித்தைமுதலாகிய அஸ்திரசஸ்திர ஆயுதபரீக்ஷைகளிலும் மிகவும் தேர்ச்சியடைந்தான். இவ்வித்தைகளில் உஸ்தாதுடைய பெயரை அதிசிக்கும் நற்பெருமையில் கொண்டுவந்தான். இன்னும் பலவித இல்முகளிலும் பூரணமுடையவனாகவும் தேர்ச்சியடைந்தான்.

இவ்வாறு நிற்க, ஒருநாள் சீனதேசத்தின் சவ்தாதிர்கள் மதாயின்யென்னும்பட்டணத்தில்வந்து இறங்கினர்கள். அவ்வியபாரிகள் அநேகவித இரத்தினங்கள் முத்துவகை தங்கச்சரிகை பிழைத்த போர்வை முதலாகியவைகளை பாதுஷாவிற்கு தொழிபுரியென்னும் வெகுமதியளித்து இளவரசராகிய ஸெளஹேரவானுக்கும், நஜர் கொடுப்பதற்காக உத்தரவு பெற்றுச்சென்று பாதுஷா அதிக சந்தோஷமுற்றவராய் மனமகிழ்ச்சியோடு அவ்வியாபாரிகளுக்கு உத்தரவு கொடுத்தார். அப்பொழுது வியாபாரிகள் ஸெஹஜாதாவுக்காக அதிசிலாக்யமுற்ற அற்புதமாகிய விதவித தங்கச்சரிகையிழைத்த பட்டாடைகளும், இன்னும் அநேகவித சாமான்களும், மற்றும் சிலாக்யமுற்ற தின்பண்டங்களாகியபலவித சாமான்களும் நஜர்கொடுத்தார்கள், அவ்வேளையில்ஸெஹஜாதா ஸெளஹேரவான் அவ்வியாபாரிகளை நோக்கி வர்த்தகர்களே உங்கள் தேசமானசீனதேசத்தின் பாதுஷாவினுடைய ஆரோவாலென்னும் சரித்திரமென்னவென்று வினவினர். அவ்வியாபாரிகளும் தங்கள் தேசத்தாசனுடையகுணநிசய செய்கைகளையும் படிப்படியாயுரைத்தார்கள். இன்னும் சொல்கின்றார்கள். எங்கள் தேசத்தின் பாதுஷாவினுடைய

புத்திரி ஓர் பெண் இருக்கின்றாள். அவள் பெயர் நோங்கீஜ் அழகி லோ இளம்பிறையையொத்த நெற்றியையும், வில்லியொத்த புருவக் களையும், செல்கெண்டையை நிகர்த்த விழிகளையும், எள்ளின் மலரை நிகர்த்த நாசியையும், கோவைப் பழத்தையொத்த இதழ்களையும் அணிமுத்தின் வரிசையையொத்த தந்தபங்கியையும், சேப்புப்பழத்தை யொத்த தாழ்வாய்க் கட்டையையும் செந்தாமரைப்பூவின் வர்ணத் தைநிகர்த்த முகவசீகரத்தையும், காஞ்சிரவில் பின்வெட்டி மறையும் தன்மையையுடைய நீண்டவளர்ந்து பளபளப்படைய கூந்தலையும், வலம்புரிச் சங்கைப்பழித்த கண்டத்தையும் பருதையும் குமிழையும் யானையின் மஸ்தகத்தையும் பழிக்கும் ஸ்தனங்களையும், ஆலிலையை நிகர்த்த அடிவயிற்றையும், மின்னற் கொடியையும் சிங்கத்திடையை யும் நிகர்த்த இடையையும் இளம்வாழைத்தண்டுபோன்ற தொடைகளை யும் உடைய அதிரூபலாவண்ய முடையவளாய் உதயகிரி துர்கத்தி அஸ்தகிரிவரையில் அவளுடைய அழகு லக்ஷ்மியரம்பிரபல்யமுடை யதாயும், இவ்வுலகத்தில் அல்லாகுவுத் தஆலாவுடைய அபார்த்த னில் அவர்களிலேர்கள் அப்பெண்ணின் மோகத்திற்கிலேஜ்ஜா னென்னும் பைத்தியக்காரர்களாய் திரிகிறார்கள். இன்னும் அநேக பாதுஷாவின் குமாரர்கள் அப்பெண்ணின் மையலால் அவள் தன்னை முழுக்கூட்ட இவ்வுலகத்தின் ஆறு குளம் முதலாகிய கங்கீர்கள் உத வாதென்று தங்கள் தங்கள் கண்ணீர்களை ஒட்டி அவளை முழுக்காட் டுக் தன்மையாய் அழுது திரிகிறார்கள். இன்னும் அநேக ராஜாக்கள் அவள் செய்கைகளுக்காக ஆசைவைத்து ஊண் தின் மறந்து கான கஞ்சுற்றி திரிகின்றார்கள். என்று பலவிதமாய் அப்பெண்ணின் வர்ணி ப்புகளை ஷெஹ்ஜாதாவிடம் உரைக்கவே இவ்வார்த்தைகளைக் கேட்ட னெளஷேரவான் மனமருண்டு, அப்பெண்ணின்மேல் மையலாகி மெஹ்ராங்கிஜென்னுற்பவநிமித்தஸ்வீராகிய உருவமானது ஷெஹ் ஜாதாவினுடைய ஹிர்தயத்தில் ஊணுருகபதித்து அவன் மனதை நாளுக்குநாள் இவ்வகென்னும் ஆசையானது பாதுஷாவின் புத்தி ரனை உருகச்செய்துக்கொண்டேவந்தது, அதிதெல்விதமெனில் முன் ப்பத்தென்னும் அப்பானது சாலிப்பட்டுபோய்த்து ஊடுருவிச்சென்று, சரலைத் தூளித்து புண்ணாக்கிவிட்டபடியால் அப்புண்ணானது நாளுக் குநாள் அதிகரித்து உருக்கிக்கொண்டுவந்து ஷெஹ்ஜாதாவினுடைய பலமும் தைரியமும் அந்த ரூபவதியானவள் எங்கே இருக்கிறாளென் றது தேடப்போயிருக்கும் பாவனையாய் அவன் தன் தேகத்தைவிட்

நீம் இல்லாமல்போய்விட்டது. இந்த பலமும், கூவத்தும் போய்விட் டதின் சபரென்னும் பொறுமையும், தைரியமும் அவைகள் சென்ற வழியே அதிகமித்தேடிச்சென்ற பாவனையாய்போய்விட்டது ஊண் தின் நித்திரையுமவைகளும் ஷெஹ்ஜாதாவினுடைய அந்திலை பாத்த தாரதம்பதிபோல இவ்வாறுமாறிப்போய்விட்டது அவனுக்கு இர வம்பகலும் ஒரேவிதமாய்க் காணப்பட்டது விளையாட்டு நிறுத்து, கெளிக்கை முதலாகிவைகளையும் முழுவதும் மறந்துவிட்டான். இவ்விதம தும் சிறந்த ஞானிபோலிருப்பவனாகிய அந்தாதாவே புலம்பஆரம்பித் தான். அப்பெண்ணின்ரூபத்தை தனக்குள்ளே நிரூபமாகபாவி தான்.

விருத்தம்.

கார்முகிலேபோலுறு காலவிய வடிவினிலிக்க
ஆரணமதனிபோன்று அழகுமம் மோகவல்லை
நிரைதவி னிகர்க்கெனவே நீவலும் முடித்துவாடி
கொல்லிடச் செய்யுமோர்கும் கோதகடி லென்னதீதோ.

நீதிது வென்றேயுள்ளம் நினவகிலே மயங்குகின்ற
வாதிதென் நருமகோ லையத்தை யலாரை
பூதலத் தற்பமித்துப் புருடரை நோகச்செய்யும்
போதிது கூடாதென்று புகல்வது நீதியன்றே.

அருந்த வனிகர்சொன்ன அழகோ நினைக்குதோறும்
என்நெஞ்ச மாதைக்கண்டு இடிபுறவிலையே தென்று
சென்றெனை நினைமயக்கி சேரிழைதன் நினைக்கு
நன்றவள் நிற்ரூபம் சடக்குதென் கண்முன்நின்று

வார்நிற மேகமோகின் கருநீலக் கூந்தல்தானும்
தாழ்புக முனதுமேனி தங்கமோ பாவையாளே
பேரிள மதியோதெற்றி பிரகிரு புருவமில்லை
கீர்பெறும் வேலோசேலோ குருடிய விழிகள்மானே.

செவ்வையோ குமிழோநாசி செவிவள்ளக் கொடியோமின்
கொவ்வையின் கனிவையொத்த கோதையுன் னிதழைக்கண்டு
மெல்லிய கினிகள்தானி ஓடியே வருகுதென்ன
அல்லிய மென்னியுன்தன் அழகது மிரட்டுமேவாறே.

அடிவயற் தன்னைக்காணில் ஆலிலை நாணுமுந்தன்
இடையினை நிகர்த்திற்கும் ஏற்குமென் றிடவும்போமோ
துடைஇரும் வாழைத்தண்டென் றுரைத்திடில் கேற்பமேண்டாம்
தொடியினி லென்முன்வந்து நேர்ந்தென் மையற்தீர்ப்பாய்.

சொற்றிரொத் துருகியுற்தன் கோக்கமே எக்கமாக
வெற்றியென் மனதுப்பீராய் வேகுதென்புண்டபோல்
சுற்றாவழுவின்பிக்க தோகையே நெஞ்சாங்கேதே
வந்தெனை யினைவரயரில் வுன்னீர் கீலிப்பேன்மாதே.

எனது, ஷெஹஜாதாவானவன் இவ்விதமையலில் ஆழ்ந்து அதில் கின்றும், தப்பி அம்மையிலீக்க பரிதாபமாயங்களை தேடியும், அது அவன் கண்முன் எதிரில் நின்று தன் அழகை காட்டும் பாவனையா யிருந்தபடியால் அதை நீக்கமுடியாமல் மூகம் மஞ்சள் நிறமாகி உதடுகள் உலர்ந்து மூச்சானது ஹா! ஹா!! வென்று பெருமூச்சுவிடித்து எங்கி தயங்கி இருந்தபடியால் இவ்வந்தாங்க இஷ்க்கென்னும் அக்கினிச் சுவாலையை வெளிப்படுத்தியதுபோல் கௌஷேரவான் யாரோ ஒரு பெண்ணின்மேல் இச்சையாகி தயங்குகிறானென்று வெளிக்காட்டிவிட்டது. இவ்விதமாய் காஜாக்குரசர் பாதுஷாவின் குமாரன் கூறினதிசையடைந்து வருவதை கண்ணுற்ற ஷெஹ்ஜாதாவின் சிநேகிதர்கள் பாதுஷாவினிடத்தில்முறையிட்டார்கள். எவ்விதமெனில் ஜஹாம்பூரு வாசிய பாதுஷாவே யாதுகாரணமோ எக்த துஷ்மனுடையசெய்கையோ என்மேலதெரியவில்லை. நாள் தினங்களாக ஷெஹ்ஜாதா அன்னஆகாரத்தின்மீது அபேக்ஷையற்றவராய் காஜாக்குரசர் உருகி இனைத்து முகம்வெளுரிபோயிருக்கிறார் எவரெவர்கள் எவ்வெவ்விதமாய்ப் புகன்றாலும், அவைகளை செவியிற்கொள்ளாமல் தன்மனம்போனபடியே யாதொன்றின்மீதும் விருப்பமில்லாமல் சித்தபிரமைக் கொண்டவர்போல் மிருக்கின்றாரென்று சொன்னார்கள். இவ்வார்த்தைகளை செவிமடுத்திய பாதுஷாவானவர்திடுக்கிட்டு மெய்மற்று ஒன்றுக்தோற்றாமல் காஜியுஜ்ருக்மெஹரை யழைத்து விஷயங்களையாவையும் உரைத்தார். காஜாவானவர் பாதுஷாவினுடைய மனதைத்தேற்றி சமாதானப்படுத்திவிட்டு ஷெஹ்ஜாதாவினுடைய சமூகத்தில் வந்து அவனை தனியே அழைத்து சென்று உமக்கென்ன மனச்குறைவு நேர்ந்தது அவற்றை யாதொன்றும் ஒளிக்காமல் என்னிடம் புகல்வாயாகில் யான் அதற்குதகுந்த முயற்சியெடுத்து உம்

முடைய மனதின்கண் அமைந்திருக்கும் வியாகூலம் நீங்கச்செய்வே னென்று சொன்னார். இவ்வசனங்களைக்கேட்ட கௌஷேரவான் காஜாவை நோக்கி, காஜாவே தாங்கள் முற்றி என்னுடைய தந்தையின் முதன்மந்திரியாக இருக்கின்றீர்கள். அதல்லாமலும், என்னுடைய உஸ்தாதாகவும், அதிமேன்மைபொருந்திய ஹஜ்ரத்பீராகவு மிருக்கின்றீர்கள். அடியேன் தங்களை என்னுடைய பிதாவைப்போலகினைக்கின்றேன். ஆகுல், இவ்விஷயமோ லஜ்ஜையென்னும் வெட்கமான செய்தியாய் காணப்படுகிறபடியால், என் மனமானது இவ்விஷயத்தை வெளி விடாமல் தடுக்கின்றது, சங்கோசைக்கு உஸ்தாதாயிருக்கிற படியால், அவ்விஷயத்தை தங்களிடத்தில் முறையிட வேண்டாமென்று தடுத்துவிடுகின்றது, ஆயினும், தங்களுடைய பெருந்தன்மைக்காக யான் மரியாதை யென்னும் அதபைகவனித்துசொல்ல எனது வாயைத்திறக்கின்றேன், ஆம்தியாகெனில், ஹாக்கானே! சீனஎன்னும் மஹா சீனத்து சுல்தானுடைய அதிரூபலாவண்ய சவுந்தர்பம் நிறைந்த பொற்கொடியாளாகிய ஹெஹரங்கீஜ் யென்னும் காமத்தைதரித்த பெண்ணின்மீது, மையலுறவுற்று அவ்வெண்ணமே என்னுடைய மூளையிலும் இரத்தத்திலும் நிறைந்து குடிகொண்டு அவளுடைய நினைவென்னும் கூர்மைபொருந்திய அம்பானது என்னைக்குலைப்பு வைத்து எய்துகொண்டிருக்கிறபடியால், அவ்வம்பை விட்டும் தப்பிக்கொள்ளமுடியாத கலிமானைப்போல் தயங்கி இருக்கிறேனென்று நினைத்தபோது, அவளை யரன்றிக்காருவென்னும் பிரானம் செய்துகொள்ளாதவரையில் உயிர்தப்பி பிழைத்திருக்கமாட்டேன் தனித்திருந்து அப்பெண்ணின் மையலினால் என்னுயிரை அவளுக்கு குர்பானியாக செய்து விடுவேனென்று நினைத்தான்.

அவ்வார்த்தைகளைக் கேள்வியுற்ற காஜாவானவர் கௌஷேரவானைநோக்கி ஷெஹ்ஜாதாவே இவ்விதமாய்த் தன்னை மறந்து இவ்விஷயத்திற்காக நீர் இவ்வளவு கஷ்டமெடுத்துக் கொள்ளக்கூடாது. உம்முடைய பெருந்தன்மைக்கும் இராஜயோக்கியத்திற்கும் நீர் செய்யும்காரியம் அதிக்தமாய்க் காணப்படுவதில்லை. இவ்வற்பவிஷயத்திற்காக உம்முடைய அறிவையும் ஊக்கத்தையும் தைரியத்தையும் கைவிடக்கூடாது இவ்விஷயம் அப்படியென்ன நம்மால் செய்யக்கூடாத காரியம் ஆகிவிட்டது இக்காரியத்திற்காக தம்முடையகோலம் அலங்

கோலமாகுமேபடி செய்து கொண்டீர் உபயோகமில்லாத விண்பிரய
சையை இருந்த இருப்பிலேயே சம்பாதித்துக்கொண்டீர் அல்ல
குத் தாலாவுக்காக தம்முடைய மனதில் குடிகொள்ளிருக்கும் வி
ரோதத்தை அழிவே நீக்கிவிடும். அன்னகாரத்தின்மீது அபேகூயோ
ங்கருப்பு புகியும், சந்தோஷகரமான ஆடல்பாடல் கேளிக்கை மு
லியவைகளில் மனதைச் செலுத்தி காலத்தைப்போக்கும், உம்மு
டையவயது இன்னம் நிறையஇல்லை. இதற்குள் நீர் இப்விதக் கஷ்டக
களை நினைத்துக்கொள்வது தகுதியல்ல, நீர் சொல்லிய அந்த சவு
திரியவதியானவள் தனக்குத்தானே உம்மீது ஆசை வலியவ
ந்து முழுமனத்தோடுதமக்கு குறுபாணி விடுவாள். இதுவுமல்ல
மல் இன்னும் அநேக தேசங்களிலுள்ள பெரிய பெரிய ஏகச்சக்கி
வர்த்திகளெல்லாம் தங்கள் தங்கள் புத்திரிகளை மணம்புரிந்து கொள்
ளும்படி தமக்குவலிய ஆளனுப்புவார்கள். ஆதைபால் இன்னம் இவ்
விதங்களுக்கு ஹிர்தயத்தில் சிறுவிடாமல் பந்தோபஸ்தாயிரும்,
தன்னுடைய இஷ்டப்படி நீர் உம்மை ஏற்றுமை பதித்திக்கொள்ள
வேண்டாம். இவ்விஷயம் மிகவும் அற்பவிஷயமேயொழிய நம்மால்
காத பெருத்தவிஷயமல்ல, தம்முடைய ஹிர்தயத்தில் கெட்டியாய்
நினைத்துக்கொள்ளும் யான் இப்போழுதே சென்று அப்பெண்ணை
முடிவுசெய்து தமக்கு முடித்துவைப்பேன், தம்முடைய எண்ணத்
தை பூர்த்தியாக்கி நிறைவேற்றி வைப்பேன்என்று கொன்னர்.
இவ்வாறுதலான இனியவசனங்களைசெவியுற்ற ஷெஹஜாதானவன்,
இனி அச்சவுதரியவதியுடன் நாம் சேரல்சமென்னும் நிணம்
மனதில் நிகூடப்படுத்திக்கொண்டான். உடனேயெழுந்துஹுமா
ன்னும் ஸ்நான அறையிற்சென்று குசல்செய்து நல்ல ஆடையணிக
ணமணிந்து சிநேகிதர்களையும் தோஸ்துகளையும் அழைத்து அவர்க
ளுடன் சேர்ந்து கலந்து சந்தோஷமாய் வஜீபன முருந்தினன்.

இம்விவ்வாறிருக்க புஜருச்மெஹராவனவர்போதூஷாவினிடம் சென்று
ஷெஹஜாதா மஹா சினத்தாசனின் புத்திரிபின்மீது மையல் கொண்
டிருப்பதையும் அவனைத் தேத்தி தாம் சதரியவார்த்தைகள் சொல்லி
வந்ததையும் விபரமாயுரைத்தார். இவ்வார்த்தையைக் கேட்ட பாது
ஷாவானவர் புஜருச்மெஹரை நோக்கி காஜாவே இவ்விஷயம் தங்க
ளாலே யல்லாது வேறே யொருவராலும் முடியாது. தங்களுடைய
சாந்திமான வாக்குச் சாதுர்யத்தினாலும், சமர்த்தினாலும், அக்காரி

யம் முடியவேண்டுமே பொழிய, வேறொருவராலும் சிவ்விதம
யத்தினாலும் முடியாது, அஃதேனெனின், அந்த நாக்காரனே சின
என்னும் பரிவாவானவர் ஏகசக்ரவர்த்தியாயும், பெருந்தகை
யான தேசங்களை ஆள்பவராயும் அநேக ஆயிரம் தேசத்தரசர்களை
கைகட்டிநிறை யாக்கும்படியான சக்திதானுனபடியால், அவர்சமு
கத்திறகு எப்பேர்ப்பட்ட மனிதர்கள் வெண்பேச தூதர்களாகப்
போக வேணுமானால் வங்கிஷத்தாலும், கல்வியாலும், அறிவாலும்
வாக்குச் சாதுர்யத்தினாலும், பெருந்தன்மையாலும் முகஸ்தீகரத்
தினாலும் மேம்பாடா புடையவர்களை தவிற, மற்ற சாதிகமான
மனித தன்மை புடையவர்களால்ஆகும் காரியமல்ல ஆகையால் முற்
கூறிய குணங்குரிகள் யாவும் தங்களுக்கமைந்ததே யல்லாமல் இவ்
வூரில் தங்களைப்போல் வேறொருவருமில்லை ஆகையால் இவ்விஷயத்
திற்காக தாங்கள் இடைப்புகட்டி அம்மஹாசினத்தின் கன் சென்று
அவ்வேலையை முடிவுசெய்து வருவது தங்கள்மீது கடனுயிருக்கு
மென்று உரைத்தார். இவ்விதமொழிந்த தூதுஷாவினுடைய உத்திர
வைக்கேட்ட புஜருச்மெஹரானவர் மஹாசினதேசம் புறப்பட சம்
மதித்து ஆயிரம் அதிவீரம் பராக்ரமத்தையுடைய பரிவீரர்களையும்
இன்னும் ஆயிரம் ரணசூரர்களை வாளாயுதத்தைக் கையிற்பிடித்த
காலாட் படைகளும் இன்னும் வழிக்காக வேண்டிய சாமக்கிரியைக
ளையும்தம்முடன் கூடவர புறப்பட்டு சீனதேசத்தைநாடி நடந்
தார். இஃதிவ்விதமிருக்க அல்கல்லினுடைய பொத்திரனுயே பஸ்தக்
என்பவனுக்கு போதுமான வயது வந்தெய்திபொழுது தன்னுடை
யநாகாவாகிய அல்கல்லுடைய விஷயங்கள் யாவையும் கேள்வி
யுற்று ஒவ்வொரு காலும் தன்னுடைய தாயை நோக்கி சொல்கின்
றவனுயிருந்தான் அஃதியா தெனின் என்னைப் பெற்றதாயே யான்
எந்த வேளையில் புஜருச்மெஹரென்பவரை யென் நேத்திரங்களாற்
பார்த்தேனோ அப்பொழு தெல்லாம் என் நெஞ்சை கண் இரத்த
மான்து பொங்கி வடியுந் தன்மையா யிருக்கின்றது, என்னுடைய
தாகாவினுடைய ஹரலி யென்னி யேயன்னி என் நரல் குலியானது
பதைத்துத் துடிக்கின்றது எப்பொழுது என்னுடைய நாகாவினுடை
யபழிக்கு பதிற்பழி வாங்குகின்றேனோ அதுவரையில் என்னுடைய
மன்மானது ஒருநிலையில் நிற்காது சமயம்பார்த்திருக்கின்றேன் என்
நாளாயினும் ஒருநாள் அந்த புஜருச்மெஹர் என்னுடைய கையில்
சிக்காமல் போகமாட்டான் அச்சமயம் யான் பார்த்துக் கொள்வே

னென்றுரைப்பதோடு பாதுஷாவி னிடத்திலும் ஒவ்வொரு காலும் புஜருச்மெஹரைக் குறித்து கோள்வார்த்தைகளை மூட்டிகொண்டே யிருப்பான், தன்னுடைய மனதில் பிரதிநாள்தோறும் நிகமிக யோசி த்து பொய்களை யெல்லாம் சாமாகக் கோர்த்து நிஜமென்று நம்பும் படியாக கட்டுவாக்கியங்களை சேர்த்து பாதுஷாவி னிடத்தில் மெய் யைப்போற் சொல்வான். இவ்வார்த்தைகளைச் செவியுறும் பாதுஷா வானவர் பரீத்தக் யென்பவரை நோக்கி! ஆடா! லஹானத்து பெற்ற மூதேவியே அந்த சற்குணம்வாய்ந்த காஜாவானவர் உனக்கும் உன் னுடைய குடும்பத்தார்களுக்கும் செய்திருக்கின்ற நன்றியை அல்லா குத் தஆலா அறிவான். பின்பு, என்மனமும் அறியும் அப்படி நன் றிசெய்த சற்குணம் வாய்ந்த காஜாவின்மீது பொய்க் கோள்களைக் கட்டிச் சொல்கின்றாய், இன்னும் அவர் உனக்கு இன்றும் நாளைக் கும் செய்து வரும் நன்றிகள் பாவும் யானறிந்து வருகின்றேன் அப் படியிருக்க அடே படுதேவடி யானவனே நீ அவர்மீது குற்றஞ்சும த்தி கோள்மூட்ட வந்தாயில்லவா! நீ துனியாவிலும் ஆகிரத்திலும் அதா பென்னும் வேதனையை அனுபவிப்பாயே தவிற நற்கதியடைய மாட்டாய் கப்பரீத்தானவனே சீ! நீராப்போய்விடு என்முன் நில்லா தே யடா! என்று தூஷித்து தாக்கிவிடுவார்.

இவ்வா றிரீதிங்களுமிருக்க.

காஜா புஜுருச்மெஹர்மஹா சீனத்தனவில் செல்வதையும் மெஹரங் கீஜேன்னும் அழகிய ரூபவதியை அடை த்து வருவதையும் நௌஷேரவானுக்கு நிக்கா செய்து வைப்பதையும் பேசுகிற பாபாஇருக்கும்.

விருத்தம்.

அன்புடன் புஜுருச்மெஹர் அரசன் கிப்பா துசொற்போ
வண்மையாய் சீனதேசம் மகிழுடன் சென்றபின்னர்
பெண்மணி மெஹராங்னைஜை பெட்புற அழைத்துவந்து
கன்மையாய் விவாகஞ்செய்யும் நலந்தனைப் புகலுவோமே.

பற்பல வித்தைகளிற் றேர்ச்சியடைந்த, மஹா சிறந்த ஆலீம்க ளாகிய வித்வசிரோன்மணிகள் யெழுதுகிறார்கள். காஜாபுஜுருச்மெஹ ரானவர் பாதுஷாவினிடத்தில் உத்தரவு பெற்று தளங்கள் புடைசூழ காடு, கரை, கடல், ஆறு, அருவி, வாவி, ஓடை, மலை மற்றலாங்கு ந்து மஹா சீனமென்னும் பட்டணத்தை அடித்துச் சேர்த்தார்கள். இவர் வந்திருக்கும் ஆடம்பரத்தைக் கண்ணுற்ற ஒற்றர்கள் ஓடோடி யும் சென்று தங்கள் அரசனிய ஹாக்கானே சீன் யென்னும் சுல்தா னிடத்தில் சொல்லுகின்றார்கள். எங்கள் இறையே நமது தேசத்தின் எல்லைக்குள் ஹப்தக்லீம் கிவ்வர்பாதுஷா கிப்பாதே காம்ருன் யென் னும் பாதுஷாவினுடைய முதன் மந்திரியாகிய காஜா புஜுருச்மெஹரே ன்பவர் தங்களைக்காண வந்திருக்கின்றார் அவர் இக்காலத்தின் ஏக சத்திரவர்த்தியாகிய கிப்பாதே காம்ருன் யென்பவ ரிடத்திலிருந்து ஏதோ நற்செய்திகள் கொண்டுவந்திருக்கின்றார்க ளென்றுரைத்தார் கள் இவ்வசனத்தைக் கேள்வியுற்ற சீன தேசத்தரசன் தன்னுடைய மந்திரி முதலாகிய பெரிய உத்தியோகஸ்தர்களை யெல்லாம் அழை த்து சொல்லுகிறான். நீங்கள்போய் மதாவின் பட்டணத்தையாளும் கிப்பாது பாதுஷாவினுடைய வந்த காஜா புஜுருச்மெஹரானவரை நம்மு டைய தேசத்திற்குள் வந்திறங்கியிருக்கின்றார். அவரிடம் சென்று மிகமரியாதை அதபுடனே அவர்களை நம் சமூகத்திற்கு அழைத்துக் கொண்டுவாருங்களென்று அனுப்பினான். அதுபோல் மந்திரி பிரதா னிகள் யாவரும் நிலதூரம் செல்லையில் தன்னுடைய குமாரர்களை யும் இன்னும் சில சிற்றாசர்களையும் சேர்த்து சொல்கிறான். மகனே நீங்கள் யாவரும் சென்று காஜா புஜுருச்மெஹரைக் கண்டு இஸ்தம் பால்செய்து மிகமரியாதையுடனே அழைத்து வாருங்க ளென்றனுப் பினான். இவர்கள் யாவரும் காஜாவினிடம்சென்று மிகமரியாதையுட னே மூல்காத்தென்னும் சுகந்திப்புச்செய்து காஜாவையும் அவருடன் சேர்ந்தவர்களனைவரையும் சீன்தேசத்தரசனின் அரணமனைக்கழைத் துச் சென்றார்கள். அப்பொழுது காஜாவானவர் அரசனின் அரண் மனை ஆசாவாசலுக்குள் தழைந்து சீனதேசத்தரசனைக் கண்டு மீக மரியாதையுடனே தாழ்மையான தஸ்லீம்புரிந்து தங்கள் பாதுஷாவி னுடைய தஸ்லீமும் உரைத்து தாம்கொண்டு போயிருந்த விலையுயர் ந்த இரத்னங்களையும் மற்றுமுண்டான தொம்பாலென்னும் வெகு மதிகளையும் என்றும் பார்த்திராத அதிரூதனமாகிய மிருக ஜாதிக ளாகிய யானை, ஒட்டை, குதிரை முதலாகிய பற்பல மிருகங்களையும்

கவரத்தினங்களிழைத்த அதிக விலையுயர்ந்த ஆயுதாதிகளோயும் அச் சினதேசத்தின் அரசனின் முன்பில் கழுவைத்து, கண்டுகொண்டார் இவ் வெகுமதிகளைக் கண்ணுற்ற சுல்தானுனவர் காஜாவினுடைய வீரமும் தன்மைக்காகவும் கவரவத்திற் காகவும் கிப்பாது பாதுஷாவி னுடைய விலையேறப்பட்ட நோஃபாக்களை கண்ணுற்று அதிக மனப் பிரீதியுடனே காஜாவை மிகவும்பெருமையா எண்ணி அநேகவித சில் அத்துவென்னும் வெகுமதிகளை பதிலாய் அளித்தான். இன்னும்கண க்கிலடங்காத விலையுயர்ந்த ரத்தினங்களழுத்திய பொற்பணிகளையும் இனமாய் கொடுத்தார். இத்தாலிய உடையவர்கள் எழுதுகிறார்கள். மஹா சினத்து சக்கிரவர்த்தியானவன் காஜா புஜருச்மெஹருக்கு முற் கூறியபடி அனேகவெகுமதிகளை கொடுத்ததோடு இன்னும் காஜாவி னுடையபெருமையை தனிவிற்குமேல் அதிகப்படுத்தினர், சினதேச த்தரசன் எவ்விதமான பெருத்தகேள்விகள் கேட்டாலும் அவ்வவை களுக்கு காஜாவானவர் தரியான பதிலுரைத்து அரசனை களிப்பிக் கச் செய்தனர், ஆகையால், சினதேசத்தரசன் காஜாவிற்கு அடிக்கடி தில் அத்து என்னும் வெகுமதி யளித்துகொண்டே யிருந்தார், பின்பு காஜாவைநோக்கி தாங்கள் இவ்வளவுதூரம் பிரயாசையெடுத்து வந் தகாரணமென்ன வென்று வினவினான். இவ்வார்த்தையைக் கேள்வி யுற்ற காஜர் அரசனை நோக்கி மிகவும் சாதுரீகமான மொழிதலோடு மறுத்து யாதொன்றும் சொல்லாதவிதமாய் விஷயங்களடங்கிய சொற்சோர்வு படாத உத்திரவாக தாம்வந்த விஷயத்தை யெடுத் தோதினர். இவ்வாக்கியாமிர்தத்தைசெவியின்வழியாய் புட்கொண்ட சினச்சக்ரவர்த்தியானவன் மனமகிழ்ந்து காஜாவினுடைய வேண்டு கோளுக்கிணங்கி தன்னுடைய புத்திரியை ஷெஹஜாதாவாகிய ஔரங் ஷேரவானுக்கு மணம்புரிய சம்மதித்து தன்னுடைய சபையோர்க ளறிய சொல்லுகின்றான். யானும் என்னுடைய ஜேஷ்ட புத்திரியும் செய்த நற்றவமானது என்னுடையபுத்திரிக்கு ஔரங்ஷேரவானுக வனுகவஞ்சனைக்கு அவர்மருமகனுகவும் செய்ததுயென்று முடிந் தோடு சொன்னதோடு அந்நேரமே சபரென்னும் பிரயாணத்திற்கு ஆகவேண்டிய சாமக்கிரியைகள் யாவும் தயார்செய்யும்படி உத்தரவ ளித்து, மதாயின் என்னும்பட்டணத்திற்கு எவ்வளவு சீக்கிரம்செல் வதற்காகுமான காரியங்களை சேகரம் செய்யவேண்டுமோ அவ்வளவு சீக்கிரம் தயார் செய்யவேண்டுமென் றுரைத்தவுடனே ஏவலாளர் கள் தயார்செய்ய வரம்பித்து சில தினங்களுக்குள்யாவும் சித்தப் படித்திவிட்டு பாதுஷாவிற்கு அறிவித்தார்கள். உடனே பாதுஷாவா னவன் தன்புத்திரர்களாகிய கபாபாச்சின், குலாபாச்சின் ஆகிய இரு வரையும் அவர்களுடன் தன்புத்திரியையும் காற்பதினாயிரம் சேனை யையும் கூட்டி யனுப்பிவைத்தார். இந்தசைன்யமும் ஒவ்வொரு பெட்டி களுக்குள் அடங்கியிருக்கும் ரத்தினபரணங்களும் விலையுயர்ந்த சரிகை இழைத்த வஸ்திரங்களும் எழுதலேமுறைவரையில் உபயோ கித்து மிருதியாகும்படியானதாய் ஆயிரக்கணக்கான பெட்டிகள் நிறைய கவரத்னசஜிதமயமாகிய ஆடையாபரணங்களைக்காப்பி ஆயிரம் வல்லமைபொருந்திய தருக்கிதேசத்தின் குலாம்களின் சிரசுகளின் மேற்கமத்தி அவர்களுடன் ஆயிரம் ஹப்ஷிகுலாம்களும் ஆயிரம் குத்தினிஜாதி குலாம்களும் இன்னும் கணக்கிலடங்காத மின்னற்கொ டியாளாகிய ஒரேவயதுடையை ரூபவதிகளாகிய ஆயிரம்கன்னிகைக்கான பாத்திரங்களையும், அத்தனை தனமாகவுடனனுப்பினர். இவர்கள் யாவரும் காஜா புஜருச்மெஹருடன் சென்று வழிகளெல்லாம்கடந்து சீனக் கடல் தாண்டுவருவதுபோல் தினகாட்களில் காஜாவினுடைய சுய தேசமாகிய ஈரான் தேசத்தை யடித்துச்சென்று, ஓரிடத்தில் அன்றி ரவுதங்கி விடிவேளுன பின் அவ்வவிடமுந்து, தங்கள்தங்கள் பௌஜ் தனை பிரயாணத்திற்கு ஆயத்தப்படுத்தினர்கள். அப்பொழுது மஹா சினத்தரசன் புத்திரிருவரும் தாங்கள் கொண்டுபோயிருக்கும் ஸ்தி ரீதன சாமான்களனைத்தையும் பரிசுகக்கிரமமாய் ஆட்களின் சிரங்க ளிலும் கங்களிலும் தாங்களே செய்து கடப்பித்தபொழுது இவ்வார பாரமானஜேம்பரத்தைக் கண்ணுற்ற ஈரானரசனனவரும் ஆச்ச ரியமுற்று ஒருவருக்கொருவர் பேசிகொள்ளும் செய்தியானது உடனேயெல்லாம் பரவிற்று அவ்வவ்விடங்களிலுள்ள ஊடவர் மகளிர் மைத்தாங்கள் முதலாய் பந்தி பந்தியாய் இவ்வாச்சரிய காட்சியைக் கண்ணுறும்பொருட்டு வந்தவண்ண பிரஜைகளின் கூட்டமானது எவ்விதமிருந்தனெனில் உலகமெல்லாம் ஒன்றுய்ச்சேர்ந்து திரண்டு செல்வதுபோல் காணப்பட்டது இவ்விதமாகவே கேள்வியுற்ற பாது ஷாவும் ஷெஹஜாதா ஔரங்ஷேரவானும் தங்களுடன் அதிக ஆயிரம் பதாதிகளுந்த எதிர்கொண்டு வரும் காஜாவைகண்டு, ஆனந்தித்து ஆயிரக்கணக்கான கவரத்னசஜிதமழுத்திய பொற்றும்பாளங்களில் வைரம், வைடூரியம், புஷ்பராகம், நீலம், மரகதம், மாணிக்கம், முத்து பவளம், முதலாகிய கவரத்தினங்களையும் நிரப்பி மெஹர்கஜென் னும் தான் ஆசைகொண்ட சவுந்தரியவதியின் சிரசைச்சுற்றி திருஷ்டி

கழித்து அங்குமிங்கு பெங்கு மிறைத்தார்கள். அவ்விதம் வாரியி
றைத்த நிரையங்களினால் பக்கீர், புக்காரக்கள், மிஸ்க்கின், எத்திம்,
ஆகிய ஏழைகள் யெல்லாம் கண்க்கிலடங்காத நிரையவீர்தவர்களாய்
ஆளவற்ற மிகிழ்ச்சியோடெ சந்தோஷமுற்றிருந்தார்கள்.

இம்மிவ்வாறிருக்க காஜாவும் மற்றுமுண்டான யாவரும் அரண்
மினென்றபின் பாதுஷா கிப்பாதே காம்றுன் காஜாவை மாரோடணை
த்து அதிக சந்தோஷமாய் அகேகவித ஆடையாபரணங்களும் வேண்
டியபட்டில் கன்குடையளித்தார். அப்பொழுதே கல்லவேளை முகூர்
த்தம் பார்க்கச்செய்து அந்த கல்லவேளையில் மலிக்காமெஹறக்கிஜ
வெஹறஜாதா ஸொஹேரவானுக்கு வெகுஆடம்பரத்துடனே விவாகஞ்
செய்துவைத்தார்கள். விவாகமாகிய பனிரெண்டுமாதங்களும் இடை
யூறாமல் கலியாணச்சட்டுகுகள், நடந்துகொண்டிருந்தது, இவ்வி
தம் பனிரெண்டு மாதங்களுஞ் சென்றபின் ஒருநாள் பாதுஷாவான
வர் காஜா புத்ருச்மெஹரைநோக்கி சொல்லத்தொடங்கினர். அம்மதி
யாதென்றில் காஜாவே இப்பொழுது வெஹறஜாதாவிற்கு போதுமான
வயது வந்தெய்தியபடியால், இனி,நாமிளவரசபட்டம்கட்டி சிம்மாச
னத்தில் அமர்த்தி அரசுபுரிபசெய்து என்னுடைய நேத்திரங்களால்
கண்டெனிக்க அதிக ஆனந்தமுடையவனாய் இருக்கினறேன். ஆகையால்
ஸொஹேரவானுக்குப் பட்டாபிஷேகஞ் செய்யவேணுமென்றுரைத்
தார். இவ்வுரைத்தையை பிரஸ்தாபஞ்செய்யுமுன், அதிக சந்தோஷ
முடையவராய் அவ்விதமே செய்வதும்மும் உத்தமமென்றுசொல்
லத்தொடங்கினர். பாதுஷாவே! இன்னும் நாற்பதுநாள் சென்றபின்
நம்முடைய வெஹறஜாதாவை தக்தெனும் சிம்மாசனத்திலமர்த்த
வேணும், இதற்கிடையில் வெஹறஜாதாவானவர் என்னுடைய எத்தி
யாரென்னும் உத்தரவின்பேரி லிருக்கவேணும், என்னுடைய உத்தி
ரவைத்தவிற வேறெருவருடைய ஆணையின்பேரில் அவர் நடக்கக்
கூடாது, இந்த நாற்பதுநாள்களிற்பான் எவ்விவ்விதமாய் நடந்தி
வைப்பேனை அவைகளுக்கிணங்கி இருக்கவேண்டுமென்றுரைத்தார்.
இவ்வசனாமிர்தத்தை செவிசாய்த்து கேள்வியுற்ற பாதுஷாவான
வர் அவ்விதமே தங்களிஷ்டப்படி நடத்த யாதொர் தடங்கையாதெ
வ்வுபதில்மொழி யுரைத்தார் உடனே காஜாவானவர் ஸொஹேர
வானுக்கு கால்கைகளுக்கு ஜஞ்ஜீரென்னும் விலங்கிட்டு கைக்காலி
ல் வைத்து நாற்பத்தியோராம்நாள் ஜெயிலிலிருந்து வெளியிற்

கொண்டெத்து விலங்குகளைத் தரித்துவிட்டு, காஜாவானவர் இரக்
குதேசத்தின் குதிரையின்மீது சவாரிசெ ஸொஹேரவானின் பாதசா
ரியாய் தன்பின்னே நடர்ந்து ஓடிவர் வேண்டுமென்று உத்தரவளித்
தார், அதுபோல் ஜவானே சாஹீ என்னும் பாதுஷாவினுடைய குர்
பாரவையில் ஓடிவரச் செய்துக்கொண்டு வந்து நிறுத்தி தாஜ்பாரு
வென்னும் தேவ்வாரப்பட்டையால் தூர்வாவடிப்பதுபோல் முன்றடி
கள் எவ்விதம் அடித்தானெனில் தம்முடைய பலமெல்லாம் சேர்த்து
ஓங்கி ஓங்கி வீசியடித்தார். அவ்வேலியின் வெய்பலின் கடுமையான
காலையினும் பூமியின் வெப்பத்தினுலும் இவ்வடிகளின் பாதை
யானது ஸொஹேரவானுடைய உயிரானது நடுங்கபதைத்துசோர்
ந்து, கனைத்து சோகமாய்விட்டான். பின்பு வாளாயுதத்தை யுருவி
ஸொஹேரவானுடையகரத்திலிருந்து வெஹறஜாவே! யான் தம்மைசெய்
தபே அதுபெண்ணுமரியாதை குறைவிற்காக எனக்குஜாவெண்னும்
தண்டனை இதுவாக இருக்குமென்று தம்முடைய சிரசை வெஹறத
கழுத்தைநோக்கி என்னவெட்டி இருதுண்டாக்கி விடுமென்பு புகன்
ரூர். இவ்வித சோகவார்த்தையை செவியுற்ற வெஹறஜாதாவானவன்
வாளாயுதத்தைக் கீழே யெறிந்துவிட்டு காஜாவினுடைய கழுத்தை
தாவிப்பிடித்து தனது முகத்தோடு முகம்வைத்து கண்ணிர்சொரிய
சொல்லுகின்றான். காஜாவே! தாங்கள் இவ்விதம் என்னை செய்த
தற்காகஒருபோதும் யான் நங்களை வெறுக்கமாட்டேன். இன்னம்
நற்குமேல் என்னை உபத்திரவம் செய்தாலும், அனைகளெல்லாம்,
என்னுடைய கலிற்காலைக்கு, அதில் யாதொரு நிக்மத் வென்னும்
மர்மம் அடங்கியிருக்குமே யல்லாத, உபயோகமில்லாமல் வினிற்
று செய்திருக்க மாட்டார்களென் றனைதான். பின்பு, ஸொஹேர
வானை மரியாதையுடன் அழைத்துசென்று பாதுஷாவின் சமுகத்
திலிருத்தி பாதுஷாவே இதுவரையில் வெஹறஜாதாவானவர் என்
னுடைகட்டளைபிலமீதுயாவர் அவருக்கு செய்துவைக்கவேண்டிய
திய முக்கியவிஷயத்தை தெரியப்படுத்திவிட்டேன். இனி தங்களிஷ்
டப்போல் சிம்மாசனத்திலமர்த்தி சிரசில் சீகிடமதரிப்பித்து பட்டா
பிஷேகம் செய்தவீவுபவென்று துரைத்தார்.

அப்பொழுது பாதுஷாமகோகொக்கி என்னம்மனியாபெ ஆருமை
மகனே இந்தவோரவ் உன் இஷ்டசகலமான அரசாண்டு சிரதிவாய்
த்து செங்கோல் செலுத்திவருவேன் இனி என்னுடைய சிம்மாசனத்

தில் உன்னோடு நேமித்தபோகின்றபடியால் அதற்குமுன் உனக்கு யான் சொல்லவேண்டிய சிலநிபந்தனைகளுண்டு, அவையாதெனில், நீசிம்மாசனத்தில் ஏறியபின் காஜாபுஜுர்க்மெஹருடைய உத்தரவன்னியில் ஒருவேலையாதொரு வேலையும் செய்யாதே பரீக்கென்பவனை அதிகமாய் நேசியாதே, எவ்விதமாகிய அவனுடைய வார்த்தையையும் கேளாதே எத்தனிஷயத்திலும், அவனியோசனைகேட்காதே, யாதொருவேலையையும் அவனை செய்யுசொல்லாதே இவ்விதம் செய்யாமல் என்வார்த்தையை மீறிநடப்பாயாகில் உன்னுடைய ராஜாங்கத்திற்கு இடையூறுவந்தசம்பவிக்கும் உன்னுடைய ஆலாலத்தில் அரீதமென்னும் இருள்வந்து மூடிக்கொள்ளாமல் காப்பாற்றிக்கொள் என் றிவ்வாறுபலவித நற்போதனைகளைபுகட்டி, காஜாவினுடைய உத்தரவின் மீதுஅவரைக்கொண்டே நௌஷேரவானை சிம்மாசனத்தில்அமர்த்திவிட்டு பாதுஷாவானவர்தனித்து அல்லாஹுஅக்பர் தஆலுவை நாடி ஓர் பக்கத்தில் அமர்ந்திருந்தார். பின்பு இரண்டு வருஷங்கள் தொடர்ந்திபாதே காம்ரூனென்னுமிடத்தில் பாதுஷாவானவர் அந்திமதர்சனமெய்தி மவுத்தென்னும் மாணமடைந்தார். பாதுஷா காலஞ்சென்றபின் பக்தக்கென்பவனுடைய வால்தீனாஜாபித்தது அஃதியாதெனில் அந்தமர்தூதாகிய பக்தக்கென்பவன் நௌஷேரவான் பாதுஷாவினிடத்தில் இனிஇல்லாத உலகப்பிரட்டெளாகிய கட்டுமுட்டு பொய்க்கோள்களை மூட்டைமூட்டையாய் அளக்க ஆரம்பித்தான். பிறகு அந்தமக்கர், முதலாகிய ஆகாதகாரியங்களை யெல்லாம் செய்ய ஆரம்பித்தான். அத்தேசத்தின் குடிபடைகளுக்கு அநேகவிதமாகிய இடையூறுகளை விளைவித்தான். ஆகையால், குட்டிருஸ்தான் காயின்தலையில் வைத்ததுபோல பக்தக்கென்னும், ஹராம்ஜாதன் செய்யும்கொடுஞ்செய்கைகளினால் நௌஷேரவானுடைய பெயர்கெட்டு கொடுங்கோல் அரசனென உலகத்தார் மொழிய வாரம்பித்தனர். அக்கெட்டபெயர் பற்பலஊர்களிலும் பரவி அவ்வூரவர்களும் நௌஷேரவானை நிந்தை ஆரம்பித்தார்கள்.

இப்படியிருக்கும் காட்களில் ஓர்நாள் காவல் பிரிபவர்கள் ஓர்திருடனைபிடித்து கட்டி இழுத்திவந்து பாதுஷாவின் சமுகத்தில் விடுத்தனர், அவன்எப்பேர்ப்பட்டவனெனில், வழிப்பறிக்கொள்ளையடித்து அநேக உயிர்வதைசெய்த பெரும்திருடனாயிருந்தான், ஆயிரக்கணக்கான மனிதர்களை கழுத்தைநெரித்து சுருக்கிட்டு கொன்று உயிர்வதை செய்

தவனுமாயிருந்தான் இவ்விதஅதியாயக்காரத் திருடனை உயிர்வதைசெய்யும்படி பாதுஷா உத்திரவளித்தார், உடனே ஜல்லாதனும் கொலை செய்பவர்கள் அவனைக்கொலைக்களம் கொண்டேகினர், அப்பொழுது அத்திருடனானவன் சொல்லுகின்றான், எனக்கு இன்னும் காற்பதுநாள் தெவுகொடுத்தால் இந்த காற்பது நாளைக்குள் யான் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்துக்கொண்டு பின்னுடைய உன்தாகிடத்தில் யான் புதிதாய் கற்றுக்கொண்ட ஒரு அதனமான அற்புத வேலையொன்றை காண்பிப்பேன், அஃதெவ்விதமான வேலையெனில் இந்த பாதுஷாவினுடைய தர்பாரில் அநேக ஆச்சரியமான காரியங்களை செய்யக்கூடிய பெருத்த பெருத்த ஹக்கீம்களும், ஹாக்குமாக்களும் இருந்தாலும் அவர்களெல்லாம் யான் பெய்யப்போகும் அவ்வேலையை செய்யமாட்டார்கள் காதினால் கேட்டு மிருக்க மாட்டார், கண்களால் பார்த்து மிருக்கமாட்டார்கள் அவ்விதமஹா அபூருபமான வித்தையை அந்த காற்பதுநாள் கழித்தபின் நீவெவர்களுக்கு கற்றுக்கொடுக்க விரும்புகின்றேனே அவர்களுக்கு கற்றுக்கொடுத்த பின் பாதுஷா என்னை எவ்விதம்செய்ய உத்தரவளிக்கின்றாரோ அதற்கும் யான் சம்மதிக்கின்றேன் யென்றான், இவ்வார்த்தையைக் கேள்வியுற்ற நௌஷேரவான அவனை நோக்கி அவ் வித்தையானது யாது அதனால் என்ன பிரயோசனமுண்டாகும் யென்றுகேட்டார், அதற்கவன் பாதுஷாவே! யான் இவ்வுலகத்தின் கண்ணுள்ள எல்லாவித மிருகம் பறவைகள் முதலாகியவைகளின் பாஷைகளை கண்டுபிடித்தவனாயிருக்கின்றேனென்னுரைத்தான், அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற பாதுஷா அத்திருடனுடைய வார்த்தைக் கிணங்கி, அவ்விதமே காற்பது நாள் தெவுகொடித்து குட்டிருஸ்தானுடைய வசத்தில் ஒப்புவித்தான் அத்திருடனை குட்டிருஸ் மெஹரானவர் ஓர் தனித்த கிரகத்தில்விடுத்து அவனுக்கு ஒவ்வொரு நாளும் கல்லுகல்லு தானமாகிய தின் சமான்களை அனுப்பி கொண்டிருந்தார். அன்றியும், விதவிதமான வினையுபசரிக்க உடுபிடவைகளும் சாதாயங்களும் அந்தாற்பது நாள்வரையில் தாராளமாய் அனுப்பிக் கொண்டிருந்தார், அவைகளினால் அத்திருடன் மிகவும் உல்லாசமாய் தன்னுடைய மரணத்தை ஒருபொருட்டாயெண்ணாமல் சுகமனுபவித்துக்கொண்டிருந்தான், காலபரிதோலுவதாகாள் குட்டிருஸ்மெஹரானவர் அத்திருடனை நோக்கி சேர்த்திருக்கும் பரிபாஷையை எனக்கு கற்றுக்கொடுவென்று கேட்டார். அப்பொழுது திருடன் தொந்தியை

இடதுகையால் தடவிக்கொண்டே வலதுகையை விரித்தப்படியே உதட்டைப் பிதுக்கி காஜாவே யான் ஒன்று மறியாத முழுமூடன் எனக்கு மிருகங்களின் பாஷையாவது, அல்லது வேறெந்த பாஷையாவது ஒன்றுமே தெரியாது. பாதுஷாவினுடைய சமூகத்து வழிபனம் நன்றாயிருக்குமென்று வயதிகனைய புசிக்க வேண்டி இத்தக்கோலமெடுத்தேன், என்று சொல்லி ஹீ! ஹா! ஹா! வென்று சிரித்து சொல்லுகின்றான் காஜாவே! சர்வபரிபூரண தயாபரனுகிய ஹஜ்ரத் ஆலா எப்போற்பட்டவனெனில் எல்லோபோலொத்த முழுமூடனுகிய கழுதைக்குகிகரான பேய்கூட்டங்களுக்கு விதவிதமாகிய பதினெட்டுவகை அழகுகளை பதார்த்தங்களோடு பாதுஷாக்கள் புசிக்கும்வாறுவட்டி வளர்ப்பவன் அவனுடைய குதரத்தென்னும் காகுலால் என்னை அன்று கொலையில்நின்றும் மீட்டான் என்னுடைய தர்மமாகிய வாக்கியத்தினுல் கல்லை உருசிகரம் பொருந்திய உணவு தின்னும்படிப்பு முச்சியவகளினுல் என்னுடைய ஆசையை பூர்த்திசெய்து கொண்டேன். இனி தயாரா யிருக்கின்றேன், என்னை நீங்கள் கழுத்தை வெட்ட வேணுமானுலும் அல்லது கழுவிலேற்ற வேணுமானுலும் அல்லது எவ்விதத்திலுல் என் உயிரை வாங்கவேண்டுமோ வாங்கிக்கொள்ளுங்க ளென்றுரைத்தான். இவ்வார்த்தையைக் கேள்வியுற்ற காஜாவானவர் கலகலவெனச் சிரித்து அத்திருடனை நோக்கி, ஏ! மனிதனே இனி நீ முன்செய்த தொடுஞ்செயலாகிய கொலை களவு முதலாகிய தூர்ச்செய்ஞ்சகளை செய்யக் கூடாதென்று, அரிதிலுனம் வாங்கிக்கொண்டு அவனை விடுதலைச் செய்தார்.

இம்மாதிரித மிருக்க ஒருநாள் பாதுஷா வானவன் வேட்டையாட காணகத்தின் கண் சென்று வேட்டையாடுகையில் வழிதப்பி எங்கேயோ முகமறியாக்காட்டினிடமாய் சென்றவிட்டான், அப்பொழுது நௌஷேரவானுடன் கூட புஜ்ருச்மேஹரும், பத்தத்தும் தவிர மற்றெருவரும் இருக்கவில்லை அப்பொழுது நௌஷேரவான் கூட்டினிடமாய் நோக்குந் தருணம் ஓர் மரத்தின்கிளையில் இரண்டு தேவாங்குகள் உட்கார்ந்து ஏதோ தங்கள் பாஷையினுல் பேசிக்கொண்டிருக்கண்ட நௌஷேரவான் புஜ்ருச்மேஹரை யழைத்து, காஜாவே அதோ அம்மரத்தின் கிளையில் குந்திவசனிக்கும் தேவாங்குகளின் பார்த்தீர்களா அவை என்ன வசனிக்கின்றது, சொல்லுக என்றுரைத்தான் காஜாவானவர் தேவாங்குகள்மொழியும் வசனம்

கதை செவியுற்ற பாதுஷாவுக்கு உரைக்கின்றார், பாதுஷாவே இவ்விரண்டு தேவாங்குகளில் ஒன்று பெண்ணையுடையதேவாங்கும் மற்றொன்று ஆணையுடைய தேவாங்கும், இவைகளில் ஆணையுடையதேவாங்கானது பெண்ணையுடைய தேவாங்கை கோக்கி தன் மகனுக்கு பெண் கேட்கின்றது, அதற்கு அப்பெண்ணை யுடைய தேவாங்கானது பெண் கொடுக்க சம்மதித்தது, அப்பொழுது மாப்பிள்ளையை யுடைய தேவாங்கானது கேட்கின்றது என் மகனுக்கு உன்னுடைய பெண்ணை விவாகஞ்செய்து கொள்வேனுகில் நீ! உன் பெண்ணுக்கு என்ன சீதனம் கொடுப்பாயென்று கேட்டது, அப்பொழுது பெண்வீட்டு தேவாங்கானது, மாப்பிள்ளை வீட்டுத் தேவாங்கை நோக்கி நீரே கேளும் உமக்கென்ன சீதனம் கொடுக்கவேணுமென்று சொன்னது அப்பொழுது மாப்பிள்ளை வீட்டுத் தேவாங்கானது உன் பெண்ணை யென் மகனுக்குக் கட்டிக்கொள்ள வேண்டுமானுல் எழுபாழ்கிணறு சீதனம் கொடுக்க வேணுமென்றது, அவ்வசனத்தை கேட்ட பெண்வீட்டு தேவாங்கானது ஆ! ஹா! நதென்ன பெரிபகாரியமா? தம்முடைய பாதுஷா நௌஷேரவானுடைய ஏறயாத்தென்னும் உயிர்மாத்திரம் இன்னும் அதேகாலம் நீடித்திருக்க, இவ்விதமே கொடுக்கல் செலுத்தி வருவதாகில் நீர் கேட்ட எழுபாழ் பெரிபகாரியமல்ல அவரானும் என்னுடைய தாறு தேகத்தையும்பாழாக்கி சீதனமாகிகொடுத்துவிடுவேனென்று சொல்லுகின்றதென் றுரைத்தார், இவ்வார்த்தைகளைக் கேள்வியுற்ற நௌஷேரவானவன் ஹாய்! ஹாய்!! அப்ருவ்ஸைசேத்தமே! அதேதமே என்னுடைய கொடுங்கோலரசானது உலகத்தின் மனிதர்களுக்கெல்லாம் பிரசித்தியாகி அவர்கள் இதழ்போதாமல் சட்டினிடத்தில் வசிக்கும் மிருகங்களும் இதழும்படியாய் விட்டதே யென்று கண்ணீர் சொரிந்து பெருமூச்சுவிட்டழுது, ஆண்டவனே! என்னுடைய அக்கிரமமானது இவ்வுலகமெல்லாம் பழிக்கும்படி யாகிவிட்டதே யென்று வெட்கத்தினில் தலைகுனிந்து அழுதுகின்றான். பின்பு ஒருவாறு தன்னுடைய மனதைத் தேற்றி திரும்பி தன்னுடைய அரண்மனையில்வந்தேர்ந்து உடனே தர்பாரின் முன்வாசலில் இருப்புச்சங்கிலியில் ஓர் மணியைக்கட்டி தொங்கவிட்டு தன்னுடைய ஊர்முழுவதுக்கும் பிறசாற்றும்படி உத்தரவளித்தான் அஃதெவ்வாறெனில் இன்று முதல் நியாயம் சொல்லிக்கொள்ள எழைகள்முதல் தனவந்தர்கள் யாவரும் வேறெயூருடைய உத்தரவும் கேட்க தேவையில்லை இச்

சபாமண்டபத்தின் முன்னிலையில் கட்டியிருக்கும் கண்டாமணியை ஆட்டி அடிக்கவேண்டும், அப்பொழுது உடனே அவர்களை கூப்பிட்டு நியாயம் விசாரணைசெய்யப்படும். இனி தர்பாரிலுள்ளச் சோபதார், ஹர்க்கார், முதலாகிய உத்தியோகஸ்தர்களை எதிர்பார்க்க வேண்டிய தில்லையென்று பிரகடனப்படுத்தபின், அக்காள்தொடுத்த கௌஷேரவானுடைய அதாலத்தென்னும் ராஜரீகம் அதிதீரமாய் நடந்துகொண்டு வந்தது, அவனுடைய நீதிபரனது அக்காள்தொடுத்த நிறைநீதிசெய்துவந்தபடியால் இன்றையவரையில் கௌஷேரவானுடைய நிறைநீதியைப்போலென்றும் உதாரணம் உலகத்தில் வழங்கலாயிற்று. சிறுவர்முதல் முதியோர்யாவரும் கௌஷேரவானுடைய நீதி பெருநீதியென்று உலகமுழுதும் சொல்லித் துதிக்கும்படியாய் ஆய்விட்டது. ஆதையால் இங்ஙனம் கௌஷேரவானுடைய நிறைநீதியை விவரித்து அதிகமாய்ச் சொல்வது தேவையில்லை.

இவ்விதம் நடந்துவரும் நாளையில் சில வருஷங்களுக்குப்பின் கௌஷேரவானுக்கு ஒரு பெண் குழந்தையும் பின்பு இரண்டு ஆண் குழந்தையும் பிறந்தார்கள். அக்குழந்தைகள் மூவரும் அதிமேன்மையாய் வளர்க்கப்பட்டு வருவதாயினர். அம்மூவரில் பெண்குழந்தைக்கு மேஹர் நிகாரென்றும், ஆண்குழந்தைகளில் மூத்தவனுக்கு ஹர்மஸ்ஸென்றும் இளையவனுக்கு தப்ரம் ஸ்லேன்றும் பெயரிட்டு வளர்த்துவந்தார்கள். அவ்விதமாய் வளர்த்துவரும் காட்சிகளில் பாதுஷாவானவன் தன்புத்திரி புத்திரர்கட்கு இல்மென்னும் கல்விகற்றுவைப்பதில் மிகவும் பெருந்தன்மையுடையவனாய் அநேகவித கல்விகற்று கொடுப்பதற்கு யோசித்திருந்தான். அப்பொழுது காஜாவானவர் பாதுஷாவினுடைய அவ்விரு ஆண்குழந்தைகளில் மூத்தவனுக்கு ஷாயாதஷ்ஷெர்மும், இளையவனுக்கு ரியாதிஷ் யென்னும் நாமகரணமிட்டார். அவ்விரு குழந்தைகளையும் காஜாவானவர் தம்முடைய சவாரணைக்குள் வைத்து நடத்திவந்தார். அந்நாட்களில் பக்தத்தென்னும் ஹராம்ஜாதனுக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்திருந்தது, அவன் அக்குழந்தைக்கு பஃரியாரசென்று நாமகரணம் சூட்டினான். "ரூஹி பெழுதுகிறார்," இவ்விதம் நடந்துவரும் காளையில் ஒருநாள் பாதுஷா கௌஷேரவான் ஓர் கனவு கண்டான் அதேதென்ன வெனில், மன்னர்க்கு புரத்திலிருந்து ஓர்கூத்த காகமானது புறப்பட்டுவந்து தன்னுடைய சிரசிலணிந்திருக்கும் கிரீடத்தை தூக்கிகொண்டுபோய்

விட்டது, பின்பு மஃரிபு புரத்திலிருந்து ஓர் இராஜாளியானது புறப்பட்டுவந்து அந்த கூத்த காகத்தை அடித்துக்கொன்றுவிட்டுத் தன்னுடைய கிரீடத்தையும்படியும் தன் சிரசில் வைத்துவிட்டது. இவ்விதம் கண்டு அரண்மீ விழித்தான், பொழுது விடிந்தவுடன் காஜா புஜுர்ச்மேஹரை யழைத்து தான் இரவிற்கண்ட கனவை சொல்லி இதற்குத் தாபீரென்ன வென்று கேட்டான், அப்பொழுது காஜா வானவர் சொல்லுகிறார் பாதுஷாவே மஷ்ரிக்புரத்திலுள்ளதொன்னும் பட்டணம் ஒன்றுண்டு அப்பட்டணத்தில் இபுனே அல்கமேஸைபி யென்னும் அரசனுக்கு ஹஸ்ஸாம்யென்னும் ஓர் மகன் பிறப்பான், அவனுக்கும் தங்களுக்கும்பெருத்த ஜங்கென்னும் ரணகளம்உண்டாகும் அதில் தங்களுடைய தத்தைதங்களைவிட்டுப் பிடுங்கி எடுத்துக்கொள்ளுவான். இவ்வுரை யவன்பிடித்துக் கொண்டபின் மஃரிபுபுரத்தில் மக்கமாகரமென்று சொல்லப்படும், ஓர் ஊரில் ஹஸ்ஸார் வென்னும் நாமகரணம் பூண்ட ஓர் வாலிபன்வருவார், அவர், அந்த ஹுஜ்ஜாதே ஹஸ்ஷாம் பென்பவனுடன் எதிர்த்து போர்புரிந்து, ஜெயித்து தங்களுடைய தேசத்தையும் கிரீடத்தையும் தத்தையும் தங்களுக்கு மறுபடியும் கொண்டுவந்து கொடுப்பார், தங்களுக்கு செய்த அக்ரமத்திற்கு பதில் அவனைகொல்லுவாரென்று அக்கனவிற்கு தாபீருரைத்தார், பிதுக்கரமும் சமீதாஷகரமுமான வசனங்களை செவிமீர்ந்திய பாதுஷாவானவன் தரீஜாவுக்கு அநேக அநேக ஆடம்பரங்களை பரிசளித்துசொல்லுகின்றான், காஜாவே தாங்கள்புறப்பட்டு ஊர்ந்த மக்கமாகரத்திற்குசென்று அக்குழந்தைபிறந்தவுடன் அது என்னுடைய குத்துபுத்திரனென்று அதற்கு யுகமான வேலை கல்பாவும்செய்து உலகப்பிரசித்தி செய்யும் பென்று உத்திரவளித்தான் உடனே புஜுர்ச்மேஹரானவர் மக்கமாகரம் செல்ல பிரயாணமாகி நூற்றுக்கணக்கான ஒட்டகங்களில் திரவியங்களையும் மற்றும் வேண்டுசாமக்கிரியைகளையும், சேகரம்செய்துகொண்டு புறப்பட்டு மக்கமாகரம்போய்ச் சேர்ந்தார். ஊரையடுத்த தானயமிட்டிறங்கி அம்மக்கமாகரத்தின் தலைமைக்காரராகிய அப்துல் முத்தல்லிபு வென்பவருக்கு ஓர் கடிதம் பெழுதினார் அதின் வாசகமாவது சிறப்பு தங்கிய மக்கமாகரத்தின் தலைமைபூண்ட அப்துல்முத்தலிபு அவர்களுக்கு மதாயின் பட்டணத்தின் ஹப்தக்லீம் கிஸ்வர் பாதுஷா கௌஷேரவானுடைய முதன் மந்திரியாகிய காக்ஸார் யென்னும் பாவுறைத்த அடியேன் புஜுர்ச்மேஹர் மிகவும் வணக்கமாய் பெழுதிருக

பம் மிஸ்கின் மக்கமா நகரத்தின் ஜியாரத்திற்காக வந்திருக்கின் றேன் தங்களையும் கண்டுகொள்ளவேணுமெனும் அதிக ஆவலுற்றவ னுப் இருக்கின்றேன். அதற்காக தங்களைக்கண்டும்கொள்ளும் விஷ யத்தில் இம்மிஸ்கீனுக்கு தாங்கள் பூரண உதவிகொடுத்து அனுப் த்துக்கொள்வீர்களென்று நினைக்கின்றேன். இந்த முஸாபரானவினை வரவழைத்து ஆதரிக்கவேணுமென்று கேட்டுக் கொள்கிறேனென்று எழுதி முடித்து ஓர்மனிதன்கையில் கொடுத்து, அப்துல்முத்தலிபு வசம் கொடுக்கும்படி அனுப்பிவைத்தார். அவ்விதமே அந்தக்காரன் கிருபத்தை யெடுத்தேகி மக்கமாநகரிற்சென்று அப்துல்முத்தலிபு வசம்கொடுத்தான். அந்கிருபத்தை அவர்வாங்கி முத்திரையைநீக்கி உடைத்து வாசித்து அதிக சந்தோஷமடைந்து, அம்மக்கமாநகரத் தின்கண் தலைமைபூண்டிருக்கும் முதன்மைக்காரர்களாகிய சிலரைக் கூட அழைத்துகொண்டு காஜா புஜ்ருச்மெஹருன்டிய சந்திப்புக் காக வேண்டி அவர்களிருக்குமிடஞ்சென்று காஜாவை அதிகமரியா தையுடனே சிறப்பாய் மக்கமாநகரத்திற்குள் அழைத்துவந்தார்கள். அவர்களுக்காக மிகவும் நல்ல மாளிகைகளை காலிசெய்து கொடுத் தார்கள். அவைகளில் காஜாவும் அவர் சிப்பந்திகளும் தங்கியிருந் தார்கள். பின்பு புஜ்ருச்மெஹரானீவர் அப்துல்முத்தலிபுடன் சென்று கஃபாத்திலாவை ஜியாரத்துச் செய்தார்கள். பின்பு, அம்மக்கமா நகரத்திலுள்ள பெருந்தகைமபூண்ட தலைமைக்காரர்களை ஒவ்வொரு வரையும் தனித்தனியேகண்டு மனது மிகவும் சந்தோஷமுடையீர் களாயிருந்தார்கள். அத் தலைமைக்காரர்களில் ஒவ்வொருவருக்கும் அநேக அநேக ரூபாக்களும் ஆஸ்ரபிகளும் இனாம்கொடுத்துசொ ல்லுகிறார். அயெமக்கமாநகரத்தின்வாசிகளாகிய தலைமைக்காரர்களே! நமது சரான்தேசத்தை ஆளும் கௌஷோவான் பாதுஷாவானவர். தங்கள்பாவனியுடன் தன்னுடையமுழுமனப்பிரியதிடன் அதிகமாய் நேசிப்பதாயும் தாங்கள்பாவரும் அவருக்காக ஒவ்வொருநாளும்துன் டவனிடத்தில் துஆகேட்பிக்கவென்று நினைக்கின்றேனெனவும், சொ ல்லச்சொன்னார். இம்மதல்லாமல் இம்மக்கமாநகரத்தின் ஒவ்வொருற் காரிபங்களுக்குமகல்லாம்பாதுஷா உதவிபுரிவதாகவும் சொல்லச் சொ ன்னதோடு இன்றைய தினத்தில் தங்கள் ஊர் முழுவதிலும் பறைசா ற்றவேண்டும், அஃதெவ்விதமெனில் இன்றையதினத்திலிருந்து இந் நகரத்தில் பிரக்கும் ஆண் பெண் குழந்தைகளெல்லாம் பாதுஷா னுடைய உத்தியோகஸ்தர்களாக இருக்குமென்றும், அக்குழந்

தைகள் பிறந்தவுடன் அச்சிசுவின் வாலிஸ்தார்கள் நீம்மிடத்தில் வந்து அச்சிசுவை காண்பித்தால் அக்குழந்தைகளின் ஜீவனத்திற் காக நமமால் கொடுக்கப்படும் திரவியங்களை பெற்றுச்சென்று அதி ஜாக்கிரதையாய் வளர்க்கவேண்டும், அக்குழந்தைக்கு நமே நாமத ரணபிட்டு மாதாமாதம் அச்சிசுவுக்காக இவ்வளவு திரவியம் கொடுப் புதாய் திட்டப்படுத்துவோம் மென்றுசொல்லி ஊர்முழுவதும் பறை சாற்றச் செய்துவிட்டு புஜுர்ச்மெஹருடன் ஏராளமான பௌஜுதள் வந்திருந்தபடியால் ஊருக்குள் இடம்போறாமல் ஜாவரும் ஊரை விட்டு வெளியிற்போய் கூடாரமடித்து தங்கியிருந்தார்கள். ஒவ்வொ ருவரும் அப்துல்முத்தலிபு காஜாவைபோய்ச் சந்தித்து அதிகமரியா தையுடன் அநேகநேரம் வசனித்துக்கொண்டு இருந்துவிட்டு தங்கள் மாளிகைகளுக்குசேருவார். காஜாவும் சில வேளைகளில் பட்டணத்திற் குட்சென்று அப்துல் முதலியை சந்தித்து வருவார். இவ்விதமிருக் குநாட்களில் இருபது தினங்களுக்குப்பின் ஓர்நாள் காஜா புஜுர்ச் மெஹரானவர் அப்துல் முத்தலிபு அவர்களுடைய மாளிகைக்கு சூன்றப்படசென்றார். காஜாவைக்கண்டு அப்துல் முத்தலிபும்மிகமரி யாதையுடன், அழைத்து ஆசனத்தமர்த்தி காஜாவே இன்று மிஸ்கி னுடைய மாளிகையில் அலாகுனிய ஆசாவுடைய கிருபையினால் ஆண்குழந்தை பிறந்தென்று சொன்னார் உடனே காஜா புஜுர்மே ஹரானவர் அக்குழந்தையை கொண்டுவரச்செய்து இருகரத்தேந்தி மடியில் அமரச்செய்து பஞ்சலக்ஷணங்கள் எனமந்த குரத்தென்னும் அழகையெந்த முகத்தைப்பார்த்து தமதுடைய ஜோஷியக்கட்டளை புருட்டி கணக்கிட்டுபார்க்க பாதுஷாகளிற்சலடபாலன் இவன்சா வென்னிகூடித்தி அதிசந்தோஷ மடைந்தவராய் அப்துல் முத்தலிபுசமூகத்திற்சொல்லுகிறார் காஜா அப்துல்முத்தலிபே இச் சிசுவானது உலகமெல்லாம் ஓர் குடையின்கீழாகவும் ஏகச் சக்கர வர்த்தியையும் அனியாயமுடைய பாதுஷாக்களிலெல்லாம் தனக்கு நிகரில்லையென்று புகழப்படத்தக்க, பேர், பரி, ராஜாக்கள், பாதுஷாக்கள் யாவரையும்நடுங்கி, மடிந்து, அட்க்கி அடிமையாகி யாவரும் தனக்கு திறைகட்டச் செய்யும் ஹரா வல்லமைசாலியாக விருக்கும், வேறு மெல்லாம் இல்லாமலும் ஜண்டா பறக்கவும், குபேரனும் செய்யர் அழியவும் செய்யும் தீர்க் காயுசுக்கான் அதிகமாகவும் தரியமும் சரஸ்வதியின் கடாக்ஷ மடைந்து, குறையும் செய்து விவசாரன் செய்யும் புலவருக்

கிறைந்த பரிசனனின் இளம்பிறையையொத்த நெற்றியில் முத்தியிட்டு ஹம்ஜா வென்னும் நாமகரணம் சூட்டினர். அப்துல் முத்தலிபை நோக்கி, பாரக்கல்லாஹு! பர்க்கல்லாஹு!! பென்று மங்களவாக்கியங் கூறினர், அப்துல் முத்தலிபும் புஜருச்மேஹறருக்கும் அதுபோல் மங்களவார்த்தை கூறினர் பின்பு கூடியிருந்த ஜனங்களையாவரும் ஆமீன்கூற காஜா புஜ்ருச்மேஹரானவர் சுபத்தல்லாவை நோக்கி இருகைபையும் வானத்தருவில் உயர்த்தி ஹம்ஜாவுடைய சலாமத்திற்காக பதேஹா துஆ செய்து அல்லா சுப்ஹானஹுவத்தாலாவினுடைய சுக்கூரை அதா செய்தார்கள் உடனே அப்துல் முத்தலிபு அவர்களிடத்தில் புஜ்ருச்மேஹரானவர் அநேகம் பெட்டிகள் நிறைய தங்க அஷ்ரபிகள் நிறைத்து ஹம்ஜாவினுடைய ஆகரிப்புக்காக வைத்துக் கொள்ளுங்களென்று கொடுத்தார்கள். இன்னும் அநேக விலையுயர்ந்த நவரத்தினங்களும் அநேக தற்சரிகை இழைத்த வஸ்திரங்களை மடிமடியாக கொடுத்தார்கள் இவைகளையெல்லாம் மனச் சந்தோஷத்துடனே பெற்றுக்கொண்ட அப்துல் முத்தலிபானவர் அம்மக்கமாநகரத்தின் வழக்கம்போல் ஷர்பத்து யென்னும் பானக்கம்செய்து யாவருக்கும்குடிக்கக்கொடுக்க காடியபொழுது,புஜ்ருச்மேஹரானவர் அதைத்தடித்து நிவண்டியதில்லையென்று நிறுத்திவிட்டார். பின்பு, அப்துல் முத்தலிபென்பவர் கொஞ்சமாகினும் செய்து வழக்கத்தை நிறுத்தாமல் தங்கள் இனபந்து ஜனங்களுக்குமாத்திரமாகினும் கொடுக்கலா மென்று யோசித்தபொழுது புஜ்ருச்மேஹரானவர் அப்துல் முத்தலிபை நோக்கி காஜாவே இன்னும் கூறுகோரம் பொறுமையுடனிருங்கள், இன்னம் இரண்டுபிள்ளைகள் வருகிறார்கள், அவர்கள் இருவரும் ஹம்ஜாலினுடைய உயிர்த்துணைவர்களாயிருக்குமென்றுரைத்துவாய்மூடுமுன் காஜாஅப்துல்முத்தலிபுடைய குலாமாகிபபஹீரென்பவன் அப்பொழுதுதானபிறந்துவழக்காயாதன்னுடைய புதல்வனையெடுத்துவந்து, நாயகமே காதிமாகியஅடிமைகளுக்குலாமுக்கும், அல்லா சுபஹானஹுவத்தஆலாவினுடைய உதவியைக்கொண்டு ஓர் ஆண்குழந்தை பிறந்ததென்றுரைத்தான் அதையுணர்ந்த புஜ்ருச்மேஹர் அக்குழந்தைக்கு மத்பூல் வீபாதாரென்று பெயர்வைத்து பஹீரூடைய கரத்தில் ஓர்பைநிறைய தங்க அஷ்ரபிகளை நிறைத்துக் கொடுத்து இதைச் செலவு செய்து, இக் குழந்தையை நன்றுப்காப்பாற்று மென்றுரைத்து, இன்னும் சொல்லுகிறார். இக் குழந்தை ஆகுமது, அம்பெய்வதில் மிகவும் வல்லவனாகும், அவ்விதத்

தையில் குறிப்பு பார்ப்பதிலும் எய்வதிலும் இக்குழந்தைக்கு நிகர் இவ்வுலகத்தில் ஒருவரு மிலரே யென்று பெயரெடுக்குமென்றுரைத்தார். இவைகளெல்லாம் செவிகளெடுத்துக் கேட்டிருந்த பஹீரென்பவன் சந்தோஷமுற்று தன்னுடைய புதல்வனை யெடுத்துக் கொண்டு வீட்டுக்குபோய்க் கொண்டிருக்கும்வழியில் உம்முஜும்பி யென்னும் பெயரையுடைய ஒட்டகம் பேய்ப்பய மொருவர் கண்டு ஒய் பஹீரே எக்கேபோய் வருகின்றீர் உனமூட்டை பலமாயிருக்கின்றதே யென்னவிசேஷமென்று கேட்டார். இவ்வார்த்தையை செவியுற்ற பஹீரென்பவன் கடந்த சரித்திரங்களை யெல்லாம் விபரமாயுரைத்தான், அவ்வார்த்தையை கேட்டவுடனே உம்முஜும்பி ஓடோடியும்சென்று தன்னுடைய மனைவியை நோக்கி யென்னடி இனமும் உன் வயற்றில் குழந்தை இறப்பதாய் சொல்லிக்கொண்டு வருகிறபோ தவிற பெற்ற பாடில்லையே இனி எப்போது தான் பெறப்போகின்றாய் சீக்கிரம், ஆண்குழந்தை பெற்றுலாக்கு இல்லாதவரையில் உன்னுடைய வயற்றை கலக்கிவிடுவேனென்றுரைத்தார். இவ்விதம் உரைத்த கணவனை நோக்கி அம்மங்கையானவள் காயமே தர்க்கள் சற்று புத்தியைவிளக்கி யோசித்துப் பாருங்கள் யெனக்கு இப்பொழுது கடப்பது ஏழாவது மாகமாகையால் ஒன்பது மாதங்களும் நிறைத்தபின் அல்லவா குழந்தை பிறக்கும், இதற்குள் அவசரப்பட்டால் எப்படி முடியும் போகனேயில்லாமல் கூத்தாடுகின்றீர்களே பெண்களைச்சேன் அலைக்கழிக்கட்டாம் யாஜும்பி அடி! பெண்ணே! என் சொல்லுக்கேள் ஆகாது யாதெனில் நீ மூச்சை அடக்கி முக்கு குழந்தைபிறக்கும் இன்றைதினத்தில் நீ பெறுவாயாகில் யெனக்கு வேண்டிய அஷ்ரபிகள் அடங்கியபைகள் கிடைக்கும், அப்படி இல்லாமல் புஜ்ருச்மேஹர் போவுபின் நீ பெற்று எனக்கா வொன்றுமில்லை. ஆதலால் சற்றுதபவுசெய்து மூச்சடக்கி காலுமுக்கு முக்கு பின்னே பிறந்த போகுபென்றார் இவ்வார்த்தைப புணர்ந்தமாதிகோபமுற்று கலகித்து உடுக்கென்ன அறிவுகெட்டுப் போய்விட்டதோ பெறுமற்றதில் பின்னே பெறுவாளே வெறுங்கலத்தில் பெறுவானேயென்றுரைத்தாள் இவ்வார்த்தையை காதில்கேட்ட உம்முஜும்பி கடுங்கோபமுற்று காலியிழுத்த மூன்றியுடையவயற்றில் ஓருதைகொடுத்தார். அப்படியுதைத்தமாத்திரத்தில் அம்மாதுகர்ப்பவேதனை யுண்டாகி துடிதுடித்து கோவென்பதைபோல் இரேஷிழுத்துபுரள ஆரம்பித்து சிசுவியற்றை விட்டிற் வெளிப்பட்டது

தாயுடையவயிர் நீங்கிப் பிரேதமானஞ். அப்பொழுது அவர் இறந்த மனைவியை பொருபொருட்ட பெண்ணுமல் குழந்தையை தன்னுடைய சட்டையில் சுற்றி எடுத்துக்கொண்டு ஓட்டமாயோடி. புஜ்ருச் மேஹருடைய சமுகத்தில் நின்று மரியாதையுடன் சொல்கின்றார். யா! ஹஜ்ரத்! இந்த மிஸ்கீனுக்கு நம் ஆண்குழந்தைபிறந்தது. தூங்கிக் கொண்டிருந்த என்னுடைய நடுபாகமது இப்பொழுதுதான் வண்டி சருட்டி எழுந்துகொண்டது, அதனில்கண்பிக்கக்கொண்டுவந்தேன் இக்குழந்தையுடைய பெயரையு தப்தரில் பதிவுசெய்துக்கொள்ள கொண்டுவந்தேன். என்றுரைத்தார். இவைகளை செவியுற்ற புஜ்ருச் மேஹர் குழந்தையைப்பார்த்து திரித்து காஜா அப்துல் முத்தலிபை நோக்கி சொல்கின்றார். இந்தக் குழந்தையானது, உலகத்திலுள்ள ஐயார் என்னும் தந்திரசாலிகளுக்கெல்லாம் ராஜாவாகி இருக்கும் பெரும் சாலாக்காயும், மிகவும் கெட்டிக்காரத் தனமுள்ளதாயும் ஆகும். பெரிய பெரிய பாதுஷாக்களும் சக்கிரவர்த்திகளும் மதுடமுடி தரித்த மன்னவர்களும் உலகத்தில் தனக்குமிஞ்சிய பலாத்காரசாலிகளில்லை இன்று இறுமாப்புற்றிருக்கும் பயில்வான்களும் குஸ்தாமுக் கொப்பாகிய வீரப்படைத்த பலமுடையவர்களும் இந்தப் பையனுடைய பெயரைக்கேட்டவுடனே நடுங்குவார்கள், இன்னும் இக்குழந்தையுடைய செய்திபை கேட்போர் யாவரும் பயத்து நடுங்கி சிறுநீருஞ்செய்து கொள்வார்கள். எத்தனையோ ஆயிரக்கணக்கான கோட்டைகளை தான் ஒருவராய் பத்தாவென்னும் ஜெயமடைந்து பிடிப்பார் சத்தசாகாங்களையொத்த பெனஜாகளாயினும் தான் ஒண்டியாய் அவர்கள் யாவரையும் கிலுகிலுப்பையைப்போல் ஆட்டி அசைத்து ஓட்டிவிடுவார் இலவசமாயகப்படும் பொருள்களிலும் ஆவலிசேர்ப்பதிலும் பேராசை நிறைத்தவர் வானலோகத்தின்கீழ் இவருக்கு நிகரானவ ருலகத்தி லொருவரு மில்லையெனப் பெயரெடுப்பார். இன்னும் கோழைமென்பது அறவே இருக்காது. அச்சாயத்தில் இவருக்கு மிஞ்சினவர்களில்லை. அல்லா சுயுறுமானுவத்தஆலாவுடைய அச்சப்பாடு இருந்தாலும் அவர்செய்யும் வேலைகளில் அவ்வச்சப்பாட்டை கினையார். இன்னம் அமீர் ஹம்ஜாவினுடைய உயிரும் இவருயிரும் ஒன்றுப்போனப்பார். சிநேகிதவாஞ்சையில் நின்ற வப்புக்கு பெண்டகஞ் செய்யார். இத்தக் குழந்தையினுடைய அன்னையும் ஒன்றும் ஒளியாமற் சொல்லி, அக்குழந்தையை, இருகரங்களினுலேந்தி தம்மடிமீதி வைத்துக்கொண்டார். அப்பொழுதி

அச்சிசுவானது ஓயாமல் அலறியழ ஆரம்பித்தது உடனே காஜாபுஜ்ருச்மேஹரானவர் தம்முடைய கைவிரலை குழந்தையின்வாயில் வைத்தார் அக்குழந்தையானது விரலைச் சூப்புவதுபோல், காஜாவும் அறியாதவண்ணமாய் அவர் கரத்திலணிந்திருந்த மோதிரத்தை வாயினுல் கழட்டிக்கொண்டு, அழாமல் கிம்மாயிருந்துவிட்டது, பின்பு புஜ்ருச்மேஹரானவர் விரலி லணிந்திருந்த மோதிரத்தைப்பார்க்க அதில்லாமலிருக்கக்கண்டு தேட ஆரம்பித்தார். தம்முடைய சட்டை ஜேபிலும், இன்னும் மற்ற இடங்களிலும் தேடிப்பார்த்து விட்டு மவுனமாய் ஒன்றுஞ் சொல்லாம லிருந்துவிட்டார் அவ்வேளையில் சபையி லிருந்தவர்கள் யாவருக்கும் ஷர்பத்தென்னும் பானக்கம் வழங்கினர்கள். அதில் புஜ்ருமேஹர் அந்த ஷர்பத்தில் கொஞ்ச மெடுத்து, இரண்டு துளிகள் குழந்தையின் வாயில் விட்டார். அப்பொழுது குழந்தை வாயைத் திறந்து ஷர்பத்தை உட்கொள்ளையில் மோதிரம் கழுவி கீழே விழுந்தது, அந்த புஜ்ருச்மேஹரெடுத்து காஜா அப்துல் முத்தலிபை நோக்கி சொல்லுகிறார். காஜாவே, யான் கொண்ட படியே இது தான் முதல் திருட்டு ஆரம்பம், இஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம் என்று எண்ணிடத்தில் திருடினர் இக்குழந்தைக்கு உம்மு பில்லந்தா என்று காமகாணமிட்டே னென்றாரைத்து இரண்டு பெட்டிகள் நிறைய தங்க அஷ்பிகளை நிறைத்து உம்மாஜாம்மா வைவ்ல் கொடுத்து சொல்லுகிறார், இப்பொழுதிநீயே இத்திரவியத்தைசெலவுசெய்து, இக்குழந்தையை கண்ணுக்காப்பாற்றும், இன்னும் இல்லம் பெண்ணும் கல்வியை கண்ணுக்காப்பியத்து செய்தலையும், மற்றகுழந்தைகளைப்போல்இலேசாய்விடாமல் மிகவும் ஜாக்கிரதையாய் வர்க்கவேண்டும், இப்பொழுது உமக்கிந்த இரண்டு பெட்டி அஷ்பிகளையும் நீ கொடுத்துக்கொண்டுபோய் குழந்தையைக் காப்பாற்றுமென் றுரைத்தார். இவ்வார்த்தையைக்கேள்வியுற்ற உம்மாஜாம்மி சொல்லுகிறார். காஜாவே! இக்குழந்தையின் தாயானவள் பிரசவமானவுடனே மவுத்தாய் போனாளே இக்குழந்தையை யாவி எப்படி காப்பாற்றுவேன், அந்த கஷ்டம் என்னுல் முடியாதேயென் றுரைத்தார். இவ்வார்த்தையைக் கேட்ட புஜ்ருச்மேஹரானவர் காஜா அப்துல் முத்தலிபை நோக்கி சொல்லுகிறார். காஜாவே! ஹம்ஜாவினுடைய மதாவும், அவர் பிறந்தவுடனே தாருல் பக்காவிற்கு போய்விட்டபடியால், இவ்விரண்டு குழந்தைகளையும் தன்னன் வீட்டிலேவைத்து ஆதரப்

பென்பவனுடைய தாயார் ஆதிபா பானுவென்னும் பெண் பிள்ளையை அஜாத்து இபு முஹீம் அல்லிஸ்ஸலாம் அவர்கள் கனவில் இஸ்லாமாச்சி அமீர் ஹம்ஜாவுக்கு பால்கொடுத்து வளர்க்குமிடி அனுப்பியிருக்கிறார். அப்பெண் இதோ கொஞ்ச நேரத்தில் வருவான் அவள் வருமுன் தாங்கள் எதிர்சென்று நம்மாதினை அழைத்துவந்து வலது மார்பின் பாலை ஹம்ஜாவுக்கும் இடதுபக்கத்தின் பாலை மக்பூல் வபா தாருக்கும், உம்மையாருக்கும் கொடுத்து வளர்க்கச் சொல்லுங்களென்றுரைத்தார் உடனே அப்துல் முத்தலிபு பெருந்து சென்று, அம்மாதினைக்கண்டு, அழைத்துவந்து வழக்கப்படியே அப்பெண்பிள்ளைக்கு செய்யவேண்டிய கிரியைகளைச் செய்து ஷர்பத்புகட்டி கைகால் சுத்திசெய்துக் கொண்டு வரச்செய்து இம்மூன்று குழந்தைகளையும் அம்மாதின் கரத்திலீந்து, புஜ்ருச்மேஹ ருரைத்தவாறு பாலூட்டி வளர்ப்பா பெல்மொழிந்தார், இவ்விதம் வளர்த்துகொண்டு வரும் நாளில் ஆறுநாட்கள் ஆயின. அப்பொழுது புஜ்ருச்மேஹரானவர் அப்துல் முத்தலிபை நோக்கி, காஜாவே! நாளை காலையில் அமீர் ஹம்ஜாவினுடைய தொட்டிலை குழந்தையோடு உப்பரிகையின்மீது வைத்து விடுங்கள் அது குழந்தையோடு காணுமற்போகும் அப்படி காணுமற்போய்விட்டால் அதைத்குறித்து கவலையெடுக்கவேண்டாம் அல்லா சுபுஹானஹுவத்தஆலா மிகவும் வலுப்பமானவன் அவன் தன்னுடைய படைப்புகளில் அவன் நாடிய பெயர்களை அஜா இபு என்னும்குதாத்தாய் படைத்திருப்பான், அக்குகரத்தில் இருப்பும், உள்ளவரா யிருப்பார். இந்த ஹம்ஜாவும் அவ்விதமே அஜா-இபாய் படைத்த படைப்புகளின் கவ்முகளை அவன் நாடியபடி அங்குகளை எவ்வெவ்விடங்களில்வைத்து ஆள யென்றுரைத்தாரே அதுபோல் செய்வான் அவர்களின் மண் தின்கள் யாவும் அவரவர் களுக்குத் தக்கபடி நிமித்தாய் அளிப்பான். இத்தேசத்திற்கு சில நாளத்தில் கடல் சூழ்ந்திருக்கின்றது. அதற்கப்பால் இதைப்போல் மிகவும். சிறப்புவாய்ந்த அநேகதேசங்களை நிமித்தாய் அமைத்திருக்கின்றான் அத்தேசங்களில் பனிஜான் யென்னும் ஜின்கள் வாசஞ்செய்கின்றார்கள். அவர்கள் வசிக்கும் வாசஸ்தலத்திற்கு கோஹேகாப்பென்று சொல்லப்படும். அதற்கப்பாலும் அநேக தேசங்களைப் படைத்திருக்கின்றான். அத்தேசங்களிலெல்லாம் ஜின்களும் பரிஜாதிகளும் தேவ்கூட்டங்களும் கோலென்னும் ஒட்டகையைப்போன்ற கால்களும், எருதைப்போன்ற முகங்களும் யானையைப்போன்றகாதுகளும் சில குதிரைபோன்ற முகத்தையுடையதுதளையும், வாசஞ்செய்கின்றார்கள். இக்கோல் ஜாதியையும் தேவுக்கூட்டத்திற் சேர்க்கப்பட்டிருக்கின்றது அத்தேசங்களுக்கு பாதுஷாவாக ஜின்களில் ஷஹபால்பின் ஷாஹேநூம் யென்னும் பெயரையுடைய பாதுஷா ஒருவர் இருக்கின்றார். இவர் ஜின் பரி, தேவ், முதலாகிய ஜாதிகளின் ராஜாக்களுக்கெல்லாம் ராஜாவாகவிருக்கும் அவர் அழகிலும் ரூபத்திலும், சூரியனை நிகர்த்தவர், சாந்தகுணம் நல்ல, தயாளம், கனநடக்கை, முதலாகிய நற்செய்கை யுடையவர், இந்த பாதுஷாவுக்கு அப்துற்றகுமானென்னும் பெயரிடுத்த ஜின் ஒன்று மிகவும், அறிவு, புத்தி சாதுர்யத்திலும், இல்மிலும் விவேகத்திலும், யோசனையிலும், அல்லாசுபுஹானஹுவத்தஆலாவின்மீது இபாதத்தில் இடைவிடாதவருமாய் ஒரு மந்திரியும் உண்டு, அவர் நாளை அமீர்ஹம்ஜாவை கெஞ்சலோடு தூக்கிக்கொண்டு வரும்படி அத்தாட்சித்துகொண்டு போய் தங்கள் பாதுஷாவினிடம் கொடுப்பார். அவ்விடத்தில் தானே அந்த ஜின் பாதுஷாவானவர் அமீர் ஹம்ஜாவை ஏழுநாட்கள் ஜின்களின்பால் கொடுத்து வளர்த்து பார்த்துக்கொண்டிருந்து மறுபடியும் தங்களிடத்திற்குக் கொண்டுவந்து முன்போல் வைத்துவிட்டு போய்விடுவார்கள் அதனால் அமீர் ஹம்ஜாவுக்கு அநேகம்பரப்தாவென்னும் கற்பிதயோசனைகள் உண்டாகும் அவர் அத்தனியரவிற்கு போய்வருகிறபடியால் அந்த தனியகலில் அநேக காரியங்களுக்கு உதவி நேரிடாலே உண்டாயிருக்குமென்று; இவ்வாறெல்லாம் புகன்றொழுந்து காஜா அப்துல் முத்தலிபு இடம் உத்தரவுபெற்று தமது கூடாரிபோய்ச் சேர்ந்தார். இங்ஙனம் நிற்க, இவிடத்தில் காஜா அப்துல் முத்தலிபு, புஜ்ருச்மேஹரருரைத்த விதமாய் மறுநாளுதயத்தில் வஞ்சலோடு குழந்தையை உப்பரிகையின்மீது வைத்துவிட்டு பார்த்துக்கொண்டிருந்தார்.

அமீர் ஹம்ஜாவை கோஹேகாபுக்கு ஜின்கள் யெடுத்து யேகுவதும் பாதுஷாவினிடத்தில் கொடுப்பதையும் பேசுகிற பாபாயிருக்கும்.

விருத்தம்.

சுந்தர ஹம்ஜாதம்மை தூலங்கிடுமே ஜிங்கள் தூக்க
நந்திக்தே யெடுத்து சென்று ஷாஹபால்பின் ஷாஹேநூஃமுன்
வந்து ஹம்ஜாவை விட்டார் வளர்த்தனர் ஜின்பா லூட்டி
இந்தநம் செய்தி யெல்லாம் இயம்புவேன் கவனிப்பீரே.

உலகின்கண் வசித்துவரும் புலவர்களிற் சிறந்து வசந்தகாலத்தின் அதிகீர்த்தியில் குளிர்ந்த தென்றற்காற்றானது மெதுவாய் வீசுவதுபோல பாடுந்தன்மையையுடையவும், ஜாதுவென்னும் மாந்திரீகஞ் செய்வதுபோல வெகு சுறுசுறுப்பாய் யெழுதும் மூக்கினையுடைய கலமென்னும் எழுதுகோலினைகையிற்பிடித்த எழுத்தில் வல்லவர்களானவும் நிஜமான பெருமிபெயர்ப்பை உண்மையாய் எழுதுந்தன்மையானவும் கழுகைப்போல அதிவேகமாய் செல்லும்புடியாகிய சமாச்சாரங்களை சொல்லுகின்றனவர்களானவும் வாயைத்திறந்தால் தேனுமிர்தஞ்சொரிவதுபோல இன்பமானஇஸ்லாவென்னும்சரித்திரங்களை எழுதும் வித்வான்கள் கோஜேகாபின் சில செய்தியை எழுதுகிறார்கள். எவ்விதமெனில் காதுகொடுத்து கேற்ப்பவர்களின் வாயானது படிக்குந்தன்மையிலில் அப்படிப்பிறி சாதாரம்சங்களை தேனைப்போல் உட்கொள்வதற்கு வாயையும் நெஞ்சென்னும் ஹிர்தயத்தையும் ஒன்றுபத்திறந்து உறுதுகேற்க்கும்படியே மிகமதாரமான சரித்திரத்தை சொல்லுகின்றார் அஃது யாதெனில் ஓர்நாள் ஷாஹ்பால்பின் ஷாஹேரொக்கென்னும் ஜின்களின் பாதுஷாவானவர் அஷ்டதிசையும் புகழ அதிவீரபராக்கமத்துடனே இராஜராஜாக்கள் சிரம்வணங்கித் திறைசெலுத்தவும் தான்தன்னுடைய ஹஜரத் சுலைமான அலைஹிஸ்ஸலாமுடைய சிம்மாசனத்தில் தன்னை அமர்ந்திருந்து, அதாஃதென்னும் தீவு செலுத்துங்காலையில், ஓர்நாள் பதினெட்டு ஜின் இராஜாக்கள் எதிரில் திறைகட்டி வணக்கமாய்நிற்கவும், மந்திரிபிரதானிகள் சூழ இருக்கும்வேளையில் ஒற்றர்களிலிருந்து ஒருவன் வந்து பாதுஷாவைநோக்கி, நெடுவணங்கி மரியாதையுடன் சொல்லத்தப்புறவாகிய புருஜ்ஜென்னும் லக்கினத்தில் ஷாஅதத் தென்னும் வேளையானது அஸ்மத்தென்னுப்பத்தினிதனத்தையுடைய ஜொஹரா வென்னும் ராசியான துன்றுச்சேர்ந்து ஓர்வீட்டில் பிரகாசிப்பதுபோல் தங்களுடைய பதவிகையின்கண் அல்லா சுபுதுமானவத்தை ஆலாவினுடைய ருத்திரத்திலுல் சந்தோஷமென்னும் கடல் பொங்கி

யதுபோல் ஷஹஜாதி முஹதரியண்ணும் கஷத்திரத்தின்த போன்ற வதன அலங்கார சொருபபாய் இப்பொழுது தாயின் சர்பத்தை விட்டும் வெளியாகி தாதி பெண்ணின் மடிமீது கோடிசந்திரோதய மானது போல் அரண்மனை முழுதும் பிரகாசம் சொரிக்க பிறந்த தென்றுரைத்தான், இம் மங்கள வாக்கியத்தை தெவி ஜோகணஞ் செய்த பாதுஷா தமது முதன்மந்திரியாகிய காஜா அப்துர் றகுமான் என்பவரை நோக்கி, இப்பொழுது பிறந்திருக்கும் நமது புத்திரியின் இலக்கினத்திற்கு நாதகம் கணிப்பிரென கட்டளையிட்டார். அவ்வே ளையில் ஹஜரத்து சுலைமான் அலைஹிஸ்ஸலாம் முடைய சமூகத்தில் சதா கூடவே இருந்தவரும், அவர்களிடத்தில் தர்பியத் தென்னும் தேர்ச்சியடைந்தவரும் சகலவிதமான கல்விகளிலும் பூரணபடிப்பை யுடைய ஆலிமாயும் விளங்குகின்ற காஜா அப்துர் றகுமானவர் தங்களுடைய ஜோவிய கட்டளையை உருட்டி கிளர்ச்சித்து அக் குழந்தையின் ஜாதகம் கணித்து ஷெகஜதியின் நாமம், ஆஸ்மான்பரி என்றுரைத்துசொல்லுவார், பாதுஷாவே முபாரக்கென்னும்சந்தோ ஷமானது தங்களுக்குண்டாக தாகவும் இப்பெண்ணானது இந்த கோ ஹேகாப் பென்னும் பதினேட்டு தட்டுகளிலுள்ள தேசங்களையும் ஓர் குடையின்கீழ்ளுடும் அரசெவ்விதமெனில், அப்பதினேட்டு தீவு களிலுள்ள பாதுஷாக்களும் இப்பெண்ணின் பெயரைக்கேட்டவுடனே இந்தவண்ணவர்கள் கீழ்நில் மிகவும் நிறை கீதிபோடி அரசுபுரிவான், ஆனால் இன்று தொடுத்த பதினெட்டாவது வயதில் இப்பொழுது தங்கள் ஆளுகையின் கீழ் உட்படிந்து தங்களுக்கு திறைசெலுத்தும் இராஜாக்களெல்லாம் அப்பொழுது தங்களுடன் யெதிர்த்து போர்புரிய யுத்த சன்னத்தர்களாய் வருவார்கள். அப் பொழுது தங்களிடத்தில் அவர்கள் கொண்டிருந்த மரியாதைகளெல் லாம் நீங்கி திஷ்மனென்னும் விரோதிகளாய் எதிர்ப்பார்கள் ஆதலால், தாங்கள் இப்பொழுது வாசஞ்செய்யும் ஷஹ்ரே குவிஸ்தானே இதுவென்னும் இத்தேசம் தவிர மற்றெல்லா தேசங்களையும் பிடி அபகரித்துக் கொள்ளுவார்கள். அந்நாட்களில் ஆதம் ஜாதியிலிருக்கும் ஓர் மனிதன் உக்மா நகரத்தில் பிறந்து இங்குவந்து தங்களுடைய ஷத்மன்களாகிய ஜின் இராஜாக்களையும் மற்றவிறோதிகளையும் யெதிர்த்து வெட்டி அதஞ்செய்து ஜெயித்து தங்களுடைய தேசங்களையும் இன்னும் மற்றுமுள்ள இதர நேசங்களையும் பிடித்து தங்களுக்கு ஒப்புவித்துவிட்டு போவானென்று சொன்னார்.

இவ்வர்த்தையைக் கேள்வியுற்ற பாதுஷாவானவர் இனி இல்லாத மகிழ்ச்சியடைந்தவராய் ஆனந்த சாகரத்தில் முழ்கி சரீரம் பூரிப்படைந்து சொல்லுகிறார் காஜாவே அந்த ஆதம் ஜாத் இப்பொழுது அம்மஞ்சுமா நகரத்தின் கண் பிறந்திருக்கின்றார? அவர் எந்த ராஜ வம்மிசத்தில் பிறந்திருக்கின்றார் பாருமென் றுரைத்தார், உடனே காஜா அப்துர் றகுமானவர் கீட்டையையுருட்டி கணக்கெடுத்துப் பார்த்து சொல்லுகின்றார் பாதுஷாவே அரபு தேசத்தின் கண் உள்ள மக்கமாநகரத்தின் குடிகளுக்கெல்லாம் சர்தாராகிய காஜா அப்துல் முத்தலிபுடைய மனைவியின்கர்ப்பத்திலிருந்து வெளியாகி இன்றுமூறும் நாளாகிறது அக்குழந்தையின் நிருநாமம் ஹம்ஜாவென்னக் குட்டியிருக்கின்றார்கள் இன்றையதினம் அதிசயவின்னஞ்சலாலதை அவர் பிதாவானவர் உப்பரிகையின் மேல் வெளிவாசலில் வைத்திருக்கிறதென்றுரைத்தார். அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற பாதுஷாவானவர் கான்கு பரிஜாதிகளை யழைத்து இந்த வேளமே நீங்கள் கால்வரும் சென்று அக்குழந்தையை வஞ்சலோடு தூக்கிக்கொண்டு வெகுஜாக்கிரதையாய் வாருங்கள் அவ்வாச்சரியமான ஓவிவு பொருந்திய கேத்திரங்களை யுடைய பயில்வானுடைய அச்சிசுவை எண்ணுடைய கண்களினால் கண்டு மகிழவேண்டுமென் றுரைத்து புத்தினியின் பிறந்த நாள் கொண்டாட்டம் செய்ய ஆரம்பித்து தம்முடைய கஜானாவெண்ணும் திரவியக் களஞ்சியங்களை திறந்து சந்தோஷகரமாய்ச் செலவு செய்யும்படி உத்தரவளித்தார், அந்நேரத்தில் அந்நான்கு பரிஜாதிகளும், ஹம்ஜாவை வஞ்சலோடு தூக்கிக்கொண்டுவந்து பாதிஷாவினுடைய சமுகத்தில் வைத்துவிட்டு பாதுஷாவினிடத்தில் இனும் கேட்டு நின்றார்கள். அவ்வேளையில் கூடியிருந்த ஜின்களின் நிரள்கள்யாவரும் ஹம்ஜாவினுடைய அழகு சவுந்தரியத்தைபார்த்து திகைத்து மெய்மறந்து உயிரற்ற மரப்பாவைகளைப்போல் அறிவுங்கெட்டவர்களாய் ஸ்மரணையற்றிருந்தார்கள் பரிஜாதிகளோவெனில் அறிவழிந்து மெய்மறந்து சோர்ந்து சவற்றிலிழுத்து சித்திரப்படங்களைப்போல் அசைவற்று மெய்வெருத்து நின்றார்கள் பாதுஷாவானவர் அமீர் ஹம்ஜாவை தான் கொண்ட சந்தோஷத்தினால் இருகரந்தாங்கி எடுத்து மடிமீதமர்த்தி கொண்டு நெற்றியில் முத்தமிட்டார், சுலைமான் அலைகில்ஸலா முடைய சருமாவெண்ணும் மையை எடுத்து இருவிழிகளிலும் எழுதினார், இன்னும் பரிஜாதிகளிருந்து ஒருத்தியை பால்கொடுக்கவும் இன்னும் சிலபரிஜாதிகளை

ஹம்ஜாவைதூக்கி உலாவித்திரிவும் நியமித்தார் இன்னும் தேவ், பரிஜின், கோல், புனி, வெண்புனி முதலியவைகளின் பாலே எழுகாள்வதரையினும் ஹம்ஜாவுக்கு முடையாது கொடுக்கும்படி உத்தரவளித்தார், அப்பொழுது காஜா அப்துர் ரஹ்மான் சொல்கிறார் பாதுஷாவே இக்குழந்தை நமது அருமை ஷஹ்ஜாதி யாகிய ஆஷ்மான்பரியை விவாகஞ் செய்துக் கொள்ளுவார், தங்களிடத்தில் இன்னாளுக்கும் ஜின்னுக்கும் சம்மந்தம் உண்டாகு மென்றுரைத்தார், இவ்வார்த்தையைக் கேள்வியுற்ற பாதுஷாவானவர் அதிக சந்தோஷத்தையடைந்தார்.

பின்பு, நிலஜின்களை யழைத்து சொல்லுகின்றார் ஓ! ஜின்களே! அதிவிசோத விசித்திரம் பொருந்திய ஊஞ்சலொன்று தயார் செய்யவேண்டும், அஃதெவ்விதமெனில் நான்கு கால்களும் பச்சைமரகதத்தினால் கடைந்தெடுத்ததாகவும் சட்டங்கள்மாணிக்கத்தினாலும் இன்னும் விதவிதமாகிய ரத்தினங்களினால் அலங்கரித்திருக்கவேண்டும், அதனைக் காண்போர் விலகமுடியாமல் மிருக்கவேண்டுமென புகன்றார் உடனே ஜின்கள் பாதிஷாவி னுத்திரவு போல் ஒருகோடிக்குள் கொண்டுவந்து முன்பில் வைத்தார்கள், பாதுஷாவானவர், அவ்வூஞ்சலைக் கண்டு களிகூர்ந்தவராய் அமீர் ஹம்ஜாவை தூக்கி அவ்வூஞ்சலில் விரித்திருக்கும் மக்மல் மெத்தையின்மீது படுக்கவைத்து தங்கச் சரிகையில் நவமணிகளை கோர்த்தி செய்யப்பட்டு மேற்போர்வையும் போர்த்தி விலையேறப்பெற்ற பலவித ஜவாஹிராத் தென்னும் ரத்தினங்களினால் சூலை குலையாக சமைப்பித்து அவ்வூஞ்சலின் பலபாகங்களிலும் இலை, கொடி, பழம், காய், பூ முதலியவைகளைப்போல் தொங்கவிட்டு ஊஞ்சலை அலங்கரித்து விட்டார், இத்தல்லாமலும் விலைமதிக்கவொவ்வாத அகேகவைரம், வைடூரியம், கோமேதகம், புஷ்பராகம், நீலம், மரகதம், மாணிக்கம், முத்து, பவழம்முதலாகிய ரத்தினங்களையும் ஊஞ்சலின் நான்குமூலைகளிலும்பைகளாகட்டிவைத்து முன் அமீர்ஹம்ஜாவை தூக்கிக்கொண்டுவந்த நான்குபரிகளையும் அழைத்துச்சொல்லுகின்றார். ஹே! பரிஜாதிகளே பறந்தார்! பத்திரம், பத்திரம் இவ்வூஞ்சலை வெகு ஜாக்கிரதையுடனே, மெல்லியதூலின் இழைபாவது காற்றினால் அசைந்து ஆடிவிட்டாலும், இவ்வூஞ்சலானது, சற்றும் அசையக்கூடாது, இவ்வூஞ்சலிற் றூயிலும் அமீர்ஹம்ஜாவானவர் சற்றும் கண்விழித்து உசும்பக்கூடாது.

அவ்விதமாய் கொண்டுபோய் முன்பு நீங்களெவ்விடத்தி லிருந்து பெடுத்து வந்தீர்களோ அவ்விடத்திற் கொண்டுபோய் மெதுவாக வைத்தவிட்டு நீங்கள் இவ்விடம்வந்து, என்னிடத்தில் "இக்குமுர்தை யின் க்ஷேமத்தையும், இதனி பெற்றோர்களின் க்ஷேமத்தையும் அவ்வு ரின் நடவடிக்கையையும் இக்குழ்தை இருக்கும்படியான விட்டின் அடையாளமும் இன்னும் அங்கிருக்கப்பட்ட விசேஷங்கள் யாவை யும் ஆதியோடந்தமாய் கண்டுணர்ந்துவந்து என்னிடம் விபரமாய் சொல்ல வேண்டியதென்று கட்டளை யிட்டனுப்பினர். அவ்வார்த் தையைக் கேள்வியுற்ற பரிஜாதிகள் கால்வரும் பாதுஷாவின் உத்தி ரவுபடியே அமீர் ஹம்ஜாவை வஞ்சலோடு தூக்கிக்கொண்டு ஒரு கொட்டிப்பொழுதிலே அதிவேகமாய்ச் சென்று முன்னெடுத்துக்கொ ண்டுவந்த ஸ்தானத்தில் கொண்டுபோய் வைத்தவிட்டு சிறிதுநேரம் வரையினும் அம்மன்கமாநகரம் முழுமையும் சுற்றித்திரிந்து அவ்வு விஷயங்கள் யாவும் நன்றுப் அறிந்துகொண்டு கோஹோகாப்பென் னும் தங்கள் தேசத்திற்குப்போய் தங்கள் பாதுஷாவுக்கு யாவும் விபரமாய்த் தெரிவித்து விட்டார்கள்.

இஃதிவ்வாறிருக்க ஏமத்தில் வல்லவராகிய மூஸாபார்காமே யென்பவர் எழுதுகிறார். "பெரிய பெரிய இகாயத்துகளென்னும் அல் களில் யான் பார்த்த வரையில் எழுதினேன். காஜாபுஜுருச் மெ ஹரானவர் ஏமும் மக்கமா நகரத்தி லிருந்து அமீர் ஹம்ஜாவை ஜின் களின் தேசத்திற் கெடுத்தேகிய ஒரு வாயத்தின் பின் தஞ்முடைய சுயதேசமாகிய மதர்யின் பென்னும் பட்டணம்போக யோசித்து கா ஜா அப்துல் முத்தலிபு பென்பவருக்கு ஆளனுப்பி காஜாவே தமது புத்திர சிகாமணியாகிய அமீர் ஹம்ஜாவை கோஹோகாப்புக்கு எடு த்தேகியவர்கள் பின்னும் கொண்டுவந்து விட்டார்களா? அவர் அழ கில் யூசுபு அலைவின் லைலத்தை யொத்தவராகையால் அச்செல்வ புதல்வன் தங்கள் சமூகம் பின்னும்வந்து சேர்ந்த செய்தியை தெரி விக்க வேண்டுமென கேட்டனுப்பினர். உடனே காஜா அப்துல் முத்தலிபானவர் வேலாயுட்களோ கோகி உப்பரிகையின்மீது சென்று தமது அருமைப்புதல்வனை கொண்டுவந்து வைத்து விட்டார்களா யிருக்களென்று வினவித்தார். அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற வே லாளர்கள் உப்பரிகையின்மீது சென்றுபார்க்கையில் அவ்விடத்தில் நூதனமாய் வந்திருக்கும் வஞ்சலை கண்ணுற்று திடுக்கிட்டு மயங்கி

நின்றார்கள். [வஞ்சலின் பிரகாசமானது பார்க்கபோனவர்களின் விழிகளை திருப்பவிடமல் கயிர்போட்டிழுத்து பிடித்தக்கொண்டது போல் வெகுநேரம் மரம்போலசைவற்று, பார்த்த கண் சிமிட்டா மல் நின்றார்கள். அவ்விதம் அலங்கார சொருபமாயி, வஞ்சலில் அமீர்ஹம்ஜாவை தியிலைக்கண்டு இருக்கக்கண்டு அப்துல் முத்தலி பிடம் வந்தரைத்தார்கள். அவர் உடனே, காஜாபுஜுருச் மெஹரோன் பவருக்கு தெரியப்படுத்துகிறார். காஜாவே! வானலோகமும் இந்த வஞ்சலுக்கு நிகரானதை ஒருபோதும்கண்டிராது அவ்வித சவுந்தரி யம்பொருந்திய வஞ்சலில் நமது அருமைப்புதல்வர் வந்திறங்கிவிட் டார். அவ்வஞ்சலின் ஒளியினால் நமது அரண்மனை முழுதும் ஒரே பிரகாசமாய் ஜொலிக்கின்றது. வஞ்சல் நிறையப்ல இரத்தினங்க ளாலே நிறைத்து அவ்வஞ்சலும் ஜம்ருத், மாகுத், முதலியவைக ளால் விசித்திர விநோதமாய் செய்யப்பட்டு வந்திறங்கி இருக்கிறதெ ன்று சொல்லியனுப்பினர். இச்செய்தியை கேள்வியுற்ற புஜுர்ச்மெஹ ரானவர் உடனே எழுந்து அப்துல்முத்தலிபினுடைய மாளிகைசெ ன்று அமீர்ஹம்ஜாவை தங்களுடைய இருகேத்திரங்களும் குளிரக் கண்டு ஆனந்தித்து, காஜா அப்துல் முத்தலிபை நோக்கி காஜாவே யான் யென்னுடைய ஹஜ்ரத் ஜுல்லே சுபஹானி கலீபத்தூர்ரசூல் னியாகிய பாதுஷாவைவிட்டு அதேகாரியப் போய்விட்டபடியால் என்னுடைய பெண்சாதி பிலீகைளின் செய்தியும் இதுவரையில் யாதொன்றும் தெரியவில்லை, ஆகையால் யான் என்னுடைய சயதே சத்தம்செல்ல அதிக ஆவலுற்றவனு யிருக்கிறபடியால் யான் பிரயாண மாக நீக்ஷயித்துவிட்டேன். ஆகையால் தாங்கள் மிஸ்கீனுக்காக அல் லாகுத்த ஆலாவினிடத்தில் துஆச்செய்யுங்கள். இன்னும் தாங்கள் ஹம்ஜாவையும் உம்ரு மக்பூல் முதலியவர்களின் சவரக்ஷணையை அதிஜாக்கிரதையாய் கவனித்துக் கொள்ளுங்கள். இன்னும் அவர்கு ரூக்கு போதுமான வயது வந்தெய்தியபின் இல்முமெனும் கல்வி யையுகிளாலியன்றவரையில் கற்பித்தானவையுங்கள் என்னுடைய புத்திரன் எப்பொழுது எப்பொழுதுவருகின்றதோ அவைகளுக்கு உடனே பதிலெழுதுங்கள். தங்களுக்கு அவ்விடத்தாலாகுமான முக் கியவிஷயங்களுக்கு எழுதித் தெரியப்படுத்துங்கள். இன்னும் அமீர் ஹம்ஜாவின் ஹப்துல்லீம் கின்வர் பாதுஷா சௌகோரவாதுடைய சுகீகாரப்பிள்ளையென்று உலகமுழுதும் அறிய பிரசித்திசெய்யுங்கள் யென்றனுப்பினார். இவைகளெல்லாம் செவியுற்ற அப்துல் முத்தலி

பானவர் புஜ்ருச்மெஹர் சொன்னவைகளெயெல்லாம் கேட்டு முழும
னத்தோடு சம்மதித்தவராய் நௌஷேரவானுக்கு ஓர் அர்ஜியென்னும்
விண்ணப்பம் யெழுதி காஜா புஜ்ருச்மெஹர் கரங்களிலிருந்து பாதுஷா
வுக்கு தீங்களுடைய கேஷமத்தை சதாகேளிஸ்வரனு யிருக்கிறேனென்
றும் சொல்லும்படி சொன்னர். புஜ்ருச்மெஹரானவர் அக்கடிதத்தை
வாங்கி அப்துல் முத்தலிபிடம் உத்தரவு நிபர்புக்கொண்டு தங்கள்
சுயதேசமாகிய மதாயின் யென்னும்பட்டனத்தைநோக்கி பல்ஜுகள்
புடைசூழ நடந்து செல்லுர்கள சிலநாள் நடந்து காடு, மலை, திடல்
காந்தரம் யாவும் கடந்து மதாயின் யென்னும் பட்டணம்போய் சேர்
ந்து தங்கள் பாதுஷாவினுடைய சமுகத்திற் சென்று காஜா அப்
துல் முத்தலிபினுடைய அர்ஜியை பாதுஷாவுக்கு கொடுத்து அவர்
சொன்னவைகள் யாவையும் மொழிந்து காஜா அப்துல் முத்தலிபி
னுடைய புத்தி சாதுர்யம், நன்நடக்கை, நகை, தயாளம், பரோபகர
ம, பக்தி, சிறந்தவம்மிஷம், பெருந்தன்மை முதலாகிய நன்நடக்கை
கள் யாவையும் ஆதியோடந்தமாய் உரைத்தார். பாதுஷா வானவர்
அக்கடிதத்தை வாசித்து செய்திகளறிந்து அதிக சந்தோஷமுற்று,
காஜா புஜ்ருச்மெஹருக்கு வேண்டிய அநேக வெகுமதியளித்தான். பி
னபு சில தினங்களுக்கப்பால் பாதுஷாநௌஷேரவா னவன் தன்
தந்தை யாகுனென்னும் கைஸர் காஹுஸ் அரசனுடைய சிம்மாசனத
தில் மகதிரி பிரதானியார் புடை சூழ அரசபுரியும் காலையில் ஒரு
நாள் அந்தே தேசங்களில் பெரிய பெரிய சவ்தாகரென்னும் வர்த்
தகர்களும் பல தேசங்களில் வசிக்கும் நௌஷேரவானுடைய ரல்ச்
சகனென்னும் தேச விசாரணைகளை பாதுஷாவுக்கறியப் படுத்தும் ச
மாச்சாரக் காரர்களும், இன்னும் அநேக அமீர்களும் புடைசூழ பல
தேசங்களின் திலிஸாரத்து அம்பாரென்னும் சமாச்சார பத்திரிகை
யை வாசிக்கும் வேளையில் சின தேசத்தின் வர்த்தமான பத்திரிகை
படித்து முறை வகதெரிந்தபடி அதில் எழுதப்பட்டிருந்தது யாதெ
னில் சினதேசத்தின அரசனுடைய பஹ்ராம் கற்தே காக்கானே சீன் யெ
னும் சின தேசத்து அரசனின் புத்திரன் கலப் காக்கானுல் ஆளும்
யென்னும் பெயரை யுடையவன் சிம்மாசனத்திலிர்ந்து இராஜ்யம் கரித்
துக்கொண்டான். கூவத்திலும், வீரத்திலும், தண்டுக்குச் சமானமா
னவர்களும் மேலானவர்களும் உலகத்தில் இல்லையென்ற மமதைகொ
ண்டவனும் குரூரத்தும், வரிமான் யென்னும் உலகப் பிரசித்தி பெற்ற
பயில்வான்களை யெல்லாம் இழுத்துமுத்து சாகும் இழவுக் கொப்

பாய் நினைக்கின்றவனும் காட்டில்வசிக்கும் மதங்கொண்ட யானையை
தம்பிக்கையைப் பிடித்து இழுத்து ஓர் குத்து குத்தினால் அத்த யா
னையானது மீண்டும் யெழும்பாமல் சரிரும் தன்மை யாகிவிடும் வீரம்
பொருந்திய சிம்மக்கூட்டை காட்டு நாய்க்கொப்பாய் நினைக்கும்படியான
வனுமாயும் உலகத்திலுள்ள பயில்வான்களும் பாதுஷாக்களும் இவ
னுடைய பலத்தை அறிந்திருக்கின்றார்கள், சினதேசம், மஹா சின
தேசம், முதலிய ஊர்கள் தனிறவும், இன்னும் அநேக தேசங்களைப்
பிடித்துத் தன் வசப்படுத்திக்கொண்டான். திரவியங்களை மிகுத்துபெ
ருத்த பெருத்த ராஜாக்களை யெல்லாம் ஜெயித்து அவர்களின் சிம்
மாசனங்களை யெல்லாம் பிடுங்கிக் கொண்டான், இன்னும் தங்களூ
க்கு செல்லவேண்டி நான்கு வருஷங்களின் தொகுப்பாவென்னும் பகு
தியை அவன் செலுத்த அறவே மனமில்லாதவனும் மாந்தகொண்
டிருக்கிறான், தன்னுடைய வல்லமையினாலும் ஆளுவத்தினாலும் பிற
ரை மதிக்காமல் மதங்கொண்ட யானையைப்போல் நிகரற்றவனுயிருக்
கின்றான், இன்னும் அவன் கொஞ்சமும் பயமில்லாமல் சொல்லுகின்
றான் அந்த ஹப்தக்கலீம் கிஸ்வர் பாதுஷா நௌஷேரவானனவன் எனை
க்கு பகுதி கட்டவேண்டும் யான் அவனுக்கு கட்டவேண்டிய தில்லை
அப்படி யெனக்கு பகுதி செலுத்தாமலும் என்னிடத்தில் பகுதிகே
ட்டாலும் யான் அவன் வசிக்கும் மதாயின் என்னும் பட்டணத்தை
இடித்து நொறுக்கி நிறவி கொட்டை போட்டுவிடுவேன் அந்நௌ
ஷேரவானுடைய சிம்மாசனத்தை பிடுங்கிக்கொண்டு அவனை வரை
யிட்டும் தூரத்திலிடுவேனென்றெழுதியிருந்தது, இச்செய்தியை யுணர்
ந்த நௌஷேரவான் புஜ்ருச்மெஹரைநோக்கி இவ்விஷயத்திற்கு என்
ன யோசனை சொல்கிறீர், அதைக்குறித்து யோசித்து கொலுமெ
ன்றுரைத்தான். இவ்வார்த்தையைக்கேட்ட புஜ்ருச்மெஹரானர் பாது
ஷாவை நோக்கி அவனுக்கு இன்னும் முழுவல்லமையும், வரவிலை
யாகையால் அவனிட்டத்தில் நமது பல்ஜுகளில் நின்னும் அநேக தேர்
தெரிவுசெய்தவனும் மிகு பலர்க்கிரகாணியாயும் அநேக சண்டைகளில்
சென்று வெற்றியடைந்த பலகால் முழுயவனுயும் ஓர் பயில்வானை
யும் சில பல்ஜுகளையும் அவனிடத்தில் அனுப்பி அவனைப் பிடித்து
வரஜாரில் ஹாஜர் செய்யும்படி உத்தரவுசெய்வதுதான் யோசனை
என்றுரைத்தார். அப்படி அவனை பிடித்துக்கொண்டு வரமுடியாதவரை
யில் அவன் நட்பை அறுத்து தங்கள் சமுகத்தில் கொண்டுவருவத்
திரவு செய்யுங்கள் இல்லாமல் இன்னும் சிலநாள் நாம் மெதுவாய்

விட்டு விடுவோமாகில் அவனுடைய ஆணவமும் மிகுத்துவிடும். அந் நாட்களில் அவனை வெல்வது கஷ்டமாகிவிடும் இன்னும் சினதேசத் திலும் பலவித இடையூறான கலகம் சம்பவிக்குமென் றுரைத்தார், அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற பாதுஷா மீனவன் தங்களுடைய இஷ்டம்போல் ஏவ்விதமாய் நடத்த வேண்டுமோ அவ்விதம் செய்யு ங்களென் றுக்ஞாபித்தான், உடனே புத்ருச்மெஹரானவர் அஷ்க்கேஜ ரீன் கம்ஷே ஸாஸானீ யென்பவனுடைய புத்திரன் குஸ்தம் யென்பவன் அந்த நௌஷேரவானுடைய பௌஜ்தாரைக் கெல்லாம் தளகர்த்தனு யிருந்தான், அவனையழைத்து பாதுஷாவினுடைய சமுகத்தில் விட்டு சொல்ல வேண்டியவைகளை யெல்லாம் சொல்லி கில் அத்தென்னும் அநேக வெகுமதி யளித்து அவனுடன் பன்னீராயிரம் வீரர்களையும் சவாரூக்கி அனுப்பினர் ஈதல்லாமலும் இன்னும் அநேக சண்டை களில் ஜெயமடைந்த வீரபராக்ரம முடைய அநேக சிப்பாய்களையும் சேர்த்தனுப்பி நீங்கள் யாவரும்சென்று அவனிடத்தில் நாலு வரு ஷத்திய தொகைபாவையும் இந்நான்கு வருஷமாய் அவன் கொடுக்காம லிருந்ததற்கு அபராதமும் சேர்த்து வாங்கிக்கொண்டு வரவேண்டி யது, இல்லாதவரையில் அவனை அதிக கஷ்டமடையும்படி பிடித்து ஜஞ்சீரென்னும் விலங்குகளிட்டு ஹஜூரில் ஹாஜர்செய்யவேண்டும், கபர்தார் அவனிடத்தில் ஸல்ஹ்வென்னும் ஒற்றுமையாகி விடாதீர் கள், கபலத் தென்னும் அஜாக் கிரதையாய் இராதீர்கள் யென்று ரைத்து அனுப்பினர். இவைகளை யெல்லாம் கேட்டிருந்த குஸ்தம் பயில்வா னனவன் சிரம் வணங்கி மிக மரியாதை யுடனே தஸ்லீம் செய்து படைகள் புடைசூழ நடந்து சினதேசத்தின்கண் சென்றான்.

உம்ரு ஐயார் மாணிக்கம் களவுசெய்வதும், அவர் சமர்த்

தையும் பேசுவதா யிருக்கும்.

விருத்தம்.

கிலமிசைஉமர்ஐயாரின் நித்யகாமத்தைகேட்டு
உலகமன்னவர்களெல்லாம் உடலதுகுலுங்கியேங்கி
பலவிதசமர்த்துசெய்யும் பண்புபோல்மாணிக்கத்தை
களவுசெய்திட்டவாறை கழறுவோம்புனியுள்ளோரே.

இன்பமான ஓரசையையுடைய புள்ளிக்குழலின் சந்தத்திற்கு ஈடா கிய இனு குழந்தைகளின் சவாரிபானது சமதரையான மைதானத்தில் செல்வதற்கொப்பாய் கலமென்னும் எழுதுகோல் மைதானமென்னும் காகிதத்தில்நடந்து இன்பமான இச்சரித்திரத்தை எழுதுகின்றது, இவ் விதமெனில் உம்யாஜூம்தீயுடைய புத்திரனுகிய ஜிம்ரு காமத்தையு டையதிறவர் மதரசாவென்னும் பள்ளிக்கூடத்தில் அமீர்ஹம்ஜாவுட ன் ஒதி வருங்காலையில் அங்கம்தரசாவின்கண் அவ் உம்ருசெய்துவந்த வினோபாட்டான அக்ரமங்களை இக்கிதாபின் பல பாகங்களிலும் எழுதி வருகின்றதை சொல்லுகின்றோர்கள், ஆஃதுபா தெனில் ஆதியாபானு வென்னும் பெண்ணின் வளமையாகிறது எவ்விதமிருந்த தெனில் சதா அமீர் ஹம்ஜாவுக்கு தன்னுடைய ஒரு பக்கத்தின் மார்பின்பாலை ஊட்ட இன்னொரு மார்பின் பாலை உம்ரு, மக்பூல் இருவருக்கும் கொடுப்பது வழக்கம். இவ்விருவனையிட ஹம்ஜாவின்மீது அதிக அன்புபாராட்டி பக்ஷத்துடன் வளர்த்துவந்தாள், அலல், அமீர்ஹம் ஜாவான்வர் நாளுக்குநாள் தேகம் மெலிந்தவராய் இளைத்துவந்தார், உம்ருவானவர்மாத்திரம் ஒவ்வொருநாளும் திரேகபுஷ்டி யுடையவ ராய் வளர்ந்துவந்தார், ஈதையால் யாவரும் இதவென்னஆச்சரியம்? அமீரானவர் தனியே ஒரு மார்பின்பாலை அருந்தியும் நாளுக்குநாள் இளைத்துவருகிறார் உம்ரு மக்பூல் இருவரும் ஒருமார்பின் பாலை குடி த்தும் உம்ரு மாத்திரம் நாளுக்குநாள் திடகாத்திரமாய் புஷ்டியாய்க் கொண்டே வருகிறார், இஃது யாது காரணமோ தெரியவில்லையேயெ ன்று ஆலோசிக்கவர்களாய் இருந்தார்கள், இவ்விதமிருக்கும் நாளை யில் ஓர்நாள், ஆதியாபானு வென்னும் பெண்ணவள் இரவில் நித் திரை செய்துக் கொண்டிருக்கும்பொழுது திடீரென விழிப்புவந்து விழித்துக் கொண்டாள். அப்பொழுது காண்கிறாள் அதுயாதெனில் உம்ருவானவர் அமீர், மக்பூல் இருவரையும்புரட்டிஉருட்டி கட்டிலின் நகத்திலிட்டு தானுமாத்திரம் இரண்டு மார்பின் பாலையும் அதிசரு சுறுப்புடன் கட்டிடென்று அருந்திக்கொண்டு இருக்கக்கண்டாள். பொழுது விடிந்தவுடன் இச்செய்தியை யாவருக்கும் அறியப்படு த்தி சொல்லுகிறாள். இக் குழந்தை இப்பொழுதே இவ்விதமாயி ருக்கின்றதே தன் வயது வந்துவிட்டால் திருட்டில் போய்னவை னும் வெல்ல சமர்த்தனும் ஆகுமென் றுரைத்தாள், பின்பு சில தினங்களில் அடிபெயர்த்து நடக்க ஆரம்பித்தார். அக் காலையில் இரவுகாலங்களில் யாவரும் நித்திரைசெய்யும் வேளையில் தனியே

பெழுத்து ஆங்காங்கு நித்திரைசெய்யும் மாதரிரத்தின்மணிகளின் காற்விரல் கைவிரல்களில் அணிந்திருக்கும் மோதிரங்களை மெதுவாய்க் கழட்டி ஒருவருக்கும் தெரியாமல் ஆதியாபானே சரசில்வைத்து படித்திருக்கும் தலையணையின்கீழ் கொண்டுவந்து வைத்துவிட்டு தானும் மற்றவர்களைப்போல் சயனித்துக்கொள்வார். விடிந்தபின் னெழுந்து ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் நகைகளைக்காணுமல் தேடினால் ஆதியாபானேவின் வெற்றிலைத்தட்டு தலையணையின்கீழ் இருந்து எடுத்துக்கொண்டுபோவார்கள். அதைக்கண்ணுற்ற ஆதியாபானே வெட்கமுடையவளாய் தலைகுனிந்து அதிக விசனமுற்று வாய்மூடி இருப்பாள். இவ்விதமாய் நடந்துவரும்நாட்களில் ஒருநாள் அமீர் ஹம்ஜாவினுடைய ஊஞ்சலி லிருந்து ஓர்மாணிக்கத்தை யெடுத்து உம்ரு தன்வாயி லடக்கிக்கொண்டார். இந்த செய்தி யாதொருவருக்கும் தெரியவில்லை ஆனால் ஊஞ்சலில்நின்றும் ஓர் இரத்தினம் எடுக்கப்பட்டிருக்கிற தென்று மாத்திரம் புலப்பட்டு காஜா அப்துல் முத்தலிபு அவர்கள் சமுகத்தில் தூச்செய்தியை எத்திவைத்தார்கள். அவ்விதம் தெரிந்தவுடனே ஒருநாள் அகஸ்மாத்தாய் உம்ருவினுடைய கன்னத்தை காஜா அப்துல் முத்தலிபு பார்க்க நேரிட்டது. அப்பொழுது உம்ருவினுடைய ஒரு பக்கத்தின் கன்னமானது, அதைத்து விக்கினதுபோல் காணப்பட்டது, அதைக்கண்ட காஜா வானவர் ஆதியாபானேவையும் மற்ற தாதிப்பெண்களையும் நோக்கி, பெண்களே, குழந்தைக்கு கன்னமானது இவ்விதம் வீங்கி இருப்பதை நீங்கள் இத்தனைபேரிருந்தும் ஒருவராகிலும் கவனியாமல் அஜாக்கிரதைத்தனமா யிருக்கின்றீர்கள் உங்கள் பிரவரையும் ஏது விஷயத்திற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது, அதை கவனியாமல் நீங்கள் இவ்விதமிருப்பது நியாயமோவென்று பலவிதமாய்க் கோபித்துக்கொண்டு உம்ருவை தன்னருகில் கொண்டுவாருங்கள் அவ்வீக்கம் எவ்விதமாயிருக்கிறது பார்ப்போமென் றுரைத்தார். உடனே வேலைக்காரர்கள் உம்ருவைக்கொண்டுவந்து ஹாஜராரில்விடுதார்கள் அப்பொழுது காஜாவானவர் உம்ருவின் கன்னத்தில் விரலைவைத்து தூக்கிப் பார்த்தார். உடனே வாயிலிருந்த மாணிக்கமானது கீழேவிழுந்தது. அதைப்பார்த்த காஜாவானவர் அல்லாவுத்த ஆலாவைப் புகழ்ந்துசொல்லுகிறார். யா இலாஹீ நீயோகிறவன் மிகவும்பரிசுத்தமானவரிருக்கும். இக்குழந்தையின் கொடுஞ்செயல்களில் நின்றும் எங்கள் பாவரையும் கார்த்தருள் புரிவாயாகவென்று தூஆச்செய்து இன்னும்

சொல்லுகிறார். இக்குழந்தையின் இச்சிறுவயதில்தானே இவ்விதமான ஆச்சரியமான செய்கைகளிருந்தால் இதன் பெரியவயதில் என்னென்ன ஆச்சரியங்களை விளைவிக்குமோ அறிகிலோ மென்றுரைத்தார். அப்பொழுது அம்மாளிகைகளில் உள்ளவர்கள்யாவரும் உம்ருவின் செய்கைகளுக்காக அச்சமுடையவர்களாய் அவரவர்க ளிருக்கவேண்டிய ஜாக்கிரதையாய் உம்ரு உடைய சில செய்கைகளைக் கண்டு சந்தோஷித்து நகைப்பவர்களாயும் சில செய்கைகளைகவனித்து துக்கப்பட்டவர்களாயு மிருப்பார்கள். அந்நாட்களில் அமீர் ஹம்ஜா, உம்ரு, மஃபூல் ஆகிய மூவருக்கும் வயது ஐந்து நிறைப்பமாகி இருந்தது அப்பொழுது காஜா அப்துல் முத்தலிபானவர் அவ்வூரில் சிறந்தபடிப்பாளியாகவும் பணிஹாஷீம், பனிஉய்யா, கிளைகளில் நின்றும் அநேக பிறவர்களுக்கு இவ்வெண்ணும்கல்வியைக்கற்பித்து வருபவருமாகிய ஓர் மௌல்லான் வென்னும் உஸ்தாத் இடத்தில் இம்மூவரையும் கொண்டுபோய் படிப்புச்சொல்லி கொடுக்கும்படி விடுத்தார். அப்பொழுது ஊர்வழக்கப்படி முதல்முதல் பிள்ளைகளை மதரசாவில் வைத்தால் என்னென்ன காரியங்கள் செய்யவேண்டுமோ அவைகளெல்லாம் குறைவின்றி செய்தார். மௌல்லாவும் இம்மூவருக்கும் வளமைப்படி ஆரம்பத்தில் பிஸ்மில்லா ஹிர்ரகுமா னிர்ரகீம்யென்று ஆரம்பித்து பின்பு, சொல்லிக்கொடுக்க வேண்டியவைகளை சொல்லிக்கொடுத்தார். மறுநாள் உஸ்தாதானவர் இம்மூன்று பிள்ளைகளுக்கும் பாடம் சொல்லிக்கொடுத்தார். அப்பொழுது, அமீர் மஃபூல் இருவரும் மௌல்லான்சொல்லிக்கொடுக்கப்படும் பாடத்தை சரியாய்படித்தார்கள். ஆனால், உம்ரு யென்பவருக்கு உஸ்தாத் அலிப் என்றுசொல்லிக்கொடுத்தார் அப்பொழுது உம்ரு ஆனவர் ஆ! ஹா!! நிஜம்சொன்னீர் சரி! பற்றக்யென் றுரைத்தார் இதைக் கேட்ட மௌல்லான் உம்ரைப் பார்த்து யென்ன நீ சொல்கிறாய் யான் அலிப்யென்று சொல்லென்றால் ஆ! ஹா!! சரி!! மெய்தான் பற்றக் யென்கின்றாயே என்ன புத்தியில்லாத அஹ்மக்கராயிருக்கிறாய் யென்றுரைத்தார் அதைக்கேட்ட உம்ரு உஸ்தாதைநோக்கி ஹஜரத் தாங்களென்ன சொன்னீர்களோ அதற்கு ஜவாபென்னும் மறுமொழி கொடுத்தேனே பொழிய வேறென்றும் விபரீதம் சொல்லவில்லையே எந்த நேரமும் யஸ்தாதிடமே அதை தங்கள் சமுகத்தில் சொன்னேனேயொழிய வேறில்லை. அஃது யானெனில் தாங்கள் சொல்வது அலிப், யான் சொல்வது ராஸ்த் பற்றக் யென்னும் அல்லாவுத்

தஜூலா ஒருவன்உண்மையானவனென்று ஜவாபுசொன்னேன் இதில் யாதொரு வித்தியாசமில்லை. தூய்மையாய் இருக்கும் அலீப் பெண் பீது, ஒரே அக்ஷரமாய் தனித்து ஒண்டியாய் நேரேயிருந்து ஒன்றைக் குறித்துக் கூப்பிடிகொண்டிருக்கிறபடியாலும், அதின் இலக்கம் ஒன்று யிருப்பதினாலும், நம்முடைய அல்லாகுஹுர்ரஹ்மானுர்ரஹீம் வத்தஆலாவான வனும் வஹ்தஹூ லாஷரீக் தனித்தவன் இணைதுணை இல்லாதவன் ஆனபடியால் யான் இதில் ஏதாவது பிசகு தவறுதல் பொய் முதலியவைகளை உரைத்திருப்பேனுகில் தாங்கள் என்னை எவ்வித நிபந்தனைக்குள் ஆக்குகின்றீர்களோ அதற்கு தலைசாய்க்கின்றேன். அப்படியாதும் தவறுத லிருக்குமாகில் அதையெனக்குக் காண்பியுங்கள் யான் தங்களுக்கிரவுக்கு கிரம்வணங்குகின்றேன். அல்லது, தாங்கள் எந்தவிதத்தினாலாவது யான் சொன்னவை தவறுதலென்று ருபியுங்கள் தாங்கள் சொல்வதைப்பார்த்தால் அல்லா ஒன்று அல்லவென்றும், அவன் இணை துணையில்லா பரிசுத்தனல்லவென்றும் அவனுக்கு நிகர் வேறொருவன் உண்டென்றும் சொல்கிறீர்களா? அப்படியானால் எனக்கு அதை தெரியப்படுத்துங்களென்று இன்னும் பலவிதமாய் கேட்டு கடைசியாய் அலிப், பே, தாடங்கி வஸ்ஸலாம் வரையில் படித்தார். பின்பு, மறுநாள் இரண்டாவது தச்தி யென்னும் பாடம் ஓதும் முறைவந்தது, அப்பொழுது, முல்லானுனவர் உபாருவுக்கு அலிபுக்கு ஒன்றுமில்லை பேய்க்குழிழ் ஒரு கொக்தா, தேய்க்கு மேலே இரண்டு கொக்தாக்கள், லேய்க்குமேலே மூன்று கொக்தாக்களென்று இப்பாடத்தை படித்துக்கொடுத்தார் அப்பொழுது உபாருவின் பலரின் சரீரமானது மென்மேலும் அதிகமாய்ப்பற்ற ஆரம்பித்தது குணம் திஷ்டத்தனத்தில் திரும்பிவிட்டது, படிப்பில் அறவேமனது வைக்காமல் வாயில் வந்தபடி உளற ஆரம்பித்தார் அப்பொழுது ஆஸ்தாத்தியம் உண்டாக்கினால் கொஞ்சமும் கவனியாமல் பாடத்தின்மீது கருத்தைச் செலுத்தாமல் வேறென்னென்னமோ உளர ஆரம்பித்து உஸ்தாத் சொல்வதை யெல்லாம் வினோயாட்டு சிரிப்பு முதலிய பரிகாசவார்த்தையால் கோரங்குழித்து ஹம்ஜாவை நோக்கி சொல்லுகிறார் ஹம்ஜாவே உங்கள் பிரியம் இந்த முல்லாண்டையிடத்தில் நீங்கள்படித்து வீணுய்காலத்தை வீண்காலமாய் கழியுவ்கள் யான் இவரிடத்தில் படிக்கமாட்டேன் போதும் இந்த இல்மமவிட்டுக் யான் தூர விலகிக்கொண்டேன் அத்துடன் இப்படிப்பையும் படித்துக்கொடுப்பவரையும் விட்டு ஓடோடியும்சென்று தூரவிலகிக்கொ

ண்டேன். யான் இம்மதரசாவிற்கு காயிதாபடிக்க வந்தேனேயொழிய கணக்கு பார்க்கவா இதாபு கொண்டுவந்தேன், அலிக்கு ஒன்று இல்லாமல் மோட்டையாய்க்காலியாயிருந்தால் எனக்கென்னதின் கூட ஏதாயினும் சேர்ந்து கொண்டிருந்தால் தான் எனக்காவது தென்னை எதினிடத்திலோவாவது ஒன்று, இரண்டு, மூன்று கொக்தாக்கள் இருந்தால் யான் எதற்காக அதை பாவாசெய்யப் போகின்றேன்யென்று இவ்விதமான ஷராரத்தென்னும் முறட்டுத் தனமாகிய வார்த்தைகளை உபயோகிக்கஆரம்பித்தார். இவ்விதமிருக்கையில் ஓர்இரவு முல்லான் காஜா அப்துல் முத்தலிபு பாத்சென்று உம்ருவினுடைய நிஷ்டத்தனங்களை கணக்கிலடங்காத விதமாய் சொல்ல ஆரம்பித்து சொல்கிறார். அவ் உம்ருவானவன் காதும் படிக்கிறதில்லை ஹம்ஜாவையும் படிக்கவிடுகிறதில்லை தன்னுடைய அழும்பு தனத்திலேயே காலங் கழிக்கின்றான், ஆகையால் அமீர் ஹம்ஜா படிக்க வேண்டுமானால் அவ உம்ருவை வேறேபாடத்திலாவது கொண்டுபோய் படிக்க விடுங்கள் என்னால் இந்த ஆத்தென்னும் கஷ்டத்தை அனுபவிக்க முடியாது. போதும் போதும் இனி என்னால் முடியவே முடியாது. அப்படியில்லையானால் இரண்டு பிள்ளைகளையும், வேறே பாரிடத்திலாவது படிக்கவிடுங்கள் யென்றுரைத்தார், அப்பொழுது காஜாவானவர் இவ உம்ருவை வேறே எங்கேயாவது, படிக்க விடலாமென்று யோசித்தார்; அவ் வார்த்தைக்கு அமீர் சம்மதிக்கா தவராய்க் கண்களில் நின்றும் நீர் தாரை தாரையாய் போட அழ ஆரம்பித்து சொல்லுகின்றார், பாவாவே என்னுடைய தோழனுகிய உம்ருவை எவ்விடத்தில் கொண்டுபோய் படிக்க விடுகின்றீர்களோ அவ்விடத்திற்கு யானும் போய் படிப்பேன், இல்லாத வரையில் ஒரு எழுத்தாவது என் காவினால் ஓதமாட்டேன் யென்றுரைத்தார், அப்பொழுது காஜாவானவர் ஒன்றுஞ் சொல்ல வழியற்றவராய் வாய் மூடியிருந்து அந்த முல்லான் இடத்திலேயே மிகமிக நல்வார்த்தைகள் சொல்லி முன்போல அம் மதரசாவிலேயே ஓதி வரும்படி செய்தார், இவ்விதம் நடந்துவரும் நாட்களில் அம்மதரசாவில் இல்லும படித்துக்கொள்ளும் பிள்ளைகளுக்காக அவ்வவர்களின் வீடுகளில் நின்றும் விதவிதமாகிய கறிகள் தயார்செய்து வஜீபனங் கட்டி மதரஸாவிற்கு அனுப்புவார்கள். இவ்விதம் நடந்து வரும் காலத்தில் வளமைபோல் ஒருநாள் யாவர் வீட்டிலிருந்தும் வஜீபனம் மதரஸாவில் வந்திறங்கி இருந்தது, அப்பொழுது நடுப்ப

கல் வேலையா யிருந்தபடியால் முல்லான் உள்படி ஒதுகிற பிள்ளை
கள் யாவருமே, மதரஸாவில் தூங்கிக்கொண்டிருந்தார்கள் உம்ரு மாத்
திரம் தூங்காமல் விழித்திருந்தார், ஆகையால் வந்திறங்கி இருந்த வஜீ
பனுத்தின் மூட்டைகளை அவிழ்த்து அவைகளில் எதெதில் கல்லடரு
கிகரம் பொருந்திய பதார்த்தங்களிருந்ததோ அவைகளில் தனக்கு
அபேக்ஷையான பதார்த்தங்களெல்லாம் புசித்துவிட்டு மிகுத்
தமா யிருந்தவைகளை எடுத்து முல்லானின் சயனித்திருக்கும் தலையணை
யின் கீழ் ஒளித்து வைத்துவிட்டார், பின்பு பிள்ளைகளெல்லாம் வெ
ழுந்து தங்கள் தங்களுக்குவந்திருக்கும் வஜீபனங்களைபார்க்க அவை
கள் யெல்லாம் ஒன்றுமே யாயுல் இருக்கக்கண்டு மனம் பதறி பரி
யால்வருந்தி களைத்தோறும் ஆ! ஹா!! இஃதென்ன ஆச்சரியம் இவ்
விடம் வந்திருந்த வஜீபனங்களை யாவ ரெடுத்துச் சென்றார்களோ
காணப்படவில்லையே யென்பாரும் பேய், பிசாசுகள் எடுத்தேகின
தோவென்று நினைப்பாருமாய் பலவிதம் யோசித்துக் கொண்டிருக்
கும் பொழுது உஸ்தா தானவர் யோசிக்கின்றார். அஃது யாதெனில்
இவ்வேலைசெய்தவர்கள்இவ்விடத்தில் உம்ருவைத்தவிற வேறேருவ
ருமிருக்கமாட்டார்கள் வேறொருவருக்கும் இவ்வளவு தைரியமுண்டா
யாதல் கிடையாது இவ் உம்ருவேதவிற இவ்வேலைஒருவரும் செய்ய
வில்லையென்றுதீர்மானித்து உம்ருதான் செய்திருக்கவேண்டுமென்று
சொன்னர், இவ்வார்த்தையைகேட்ட உம்ருவானவர் வ! ருஹபாஷ்!!
நன்றாயிருக்கிறது ஹஜரத்தே என்னமோ சுலோகஞ்சொன்ன பாவ
னையாயிருக்கிறதே ஓட்டகத்தை தனவீட்டில் வைத்துக்கொண்டு வீ
ரெல்லாம்தேடி ஒருவன் தலையில் படுதூறைதூக்கிவைத்தாட்டபோல
இருக்கின்றதே வ! நன்றாய்க்சொன்னீர்கள், தாங்கள்திருட்டுப்பிடிக்க
வேண்டுமானால் இம்மதரஸாவிலுள்ள ஒவ்வொருவரையும் அவரவர்
இருக்கும் ஸ்தானத்தை சோதனைசெய்துபார்த்து எவர்களிடத்
தில்திருட்டு அகப்படுகிறதென்று பாராமல் சும்மாவாயினும் ஊருக்கி
ளைத்தவன் சத்திரத்தாண்டி யென்று என் தலையில் பாவத்தையும்
தூக்கிப் போடுகின்றீர்க ளென்றுரைத்தார், அவ்வார்த்தையைக் கே
ட்ட உஸ்தா தானவர் உம்ருவை நோக்கி அப்படியானால் நீயே யாவ
ரையும் பரிசோதனை செய்து திருட்டைக்கண்டு பிடியென்றுரைத்
தார், உடனே உம்ரு யெழுந்து ஒன்று மறியாத உத்தமனைப் போல்
மதரஸாவின் பிள்ளைகளின் தானங்களை ஒவ்வொன்றாய் சோதித்துக்
கொண்டே வந்து கடைசியாய் பலஸ்தானங்களையும் தேடி, பார்ப்

பது போல் பச்சைப் பாசாங்கு செய்துவிட்டு கடைசியாய் முல்லா
னுடைய பாய் தலையணை, பிச்சாறை முதலியவைகளை அப்படியே கால்
மாட்டின்பக்கத்தை கையிற்பிடித்திழுத்துஉதறினர், உடனே உஸ்தா
தானுடைய தலையணையின்கிழிருந்து சோறு கரிகள் யாவும் உருண்டு
கொட்டி சிந்தி கழட்டி வைத்திருந்த முல்லான்சாதிபினுடையதலைப்
பாகை சட்டை முதலாகிய வஸ்துஷால்கள் யாவும் வேர்வாவெ
ன்னும் சால்னாக்கள் யெல்லாம் கொட்டி ஊற்றி யாவும் நனைந்து
காபாகி விட்டது, மதரஸாவிலிருந்த பிள்ளைகளை நோக்கி பிள்ளை
களே பார்த்தீர்களா தான் திருடி அயலாரை நம்பமாட்டாள் யென்
பதுபோல் ஹஜரத்உஸ்தாதினு மெலானு முல்லான் சாதிபைச்செய்
திருக்கும் வேலைத்திறத்தை பார்த்தீர்களா பையன் வாய்க் கோணத்த
வன் அகப்பட்டுக் கொண்டானென்று மனதிற்கு வந்தபடி பாபம்
அதிபாபமாய் இந்த மிஸ்கீன் பேரில் பழிதானொன்னும் பாராங்கல்லை
தூக்கிவைத்தார், சாபாஷ்! பலே! பலே! இப்பேர்ப்பட்ட உஸ்தாதிட
த்தில் படித்தால் நல்ல திருட்டுப் படித்துக் கொள்ளலாம் ஹம்ஜா
வே எழுந்திரும் வாரும் உங்கள் பாபாவிடத்தில் இவைகளை யெல்
லாம் போய் சொல்லலாம் இனி அரை நாழிகைகூட இந்த உஸ்தா
தானத்தில் படிக்க நமக்குதகாது, அப்படி படித்தாலும் நாம் யாவரும்
ஜாதிக்களங்கமுண்டாகும் வாருங்கள் உங்கள் பாபாவினடத்தில்சொ
ல்லி நல்ல பழைக்காரரும் ஹிர்ஸ், யென்னும் ஆசையற்றவறுமாகிய
நல்ல உஸ்தாதிடத்தில் ஓத வைக்க சொல்லுவோம் யென்றார். இவ்வகி
யாய் வார்த்தைகளை கேட்டுக் கொண்டிருந்த முல்லாவானவர் வெட்க
மடைந்து கோபத்தை அடக்க முடியாதவராய் எழுந்து உம்ருவை
இரண்டு மூன்று அறைகள் அறைந்தார், அவ்வடிகளைப் பட்டுக்
கொண்டும், பின்னும் மென் மேலும் படுதூறுகள் வார்த்தைகளை
அக்கிரமமாய்ப் பேச ஆரம்பித்தார். அப்பொழுது முல்லான்சாதிபு
கோபம்பிறந்து கோள்டாவென்னும் சாட்டையை எடுத்தோங்கி ஓங்கி
இழுத்தார் அவ்வேளையில் ஹம்ஜாவானவர் சாதிப்உடைய இருகர
ங்களையும்பற்றிப் பிடித்தவராய்க் கெஞ்சிக்கெஞ்சிமன்றாடி உம்ருவை
மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டு உம்ருவுக்கு அதிகஅடிகள்விழாமல்
காப்பாற்றினர். மறுநாள் உதயத்தில் யெழுந்து யாவரும் மதரஸாவி
றகுவந்து பகல் பொழுதுவரையில் படித்தான பின் முல்லா வுள்
பட குழந்தைகள் யெல்லாம் சற்றுபடுத்து அயர்ந்து நித்திரை செய்
தார்கள் அவ்வேளையில் உம்ருவும் எல்லோரையும் போல் தானும் சய

னித்து நித்திரை செய்பவரைப்போல் பாசாங்குசெய்து விட்டு யா
ரும் அறியாவண்ணம் மெல்லென யெழுந்து முல்லான் சாயபுடைய
அருகே சென்று அவர் விழித்துக் கொள்ளாத விதமாய் அவருடை
யதம்லாவென்னும் தலைப்பாகையை யெடுத்துக்கொண்டு போய் மி
ட்டாய்க் காரனிடம் அடவான்வைத்து ஐந்து ரூபாய்களுக்கு பல
விதமான மிட்டாய்களையும் வாங்கிக்கொண்டு வந்து மதராசாவில்லை
த்துவிட்டு தானும் எல்லோரைப் போலவே நித்திரை செய்வது போ
ல பாசாங்குசெய்துக் கொண்டிருந்தார், அவ்வேளையில் முல்லான்
சாஹெபாவர் எழுந்துபார்க்கையில் நல்ல மிட்டாய்கள், வெகுவாய்
வந்திறங்கி இருப்பதைகண்டு வெகு சந்தோஷ முற்றவராய் இருந்தி
னும் உம்ருவுடைய சாலாக்கி தனத்தையும் மனதில்நினைத்து ஒவ்
வொரு பிள்ளைகளையும் கேழ்க்க ஆரம்பித்தார் அதற்கு எவ்விதமெ
ல்லில் பிள்ளைகளே இம்மிட்டாய்வகை யார்கொண்டு வந்து வைத்தார்
கள் யாது காரணத்திற்காக கொண்டுவந்தார்கள் என வினவ, அந்த
அவ்விடத்தில் படிக்கும் பிள்ளைகள் யாவருக்கும் வாஸ்தவத்தில்
தெரியாதபடியால் ஏவ்வளொருவருக்கும் தெரியாதென் றுரைத்தா
ர்கள், பின்பு, உம்ருவை எழுப்பி ஓய் உம்ரு இந்த மிட்டாய்களை
ஏவையார் கொண்டுவந்தது உமக்குத் தெரியுமா வென கேட்டார்,
அதை யுணர்ந்த உம்ருவானவர் முல்லான் காதிலை சோக்கி ஹஜ்ரத்
இம்மா என்னுடைய பாவா ஜான் ஆனவர்கள் ஏதோ முறுகுயென்
னும் சேர்த்திக் கடன் நிறைவுக் கொண்டாராம் அதற்காக பாத்
திஹா ஓத கொண்டு வந்தார் அவர் வரும் பொழுது இன்னொரு
இகெதிதரையும் கூட அழைத்து வந்தார்கள், தாங்கள் நித்திரை செ
ய்துக் கொண்டிருந்த படியால் நித்திரை செய்யும் தங்களை எழுப்பு
வது மரியாதைக்கு குற்றவென் றெண்ணி, இவைகளை யென்னிடத்
தில்கொடுத்து சொல்லிவிட்டுப் போனதாவது பரதெனில் குழந்தை
யே தங்கள் உம்தாதானவர் விழித்தவுடன் அவரிடத்தில் இவைகளை
முன்பில் வைத்து பாத்திஹா ஒதி முறுது ஹாசில் செய்து பாவ
ருக்கும் பங்கிர்து கொடுத்துவிட்டு தங்களுடைய பங்கை என்னிடத்
தில் கொடுக்கும்படி சொல்லிவிட்டேனு மென்றுரைத்தார், அதையு
ணர்ந்த முல்லான்சாஹிப் பாத்திஹா யாருடையபேரில் ஓதுகிறது
அதினுடைய சவாபை யாருக்கு பக்ஷிஸ் செய்கிறது யென்று கேட்
டார், உம்ரு சொல்கிறார், இதை பாப்பா ஹம்லாமியான் சாஹிப் பேரி
ல் பாத்திஹாஓதி பக்ஷிஸ் செய்துவிடும்படி சொன்னார்களென்று

ரைத்தார், இவ்வார்த்தையைக் கேட்ட முல்லான்சாஹிபு என்னுங்
காணும் பிள்ளாய் நானமாய் ஒன்றிலும் ஒவ்வாத பெயராயிருக்கி
ன்றதே, இது யாருடைய பெயரென்று கேட்டார், உம்ரு சொல்லு
கிறார் ஹஜ்ரத் இம்மா இக்கிர்களுடைய பெயர்களில் உள்ளதாயிருக்
கும் அவர்கள் இவ்விதமான பெயர்களையே அதிகமாயிட்டுக்கொள்
ளுகிறார்கள் இவ்விதமான பெயரைச் சொல்லியே அவருடைய பீர்
அவரை அழைப்பதாம் யென்றுரைத்தார், இவ் வசனங்களை செவியு
ற்ற முல்லான் சாஹிப் எவ்விதமிருந்திடினும் கமக்கார தென்ன
வென யோசித்து அவ்விதமே ஹஜ்ரத் ஷம்லா மியான் சாஹிப்பேரி
னல் பாத்திஹாசெய்து மேசாகயிருந்த நல்ல நல்ல மிட்டாய்களையெ
ல்லாம் யெடுத்து பூர்த்தியாய் சம்மதித்த படி புசித்துவிட்டு மிகு
திமை உம்ருவின் கரத்திலிருந்து எல்லோர்களுக்கும் பகிர்ந்து கொடுக்
கும்படி உத்தரவளித்தார், அவ்விதமே உம்ரு வானவர் யாவருக்கும்
சக்கு தாமும் புசித்தார், முந்தி உள்தாத முல்லான் சாஹிபு பொரித்
ஐப் புசித்த பேடாவென்னும், நிறமான மிட்டாய்களில் லெல்லாம்
உம்ரு வயிடகமாய் நேர்வாள பருப்பை அரைத்து அப்பேடா வென்
னும் மிட்டாய்களுக்குள்வெல்லாம் செலுத்தினவத்திருந்த படியால்
அப்பேடா பாத்திரம் வெகு நேர்த்தியான மிட்டாய் ஆனபடியால்
பாத்திஹாவினை உடன் ஹஜ்ரத்துக்காக கோத்தியான மிட்
டாய்களைப் பிரப்பாரெனினைத்து உம்ரு வேறெனவே இவ்வேலைகளை
செய்திருந்தார், ஆகையால் கொஞ்ச நேரம் சென்ற பின்பு முல்லான்
சாயபுடைய வயற்றில் நோய் ஆரம்பித்துக் கொண்டது வயற்றுநோ
ய் அதிகரித்தவே முல்லான் சாயபு நெளித்து நெளித்து புரண்டு புர
ண்டு இருகைகளினாலும் வயற்றை அழுத்திப் பிடித்துக் கொண்டு
அப்பப்பா! ஹா! ஹா! அடடா!!! யென பாடுப்பட்டுக் கொண்டி
ருந்தார். பின்பு, அதிகமாய் வாந்தி செய்தார், உடனே பேதியாகத்
வும் ஆரம்பித்து விட்டது, எழுந்து பலகாலை அறைமட்டில் நடந்து
செல்ல இயலாதவராய் கைகால்களெல்லாம், நடுநடுங்கி விலவிலத்து
உதறல் கண்டு விட்டது, அப்பொழுது முல்லான் சாயபு அதிக மே
ன்ற குரலோசை போடு அடே யென்னும் அர்த்தத்தரும் அரே!
உம்ரு! யென அழைத்த இம்மிட்டாய்களில் என்ன வஸ்து சேர்ந்தி
ருந்தது இதைத் தின்றவுடன் யென்னுடைய கதி இப்படியாய் விட்
டது வயற்றின் நோயும் வாந்தியும் பேதியும் யென்னை மோசாஞ
க்கி விட்டதே யென்றார், இதைக்கேட்ட உம்ருவானவர் ஹஜ்ரத்தை

தங்களுக்தென்ன எல்லாயெழுத்துக்களிலும் நீயென்னும்எழுத்து மாத்திரம் தாங்கள்சாய்த்துகொள்ளும்மேடையைப்போல் அதிகமாய் உயிரோடிருக்கிறீர்கள், யானும் 'லாம் காப்' என்னும் அக்ஷரங்களைஉப யோகித்தால் என்னசெய்வீர்கள் எனக்கும்இவ் வெழுத்துக்களின் காய்தா, காஜாக்கள் ரொம்பவும்தெரியும் யானும் என் வாயை கிளப்பினால் அப்பொழுது தங்களுக்குதெரியவரும் நாங்களெல்லாம் அந் தமிட்டாயைதான் புசித்தோம் உங்களுக்கு புஸ்என்று ஒருசிறுஏப் பம்கூட வரவில்லை, தாங்கள் மிடாய் தின்றதினால் தங்களுடைய ஸ்திதி அதிக பலஹீனப்பட்டுபோய்விட்டால் எங்களுக்காவதென்ன உலகோர் சுலோகஞ் சொல்வார்கள் "கத்திரிக்காயை புசித்தால் நிலர் கழிவார்கள் சிலர் களிப்புறுவார்கள்," என்று யான்நினைக்கின்றேன் மித்திரை செய்யும் பொழுது பிள்ளைகளிடத்தில் சொல்லி நல்ல நல்ல மிட்டாய்களை யெடுத்து வேறேபாய் பத்திரப்படுத்தி மறைவில் வை த்து சம்மதித்த படி புசித்தீர்கள் பேர்ல் தெரிகிறது, அதுதான் அதீ ரணப்பட்டு வாந்தியும் வயறுநோயும் பேதியுமாய் தங்களை பலஹீ னப் படுத்திவிட்டது அல்லாமலும் தாங்கள் கல்லு உறுதியான வி ண்ணில்லாமல் புசித்திருக்கவும் கூடும் அந்த பாபா ஷம்லாமியின் சாஹிப் இலேசானவரல்ல அவருடைய மயாஜென்னும் கிபுருக் கைகல்லெண்ணத்துடன் புசிக்காவிடில் அவர்கள் எல்லோரும் தென்ன அவஸ்தை இதிலும் அதிகாய் அனுபவிப்பார்கள், தாங்கள் அவ் விதமாய் செய்தீர்காத்தென்னும் அவநம்பிக்கையுடன் புசித்திருந்து கூடும் அதனால் இவ்வித அவஸ்தை படும்படி நேரிட்டதுபென்று சைத்தார், இலைகளை யெல்லாம் நேத்திர காசுபோய்க் கண்டிருந்த அமீர் ஹம்ஜாவினைவர் முட்டாளென்னும் அபிப்ராயத்தை மருவித்து உல்தாவுக்கு புகட்டி அவருடைய ஹஜரத்தென்னும் சூதெனியும் வஸ்தி சிகிச்சை செய்து இவைகளெல்லாம் உம்ரு வுடைய மக்கரென்று மனதில் வெண்ணிக்கொண்டு பேசாம லிருந்து உல்தாவை நோக்கி மிட்டாய் புசித்ததினால் குடலுகரித் திருக்கக்கூடும் இவ்வேளையில் தாங்கள் புசித்த இம் முட்டாவென்னும் தயிரினால் அசுத்தமாகி ஹஜரத்து நீங்கி சவுக்கிய மடைவீர்களென்று மொழிந்தார், அவருடை த்தபோல கொஞ்சநேரத்தில் அல்லா! அல்லாவென்று முல்லா ன்சாஹிபுடைய பாதைகளெல்லாம் நீங்கி அவர்உயிரும் தப்பிப்பிழை த்து அவ்வாபத்தை விட்டுநீங்கி இருந்தார். பின்பு, அஸ்தமிக்க நாது ழிகைப்பொழுது பாக்கியா யிருந்தது அச்சமயத்தில் முல்லாஞ்சா

ஹிபு மதாசா பிள்ளைகளை யெல்லாம் கூட்டியென்னுடைவிடுமுறை தா ந்தார், பிள்ளைகளெல்லாம் அவரவர் தந்தம் இல்லம்போய்சேர்ந்தார் கள் முல்லாஞ்சாஹிபுயெழுந்து தம்முடைய உட்சவுனை யதனிற்று அதன்மேல் ஜுப்பா அணிந்து அதன்மேல் டகலான்வை கட்டிக்கொ ண்டார். தலைப்பாகையை எடுக்கக்குனிந்தார் காணப்படவில்லை அங்கு மிங்கும் பல இடங்களிலும் சுற்றியடித்துத் தேடிப்பார்த்தார் காணு மையால் மனமிடைந்து அம்மக்கம்மா ஹஜரத்தின் வளமை டசலாவின் மேல் இடையில் ஓர் பட்காவென்னும் ஷால்வை கட்டிக் கொள்வது ண்டு தலைப்பாகைக்கு பதிலாய் துதை யெடுத்து, தலையிற் சுற்றிக்கொ ண்டு தமதில்லம் நோக்கிபுறப்பட்டுச் செல்லும்வழியில்மிட்டாய்க் கடை யின் அருகில் நடக்கும்பொழுது முன் உம்ருக்கு மிட்டாய்கொடுத்த கடைக்காரன் திடீரெனஹஜரைநோக்கி ஹஜ்ரத்திடம் ஷம்லாவென்னும் தலைப்பாகையைக் காணவில்லை கிட்டவடுத்து ஹஜூரத்தே தங்களுக் கென்ன அவ்வளவு அவசரம் கேர்ந்தது யான்தங்களை நம்பமாட்டே னைதரங்கள் தலைப்பாகையைவைத்துதானு என்னிடத்தில் மிட்டாய் களை வரித்தவேண்டும் கண்டிருக்கிறது தாங்கள் என்னை அவமானப் படுத்த நினைத்திருக்கிறீர்களோ அதற்காக ஷம்லாவைக் கொடுத்தனு ப்பி விட்டாய் தருவித்தீர்கள். காலந்து தினத்திற்காக யான் தங்களை நம்பவில்லை நீர்? பாதகமில்லை இதோ தங்களுடைய ஷம்லாவை சுக் தோஷமாய்க் கொண்டுபோங்கள், தங்களுக்கு இஷ்டமான பொழுது பணத்தைக் கொடுத்தனுப்புங்கள், இத்தக் கேடை தங்களுக்குக் கொ ஞ்சமாயிருக்கும் தங்களுக்கு எந்த சமயத்தில் எவ்வளவு மிட்டாய் கள் வேண்டுமோ அவ்வளவும் யான் கொடுக்க தயாராயிருக்கின்றே னென்றான், இவ்வார்த்தையைக் கேள்வியுற்ற முல்லாஞ்சாஹிபு ஒன் றும் பேசாதவராய் கட்டத்தினால் அவ் வேளையில் என்ன ஜவாபு சொல்ல வேண்டுமோ அவைகளை மெதுவாய் சம்யோசிதமாய்ச் சொ ல்லிவிட்டு உடனே ஷம்லாவை வாங்கிக்கொண்டு தனது ஜேபியி லிருந்து ஐந்து ரூபாயெடுத்து அந்த மிட்டாய்க்காரன் கையில் கொ டுத்துவிட்டு தமது இல்லத்திற் கேகினார், அங்கு சென்று உம்ரு பாத் திரா செய்தமிட்டாய் இந்த ஷம்லாவைவைத்து வாங்கியது தான் என்பதைக் குகையால்தான் பாபா ஷம்லாபியான் சாஹிபு இயற்றிய பாத்திரா ஏதச்சொன்னான். அதை நாமிய வில்லை இது அவனுடைய செய்கைதான், நல்ல திருக்கட்டும் பொழுதுவிடி யுமுடன் அவனிருக்கின்றான், யானிருக்கின்றேன் சாட்டையிருக்

திற்றது அவ்னுடைய இடுப்பு மிருக்கின்றது யென்று மனதில்கோப
த்தை வைத்துக் கொண்டிருந்தார் அவ்வித மிருக்கையில் மறு நாள்
பொழுது விடிந்தவுடன் உம்ருவானவர் தேற்றைய தினம் செய்த,
சமூசத்தின்காபாவானது பென்னவினையுமோ "வென சுத்தேகித்தவ
ராய் அன்றைய தினத்தில் மதரசாவில் ஓதும் பிள்ளைகளுக்கு முன்ன
தாய்வந்து தனியாய் யாவும் சுத்தப்படுத்தி உஸ்தாதுடைய பிச்சாணை
வை உதறிப் போட்டுவிட்டு தன் ஜாகையில் உட்கார்ந்து மிகவும் உத்
தம குணமைத்த நல்ல பிள்ளையைப்போல் தாபை கையி லேந்தி
அடக்கம் பொறுமை சாந்தத்துடன் ஒன்று மறியாதவர் போல வாசி
த்துக் கொண்டிருந்தார், அவ் வேளையில் முல்லான் சாயபானவர்
மதரசாவிற்கு வந்து உம்ருவை கவனித்தவராய் உட்கார்ந்தார், உம்
ருவானவர் மிகவும் அதபு ஒழுக்கமாய் மரியாதையுடன் தலைகுனிந்து
சாய்ந்தாடி ஓதிக்கொண்டிருக்கக் கண்டு ஆ! ஹா!! இன்று இவனுக்கு
மனதில் என்னுடைய பயம் உண்டாயிருக்கின்றது ஆகையினால் இப்
பொழுது இவனை யாதொன்றுஞ் செய்யக்கூடாது இப்படியே மறை
தியாய்விட்டுவிட வேண்டும் யென்று மறித்தவராய் சும்மாயிருந்து
விட்டார், பின்பு, கொஞ்சம்நேரம் சென்றதின் பின் பிள்ளைகளை விடு
த்து தான் குஸல் செய்வதற்காக ஹமாமென்னும் ஸ்நான அறை
க்குள் செல்கின்றேன், வெகு சீக்கிரமாய் குளித்துவிட்டுவருவேன்,
நீங்கள்யாவரும் வீணேயாடாமல் அவரவர்பாடத்தை படித்துக்கொண்
டிருங்கள்யென்று சொல்லிவிட்டு ஜொபென்னும் கைப்பை தயார் செ
ய்து உருகையில் கொடுத்து இதனை முன்னுதாய்க் கொண்டுபோய்
ஹமாம் கானலில் வைத்துவிட்டு நில் யாரும் பின்னலை வருகின்றேன்
யென்று ஜொனை சுத்தார், அதைக்கரத்தில் வாங்கிய உம்ருவானவர்
ஹமாம் கானலிற்கு போகும் வழியில் மூன்று தம்பிடிகளுக்கு அரி
சியும்வாங்கி மெல்லிதாய்அரைத்து, அத்தக் ஜொபில் கன்றுய்க்களத்
தைக்கொண்டுபோய் வைத்துவிட்டார். பின்பு, முல்லான் சாஹிபான
வர்ஹமாமிற்சென்று ஜொபையெடுத்து தாடியிலைய நன்றுய் வினாவி
ரும்படி தேய்த்தார், தேய்த்தபின் கைப்பை வெள்ளைமுடிகளில் நன்றுய்
ப்பிடிக்கும் படி சற்றுநேரம் உட்கார்ந்திருந்து; பின்பு தண்ணீரை
வெளித்து கழுவினர், கழுகும்பொழுது மருந்துடன் சேர்ந்து தாடிமு
ழுதும் சாபாய் உரித்த கோழியைபோல் சுபுரியத்து வேஷம்போட்ட
பெட்டையைப்போல ஆய்விட்டார், அப்பொழுதுஉஸ்தாத் முல்லான்
சாயபு வெட்கத்தினால் தேகமெல்லாம் குலுங்கிட்டு ஒவ்வொருவர்க

ளிடத்திலும் தன் முகத்தை காண்பிக்க காணமுற்றவராய் முகத்தை
மக்கனு வென்னும் முகப் போர்வையிட்டு மூடிக்கொண்டிருந்தார்.
பொழுது அஸ்தமித்த பிறகு அம்முகப் போர்வையுடன் அப்துல்
முத்தலிப் அவர்களுடைய மாளிகைக்குட் சென்று அவரை நோக்கி
தம்முடைய முகத்தைக் காண்பித்து முகத்தி லடித்துக்கொண்டு மிக
வும் விசனமாய் அழுது கடந்தவைகள் யாவையும் விபரமாய்ச் சொ
ல்லி, இவ்வளோதிப காலத்தில் என்னை அத் துஷ்டனுடன் உம்ரு இவ்
விதமாய்ச் செய்து விட்டான், வெட்கத்தினால் என்னுடைய முகத்
தை வெளியிற் காண்பிக்க ஏலாதவனும் இருக்கின்றேன், என்னு
டைய தோஸ்த்து சிநேகிதர்களிடத்தில் யான் எப்படி போய் சந்
திப்பேன் யென்று ஷம்லாவைத் திருடியது முதல் மிட்டாய்வாங்கி
கொண்டு வந்ததும் அதில் மிளகாய்வைத்த தந்திரமும்
ஸோபில் அரிதாரம் கலந்தவைத்த தந்திரமும் சொல்லி முறையிட்டார், இவ்வார்
த்தையைக் கேள்வியுற்ற அப்துல் முத்தலிபானவர் முல்லான் சாய
புக்கு கல்ல ஆறுதல் தேறுதல் சொல்லி வீட்டிற்கு அனுப்பி விட்ட
பிறகு, உம்ருவை யழைத்து இனி நமது வீட்டில் நீ இருக்கத்தகாது
ஆகையால் இப்பொழுதே வீட்டை விட்டு வெளியிற் போவென்று
அடித்துத் துரத்திவிட்டு, தன்னுடைய புத்திரன் அமீரை யழைத்து,
இனி நீ துஷ்ட உம்ருடன் சேருவாயாகில் உன்னை அதிகமாய்
தண்டிப்பேன்யென்று தாக்கீத்செய்து இவ்வித லாயக்கில்லாத கெ
ட்ட துஷ்டப் பிள்ளைகளுடன் யாராகிலும் சேர்ந்து உட்காருவார்க
ளா சேர்ந்தா, அச்சாவாகியபையன்களுடன் யார் சேருவார்கள் அவ
பால் நீ அவனுடன் சேரவேண்டாம், நீயும் கெட்டுப் போய்விடுவாய்
இயற்கைவாசனை செல்க்கைவாசனையாய்விடுப்என்றுரைத்தார்என்ன
உரைத்தும் அமீர் ஹம்ஜாவுக்கு உம்ருவினுடைய பாசம் விடவில்லை.
இரண்டு நாளிரவும் பகலும் உம்ருவை விட்டுப் பிரிந்ததினால் அமீர்
அன்னத்தண்ணீர் ஆகாரமில்லாமல்வாடியுப்பரிகைமீதேறி தனித்தழு
தக் கொண்டிருந்தார் இச்சங்கதி காஜா அப்துல் முத்தலிபு அறிந்த
பொழுது, உம்ருவை யழைத்து அவர் செய்த குற்றத்தை மன்னி
த்து அமீர் ஹம்ஜாவை யழைத்து, உம்ருவை ஒப்பித்து, முல்லான்
சாஹிபுக்கு ஓர் கடிதம்எழுதி அதில் உம்ருவைக் குறித்து சிபாரிஸ்
பேழுதியனுப்பிவைத்தார் முல்லான்சாயபு அக்கடிதத்தை உணர்ந்து
குற்றம் பலதடவைபாயினும், மனிதர் பெருந்தன்மை யுடையவர்களா
யும், மனிதத்தன்மை யுடையவர்களாயும் வம்மிஷத்திற் சிறந்தவர்க

ளாயும் சேர்ல்லிடில் அதை அங்கிகரிக்காதவன் மனிதனல்ல வென் றுணர்ந்து அக்குற்றத்தையும் மன்னித்தார் பின்பு மூவரும் மதரஸா வுக்கு வந்து இல்மைப் படித்துக்கொண்டு வந்தார்கள்.

இப்படி யிருக்கும் காட்களில் ஓர்நாள் ஓதுகிற பிள்ளைகளில் ஒரு வர் வீட்டிலிருந்து, முல்லான்சாயபுக்காக வஜீபனம்சமைத்து அனு ப்பி யிருந்தார்கள், அப்பொழுது முல்லான் சாயபு உம்ருவை யழை த்து இந்த மூட்டையை எடுத்துக் கொண்டுபோய் கம்முடைய மாளி கையில் கொடுத்து விட்டுவா, வழியில் உன்னுடைய சாலாக் தனத் தைக் காண்பிக்காதே அப்படி வழியில் நீ அதை திறப்பா யாயில் அதிலிருக்கும் காட்டுக் கோழிக்குஞ்சு பறந்து போய்விடும் அப்பால் அதைப்பிடிப்பதற்காக எவ்வளவு கஷ்டப்பட்டாலும்முடியாது, என் றுர்அதைக்கேள்வியுற்ற உம்ரு அதைபான்னகாரணத்திற்காக அவி ழ்க்கப்போகின்றேன் என்னேயென்னநாயா கடித்துயான் அதைஅவி ழ்த்துபார்க்க, இந்தமூட்டையை நேரேஎடுத்துக்கொண்டுபோய் உஸ் தாதினியம்மாள் கையில் கொடுத்துவிட்டு பதில் ஜவாபு வாங்கிக்கொ ண்டுவருவேனென்று மூட்டையை எடுத்தேகி வீட்டையடுக்கசென்ற பொழுது அவ்விடத்தில் ஓரிடம் சுத்தமாயும் மனிதர்களின் நீஞ்சார மில்லாதஸ்தலமாயும் இருக்கக்கண்டு அவ்விடத்தில்மூட்டையை இற க்கிஅவிழ்த்துபார்க்கும் பொழுது, அதில்நித்திப்புசேர்த்து சமைத்த சோறிருக்கக்கண்டு வாயில் ஜலம் ஊற ஆரம்பித்து, அவ்வேளை க்கு பசியும் இருந்தபடியால் அவ்விடத்தில் உட்கார்ந்து காலம டித்து சோட்டுக்கொண்டு வயற்றைத் தளரவிட்டு முடைநீங்க பசியா நினர், மிருகி யிருந்தவைகளை வழித்தெடுத்து காய்களுக்கு போட்டு விட்டு வெற்றேனங்களை வைத்து அதை கட்டியிருந்த தஸ்தரை கோணல் மாணலாய்க் கிழித்து அதற்குள் பாகங்களை வைத்து கட் டிக்கொண்டுசென்று முல்லான்சாயபுடைய வீட்டு மாசற்படியில் நி ன்று கதவைத்தட்டி அழைத்தார், அப்பொழுது வீட்டிற்குள் னிரு ந்து முல்லான்சாயபுடைய பதினியானவர்கள் வந்து கதவைத்திற ந்து பார்க்க உம்ரு வானவர் மூட்டையைக்கொடுத்து அவர்களிடத் தில் சொல்லுகிறார். அஃது யாதெனில் முல்லான்சாயபு ஆனவர், அதைத் திறக்கவேண்டாமென்று உத்தரவு செய்திருக்கின்றார், ஆகை யால், நீங்கள் ஒருவரும் அதைத்திறக்க வேண்டாமென்றும், வீட்டி லும் சமயல் செய்யவேண்டாமென்றும் இன்னம் தங்களுடைய தோ

ஸ்தார்களுடைய வீடுகளிலும் வஜீபனம் சமைக்கவேண்டாமென்றும் சொல்லச் சொன்னார், முல்லான்சாயபு இவிடம் வந்தபின் பின், அவ் ரவர்கள் வீட்டுக்கு வஜீபனம் அனுப்பலா மென்றும் சொன்னரெ ன்று உரைத்தார், இவ்வரிர்த்தையை யெய்யென்றுணர்ந்த அம்மாது கிரோன்மணி உம்ரு சொல்லியதுபோல் தானும் ஒன்றும் சமைக்கா மல் தோன்றுகள் வீட்டிலும் ஒன்றும் செய்ய வேண்டா மென்றும் சொல்லி யனுப்பிவிட்டார்கள் அன்றையதினம் முல்லான்சாயபு மத ரஸாவைவிட்டு ஒருநிமிஷகிதர் வீட்டுக்குப்போனர், அவ்விடம் சிலநே ரம் பேசிக்கொண்டு இரவு பதினொந்து நாழிகை வரையிலும் காலங் கழித்துக் கொண்டிருக்கும் பொழுது அவ்வீட்டுக் காரர் இவரைபெ யாறிவிட்டு போகும்படி பிரியாதம் செய்தும் கேளாமல் அவரிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு தம் வீட்டில் மிட்டாப் பலவு இருப்பு தை நினைத்துக்கொண்டு தம்து வீட்டுக்கு வந்து, தன் மணவியை யழைத்து இன்றையதினம் என்ன சமைத்தீர்கள் உங்களுக்கு மிக வும் தொந்தரவை கொடுத்தேன், ஓர் சிநேகிதன் வீட்டுக்குபோ னபொழுது அவரிடம் வெகு நேரம் பேசிக்கொண்டு பொழுது போவது தெரியாமல் இருந்துவிட்டேன், ஆகையால் நீங்கள் பாவ கும் இவ்வுலையில் பசியோடிருக்கும்படி சேர்ந்த பெண்ணரைத் தார், அவ்வார்த்தையைக்கேட்ட பெண்மணி என்ன கனவு கண்டது போல் பேசுகிறீர்கள் தாங்கள் தான் ஒன்றும் தயார்செய்ய வேண் டாமென்று சொல்லியனுப்பியிருந்தீர்களா. யாணும்தங்களுத்தரவுபே ல்கம்மைக் சேர்ந்த இன்னுரின்னார் வீடுகளுக்கும்சொல்லி யனுப்பிவி ட்டேன், அவர்களும் ஒன்றும் தயார்செய்யாமல் தங்கள் வழியை எதிர் பார்த்தவர்களாய் இருக்கிறார்கள், தாங்கள் என்று மில்லாமல் இன்றையதினம் இரவு தினைந்து நாழிகைவரையில் வெளியி லிரு ந்துவிட்டு இப்பொழுது தான்வந்து விருந்துசொல்லிவைத்தவர்களை யும் கார்த்தவைத்துவிட்டு அவர்கள் யாவரும் தங்கள்வீட்டு வஜீபன த்தை நம்பி பிள்ளைகள் முதலாகியயாவரும் பசியோடு கார்த்திருக் கும்படி செய்துவிட்டு இப்பொழுதான் வந்தீர்கள் தாங்கள் அனுப் பிய வஜீபன மூட்டையை அப்படியே வைத்திருக்கின்றேன், தாங்கள் சொல்லி யனுப்பியது போல் அக்கம்பக்கத்து வீட்டாருக்கு முந்தி கொடுத்தனுப்புங்கள் பின்பு தாங்கள் பசியாருங்கள் யென்றுரைத் தார்கள், இவ்வார்த்தையைக் கேள்வியுற்ற முல்லான்சாயபானவர் ஓ! ஹோ!! ஏதோ உம்ரு குபாடஞ் செய்துவிட்டான், அதனல் இவ்விட

த்திலும் வந்து யான் சொல்லாதவார்தைகளே பித்ரு பசாத் செய்து
போயிருக்கிறார் னென்றுணர்ந்தவராய் இன்றைக்கு ஏதோ நமக்கா
பத்து இருக்கிற தென்றறிந்து, அந்த வஜீபன மூட்டையை அவிழ்
த்து பார்க்கையில் அதில் யாதொன்று மில்லாமல் வெறும்பாத்திரமா
யிருக்கக்கண்டு தன்னைத்தான் நிந்தித்துக்கொள்கிறார், அஃதெவ்விதத்
தினில் அடே! உஸ்தாது தனம் செய்பவனே உனக்கென்ன அறி
வில் கேடுவந்தது? படிப்புக் கற்றுகொடுக்கும் உஸ்தாதுகளே மடை
யர்களென்றும் அவர்களிடம் கற்றுக்கொள்ளும் சிறுபின்னைகளின்
மடைத்தனமான புத்திக்கு நிகராய் அவ் உஸ்தாதுகளுக்கு மிருக்கு
மென்று பெரியோர்கள் சொல்லியிருப்பது, சரியாய் நம்மிடத்தில்
தான் இருக்கிறது, நீ எத்தனையோ தடவைகளில் அந்த உம்ருடைய
செய்கைகளை அறிந்தும் அவனையிழந்து இப்பொழுதும் ஆபத்திற்
குள் ஆகிவிட்டா யல்லவா? பின்னும் என் அந்த உம்ருவை நிந்திக்
கின்றாய்? நப்பு உன்மீதில் வைத்துக்கொண்டு அவனிடத்திற்பயம்
னில்லையென் றுணர்ந்து, அன்றிரவு மூல்லான்சாயபும் அவர் வீட்
டார்களும் மற்ற தோஸ்தார்களும் பரியால் வருந்திகாலக்கழித்தார்
கள் அப்பால் மூல்லான்சாஹிபு அதிகாலையிலெழுந்து உளுவச்செய்
துதாஸ்லக்கடனை அல்லா சுபுஹானுவதாலா ஆலாவிலுலையுதிபாதத்
தென்னும் சுபுஹு தொழுகையை நிஷ்டையேற்றிக் ஷாஷ்டாசெய்
துக்கொண்டு மதரஸாவிற் சென்று உம்ருவை அழைத்து யான்
நேற்றையதினம் உன்னிடத்திற் கொடுத்தனுப்பிய வஜீபனத்தை ஏன்
னசெய்தாய் என்றுகேட்டார், அவ்வார்த்தையைக் கேட்ட உம்ரு
னவர் வஜீபனமாவது ஏது யார்கண்டது, யான் வஜீபனத்தையே
அறியேன் ஆஸ்ல வழியிற் செல்லும்போது அம்முட்டையை சிருந்து
ஓர்காட்டுக் கோழிக்குஞ்சு மாத்திரம் தனியேக் கிழித்துக்கொண்டு
டோடிந்து போனதைக்கண்டேன், அதைத்தவிற மற்றவை யொன்றும்
யான் அறியேன் அதைப்பிடிக்க யான் வெகுபிரயாசைப்பட்டும் பய
படமல் போய்விட்ட தென்றார், சரி! அப்படியானால் என்னிடத்தில்
நீயேன் வஜீபனம் தயார்செய்ய வேண்டாமென்று கூறித்தாய் விளைந்த
யாவரையும் பரியால் கஷ்டப்படும்படி செய்தாய் யான் எப்பொழுது
உன்னிடத்தில் என் தோஸ்தார்களுக்கு விருந்து சொல்லும்படி சொ
ன்னேன், அவர்களையும் அநியாயமாய் பரியினில் வருந்தச் செய்தா
யென்று கேட்டார், அதற்கு உம்ரு உஸ்தாதே இவ்வொரு வார்த்தை
மாத்திரம் என்பேரில் குற்றமானது, யான் ஒப்புக் கொள்ளுகிறேன்

பென்றார் உடனே உஸ்தாத் மூல்லான்சாஹிபானவர் உம்ருவை தா
ணிற் பிணைத்து இருக்கக்கட்டி ஜாட்டையினால் வஞ்சித்தாபுடைத்தார்
அவ்வேளையில் அமீரானவர் உஸ்தாதை மிகமிக வணங்கி கெஞ்சி
மாப்செய்யும்படி கேட்டுக் கொண்டு உம்ருவை அடியில் நின்று மீட்
டுவைத்து இனி எவ்வித செய்கையும் செய்யமாட்டார், தங்களுக்
கும் யாதொருநஷ்டம் விளைவிக்க மாட்டாரென்று சொல்லிக் கே
ட்டுக் கொண்டார். ஆனால், உம்ரு மந்திரம் மனதில் பூர்த்தியாக
வுருசம் மூல்லான் சாயபுடைய உயிர் நீங்குகிற வரையில் வேண்டிய
போதுமான பெண்ணத்தை நிறைத்துக் கொண்டு ஒவ் வொரு வே
ளையும் மூல்லான்சாஹிபை எவ்விதத்தில் கெடும்பு செய்வ தென்று
யோசித்து தீர்மானித்துக் கொண்டே யிருப்பார், அந்காட்களில் அபு
சுபியான் அபுஜாகில் முதலாகிய தலைமைகார குடித்தனபிள்ளைகளும்
அந்த மதரசாவில் படித்துக்கொண் டிருந்தார்கள், அவ்வேளையில் ப
கல் பதினொந்து நாழிகைக்கு பிள்ளைகளெல்லாம் படித்துத் தூங்கிக்
கொண் டிருந்தார்கள், அந்நேரம் உம்ரு யெழுந்து, அந்த ஜகலுடைய
மோதிரத்தை அவனறியாத் வண்ணம் மெதுவாய்க்கழற்றி மூல்லான்
சாயபு வீட்டிற்குச் சென்று ஒருவரு மதியாமல் அவர் பத்திரியின்
கைப்பெட்டியைத் திறந்து, இம்மோதிரத்தை அதற்குள் வைத்துவி
டு அப்பெண்ணினுடைய காதிலணிந்திருக்கும் பாவளியிலொன்றை
மூல்லான்சாயபு கேழ்ப்பதாய் கேட்டு வாங்கிக்கொண்டு வந்து அந்
ஜகதுடைய கையிலில் மாட்டிவிட்டு ஒன்று மறியாதவர்போல் எ
லோருடனும் சேர்ந்து அயர்ந்து நித்திரை செய்பவரைப்போல் பா
சாங்கு செய்திருந்தார், பின்பு பிள்ளைகளெல்லாம்எழுந்து முகங்கால்
கைகளை சுத்தி செய்துகொண்டு தத்தம் பாடங்களோத ஆயித்தார்
கள். மூல்லாசாஹிபானவர் அந்ஜகலை அழைத்து பாடம் சொல்லும்
படி சொல்லி பாடம் கேட்டார், அப்பொழுது அவன்கையிலிருந்த
தம்முடைய புத்திரியின் பாவளியை அணிந்திருக்கக்கண்டு அந்த அ
ஜகலை நோக்கி, இந்தப் பாவளி ஏது உனக்கு யார் கொடுத்தார் யெ
ன்று கேட்டார், அவன் தன்விரலைப் பார்த்துவிட்டு திகைத்து, ஒன்
றும்பேசா திருவிழித்தவனுப்போல் நின்றான், அவ்வேளையில்
உம்ரு வானவர், பரபரப்புட னெழுந்து, உஸ்தாதை நோக்கி, ஐஐ
தாதே அந்த சங்கதியை என்னைக் கேளுங்கள் யெனக்கு தெரியும்
யான் அவன் அந்தரங்கங்கள் யாவையும் ஆதியோடந்தமாய் அறி
வேன் யென்றார், அதைக் கேட்ட மூல்லான்சாஹிபு, அஃதெவ்வித
மென உம்ருவைக்கேட்டார்.

அப்பொழுது உம்ருசொல்கிறார் ஹஜரத்தே யாமினைவரும் கீ
திகை செய்யும்பொழுது எனக்கு நித்திரைவராம லிருந்தபடியால்
யானும் சும்மா படித்துக்கொண்டு கண்களை மூடிக்கொண்டிருந்தேன்.
அவ்வேளையில் அபூஜஹில் பெழுந்துபுடன்தான் யானும் அவன் பின்
னே அவனறியாதபடி போய்க்கொண்டிருந்தேன் அச்சமயம்அவன்
நேரே தங்கள் வீட்டுக்குசென்று தங்கள்புத்திரியிடத்தில் என்னென்
னமோ பேசிக்கொண்டிருந்துவிட்டு தன்னிடைய விரலிலணிந்திருந்த
மோதிரத்தைக் கழட்டி தங்கள் புத்திரியினிடத்தில் கொடுத்துவிட்டு
தங்கள்மகள்காதில் அணிந்திருக்கும் பாவளியில் ஒன்றைவாங்கிக்கொ
ண்டுவரும்பொழுது இருவரும்கட்டியணைத்துமுத்தமிட்டுக்கொண்டா
ர்கள். பிறகுஇவனும்வந்துவிட்டான் யானும்நித்திரைக்கொண்டே இவ
னுக்குத் தெரியாமல் வந்துவிட்டேனென்றார். இவ்வார்த்தைகளைக்
கேட்டவுடனே முல்லான் சாயபுடைய கண்கள்சிவந்து, மீசைகள்
துடிக்க, நாற்காலியிலிருந்து தேகம் படபடத்து, அபூஜஹ லிடத்திலிருந்த
பாவளியை வாங்கிக்கொண்டு அவனைத் தரையில்பிணைத்து, சாட்டை
யையுருவி வரட்டுவரட்டென வாட்டினார். உம்ருவை யடித்தால்
மீர்ஹம்ஜாவினர் பொறுக்கமாட்டாமல் இரண்டொரு அடிபட்டவு
டனே கெஞ்சிகேட்டுக்கொண்டு அடியை விலக்கிவிடுவார். அபூஜஹ
லுக்கு பொறுக்க செய்ய ஒருவரும் இல்லாதபடியால் முல்லான்சா
ஹிபு வஞ்சம்தீர அடித்தோய்ந்தார். பின்புஅக்கோபத்துடனே அதி
காமாய் வீட்டுக்குசென்று தமது மகனை அழைத்து அவள் பெட்
டியைத் திறக்கச்சொல்ல அதைப்பார்க்க அபூஜகலுடைய மோதிரம்
இருக்கக்கண்டு அதைக்கரத்தி லெடுத்துக் கொண்டு ஒன்றுமறியாத
அப்பெண்ணை சாட்டையால் அடி அடியென்று புடைத்தார்.நன்னு
டைய அருமைமகளை அடிப்பதைப் பார்த்திருந்த முல்லான்சாஹிபு
னைமனைவி கணவனை நோக்கி என்ன குற்றத்திற்காக இவ்விதமாய்
அடிக்கின்றீர்கள் நங்களுக்கென்ன பயித்தியம்பிடித்துக்கொண்டதா
விருக்கிறதென்று கணவனின்கரத்தைப் பிடித்தார்கள். அவ்விதம்விலக்
கவந்த மனைவியையும் குரானும், அரையுமாய் மொத்தமொத்தமாய்
விட்டார் அவ்வடிகளை கணக்கன் எவ்வளவுசுருசுருப்பாய் ஜாக்கிரதை
யாய்எண்ணியும் கணக்குத்தவறிபோய்விட்டது அவ்வளவுசுருசுரு
ப்பாய் அடித்துக்கொண்டிருக்கும்வேளையில் அடிகளைப்பொறுக்கமு
டியாதமனைவி முல்லான்சாஹிபுடைய தாடியை இரண்டுகைகளாலும்
பற்றிப் பிடித்திழுத்துக் கொண்டார்கள், அவ்விதம் பிடித்திருக்கும்

மனைவியுடைய நீண்ட தலைமுடியை கணவன் ஓர்கரத்தால் பிடித்தி
ழுத்து சுற்றிக் கொண்டு ஓர் கரத்தால் அடித்துக் கொண்டிருக்கும்
வேளையில் அயல்வண்டை வீட்டுக்காரர்கள் கூச்சலிக்கேட்டோடிவந்து
முல்லான் சாஹிபையும் பிடித்திழுத்துக் கொண்டு வெளியில் வந்து
என்னுங்காணும் சாஹிபே உமக்கு பூர் புத்திபடித்துக்கொடுத்தார்
கள் பெண்பிள்ளைகளை அடிக்கலாமா நீர்ஒதிய வித்தாபுகளிலெல்லாம்
பெண் பிள்ளைகளை அடிக்கும்படியாய்தான் எழுதி யிருக்கின்றதோ
இது தெரியாத நீர் தாரை பிள்ளைகளை தர்பியத் செய்து வைக்கப்போ
கின்றீர்கள் ல! கன்றுபிருக்கின்றது யென்று பலவிதமாய் பேசித் திட்
டிவிட்டு போய்விட்டார்கள் அக்கோபத்துடன் முல்லான் சாஹிபாண
வர் வீட்டுக்குப் போகாமல் மதரஸாவிற்குப் போய் அன்று வெள்ளி
கிழமை யானபடியால் படிக்கும் பிள்ளைகளை யெல்லாம் விடுமுறை
விட்டு விட்டு தாம்மாத்திரம் மதரஸாவில் படித்துக்கொண்டார், பிள்
ளைகள் யாவரும் அவரவர்களின் வினோபாட்டின் முயற்சியால் வினோ
யாடிக் கொண்டிருந்தார்கள் அவ்வேளையில் உம்ருமாத்திரம் தன்னு
டையஜாதன ஆலோசனையில் வெகுகவலையாய்க்கருத்தைச்செலுத்தி
க்கொண்டிருந்தார்கள், அப்பொழுது அவர்மனதில் ஓர்யோசனைபிற
ந்தது அந்த யோசனையை நிறைவேற்றுவதற்காக ஜாருக்குச் சென்
று ஓர் கடைக்காரனைக்கண்டு பதறப் பதறப்பய! ஓய்!! நீரென்ன
சீட்டையாய் உட்கார்ந்துக் கொண்டிருக்கின்றீர் யான் தெருவில்
நேரே வந்து கொண்டிருக்கும் பொழுது உங்கள் வீட்டில் அழு
கைச் சத்தமா யிருந்தது, அவ்விடத்தில் வெளியே நின்று கொண்டி
ருந்தவர்கள் என்னையழைத்து பாவா! நீ சற்றுமேஹர்பாணி செய்து
புலானமனிதனிடத்தில் போய் உம்முடைய பெண்சாதிக்கு சக்காத்
தடைய ஹாலா யிருக்கிறதென்று சொல்லிவிடும் பாவாயென்று
வன்கால்லும் கூடவிழுந்தார்கள் ஆகையால் யான் ஓடிவந்தேன்வெளி
என்றார். இவ்வார்த்தையைச் செவியுற்ற கடைக்காரன் ஹா! வெனப்
பதறி ஓட்டென கடைவைவிட்டிறங்கி கைகால்பதற அதிவேகமாய்
நடந்தான் அவன்பின்னே உம்ரும் சற்றுதூரம்சென்று பழையபடி
திரும்பிவந்து அக்கடையில் உட்கார்ந்திருந்தார்.கடைக்காரனோ கோக்கி
ஓட! உன்னுடைய எஜமான்போகும் வழியில் யாரோ ஒரு ரோக்கி
வந்திருக்கின்றது. ஆகையால் நடத்தமான பஸரா வகையில் நாறு
ரூபாய்பைக்கட்டில் ஒரு பைக்கட்டு வாங்கிக்கொண்டு வரச்சொன்
னார் சீக்கிரமாய்க் கொடுயென்று கேற்கவே கடைக்காரப்பையன்

இவன்சொல்வது நிஜமாயிருக்கும் எனெனில் இவன்தானே நம் எஜமானை அழைத்துக்கொண்டு தென்புறம். ஆகையால்பாதகியில்லை இவனிடத்தில் கொடுக்கலாமென்று மனதில் நிர்மானித்துக்கொண்டு கடுத்தரமான பலா ஒரு தாமரைசோல்பக்கட்டில் ஏற்று எடுத்துக்கொடுத்தான் அதை வாங்கிக்கொண்டு உம்ரு வேலூர் பாதையைப் பிடித்து கடத்துசென்று மதராஸாவிற்போய் பார்க்கையில் முல்லான் சாயபு அவிடத்தில் காணுமலிருக்கக்கண்டு இதுதான் சமயமென உஸ்தாதுடையபடிக்கை பிச்சானுவின்மேல் விரித்திருக்கும் குஸ்டே மெத்தையை புரட்டி அதில் நிறைய ஊசிகளை நோக்கத்துடன்சொருகி வசியின் முனைகளெல்லாம் மேல்நோக்கி இருக்கும்படியாய் குஸ்டே மெத்தையை விரித்து வைத்துவிட்டு கல்ல பிள்ளையைப்போல் பேசாமல்போய் விட்டார்.

மறுநாட் காலையில் பிள்ளைகள் யாவரும் மதரசாவிற்கு வந்து தத்தம் பாடங்களை படித்துக்கொண்டிருந்தார்கள். அவ்வேளையில் முல்லான்சாயபு வந்து தமது வழமையாய் உட்காரும் பீச்தானுவில் இருப்பதற்காக மெத்தை மேல் காலைவைத்தார், காலில் ஊசி ஏறவே ஹா வென்று கதறி எட்டார்ந்து ஊசியப்பிடுங்கி கீளைத்து கையை ஊன்றினார், கையும் ஏறிற்று உட்கார்க்கார், இருப் பிடத்திலும் ஏறிற்று, ஆ! ஹா வென்று மல்லாக்க படுத்தார், முதுகெல்லாம்பூர்த்துவிட்டது வலப்புறம் இடப்புறம் புரண்டார், இரண்டு புறங்களிலும் ஏறிவிட்டது அப்பொழுது முல்லான்சாயபு படும்பாடு இன்னதமென்று சொல்லமுடியாது, மதரஸாபிள்ளைகள் யாவரும்கூடி உஸ்தாதுடைய தேகத்தில் பாய்ந்திருக்கும் ஊசிகளை பிடுங்க ஆரம்பித்தார்கள், அவ்வேளையில் பிள்ளைகளெல்லாம் யார் இவ்விதம் செய்திருப்பார்கள் என்று பேசிக்கொள்ளும் வேளையில் உம்ரு தானும் கூட ஆ! ஹா! எத்த பாவிப்பயல் இவ்விதவேலை செய்திருப்பான் அவனை யான் கண்பேனுகில் அவனையும் இதற்குமேல் அவஸ்தைப்படும்படி செய்வேன், மாமாவுக்கு இவ்வித வேலைசெய்தானே அவன் எப்படிப்பட்டவனெனறுனிருப்பான் அடடே! சண்டாளா! நரமற்ற நெஞ்சை யுடையவனே என்று பலவிதம் பரிதாபப்பட்டு கொள்ளைப்போல் நடித்துக்கொண்டு தானும் ஊசிகளைப்பிடுங்க ஆரம்பித்தார், பின்பு அதிக தயாளமுடையவராய் கண்ணீர் சொரிய விம்மியழுது எங்கேயோ சென்று ஓர் பல்லக்கு கொண்டுவந்து அதில் முல்லான் சாயபை தூக்கி யெடுத்துப் படுக்கவைத்து, பிள்ளைகளெல்லாம் சேர்ந்து, அப்பல்லக்கை யெடுத்துச் சுமந்துக்கொண்டுபோய் பரிகாரி வீட்டுக்குச் செல்லும் வழியில் ஊசிகொடுத்த கடைக்காரன் ஏற்கெனவே உம்ருவை நோக்கி டிருப்பவனுகையால் அவரைக் கண்டவுடன் ஓடோடியும் வரும்பொழுது, அடே பயலே நீ பொல்லாத திருடன் பிறகையன் களவுசெய்து வேடிக்கை பார்ப்பவன். நீ யெவ்வினை பரேப் யெல்லும் எமாற்றுதல் செய்து யென் பெண்சாதி சாகக் கிடக்கிறுளென்று யென்னை வீட்டுக் கனுப்பிவிட்டு என் கடையில் நான்கு ஐந்துரூபாய் கிரயமுள்ள ஊசிப் பொட்டலங்களை கடையின் குமஸ்தாவை ஏமாற்றி யான் வரும்பொழுது வாங்கிக்கொண்டோடிப்போய் விட்டாயல்லவா? இப்பொழுது நீ எங்கே தப்பித்துக்கொண்டாய், இதோ உன்னுடைய கல்லியை ஊபகழுட்டி விடுகிறேன் பாரடா! விட்டேனே இதோ பிடிக்கிறேன் உன் நாற்புகளை உரி உன் தேகத்தை வரிந்து கட்டுகிறேன், பிடி பிடி யென் றோடி னான், இவ்வார்த்தைகளை பல்லக்கில் படுத்திருந்த முல்லான் சாயபானவர் கடைக்காரனை யழைத்து அப்பையன் உன்னிடத்தில் அப்பொழுது வாங்கிச் சென்றது யென்று கேட்டார், இவர்களுக்கு பேசிக் கொண்டிருக்கும் வேளையில் உம்ருவானவர் பிடித்தார் ஓட்டம் பின்பு மதரஸாவிற்குவந்து, அபீஸ்பூல் இருவரையும் நோக்கி ஆண்டவன் நமக்கு உதவியா யிருக்கின்றன், இனி நாம் இந்த பட்டணத்திற்குள் இருப்பது தகுதியல்ல புறப்படுகை யென்றுரைத்தார். இவ்வார்த்தையைக் கேட்ட அமீர்மக்பூல் இருவரும் மனம் பதறியவர்களாய் உம்ரே யாதுகாரணம் சிக்கிரம் சொல்லும் என்ன தவறுகள் நடந்துவிட்டது யென்று கேட்டார்கள், அவ்வார்த்தையை கேட்ட உம்ருவானவர் யென்னுடைய புத்தியானது இப்பொழுது சுவாதீனத்தில் இல்லை யெல்லாம் வழியில் விரோமாய்ச் சொல்லுகிறேன் வாருங்களென் றுரைத்தார். இவ்வார்த்தையைக்கேட்ட அமீரானவர் உம்ருவை அரை காதிகையும் விட்டுப்பிரியாதவரானபடியால் உடனே புறப்பட்டு வாரும் எங்கேசெல்லுகின்றீரோ வருகிறேனென்று உடனே அமீரும் ரக்பூலும், இன்னும் அமீருடன் சிநேகிதமாயிருந்த மதரசாபிள்ளைகளிற் சிலருமாய்க் கிளம்பி உம்ரு உடன் புறப்பட்டு மனதில் பயங்கர முடையவர்களாய் பின்னல் திருப்பித் திருப்பிப் பார்த்துக்கொண்டே உம்ரு முன் செல்லுபவரும் பின்சென்று அடுகபீஸ் மலையின் தொதும்பிற் போய்

சேர்ந்தார்கள், அவ்விடத்திலேயே ஓர் இரவு பகல் முழுவதும் இருந்தார்கள். அவ்விரவு பகல் முழுவதும் யெல்லோரும் பசியோடிருந்த படியால் மறுநாட் பொழுது விடிந்த பின் அமீர் ஹம்ஜா வானவர், உம்ருவை யழைத்து சொல்லுகிறார், ஏ! உம்ரு கம்மீ லோருக்கும் பசியென்பது மிகைத்து, கண்ணிருண்டு, காதடைத்து, காலுலர்த்து ரீபசவும் சக்திகுறைந்து, போயிருக்கிற படியால் இவ்வேளையில் நமக்கு வஜீபனத்திற்காக, ஏதாவது வழிதேடும், அதைத் தின்று, பசியைநீக்கிக்கொள்ளலாமென்றார் அதைக்கேட்ட உம்ருஅமீரை நோக்கி நீங்கள்யாவரும் இவ்விடத்திற்றானே சற்றநேரம் உட்கார்த்திருங்கள் யான்போய் யாவருக்கும் வஜீபனம்கொண்டு அதிசீக்கிரமாய் வருகின்றேன்யென்று புறப்பட்டு பட்டணத்திற்குள்வந்து சேர்ந்து, ஓர் கலாயிக்கடையிற்போய் அந்தக்கடைக்காரனைநோக்கி இரண்டுமூன்றுமுழம் நீளமுள்ள ஊட்டுக்குடல்வேண்டும் அது ஓர்மருந்துக்காக தேவையிருக்கிறதென்று கேட்டார், உடனே கலாயிகாரன் மூன்றுமுழத்திற்குமதிகமாய் ஓர் துண்டறுத்து கொடுத்தான், வாங்கி எடுத்துக்கொண்டு ஓர் கிழவியின் வீட்டைநோக்கிச்சென்று அவள் வளர்க்கும் கோழிகளை அடைத்திருக்கும் கூண்டின் அருகிற்சென்று அக்குடலின் நுனிப்பில் ஓர்முடி முடிந்து முடிந்திருக்கும் தலைப்பை கோழிக்கு முன்னில்போட்டார். அதை கோழியெடுத்து தொத்தி விழுங்கியது குடலின் தலைப்பு வயற்றுக்குள் சென்றவுடன் மற்றொரு தலைப்பை உம்ருவாயில் வைத்துதினர் அக்காற்றானது கோழியின் குரல்வளையை விம்மச் செய்த படியால் அது சப்திக்காமல் நின்றுவிட்டது உடனே பிடித்து தூணியில் கட்டிவைத்துக் கொண்டு அவ்விதமே அக்குடலைக்கொண்டே பத்து பதினைந்து கோழிகளைப் பிடித்து மூட்டையாகக் கட்டிக்கொண்டு அக்கிழவியின் வீட்டுப்பின்புறத்தில் வந்து இரண்டுமூன்று கற்களை யெடுத்து வீட்டினமேல் விடைறிந்தார். உடனே வீட்டுக்காரியாடா கல்லெறிவ தென்று வெளியில்வந்து வலதுபக்கமாய்ச் சுற்றிப்பார்த்துக்கொண்டு வருகையில் உம்ரு இடதுபக்கமாய் சுற்றிவந்து வீட்டுக்குள் நுழைந்து அவள் சேர்த்து வைத்திருந்த கோழிமுட்டைகளை யெல்லாம் சேர்த்தெடுத்துக்கொண்டு வெளியில்வந்து கடைந்தெருவிற் போய் ஓர் சோற்றுக்கடைக்காரனிடம் கோழிகளையும் முட்டைகளையும் கொடுத்து, அவைகளைப் பொரித்துத்தரும்படி செய்து முட்டைகளை யுல்வா அடைசெய்து தரும்படிசொல்லி இன்னும் ஐந்து ரூபாய்க

குக்கு அதிக இத்திப்புடைய ஷீர்மாலி யென்னும் பிர்னி செய்து தரும்படியாகவும் இன்னும்காவஸ்துக்களாகிய சோட்டி, பிஸ்தோத்குமா, முதலியவைகளில் காலுக்கு ரூபாய்களுக்கு வாங்கி அவைகளையெல்லாம் கூடை யென்னும்பெரிய பெரியதட்டங்களில்திரப்பி தன் சிரசில் எடுத்துக்கொண்டு கடைக்காரனைநோக்கிஎன்னுடன் உம்முடைய ஆளினில் ஒருவனை அனுப்பிலையும் காஜா அப்துல் முத்தலிபு அவர்கள்வீட்டில் இன்றையதினம் தயவுத்திருக்கிற படியால் அவர் இவைகளை வாங்கிக்கொண்டு வரச்சொன்னார் ஆகையால் உடனே வீட்டுக்குபோய் பணத்தைக் கொடுத்தனுப்பிவிடுகிறேன் யென்று சொன்னார் கடைக்காரனும் காஜாவினுடைய பெயரைச் சொன்னவுடனே யாதொரு தகராரும் செய்யாமல் ஆளை யனுப்பிவைத்தான். உம்ரு அவனை அழைத்துக்கொண்டு சிலதூரஞ்சென்றபின் அந்த ஆளை நோக்கி அப்பா! நீ முன்னடையச்சென்று அப்துல்முத்தலிபு வீட்டின் உள்முகப்பில் போய் உட்கார்ந்திரு, யான் இதோ பின்னேவந்து காசுவாங்கி கொடுத்தேனென்று சொல்லி அவனை முன்னேயனுப்பிவிட்டு உம்ரு தட்டங்களை தூக்கிக்கொண்டு அபூகபிஸ் மலையைநோக்கி சென்று அமீர் ஹம்ஜாவின் சமுகத்தில் தட்டத்தை இறக்கினார். அமீர் உம்ருவைக்கண்டு அதிக சந்தோஷமுற்றவராய் தட்டத்தை இறக்கி பார்க்க அப்படிவேலைக்குத் தக்கபடி பலவிதமான பொரியல் கறியும், குமா, சோட்டி, பிர்னி, முட்டைஹல்வா, முதலாகியவைகளும் நிறைய இருக்கக்கண்டு யாவரும் ஆனந்தமடைந்து இருக்கும் வேளையில் அமீர் அதிலிருந்த பிர்னி அடை கபாப் முதலியவைகளைக் கண்டு மிகவும் சந்தோஷமுற்றவராய் உம்ரு உடைய செய்கைகளினைத்தும் அறிந்தவரானபடியால், உம்மை முக்தி சொல்லும் இந்த வஜீபனங்களை எவ்வெவ்விதத்திரத்தினுல்கொண்டுவந்தீர் சொல்லுமென்று கேட்டார். அதைக் கேட்ட உம்ருவானவர் அமீரே அவ்வஸ்து ஜும்பதுகளாம்யென்னும் முக்தி பசியாவது பிக்தி வார்த்தையாவேது யென்றே பழமொழியிருக்கிறது. ஆகையால் முக்தி பசியைத்தீர்த்துக் கொள்ளுங்கள். பிறகு சமாச்சாரம்சொல்கின்றேன்யென்று சொல்லி அமீர் முதலாகிய யாவரும் பசிதீரபுசித்தார்கள்.

இப்படிவ்வாறிருக்க சோற்றுக் கடைக்காரன் உம்ருவுடனனுப்பிய ஆள் காஜா அப்துல் முத்தலிபவர்களுடைய மாளிகையின் தெருவடையில் உட்கார்ந்திருக்கக் கண்ட காஜாவானவர், நீயாரென்று

கேட்டார் அதைக்கேட்ட கூலியாள் உம்ரு சாமான்கள் வாங்கி வந்த தையும் தான் பூன்னீர் முதலாகிய சில சாமான்கள்வாங்கி வருவதா யும் என்னை முன்னல்போய் இவ்வீட்டிலிருக்கும் படியாயும் ஏறு ப்பி வைத்தார், ஆகையால் யான்வந்திருக்கிறே னென்றுரைத்தான். இதற்கு முன், முல்லான் சுர்யபானவர், காஜாவினிடம் உம்ரு செ யித கெடுஞ் செய்கைகள் யெல்லாம் முறையிட்டுக் கொண்டு அவ் உம்ருவை தேடியவரா யிருக்கின்ற வேளையில் சோற்றுக் கடைக்கார னும் பணத்திற்கு வந்திருப்பதை கண்டு ஆச்சரிய மற்றவராயிருக்கும் வேளையில், ஓர் கிழவி, யானவள் தலையில் கையை வைத்து ஆகாண்டு காஜாவினுடைய மாளிகையில் அவளும் வந்து காஜாவை நோ க்கி உம்ரு கோழிகளையும் முட்டைகளையும் எடுத்துக்கொண்டோடிப் போனதை சொல்லி தலையிலும் வாயிலும் அறைந்துக்கொண்டு அழு தான், இவைகளை யெல்லாம் செவியுற்ற அப்துல் முத்தலிபான வர் பலவிதமாயோசித்து அந்த சோத்துக்கடைக்காரனை நோக்கி அந்த உம்ரு எத்தப் பக்கம் சென்றான் தெரியுமோ வென்று கேட்டார், அ தற்கு அந்த கடைக்காரன் காஜாவை நோக்கி காஜாவே என்னை இவி டத்திற்கு அனுப்பிவிட்டு உம்ரு அபூகபீஸ் மலையை நோக்கி நான்கு புறமும் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே போனார் யென் றுரைத்தான். அதைக் கேட்டு அப்துல் முத்தலிபானவர், அவனு க்கு ஐந்து ரூபாயைக் கொடுத்தனுப்பிவிட்டு கிழவிக்கு கோழிக்கும் முட் டைக்கும் கிரயம் கொடுத்து இருவரையும் அனுப்பிவிட்டு முல்லான் சாயபை அழைத்து தாங்கள் கொள்ளும் பிரயாசை யெடுத்து மத சாபிள்ளைகளிற் சிலரையழைத்துக் கொண்டு அந்த அபூகபீஸ் மலை யின் குகையை அடித்து, அவ் உம்ருவை எவ்விதத்திலாவது பிடித் துக்கொண்டு வாருங்கள் யென்றுரைத்தார் அவ்வார்த்தையை கேட்ட முல்லான்சாயிபானவர் மண்டைப்பூச்சி மூணுமூணுவென்று ஊரிய படியால் தமக்கு பின்னல்வரும் விஷயங்களை கவனியாமல் நல்லதெ ன்று சம்மதித்து சில பிள்ளைகளோடு அழைத்துக் கொண்டு அவ் அபூகபீஸ் குகையை அடிக்கச்சென்றார் இவர்கள் வருவதை அறிந்த உம்ரு அமீர் ஹம்ஜாவை நோக்கி அமீரே நீங்கள் யாவரும் இம்மலை யின் பொதும்பிற்றானே இருந்து வேடிக்கை பாருங்கள், நம்முடை ய முல்லான் சாயபையும் அவருடன் வரும் ஷாகிர்களையும் எவ்வி தமாய்ச் செய்து வந்த வழியைப் பார்த்து ஓடப் பண்ணு கிறேன், யென்று சொல்லி கெக்கலிபோட்டு சிரித்துக் கொண்டே வெளியில்

வந்து நின்று கொண்டிருந்தார், அவ்வேளையில் முல்லான்சாயபு சற் று தூரத்தில் நின்றுகொண்டு ஷாகிர்களில் நின்றும் அபூஜகலையும், சுபியானையும் அழைத்து நீங்க ளிருவரும்போய் அந்த உம்ரு வை பிடித்துக் கொண்டு வாருங்களென் றனுப்பி வைத்து விட்டு தான் வெளியில் நின்று உம்ருவை பயங்காட்டுவதுபோல நின்றுக் கொண்டிருந்தார். அப்பொழுது அபூஜகல், அபூசுபியானிருவரும் உம்ருவை அடுக்கநெருங்கியபோது அவ்விருவரைநோக்கி உம்ருவா னவர் எடா! அபூஜகலே அபூசுபியானே உங்களிருவருக்கும் சாகுங்கா லம் அடுத்துவிட்டது, அப்படி உங்கள் உயிர் நீங்கவேணுமானால் என்கிட்டவாருங்கள் இல்லாமல் தப்பிப் பிழைக்கவேணுமானால் அப் டியே திரும்பி ஓடிப்போங்கள் யென்றுரைத்தார். அவ்வார்த்தை யைக்கேட்டும் திரும்பாமல் பிடிக்கச்சென்றார்கள். அப்போது உம்ரு சொல்கிறார் அடா முல்லான் சாயபுக்கு தான் காய் கடித்திருக்கிறது. உங்களுக்கென்ன பைத்தியம் பிடித்திருக்கிறதா? உயிர் பிழைக்கவே ணுமானால் திரும்பி ஓடிப்போய் உங்கள் தாய் தந்தையர்கள் முகத் தில் முழியுங்கள் என்றுரைத்தார். என்ன சொன்னலும் அபூஜக லானவன் கேட்பானா? அவன் பிறவியே பித்தனுபசாது நிறைந்து பிறந்தவனுகையால் கேளாமல் ஜவாம்மர்திசெய்து, முன்னுக்குச் சென்றான். உம்ருவானவர் அவ்விடத்திலுள்ள மலைக்கல்லை கரத்தி லெடுத்து அதிவேகமாய் அபூஜகலுடைய முகத்தைக் குறிப்பிட்டுவீசி அடித்தார். அவ்வடிபட்டு அவனுடைய முகமெல்லாம் காயங்களாகி இரத்தம் வழிந்தோட ஆரம்பித்தது இன்னம் ஓயாமலெறிந்த கற் களின் அடியினால் அவன் தேகமுழுவதும் சல்லிசல்லியாய் துவாரம் விழுந்துவிட்டது உம்ரு வல்லெறிவதில் மஹா சமர்த்தானபடியால் அவர் கரத்திலெடுத்த ஒருகல்லாகினும் பழுதாகாமல் அடிபட்டது, அம்மலையின் கற்களெல்லாம் குண்டுகளுக்கொப்பாகிய திண்டாயுவ் முடைய உருட்சியாகிய கற்களானபடியால் பெருங்கற்கள் பீரங்கு ண்டுகளைப்போலவும் சிறுகற்கள் யெல்லாம் துப்பாக்கிக்குண்டு களைப்போலவும் பாய்ந்து தேகத்தை சல்லிசல்லியாய் துளைத்துவிட் டது அபூஜகலுடைய நெற்றிக்குள்ளாலும் முகத்திற்குள்ளாலும் சில கற்கள் நுழைந்துக்கொண்டது ஆகையால் அவன் அவ்வருத்தத்தை பொறுக்கஇயலாதவனுய் பின்னிடைந்து ஓடிப்போய் முல்லான்சாஹி பிடத்தில்சென்று முறையிட்டான். அவ்விடத்தில்நின்ற மதாரஸாபிள் ளைகள் யாவரும் அபூஜகலுடையகதியைப்பார்த்து ஒவ்வொருவரும்

தங்கள் தங்கள் காரிகளை பின்னுக்கிழுத்தார்களே யொழிய ஒருவ
ராவது முன்னுக்கு அடிபெயர்த்து வைக்கவில்லை ஆகையால் மூர்
லான்சாயபானவர் சிறுவர்களைக் கண்டால் உம்ருபயமில்லாமல் அடிக்
கிறுன் யாம்சென்றால் நமக்கு ப்யப்படுவா னெனக்கருதி தாமேஉம்
ருவை பிடிக்கரென்று, அருகில் நெருங்கினர் அப்பொழுது உம்ரு
ரீர்கல்லையெடுத்து சுழட்டி முல்லான் சாயபுடைய சிரசிற்குறியாகு
வைத்தடித்தார் அவ்வடியானது அவருடைய கபாலத்தை உடைத்து
பிளந்துகொண்டி போய்விட்டது, ஆகையால் இந்தப் பிரவாகமா
னது முகத்தோடு ஜலத்தைப்போல் ஓட ஆரம்பித்தது அதையறிந்த
முல்லான்சாயபு முன் வைத்தகாலை பின்னுக்கிழுத்து திரும்பிச்
சென்று பிள்ளைகளுடன் தமது வீட்டைநாடி புறப்பட்டுச்சென்று,
இரத்தப்பிரவாகமானது வழிந்தோட தானும் அழுதுகொண்டும் மற்றவர்
களும் காஜா அப்துல் முத்தலிபுடைய தாயிடம்சென்று காஜா
வினிடம்காண்பித்து நடந்தசம்பவங்களையாவையும் விபரமாய்ச்சொ
ல்லி காஜாவே இனியான் உம்ருவை புடிக்கவைப்பதில் நின்று விலகிக்
கொண்டேன் தாங்கள் நல்ல சிபாரிசு செய்து நமக்கு தீர்க்கவும்
ரைத்தார் இவையனைத்தையு மறிந்த காஜா அப்துல் முத்தலிபு
தங்கள் குதிரையின்மீது சவாரிசெய்து அதிகவேகமாய்ச் சென்று
திவேகமாய்ச் சென்றார் காஜா வருவதையுணர்ந்த உம்ருவானவர்
அமீர்ஹம்ஜாவை நோக்கி அமீரே! இதோ காஜாவருகிறார்கள். யுத்த
னிடத்தில் என்னுடைய தைரியமொன்றும் சொல்லாது, என்னைப்பிடிப்
பார்களேயானால் என்னசெய்வார்களோ வானறியேன் ஆகையால்
அவர்களுடைய குலாம் யான் அவர்களுக்கு இரண்டகம்செய்யாமல்
ஓடிப்போய்விடுகிறேன். இனிநீங்களுண்டு காஜாவுண்டு எவ்விதமாய்ச்
சமயம்வாய்க்கிறதோ அவ்விதம செய்யுங்களென்று ஓடிப்போயினர்.

அவ்வேளையில் அப்துல்முத்தலிபு மலைபோதும்பிற்குள் சென்று
பார்க்கையில் உம்ருவுடைய காலடிச்சுவடையும் காணப்படவில்லை.
அமீர்முதலாகிய பிள்ளைகளைக்கண்டு அமீரைநோக்கி தங்களுடன் பரி
யின்மீதேற்றிக்கொண்டு மற்றவர்களையும் கூட்டிவரும்படி அழைத்துச்
சென்று தமது மாளிகையிற்போய்ச் சேர்ந்தார்கள் யாவரும் வந்த
உடன் காஜா அமீர்ஹம்ஜாவை நோக்கி அதிகவிதமாகிய நற்போத
னைகளை போதித்து சொல்லுகிறார். பாவா! இனி அந்த துஷ்டனுடைய
உம்ருவுடைய பெயரையும் நாவிலெடுக்காதேயும் இனி ஒருபோதும்

அவனை நமது வீட்டுக்கு அழைக்கவேண்டாம். ஏழைஜாதாக்கள் இவ்
விதஜாலீமாகிய துஷ்டர்களுடன் இணக்குவதை விட்டும் நீங்கிபத்
தியம் பிடிப்பதுபோல் இருக்கவேண்டும், லாயக்கில்லாத ஷோதா பிள்
ளைகளுடன் சேர்வதைத் தவிர்த்தொப்புாய் நீக்கி விடவேண்டும். இவ்
விதஹராம்ஜாதாவாகியவர்களுடன் ஜொஹபத்தென்னும் சேர்க்கை
அரவே கூடாதகாரியமாயிருக்கும், அவர்களுடன் நீர் சேருவீராகில்
உம்மையும் கெடுத்து, கெட்டவழியில் கொண்டுபோய் உம்முடைய
பெயரை பலஹீனத்தில் இழுத்துவிட்டுவிடுவார்கள். அப்பொழுதும்
முடைய பெயர்கெட்டுப் போவதுடன் உம்முன்னோர்களுடையவும்,
பெயர்கெட்டுப் போய்விடுமென்று பலவித நற்புத்திகளையுரைத்தார்.
இதுபோல் இன்னும் எவ்வளவு நற்போதனைகளை போதித்தாலும்
அமீருக்கு உம்ரு இல்லாமல் எப்படிப் பொழுதுபோகும் எவ்விதம்
பலி உண்டாகும் எப்படி வித்தரைசெய்வார்? உம்ரைக்காணமல் அமீ
ரானவர் கலங்கி மயங்கி திங்கிவாடி சோம்பி ஊண் உறக்கம் மற்று
அழுதகண்ணீரும் சிந்தையு முடையருமாய்இருந்தார். இவையறிந்த
காஜாபுத்திரனை யழைத்து எவ்வளவோ தன்களா லியன்றவரையில்
ஆறுதல் தேறுதல்சொல்லியும் கோபால்கண்ணீரினுல்உடைகளெல்
லாம்நனைய அழுதுகொண்டே இருந்தார். காஜா எவ்வளவு சொல்லி
யும்கேளாமல் ஏழுகாள்வரையில் அன்னந்தண்ணீர் ஆகாரமில்லாமல்
அழுதுக்கொண்டே யிருந்தார் ஆகையால் காஜா அப்துல் முத்தலி
பானவர் யோசிக்கத்தொடங்கினர் யாம் இனி அமீர்ஹம்ஜா விஷயத்
தில் சும்மாவிருப்போமாகில் அநியாயமாய் மகன் உயிர்நீங்கி விடுவா
னெனக் கருதியவராய் மணமிடைந்து சில ஆட்களை அனுப்பி
உம்ருவைத் தேடிப்பிடித்து கொண்டுவரும்படி,செய்தார், பின்பு தம்
அருமைப் புதல்வனைநோக்கி மகனே யான் உம்ருவை பிடித்துக்கொ
ண்டுவந்து உன்னிடத்தில் ஒப்புவிக்கின்றேன். நீ அவனுடைய
நமானவர்த்தைகளையும் அறவே செவிக்கெடுக்கக்கூடாது அப்படி உம்
முடையமனம் விளையாட்டின்மேல் ஆசைகொண்டானால் நம்முடை
ய தோட்டத்திற்குச்சென்று அவ்விடத்தில் மனம்போல் விளையாடி
களிப்பெய்துங்கள் அந்த தோட்டத்தில் அறவே அடியெடுத்தவை
யாதேயுங்கள் என்னுடையவார்த்தைகளை எப்பொழுதும் ஹிர்தயத்
தில் மரத்திலடித்த ஆணியைப்போல் பத்திரப்படுத்திக் கொள்ளுங்
கள்என்று பற்பல நற்போதனைகளைப்புகட்டி, அமீர்ஹம்ஜா முதலாகி
யவர்களை பரியாறம்படி ஆஞ்ஞாபித்தார், அதுபோல் யாவரும் வஜீ

பனம் அருந்தி மீன்களைப் பெய்தி யவர்களாய் சந்தோஷத்தோடு வேடிக்கை விநோதமாய்க் காலங்கழித்துக் கொண்டிருந்தார்கள் அவ்விதமிருக்கும் நாளையில் ஒருநாள் உம்ரு வானவர் அமீரை நோக்கி வாருங்கள் தோட்டத்திற்குச் சென்று விளையாடி வருவோமென்று அழைத்தார், அவ்வார்த்தைக் கிசைந்த அமீர் உம்ரு மக்பூல் இருவரையும் அழைத்துக் கொண்டு தங்கள் தோட்டத்தை நாடிச் சென்று அதற்குள் நுழைந்து அதிக ஆனந்தத் துடனே நோட்ட முழுவதிலும் அங்கு மிலங்கும் சுற்றிச் சுற்றி விளையாடித்திரிய ஆரம்பித்தார்கள் அவ்வேளையில் உம்ரு வானவர் தங்கள் விளையாடுகின்ற காரணவினுடைய தோட்டத்தை விட்டு பிறருடைய தோட்டமாகிய அடுத்த தோட்டத்திற் சென்று அத்தோட்டத்தின் கண் உள்ள பலபல கனிவர்க்கங்களையும் வேண்டிய மட்டில் பறித்துவிட்டு திரும்பிவந்து அமீரை நோக்கி ஹஜ்ரத்! இத்தோட்டத்திற் கடுக்க ஒரு தோட்டமிருக்கின்றது, ஆ ஹா அதை என்னென் றுரைப்பேன், அமீரே அத்தோட்டத்தின் கண்ணுள்ள பலவித கனிவர்க்கங்களின் ருசிகரமானது காம் எப்பொழுதும் கண்டுங்கேட்டு மிருக்கமாட்டோமே அவ்விதபற்பல பழவகைகள் நிறைந்த மரங்கள் அடர்ந்து இதோவெளியன்றிலும் அத்தகைய ஜாதிகளிற்குலை குலையாய் பழுத்து தேன்வடியக்குலைகள் தூய்ந்து இடுகின்றதென் றுரைத்தார் இவ்வார்த்தைகளைக்கேள்வியுற்ற அமீராளிவர் உம்ருவை நோக்கி அத்தோட்ட மெங்கேயிருக்கிறதென்று வினவினார். உம்ரு சொல்கின்றார். அமீரே இதோ தங்களுடைய தோட்டத்தை அடுக்க வெகு சமீபத்திலிருக்கிறதென் றுரைத்தார், அப்படியானால் வாருமென்று உம்ரு, அமீர், மக்பூல் மூவரும் சேர்ந்து அத்தோட்டத்தை நாடிச் சென்றார்கள். அத்தோட்டத்திற்குள் நுழைந்து என்னபார்க்கின்றார்க ளானால் பலவித வர்ணங்களமைந்த அழகுபொருந்திய நற்கந்தத்தை தரக்கூடிய புஷ்ப ஜாதிகளின் செடிகளானது பந்தி பந்தியாய் நட்டுத் தட்டமாய் பூக்கனத்தவிற இலை, மரம், செடிகளை கண்ணினால் பார்க்க இயலாதவித மாய் நெருங்கிய பூக்கள் புஷ்பித்து பார்ப்பவர்களின் கண்கள் வேறொன்றில் செல்லாத விதமாய் புட்பித்திருக்கவும், இன்னும் சிலபேரீச்சை மரங்களில் பழக்குலைகளானது நெருங்கி தேன்வடிந்து கொண்டு இருந்தது ஆங்காங்கு பல இடங்களிலும் முத்தின் நிறத்தையுடைத்த தெளிவாகிய சுத்த ஜலங்கள் ஓடிக்கொண்டிருக்கும் அருவிகளானது மனோரம்மியத்தை உண்டுபண்ணிக் கொண்டிருந்தது இன்

னும் பல இடங்களிலும் பற்பல கனிவகைகளின் பாங்கள் அடர்ந்து, பிஞ்சு, காய் கனிகள் முதலாகியவைகள் நிறைந்து அத்தோட்டத்திற் செல்பவர்களை தலைவணங்கி அஸ்ஸலாமு அலேக்கு மென்று தலையை யாட்டி அழைப்பது போல் அம்மரங்களின் கனிகள் நிறைந்த குலைகளானது வளைந்து காற்றில் அசைந்து கொண்டிருந்தது, அக்கனிகளில் நின்று ஒருவன் ஒரு பழத்தைப் புசிப்பானில் அதன் இன்பமான ருசியினால் இம்மை, மறுமையை மறந்துவிடுவான், இவ்விதநிஷ்மத்துகளடங்கிய அத்தோட்டத்தின் நடுவில் சங்கே மற்மற் வென்று சொல்லப்படும் மேஜ்மையானகல்லினால் ஓர் தண்ணீயொன்று நிர்மைக்கப் பட்டிருந்தது, அத்தத்களின் வழுவழுப்பாகிய பிரகாசத்தினால் பார்ப்பவர்களின் கண்கள் கூசிப்போகும் படியா யிருந்தது, அமீரானவர் அத்தண்ணீயின் மேல்வந்து உட்கார்ந்து சாய்ந்து கொண்டு அத்தோட்டத்தின் வேடிக்கை விநோதங்களைப்பார்த்து மனங்களிக்கும்பொருட்டு தங்கள் கண்களை அத்தோட்டத்தின் கண் செலுத்திபார்க்கும்படி விட்டிருந்தனர், அவ்வேளையில் உம்ருவானவர் அவ்விடங்களிலுள்ள பற்பல கனிவர்க்கங்களையும் வேண்டியமட்டில் பறித்து தம்முடைய வயிற்றை நிரப்பிக் கொண்டிருந்தார், கொஞ்சகாலத்தில் ஒரு பேரீத்தம் பழக்குலைகளை வெட்டி கையில் பிடித்துக்கொண்டு தானும் பறித்துப் புசித்தவராய் அமீர் அவர்களின் சமூகத்தில் வந்தார். அப்பொழுது அமீரானவர் உம்ருவை நோக்கி உம்ருவே நாமும் இப்பழங்களைப்புசித்து அதன் ருசிகரங்களை அறியலாமாவென்றார். அவ்வார்த்தையை கேட்ட உம்ருவானவர் அமீரைநோக்கி சாஹிபே இருங்கள் யான் எவ்வளவோ கஷ்டப்பட்டு மரங்களின் மீதேறி வெகு பிரயாசையுடன் உயிரை கொடுத்து பறித்துவந்திருக்கின்றேன் யான் தின்னமல் தங்களுக்கு கொடுத்து விடுவேனே? கண்ணியிருக்கிறது இருந்த இருப்பில் புசிக்கலாமென்று நினைத்திருக்கின்றீர்களோ வேணுமானால் என்னைப் போல் நீங்களும்சென்று பிரயாசைப்பட்டு என்கூட மரத்தினடியில் வந்து தங்கள் கையிலுறுத்து புசியுங்களென்றுரைத்தார். இதைகேட்ட அமீரானவர் யெழுந்து ஓர் சுத்த மரத்தினடியிற்போய்நின்று, அம்மரத்திலேறி பழக்களைபறிக்க யோசித்தார். அவ்வேளையில் உம்ருவானவர் அமீரை நோக்கி ஹஜரத்தாயெ எஜமானே தங்களுடைய குலாமாகிய யானிருக்கின்றேன். எறிப்பறித்துக்கொடுக்க, தங்களைப்போல் தீரசம்பருத்தமனிதர்கள் மரத்திலேறலாயக்கல்ல என்னைப்போல் மெல்லியதேகத்தை யுடையவர்

கள் தான் மரங்களிலேறி பழங்களைப்பறிக்க தகுதியுடையவர்கள். ஆனல் தங்களைப்போலொத்த பருத்த தேகமானது எனக்கிருக்குமா தில் இம்மரங்களை வேருடன் பிடுங்கிசாய்த்து விடுவேனென் றுரைத் தார். இவ்வார்த்தையை செவியிற் கொண்ட அமீர் அவர்களுக்கு வெட்கத்தினல்மேனிமூண்டு தேகத்தில் ஓர்வித கலாபத் தென்னும் தேகஉபாதல் உண்டாயிற்று, அப்பொழுது தாம் ஒன்றியாய் பருத்து ஒங்கிவளர்ந்த அவ்வீத்தமரத்தில் முண்டாவிஞல் ஓர் இடி இடி இடித்தார். அம்மரமானது வேருடன் பூமியைவிட்டும் பேர்த்து கீழே சாய்ந்தது அவ்வேளையில் உம்ருவானவர் அமீரைநோக்கி ஓ! ஹா!! இம்மரம் பெரும் சமர்த்தென்று எண்ணிக்கொண்டீர்களோ? இந்த மரத்தை பலமற்றவர்களும் கூட இடித்துத் தள்ளிவிடக்கூடும் பல மில்லாத மெல்லிய தருப்பையொத்த மூன்றுகூட ஓரிடியில் இவ்வி தமரங்களை வேருடன்பிடுங்கி எறிந்துவிடுவேனென்னுடையபலத்தை இப்பொழுதே கேரில் காண்பிப்பேன், இத்தமரம் அடிவேறற்றதா யிருந்தபடியால் தாங்கள் தொட்டவுடனே நிடரென்று விழுந்துவிட் டது யென்றுரைத்தார் இக்குத்தலானவார்த்தையை செவியிற்கேட்ட வுடனே அமீர் அவர்களுக்கு மென்மேலும் கோபமானது பொங்கி ஆத்திரத்தோடு இன்னெரு பெருத்த ஈத்தமரத்தை வேருடன்பிடுங்கி எட்டி எறிந்துவிட்டார். அதை யறிந்த உம்ரு இம்மரமும் அடிவேர்க ளெல்லாம் காய்ந்து வலுவில்லாமல் இருந்தபடியால் இலேசாய்பிடுங்கி எறிந்துவிட்டீர். இதோ ஏதிரிலிருந்து பாருங்கள், திரண்டு ஒங்கிவளர் ந்த பயில்வானுக்கொப்பாய் நிமிர்ந்துநிற்கும் மரத்தை பிடுங்கிவிட்டால் அப்பொழுது தங்களை சமர்த்துடையவர்களென்று சொல்வேனென் றுரைத்தார். அவ்வேளையில் அமீர் அவர்களுக்கு ஜோஷ்வென்னும் இரத்தக்கொதிப்புண்டாகி அம்மரத்தையும், வேருடன் பிடுங்கி இர ண்டுகைகளினலும் தலைக்குமேலுயர்த்திவிசி எறிந்தார். அவ்வேளை யில் உம்ருவானவர் அமீரைநோக்கி ஓ! அரசியே! உமக்கென்னைபத் தியமோ வேரான் சொத்து எவ்விதமாவது நாசமாய்ப் போகட்டு மென்னும் எண்ணமோ உம்முடைய ஜோஷெல்லாம் இம்மரங்களின் மேல் காண்பித்து தோட்டத்தை பலவாக்க வென்னுடனீரென்று பலவிதமானகுத்தல் வார்த்தைகளை சொல்லிவிட்டு ஓடோடியுந்தோ ட்டக்காரனிடம் சென்று ஓ! மனிசே இவ்வேளையில் ஒரு காற்றை வரவழைத்து சமுன்ம அடித்தளத்தமரங்களை வேருடன் அடியோடு பிடு ங்கி கீழேசாய்த்துவிட்டு போய்விட்டது யென்றுரைத்தார். அப்பொ

ழுதுதோட்டக்காரன் உம்ருவை நோக்கி இவ்விடத்தில்காற்றினல் ஓர் இலையும்கூட அசையக்காணுமேசொல்வதென்னஆச்சரியமா யிருக் கின்றதே, அப்படி புயல்காற்றடித்திருந்தால் இம்மரங்களில் இன் னும் கனிந்த பழங்களில் ஒன்றுவது கீழேவிழுந்து கிடக்காதா? அப் படியிருக்க தோட்டத்தில் எப்படி புயல்காற்றடித்தது யென்றுகேட் டான், அப்பொழுது உம்ரு சொல்கின்றார். தோட்டத்தில் வந்துபா ரும் மரங்கள் விழுந்து கிடக்கிறதை அப்பொழுது உனக்கு தெரி யும் என்னுடைய பொய்யும் நிஜமும் நீயே தெரிந்துக் கொள்வாய். பென்றுரைத்தார், உடனே தோட்டக்கார னெழுந்து உம்ரு சொ ல்லிய இடத்தில் போய் பார்க்கையில் அத் தோட்டத்தில் நிற்கும் மரங்களி லெல்லாம் இம் மூன்று மரங்களும் அதிக பெரிதாகவும் கன்றுப் குலை தள்ளக் கூடியதாயும், மிகவும் நல்ல மரங்கள் கீழே விழுந்து கிடக்கக் கண்டு முதுத்தி லறைத்துக் கொண்டு கோவென் றழுதத் தொடங்கினன், என்ன செய்வான் அம்மூன்று மரங்களின் மேல் அவனுக்கு அதிக உருக்கமும் தேட்டமுமா யிருந்தது, அம் மூன்று மரங்களின் கனிகளைக்கொண்டே பெரும் பாலும் அவன் குடும்பம் ஜீவித்து வந்தது, அவைகள் கீழே சாய்ந்து கிடக்கவே அவன் வயது பதறியெரிய ஆரம்பித்தது, இன்னதிதான் செய் தென்று அவனுக்கு புத்தி ஸ்திரப்படாமல் தியங்கி மயங்கி சோ னைமலறி யழுதான், அப்பொழுது அமீர்ஹம்ஜா அவர்களுக்கு மனதில் இரக்கமுண்டாகி தோட்டக்காரனை யழைத்து ஆறுதல தை றுதல சொல்லி மூன்று பட்டகங்களை தங்கள் ஒட்டகங்களில் நின்று கொண்டு வரச்செய்து அம்மூன்று மரங்களுக்கு பதிலாய் ஒட்டகங் களை அவனுக்குகொடுத்தார், அப்பொழுது அவ்வெரட்டகங்களை பெ ற்றுக் கொண்ட தோட்டக்காரன் இனிஇல்லாத பூரிப்படைந்து சந் தோஷத்தினல் அமீர் அவர்களுக்கு மிகமிக துஆச்செய்தான், அப் பொழுது உம்ருவானவர் தோட்டக்காரனை நோக்கி, ஓ தோட்டக் காரா! நீ என்ன பிள்ளைகள் ஏமாற்றி ஒட்டகத்தை வாங்கிக் கொள் டாய், இதில் எனக்கு பங்கு சேடுக்காதவரையில் இந்த ஒட்டகங் கள் உனக்கு தக்கச் செய்வேனே! ஒட்டகத்தை வாங்கிக் கொண்டு மூக்குக் குத்தப்படாத ஒட்டகம் மிரண்டோடி வதுபோல் ஓடுகிறாய் உன்னை யான் விட்டேனே உன்னுடையமூக்கில் தும்பைச்சார் விட்டு வாங்குகிறேன் பாரென் றுரைத்தார். இவ்வார்த்தையைக் கேட்ட

தோட்டக்காரன் ஓர் ஓட்டகத்தை உம்ரு கரத்தில் ஈந்துவிட்டுதான் இரண்டொட்டகங்களை பிடித்துக்கொண்டு தன் இல்லம் போய்ச் சேர்ந்தான்,

அமீர், உம்ரு, மக்பூல் மூவருக்கும் அல்லாஹ்வுத்த ஆலாவி னுடைய உதவியினால் காகஸ்கிடைட்டப்பது.

விருத்தம்.

அருள் நிறைந்தொளிறும் ஹம்ஜா அலர்தனக் காயுதாதி
பெருமைசேர் உம்ரு மக்பூல் பெயரிருவருக்கு மன்பாய்
திருவளர் ஹிஜ்ரு ஜிப்பீல் திடமுறும் வரங்களீந்த
அருமையை விளக்கி யிங்கு அறைவதை யுணருவீரே.

இம்மாதிரிவாறிருக்க ஓர்நாள் அமீர், மக்பூல், உம்ரு மூவருமே தங்கள் மாளிகையின் வெளிப்புறத்தில் உட்கார்ந்து வேடிக்கையாய் வசனித்துக் கொண்டிருக்கையில் சில கிரேகிதபிள்ளைகளும்கூட வந்திருந்தார்கள். அவ்வேளையில் ஏராளமான ஜனங்கள் வழிநடவே வருபவர்களும் போவோர்களுமாய் இருக்கக்கண்டு அமீர் உம்ருவை நோக்கி உம்ரே நீர்சென்று இச்சனங்கள் எங்கேயிருந்து எங்கே செல்கின்றார்கள். அறிந்து வந்து சொல்லும்மென்றுரைத்தார், உடனே உம்ரு எழுந்து சென்று அவ்விடத்தின் பிரபக்களை வந்து அமீரிடத்தில் சொல்லுகிறார், அமீர இந்த ஜனங்கள் யாவரும் வெளியூரினிருந்து குதிரைகள் கொண்டு வந்திருக்கிறார்கள் அவர்களில் நின்றுமுள்ளவர்கள் இவர்கள் அதேக வெளிதேசத்துக் குதிரை வியாபாரிகள் வர்த்தகத்திற்காக நல்ல நல்ல குதிரைகளை ஏராளமாய்க் கொண்டு வந்து இரங்கியிருக்கின்றார்க ளென்றுரைத்தார் தாங்களும் வேணுமானால் அதைப்போய்ப் பார்த்து கொஞ்சம் பிரயாசை யெடுத்துக்கொண்டு வாருமென்றார். என்றுரைத்தார் அப்பொழுதகுதிரையென்ற வார்த்தையைகாதில் கேட்டவுடனே அமீராவலர் சந்தோஷத்தினால்பூமியில் அடங்காப்பது தெரியாமல் அதிவேகமாய்சென்று பார்க்கையில் உம்ரு சொன்னதுபோல் மெய்யாகவே ஏராளமான குதிரைகள் துருக்கிதாஜி, அரபி, நஜதி, ஹிந்தி, கேப்காலொனி முதலாகிய தேசங்களின் நானாசாதிகுதிரைகளை எக்தெக்கஸ்தானத்தில்கட்டவேணுமோ அதுபோல் அந்தந்த, ஸ்தானங்களில் தனித்தனியே கட்டியிருக்கக்கண்டார், அதில் ஓர்குதிரையைமாத்திரம் அதிக தூரத்தில் இருப்புக்

சங்கிலிகளால் பிணைத்து வாய்க்கு முகப்பட்டை போட்டு இருக்கிக் கட்டி கண்களுக்கு கண்முடி பட்டையால் இறுகக்கட்டி பின்கால் முன்கால்களுக்கு, இருப்புச் சங்கிலிகளால் தளைபிட்டு அஸ்மான்கிரி ஜாலர் பந்தலிட்டு அதிற்குள் அக்குதிரையை கட்டியிருக்கின்றது, அக்குதிரையோ பதினைடி வேங்கைபலமும், பருத்த ஆண்சிம்மத்தையும் நிகர்த்த கடிதோரமுள்ளதாய் காணப்பட்டது. அவ்வேளையில் அமீருடன் கூடச்சென்றிருந்த உம்ரு வானவர் அக்குதிரைக்கு எஜமானிடத்திற் சென்று சிநேகிதஞ் செய்து கேழ்கிறார், ஓய் வர்த்தகரே! இக்குதிரையை மாத்திரம் இருப்புச் சங்கிலிகளால் பிணைத்து முகமூடியிட்டு வாய்க்கு இரும்புவலை சிக்கமிட்டு கட்டியிருக்கின்றதே இக்குதிரை மாத்திரம் என்ன குற்றஞ் செய்தது? அதை இவ்விதமாய்வன் கட்டியிருக்கின்றீர்களென்று கேட்டார், அதற்குகுதிரைக்காரன் உம்ருவை நோக்கி ஓய்! பிள்ளையே! இக்குதிரையானது பெருக் துஷ்டத் தனமுள்ளதாயும் ஐந்து குற்றங்களுடையதாயும் இருக்கின்றபடியால் இதன்மேல் மனிதர்கள் எப்படி ஏறுவது அதனருகில் மனிதர்கள் செல்வதே, கூடாத காரியமாயிருக்கின்றது, சிக்கம் தயார்செய்து அதை கப்பிக்கயற்றில் பிணைத்து அதிரூல்புல் கொள்ளு முதலிய தினிசோ கொடுக்கின்றோம், வெகு பிரயாசையுடனே அது தினி தின்றுவருகிறது என்றுரைத்தான். அதைக்கேட்ட உம்ருவானவர் நீர்சொல்வது என்ன ஆச்சரியம் பாரவரும் உலகத்தில் தன்னுடைய பொருளை சிறப்பாய் சொல்லிக் கொள்ளுவது வழக்கந்தான், இக்குதிரையின்மேல் மனிதர்கள் ஏறி சவாரிசெய்ய முடியாமல் போய்விடுமென்பது ஆகாத காரியம் நீரென்ன காற்றைப்பிடித்து குதிரை ரூபமாய் செய்து, கட்டிவைத் திருக்கின்றீரா? இதன்மேல் யாரானும் ஏறி சவாரிசெய்துவிட்டால் என்ன பந்தயம் கொடுப்பீர் என்று கேட்டார், அதற்கு வர்த்தகன் உம்ரை நோக்கி யாரும் பார்க்கின்றேன் யாரால தொருவன் இக்குதிரையின் மீதேறிச்சவாரி செய்து திருப்பி வருபவன், இருப்பானு வெண்டும் அப்படி ஒருவனையும் காணக் கிடைக்கவில்லை அவ்விதம் இக்குதிரையின் மீதேறி சவாரிசெய்பவன் ஏறிச் சவாரிசெய்தால் பந்தயமென்ன கொடுக்கிறது ஆயிரக்கணக்காக விலையுடைய இக்குதிரையையே அவனுக்கு இனாமாய்க் கொடுத்துவிடுவேன் பென்றுரைத்தான், அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற உம்ரு வானவர் அவ் வர்த்தகனிடத்தில் எக்ராரென்னும் உறுதிப்பாட்டை அவ்விடமிருந்த சிலவர்த்தகர்களிடமிருந்து பெற்றுக்

கொண்டோடினான் அமீரிடம் சென்று இவ்விடத்தில் நடந்த வார்த்தைகள் யாவையும் திருப்பியுரைத்து அக்குதிரையின் மீது தாம் ஏறி திருப்பாதபோனால் இவ்வுலகத்தில் வேறொருவன் பிறந்திருக்கவும் மாட்டான், இனி பிறக்கப் போகிறதும் இல்லை. இவ்வண்ண பெரியகாரியம் இதிலேறி தாங்கள் சவாரிசெய்து திருப்பாமற் போனால் தங்கள் பெயரை அமீர் ஹம்ஜா வென்று எண்ணத்திற் குறைக்க வேண்டும் என்று இன்னும்பலபல விதமாய் அவரை உசுப்பேத்தி தூக்கிவிட்டான், அப்பொழுது அமீரானவர் அக்குதிரையின் அருகிற்சென்று குதிரைக்காரனை அழைத்து இக்குதிரையின் இருப்புத் தலைகளெல்லாம் தரித்து கண்மூடியைத்திறந்து, வாய்ச்சிக்கத்தையும் அவிழ்த்துவிட்டு முதுகில் ஜீன்வைத்து அங்குபடி தரித்து, கடிவாளமிட்டு மைதானத்திற் கொண்டுவாருவென் றுரைத்தார், அதுபோல் குதிரைக்காரன் குதிரையைக் கொண்டுவந்து நிறுத்தினான், அப்பொழுது அமீரானவர், பரியின்மீதேற யோசித்தவராய் அப்புரவியின் பிடரிமயிரில் தங்கள் காத்தை வைத்துப் பிடித்தார். உடனே அவ்வஸ்வமான்து தன்னுடைய ஜாதித் தொழிலாகிய துஷ்டத் தனத்தை காண்பிக்க ஆரம்பித்தது, அப்பொழுது அமீரானவர் பிடித்த பிடியை விடாமல் ஓரே பாய்ச்சலாய் பாய்ந்து அக்குதிரையின் மீது வீறி உட்கார்த்தார். உடனே, அத்துஷ்ட மிருகமானது அமீருடைய பாதத்தைக்கடிக்க ஜாஜாவின்மேல் வாயைப் போட்டது. முன்னாலே ரண்டையும் பூமியில் டீப் அடித்தது பின்காலை உயர்சிளப்பி ஆளை ஏழே தள்ளப் பார்த்தது. தேகத்தை வலதுபுறம் இடதுபுறம் ஆட்டி அசைத்து உதங்கியது இவ்விதமாகிய அநேககொடுஞ்செய்கைகளை செய்ய ஆரம்பித்த அப்பரியை அமீரானவர் நோக்கி தமது வலதுகரத்திலுள் சாட்டில் ஓர்குத்துவிட்டார், அக்குத்தோடு அவ்வடங்காத பிடாரியானது தேகம் நடுங்க உடல்குன்னு ஓவென்னை பூமியிற் சிதறாக்கு விலிவிற்றள்ளி படபடத்து விலவிலத்து ஆட்டுக்குட்டியைப்போல் காதுகளைத் தளரவிட்டுவிட்டு அசையாமல் நின்றுவிட்டது, அப்பொழுது அமீரானவர் அப்பரியை மெல்ல மெல்ல அடிபெயர்த்து வைக்கச்செய்தார். பின்பு, தரட்டென்னும் பெருவடையில் விட்டுக்கொண்டு சுற்றி வருகையில் குதிரையின் மீதிருந்த வெய்வையானது காய்ந்து உஷ்யாரானது, அவ்விதம் வெயர்வை காய்ந்த வுடனே, முன்னமே பெரும் துஷ்டமிருக மானபடியால் கடிவாளத்தை அமீரானவர் எவ்வளவு இழுத்துப் பிடித்தும் மாவேக மென்னும்

மகாவேகத்துடன் காற்றைப்போல் கிளம்பி மலை, செடி, மரம், காடுகள் இன்னதென்று தெரியாமல் சில நாழிகைக்குள் ஐம்பது காதவழி தொலைதூரம் சென்றுவிட்டது. அப்பொழுது, அமீரானவர், எவ்வளவு அடக்கி நிறுத்தியும் செல்வதை நிறுத்தாமல் பிறவைனைப்போல செல்வதைப் பார்த்து கால்களிரண்டையுருக்கி எதிரி முதுகின் மேல் பாய்ந்து எழுந்தமட்டார்க்தார் உடனே அஸ்வத்தின் இடப்புடைத்து திடீரென இழே தட்டினார்த்தது உடனே அமீரானவர் குதிரையை விட்டு பூமியிலிறங்கி வீட்டை நோக்கி கால்நடையாய்ச் சென்றார், ஆவர் வயதிலும் காலால் நடந்தறியாதவராகையால் பாதத்தில் "கற்கடகளான பூமியானபடியால்" கொப்பளங்கள் உண்டாகி அவைகள் நசுங்கி ரணமாகி விட்டது ஆனபடியால் நடக்க இயலாமலும் எழுந்திருக்கவும் சக்தி பற்றவராய் இருக்கும் வேளையில் அவ்விடத்தில் நின்ற ஓர் மரத்தின் நிழலில் இருந்துவிட்டார், அவ் வேளையில் என்ன பார்க்கிறாரனால் ஓர் மனிதர் குதிரையின்மீது சவாரி முகத்தில் மக்களுவென்னும் முகமுடியிட்டு வரக்கண்டார், அவர் காத்தில் இரத்தினங்களிழைத்த ஜீன்அமைத்து கடிவாளமிட்டு அழகு பொருந்திய அப்லக் நிறத்தையுடைய ஓர் நிறைந்த குதிரையை காத்தில் பிடித்து தம்முடன்கூடகொண்டுவரக்கண்டார். அக்குதிரையின்நிறப்பை சித்தாபுகாரர்கள்பச்சை யாடியிருக்கின்றதை சிலவற்றை கருத்தாகச்சொல்லுகின்றேன். ஆதிதெவ்விதமெனில் துர்த்திக்காபதாரானவர்களாத்தில் பிடித்திழுத்துத் தன்கூட கொண்டுபோகும் அக்குதிரையின் வேகமானது காற்றைனது அக்குதிரையுடன் செல்லுமாயில் எழுதும் கலமென்னும் எழுதுகோல் எவ்விதம் எழுதும்பொழுது தரித்துநின் றுவிடுகிறதோ அதுபோல் அசந்து தரித்து நின்றுவிடும், இன்னும் பைத்தின் மாலுவாகிறீர் வானலோகத்தின் அதிவேகமாய்ச் செல்லும் சூரியனும் சந்திரனுங்கூடவாகிலும் இயாமகானுக்க ஒல்லாதிருக்கத்த ஹனுமானின் உத்தரவின்படி தெளபாவென்னும் வீட்டின் வாசற்படியில் நிறுத்தப்படும் இக்குதிரையாவெனில் செல்ல ஆரம்பித்துவிட்டால் அசுரியன் சந்திரனப்பார்க்கிலும் அதிவேகமாய் ஓடினாலும் தரித்தமல் செல்லுமடியாலே கதிகளை புடைபதரம். இன்னும், பைத்தடையமானவாகிறது சச்சரென்று சொல்லப்படும் அதிவேகமாய்ச் செல்லும் சூரவளிக்காற்றையும் தனக்குமுன்னே செல்லவிடாமல் தன்னுடைய கான்கு கதிகளினாலும் மிதித்து தலைத்து பின்னுக்கு தள்ளிவிட்டு முன்னே ஏறிச் செல்லும்படியாகிய நடை

மீனுடைய குதிரையாம். இவ்விதமாகிய சமுசுறுப்பை யுடைய அழகுபொருந்திய புரவியை கரத்திற் பிடித்தவராய் முகமூடியிட்ட பெரியவர் தாம் வந்திய பரியிலேறி வந்து அமீர் அவர்களின் சமுகத்திற்குதிரையைவிட்டும் இறங்கிநின்று சலாமுன் அலேக்கும், யா! ஹம்ஜா! வென்று சலாம் சொல்லி இன்னும் சொல்லுகிறார். இதோ யான் கரத்திற் பிடித்திருக்கும் இக்குதிரையானது நபி இஸ்ஹாக்கு அலேஹிஸ்ஸலாம் அவர்கள் சவாரிசெய்த குதிரையாயிருக்கும், இதன் பெயர் ஸியாக்கீத்தாஸ் என்று அழைக்கப்படும் இதினுடைய தாரீப் என்னும் புகழ்ச்சி மிகுதியுண்டு அல்லாசுபுஹானுஹூவத்த ஆலா வுடைய உத்தரவின்பேரில் தங்களுடைய சமாரிக்காக கொண்டுவரப் பட்டது, இன்னம் அந்த அல்லாவுடைய உத்தரவாகிறது என்னே எப்போதும் தங்களே கவனித்து வரும்படியாயிருக்கின்றது, இன்னும் அல்லாவுடைய உத்தரவாகிறது இந்த துன்யாவில் தங்களேவெல்ல ஒருவரும் இல்லை யென்றும் சொன்னான் இன்னும் தங்களுடைய இஜ்ஜத்தும், பரக்கத்தும்; தேஜலத்தும், பத்தினித்தனமும், எத்தனிதத் திலும் எப்பொழுதும் எப்போர்ப்பட்ட இராஜ ராஜாக்களிடத்திலும் குறைவுபடவேபடாது மென்மேலும் ஓங்கிப்படுமென்றும் உலகத்தி லுள்ளவர்கள் யாவரும் தங்களுக்குள்படிந்தவர்களா யிருக்கவேண்டு மென்றும், அவர்களெல்லாம் தங்களுக்கு மரியாதை செய்வார்களென் றும் இன்னும் இதோ தங்களுக்கெதிரிலிருக்கும் பெரியவட்டப்பா றாங்கல்லை புரட்டிவிட்டு அவ்விடத்தில் கொஞ்சதூரம் மண்ணைப் பிரித்துப் பார்ப்பீர்களானால் அதில் நின்றும் ஓர் பெரிய பேழை வெளிப்படும் அதில் நிறைய முன்னுள்ள அம்பியாக்களின் வாள், வேல், தண்டம், கேடகம், குருசு, அம்பு, வில், அம்புறாத்தூணி, சட்டி, வல்லயம், ஜம்தாடி, பிக்சுவா முதலாகிய இன்னும் அநேக அநேக மிக மேலாகிய ஆயுதாதிகளெல்லாம் கணக்கிலடங்காதவைகளாய் நிறைந்திருக்கிறது. அவைகளை யெல்லாமெடுத்து தாங்களணிந்துகொண்டு சமயம் வாய்ந்தபொழுது அவைகளை உபயோகப்படுத்துங்கள் என்று சொன்னார். உடனே அமீரானவர் அக்கல்லைபுரட்டி தள்ளினார். அதைப் புரட்டிதள்ளுவதற்கு முன் இவ்வள்வுபெரிய அபாண்ட மாகிய மலையையெத்த பாராங்கல்லை எமெப்படி புரட்டுவது என விழும் நினையாத செய்திபாயிருக்கின்றதே என்று யோசித்திருந்தார். பின்பு அல்லாவுடைய உத்திரவு இருக்கின்றதேயென்ற தைரியத்தினால் அக்கல்லைத்தொட்டார். அப்பொழுது அதுமிகவும் இலே

சாய் தானெண்ணிய எண்ணத்திற்கு மேம்மாற்றமாய்க் காணப்பட்டது, அதைப்புரட்டிவிட்டு அவ்விடத்திலுள்ள மண்களேதோண்டி கெல்வதற்காக தங்களுடைய பலத்தை யெல்லாம் ஜோர் செய்து பிரயாசையோடு பெட்டியை வெளியிலெடுத்தார். அதை திறந்து பார்க்கையில், அதனுள் நபி இஸ்மாயில் அலேகிஸ்ஸலாமுடைய ஜுப்பாவும், ஹூது அலேகிஸ்ஸலாமுடைய சிரசிலணியும் தாஜும் ஹஜரத் தாவூத் அலேகிஸ்ஸலாமுடைய ஜர்ராலென்னும் இருப்புச்சட்டையும் யூசுபு அலேகிஸ்ஸலாமுடைய ஆஸ்தானுவென்னும் கையிலணிந்துகொள்ளும் வளப்போர்வையும், சாலீஹ் அலேகிஸ்ஸலாமுடைய மௌளாலென்னும் ஜுத்தாவும் ருஸ்தமுடைய கமர்பந்தும் பிச்சுவாவும், பர்கியாவென்னும் பயில்வானுடைய சம்சாம், கம்காமென்னும் வாளாயுதமும் கர்ஷரிப்பென்னும் வீரனுடைய கேடகமும், ருஸ்தமுடைய காதாவும், பாலாவுமாகிய சாம், பின்னரிமானுடைய குருஸென்னும் தண்டமும், ஜோகாரபென்னும் குஸ்தி முக்கொப்பாகிய பயில்வானுடைய சக்கரவாளும்; நூஹு அலேகிஸ்ஸலாமுடைய நேஜாவென்னும் பாலாவும் இருக்கக்கண்டு இவைகளை யெல்லாமெடுத்துபார்த்து தேகத்தின்கண் அணிந்து கொண்டார். பிஸ்மில்லா ஹிற்றகுமானிற்றமீமென்னும் திருவாக்கியத்தை மொழிந்தவராய் விபாகித்தாஸென்னும் குதிரையின் வயற்றை இருதாடைகளாலிடையிலடக்கிக்கொண்டார்.

பின்பு, நிக்காப்தாரானவர் மறைந்தேபோய்விட்டார். இத்தாலை யுடையவர்கள் எழுதுகிறார்கள். அந்த நிக்காப்தாரான்வர் ஹஜரத்து ஜிப்ரீல் அலேகிஸ்ஸலாமாயிருக்கும்பென்று சொல்கிறார்கள். அவ்வே ளையில் ஜிப்ரீல் அலேகிஸ்ஸலாம் அமீர் அவர்களுக்கு மதத்தென்னும் உதவிபுரிபவரா யிருந்தார். வல்லாஹூ ஆலம் அப்பால் அமீரான வர் மக்கமாநகரத்தை நோக்கி செல்லத் தொடங்கினார்.

இம்மிருவனம் நிற்க இப்பொழுது உம்ருவுடைய செய்தியைக் கேளுங்கள் அமீர் அவர்கள் முறட்டுக்குதிரையின் மீதேறி, அக்குதிரை அவரையெடுத்துக்கொண்டோடும்பொழுது உம்ரும் கூடவே அதிவேகமாய் தூடியில் கீழுமிழுவதும் எழுந்திருப்பதுமாக பத்துக் காதவழிதூடந்தார். எப்படியெனில் அவ்வம்ருவுக்கு அமீர் மீதிருந்த மனப்பற்றுதலானது கற்காடகளிடத்தில் கீழேவிழுந்தும் முழங்கால்

முழங்கைகள் பாதம் முதலியவைகளில் அடிபட்டு காயமாகி இரத்தம் ஒலித்தோடுவதும் கூடத் தனக்குத் தெரியாமல் ஓடியபடியால் கால்பாதங்களிரண்டும் கூர்மைபொருந்திய முட்கள் தைத்ததனால் முழுவதும் சல்லி சல்லியாய் தவாரம் விழுந்துவிட்டது. ஆகையதல் நடக்கமுடியாமல் ஓர் மரத்தடியில் ஸ்மரணையற்றவாய் விழுந்து விட்டார். அவ்வேளையில் அல்லாவுடைய உத்திரவின்படி ஹஜரத்தி ஹரு அலிகிஸ்ஸலாம் உம்ரு மிடக்கும் ஆவ்டத்தில் வந்து, சேர்ந்து உம்ருவை தூக்கி இருத்தி தைரியவார்த்தைகள் சொல்லி இன்னம் சொல்கிறார் உம்ரே நீர்யாத்துக்கும் அஞ்சவேண்டாம் யான் அல்லாவுடைய உத்திரவின்பேரில் வந்தேன் எழுபொழுதும் என்னை உம்க்கு உதவிபுரியும்படி அல்லாவுடைய உத்திரவாகி இருக்கின்றது. ஓய் உம்ரே எழும்பும் இந்த தன்யாவில்உம்முடைய ஓட்டத்திற்கு சமமாய் ஓடுகின்றவர்கள் ஒருவரு மில்லையென்று அல்லா சொல்லச் சொன்னன். ஆகையால் நீர் எவ்வளவுதூரம் ஓடினும் ஓடலாமென்று சொல்லிவிட்டு மறைந்துவிட்டார். பின்பு உம்ரு பெழுந்து சிலதூரம் ஓடிப்பார்த்தார். நிஜமாகவே காற்றைபார்க்கிலும் அதிவேகமாய் செல்லக் கண்டார். காற்றுதானென்ன் காற்றின்யோசனை கூட உம்ருடைய ஓட்டத்தை எத்திக்கொள்ளமாட்டாது. அப்பொழுது, உம்ரு அல்லாஹு சுப்ஹானஹுவத் தஆலாவுக்கு விஜ்ஞ கூடர் செய்துவிட்டு அமீர் அவர்களைத்தேடி புறப்பட்டு சிலதூரம் போய்பர்த்து வைத்தார். உடனே அமீர் எதிரில் வரக்கண்டு இருவரும் ஒருவரையொருவர் கட்டிப் பிரிந்த ஆற்றமையால் இறுகத்கட்டித் தழுவிக்கொண்டார்கள். பின்பு உம்ரு அமீருடைய குதிரையையும், ஆயுதபாணிகளையும் பார்த்து, ஆச்சரியப்பட்டவராய் அமீர் அவர்களைநோக்கி, ஓய் அரபியே! நிஜம்சொல்லும், அந்த வர்த்தகனுடைய குதிரையின்மீது நீர்ஏறிவந்தீரே அதுஎங்கே? இப்பொழுது யாரை கொலைசெய்துவிட்டீர் இக்குதிரையைப் பிடுங்கிக்கொண்டு வந்தீரென்றுகேட்டார். அதற்கு அமீரானவர் உம்ருவை நோக்கி! ஓ! உம்ரே வழிபறிக்கொள்ளையடித்து வரீர்சொத்துக்களை அபகரித்துக்கொள்வது உன்னுடையவேலையாயிருக்கும் என்னுடைய வேலையல்ல இவைகள் யாவும் அல்லாவுடைய உத்திரவின்படி ஹஜ்ரத்து ஜிப்ரீல் அமீன் அவர்கள் கொண்டுவந்து கொடுத்துப்போனதாயிருக்குமென் றுசைத்ததோடு இன்னம் சொல்லுவார், இக்குதிரையானது நபிஇஸ்ஹாக்கு அலிகிஸ்ஸலா முடையதாயிருக்கும் இவ்வாயுதாதிகள் யாவும் சில

அம்பியாக்களுடையதாயிருக்கும் இவைகளை யெல்லாம் அல்லாஜல்ல ஷானஹு தஆலாவுக்கு கன்குடையனித்தான் என்றுரைத்தார். இவைகளையெல்லாம்கேட்டுக்கொண்டிருந்த உம்ருவானவர் அமீரைநோக்கி, அமீரே! உனிவ்வார்த்தைகளை கம்பமாட்டேன் தங்களுடைய குதிரை எனக்கு முன்னே ஓடிச்செல்லுமானில் அப்பொழுது தாங்கள் சொல்வது சரிதானென் றெருப்புக்கொள்வேன். தங்களுடைய குதிரை ஓடியாகிலும் முந்திவிடவேண்டும் என்னுடைய கால்கள் ஓடியாவது பிந்திவிடவேண்டுமென்றுரைத்தார். இவ்வார்த்தையைக்கேட்ட அமீர்மனதில் நினைத்துக்கொண்டார். இவனுக்கென்ன பைத்தியமோ மனிதன் எக்காலத்தாவது குதிரையோடு ஓடமுடியுமாவென்று பலவாறு யோசித்தவராய் அவரைநோக்கி உம்ரே வாரும் இதோ என்கூடகுதிரையின் ஓட்டத்தை எத்திக்கொள்ளும் என்றுரைத்தார்.

அப்பொழுது உம்ருவானவர் அமீரே என்னுடைய ஓட்டம் எக்காலத்தாவது தோல்விடைந்து பெரிக்கப்பட்டதோ பானும்வ்வளவோ பியாசையெடுத்து கற்றுக்கொண்டிருப்பேன். ஆகையால் இலவசமாய் ஓடமாட்டேன் கட்டுபந்தயம் ஒடுகிறேன் அப்பொழுதுதான் என்மனம் சமாதானமாகும் அதன்பின் யான் ஓடுகிறேனென் றுரைத்தார். அப்பொழுது அமீரானவர் உம்ருவைநோக்கி உம்முடைய இஷ்டப்படி பந்தயம் நிமித்துக்கொள்ளும் என்றுரைத்தார். அதற்கு உம்ருவானவர் அமீரே உம்முடையகுதிரைக்கு யான்முந்தவேனுமில் தங்களிடத்தில் பத்துஒட்டகம் வாங்குவேன் யான் தங்கள் குதிரைக்குமிஞ்சி தோற்றபோய் விடுவேனுமில் என்னுடைய தகப்பன் தங்களுடைய பாவா அவர்களுக்கு ஒரு வருஷம்வரையில் சம்பளமில்லாமல் ஒட்டகம் மேய்க்கவேண்டுமென் றுரைத்தார். அதையுணர்ந்த அமீரானவர் அவ்வோப்பாட்டிற்கு சம்மதித்து தாங்கள் வணங்கும் இஸ்ஹாக்கு அலிகிஸ்ஸலாமுடைய ஸியாகீத்தாஸ் என்னும் அங்வத்தை தட்டிவிட்டார்கள். அது அல்லாஹுத் தஆலாவுடையு அருள்பெற்றதாயும் அவனுதவியால் கல்ல அறிவையுடையதாயும், இருந்தபடியால் அமீர் அவர்கள்உம்ருவுடனேபேசிக்கொண்டவைகள் பாவையும் தன்னுடைய செவிகொடுத்து கேட்டுக்கொண்டிருந்தபடியாலும் பேச்சு முடிந்தவுடனே ஓட ஆரம்பித்தது அஃது எப்படியெனில் கால்களானது பூமியில் படிவதுதெரியாமல் காற்றிலும் அதிவேகமாய் அக்காற்றானது இக்குதிரைசெல்லும் வேகத்தினுல் கிழிபட்டு,

இரண்டாய்ப் பிளப்புண்டு போகின்றபடியால் அக்காற்றினுடைய புத்தியானது கலங்கி மருண்டு, திகைத்துநின்றதாம், அவ்விதவேகமாய் சென்றும் உம்ருவானவர் விடாமல் தாமுங்கூடவே குதிரையின்காலும் உம்ருடையகாதும் நேர்நேரேமூக்காமலும் பிசகாமலும் சரியீர்ச்சென்றார்கள். அவ்விதம் முத்துக்காதவழிகள் சென்றபோது அமீரானவர் உம்ருவுடைய தோட்டத்தைகண்டு அதிக ஆச்சரியமடைந்து உம்ரு உடைய தோட்டத்திற்காக பிரமை கொண்டாடி விட்டார். அப்பொழுது உம்ரு சொல்லுகிறார். அமீரே நானும் தங்களைப்போல் ஹஜரத்திலுரு அலிகிஸ்ஸலாமுடைய உதவியின்பேரில் வந்திருக்கின்றேன். அன்றியும் யானும் அந்த நபியினிடத்தில் கொஞ்சம் கற்றறிந்தவனுமிருக்கிறேன் என்றுரைத்தார். அவைகளை யறிந்த அமீர் அவர்கள் சந்தோஷமுற்றவரும் அல்லாஹுத்தஆலாவை புகழ்ந்திருந்தார்கள்.

இம்மிவ்வாறிருக்க வர்த்தகனுடைய முறட்டுக்குதிரையின்மீது அமீரவர் ஏறி அக்குதிரை அமீரைத் தூக்கிக்கொண்டுபோய் விட்டதையும் அவர் பின்னே உம்ருவும் தூர்ந்தோடிப் போய்விட்டதையும் அப்துல் முத்தலிபானவர் கேள்வியுற்று வியாகுலமுற்று வாய் பதறி வீட்டைவிட்டும் அம்மக்காமாநகரத்தின் தலைமைக்காரர்களி லநேகரையுங்கூட அழைத்துக்கொண்டு புறப்பட்டு பட்டணத்தைவிட்டும் வெளிற்சென்று பார்த்துக்கொண்டு போகும்வழியில் எதிரில் அமீரவர்களு ஸியாகித்தாஸ் என்னும் பரியின்மீது பலவித பதினெட்டாயுதமிலங்க பூரணச் சந்திரோதயம்போல் அதிவீரத்துடனே ஆண்சிம்மத்திற்கொப்பாய் உம்ருவானவர் அக்குதிரையின் சிக்காபென்னும் அங்குசடியை பிடித்தவராய் எதிரில்வரக்கண்டார்கள். அமீருடையவும் உம்ரு உடையவும் முகத்தைப் பார்த்தவுடனே அம்முகங்களில் சந்தோஷமென்னும் பிரகாசமானது ஜொலித்துக்கொண்டிருக்கக்கண்டு தாஜா அப்துல் முத்தலிபு அவர்களுடைய மனதின்கண் அமைந்திருந்த திகில் வக்கம் முதலியவைகள் எந்தவிதம் போனதென்று அறியக்கூடவில்லை சந்தோஷத்தினால் அவர்களின் வதனம் செந்தாமரைப்பூவின்நிறம்போல் மலர்ந்து இலக்கமிட்டது உடனே அல்லாஹுத்தஆலாவை புகழ்ந்து ஸிஜ்தாசுக்கூர் அதாச்செய்தார்கள் அவ்வேளையில் அமீர்ஹம்ஜாவானவர் தகப்பனை அப்துல்முத்தலிபை கண்டு தாங்கள் பரியைவிட்டும் குதித்துக்

மேலே இறங்கி கதம்பாஸ் தஸ்லீம் செய்துநின்றார். அப்பொழுது தாஜாவானவர் மகனே மரர்போடனைத்து, ஆனந்தக்கண்ணீர் சொரிந்து அதிக மகிழ்ச்சியாய் மகனே தங்கள் மாளிகைக்கு அழைத்துவிருது நிரவியங்களைக் கூறி திருஷ்டிகழித்து தெருவிலிறைத்தார். துரைத்தியேற்றி அவரை நிரப்சுற்றி அங்குமிங்கு மினறத்தார். ஏழையெளியோர் பக்கீர் பரோக்கள், மிஸ்கீன் முதலாகிய யாவருக்கும் அன்னதானம் சொர்ணதானம் ஆடை ஆபரணம் முதலியனவகளை அமீர்பேரால் ஸத்காவென்னும் தர்மஞ்செய்தார்கள். பின்பு, தாஜாவானவர் அமீரைநோக்கி, சுல்தாகரினுடைய முறட்டுக் குதிரையின் செய்கையையும், இப்பொழுது ஏறிவந்திருக்கும் ஸியாகித்தாஸ் என்னும் பரியினுடையசெய்கையும் துயுதாகினின் விபரம்முதலாகிய யாவையும் கேட்டார்கள், உடனே அமீரானவர் கடந்தவைகள் யாவையும் ஒன்றும்விடாமல் படிப்படியாய் உரைத்து, உம்ருவுடைய விஷயத்தையும் சொன்னார். இவைகளெல்லாம் கேட்டிருந்த தாஜா அதிக சந்தோஷமுற்று அல்லாஹுத்தஆலாவினிடத்தில் துஆச் செய்திருந்தார்கள்.

இம்மிவ்வாறிருக்க மக்பூல உபாதாருடைய செய்தியை சொல்லத் தொடங்குகின்றேன். சித்தாபுக்காரர்கள் எழுதுகிறார்கள் நின்ற உப்புக்கு இரண்டுஞ்செய்யாத மனதினையுடைய பரிசுத்தவானகிய மக்பூல் உபாதாரானவருக்கு அமீர் உம்ரு இருவருக்கும் ஜிப்பில், கிலுரு அலிகிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் இருவரும் நஜர்கர்தாவென்னும் உதவிபுரிந்தவைக எனைத்தும் தெரிந்தவுடனே தன்மனதில் பெண்ணாகிறார். அல்லாஹுப்ஹானஹுவத்தஆலாவுடைய உதவியினால் இவ்விருவரும் அவனுடைய அருளுதவியைப் பெற்றார்கள். யாதேதுமில்லாத ஒன்றுமற்றவனைப் பிருவின்றேன், அவர்களுக்கு அல்லாவுடைய உதவியிருக்கின்றபடியால் எவ்விதஞ் செய்ய நினைத்தாலும் செய்யக்கூடும் நம்மால்யாதொருகாரியமும் செய்யமுடியாது, அவ்விருவர்களுக்கும் அவனுடைய உதவியினால் ஆண்சிம்மத்தென்னும் பூனைசியமும் நினைத்து அவர்கள் நினைத்தவாரெல்லாம் செய்துமுடிக்கும் வல்லமைபுருஷர்களாய் யிருக்கின்றபடியால் அவர்களுடன் நாம் இருந்தென்ன பிரயோசனம் நம்மால் யாதொரு காரியமும் செய்யமுடியாது என்று நினைத்தவராய் இனிஇவ்வூரிலேயே இருக்கக்கூடாது நமப்தக்லீம் கிஸ்வர் பாக்தாவாகிய நௌஷேரவானு

படி திட்டம்பித்தி வைக்கவேண்டும், அப்பொழுது அந்த துஷ்மை படைத்த கிழுடன் எந்த வேளையில் இவ்விடம் வருகின்றாலுமுன் வேளையில் இவ்விடமிருப்பவர்கள் அவனுக்கு சஜாவெண்ணும் பொ மாறு தண்டனை செய்யவேண்டும். அப்பொழுது தங்கள் குடும்பட்ட சிறியோர் பெரியோர் யாவருக்கும் மனதில் அச்சப்ப வேண்டாம். அடங்கி மனதைதிர்ன்னாம் விருப்பார்கள் பென்னாத் தார். காஜா சொன்ன இந்த யோசனையானது பாதுஷாவி மனைய மனதிற்கு மதிக நலமாக தெரிந்தபடியால் புத்துருமெறை கோல் பாதுஷா சொல்லுகின்றான். காஜா தாங்கள் சொன்ன இல் விஷே சனையானது மிகவும் தீர்க்க ஆலோசனையாக யிருக்கும் இதற்குமிரு மெ யோசனை யொன்றுமில்லை யென்று காஜாவை மிகமிக புகழ்ந்து தான் வேட்டைக்கு புறப்பட்டான். தன்னிடத்தில் அந்தர்பீல்தோஷ் யென்னும் பெயரையுடைய ஓர்பயில்வா விருந்தான் அவனை யழை த்து இம்பதினாயிரம் சேனையென்னும் பொளஜ ஒப்பித்து நீ யான் வரும்வரையில் மதாயின்பட்டணத்தை ஜாக்கிரதையாய் காத்துவர வேண்டும் அல்லாமலும் ஹஸ்ஸாமென்னும் பெயரையுடைய ஓர் தூதுலேப்பயல் வருகின்றும் அவனை வந்தவருமுன் அவனுடைய பெயருங்கூட ஒருவரும்சொல்லாமலிருக்கும்போதே அவனை வெட்டி காசுமாத்தி காவற்பருத்திக்கு இறையாக்கிவிட வேண்டும் யென்ற பலவித தாக்கீதும் செய்துவிட்டு தான் புறப்பட்டு காட்டுக்குப்போய் விட்டான். இவ்விதம்பாதுஷாசெய்து ஒருவாரத்திற்குப்பின் ஓர்நாள் ஹஸ்ஸாம்பின் அலீமாகை பரியென்பவன் நாற்பதினாயிரம் பொ ஜனருடனே மதாயின் பட்டணத்தையடைந்து அவ்வூரைச் சுற்றி வளைத்துகொண்டு அவ்வூர் குடிபடைகளின்மீது அக்கிரமம் செய்ய ஆரம்பித்தான் அவ்தினையில் மதாயின்பட்டணத்தை காத்திருக் கும் அந்தர்பீல்கோஷ் யென்னும் பைல்வானனவன் எதிரிகளோ ட்டை வாசற்படிவரையில் வந்திக்க இடம்விடாமல் வெகு ஜாக்கி ரதையாய் நின்ற உப்புத்து இரண்டகப்செய்யாமல் வெகு ஜாக்கி ரதையாய் கார்த்துவந்தான் துஷ்மனுடைய தளத்தில் யின்றும் ஒரு சிப்பாயையாவது அவர்கள் நிற்கும் தானத்திற்கு இப்பால் அடியெ த்து வைக்கவிடாமல் மஹாதீரத்துடனே இரவும் பகலும் ஒரே விழிப்பாய்க் கார்த்துவந்தான் அப்படியா யிருக்கும்வேளையில் ஒரு நாள் அந்தர்பீல்கோஷ் யென்பவனுடையமனதில் ஒருயோசனை பிறந் தது அதென்னவெனில் ஹஸ்ஸாமென்பவன் வரை வளைத்துகொ

ண்டு குடிபடைகளுக்கெல்லாம் கொடுமை யினைத்தவனும் கோட்டை க்குவெளியில் இருக்கின்றான், அவனென்ன அப்படி பெரும்பெயர்பெ ற்றகீர்த்தி வாய்ந்த மஹாபயில்வான் அவ்வற்பனுக்கு பயந்து யான் இக்கோட்டைக்கு உள்ளிருந்து கதவை மூடிக்கொண்டிருத்தினகாலை க்கு இவ்விதம் பதுங்கி இருப்பேன், இதுசரியல்ல, இப்பொழுதே கோட்டையைவிட்டும் வெளிக்கிளம்பி அவனுடனெதிர்த்து சண்டை செய்து ஒரு மூச்சி லவனைஜெயித்து யான் திரும்பாவிடில் என்னை யார் இவ்வுலகத்தில் பயில்வானென் றழைப்பார்கள் எவ்விதத்திலும் அவனை யான் ஜெயித்து உலகத்தில் பெருங்கீர்த்திபெற்று பாதுஷா வினிடத்திலும் பெருத்த ஜாகிரென்னும் இனம் பெற்றுக்கொள்வேன் யென்று பலவித்தம் யோசித்தவனுய் யாயிரம் பொளஜுகளுடனே கோட்டையைவிட்டும் வெளியிற்கிளம்பினன். அப்பொழுது ஹஸ்ஸா மென்பவன் அவனை பார்த்துவிட்டு வாய்விட்டலறி கெக்கலிகொட்டி சிரித்து சொல்லுகிறான். இவனுக்கு தன்னுடைய கலாவென்னும் வேஷமபத்து மவுத்தென்னும் சாங்கால்ம் தலைமேல் வினையாடிக் கொண்டிருக்கின்றது ஆகையால் தான் இவனும் என் முன்பில் வரு கிறு னென்றிரைத்து தானேநியிருக்கும் காண்டாமிருகத்தை நடத் திக்கொண்டுவந்து அந்தர்பீல்கோஷ் பென்பவனின் சமூகத்தில் அடி த்து சொல்லுகிறான், ஓ! மனிதனே! நீ என்னசொல்லு கின்றாய்? ஏன் உன்னுடைய பொளஜுகளை வீணில் அநியாயமாய் மாளக்கொடு த்துவிட்டு உன்னுடைய உயிரைக் கொடுக்கவந்தாய். யென்னுரைத் தான், இவ்வார்த்தையை செவியில்கேட்டவுடனே அந்தர்பீல்கோஷ் யென்னும் யானையின் காதையுடைய பயில்வானவன் கடுஞ்சினை கூற்றவனும் எதிரியை நோக்கி அடா! நிம்மக் றருமாகிய நின்ற உப்புக்கு இரண்டகம் செய்யும் அபாகியே! நீ! வீட்டுகுலாயென் னும் புழுக்கையனு யிருந்தும் கொஞ்சமும், அதென்னும் மரியாதை யைக் கைக்கொள்ளாமல் தலைதமாறி இடிப்புக்கட்டி நிம்மக்றரும் தனந்தை கைக்கொண்டு இரண்டுகால் துணியானவை நம்பி இவ்வளவு தூரம் மனதில் அச்சம் மென்பது கொஞ்சமும் யில்லாமல் வந்தாய் நீ அறிவில்லையோ யிருக்கின்றது இந்த ஹபத்தலீம் கில்வர் பாதுஷா வினுடைய அத்தி குலாமாகிய சொற்ப புழுக்கையனிடத்தில் கூட நீ எதிர்த்து ஜெயிக்க மாட்டாயென்று இவ்வளவு ஆடம்பரங்களும் வாய்ப்பேச்சு பேசுமுன் அழிந்து நாசமாகி போய்விடு மென்று நீ அறிந்துகொள்ள வில்லையென்றும் பலவிதமாய் கோபித்துச் சொன்

னன். அவ்வார்த்தையை கேள்வியுற்ற ஹஸ்ஸாமென்பவன் அந்தர்பில் கோஷை நோக்கி, அடே! அறிவில்லாதவனே, நீ அறிந்துக்கொள் இவ்வுலகத்தில் எந்த பாதுஷாவினுடைய தெளலத் யாருக்குஜிகூடியம் இன்னைக்கொருவன் நாளைக்கொருவன் யென்பதாய் மாறிமாறி வந்து கொண்டிருப்பதை யாவரும் அறிந்திருக்கின்றார்கள் இன்னும் உலகத்தில் யாருக்கு எவர் எஜமான் எவருக்கு யார் வழியேன் எல்லாம் சமமே யொழிய வேறில்லை ஆகையால் இதோ என்கரத்தில் பிடித்திருக்கும் வாளாயுதத்தைக் கொண்டே உன்னுடைய ஆண்டவனாகிய நௌஷேரவானே முழங்காலில் நிற்கவைத்து பகுதிபணம் வாங்குவேன். இன்னம் வெகு சிக்கிரத்தில் இந்த நௌஷேரவானுடைய இராஜாங்கத்தையும் அதற்குள் அடங்கி யிருக்கும் கஜானாக்கள்முதலாகிய யாவையும் கைப்பற்றிகொள்வேன் யென்றுரைத்தான் இவ்வார்த்தையைக் காதினால்கேட்ட அந்தர் யென்பவன் இனியில்லாத கடுங்கினமுற்று நேஜாவை யுருவி சீராய்ப்பிடித்து ஹஸ்ஸாமுடைய நெஞ்சை இலக்குவைத்து குத்தி அப்புறஞ் செல்லும்படியாகிய பலத்தோடு குத்தினன் அக்குத்தானது ஹஸ்ஸாமுடைய நெஞ்சிற் பாய்ந்து முதுகின்புறமாய் நேஜா புறப்பட்டது உடனே ஹஸ்ஸாமென்பவன் இடதுகரத்தால் நேஜாவை பிடித்தவனுய் வலதுகரத்திற் பிடித்த வாளாயுதத்தினால் அந்தர்பில்கோஷ் என்பவனை வெட்டி தலைவேறுடல்வேறுக்கி தன் மார்பில் பறித்திருந்த நேஜாவை பிடுங்கி அப்பா லெறிந்துவிட்டு, எதிரிப்படையின்மீது விழுந்து சாடினன். அப்பொழுது அந்தர்பில்கோஷினுடைய பௌஜுகள்சர்தாரில்லாத பௌஜானபடியால் பின்னுக்குத் திரும்பிஓடிக் கோட்டைக்குட்போய் புகுந்தார்கள். ஹஸ்ஸாமென்பவனும் தன்னுடைய பௌஜுகளோடு ஓடுகின்றவர்களைத் துரத்திக்கொண்டே பட்டணத்திற்குள்சென்று, பட்டண முழுவதையும் தன்னுடைய தளத்தாக்கொண்டு அடித்து, உடைத்து பிடித்து கொளுத்தி நாசமாக்கிவிட்டு, எழுபதாயிரம் மதாயின் வாசிகளை சிறைபிடித்துக்கொண்டு அவ்வூர் முழுவதையும் தன்னுடையகாவலில்வைத்துவிட்டு நௌஷேரவானுடைய சல்தநத்தென்னும் தர்பாரில்துணைந்து அரசனுடைய அரியணையென்னும்சிம்மாசனத்தையும் இன்னுமந்நாமுன்டான அரசனுக்குரிய யாவற்றையுங்கைப்பற்றியவனுய் தன்னிருப்பிடம் வந்துசேர்ந்து அன்றிரவை அதிக மகிழ்ச்சியோடுங்கழித்தான் பொழுதுவிடிந்தவுடனே எழுந்து தன்னுடையசேனைகள்புடைசூழ புறப்

பட்டு கைபரைநோக்கி சென்றான். இவ்விதம் சிலமஞ்சில்களை கடந்து செல்லும்வேளையில் அவ்விடத்தில் இரண்டு வழிகள் பிரிந்தது, அதில் ஒன்று மக்கமா நகரத்தின் காஃபத் துல்லாவிற்கு செல்லும் பாட்டையாயும் மற்றொன்று கிபசென்னும் பட்டணத்திற்கு செல்லும் ஸ்தாவாயும் இருந்தது, அவ்வேளையில் கூட யிருந்தவர்கள் ஹஸ்ஸாமை நோக்கி சொல்லுகின்றார்கள் இப்பொழுது தாங்கள் செய்த யுத்தமானது கன்யர்வுக்காகஇருக்கும். அதில் தாங்கள் ஜெயமடைந்து கீர்த்திபெற்றீர்கள். அஃதல்லாமல் ஓர் தவறான காரியமொன்று நிருக்கின்றது, அக்காரியத்தையும் செய்து முடித்து அந்த தவறையும் கொள்ளையடித்துக் கொள்ளுங்கள், அஃது எதுவானால் இதோஇருக்கும் இப்பாட்டையோடு சென்றால் சற்றுதூரத்தில் அல்லாவுடைய வீடொன்று இருக்கின்றது, அதை இடித்து மட்டமாக்கி தரையோடு தரையாக்கிவிட்டால் அதற்கு மிஞ்சிய கன்மை கிடையாது இன்னும் அவ்வூரில் சமான்கொண்டு இருக்கும் பேர்களையெல்லாம் மனுப்பூண்டில்லாமல் துடைத்துவிட்டால் அதிலும் பெரிய கன்மையா யிருக்கும், யென்றுரைத்தார்கள், இவ்வார்த்தையைக்கேட்ட ஹஸ்ஸாம்யென்பவனுக்கு சாங்காலமடித்து அவனுடைய மௌத்தென்னும் சாவானது தலைக்குமேல் பலாவென்னும் குடையாய் கவிழ்ந்துகொண்டு அவர்களே சொன்ன சொற்களை யெல்லாம் மிகவும் நல்லதென்றுஒப்புக்கொண்டவனுய் கஃபத்துல்லாவை நோக்கி மக்கமாநகரத்தின் வழியைப்பிடித்து சென்றான்.

இந்த மல்லுனவன் வருகின்றசெய்தி மக்கமாநகரத்திற் கெட்டிய பொழுது, அவ்வூர் குடிபடைகள் யாவருக்கும் ஹஸ்ஸாமென்பவன் மதாயின் பட்டணத்தை பிடித்தழித்துவிட்டு கஃபாவை உடைக்க யெண்ணிவருகின்றன் தன்கூட கணக்கிலடங்காத சேனசமூத்திரத்தை அழைத்துக்கொண்டு வருகிறனென்று சிறுவர்முதல் பெரியோர்வரையில் யாவருக்கும்செய்தியைத் தெரிந்தது. இச்செய்தியைக் கேட்டயாவரும் நடுங்கி உடலயர்ந்து பெருத்தவியாகுலத்தில் முழ்கியிர்களாயிருந்தார்கள் அவ்வேளையில்எமன்தேசத்திற்குச்சென்றசண்டைசெய்து அவ்விராஜனை இஸ்லாமாக்கி தங்களுடன் அழைத்துக்கொண்டு அமீர்ஹம்ஜா அவர்களும் அன்றையதினந்தான்மக்கமாநகரம்வந்துசேர்ந்து கஃபத்துல்லாவிற்சென்றழியாரத்துமுதலாகியபாத்தியாவும் முடித்துக்கொண்டு தங்கள்மாளிகையிற்சென்று தமதுதங்தை

யாகிய கஜா அப்துல்முத்தலிபு அவர்களுடைய இருபாதங்களிலும் கண்ணைவைத்து முத்தியிட்டார்கள் அப்பொழுது கஜா அப்துல்முத்தலிபானவர் மகனுடையசிரசை பாதத்தைவிட்டு மெயித்துத்தூக்கிமார்போடணைத்து கழுத்தோடுகழுத்தைசேர்த்து, தாங்கள் மகனைவிட்டுப்பிரிந்திருந்த ஆவல்தீர கட்டியணைத்து விட்டு, அமீர் அவர்களுடன் வந்திருக்கும் மற்ற இராஜாக்கள் உத்தியோகஸ்தர்கள் முதலாகிய பெரிய மனிதர்களுக்கெல்லாம் சலாம்சொல்லி முஸாஹபாகொடுத்து விட்டு ஷர்ப்பத்தென்னும் பானகக குடங்களை தருவித்து அவர்களுக்கெல்லாம் அவரவ ரந்தஸ்திற்குத்தக்கபடி கொடுத்துவிட்டு அல்லாஹுத்த ஆலாவினுடைய பக்கலில் சிஜ்தா சுக்கூர் செய்து கண்ணீர் அருவியைப்போல் ஓட அழுக ஆரம்பித்தார்கள். அப்பொழுது அமீர் அவர்கள் தந்தையைநோக்கி பாவாவே இன்றையதினமாகிறது குஷியென்னும் சந்தோஷத்தை அனுபவிக்கும் நாட்களாயிருக்க நாங்கள் அதைவிட்டுவிட்டு துக்கமென்னும் அழுகையை தருவித்துக்கொண்டதற்கு காரணம்யாது காதீமாகிய தங்கள் புத்திரன் சஹீதலாமத்தாக ஜெயத்தோடு வந்திருக்கின்றேன். அஃதெவ்விதமான ஜெயமெனில் உலகத்து ஜனங்களுக்கு யான் அவ்வுலை ஜெயிப்பேனென்னும்பெண்ணம்கூட இருக்காதே அப்பேர்ப்பட்ட வெற்றியோடு அல்லாஹுத்தஆலாவினுடைய உதவியைக்கொண்டும் வந்துசேர்ந்திருக்க நாங்கள் மகிழ்ச்சிகொண்டாடாமல் அதற்குபதிலாய் துக்கம்கொண்டாடும்காரணம்யாதுவென்றுகேட்டார். அவ்வார்த்தையையறிந்த அப்துல்முத்தலிபு அவர்கள் சொல்லத்தடங்கினார்கள். அஃது யாதெனில் மானதருமைமகனே யானழுகும் காரணமானது இன்னும் சில வேளையில் ஆபத்தான சங்கடம் நேரிடப்போகின்றது அஃது யாதெனில் ஹஸ்ஸாம்பின் அலக்மாகைபரியென்னும் ஜாலிமானவன் மதீனாவின் பட்டணத்தை பிடித்தளித்து நாசமாக்கிவிட்டு கஃபத்துல்லாவை இடித்துடைக்க வருகின்றான். அவனிடத்தில் இருக்கும் பௌஜுகளோவெனில் கணக்கிலடங்காத சேனைசமுத்திரத்தை ஒன்றாய்த் திரட்டிக்கொண்டு வருகின்றான் ஆகையால் இம்மக்கமா நகரவாசிகளாகிய ஆண்பெண் அடங்கலும் கைதுசெய்யப்பட்டவர்களாய் ஊறுறற்கற்று, அன்னகாரம் இன்னவிதமென்று அறியாதவர்களாய் திகில் மயக்கி லிருக்கின்றார்கள். ஏனெனில் அவன் அப்பேர்ப்பட்ட பொல்லாத வம்பனும் நெஞ்சில் ஈரமில்லாத வன்நெஞ்சனும், இருக்கின்றான், ஆகையால், யான் உம்மை ஏதாவதொரு புகல்செய்து ஹபிபி

தேசத்தளவில் அனுப்பிவிடலாமென்று யெண்ணுகின்றேன் யென்று சாத்தார். இவ்வார்த்தையையறிந்த அமீரானவர் இப்பாவாகிய தன்தையே சாகும்முன் யாதுகாரணத்திற்காக அழவேண்டும் துக்கப்படவேண்டும் விசனத்தைத் தீருவித்துக் கொள்ளவேண்டும் அந்த ஹஸ்ஸா மென்பவனிலும் கோடிகோடி தரஜா பெரியவன் அந்த ஹாக்கழல் ஹாகீமீனான அல்லாகுதஆலா எல்லோரிலும் மிகவும் அதிக வல்லமையுடையவனாயிருக்கும் அந்த அல்லாஹுத்த ஆலாவினுடைய உதவியினாலும் தங்களுடைய துஆவின் பரக்கத்தினாலும் நாம் வெற்றியடைவது என்னபெரியகாரியம் அவனைவெல்வது பெரியகாரியமல்ல இப்லீஸினுடைய தங்கள் அடிமை அவனை இம்மக்கமாகரத்தின் எல்லைவரையிலும்கூட வருமட்டும்விட்டுவிடுவேனா யான் எதிர்கொண்டு சென்று அவனுடைய உயிரை நரகம்சேர்த்து வைப்பேன். யென்று சொல்லி சபதம்கூறி, அக்கோமே ஆயுத சன்னத்தராகி சேனைபடை புடைசூழ தந்தையினிடம் உத்திரவுபெற்று, கஃபத்துல்லாவுக்குச் சென்று, இரண்டு ரக்காத்து பத்தாவுடைய நிய்யத்துச்செய்து நபில்தொழுது அல்லாஹுத்த ஆலாவிடத்தில் துஆக்கேட்டு பெழுந்து தங்கள் லஷ்கர்களுடனே ஹஸ்ஸாம் வரும்வழியை மறித்து சண்டைசெய்ய நாட்டமுடையவர்களாய் சென்றார்கள். இவ்விதமாய் சிலமஞ்சில்களை கடந்து ஓர் மஞ்சிலில் தங்கி இருந்து கொண்டு ஒற்றர்களைவிட்டு ஹஸ்ஸாம் இருக்குமிடத்தை தெரிந்துகொண்டார் அஃதெவ்விதமெனில் ஒற்றர்கள்வந்து அமீர் அவர்களிடத்தில் ஹஸ்ஸாமென்னும் மூதேவியானவன் இவ்விடமிருந்து இரண்டு மஞ்சிலுக்கப்பால் தனது பௌஜுகளுடனே இறங்கி இருக்கிறானென்றும் அவனுடைய பௌஜானது சற்றிலும் காதவழிதூரத்திற்கு நிறைந்து இருக்கிறதென்றும் சொல்லக்கேட்ட அமீர் அவர்கள் தங்களுடைய அநேக ஆயிரம் பௌஜுகள் புடைசூழ அவ்விரவிலேயே அல்விடம்விட்டு புறப்பட்டு அத்திசையைநோக்கிச் காற்றைப்போல் அதிசிக்கிரத்தில் வானலோகத்திற்கு பலாய்வந்து ஹஸ்ஸாமுடைய பௌஜில் இரங்கி மூடிக்கொண்ட தன்மையாய் அமீர் அவர்களும் தங்களுடைய சேனைசமுத்திரமும் சென்று வளைத்துவெட்டி அதஞ்செய்தார்கள் அவ்வேளையில் ஹஸ்ஸாமுடையபெருஞ்சேனைகளானது அல்லோலகல்லோலமாகி பௌஜின்கண் பெருங்கூச்சல் உண்டாய்விட்டது அப்பொழுது, அமீர் அவர்கள் அல்லாஹுஅக்பர் அல்லாஹுஅக்பர்! யென்று தக்பீர் முழங்கியவராய்ஏ! தூங்குகின்றவனே!

ர்களே! இச்சையில்லின்றும் கண்விழித்து உஷ்யாராகி கொள்ளுங்கள் அல்லாஹுதஆலாவினுடைய கஹராணது உங்களிலிருந்து வினாசமாக்குகின்றது என்று உரத்த சத்தத்துடனே மொழிந்ததோடு இன்னும்சொல்லுகின்றார் ஓபடைவீர்களே! உங்களுடையஉயிர்களை கொள்ளையடிகொண்டுபோக இஸ்ராயீலானவர்வந்து அதிகதூசனப் புடன்தங்கள்வேலையை முடிக்கின்றார் ஆகையால்சீக்கிரம்கண்விழித்து உஷ்யாராய்க் கொள்ளுங்கள் என்று சொல்லிபவராய் ஒவ்வொரு வீச்சில் பத்து இருபதுபேர்களை வெட்டிபினந்துகொண்டு இருக்கும் வேளையில் சூரியனுனவன் அமீர் அவர்களும் அவர்களின் சேனையும் இருளில் சண்டைசெய்கின்றார்கள் ஆகையால் நாம்சென்று அவர்களுக்கு பிராகாசத்தைக்கொடுப்போமென்ற யெண்ணத்துடன் தனது ஆயிரம்கிரணங்களையும் சுடர்விட்டெரிய அதிகசூரசாபுடனே கீழ்ப்பார்திசையின்கண் உதையமாகினன் அப்பொழுது விடிவதற்கு முன் அமீர் அவர்கள் வெட்டிய வெட்டினால் ஹஸ்ஸாமுடைய பௌஜில் பாதிக்குமேல் உயிர்துறந்து நரகஞ் சேர்ந்தார்கள். அவ்வேளையில் ஹஸ்ஸாமென்பவன் தன்னுடைய கூடாரத்திற்குள் நித்திரை செய்துக்கொண்டிருந்தவன். இப் பேரிரைச்ச கீடிமுழக்கமானது செவியில்பட்டதோடி அல்லாஹு அக்பர்! அல்லாஹு அக்பர் யென்ற சத்தம்வாகேட்டு துடிதுடித்து பதறியெழுந்து அருகிலிருக்கும் சேனாபோர்களை விழித்து இஃதென்ன கூச்சல் பெருஞ்சத்தம் யென்று வினவினன். அதைக்கேட்ட சேனாபோர் அவனை நோக்கி, சொல்பவராகினார்கள். எங்களெஜமானே! தம்ஜா வென்னும் பௌஜையுடைய ஓர் அரபியானவன் சப்கூன் எவ்வும் இராக்கொள்ளை அடித்து ஹாஜுடைய பௌஜ் முழுவதையும் வேலைபார்த்துவிட்டான். இதேவெட்டுகள் இன்னம் இரண்டுமூன்று நாழிகைநேரம் இருக்குமாயில் நம்முடைய லஷ்கரில் மனிதர்களுடைய பெயரும், அடையாளமும் இல்லாமற்போவதோடு பொழுது விடியுமட்டும் ஹாஜாவாகிய தங்களுடைய பூரிதர்களில் ஒரு மனுப்பூண்டாவது ஒரு மிருகத்தையாவது அறவே காணமுடியாது யென்றுரைத்தார்கள். இவ்வார்த்தையைக்கேட்ட ஹஸ்ஸாமானவன் விழிகள் இரண்டு உதடுகள்துடிக்க வெகுசீக்கிரத்தில் ஆயுதசன்னத்தனாகி தன்னுடைய பருத்த காண்டா மிருகத்தின்மீது சவாரிசெய்து பாளயத்திலுள் வந்து நுழைந்துவந்தான். அவ்வேளையில் என்ன பார்க்கிறதுஎன்றால் தன்னுடைய சேனைகளாவும் மதிமயங்கி தத்தளித்து, எவ்விதிக்கவும் அசைக

ஆயிரம் சேனைகள் தலையறுந்தும் காலறுந்தும் கையறுந்தும் வயறறுந்தும் விலாச்சரிந்தும் இடுப்பறுந்தும் இருதண்டங்களாயும் மூன்டங்களாயும் கண்டங்களாயும் பிண்டங்களாயும் இன்னுமின்னமாகி இரத்த வெள்ளத்தில் மிதந்து திரியும் தெப்பங்களைப்போல் தத்தளித்து கிடக்கவும் குறையுயிராய் அக்குருதியினுள் அமிழ்ந்து கிடக்கும் மிணங்களின்முச்சானது பூமியிலிருன்றும் பூகம்பங்களெம்பியது போல குமிவிவிட்டு கிடக்கவும் கண்டு மனம்பதறி புண்ணுகி நின்ருன் அவ்வேளையில் ஹஸ்ஸாமென்பவனுக்கு வெட்டுப்பட்டிறந்தவர்கள் போக பாக்கியாய் முப்பத்தாயிரம் ணைகூர்களும் இருந்தார்கள், மற்றவர்கள் யெல்லாம் அங்கு மிங்குமிருந்து வேடிக்கை பார்க்கவந்த ஜனங்களுமாயிருந்தார்கள். அப்பொழுது ஹஸ்ஸாமென்பவன் உதட்டைக் கடித்து ஆகாரத்துடனே தான் வழிபிருக்கும் காண்டாமிருகத்தின் அடித்து விரட்டி அமீர் அவர்களை அடித்து நெருங்கி சொல்லுகிருன் ஓ! அபியே! நீ அணிந்திருக்கும் ஆயுதாதிகளும் நீ ஏறியிருக்கும் குதிரையையும் யாரிடத்தில் யாசகம் பெற்றுக கொண்டு வந்தாய் இவ்வளவுஅற்பசாமான்களையுடைய நீ! என்னுடனெதிர்த்து சண்டைசெய்ய வந்தாய் உனக்கு உன்னுடைய உயிர் பெரிதென்று எண்ணுமல் மனதில் அச்சமில்லாமல் என்னுடைய லஷ்கரைதொந்தரவுசெய்தாய். உன்னுடைய இளமைப் பிராயத்தைபார்த்து என் மனமானது மிகவும் இரங்கி தயவாய் சொல்லுகின்றேன் அம்மை யாதெனில் உடனே உன்னை வெட்ட யான் உத்தரவுகொடுக்கவில்லை, நீ! இக்குதிரையையும், உன் தேகத்தி லணிந்திருக்கும் ஆயுதங்களையும் யெனக்கு இனமாய் நஜர் கொடுப்பதுபோல் கொடுத்துவிட்டுஎன்னிட்த்தில் நீ பணிவுதலோடு மன்னிப்பு கேட்டுக்கொள், கட்டாயம் உன்னுடைய குற்றத்தை பொறுத்து மன்னித்து விடுகிறேன், நீ என்னுடைய பௌஜில் வந்து விழுந்து இராக்கொள்ளையடித்தாய், அவைகளை யெல்லாம் பொறுத்து விட்டு விடுகின்றேன், நீ! செய்ததெல்லாம் மரியாதை யில்லாத தவறுதலான குற்றங்களாயிருக்கும். ஆகையால் யான் சொல்லிய இவ்வார்த்தைகளுக்கு உடன் படாவிடில் இதோஎன் கரத்தில் பிடித்திருக்கும் வாளாயுதத்தினுல் வெட்டிப்பினந்து மண்ணோடு மண்ணுக்கி கபனும், கபரும், இல்லாமல் ஆக்கி விடுவேன் என்றுரைத்தான். அத்தஷ்டனுடைய கொடிய வார்த்தையைக்கேட்ட அமீரானவர், கோபம் பொங்கி விழிகள் சிவந்து ஆத்திரத்தோடு சொல்லத்தொடங்கினர். அடே! கொலைபாதகத்தொ

முலையுடைய நாயினுங் கடைப்பட்ட மல்லனே யான் பாசென்னுஞ் சத்தக் கேட்கத்திராத்தில் உள்ளவனென்றும் நீயறியமாட்டாயா? சொல்லக்கேள் யானறிறவன் சங்கைபொருந்திய காஜா அப்துல் முத்தலீபுடைய தவபுத்திரனும் அப்துல் ஹாசிமுடைய பௌத்திரனுமாகும் இருக்கும். உன்னுடைய வாளாயுதத்தின் கெடிமுழக்கத்தை நீ காதினுல்கேட்கவில்லையா? நம்முடைய இலாம்மார்த்திரனத்தின் பிரஸ்தாபத்தை நீ கேட்டதில்லையா? அடே! காகவாதியே நீ புத்தி சுவாதினத்தில் வந்து கண்ணைத்திறந்து பார்த்து நீ கொண்டிருக்கும் மதத்தை மறந்து அகங்காரமான வார்த்தையை நீக்கிவிடு, உனக்கென்ன கேடுபிடித்து விட்டது. அதனால் உன்னுடைய பாழ்நாட்களோ அபாயமாய், நரகழுக விடப்போகின்றாயென்றுசொன்னார் அப்பொழுது ஹஸ்ஸாமென்பவன் அமீர்அவர்களின் வீரவாக்கியங்களோ செவிச்சுவை யிழிபடகேட்டு இனி இல்லாதகுதங்காரத்துடனே தன்கரத்தில் பிடித்தகேஜாலினல் அமீர் அவர்களின் பரிசுத்தமாகிய தேஜஸற்ற தேஜஸென்னும் நெஞ்சுக்கு நேராய் இழுத்து இலக்குவைத்து குத்தினன், அக்குத்தை அமீர்அவர்கள் தங்கள்கரத்தில்பிடித்திருக்குகுரத்தால் இடைக்கப்பட்ட தங்களுடைய கேஜாவின் தனியினுல் தட்டி விலக்கினார்கள் அப்பொழுது இருவரும் சிலகோரம் கேஜாவினுலேயே குத்தும் தட்டுமாய் அபரிமிதமாகிய மனகுதலை காண்பித்து விளையாடினார்கள் இருவரில் ஒருவருக்கும் யாதொரு காயமும்படவில்லை, அவ்வேளையில் ஹஸ்ஸா மென்பவன் வெட்கத்தினுல் தலைகுனிந்தவனாய்த் தன்னுடைய கேஜாவை அப்புற மெறிந்துவிட்டு உரையில் நின்றும் வாளையுருவி கரத்தில்பிடித்து, நினைக்கின்றான் அமீர் அவர்களின் சிரசுக்கு நேரேதி இருபிளப்பாய் ஆக்கிவிடுகின்றேனென கருதி அவ்விதமே வெட்டினன், அதையறிந்த அமீர் அவர்கள் அவ்வெட்டை தடுத்து அவன் கரத்தில் பிடித்திருந்த வாளை கையைவிட்டும் பிடுங்கி தங்கள் பெல்டின் பக்கமாய் யெறிந்துவிட்டு சொல்லுகிறார். அடே! மல்லுனனவனே உன்னுடைய மனதில் நினைத்திருந்த ஆபேகையென்னும் வெட்டுக்குத்துகளையும் ஆசைதீரசெய்து பார்த்துவிட்டாய். இனி என்னுடைய சரபாகிய தாய்சின்னவியோபட்டை பார் இவ்வெட்டை தடுத்தக்கொள், உன்னுடைய ஆயுதங்களையும் வாகனத்தையும் ஜாக்கிரதையாய் தார்த்தக்கொள், பின்னல் சபர் சார்செல்லாமல் வெட்டி விட்டதென்று, குறைகூறக் கூடாது ஆகையால் நீயுன்வசவு ஜாக்கிரதையோடும் உன்யாராயிருப்பினுமென்னை

அவ்வளவில் தயாராயிருக்குகொள் என்று சொன்னவுடனே ஹஸ்ஸாம் என்பவன் ஐயோ விதியேயென்று தலையில் கையவைத்து அழுகின்றவனுக்கு சொப்பாய் இடது கரத்தில் மாட்டியிருக்கும் கேடகத்தை சிரசிற்குமேல் பிடித்தான். அவ்வேளையில் அமீர் அவர்கள் இல்லல்லாஹூவென்ற பரிசுத்தவாக்கியத்தைமொழிந்தவர்களாய் வாளாயுதத்தை ஓங்கிவெட்டினர், அவ்வெட்டின்கனமையானது அக்கேடகம்பினது சிரசைவகிர்ந்துகொண்டு இடுப்புவரையில் இழுத்து அவனேயிருந்த காண்டா மிருகத்தையும் இரண்டாய் தறித்து பூமியில் வந்து பதித்து பூமியையும் இழித்துவிட்டது. அப்பொழுது அமீர் அவர்களின் பட்டாளுர்களும் ஹஸ்ஸாம்முடைய தளத்தினரும் அமீர் அவர்களின் வெட்டைபார்த்து திகைத்து, ஆ! ஹா!! இவ்விதமான வாளாயுதத்தை நாமும் நம்முன்னோர்களும் கண்டுங் கேட்டு மிருக்க மாட்டோம். இஃதென்ன வாளாயுதமா மிருக்கும்பென்று ஆச்சரிய மடைந்து அயர்ந்து சித்தஸ்வாதீனமிழந்து அப்பப்பா இவ்வெட்டி வெட்டிய கையானது மனிதனுடைய கைதானே? அல்லது அல்லாஹூத்தஆலாவினுடைய தூதர்களிலுள்ள கைபர? வென்று யோசித்து நின்றார்கள். அவ்வேளையில் அமீர் அவர்கள் ஹஸ்ஸாம் என்பவனை வெட்டிப்பிளந்துவிட்டு ஆட்டுக்கிடையில்புகுந்து அநஞ்செய்யும் சிம்மத்தைப்போல் ஹஸ்ஸாம்முடைய தளத்தினுள்புகுந்து ஜனக்காடெல்லாம்பிணக்காடாகவெட்டிக் குவித்தார்கள் அப்பொழுதுதளிகளின் கூட்டத்தில் செத்தவர்களும்போக மிகுதியாய் இருந்தவர்களில் சிலர் தப்பிப்பிழைத்து ஓட்டம் பிடித்தார்கள் மீதியானவர்கள் இஸ்லாமாகினர்கள் அப்படியிருக்கையில் அமீர் அவர்கள் தங்கள்சேனையைநோக்கி கௌஷேரவானுடைய தக்த தாஜ் இரண்டுபேர்களுடைய சொத்துக்கள் யாவையும் கொள்ளையடிக்கும்படி உத்தரவுசெய்தார்கள் கௌஷேர்வானுடைய சேனையோர்களை ஹஸ்ஸாமென்பவன் பிடித்து கைதுசெய்து வைத்திருப்பவர்களை யெல்லாம் விடுதலை செய்யும்படி உத்தரவளித்தார். இன்னும் தங்கள்கூட வந்த மக்கமா நகரத்தின் வாசிகளுக்கு வேண்டிய வெகுமதியென்னுங் கில்அத்துப் பாத்திரம் கொடுத்து, வெகுவாய் அவரவர்களின் அந்தஸ்திற்குத் தக்க திரவியங்களையும் இனம் கொடுத்து தங்கள் பதிக்கேகும்படி உத்திரவு செய்தார்கள். பின்பு பாதுஷா கௌஷேரவானுக்கு நேர் கடிதமெழுதினார்கள். அஃதெவ்விதமெனில் வம்பர்களை அடக்கியாளும் அல்லா சுபுஹானுஹூவத்த ஆலாவினுடைய உதவியைக்கொண்டும்

தங்களுடைய தாயுபரக்கத்தினாலும் தங்களுடைய ஹஸ்ஸாமேன்ப வீன ஜஹானெ மென்னும் காகத்திற்கு இறையாக்கி கைதுசெய்து வைத்திருந்த தங்களுடைய ஏழுபதினாயிரம் ரணசூரர்களையும் விடு தலையாக்கி, அந்த மல்லுகளுடைய ஹஸ்ஸாமுடைய சிரசை மக்பூல் உபா தார் வசத்தில் கொடுத்து தங்கள் சமூகத்திற்கு அனுப்பியிருக்கின் றேன் தகத்தும், தாஜும் என்றுசமிருக்கின்றது பாதுஷாவினுடைய உத்திரவானால் யானேசுமந்துகொண்டுவந்து ஒப்பிசிக்கின்றேன் அல் லதுயாரிடத்தில் அனுப்பும்படி உத்திரவாகின்றதோ அவ்விதம்நடக்க ஆவலாயிருக்கின்றேன் என்றெழுதி மக்பூல் உபாதார்வத்தில் ஹஸ் ஸாமுடைய சிரசையும் சடிதத்தையும்கொடுத்து மதியின்பெண்ணும் பட்டணம்சென்று கௌஷேர்வானிடத்தில் கொண்டுபோய் சேர்க் கும்படி அனுப்பிவைத்துவிட்டு தாங்களும் தங்கள் பௌஜுகளோடு புறப்பட்டு மக்சமாநகரத்தை நடிச் சென்றார்கள் இக்காலை யுடைய வர்கள் சொல்லுகின்றார்கள் அமீர்அவர்கள் இந்த ஒரு தடவைதான் இராக்கொள்ளை யென்னும் சண்டைசெய்தார்கள். இதற்கு முன்னு ம் இதற்குபின்னும் ஒருபோதும் இரவில் அகஸ்மாத்தாய் சண் டைசெய்யவுமில்லை. சண்டைச் செய்யச்சொல்லியு மவுமில்லை யென் று எழுதுகிறார்கள்.

மக்பூல் உபாதார் கௌஷேரவானைக் கண்டு பிடித்தமும்

சிரசும் கோடுக்கிறதைப் பேசுதிறபாடு.

விருத்தம்.

மிக்கதோர் கொடியபாவி மிகமதம்படைத்த ஹஸ்ஸாம்
உக்கியே ஹம்ஜாவாளர லுயிர்துரந் தளித்தசெய்தி
ஒக்கவே மக்பூல்கொண்டு உயர்மதாயினுக்குச் சென்று
சக்கரவர்த்தி யீயும் சாதகம் புகலுவோமே.

புல்புல் என்னும் பக்ஷியானது தன் சொண்டாகிய மூக்கை நிறுத்து, இனிமையாகிய பாடல்களைப்பாடும் தன்மையாகிய இன்ப மான சரித்திரத்தை எழுதும் மூக்கினையுடைய கலமென்னும் எழுது கோலை காத்தில்பிடித்த படிப்பாளிகள் எழுதுகிறார்கள். அஃதென் னவெனில் சமகரையாகிய பூந்தோட்டத்தில் படிகளமைத்து அப்படி களின்மீது விதவித புஷ்பச்செடிகளை தொட்டிகளில் அமைத்து

வரிசைவரிசையாய் பார்ப்பவர்களின் கண்கள் குளிர்ச்செய்யும் பாவ னையாய் இவ்வின்பமான சரித்திரத்தை யெழுதுகிறார்கள். அச்சரி த்திரமாவது என்னவெனில் வேட்டையாடச் சென்றிருந்த கௌ ஷேரவான் பாதுஷாவானவன் நாற்புதார்கள் சென்றபின் தன் னுடைய பட்டணமாகிய மதாயின்வந்து சேர்ந்தான். அப்பொழுது என்ன காண்கின்றானெயானால் பட்டன்முழுதும் பாழாய்க்கிடக்கவும் பௌஜுகளெல்லாம் இருந்த இடந்தெரியாமல் வெறுந்தரையாய்க் கிடக்கவும் அரண்மனை ஆஸ்தானம் கொலுமண்டபம்பாவும் குலைந்து அரண்மனை வெறும்மனையாகவும், ஆஸ்தானம், நான்தானமாகவும் கொலுமண்டபம் வெறும்மண்டபமாகவும் தகத்து மில்லாமல் தாஜ் மில்லாமல் இருக்கக்கண்டு கண்களிலுள்நீர் தாரைதாரையாய் பெருகி யோட அழுது, புஜுருச்மெஹரை கோக்கி சொல்லுகிறான் காஜா வே! யாதென்னவென்பேன் என்னுடைய பொல்லாத காலமானது இவ்விதமான கெட்டவேளையை கண்ணால் பார்த்து துக்கப்படச் செய்துவிட்டது. யாங்கண்ட கனவின் பலனை தாங்கள் சொல்லிய தாயிற்றுபடி இதுவரையில் இக்கெதியை காண்பித்துவிட்டது. இன் னும் மிருதியிருக்கும் தாயின் சந்தோஷசெய்தியை எப்பொழுது காண்பிக்கின்றதோ அதையும் பார்க்கலாமென் றுரைத்தான். அவ் வார்த்தையைக் கேட்ட புஜுருச்மெஹர் பாதுஷாவை கோக்கி, வெற்களிறையே தாங்கள் ஒன்றுக்கும் யோசித்து விசனப்படவேண் டாம். இன்று, அல்லது நாளைக்குள் அச்செய்தியும் தெரிந்துவிடப் போகிறது, கற்று பொறுமையோடு இருங்கள். இத்தக்கமெல்லாம் நீங்கி தாங்கொண மிற்சி சந்தோஷமடையப்போகிறீர்களென் றுரைத்தார். இவ்விதம் வசனித்துக்கொண் டிரு நிவகனம் பிற்க.

பாதுஷா வேட்டைக்கு போயிருக்கும்போது ஹஸ்ஸாமுடைய சண்டையில் வெட்டுப்பட் டிறந்துபோனவர்கள்போக மிருதமாய்த் தப்பிப்பிழைத்திருந்த ஸாஸானி யென்னும் கூட்டத்தினர் பழையபடி பகீத்தக்கென்பவனிடத்தில் திரும்பிவந்து சொல்லத் தடங்கினார்கள். அஃதுயாதெனில் வஜீரே! இவ்வளவு தண்டமும் சண்டையும் உண் டானதெல்லாம் அந்த புஜுருச்மெஹரென்பவராலேயே, அல்லாமல் வேறொருவராலேயும், அல்ல இந்த புஜுருச்மெஹரானவர் பாதுஷா அவர்களை வனவேட்டைக்குபோகச்சொல்லி அனுப்பாமல் பாதுஷா இவ்விடத்திற்றானே இருந்திருப்பாரானால் அந்தஹஸ்ஸாமென்பவன்

ஜெயித்து ஊரைப்பிடித்துக்கொண்டு நமக்குஇவ்விதமான கஷ்டகால
த்தை காண்பித்திருக்கமாட்டான். அநியாயமாய் நம்முடைய பங்
துக்களும் பிள்ளையிருக்க தகப்பனும் தந்தையிருக்க தனயனும், இன்
னும் சிறிலே உறவினர்களும் ஜீவரக்ஷணக்காய் காவுவருமுன்னமே
உயிரைபலிகொடுக்க நேர்ந்தது, இன்னும் அநேகர் சிலைபிடிக்கப்
பட்டு கைத்தியிலிருக்கின்றார்கள், அநியாயத்தை என்னசொல்வோம்
அச்சிறையாளிகள்யாவரும் உயிரிருக்க செத்தமைத்துக்கொப்பாய்பிடி
பட்டுசிறையிலிருக்கின்றார்கள். இவ்வளவும் அந்த புஜ்ருச்மெஹரே
ன்பவர் மதபேதகத்தினால் நம்மையெல்லாம் அழித்தொழிக்கவேணு
மென்ற வெண்ணத்தோடு இவ்விதம் செய்தாரேயென்றிய வேறில்லை,
ஆகையால் எங்களுடைய குறையாகிய பரிதாபநிலைமையை தாங்கள்
பாதுஷாவினிடத்தில் சொல்லி எங்களுக்கு நியாயம் கேட்டுக்கொடுக்
கும்படி உதவிசெய்ய வேண்டும் எங்களுக்காய் பாதுஷாவிட்டத்தில்
அழுதுமுறையிட்டு எழையாகிய எங்கள் குறையைநீக்கி அதின் பல
னுடைய தவாபை பெற்றுக்கொள்ளுங்கள் என்று கூக்குரலிட்டு அழு
தார்கள்.

இப்திவ்விதமிருக்க லாபிர் நமத்போஷ் என்னும் கௌகேச
வாஜனடைய ஐயாராணவன் தேகமுழுவதும் மண்புழுதி அடைத்து
நிறைந்து தலைவிரிகோலமாய் பாதுஷாவின் சமுகத்தில் ஓடிவந்து,
பாதுஷாவைவணங்கி அடிபணிந்து மரியாதையுடனே தலைகுனிந்து
நின்றான் அப்படிநிற்கும் ஐயாரை பாதுஷாநோக்கி ஓ! ஐயாரே யாது
காரணம் என்னசெய்தி கொண்டுவந்தாய் என்று வினவினார் அப்
பொழுது ஐயாரானவன் பாதுஷாவை நோக்கி சொல்லுகின்றான்
ஹல்ஸாமென்பவன் நமது மதயின்பட்டணத்தை பிடித்து பர்பா
தனைசெய்து நாசமாக்கி அளித்துவிட்டு எழுபதினாயிரம்பேர்களை சிறை
யாக்கிக்கொண்டு கைபரைநோக்கி அகங்காரத்துடனே மமதைகொ
ண்டு எப்பேர்ப்பட்ட முடிமன்னர்களையும் ஒருபொருட்டாய் மதிக்
காமல் ஆணவங்கொண்டு சென்றகையில் அமீர்ஹம்ஜாவென்னும் பெ
யரையுடையவர் தங்களுடைய தனுபரக்கத்தினால் அவனை வெட்டிப்
பிளந்து நரகத்திற் கனுப்பியதோடு அவனுடைய சேனைவெள்ளத்தை
நசித்து தேய்த்து ஊறி பரக்கச்செய்து அவன் கைதசெய்துக் கொ
ண்டுபோன நமது சேனைகளையும் விடுதலையாக்கி அந்த மல்லாஞ்சிய
ஹல்ஸாமுடையு சிரசையறுத்து ஹம்ஜாதன்னுடைய உயிர்த்தோழர்

களில்நின்றும் ஒருவர் வசமீந்து, இவ்விடத்திற்கனுப்பியிருக்கின்றார்.
அச்சிரசைக் கொண்டுவருபவர் பெயர் மக்பூல் வபாதாரென்று சொல்
லப்படும் இன்னும் நம்முடையசேனைபதியில் ஒருவரை அந்த ஹல்
ஸாம் என்பவன் சிறைபாக்கிக்கொண்டு போய் இருக்கானல்லவா
அவரையும் அந்த ஹம்ஜா என்பவர் மீட்டு அவருக்கும் வேண்டிய
தில்அத்தனை முதலான்ய அரேக வெகுமதிகளையும் கொடுத்து அனுப்பி
யிருக்கின்றாரென் றுரைத்தான். இச்சந்தோஷசெய்தியை காதினால்
கேட்ட பாதுஷாவுமிர்த்து கனைத்து, முகம்செழித்து குதித்து துள்ளி
எழுந்து ஓடோடியும் சென்று புஜ்ருச்மெஹரை இறுகக்கட்டி
னதோடு நெஞ்சுவைத்து அணைத்துக்கொண்டு சொல்லுகின்றான்.
அதுயாதெனில் காஜாவே! இப்பொழுதே நமது மந்திரி முதலாகிய
உத்தியோகஸ்தர்கள் யாவரும் பெழுந்து எதிர்நோக்கிசென்று மக்பூல்
வபாதாருக்கு இன்சகபால்செய்து மரியாதையுடனே அழைத்து வரும்
படி உத்திரவுசெய்யுங்களென் றுரைத்தான். அதுபோல் புஜ்ருச்
மெஹரானவர் சபையோருக்குரைக்க உடனே மந்திரிபிரதானிகள்,
இன்னும் மற்றபெரிய உத்தியோகஸ்தர்கள் யாவரும் தங்கள் தங்கள்
ஆடை ஆபரணலங்கார சஹித சன்னத்தாய் எழுந்து புறப்பட்டுச்
சென்று பட்டணத்தைவிட்டும் வெளியேநடந்துசென்று மக்பூல் வபா
தாரைக் கண்டு அதிக சிறப்பாயும் மரியாதையுடனும் இன்சகபால்
செய்து அழைத்துவந்தார்கள் யாவரும் அரண்மனைக்குட் சென்று
பாதுஷாவின் சமுகம் அடுத்தபொழுது மக்பூலானவர் பாதுஷாவீற்
றிருக்கும் சிம்மாசனத்தின் கால்களைநுனிந்து முத்தி முகந்து எழு
ந்து மரியாதையுடனே சலாம்செய்து அமீர் அவர்களின் சிருபத்தை
யெடுத்துக்கொடுத்தார். உடனே பாதுஷா அமீர் அவர்களை மிகவாய்
கனப்படுத்தி அதிக இஜ்ஜத்துசெய்துதானே கரங்களைநீட்டி அமீர்
அவர்களின் சிருபத்தை அதிகபிரியத்தோடும் முகமலர்ச்சியோடும் வா
ங்கி முத்திரை நீக்கி தான்முத்தி வாசித்தணர்ந்து பின்பு புஜ்ருச்
மெஹரிடம் கொடுத்து காஜாவே! இக்கடிதத்தை உரத்த சப்
தத்தோடு யாவரும்கேழ்க்க படித்துவிட்டு நம்முடைய பட்டணமுழு
வதும் இச்செய்தியறியும்படி பறைசாற்றுவியுங்களென்றுரைத்தான்.
அபபொழுது அந்த இராஜ சபையின்கண் ஆஜராயிருந்த ஸைபா
னிக்கினைஞர்களும், கியானிக் கினைஞர்களும், முஜுது கினைஞர்களும்
மற்ற யாவரும் கடிதத்தின் வாசகத்தையறிந்து அதிகசந்தோஷத்தில்
மூழ்கியவர்களாய் பாதுஷாவை நோக்கி, இவ் வெற்றிக்காக வே

ண்டி ஹோர்க் என்னும் மங்களவாக்கிய முறைத்தார்கள். அப்பொ
ழுது பாதுஷாவான்வன் மப்பூவபாதார்யென்பவருக்கு அளவற்றவிலை
யுயர்ந்த இல்அத்துக்களீந்து இச் சந்தோஷ சமாச்சார்த்தை வாய்
நிறையகொண்டுவந்து பாதுஷாசமுகத்தில்சொல்லியபடியால்வாயிலி
ருந்தஅச்சந்தோஷவார்த்தைகள் வெளியாகி மப்பூலுடையவாய் காலி
யாகி ஒன்றுமில்லாமல் வெறுவாயா யிருந்தபடியால் அதையறிந்த
பாதுஷா! அவர்வாய்நிறைய வைரம் வைடூரியம் நீலம் மாகறீ மாணி
க்கம் கோமேதகம் புஷ்பராகம் முத்து பவளம் முதலாகிய விலையுயர்
ந்த இரத்தினங்களே யள்ளி நிறப்பிவிட்டு சபையோர்களை நோக்கி
சொல்லுகின்றன் இந்த மப்பூலானவர் எத்தனை காலுக்கு இம்மதா
வின் பட்டணத்தில் தங்கி யிருக்கின்றாரோ அத்தனைகாலும் அவர்
வீட்டுக்கு வருவதற்கு யாதொரு தடையுமில்லாமல் விட்டுவிடவேண்டும், யாதொருவிதமான தடங்கலும் செய்யக்கூடா
தென்று துக்ஞாபித்தான்.

ருவி சொல்லுகிறார்:—மப்பூல் வபாதார் என்றைபதினெமிமதா
வின் பட்டணத்திற்கு பாதுஷாவின் சமுகம் வந்திருந்தாரோ அன்று
முதல் பாதுஷாவினுடைய தோட்டத்தில் ஒரு வீர்க்குருவியானது
வந்து உட்கார்ந்து இருக்கின்றதை தர்பாரிலுள்ளவர்களும் மற்றமனி
தர்களும் பார்த்தார்கள். அக்குருவியின் கழுத்தில் கறுப்புக்கோடு
இருப்பதற்குபதிலாய் ஓர் கறு நாகமானது அதின் கழுத்தைச் சுற்
றிக்கொண்டிருப்பதைக்கண்ட மனிதர்கள் பாதுஷாவினிடத்தில் அறி
க்கை செய்தார்கள், அப்பொழுது பாதுஷா சொல்லுகின்றன் அந்
குருவியானது நம்மிடத்தில் தன்னுடையபோதுசொல்லிக்கொள்ள
வந்திருக்கின்றதாய்க்காணுப்படுகிறது. துரையால் யாராகிலும்ஜவாம்
மாறி தனமுடைய சிப்பாய்கள் அவர்கள் எப்போப் பட்டவர்களை
யிருந்த வேணுமேயாகிலும் அப்பகஷிக்கு யாதொரு தீங்கும் விரோதி
காமல் அப்பாம்பை மாத்திரம் அம்பிலெய்து, அப்பகஷியை சகா
யமாகத்தாய் கிடைவிடவேண்டும், அவ்விதம் வீர்கள் நம்சமுகத்தில்
யாரிருக்கின்றார்களோ அவர்களென்முன்பில் வரலாமென்று உத்திர
வளித்து இன்னும் சொல்லுகின்றார். அப்பகஷிக்கு யாதொரு தின்ன
ம் தேடிமாகில் என்மனதிற்கு அதிக துக்கமுண்டாகுமென்றசைத்
தார், இவ்வார்த்தையைக்கேட்டு ஒருவராவது நான்செய்வேனென்று
மனத்தளர்ந்து தைரியமாய் வரவில்லை, அவரவர்கள் தாம் தாம் இரு

ந்தஇடத்தைவிட்டும் அசையாமல் ஒருவர்முகத்தைபொருவர் உற்று
நோக்கியவர்களாய் மௌனமா யிருந்தார்கள். அப்பொழுது மப்பூல்
வபாதரானவர் புலிக்குட்டியைப்போல்பாய்ந்தெழுந்து பாதுஷாவினு
டைய தக்தின்கால்களே முத்திமுகந்து பாதுஷாவினிடத்தில்சொல்
கின்றார் யாதெனில் ஜஹான்பனாவாகியபாதுஷாவே யானந்த சீர்ப்
பத்தை பகிர்க்கோர்வின்னம்வாமல் வுப்த கீக்கிவிடுகென்றேன். அல்
லாஹுதஆலா போதுமானவனென்று பாதுஷாவினிடத்தில் உத்
திரவுபெற்றுக்கொண்டு அப்பகஷி உட்கார்ந்திருக்கும் சருவுமரத்தின்
அருகில்போய்சேர்ந்து தம்முடைய நேஜாவின் முனியில் ஓர் கண்ணு
டியைக் கட்டி அதை ஓர்மனிதன் காத்திலீந்து அப்பகஷியின் உருவம்
கண்ணுடியில் தெரியும்படியாய் அதற்குநேரேபிடித்து கையை அசை
க்காமல்வெகு ஜாக்ரதையோடி கவனமாய்ப்பிடியுமென்றுரைத்தார்,
அப்பொழுது நேஜாவை பிடித்தவர் அப்பகஷிக்கு நேரேபிடித்தார்,
அக்கண்ணுடியில் பாம்பின் உருவம் தோற்றவே அப் பாம்பானது
எதிரிப்பாம்பொன்று தன்எதிரில் வந்திருப்பதாய் யென்னி பகஷி
யின் கழுத்தைச்சுற்றியிருக்கும் தன் தலையைவிரித்து எதிரிப்பாம்பை
பார்த்து, பீடமெடுத்து நிழற்பாம்பைகொத்த தலைவை கீட்டியது,
அவ்வேளையில் மப்பூல் ஆனவர் சமயம்பார்த்து வில்லில் அம்பைவை
த்துகாணேற்றிலீபோர். அப்பறவையின் இறகின்ரோமத்திலும்கூட
ஒன்று அசையாமல் அப்பாம்பை மாத்திரம் குத்தித்தாக்கிக்கொண்
டேகிவிட்டது. மப்பூலானவர் தங்கள் அம்பை பாம்பைவிட்டும் கழ
ட்டி ஏறித்துக்கொண்டார் பகஷியானது இறகையடித்து பறந்து
தென்று தன்னினத்தோடி போய்சேர்ந்தது. அப்பொழுது கூடியி
ருந்த ஜனங்கள் யாவரும் ஷஹபாஷ்! ஷஹபாஷ்!! என்னும் வாக்
கியம் மொழிந்தார்கள். பாதுஷாவானவன் மப்பூலுடைய கைகளைப்
பிடித்து முத்திவிட்டு அதிக விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களே
யெல்லாம் இனம்கொடுத்த அமீர் அவர்களுடைய அர்ஜியென்னும்
கடிதத்திற்குபதிலெழுதி பஸ்தக்கிடத்தில் கடிதத்தையும் இன்னும்
விலையுயர்ந்த இல் அத்தென்னும் ஆடை ஆபரணங்களுமீந்து சொல்
லுகிறான் இக்கடிதத்திற்கு நம்முடைய மோதரத்தைவைத்து, பாமரே
சுத்தரே, பாமரே லயார்ரஸ்என்னும் நமது தளகர்த்தர்களிடம்
கொடுத்து அதிசீக்கிரமாய் இலைகளே வெடுத்தச்சென்று, அமீர்
அவர்களிடம்கொடுத்துவிட்டுவருபடி செய்யென்று கொடுத்தான்.
அவைகளை பரிந்துக் யென்பவன்வாங்கி கடிதத்தை நிறுத்து வாசித்து.

பார்த்தான். அதில் என்ன எழுதியிருக்கதென்றால் பாதுஷா அமீர் அவர்களுக்கு மிகவும் அன்போடு எழுதுகிறான். அபெ பயில்வானே ஜமானென்னும் இக்காலத்தின் வீரம்படைத்த பயில்வானே! ஜாலிம் களாகிய வம்பர்களின் சிரங்களை கொய்து போர்எண்ணும் குயிலல்ல ளாய் குவிக்கும் பயில்வானே! இப்பொழுது நீர் எனக்குசெய்த நன்றியானது யான் உம்மை நத்துப்புத்திரனைப் எடுத்துக்கொண்ட ஹக்கின் கடமைமைய முற்றிலும் நிறைவேற்றிவிட்டீர். இன்னும் என் னுடைய துஷ்மனனவன் கொண்டிருந்த ஆண்மை, மதம், அகங்கா ரம், மமதையாவையும் மண்ணோடு மண்ணாக செய்த தின்னுடைய புகழும், கீர்த்தியும் மென்மேலும் ஓங்கச்செய்தீர். இப்பேருதவிக்காக ருஸ்த்தும், வாரிமான் ஆகிய இவ்விரு பயில்வான்களாயினும் தம்மு டைய உதவிக்காகவும், கூவத் பலம், தாக்கத் முதலியவைகளுக்காக தமக்கு அடிமையாகி அவ்வடிமையின் அடையாளமாகிய பாவளிக்கை காதிலணிந்துகொள்வார்கள். இன்னம், மொஹஸுப் இஸ்பந்தியா ரென்னும் பெயர்போன பயில்வான்களாயினும் தம்முடைய கூவத் திற்கு முன்னால் தலைகுனிந்து, வெட்கி ஓட்டம்பிடிப்பார்கள். இப் பொழுது பாமனே சக்கான், பாபனே ஹுர்ரான் ஆகிய நமது இர ண்டு சேனைபதிகளிடத்தில் தங்களுக்காக கில்அதிமு பாக்திறவாகிய வெகுமதிகளைகொடுத்து அனுப்பியிருக்கின்றேன். அவைகளைப்பெற் றுக்கொண்டு தாம் ஹஸ்ஸானைவெட்டி ஜெயித்து அவனிடத்திலிரு ந்து திரும்பி மீட்டுக்கொண்ட தக்த்து, தாஜுதலாகிய யாவையும் யெடுத்துக்கொண்டு காமும் அதிசிக்கிரமாய்புறப்பட்டு இவிடம்வந்து தங்களுடைய நூரே ஜமாலென்னும் ஒளிவிலங்கும் செந்தாமரை வதனலங்காரத்தை அணுதினம் தேடிபார்த்து கொண்டிருக்கும் என் னுடைய நேத்திரங்களுக்கு காக்ஷிகொடுப்பீரென்று வழிபார்த்திருக் கின்றேனென்று நிவ்வாறும் இன்னும் அநேகமன்மொழிகளையும்எழுதி இருக்கக்கண்ட பஃத்தக்எண்ணும் அழுக்குநிறைந்த நெஞ்சினையுடைய கடன் பாதுஷாவினுடைய கடிதத்தை அனுப்பாமல் தான்வேறே ஓர்கடிதம் எழுதினன். ஃபிதெவ்விதமெனில், ஓ! அரபியே இதற்கு முன்பான் எண்ணியிருந்தேன், அரபிசனமெல்லாம் அவ்வாறிருந்திட ல்லாமல் வெட்டி நாசஞ்செய்துவிடலாமென்று எண்ணியிருந்தேன். நீஇப்பொழுது எனக்காகபிரயாசையெடுத்து ஹஸ்ஸானை ஜெயித்த உபகாரத்திற்காகயான்முன் கொண்டிருந்த அக்கருத்தை அறவே நீக்கி மன்னித்து விட்டேன். பாமனேசக்கான், பாமனே ஹர்ரான்

யென்பவர்களிடத்தில் உனக்காக கில்அத்துகள் கொடுத்தி அனுப்பி யிருக்கின்றேன் என்று யெழுதி முற்கூறிய அவ்விருபயில்வான்க ளிடத்திலும் கொடுத்து அனுப்பிவிட்டான்.

இஃதிவ்வாறிருக்க, ஹஸ்ஸானை வெட்டி ஜெயமடைந்த பின் அமீர்அவர்கள் மக்கமாநகரத்தைநாடிசெல்லும்வழியில் கில்லேதங்கே ருஹில் என்னும் கோட்டையொன்று எதிர்ப்பட்டது அவ்விடத்தில் ஆதியேன்னும் பெயரையுடைய ஓர் பயில்வானவன் அக்கோட்டை யில் எப்பொழுதும் வசிப்பவனும் ஹஸ்ஸாம் என்பவன் மதாயின் பட்டணத்தில் கொள்ளையடித்துக் கொண்டு இவ்வழியாகவேதானே வருவானென்ற யெண்ணமுற்றவனும் அக்கோட்டையை விட்டும் வெளியாகி பதினெண்ணூசேம் சவார்களுடனே ஓர்மலைப்பொதும் பில் பதுங்கியிருந்தான் எனெனில் ஹஸ்ஸாமென்பவன் இவ்விடம் வந்தவுடனே அவனுடைய லஷ்கரில் விழுந்து வெட்டி அதஞ்செ ய்து கொள்ளையடித்துக் கொள்வோ மென்ற யெண்ணத்துடனே இருக்கும் வேளையில் ஓர் தூதன் அவ்வாதியென்பவனிடத்தில் வந்து ஹஸ்ஸாம் என்பவனையும் அவனுடயசேனையையும் ஹம்ஜாவென் னும் பெயரையுடைய ஓர் அரபியானவன் வெட்டிவிட்டு கொள்ளை யடித்துக்கொண்டு தன்னூராகிய மக்கமாநகரத்தை நாடி இவ்வழி யாய் வருகின்றானென்றுரைத்தான். இச்செய்தியை யறிந்த ஆதி யென்பவன் ஆ ஹா! ஆனாலுமென்ன அவனிடத்தில் மடிக்கும் கொ ள்ளையும் இவனிடத்தில் அடித்துபிடுங்கிக்கொள்ளலாமென்ற எண்ண த்துடனேயிருந்தான். அவ்வேளையில் அமீர் அவர்களும்தம்முள்சேனை களோடு அவ்விடம்வந்து சேர்ந்தார்கள். அந்த கில்லேதங்கேருஹில் யென்னும் தலமானதுமிகவும் விஸ்தீர்ணமில்லாததாய் மனிதர்கள் இரி ந்து நடக்கமுடியாத தலமாயும் இருந்தது, அப்பொழுது ஆதியென் பவன் தன்னுடைய பௌஜில்இன்னும் ஒருவனையழைத்து, நீபோய் அந்த அரபிக்கூட்டங்கள் செல்லும்வழியை அடித்து அவர்களின் செய்திகளை அறிந்துவாவென் றனுப்பினன், அத்தூதன் சென்று அமீரைக்கண்டு சொல்லுகின்றான். ஓ! அரபியே ஹஸ்ஸாம் பின் அலிமோ கைபரி யென்பவன் எங்களுடைய வேட்டையாடியிருக்கும் அவனை வேட்டையாட நாங்கள் வெகுநாளாய் இவிடத்தில் காத்தி ருக்கின்றோம். அப்படியிருக்க நீங்கள் குறுக்கினுப்போல்போய் அவனை வெட்டி கொள்ளை அடித்துக்கொண்டு வருகின்றீர்கள் அவனுடைய

சொத்துக்களெல்லாம் எங்கள் பங்காயிருக்கும், எங்களுடைய பணத்தின் எண்ணங்களெல்லாம் மனதிலேயே கின்றுவிட்டது. ஆகையால் தங்களிடத்தில் எங்களுக்கோர் மனுவிருக்கின்றது, அஃதென்னவெனில் ஹஸ்ஸாமென்பவனிடத்தில் நீங்கள் கொள்ளையடித்துக்கொண்டிருக்கும் சொத்துக்களில் பாதி தாங்களெடுத்துக் கொள்ளுங்கள் பாதியை எங்களுக்கு கொடுத்துவிட்டு ஸலாமத்தாய் தங்கள் ஊருபோய்ச்சேருங்கள் இல்லாதவரையில் அவனுடையசொத்துகளோடு தங்களுடைய சொந்தசொத்துகளையும்சேர்த்து கொள்ளைவாரிக்கொள்ளுவோம், அப்பொழுது தாங்கள் கைசேதப்பட்டு யாதொன்றும் கைக்குக்கிடைக்காமல் வெறும் ஆளாய்போகும்படிநேரிடும் என்றுரைத்தான் இவ்வார்த்தைகளை யுணர்ந்த அமீர் அவர்கள் கலகலவெனச் சிரித்துச் அதிக தயாளகுணத்துடன் சொல்லுகின்றதாவது யாதெனில், ஏ! மனிதனே என்னுடைய புரத்தால் அல்லாதியென்பதற்கு துரும்பச்சொல்லி புணர்த்துவதாவது யாதெனில் உனக்கு சுல்தானென்னும் ராஜி இஷ்டமானால் எங்களிடத்தில் ஷர்பத்முதலாகிய பானகவகைகள் தயாராயிருக்கின்றது வந்து ராஜியாகி ஷர்பத்தருந்திச்செல்லலாம். அப்படி யில்லையென்று சண்டையை விரும்பினால் இதே மைதானம். இதே ஆயுதங்கள் தயாராயிருக்கின்றது எதை நாடுகின்றீரென அந்த யோசனையை யாதும்செய்துக்கொண்டிருக்கின்றேன் யென்று சொன்னார்.

இவ்வார்த்தைகளை கேட்டுக்கொண்டிருந்த தூதன் அமீர்அவர்களுடையபாதத்தை குளிர்ச்சியான சாந்த குணத்தையுடைய பொறுமை நிறைந்த தேனுமிர்தத்திற் கொப்பாகிய மொழிகளை கேட்டவுடனே அவனுடைய இரும்புக் கொப்பாகிய கல்நெஞ்சமானது அணலிலிட்ட மெழுகைப்போல் உருகி அச்சொற்களின்மீது மிகவும் நம்புதல் உடையவனாய் அமீர் அவர்களை மிகவும் தாழ்மையோடு வணங்கி சிரம்சாய்த்து உத்தரவுபெற்றுத் திரும்பி அவ்வாதி யென்பவனிடம் சென்று நடந்த சம்பவங்களெல்லாம் ஒன்று மொளிக்காமல் சொல்லி, இன்னும் சொல்லுகின்றான் எங்கள் சர்தாரே நம்முடைய வயதிலும் இப்பேர்ப்பட்ட சாந்தகுணம், பொறுமை தயாளம் நிறைந்த சுத்தவீரத்தன்மையுடைய பெயில்வானை கண்டும் கேட்டும் இருக்கமாட்டோம். இப்பேர்ப்பட்ட நற்குணமுடைய சுத்தவீரனை பார்த்தால் குலத்தாலும், குணத்தாலும் அதிக மேலான வங்கிஷத்தினராய்

காணப்படுகின்றது. இவர் இந்த பூவுலக மனிதத்தையும் ஜெயிக்கும் வகச்சக்கிராதிபதி யென்பதில் யாதும் சந்தேகமே இடைபாது. இன்னும் சொற்ப தினங்களில் நம்தேசத்தை சூழவிருக்கும் பலதேசங்களையும் வெகு இலேசாய் கைப்பற்றி அரசாளுவாரென்பது கடுகளவும் பொய்யாகாது என்றுரைத்தான். இவ்வார்த்தைகளை யெல்லாம் கேட்ட ஆதியென்பவன் சண்டைசெய்ய நிகூபித்தவனுய் படைமுஸ்தீப்புக்களணிந்து யுத்தசன்னத்தனாகி, மறுநாளுதயத்தில் பதினெண்ணுயிரம் சேனைகளுடனே மலைப்பொதும்பை விட்டும் வெளியாகி அமீர் அவர்கள்நிற்கும் மைதானத்தை நோக்கிச்சென்று, முன்பிலடித்தான். அவ்வேளையில் அமீர் அவர்களும் தங்கள் பௌஜுகளுடனே சண்டைக்கு தயாராகிநின்றார்கள், அப்பொழுது ஆதியென்பவன் தானேறியிருக்கும் பரியைநடத்தி மதங்கொண்ட யானைக்கொப்பாய் பர்வதம் அசைந்து வருவதுபோல், வெகு தீரதாஷ்டகமாய் அமீர் அவர்களின் முன்பில்வந்தடைந்தான். அதைக்கண்ட அமீர் அவர்களின் சேனையோர் அவனுடைய பெருப்பத்தையும் வலுப்பத்தையும் நினைந்து பயந்து நடுங்கினர்கள். அவன் எப்பேர்ப்பட்டவனுல் அறுபத்துமூன்றடி உயரமுடையவனுயும் அதற்குத்தக்க தேகபருமனுடையவனுயும் பருத்தத் திரண்டு, சிரசில் எழுகினுலாகிய தாஜ் அணிந்து, அதற்குமேல் ஏழுசம்லாவென்னும் சுங்குவிட்டு எழுதலைப் பாகைக் கட்டியவனுயும் தலைமயிர்பிடரில் சிலபாகம் வெளியில் தெரியும்படியாயும், அவன்வயற்றின் சுற்றளவு இருபத்தொருகஜம் உடையவனுயும், அவனை பார்ப்பவர்கள் இவன் மனிதனல்ல வேறே ஏதோ ஒரு பிறவியென்று நினைக்கும்படியாயும், இரும்பில் எழுகினுலாகிய இடைவார் அணிந்து, அவ்வெழுகினுலாகிய ஜர்ரவென்னும் இரும்புச்சட்டை யணிந்து நேத்திரங்களுக்கு எழுகினுலாகிய ஜல்லிக்கண் மூடியிட்டு, காதில் இரும்புக்குழாய்மாட்டி காலில் இரும்புக்கவசமணிந்து கணுக்களுக்கெல்லாம் முட்களுத்திகள் அமைந்த சக்கரங்களிட்டு, தோளில் கேடகமும் முதுகில் அம்புறுத்தூணியும் மறுதோளிலே ஐந்துகாலுடைய என்பதடி நீளமுடைய வில்லும் இடதுபக்கத்து இடையில்வாளும் வலதுபக்கத்து இடையில் குருசும் ஒருகரத்தில் அம்பும் நேஜாவையும் பிடித்தவனுய் அமீர் அவர்கள்முன்பில் வந்தடைந்தான் அவனைக்கண்ட உம்ருவானவர் அமீரைநோக்கி ஓய்! அரபிவாலிபரே இத்தனைகாள் உமக்கு உம்முடைய பலத்தின்மீது அதிக நம்பிக்கையும் மகிழ்ச்சியும் இருந்ததல்லவா? இன்றைக்கு தெரிந்து

விடப் போகின்றது. அல்லாஹுத்த ஆலாதான் கார்த்துக் கொள்ளவேண்டும் உம்முடைய பற்களி லிருந்துகூட வியர்வை சிந்தி விடும்போ லிருக்கின்றது யென்றுரைத்தார். அவ்வார்த்தையைக் கேட்ட அமீர் அவர்கள் பெருகை செய்து உம்மை நோக்கி ஓ! உம்மே எனக்கு ஜோர்கொடுப்பவன் இவனிலும் பெரியவனுய் வல்லமைகளுக் கெல்லாம் வல்லமையுடையவ னென்று நீர் அறியமாட்டீரோ? எதிரி பலமுடையவனு லிருந்தால் அவனையும் மற்றெல்லோரையும் பார்த்துகொண்டிருப்பவன் எல்லோரிலும் அதிக வல்லமையுடையவனுயிருக்கும் உமக்கென்னசரீரத்தில் அச்சமும் பயமும் உண்டாகிறது. நமக்கு உதவிபுரிபவனும், ஒத்தாசை செய்து காப்பவனும் அந்ததா வந்தே ஜல்லு அலாவாகிய காலிக் முத்தலக் என்பவன் இருக்கின்றன் பார்த்துக்கொண்டிரும் என்ன நடக்கிற தென்றுரைத்து, அந்தகாலிக்காகிய ரஹ்மானே நினைத்து, எதிரியினுடைய வலுப்பத்தை ஓர் அணுவாயும் மதிக்காமல் தாம் ஏறியிருக்கும் ஸியாகீத்தானை நடத்தி அவன் முன்பில் குதிரைகளின் நெற்றியோடு நெற்றி மோதும் படிநெருக்கி தங்கள் இடதுகரத்தி லிருந்த கேடகத்தினுல் அவனே றியிருக்கும் குதிரையின் சிரசில்தாக்கி தள்ளினர். அத்தள்ளினுல் ஆதி என்பவன் ஏறியிருக்கும் குதிரையானது முழங்கால்வரையில் பூமியில் பதிந்துவிட்டது. அப்பொழுது அக்குதிரைதாங்கொணு சங்கடத்தினுல் தேகத்தையும் கலையையும் உலுக்கிஆட்டி அசைத்து கால்களையி டுங்க ஆரம்பித்தது அப்பொழுது ஆதியென்பவன் அமீர் அவர்களின் கூவத்தை அறிந்து மனதிலெண்ணுகின்றவனுயினன். அஃது யாதெனில் சந்தேகமில்லாமல் இம்மனிதன் பூரணமான பலத்தையுடையு வல்லமைசாலிதான். அதில் யாதும் சந்தேகமில்லையென் றுன்னிய வனுய் அமீரைநோக்கி ஏ! வாலிபனே யான் தெரிந்துகொண்டேன். உன்னிடத்திலு மிவ்வளவு தாக்கத் தென்னும் பலமிருக்கிறதென்று, ஆகையால் உன்னுடைய பெயரென்ன நீ எத்தலூர்? சொல்லு வனெனில் உன்னைப்போல் தீரபராக்கிரமமுடைய பயில்வான்கள் பெயர் ஓர்தெரியாமல் என்கரத்தால் மாளக்கூடாது நீயோ பலமுடையவனும் அழகு சவுக்கர்யமுடைய இளவாலிபனுயும்; இருக்கின்றபடியால் உன்னைப்போன்ற இவ்வழகுபொருந்திபவதனசொரூபன் இவ்வுலகத்தின் வாழ்நாட்களை இழந்து மாளுவது எனக்கு பொருத்தமாகக் காணப்படவில்லையென்றுரைத்தான். அதற்கு அமீர்சொல்லுகிறார் ஏ! மனிதனே நீ அறியவில்லையா? பஹதூரென்னும் ஜெய சிங்கனுடைய

பெயர்களை அவன்கரத்திற்பிடித்திருக்கும் வாளாயுதத்தின்பிடியிலும் வில்லின் முதுகிலும் அம்பின் தண்டியிலும் எழுதி பதித்திருக்குமென் பதை! இப்பொழுது நீ புறித்துக்கொள் என்னுடைய பெயராகிறது அபுல்உலாவாயிருக்கும் உன்னுடைய வெட்டும், குத்தும், அடியும் இடியும் எவ்விதமாயிருக்கின்றதென்று அறிய யென்னுற்றவனுய் ஆசைகொண்டு இங்குவந்தேன். ஆகையால் உன்னுடைய வேலைத்திறத்தை சற்று காண்பி பார்க்கின்றேன். எங்கேஉன்னுடைய வாளின் வீச்சைகாண்பி, அஃதெவ்விதமிருக்கின்றது பார்ப்போமென்று உரைத்தார் அவ்வார்த்தையைகேட்ட ஆதியென்பவன், தன்கரத்தில் குருசைப்பிடித்து, சுழட்டி அதிவேகமாய் அமீர் அவர்களின் சிரசை லக்குவைத்து ஓங்கிக்கொண்டு கிட்டே தூக்கு வாலிபனே இவ்வடியோடு உன்னுடைய வாழ்நாட்க ளெல்லாம் முடிவாகி உன்மனதில் நிறைந்திருக்கும் இவ்வுலகத்தின் ஆசைகளெல்லாம ஒழிந்துவிடும் இவ்வடியில் நின்றும் நீ தப்பமாட்டாய் இதோ பாரென்று கரகரவெனக்முழட்டி அமீர் அவர்களின் சிரசில்தாக்கினன். அவ்வடியை அமீர் அவர்கள் தடுத்து, தட்டிவிட்டு, இன்னும்உனக்குத்தெரிந்தவேலைகளை காண்பி, யான் அறிகின்றேன் உன்மனதில் இன்னும்அடிகள் பாக்கியிருக்கிறதென்ற எண்ணம்இல்லாமல் உனக்குத் தெரிந்தவைகளை எல்லாம் செய்துவிடு, அவ்வடியில் நின்றும், யான் தப்பிப் பிழைத்தால் யானும் ஓர்வெட்டுகாண்பிக்கின்றேன். அதில்நின்றும் நீதப்பிப்பிழைத்தால்உன்னுடைய வாழ்நாட்கள்முழுவதும் அவ்வெட்டைபோபகத்தில் வைப்பாயே அப்பேர்ப்பட்ட ஓர்வேலையைசெய்து காண்பிக்கிறேனென்றுரைத்தார். இவ்வார்த்தையை செவியில் கேட்ட மாதிகரப் பென்பவன் மனம்கடுங்கி கோபம் அதிகரித்தவனுய் குருஜை இடையிற் தொங்கவிட்டுவிட்டு, வாளையுருவி வலதுகரத்தில் பிடித்து, குதிரையை இடசாரி வலசாரிகிருப்பி அமீர் அவர்களின் பரியோடு பரி தெருக்கி இவ்வாளினுல் அமீரை ஓரேவெட்டில் இரண்டுபிளப்பாய் வகிர்த்துவிடுகிறே னென்ற யெண்ணத்துடனே வாளையோங்கி சுழட்டி வெட்டினன், அப்பொழுது, அமீர் அவர்கள் வாள்பிடித்த அவ்வ்கரத்தை வாளோடு சேர்த்து பிடித்துக்கொண்டு, மற்றொரு கரத்தால் அவன் இடுப்பில் அணிந்திருக்கும், எழுகுவர்ப்பட்டை போடு சேர்த்துபிடித்தார். அவ்வேளையில் ஆதியென்பவனும் அமீர் அவர்களோடு ஜோர்செய்ய ஆரம்பித்தான். அதைக்கண்ட உம்ருஆனவர் அவ்விருவரின் அருகிலிருந்து, ஏ! பயில்வான்களே நீங்கள்

என்னவேலை செய்கின்றீர்கள் மாகேள் முட்டி தள்ளிக்கொள்வது போல் ஒருவர்க்கொருவர் இழுத்துக்கொண்டு நிற்கின்றீர்கள் நீங்களிருவரின் சமர்த்துகளை அறிந்து கொள்வதற்குள் அநியாயமாய் கீக்களேறியிருக்கும் மிருகங்களின் இடிப்புகளை ஒடித்து கீழேதள்ளி விட பார்க்கின்றீர்களோ? அப்படி உங்களுடைய ஜோரென்னும் பலத்தை அறிந்துகொள்வதாலல் பூமியிலிறங்கி உங்களுடைய பலங்களை பரீக்ஷித்துப்பாருங்கள். என்றுரைத்தார். அப்பொழுது அமீர் அவர்களும் ஆதியென்பவனும் உம்ரு உடைய சொல்லின்படி தங்கள் தங்கள் பரியைவிட்டும் கீழேஇறங்கி ஒருவர்க்கொருவர் எதிர்த்து நிற்கையில் ஆதியென்பவன் அமீரை நோக்கி ஹம்ஜாவே வெட்டுக்குத்தில் நாமிருவரும் ஒருவர்க்கொருவர் தோல்விபடையாமல் சமீயாய் இருக்கின்றோம் இப்பொழுது, மகரிபுதேசத்தின் ஜங்கரகிய மல்யுத்தம் செய்வோம் வாரும் நம்மிருவர்களில் யாருடையபலம் அதிகரித்திருக்கின்றதென்பதை அறிந்துகொள்ளலாமென் றுரைத்தான். அப்பொழுது அமீர் அவர்கள் ஆதியென்பவனைநோக்கி, யாதும் உன்னுடைய இஷ்டப்படி இதோ தயாராய் இருக்கின்றேன். எவ்விதம் செய்யவேண்டுமோ செய் யானும் செய்கின்றேன் யென்று, அமீர் அவர்கள் தள்ளிஎதிரி ஓர் பல்டிசெய்து, சம்மணக்காலிட்டு பூமியில் உட்கார்ந்து கொண்டார். ஆதியென்பவன் அவனல்லியன்றவரையில் அமீரை தூக்கி புறட்ட முயன்றும் அணுவளவேனும் இருந்த இடத்தைவிட்டும் அசைக்கமுடியாமல் மனமயர்ந்து திகைத்து, தன்னிலை தடுமாறி நின்று அமீரை நோக்கி ஹம்ஜாவே! ஏது இனி என்னால் முடியாது என்னுடைய தேகத்தின் ரோமக்கால்களில் நின்றும் அபவழியாய் வியர்வைக்கு பதிலாய் கொழுப்பு உருகி வடியும்படி பார்த்து விட்டேன். ஒருபோதும் உம்மை அசைக்க இயலாது இனியான் இருந்து கொள்கின்றேன். நீர் என்னை ஜெயித்துவிடுமென்றுரைத்து, பல்டி யடித்து பூமியில்காலை மடித்துப்போட்டு உட்கார்ந்தான். உடனே அமீர் அவர்கள் முதல் முச்சிலேயே அவனுடைய இடைக்கட்டைபிடித்து பூமியைவிட்டும் தூக்கி யெடுத்துக் கொண்டு தலைக்குமேல் ஓயர்ந்தி அநேகந்தடவைகள் சுகாவெனச் சுற்றி வ! ஆதியே இப்பொழுதே நீயென்ன சொல்லுகின்றாய் இன்னும் ஏதாவது உன்மனதிற் பாக்கியாய் இருக்கின்றதா சொல்லென்று கேட்டார் அப்பொழுது ஆதியானவன் அமீரைநோக்கி சர்தாரே அடைமியானலட்சங்களுடைய உத்திரவுக்கு சிரஞ்சாய்க்கும் சூரா

மாயிருக்கும் என் மனவாக்கும் ஒன்றாய் முழு ஹிர்தயத்தோடு தங்கள் உத்திரவை எதிர்நோக்குகின்றேன் யென்றுரைத்தான். அப்பொழுது அமீர் அவனை மெதுவாய் பூமியில்விட்டார்கள் ஆதியென்பவன் அமீர் அவர்களின் கரத்தைப்பிடித்து கலிமாத் தௌஹீது ஓதி இஸ்லாமானார். பின்பு ஆதியென்பவர் அமீர் அவர்களையும் அவர் சேனையோர்களையும் தன்னுடைய கோட்டையாகிய தங்கோஹி லென்னும் கோட்டைக்குள் மில் மரியாதையுடன் அழைத்துச் சென்று மிகவிலையுயர்ந்த அநேகவிதமான உன்னதவிரிப்புக்களை விரித்து, அதிலிருக்கச்செய்து, அவர்களுக்கு வேண்டிய மரியாதைகளெல்லாம் செய்து, தன்னுடன் பிறந்தான்மார்களையெல்லாம் அழைத்து, அமீர் அவர்களுக்குக் காண்பித்து, முலாகாத்தாக்கி வைத்தார். அமீர் அவர்கள் அவ் வொவ்வொருவரிடத்திலும் கழுத்தோடு கழுத்தைச் சேர்த்து மினவி, மிகசந்தோஷத்தோடு மகிழ்ச்சியாய் அவரவர்களின் அந்தஸ்திற்குத்தக்கவாறு அமீர் அவர்கள் யாவருக்கும் மில்அத்து யென்னும் பரிசு அளித்தார்கள்.

இவ்விதமாய்க் கொடுத்தான்பின்பு அமீர் அவரவர்கள் மாதிகரபை நோக்கி ஓய் மாதிகரபே இனி அல்லாஹுத்த ஆலாவுடைய உதவியிருந்தால் நீங்கள்யாவரும் ஸலாமத்தாய் இருங்கள் யாங்கள் அனைவரும் அல்லாஹுத்த ஆலாவினுடைய கிருபையைக்கொண்டும் எங்களுருக்கு சென்று அவரவர்களின் தாய்தகப்பன் முதலாகிய உறவினர்களையெல்லாம் கண்டுகளி கூறவேண்டும் ஆகையால் எங்களுக்கு உத்திரவுகொடுமென்று கேட்டார்கள். இவ்வார்த்தையை யுணர்ந்த ஆதியென்பவர் அமீரை நோக்கி அபுல்உலாவாகிய எங்கள் அமீரே யாதுகொடு தங்களின் அடிமையானவனுக்கு அப்படி ஒரு பெரிய வபறுமில்லை எனக்கு தங்களிடத்தில் சேவை அகப்படாமற்போக யான் இன்னத்தக்க வஸ்துவைக் கொஞ்சம்தான். ஆகையால் என்னையும் தங்களுடன் அழைத்துச் செல்லுங்கள் எனக்கு ஒரு லீவுகொக்கு ஆயிரம்மணங்கு கோதுமைமாவு போதுமானது. அதில் எவ்வளவு ரொட்டியாகுமோ அதனையேபோதுமாக்கிக் கொள்ளுகிறேனென் றுரைத்தார் அவைகளைக் கேட்டுக்கொண்டிருந்த உம்ரு ஐயாரானவர் சொல்லுகிறார் அமீரே இவருக்கு வயத்தில் பசியென்பதே இல்லாமல் மந்தப்பட்டிருப்பதாய் தெரிகின்றது. ஆகையால் தான் மிகவும் குறைந்தஉணவு புசிக்கின்றார். கல்லாஹுக்கீம்களிடத்தில் சொல்லி

பகைன்று பூண்டாகும்படியான ஹல்வர, சூரணப், முதலாயெதாவ தொன்றைகொடுத்து பகியுண்டாகுப்படி செய்யவேண்டும், இல்லாத போனல் பாபம் இவ்வளவு குறைந்த உணவினால் யார்தான் ஜீவித்திருப்பார்கள். இந்த சொற்ப உணவளிக்க யார்தான் இல்லையென்று அவர்மனதை நோகச்செய்வார்கள் என்றுரைத்தார். அவைகளை கேட்ட அமீர் அவர்கள் புன்சிரிப்புடையவர்களாய் ஆயிஷைநோக்கி சொல்லத்துடங்கினர் அம்ம பாதெனில் ஓ! ஆகிஷபே நீர் சொல்வது என்ன அப்படி ஆச்சரியமல்ல யாவருக்கு ரிஜ்க்கு கொடுக்கும் வல்லவனுடைய ரிஜ்காக்முத்தல்க் என்பவன் போஷகனவன் அவன் உமக்கும் எனக்கும் இவ்வுலகத்தார்ப்பவருக்கும் ரிஜ்க்கீ பலனுபிருக்கும் அவனுடைய அனுமைகள்பேரில் சதா விசாரணைசெய்தவனுப் பாதுகார்த்துவருகின்றன் ஆகையால் நீர் எங்களுடன் புறப்பட்டு வருவீராகில் உம்மை பென்னுடைய சிரசிலும் கண்களிலும் வைத்துக்கொண்டிருப்பதுபோல மிகவும்சேர்த்தியாய்வைத்து கடப்பிப்பே னென்றுரைத்தார். இவ்வார்த்தையை யுணர்ந்த ஆதி சம்மதித்து தன்னுடனிருக்கும் பதினெண்ணுயிரம் லஷ்கர்களையும் அழைத்துக் கொண்டு அமீர் அவர்களுடன் சேர்ந்து புறப்பட்டார். யாவரும் கடல்புரண்டு செல்வதுபோல மக்கமாநகரத்தை நாடிநடந்தார்கள்.

அமீர் அவர்கள் மக்கமாநகரம் செல்வதும் நௌசேரவானுடைய கடிதங் கீடைப்பதையும் பேசுகிறபாடு.

விருத்தம்.

எதிர்த்தவர் தம்மைவென்று எழிலுறும் திறத்தின்மிக்க
மதித்திடும் ஹம்ஜாவள்ளல் மக்கமாநகர் சென்றப்பால்
நதியினில் மதகுயின்மன்னன் நந்தநோர் கீருபத்துள்ள
அதிசய மனேத்தமன்பாய் அறைகுவோம் தெளிவுள்ளோரே.

மதுரங்களிலெல்லாம் மிக மதுரம்பொருந்திய இனிமையான மொழியினையுடைய ருமி ஆச்சரியமான தானை சரித்திரத்தை எழுதுகின்றார் அமீர் அவர்களும் நௌஷேயும் தங்கே முஹிலேவிட்டும் புறப்பட்டு சிலதினங்களில் மக்கமாநகரம் போய்சேர்ந்து காலிபத்துல்லாவிற்சென்று ஜியாரத்துச் செய்தபின் பத்தாவென்னும் ஜெபமனைத்தற்காக அவிடத்தில் இரண்டுரக்அத்து நபில்தொழுது துஆவேட்ட

பின் ஆதியை அழைத்து ஓய் ஆதியே நீர் இத்தனைகாலமாய் கொடுஞ் செயலாகிய வழிபறிச்சொன்னையடித்து கொலைப்பாதகங்கள் செய்திருந்தபடியால், அப்பாவங்கள்நிவர்த்தியாகுப்படி இந்த கலிபத்துல்லாவில் அல்லாஹுத் தஆலாவினிடத்தில் அழுது துஆஷாயப்பூட்டு பாபங்களைபொறுத்து மன்னிக்கும்படி தௌபாச்செய்து மீளுமென்றுரைத்தார் அவ்விதமே அவரும் தௌபாச்செய்து மீண்டார். பின்பு இஸ்லாத்தின் ஒழுங்குப்படி இனி நடந்துவருவேனென்று அவ்வாறியிடத்தில் எக்ராரேன்னும் உறுதிமொழி வாங்கினர்கள். பின்பு அவ்விடம் விட்டெழுந்து தங்களாகிய அப்துல் முத்தல்லிபு அவர்களின் மாளிகையை நாடிசென்றார்கள். அவ்வேளையில் காஜா அப்துல்முத்தல்லிபானவர் அமீர் வந்திருக்கும் சேதியறிந்து தங்கள் இனபத்து ஜனங்கள் யாவரையும் பெருஞ்சேனையாக திரட்டிகொண்டு அமீர் அவர்கள் வெற்றிபெற்று ஜெயசிங்காரப் வந்ததற்காக முபாரக்பாதி யென்னும் பேரின்வாழ்த்துதல் செய்து எதிர்சென்றழைத்து வருவதற்காக புறப்பட்டுச் சென்றார்கள். இவ்விதம் செல்கையில் அமீர் அவர்களும் வந்து இருவரும் வழியிற்சந்தித்தார்கள். உடனே அமீர் அவர்கள் தங்தையின் பாதங்களில் இருகண்களையும் வைத்து ஒத்தி முத்தி கதம்போஸ் செய்தார்கள் காஜாவானவர் மைந்தனின் சிரசை இருகரங்களாலும் குனிந்து பிடித்துத் தூக்கி மார்போடணைத்துக் கொண்டு அஷ்ராபிகளும் தங்கமொறாக்களும் இன்னும் பலவித பொற்காசுகளையும் தட்டத் தட்டமாயள்ளி அமீர் அவர்களின் சிரசைச் சுற்றிச்சுற்றி இங்குமங்குப்எந்தம் பொங்கும் பொற்காசுகளாய் வீரியிரைத்தார் அப்பொழுது, ஊரவர்கள்பாவரும் ஏகோஷ்டமாய் கடலிறைவதுபோல் அமீர் அவர்களுக்காக அல்லா சுபுஹானவுத்த ஆலாவினிடத்தில் இந்தரங்களையும் வாழ்த்தளவில் உயர்த்திபவர்களாய் யாராஜிக்கு, ரஜ்ஜாக்குல் கரீம்! யா! காலிக் கூனுன்னஹீர்! யாமாலிக்கே! பேனியாஜ்! யா! ஜப்பாருல் முத்தகப்பிர்! ஆகிய தூய்மையான ஆண்டவனே இந்த ஹஜ்ஜிவுக்கு எங்களும் எதிசேசங்களினும், எல்லா யுத்தங்களிலும் இவ்விதமே பத்தாவென்னும் வெற்றி நல்மாருயத்தை சதா அருள்புரிந்தாளுவாயாகவென்று துஆக் கேட்டார்கள் மற்றவர்கள் யாவரும் ஆமீனென்னும் சப்தத்தினுல் அம் மக்கமாநகரம் முழுவதும் பெருத்த பேரிறைச்ச லாகும்படி ஆமீன் கூறினர்கள். பின்பு அமீர் அவர்களை தங்கள் மாளிகைக்கழைத்துச் சென்று திவான்காஞவென்னும் வீட்டின் வெளிக்கூடத்தில் யாவ

ரும் உட்கார்ந்தார்கள். பின்பு மக்கமாநகரத்திலுள்ள தலைமைக்காரர் களும் வந்து சேர்ந்தார்கள் அவ்வேளையில் அமீர் அவர்கள் மன்ஜர் ஷாஸமனி, நெஅமான்பின் முனஜ்ஜர்ஷா சஹீல் எமனி சுல்தான் பஹ்மகபி ஆதிகாரி தௌஸ்பின் ஹுவர்ருன் ஆகிய இவ்விராஜாக்களை எல்லாம் அமீர் அவர்கள் அழைத்து, அப்துல் முத்தல்லிபு அவர்களிடத்திலும் இன்னும் அச்சபையின்கண்ணிருந்த மற்ற தலைமைக்காரர்களிடத்திலும், முலாசத்தென்னும் சந்திப்புச் செய்வித்து அவர்களுக்கெல்லாம் முற்கூறிய இராஜாக்களின் பெருமையையும் வல்லமையையும் புகழ்ந்துபேசி அவர்களையாவருக்கும்காண்பித்தார். அப்பொழுது, காஜா அதிக ஆனந்த மகிழ்ச்சிகொண்டு லஷ்கீருவரையும் மிகமரியாதை அன்புபாராட்டி அவர்களை யாவருக்கும் அவரவர்களின் அந்தஸ்துக்குத்தக்கபடியிருக்கு முதலாகிய தாவத்து செய்துவைத்தார்கள். இப்படியிருக்கும்காலில் ஒருநாள் அமீர் அவர்களும் மற்ற ராஜாக்களும் இன்னும் பலரும் பேசிக்கொண்டிருக்கும் வேளையில் ஆதிகாபென்பவர் அமீர் அவர்களுக்கும் உம்ரு மக்பூல் முதலாகியவர்களுக்கு பால் கொடுத்து வளர்த்த ஆதியாபாலை வென்னும் பெண்பிள்ளையுடைய புத்திரனென்று தெரியவந்தது அச்சேதியறிந்த அமீர் அவர்கள் அதிக சந்தோஷமுடையவர்களாய் எல்லோரையும் நோக்கி, அப்படியானால் இவ்வாதிகாரபானவர் எனக்குப் பிள்ளுடி சகோதரனை விட்டார் என்றுசொல்லி அன்றையதினம் முதல் அமீர் அவர்களின் சேனைக்கு ஆதிகாரபை சேனாபதியாக்கி வைத்து, அநேக விலையுயர்ந்த வெகுமதிகளையும் கொடுத்து, சேனாதிபதிப்பட்டம் கொடுத்தார். அவ்வேளையில் உம்ரு அமீர் அவர்களின் உத்தரவின்படி ஆதியிடத்தில்சென்று, அவரைநோக்கி உமக்கு வழிபறித்திற்காக என்னென்ன தேவை எவ்வளவு செய்யவேண்டுமோ அவைகளை சமைத்துவைப்பவேணுமென்பதையும், அல்லது பச்சையாய் அனுப்பவேணுமென்பதையும் விபரமாயுரைத்தால் அதுபோல் உத்தரவாக்கி விடுகிறேனென்றுரைத்தார். அப்பொழுது ஆதியென்பவர் சொல்லுவார். எனக்கென்ன விடு நம்மதாய் அமீர் அவர்களின் வாசற்படிகார்க்கும் காவற்காரனாய் இருக்கிறேன் எனக்கு எவ்வளவும் எவ்விதமாய் எப்படி கொடுத்தாலும் வாங்கி புசிக்கின்றேனென்று உரைத்தார். அதைக் கேட்ட உம்ரு வானவர் இவ்விதம் மரியாதையாய் சொல்வதிலும் ஆகுல சொன்னமில்லை தன் எஜமானிடத்தில் வெட்கப்பட்டு யாதொரு காரியத்தையும் மறைத்துப் பேசுவது புத்திசாலிகளுடைய வேலை

ல்ல ஆகையால் தாராளமாய் இன்னின்ன வஸ்துக்களில் இவ்வள விவ் வளவு இன்னின்ன மாதிரியாய் வேண்டுமென்று கண்ணுய் விளக்க சொல்லும் அதுபோல் ஒவ்வொருவேளையும் பப்பர்ச்சிகானுவில் சொல்லி உமக்களுப்பிவிடுப்பிடி உத்திரவு செய்கின்றேன்று பெண்ணுரைத்தார். அதைக்கேட்ட ஆதிகரபானவர் நல்லது அப்படியே, பப்பர்ச்சிகானுவின் அதிகாரிக்கு உத்தரவைசெய்துவிடுகள், ஒவ்வொருநாளும் காலை நாஷ்டாவிற்காக இருபதொரு ஒட்டகங்களின் கறியைபொரித்து அனுப்பவேண்டும். இன்னம் பகல் வஜீபனத்திற்காக இருபத்தொரு மான்களும், இருபத்தொரு தும்பாடுகளும் தனித்தனி நீர் வற்றப் பொரித்தும், இருபத்தொரு சித்தை நிறைய நிராகூப்பழ சாராயமும் போதுமாயுள்ளது, இராப் போஜனத்திற்காக இருபத்தொரு ஒட்டகக்கறிகளும், இருபத்தொரு மான்களும், இருபத்தொரு தும்பாடுகளும், தனித்தனி பொரித்து அனுப்புவதோடு இருபத்தொரு சித்தைகள் நிறைய நிராகூப்பழ சாராயங்களும், இருபத்தொரு காட்டெருமைக் கோகறியை கலியாவென்னும் சால்னுசெய்து அவைகளுடன் இருபத்தொரு மணங்கு கோதுமைமாவின் ரொட்டி குவியலையும் அனுப்பிவைத்தால், இருப்பதைப் புசித்துவிட்டு, அரை வயறு குறைவாகவே காலத்தைக்கழிப்பேன்என்னிஷ்டப்படி இவ்விடத்தில் அகப்படுவது கூடாதகாரிய மானபடியால் ஏதோ அரைவயிற்று வஜீபனத்தையாவது புசித்து இருப்பதாகின்றேன் என்று உரைத்தார். இவ்விஷயங்களை யெல்லாம் புணர்ந்த உம்ருவானவர், அமீர் அவர்கள் சமுகத்தில் லயிப்படுத்திஞர், அப்பொழுது அமீர் அவர்கள் ஆதிகாரியை வரவழைத்து முற்கூறியபடி ஒவ்வொருநாளும் ஆதிகேட்டுக் கொண்டபடி அவ்வாதியினுடைய பப்ஜிகானுவுக்கு தடையின்றி காலைநேரத்திலேயே அவ்வளவும் ஏரே தடவையாக அனுப்பிவிட உத்தரவு செய்தார்.

பின்பு ஒவ்வொருநாளும் ஆதியென்பவருக்கு உத்திரவுப்படியே குறைவில்லாமல் நடத்தி வந்தார்கள். இப்படியிருக்கும் நாட்களில் ஒருநாள் தூதர்களவந்து அமீர் அவர்களை அடுத்து, அமீரே! ஷோலானுடைய ஸல்ச்சி யென்னும் தூதர்வருகின்றார் அவர் கடிதமும் தங்களுக்கு கில்அத்து முதலிய கன்குடைகளும் கொண்டுவருகிறார் யென்று உரைத்தார்கள் அப்பொழுது அமீர் அவர்களும் அப்துல் முத்நலிபு முதலாகிய பெரிய தலைமைக்காரர்களும் யெழுந்து எதிர்சென்று அழைத்து வருவதற்காகபுறப்பட்டு பட்டணத்தைவிட்டும் வெளியாகி

கடந்தார்கள். அப்பொழுது கௌஷேரவானுடைய ஸல்ச்சியும் எதிரில்வந்தாள். யாவரும் அவளை மிகமரியாதையோடும் அன்புபாராட்டி தங்களிருப்பிடம் அழைத்து வந்தார்கள், அவர்கள் வந்து சேருமுன் அப்துல்முத்தலிபு அவர்களுடையமாளிகையில் விதவிதமாகிய பொற்சரிகை வேலைசெய்த பலவிரிப்புகளும் விரித்து அநேகம் ஒளி பொருந்திய பற்பலவர்ண கண்ணாடிவிளக்குகளும் அமைத்து, பார்ப்பவர்கள் கண்களை கவரச்செய்யும் தன்மையாய் அலங்கரிக்கப் பட்டிருந்தது, யாவரும் அதில் வந்துட்கார்ந்தார்கள், பிறகு கொஞ்சநேரத்தில் விதவிதமாகிய நெஅமத்தான வஜீபனங்களும் மிட்டாய் தினுசுகளும் அதி மதுரம்பொருந்திய பலவித குளிர்பானாக்களும் கொண்டு வந்து, அவர்கள் முன்பில் பரத்தினார்கள், யாவரும் அதிக மனமகிழ்ச்சியோடி வஜீபனம் புசித்தானபின் அமீர் அவர் கௌஷேரவான் அனுப்பிய கில்அத்து கடிதம் முதலியவைகளை பார்த்து அதிக மனவருத்தமுற்றவர்களாய் கோபமுற்று, மிகவும் துக்கசாகத்திலாழ்ந்திருந்தார்கள். அதை யுணர்ந்த காஜா அப்துல் முத்தலிபானவர் புத்திரனை நோக்கி செல்வமகனே தங்கள் முகம் குருவி விசனமுற்றிருக்கும் காரணம் யாதென வினவினர். அதற்கு அமீர் அவர்கள் தகப்பனையை நோக்கி கௌஷேரவானெழுதிய கடிதத்தின் விஷயங்களனைத்தையும்சொன்னர். அதைக்கேட்ட காஜா மைந்தனை நோக்கி, மகனே! பாதுஷாக்களுடைய வழக்கம் எவ்விதமெனில் ஒருவன் ஆஜீஜாகி மரியாதையோடி சலாம்செய்தால் அவன்மீது கோபமாகி அவனை வெட்டிவிடவும் உத்திரவு செய்வார்கள். சில வேளையில் பாதுஷாவை தினில் வாய்கொள்ளாத வசைச்சொற்களை சொல்லி திட்டினால் அவனுக்கு கில் அத்து யென்னும் வெகுமதிபளித்து அவனை சந்தோஷப்படுத்தி அனுப்புவார்கள் இவ்விதம் இராஜாக்களுடைய வளமையே ஆகையால் அதைக்குறித்து நீங்கள் விசனிக்கவேண்டாம் யென்றுரைத்தார்.

இவ்விதம் அமீர் அவர்களுக்கு சமாதான வார்த்தைகள் சொல்லி சந்தோஷப்படுத்தி அன்றிரவைக் கழித்தார்கள் மறுநாளுதயத்தில் அல்லாசுபுஹானஹுவத்தஆலாவினுடைய உத்திரவின்பேரில் நட்டமென்னும் சூரியனை தன்னுரென்னும் அடுப்புக் கொப்பாகிய உதயகிரி மலையிலிருந்தும் வெளியேகொண்டு வரப்பட்டது, அப்பொழுது யாவருமெழுந்து காலைக்கடனகிய அல்லாஹுத்தஆலாவை

வணங்கியபின் அப்துல்முத்தலிபு அவர்கள் கௌஷேரவானுடைய தூதனுக்கு தாவத்தென்னும் விருந்துசெய்ய ஆரம்பித்து, இத்தூதனுக்கும், அம்பக்கமாகாரத்தின் கண்ணுள்ள யாவருக்கும் அதிகவிம்பிரசையோடும் விருந்து கொடுத்தார்கள், யாவரும் புசித்தானபின் கௌஷேரவானுடைய தூதன்எழுத்து காஜா அவர்களுக்கு பாதுஷாவாலனுப்பப்பட்ட ஓர் கடிதத்தைக் கொடுத்தான். அதை அவர்கள் வாங்கிவாசித்து நல்ல அருமையான சேதிகளிருக்கக்கண்டு மிக சந்தோஷமுற்றார்கள் அதையறிந்த அமீர் அவர்கள் யானித்த கௌஷேரவானுக்காக யென்னுடைய உயிரையும் பொருட்டாயெண்ணாமல் கஷ்டமெடுத்திருக்க எனக்கு மன நோகச்செய்யும் கடிதமும் என் தந்தைக்கு மிகவணக்கமுமரியாதையுமான கடிதமும் எழுதியிருக்கின்றானே, யென்று மனம் கொந்தளராய் அதிக வீபாகூலத்தில் மூழ்கியிருந்தார். இப்படியிருக்க, கௌஷேரவானுடைய கடிதத்தில் யான் என்னுடைய சேனாதிபதியாகிய பாமனே ஹர்ரான் பாமனே சக்கான் யென்பவர்களை அனுப்பியிருக்கின்றேன் யென்றெழுதியிருந்ததைப் பார்த்து அவ்விடத்திலிருக்கும் சபையோர் யாவரும் அதிக ஆச்சரியமுற்றவர்களாய் இம்மனுஷனை விபரீதமான பெயராயிருக்கின்றதே பஹுமனென்றால் பிராமணன் ஹர்ரானென்றால் கழுதை, இவனென்ன பாப்பாரக்கழுதையா? யென்று சந்தேகித்தவர்களாய் முற்றிலுரு பெயரை பார்க்கும்பிரழுதி அதுவும் பஹுமனே ஸக்கானென் றிருக்கக்கண்டு பஹுமனென்றால் பிராமணன், ஸக்கானென்றால் நாயாகும், ஆகையால் இவனென்ன பாப்பார நாயோ வென்று புதுமையாகி யோசிக்க ஆரம்பித்து முடிவு செய்தார்கள். அஃதெவ்விதமெனில் இஃது, எழுதினவனுடைய தவறுதலினால் பாமனே ஹஸ்ஸான் யென்றெழுத வதற்கு (ஜே) யுடைய கொக்காரவை (ஹயே) யென்னும் எழுத்தின்மேல் கைதவறி போட்டுவிட்டான். சக்கானென்பதற்கு பார்ஸியில் (காப்) போடவேண்டிய இடத்தில் (க்காப்) பை கைதவறுதலா யெழுதி விட்டா னென்று யோசித்துக்கொண்டு கடிதத்தி லுள்ளபடியே கழுதை யென்றும் நாயென்றும் அர்த்தம் தரக்கூடிய பாமனே ஹர்ரான், பாபனே ஸக்கான் யென்ற பெயர் சொல்லியே கூப்பிட்டுவைத்தார்கள் ஊர்முழுவதும் அப்பெயரே பரவி யாவரும் அவ்விதமே அழைத்து வந்தார்கள் உம்ரு ஆனவர் கடிதத்தின் சமாச்சாரம் தெரிந்துகொண்டு அமீரைக் காணுமல்மேலும் அதிகவருத்தமுற்றவராய் மனதிற்கு சஞ்சலமுற்று

இருந்தார் அவ்வேளையில் வஜீபனமருத்தும் வேளையாயிருந்தபடியால் தல்தர்காஞ்வென்னும் விரிப்பு விரிக்கப்பட்டது. அவ்வேளையில் உம்ருவன்வர் இரண்டு காபுகளில் மேல்மூடியிட்டு, வஸ்திரங்களினால் பொதிந்து கட்டிகொண்டுவந்து சபைகூடியிருக்கும் அக்கூட்டத்தில் விருந்தாளிகளாகிய கௌஷேவர்ஞனுடைய தூதர்களின் முன்பில் கொண்டுவந்தனவத்துவிட்டு விதியாசமான இலமொழிகளை உரைப்பதற்காகவாயைத்திறந்தார் அச்சமையமறிந்த அமீர் அவர்கள் யாதும் சொல்லாமலிருக்கும்படியாய் தாக்கீதுசெய்தார், அவ்விதமே உம்ரு ஒன்றும் சொல்லாமல் விருந்தாளியை நோக்கி ஓப் விருந்தாளிகளே இந்த தாவத்து என்னுடைய சொந்த தாவத்தா யிருக்கும்பென்று மிகவும் இஜ்ஜத்தோடும் தாழ்மையாய் அருகில்கர்த்தி, இன்னும்சொல்லுகிறார். இதிலுள்ள வஜீபனம் நீங்கள் புசிக்கத்தகுந்ததா யிருக்கின்றதென்று கட்டைஅவிழ்த்து மேல்மூடியைத்திறந்து, வைக்கல் நிறைந்திருந்தபாலே பாமனேஹர்ராண் முன்பிலும், செத்தபிணங்களின் எலும்புகள் நிறைந்திருந்த வனத்தை பாமனே சக்கான் முன்பிலும் நகர்த்திவைத்திருந்தார். அப்பொழுது அச்சபையில்கூடியிருந்தயாவரும் உம்ருவைநோக்கி உம்மே இஃதென்ன நல்லசெய்கையல்ல, இந்த வேளையில் இவ்விதமான அதபில்லாத காரியங்களை செய்யலாமாவென்று கோபித்தார்கள். அதையறிந்த உம்ரு அவர்களை நோக்கி சொல்லுகிறார் கழுதைக்கும் நாய்க்கும் தீனைக்காண மேலான உணவுபடாதிருக்கின்றது மிருகங்கள் தின்னும் நீனி இதுவாகத்தா னிருக்கும். ஆகையால் அவர்களுக்குத் தாவத்துச் செய்யவேண்டியது எவ்விதமும் கடமையாயிருந்தபடியால் யானும் ஒன்றும் குறைவுபடுத்தாமல் கொண்டுவந்தேனென்றுரைத்தார். இக்கொடுஞ் செய்கையையும் வார்த்தைகளையும் செவிகளில்கேட்டுக்கொண்டிருந்த இரண்டுபோர் வீரர்களும் அவ்விடத்தில் யாதொன்றும் பேச மாவெழாதவர்களாய் ஆத்திரத்தை அடக்கி பில்லைக் கடித்துக்கொண்டிருந்து விட்டார்கள். பின்பு, அவிடத்திலிருந்தவைகளை யெடுத்தெறிந்துவிடப் பட்டது யாவருக்கும் நல்லவிதமான ருசிபொருந்திய உணவளிக்கப்பட்டு எல்லோரும் புசித்தானபின் உம்ரு இரண்டுபெரிய தாம்பாளங்களில் இல்அத்து யென்னும் வஸ்திரங்களை கொண்டுவந்து வைத்து, அவிழ்த்து ஒன்றிலிருந்த அதிநாதனமாய் தங்கச்சரிகையால் கலீதாவேலை செய்த ஜாலென்னும் குதிரை கழுதைகளுக்கு மேலே போர்த்தும் மேல்போர்வையை யெடுத்து பாமனேஹர்ரான் யென்பவன் மேலே

யும் இன்னொரு சிறிய போர்வையையெடுத்து பாமனேசக்கான் மீதும் போர்த்தினர். அப்பொழுது அவ்விரண்டு வீரர்களுக்குஞ் சகிக்க முடியாத கோபம்மூண்டு, பல்லைக்கடித்து வாளையுருவி கரத்தில் பிடித்து சவர்களாய் உம்ருவை வெட்ட அதிவிரைவாய்ச் சென்றார்கள். அவ்வேளையில் தளபதி பின்ஹர்ரான் யென்பவர் அதிவிரைவிலெழுந்து இரண்டு சூரர்களின் கரத்திலிருந்த வாளாயுதங்களை பிடுங்கி யெடுத்துக்கொண்டு கரங்களினால் அவ்விருவரையும் எலும்புகள் நொறுங்கும்படி குத்தினர். இவ்வடிகள் பட்டவுடனே அவ்விருவர்களும் அவ்விடத்தில் நில்லாமல் தங்கள் ஊரைநோக்கி ஓடினார்கள். பின்பு அமீரவர்கள் கௌஷேரவானுக்கு ஓர் கடிதமெழுதினர். அதனுடைய வாசகமானது யாதெனில் ஜஹாம்பனுவாகிய பாதுஷாவே தங்களுக்காக யென்னுடைய மரியாதை பொருட்டாயென்னமல் இஸ்மத் யென்னும் பணிவிடைசெய்ததற்காக அதின் பிரதிபலனை அறிந்துகொண்டேன். யான் செய்த நன்றிக்காக பாதுஷா அவர்கள் மிகவும் நல்ல மரியாதைகொடுத்தார்கள். யெனக்கு நல்ல இஜ்ஜத், ஆகிய இனம் கொடுப்பதற்கு பதிலாக ஸஜாவென்னும் வசைகளடங்கிய கடிதத்தையும் இல்அத்தையும் கொடுத்தனுப்பினீர்கள் தங்களுடைய கடிதத்தையும் இல்அத்துகளையும் யென்னுடைய மேத்தரே ஹகிக் யென்பவரிடத்தில் அனுப்பியிருக்கிறேன். யான் தங்கள் சமுகத்தில் என்ன சொல்லவேண்டுமோ அவைகளை வாய்ச்சொல்லாய்சொல்லி அனுப்பியிருக்கிறேன் யென்றெழுதி மேத்தரே ஹகிக் யென்பவரிடத்தில் கொடுத்து, கௌஷேவானுக்குக் கொண்டுபோய் கொடுக்கும்படி கொடுத்தனுப்பினர் அக்கடிதங்களையும் இல் அதுகளையும் எடுத்துகொண்டு மதாயினைநோக்கி சென்றார் முன்னால் அடிபட்டோடிச்சென்ற தூதர்களிருவரும் மதாயின்சென்று பாதுஷாவினிடத்தில் போய் மக்கமாநகரத்தில் தங்களுக்கு நடந்த அவமரியாதைகளெல்லாம் விபரமாயுரைத்தார்கள், அவர்கள் சொல்லும்போதே அவர்களிருவர்கண்களில் நின்றும் அழுதகண்ணீர் ஆறுபோல் ஓடியது, பாதுஷாவினிடத்தில் மக்கமாநகரத்தில் நடந்த தோஷிதமெல்லாம் இவர்கள் ஒன்றுக்கு பத்தாய்போயிக் கதைகளைச்சட்டி அழுதுரைத்தார்கள் இவ்வார்த்தைகளைக்கேட்ட கௌஷேரவான் அதிக கோபமூண்டியவனாய் புஜபராக்கிரமத்தை முத்து சொல்லுகிறான், காஜாவே! இந்த அரபி அதிகதுஷ்டனும் மரியாதையில்லாதவனாயிருக்கின்றான் நம்முடைய நல்ச்சகுனங்களுடைய வாக்குமூலத்தினால் தெரிய வருகிறது! ஹம்ஜாவா

னவன் நமக்கு நேர்விரோதியா யிருக்கின்ரு னென்ன?" அவ்வார்த்தைகளைக் கேட்ட புஜூருச்மெஹர் சொல்லுகிறார். "பாதுஷாவே! அந்த ஹம்ஜாவைப்போல மனிதன் அறிவிலும் புத்தியிலும் தயாள குணத்திலும் சிநேகிதபான்மையிலும், தாக்கத்திலும் மரியாதையிலும், அவரைப்போல் ஒருவரு மிருக்கமாட்டார்கள். இனி ஒருவர் அவ்விதம் பிறக்கவு மாட்டார்கள். இந்த நல்ச்சிகார் சொல்வதுயெல்லாம் நிஜமாகத்தானிருக்கும் அதின் அர்த்தாங்கம் தோ, ஒன்றிருக்கவேண்டும் அதுவும் வெகுசீக்கிரத்தில் தெரிந்துவிடுமென்று சொல்லிக்கொண்டிருக்கும்போது மந்திரியானவர் அமீர் அவர்களின் கடிதமும் பாதுஷா இவ்விடத்தால் அமீர் அவர்களுக்கு அனுப்பிய கடிதமும் கில் அத்துகளையும் கொண்டுவந்து பாதுஷாவின் முன்பில் வைத்தார் உடனே அக்கடிதத்தை பாதுஷா யெடுத்து முத்திரைநீக்கி உடைத்து வாசித்தான். அதில் தாமெழுதிய சத்தத்தின் செய்தியும் அமீர் அவர்களின் கடிதத்தின் வாசகத்தையும் அதிக தாழ்மைப்பட்ட பழங்கதைகளையும் பார்த்து, பஃக்கீ யென்பவனை அழைத்து எடா! பஃக்கீ! இதென்ன நஜீஸாகயிருக்கும் நீ இவ்விதத்துஷ்டச் செய்கையில் இடுப்புக்கட்டி குரங்கின் வேலைப்போல் காரியம் செய்திருக்கின்ரு யென்று பலவிதமாய்க் கோபித்து நீ செய்த இப்பெரும் குற்றத்திற்கரிக "ஆயிரம் பை நிறைய அஷ்ரபிகள் அபராதம் கொடுக்கவேண்டும் அஃதல்லாமலும் நீ இன்றுமுதல் சிலநாள் தர்பாரில் என்முன்பிலும் வரக்கூடாது யென்று தாக்கீது செய்துவிட்டு, தன்னுடைய கரத்தினாலேயே அமீர் அவர்களுக்கு வேறே யொருகடிதமெழுதினன் அஃதெவ்விதமெனில் முன்தங்களுக்கனுப்பிய கடிதத்தையும் கில்அத்துக்களையும் பஃக்கென்பவன் மனதில் நினைந்தபடிமாற்றி அனுப்பி வைத்துவிட்டான். ஆகையால் தாங்கள் மனதில் யாதொன்றும் விசாரமாய் நினைத்து மனவருத்தமுற்றுக்கொள்ளவேண்டாம் இப்பொழுது, இதுவிஷயத்தில் பஃக்கச்செய்த மித்திரபேத மாறுபாட்டினால் தங்களுக்குண்டான மனஸ்தாபத்தை அறவே மனதைவிட்டு நீக்கிவிட வேண்டியது தங்களுடைய பனவருத்தத்தை சேர்குவதற்காகவே இந்தக் கடிதமும், கில் அத்துக்களையும் காஜா புஜூருக் உமித்கல் பொதித் காஜா புஜூருச்மெஹரென்பவரிடத்திலும் கொடுத்து அனுப்பி யிருக்கின்றேன், அஃதேனெனில் பஃக்கென்பவன் இத்தடவையிலும் வேறே யாதொருமந்திரிகளும் செய்துவிடாமல் யிருப்பதற்காக வேண்டி, இவ்விதம்

பந்தோபஸ்துடனே அனுப்பி யிருக்கின்றேன், இவைகளை தயவுடனே பெற்றுக்கொண்டு, தங்களுடைய கரங்களினாலேயே தாடையும் தக்கையும் கொண்டுவந்து சேர்ப்பிக்கும்படி கோருகிறேன். யென்றெழுதி முன் அனுப்பிய நபிமார்களுடைய லிபாலெஸ்ஸும் உடைகளெல்லாமல் இன்னும் வேறே மிகவிலையுயர்ந்த பொற்சரிகையிழைத்த அநேகவித வஸ்திராபரணங்களையும் கொடுத்து புஜூருச்மெஹரை யழைத்து காஜாவே தாங்கள் இந்த கில் அத்துகளையும் கடிதத்தையும் எடுத்துக்கொண்டு காஜாபுஜூர்க்உமித் யென்பவரையும் அழைத்துக்கொண்டு மக்கமா காந்தென்று, ஹம்ஜாவினிடத்தில் வெகு மரியாதையுடனே, இவைகளைச் சேர்த்துவிட்டு வாருங்கள். கபர்தார் இவைகளையெடுத்துச் செல்லும்பொழுது வேறே யாராவது மாறுபாடு செய்துவிடாமல் அதி ஜாக்கிரதையுடனே கொண்டுபோய் சேர்க்கவேண்டும் யென்றுரைத்து, இன்னும் சொல்லுகின்ரு ன், காஜாவே! தாங்கள் அரை நிமிஷமாவது என்னைவிட்டுப் பிரிந்திருக்க என் மனம்சம்மதிக்கா தானபடியால் தாங்கள் இந்த புஜூர்க்உமித் யென்பவரின் கூடபந்தோபஸ்திற்கா இரண்டுமூன்று மஞ்சில்கள் சென்று, அவரை அனுப்பிவிட்டு திரும்பி வந்துவிடுங்களென் றுரைத்தான். அதுபோல் காஜா அவர்களும் சம்மதித்தவராய், அவ்வஸ்துக்கள் யாவையும் கைக்கொண்டு, தாங்கள் மாளிகைக்கேகி தில்ஸ்மாத் தென்னும் மாந்திரீகமுறையும் ஓழுங்குபடி அதி உன்னத விசித்திரம் பொருந்திய நிஷானென்னும் ஓர் கொடி தயார்செய்தார், அஃதெவ்விதகொடியெனில் பரம்பின் உருவமாயும் கொடியின் அந்தஸ்தாயும், காற்றில் விரித்துப் பறக்கச் செய்தவுடனே காற்றுகள் கொடியினுள் நுழைந்து விரிந்துபறக்க ஆரம்பித்தவுடனே அப்பரம்பின் வாயினிருந்து (யா! சாஹேப்! கரான்! யா! சாஹேப்கரான்) யென்று மூன்றுதரம் பெருத்த் இடிமுழக்கம்போன்ற சப்தம் உண்டாகும்படியான பாவட்டாலை தயார் செய்து, அதையும் மடித்துக்கட்டி அத்துடன் ஹஜரத் தான்யால் அலேஹிஸ்ஸலாம் அவர்களுடைய டோரா ஒன்றும் கூடச்சேர்த்து இவைகள் அமீர் அவர்களுக்கென்றும், இன்னும், காற்றாற்று காற்பதுவகை ஜயாரி சாமான்களடங்கிய ஒருபையையும் வைத்து, இவைகள் உம்ரு அவர்களுக்காக வேண்டி யென்றும், இன்னும் அப்பையில் உள்ள ஜயாரி உடுபிடவைகளை யெவ்விதத்தில் உபயோகிப்பதென்று தங்கள் மகனிடத்தில் அவைகளை உபயோகிக்கும் விதங்களை யெல்லாம் காண்பித்து, மக

னே! இவ்வையாரி உடைகளை உம்ரு அவர்களுக்கு உடுமுடையகரங்களிலேயே உடுத்திக் காண்பித்துவிட வேண்டுமென்றும் சொல்லி அவைகளை யெல்லாம் சேர்த்து தீங்களுக்கும் உம்ரு அவர்களுக்கும் அளிக்கப்பட்டிது யென்று அதன்மேல் வரைந்து மூப்பெட்டியினுள் வைத்துயெடுத்துக் கொண்டுகூட சிலசிப்பாய்களையும் தங்களருமைப் புதல்வனர் காஜா புஜ்ருக் உமீதகல் பேரஷீத் யென்பவரையும் அழைத்துக் கொண்டு நளஷேரவானின் உத்திரவின்படி இரண்டு மூன்று மந்திரிகள் சென்று சொல்ல வேண்டியவைகளெல்லாம் விபரமாய்த் தங்கள் மகனிடத்தில் சொல்லி அமீர் அவர்களுக்கும் காஜாஅப்துல் முத்தல்லிபு அவர்களுக்கும் யென்னுடைய சலாமும் சொல்லு மென்று அனுப்பிவைத்துவிட்டு திரும்பினர்.

காஜாபுஜர்க் உமீத்கல்பேரஷீத் யென்பவர் மக்கமாநகரத்தை நோக்கிச் சென்று நான்கு காதங்களுக்கிப்பால் ஓரிடத்தில் விடுதிவிட்டு இறங்கியிருந்தார்கள். அவ்விதமிருக்கும் வேளையில் உம்ருவானவர் எங்கேயோ ஓரிடத்திற் உலாவப்போவதுபோல் சேனாவருகையில் காஜா புஜர்க் உம்மீத் அவர்கள் இறங்கியிருக்கும் ஸ்தானத்தை அடுக்க கடந்துகொண்டிருந்தார். அவ்வேளையில் புஜர்க் உமீத் யென்பவர் உம்ருவைப் பார்த்து, தங்கள் மனதில் நினைக்கின்றார். இதோ செல்கின்றவர் நிறம், குறி, நடை, உடை பாவனைகளை யோசித்து ஆராய்ந்து பார்க்குங்கால் இவர்கட்டாயம் உம்ராகவே யிருக்க வேண்டு மென்று தீர்மானித்துக்கொண்டு, அவரை அருகிலழைத்து, கழுத்தோடு கழுத்து சேர்த்து கட்டியணைத்து தாங்களும் யாரும் உடற்பிறந்தாண் மார்களாயிருக்கும் பில்மீல் சொல்லி இவ்விடத்திலிறங்கி எங்களுடனிருங்களென்றுரைத்து இன்னும் சொல்லுகின்றார் என் பிதாவாகிய காஜா புஜருச் மெஹரானவீர் தங்களுக்கு சில தோஃபாவென்னும் வெகுமதிகளை அனுப்பி யிருக்கின்றார்கள். அஃதை யாதெனில் தங்களுக்காக சில ஐயாரி உடைகளும் சாமான்களும் அனுப்பியிருக்கின்றார்கள். ஜீகையால் தாங்கள் அணிந்திருக்கும் அரபி உடைகளைக் களைத்துவிடுங்கள் அவ்வையாரி உடைகளை அணிந்துகொள்ளும் முறைமைகளை காண்பித்துத் தருகிறேனென்று உரைத்தார். இவ்வார்த்தை காஜா புஜர்க்உமீத் வாயிலின்னும் புறப்பட்டு முடியுமுன் தாம் அணிந்திருந்த உடைகளை யெல்லாம் வெகு சிக்கிரத்தில் களைந்துபோட்டுவிட்டு, தயாராய்நின்றார். அவ்வேளையில் புஜர்க் உம்மீத் யென்பவர்

உம்ரு களைந்து போட்ட உடைகளையெல்லாம் சுருட்டி தங்கள் மனிதனிடம்கொடுத்துவிட்டு சில நாழிகை நேரம்வரையில் உம்ருவைவஸ்திரங்களில்லாமல் வெறுமுண்டமாய் நிறுத்திவிட்டு, பின்பு உம்ருவை நோக்கி சொல்லுகிறார். ஓய்! சகோதரரே! தங்களை ஏளிவ்விதம் நிறுத்திவைத்தேனெனில், இனி ஒருகாலங்களில் யாராகிலும் உடைகள் தருகின்றேனென்று தங்கள் வஸ்திரங்களை களையச் சொன்னால் அவ்வுடைகள் தங்கள் கரத்தில் வருமுன் தங்கள் பிடவைகளைக் களையாமலிருப்பதற்காக வேண்டி ஜாக்கிரதையோடு இருக்கும்படி இவ்விதம் செய்தேன் யென்றுரைத்து, இனி இப்பொழுதிருக்கும் விதமாயே நிர்வாண உடைகளுடனே எப்பொழுதும் காய்மா யிருமென்றுரைத்து, அல்லாஹுத் தஆலாவினுடைய கட்டளைப்படி தாங்கள் இப்படியே காலங்கழியுங்களென்று சொன்னர் இவ்வார்த்தையைக் கேட்டவுடனே உம்ருவானவர் அதிக காபரா யுடையவராய் ஓ! ஹே! என்ன மதிமோசம்போனேன்? என்னைவெல்ல உலகத்தில் ஒருவருமில்லை யென்றிருக்கயானே சேற்றில் அகப்பட்டுக் கொண்டவனைப்போல் திருதிருவென்று விழிக்கலாயிற்றேயென்று பலவாறு யோசித்து மனமிட்டுக் கண்ணீர் தாரைதாரையாய் ஓட அழ ஆரம்பித்து காஜாபுஜர்க் உமீத் யென்பவரிடத்தில் கையமாடி தாளம்பாட்டு கெஞ்சி தயங்கி சொல்லுகிறார். யாதெனில், ஹஜரத்! புஜருகே யென்னுடைய உடைகளை யெனக்கு கொடுத்துவிடுங்கள் என்னை அவமானமாய் இவ்வளவு ஜனக்கூட்டத்தில்விட்டு வேடிக்கை பார்க்காதீர்கள். உங்களுக்கார் யென்னிடம் கெஞ்சுவதுபோக என்னைத் தங்களிடத்தில் கெஞ்சும்படி அல்லாஹுத் தஆலா செய்துவிட்டான். என்னுடைய உடைகளை கொடுத்து இப்பொழுது என் மானத்தைக் காப்பாற்றினால் எக்காலமும் தங்களுக்கு நன்மை செய்தவனாயிருப்பேன், இனி தருகிறேனென்றுரைத்த கில்அத்து தோஃபா, முதலியவைகளைவிட்டும் நீங்கி வெகுதூரியில் விலகிக்கொண்டேன், யென்னுடைய உடைகளை யெடுத்துக் கொண்டு என் ஊருக்கு ஓடிப்போய் விடுகின்றேன் யென்றுரைத்தார். இவ்வார்த்தைகளை யெல்லாம் செவிசாய்த்து கேட்டிருந்த புஜர்க்உமீத் யென்பவர் உம்ருவை நோக்கி! பாவா! இவ்வுலகத்தில் அநேக மனிதர்களை நீர் இவ்விதம் நிர்வாணமாகவும் நிகிலுண்டாகவும் செய்வதோடு அவர்களுடைய உடைகளையெல்லாம் நீர்களேஎடுத்துக்கொள்வீர், ஜீகையால் யான்னதற்காக தம்முடையஉடைகளைகளைந்து கொண்டு நிர்வாணம் ஆக்கினேனெனில் இவ்வேளையின்

ஞாபகம் எக்காளும் தமக்கிருக்கும்படி செய்தேன் யென்று உரைத்தார். அப்பொழுது, உம்ருவானவர் காஜாவை நோக்கி, ஹஜரத் நாயகமே இப்பொழுது யான் தங்களுடைய ஷாகிர்து ஆகிவிட்டேன் யென்றுரைத்தார், உடனே புஜர்க் உம்மீத் தாம்கொண்டுவந்த கில்அத்து முட்டையை வரவழைத்து அவிழ்த்து அதில் நின்றும் ஆபத் பந்தியென்று சொல்லப்படும். ஒருவிதபுன உடையை யெடுத்தார். அப்பொழுது, உம்ரு ஆச்சரிய முற்றவராய் அதிக லுக்கத்துடனே நோக்கி நின்றார். அவ்வாபத் பந்தென்னும் உடையுடன்சேர்த்து ஓர் மக்மல் பையும் இருக்கக்கண்டார், அப்பையினமேல் ஏழு விதமான பட்டு நூற்களினல் அதி உன்னதமாகிய பூவேலைகளை செய்து இருந்தது அப்பையின் சுருக்குக்கயிற்றின் தனியில் ஓர் மாணிக்கத்தை தனியேயிட்டு கட்டியிருந்தது. அம்மாணிக்கமோ அதிக விலையுறப் பட்டதாயும் இவ் வுலகத்தில் அதற்கு நிகரானவை அகப்படுவது அதிக குறைவானதாயுமாயுள்ள மாணிக்கமா யிருந்தது அவ்வுடையை உம்ரு அவர்களுக்கு லங்கோட் கட்டுவதுபோல் கட்டிவிட்டுசொல்லுகிறார். உம்ரே இதற்குப்பெயர். ஆபத் பந்த் யென்று சொல்லப்படும். தங்களுடைய முன்னோர்களும் இவ்விதமே உடைகளை கண்டும் கேட்டு மிருக்கமாட்டார்கள். யென்றுரைத்து, இவ்வுடை யணிவதினல் உண்டாகும் பிரயோசனம் யாதெனில், இவ்வுடைக்கு இம்மை நல்ல பிரயோசனத்தைக் கொடுக்கும் என்கிறவும், குதிக்கவும், பாயவும், துள்ளவும் நல்ல பிரயோசன முடையதாய் அவ்வேளைகளில் யாதும் தீங்கு நேரிடாமல் காக்கும் இன்னும் ஆறுகுளங்களில் நீந்தும் வேளையில் இவ்வுடையை அவிழ்க்காமல் நீந்து வீராகில் அப்பொழுதும் நல்ல பிரயோசனத்தைக் கொடுக்கும் யென்றுரைத்தார். இவ்வார்த்தைகளை யெல்லாம் கேட்டிருந்த உம்ரு வானவர் சொல்லுகிறார் நம்முடைய பிதாவாகிய காஜா அவர்களுக்கு அல்லாஹுத்தஆலா விடுடைய ரஹ்மத் துண்டாகதாகவும், அவர்கள் என்னை இவ்வளவு காத்திர்தாரி யென்னும் பெருமையாக பாராட்டி கில்அத்தாக எனுப்பினவைத்தார் யென்றுரைத்தார். பின்பு, காஜா பஜர் உம்மீது ஒருகித்தான் சட்டையும், ஓர்பட்டுச்சட்டையும்கொடுத்து உம்ரு அவர்களுக்கு உடுத்தாட்டி அதினுடைய பிரயோசனங்களை உம்ரு வென்பவருக்குரைக்கலாயினர், அஃதியாதெனில் உம்ரே இம்மெஹ்வாயுள்ள பட்டுச் சட்டையானது தேகத்தின் சுகத்திற்காகவும், மற்றோர் இத்தான் சட்டையானது அவ்வவ்விடங்களின் காற்றுனது எவ்வீதம் சூடு குளிர்ச்சியாய்

அக்கினிக்காற்றுகவும், காங்கமுடியாத குளிர் காற்றுகவும் இருப்பவைகளை யெல்லாம் கார்க்கும், இன்னம் அதற்குமேல் உயர்ந்த விலையேறப்பெற்ற பட்டுபுடவையில் நிறைய நங்கச்சரிகையால் அற்புத் கலை நாவேலைக ளமைத்த ஜாமா ஒன்றை உடுத்தினுக் அதிமேன்மை பொருந்திய பகுத்தங்கத்தினல் செய்து விலைமதிக்க ஒவ்வாத இரத்தினங்களைபதித்து தகஜேன்னும் கிரீடத்தின் முன்பக்கத்தில் மாகூந்தினலாகிய கால்களுர் ஜம்ருத்தினலாகிய உடலும் வைரத்தினலாகிய சிரசும், பவழத்தினலாகிய மூக்கும், அம்பர் கஸ்தூரியினலாகிய இறக்கைகளும் அமைத்த பகுதி ஒன்றைதொடுத்து அப்பகுதியின்வால்களெல்லாம் பச்சை மரகதத்தினலும், அதின் சிரசில் ஒன்பதுவகை இரத்தினங்களினல் கல்கிறுக்க ளமைத்து விலைதமாய் செய்யப்பட்ட தாலை உம்ருவின் சிரசிலிட்டு, மான் தோலினல் தில்ஸ்மென்னும் மாந்திரிகத்தால் சூரியனைப்போல்பிரகாசிக்கக்கூடிய குடையொன்று வெய்யலின் வெப்பத்தைத் தணிக்க கொடுத்து அதை வெய்யலின்போது நெற்றிக்கு மேலே ஓட்டிவிட்டால் நின்றுவிடும்படியானதாய் கொடுத்து உம்ரே இந்த சூரியனுடைய ஒளிப் பிரகாசத்தை இக்குடையானது நிகர்த்துவிடும். தம்முடைய முகத்தை நோக்கினவர்கள் சூரியனைப்பார்த்த கண்களை எப்படி மூடிக்கொள்வார்களோ அதுபோல் கண்களை மூடிக்கொள்வார்கள் யென்று சொல்லி, ஓர் மலாகன் யென்றுசொல்லும்கோபின் அதாவது கவன்போ லொத்த ஒன்றை உம்ரு கையில் கொடுத்தார், அக்கவணனது, அநேக விதபட்சி நூற்களால் நெய்யப்பெற்று, இடைக்கிடை பொற்சரிகைகளை கோர்த்து வாங்கி பின்னி இருந்தது அதை கொடுத்து சொல்லுகிறார். உம்ரே இக்கோபினை அதிக ஜனத்திரளான பெருத்த சேனைக் கடல்கள் நிறைந்து யுத்தம் அதிகரித்து சமிக்கமுடியாமல் இருக்கும் வேளையிலும உயிர் தப்பிக்கொள்ளும் முக்கிய வேளைகளிலும் இதிற் கற்களைவைத்து சுற்றியடிக்க எத்தனை ஆபிரம் பெளஜுகளையினும் அடிபட்டுச் சிதறி நசிந்து இறந்து நாசமாகி விடுவார்கள். அவ்வேளைகளிலேயொழிய மற்ற சாதாரண நேரங்களிலே உபயோகிக்க வேண்டாமென்றுரைத்து ஐந்து வாளாயுதங்கள் பிடிகளிலெல்லாம், இரத்தினங்க ளிழைத்து பார்ப்பவர் கண்களை பறிக்கச்செய்யும் விதமாய் இருந்தது. அதையும் உம்ரு அவர்களிடத்தில் கொடுத்தார். பின்பு, காற்பத்தினலு சிலந்தாமணிகளும் கொடுத்து இதை ஆட்டம் ஆடும் வேளையில இடுப்பில் கட்டிக்கொண்டு ஆடினல் பாடல் எவ்வித சந்

தத்தில் உண்டாகின்றதோ அதேதாளம் அதேசுரம் அதேமெட்டு அதே சப்தத்தில் இச்சிலங்கைகளும் ஒலித்து வருமென்று சொல்லி இடுப்பில் கட்டினர். பனிரெண்டு இடம், பதினெட்டுமூலை, ஆறு சப்தம் இருபத்தாறுமாதிரி மாய்கையான ஜால வித்தைகளையும் பாதத்திலணியும் ஆறு ஜதை மேஜோடும்கொடுத்து, அவைகளை அணிந்துகொள்ளச் செய்தார். பின்பு, ஓர் மாயா மோடியிந்து அதை கட்டிக்கொள்ளும் முறைமைகளையும் கற்றுக்கொடுத்தார். இன்னும் சில சோசாக்கள் அதி அற்புதம் பொருந்திய ஜால வெடிமருந்து நிறைந்து உள்ளவைகளையும்கொடுத்து, அவைகளை இடுப்பில் வைத்துக்கொள்ளும்ஸ்தானங்களையும் அமைத்து அதில்வைத்துக்கட்டிவிட்டார். இன்னும் வெள்ளைப் பாஷாணத்தில் அநேக அற்புத மருந்துகள் சேர்த்து செய்யப்பட்ட பஞ்சுநிறைந்த ஓர் டப்பியுங்கொடுத்து, உம்ரே! சமயம் வாய்த்தபொழுது ஷாபேள்ளும் குடிவகை தேவையானால் "இப்பஞ்சில் கொஞ்சமெடுத்து ஜலத்தில் ஊறவைத்து கழுவி பஞ்சையெடுத்துவிட்டால் அத் தண்ணீர் யாவும், ஷாப் ஷிவிடும் இந்த ஷாபுக்கு நிகரானவை உலகத்திலே இடையாதென்றுகொடுத்து மெழுகு தைலமிரண்டு அதில் மருந்துகள் சேர்த்து, செய்யப்பட்ட மெழுகு வத்திகள்நிறைந்த ஓர் டப்பியையும் கொடுத்து, இவ்வத்திகளை எப்பொழுதாவது இருன் நேரங்களில் அவஸியமான பொழுது கொளுத்திக்கொண்டால் அதிக பிரகாசத்தை கொடுக்குமென்று சொல்லிக் கொடுத்து, இன்னும் பலவித அத்தர்களும் பித்ரு முதலாகிய அதி மேன்மை பொருந்திய வாசனை திரவியங்கள் நிறைந்த அத்தர்தானியும் கொடுத்தார். இன்னும் ஓர், டப்பியில் நிறைய பல கொடிய நஞ்சுகளும், அந் நஞ்சுகளை முறிக்கும் ஜமூர் மோரு வெண்ணும் கல்லுடைய டப்பியையும் கொடுத்து, தண்ணீர் நிறைத்து வைத்துக்கொள்ளும் தோல்பை ஒன்றும், இரத்தினங்கள் இழைத்த கனி வாள்ஒன்றும், கேடகம்ஒன்றும், அம்புநிறைந்த அம்புறத்தூணிஒன்றும், உள்ளங்கால் தொடுத்து, உச்சிவரையில் மூடிக்கொள்ளும் படியான பெரிய ஜயாரிச்சாதரேனும் ஜாலதுப்பட்டி ஒன்றும் கொடுத்து இத்துப்பட்டியில் எவ்விதமான மனிதர்களையும் வைத்து மூட்டையாய்க் கட்டிக்கொள்ளலாம், அவ்விதம் கட்டிக் கொள்வதனால் உள்ளிருக்கும் மனிதன் அசையவும், உசும்பவும், சப்தமிடவும் முடியாமலாக்கிவிடும், அவர்களுடைய உயிருக்கு யாதொரு அபாயமும் நேரிடாது என்று உரைத்து காலில் அணிந்துகொள்ளும் ஓர் விதத்

அதிமிருதுவர்யே பஞ்சிலும், நயமான ஜாதர் ஒருஜதையும் கொடுத்தார், அது பஞ்சுவில்லாமலும் மெல்லிஸாகவும், காலில் இட்டால் இருப்பதுதெரியாததாயும், நிறைய பொற்சரிகையிலால் வேலைசெய்ததாயும் இருந்தது, இன்னும், பட்டு நாடாக்களினால் தைக்கப்பட்டஇரண்டு கயிறுகளும் கொடுத்து, இக்கயிறுகளை தடையிற் கட்டிக்கொண்டு ஆயிரங்காதவழி இலேசாக ஓடிஞலும், கால்கோய் ஓட்டத்தின் பாதை முகலியவைகள் யாதொன்றும் தெரியாதென்றுரைத்து, இவ்விதமாகவே 440 விதமான சாமான்களும் பனிரெண்டுவிதமாகிய மாயஜால சாமான்களும் கொடுத்தார், இவ்வல்லாமலும் இன்னும் அதிமேன்மையான விலையுயர்ந்த இரத்தினங்கள் இழைக்கப்பெற்ற அநேக ஆயுதாதிகளையும் உம்ரு உடைய தேகமெல்லாம்நிறைத்து அணிந்துவிட்டார். அப்பொழுது உம்ரு ஆனவர், புஜர்க்உம்மீது இடத்தில் உத்திரவு பெற்றுக்கொண்டு மகிகமாநகரத்தைநாடி நடந்து அமீர் அவர்களை அடைந்து, தாம் புஜர்க் உமீதை கண்டதுமுதல் இதுவரையில் நடந்த விஷயங்களை யாவையும் அவர்களிடம் உரைத்து இன்னும் சொல்லுகிறார். அமீரே தாங்கள் நௌஷேரவானுக் கெழுதிய அர்ஜிக்குப்பதில்உத்திரவும் அத்துடன் அநேகவிலையுயர்ந்த மஹாமேன்மை தங்கிய கில்அத்துகளையும், நௌஷேர்வான் பாதுஷாவானவன் புஜர்ஜ் மேஹருடைய புத்திரர், "கீராஜுஜர்க் உம்மீது என்பவரிடத்தில் அனுப்பி யிருக்கின்றன். அவர் இதோ நம்முடைய பட்டணத்தை அடுக்க இரண்டுமூன்றுதாதங்களுக்குப்பால் இறங்கியிருக்கின்றார் இன்னும்; காஜுபுஜர்ஜ் மேஹரென்பவரும் தங்களுக்காக ஓர் அற்புதம் பொருந்திய கொடியொன்றையும், தங்களுக்கு இணமாய் அனுப்பியிருக்கின்றார். இனனும் அத்துடன் தானியால் அலிகில்ஸ்லாம் அவர்களுடைய டேரா ஒன்றும், தங்களுக்கு அனுப்பியிருக்கின்றார். எனக்கும் யானிப்போது அணிந்திருக்கும் காஞ்சுரத்து காற்பதுவகை அற்புதசாமான்களும், பனிரெண்டு மாய்ஜாலவிதமான அற்புத சாமான்களும் கொடுத்தனுப்பினர் என்று அவ்வஸ்துக்களையெல்லாம் அமீர் அவர்களுக்குக் காண்பித்தார் இந்த சாமான்களை யெல்லாம் உபயோகிக்கும் விதங்களையும் கற்பித்துக் கொடுத்தாரென்றும் உரைத்தார். இவ்வார்த்தைகளைக்கேட்ட அமீர் அவர்கள் அதிக சந்தோஷமுற்றவர்களாய் தங்களுடைய பௌஜுகள் புடைசூழ பற்றராஜாக்களுடனே புறப்பட்டு சென்று பட்டணத்தைவிட்டும் வெளியாய் நடந்தார்கள். அவ்வேளையில் காஜாபுஜர்க்உமீது அவர்களும் எதிரில் வந்தார்கள் அப்

பொழுது அமீர் அவர்களும் புஜர்க் உமீத் யென்பவரும் வெகுபரி யாசையாய் ஒருவரையொருவர் கட்டித்தழுவி மினவிக்கொண்டார் கள். பின்பு நௌஷேரவான் கொடுத்த கடிதம் முதல் அந்தங்களையும் அமீர் அவர்களிடம் கொடுத்து சொல்லவேண்டியவைகளை யெல்லாம் சொன்னர். அமீர் அவர்கள் கடிதத்தை வாசித்து வெகுமகிழ்வெய்தி நௌஷேரவானல் அனுப்பப்பட்ட கில்அந்துகத்தில் சில மேலான உடுபுடவைகளை அவ்விடத்திலேயே உடுத்திக்கொண்டார். பின்பு காஜா புஜருக்மெஹர் கொடுத்த வெற்றிக்கொடியோராவும் கொடுத்து அமீரே தங்களுக்கு என்னுடைய தந்தையவர்கள் துலுக் சொன்னர் கள் யென்றதோடு, இந்த தோல்பாவையும் தங்களுக்கு கொடுக்கும் படிச்சொன்னர்கள். இவ்வஸ்துக்கள் அதிக அற்புதம் பொருந்திய வைகளாயிருக்கும் இவைகள் தங்களுக்கேயல்லாது, வேறொருவருக் கும் தகாதென்றுரைத்தாரென்பு புகன்றர் அவைகளை பெற்றுக்கொ ண்ட அமீர் அவர்கள் அதிகசந்தோஷக் குறியுடனே புஜருக்மெஹ ரவர்க்கு திரஷ் செய்துவிட்டு தோல்பாவின் ஹர்ராஸ் யென்பவரிடத் தில் வெற்றிக்கொடியையும் யுதிகாபென்பவரிடத்தில் டோராவையும் கொடுத்து, எப்பொழுதும், எங்குசென்றாலும், இவைகளை நீங்களே கொண்டுவர வேணுமென் றுரைத்தவிட்டு காஜாபுஜர்க் உமீத் யென் பவர்களுடனே யாவரும் சேர்ந்து திரும்பிவந்து பட்டணத்திற்குள் சென்று, தங்கள் மாளிகைக்கேகி காஜா அப்துல் முத்தலிபு அவர் களிடத்திலும் மற்ற பெரிய தலைமைக்காரர்களிடத்திலும அமீர் அவர்கள் புஜர்க் உமீது என்பவரை முலாகாத்து செய்தி யைத் தார்கள் பின்பு, புஜர்க் உமீது யென்பவர் எத்தனைநாள் அம்மக்கமா நகரத்தின் கண் இருந்தாரோ அத்தனைநாளும் ஆடல், பாடல், வேடிக்கை, விளைக்கள் செய்துகொண்டிருந்தார்கள். இவ்விதமிருக் கும் நாட்களில் ஓர்நாள் புஜர்க்உமீது யென்பவர் அமீரை நோக்கி, அமீரே! பாதுஷா நௌஷேரவான் தங்களுடையவரவை யெதிர்பார்த் தவனுக்கு காத்திருப்பான். ஆகையால் தாங்கள் மதாயினென்னும் பட்டணத்திற்கு புறப்பட ஆயத்தமாகுங்கள் பேர்கலாம். தங்களு டைய அழகுநிறைந்த செந்தாமரைமலரின் நிறத்தை நிகர்த்த வதன காந்தியை அவ்குள்ள அனைவருங்கண்டு களிமகிழ்வெய்துப்படி யெழு ந்தருளி யாகுங்களென்று உரைத்தார் உடனே அமீர் அவர்கள் எழு ந்து காஸ்பத்துல்லாவிற் சென்று ஜியாரத்து செய்து தாதையினிடத் தில் உத்தரவுபெற்றுக்கொண்டு முனஜ்ஜர்ஷா எமனி, நேஅமான்பின்

முனஜ்ஜர்ஷா எமனி, சகீல்எமனி சுல்தான்பஸ்த் மகரிபி, ஆதிகரப், தோளஸ்பின் ஹர்ராஸ், ஆகியஇவர்களோடும் முப்பதுஆயிரம் ரண சூரவல்லவர்களும் புடைசூழ நடுவில் அமீர் அவர்களும் அவர்களைச் சூழ காஜாபுஜர்க் உமீது முதலாகிய மற்ற இராஜாக்களும், சூழ்ந்து வர நடந்தசென்று மதாயின் யென்னும் பட்டணத்தை நோக்கி செல்கையில் வழிகள் தோறும் மஞ்சில்களிலெல்லாம், இறங்கி ஊண் நீர் முதலியவைகளை புசித்து, வேட்டை முதலாகியவை ஆட்டங்களாடிக்கொண்டே சென்றார்கள். அப்படிச் செல்லும்பொ ழுது ஓரிடத்தில் இரண்டுவழிகள் குறுக்கிட்டது, அப்பொழுது அமீர் புஜர்க்உமீத் யென்பவரைநோக்கி இவ்விரண்டு வழிகளும் எங் கெங்கு செல்கின்ற வழிகளாயிருக்கும். இவ்வழிகளில் தாங்கள் நட ந்து பழக்கமுடையவர்களாயிருப்பீர்களே ஆகையால் தங்களைகேட் கின்றேனென் றுரைத்தார். அதைக்கேட்ட புஜர்க் உமீது சொல் லுகிறார். இவ்விரண்டு வழிகளும் மதாயின் யென்னும் பட்டணத்திற் குச் செல்லும் வழிகளேயாம். இவ்விரண்டு வழிகளில் ஒன்று பயங்கர முடைய வழியென்றும், மற்றொன்று அச்சமின்றியே செல்லும் வழி யாயிருக்குமென் றுரைத்து விளங்கச் சொல்லுகிறார். இந்த கல்ல வழியாயும் அச்சம் பயங்கரமில்லாத வழியாயும் உள்ள பாட்டை யில் நடப்போமாகில் மதீனாயின் பட்டணம்போய் சேர்வதற்கு ஆறுமா தங்கள்செல்லும், அச்சப்படுகையுடைய வழியாய்ச் சென்றால் அதிகபட் சமாய் மதாயின் பட்டணம் போய்சேரலாம். ஆனால், ஐந்துவருஷகால மாக இவ்வழியில் மனிதர்களின் சஞ்சாரமென்பதே இல்லாமல் போனத

றேன் நீங்கள் யாவரும் கல்லவழியோடு வாருங்களென்று சொல்லி தங்களோடு உம்ரு ஐயாரென்பவரையும் அழைத்துக் கொண்டு அக் குறுக்கு வழியாய் சென்றார்கள். காஜாபுஜர்க் உமீத் யென்பவர்களும் மற்ற இராஜாக்களும் அமீர் அவர்களின் சேனையும் கல்ல வழியோடு நடந்துசென்றார்கள். இவ்விதம் நடக்கும் காலையில், அமீர் அவர்கள் மூன்றுகாள் நடந்தபின் அந்த பேஷயேபைஜ் ஏன்னும் காடுவந்தடைந்தது. அவ்விடம் செல்கையில் கல்ல குளிர்ச்சியுடைய காற்றும் பசுமை பொருந்திய சோலைகிழற்களும் தண்ணீர்தடாகமும் இருக்கக்கண்டு அவ்விடத்தில் பரியை நிறுத்திக் கீழேஇறங்கி அத்தடாகக்கரையின் பக்கமாய்த் தங்கியிருந்தார்கள். அத்தடாகத்தின் ஜலமானது மிகத்தெளிவாயும் உருசிகரம் பொருந்தியதாயும் அத்தடாகத்தைச் சுற்றிலும் ஓரங்களில் பலவித கீண்டுவளர்ந்த பசும்புற்கள் கிறைந்த இடைக்கிடை பலவர்ண புஷ்பக்குலைகளை கொருக்கிவளர்ந்து தொங்கி இளம் வாலிபப்பெண்கள் ஊஞ்சலாடும் தன்மையாய் இருந்தது, இம்மாதன்னியில் பலஜாதி விருக்ஷங்களும் அடர்ந்து தொருத்து நின்றது, இவைகளையெல்லாம் அமீர் அவர்கள் கண்டு பரமகிழ்ச்சியோடும் தடாகக்கரையின்கண்ணிருக்கும் வனியில் உம்ரு ஆனவர் அமீர்அவர்களின் குதிரையை கரத்தில் பிடித்து மேயவிட்டுக் கொண்டிருந்தார். அவ்வேளையில், காட்டினிடமாய் ஓர் பேரிறைச்சல் கேட்கத் தொடங்கியது, அப்பொழுது, உம்ரு ஆனவர் நான்கு பக்கமும் திரும்பிப்பார்த்துக்கொண்டே நின்றார். ஓர் பக்கத்திலிருந்து சிம்மமானது அதிவேகமாய் வரக்கண்ட உம்ரு ஐயார் அதைக்கண்டவுடனே தம்முடையைய திதும் புலியென்னும் உருவதையே கண்களால் பார்க்காதவராண படியால் பயத்தினால் மனம்நடுங்கி கால்தடுமாறியவராய் குதிரையை விட்டு விட்டு ஓர்உயரமான மரத்தின்மீது ஏறிக்கொண்டு அமீர் அவர்களை பெருங்கூச்சலிட்டு யழைத்தார். அஃதெவ்விதமெனில் ஓர் புலியானது பருத்தஉரல்டு உருண்டுகொண்டு கொழுத்ததாய் இதோ வந்து விட்டது! இதோ வந்துவிட்டது! ஓடிவாருங்கள்! ஓடிவாருங்கள்! யென்றலறியழைத்து, மப்படியும் ஹம்ஜாவே நீரிருக்கும் ஸ்தானத்தை நாடி ஓடிவருகின்றது, ஆகையால் அல்லாவுக்காக தாங்கள் அக்குளக்கரையைவிட்டும் எழுந்து ஓடிவந்து, என்னுடன் இம்மரத்தின்மீது ஏறிக்கொள்ளுங்கள் யென்றழைத்தார். இக்கூச்சலை செவியிற்கேட்ட அமீர் அவர்கள் குலுங்க குலுங்க நகைத்து சொல்பவரா யினர், அஃதையாதெனில் ஓப் பூனையின் குணமமைந்தவரே! ஏன்

நடுங்கி அஞ்சுகிறீர், உமக்கென்ன பைத்தியம் உண்டாகிவிட்டதோ? யான் இச்சிம்மத்தை கொல்வதற்காக இங்குவந்தவனும் பௌஜ்களையும் கேசர்களையும் விட்டுப்பிரிந்து, வந்திருக்க, என்னே பயங்காட்டி இப்புலியைவிட்டும் ஓடிப்பிழைத்து போகும்படி கூவுகின்றீர். இக்காட்டில் என்னே பலமான பேடியென்று நினைத்துக் கொண்டீர் யென்று சொல்லி, அச்சிம்மம் வேருவழியை நோக்கி யெதிர்த்துச் சென்று பார்க்கையில் அச்சிம்மமானது அதிசயப்படுகிறதாயும் பார்த்தவர்கள் அச்சிம்மம் அடிக்குமுன் உயிரை விட்டு விடும்படியானதாகவும், அதிக ஆங்காரத்துடனே நிகளத்தில் நாற்பது கஜம் உடையதாயும், பருமனில் பெருத்த மாட்டுக்கும் மேற்பட்ட பயங்கர ரூபமுடையதாகவு மிருந்தது, அதைக்கண்டவுடனே அமீர் அவர்கள் சப்தமிட்டு அச்சிம்மத்தை அழைத்தார் அச்சத்தத்தைகேட்ட சிம்மமானது கீழே பதுங்கி தண்டெடுத்து அமீர் அவர்களின்மேல் ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்தது அவ்வேளையில் அமீர் அவர்கள் அப்பாய்ச்சலை தங்கள் தலைக்கு மேலாக்கி, கிம்முன்தை தங்களின் முதுகுப்புறத்திலாக்கிக்கொண்டு சட்டென்று திரும்பி அல்லாஹு அக்பரென்று பேரிடிக்கு ஒப்பாகிய ஓர் சப்தமிட்டார். அச்சப்தத்தினால் அங்காகளெல்லாம் கிடுகிடுத்து, அதிர்ந்து, சிறுபுள்ளினங்களெல்லாம் இருந்த இருந்த இடங்களில் அப்படியே செத்துக்கிடக்கும்படியாகிவிட்டது, அச்சத்தத்தோடு அச்சிம்மத்தின்பின் காலிரண்டையும் வாரிப்பிடித்து உதறிதூரக்கி சுற்றி ஜட்கா யென்னும் தொடுக்கி யடித்தார். அதனால் அச்சிம்மத்தின் எலும்புகளெல்லாம் நொறுங்கி இடுப்பு முறிந்துவிட்டது. அப்பொழுது அமீர் அவர்கள் அச்சிம்மத்தை பூமியில் போட்டுவிட்டார், சிலநேரத்திற்குள் அலறி உயிர்துறந்தது உடனே உம்ரு வெகு சுறுசுறுப்பாய் மரத்தைவிட்டுகீழேயிறங்கி ஓடோடியுவந்து ஷாபாஷ்! ஷாபாஷ்!! மற்றூபா மற்றூபா!! யென்று மொழிந்தவராய். அமீர் அவர்களின் கால்களைப் பிடித்து முத்தமிட்டார். பின்பு, பொழுது விடிந்தவுடனே உம்ரு அச்சிம்மத்தை கிழிக்காமல் தோலை பைபோலுரித்து எடுத்து ஜலத்திற்கழுவி சுத்தஞ்செய்து, அக்காட்டின் மீதுவான செத்தைகளைவாரி அதற்குள் திணித்து, அத்தோலை உயிர் சிம்மத்தைப்போல சற்றும் பிசகில்லாமல் செய்துமுடித்து, காட்டினிடமாகச்சென்று விறகு கொம்புகளை ஒடித்துக்கொண்டுவந்து மாயாவினோத ஜாலஞ்செய்ய ஆரம்பித்தார். அஃதெவ்விதமெனின் அக்காட்டின் கொம்புகளினால் கட்டியைப்போல் படிகளமைத்து ஓர்

தட்டிசெய்து, அதில் அச்சிம்மத்தை இருத்தாட்டினார். எவ்விதமெனில் பார்ப்பவர்கள் இச்சிம்மம் உயிருடன் இருக்கின்ற தென்று நிஜமாய் நம்பும்படியாய் செய்திருந்தினவைத்து, ஓர் கூலிக்காரனை யழைத்து அவன் சிரசில் அத்தட்டி போடு சிம்மத்தை தூக்கிவைத்து அமீர் அவர்களுடனே சென்றார்கள். அப்படிச் சிலநாட்களில் அமீர் அவர்கள் புஜர்க் உமித் முதலாகியவர்களை மதாயின் வந்துசேர அதிக நாட்செல்லு மென்ற எண்ணத்துடனே வழிகள்தோறும் ஆங்காங்கு வசதிபான ஸ்தானங்களில் வேட்டையாடுவதும் அவைகளை பொரித்துப் புசிப்பதும் வசந்த ஸ்தானங்களில் இறங்கித் தங்கியிருப்பதுமாய் வேடிக்கை விநோதங்களோடு ஆறுதலாய் நடந்தார்கள். ஆகையால் மதாயின் என்னும் பட்டணத்திற்கு அமீர் அவர்களும் நல்ல பாதையால் நடந்துவந்த புஜர்க் உமித் முதலாகிய சேனைகளும் ஒரேதினத்தில் ஒரேவேளையில் வந்து சேர்ந்தார்கள். அப்பொழுது அமீர் அவர்கள் தங்கள் பௌஜுகளுடனே போய் சேர்ந்து கொண்டார்கள் உம்ரு ஐயாரானவர் தனித்து கோட்டை யருகிற்சென்று பார்க்கையில் அக்கோட்டையின் சிற்புரத்தில் மேடொன்று காணப்பட்டது, அம்மேட்டின்மேல் தாம்கொண்டுபோன சிம்ம உருவைதட்டிபோடு உயிர்ச்சிம்மம்வந்தட்கார்திருப்பதுபோல் காணும் படிவைத்துவிட்டு பௌஜில்வந்து சேர்ந்திவிட்டார். மறுநாளுதயத்தில் கோட்டைவாசற்படி கதவுதிறக்கப்பட்டது அப்பொழுதுகோட்டைக்குள்ளிருந்து வைக்கோல் சுமைக்காரன் வெளியே செல்வதற்காக கோட்டைவாசலை கடந்து, கடந்தான். அப்பொழுது அக்ஸ்மித்தாய் அவன்பார்வை உம்ரு வைத்திருந்த அச்சிம்மத்தின்மேல் பட்டுபார்த்தவுடனே பயந்து திகில்கொண்டு மூர்ச்சையாகி பூமியில்வீழ்ந்து ஸ்மரணையற்றவனாகிவிட்டான், அவனுக்குப்பின்னல்வந்தவர்கள்விழுந்தவனைநோக்கி, இஃதென்ன நன்றாய் கடந்துவந்த மனிதன் இவ்விதம் மூர்ச்சையாகி கீழேவிழுந்துவிட்டானே என்னத்தைப் பார்த்து இவன் இக்கோலமாகினன் என்று சுற்றும் முற்றும் திரும்பித்திரும்பிப் பார்த்தார்கள். அப்பொழுது மேட்டின்மேல் சிம்மம் முறைத்து பார்த்து எதிர்ப்பாயும் தருணமாய் இருக்கக்கண்ட ஜனங்கள் சிம்மம் சிம்மம் என்று அலறியவர்களாய் பட்டணத்தை நோக்கி ஓட்டம் பிடித்தார்கள் ஒருவருக்கும் தன்புத்தி தனக்கு சுவாதீனமில்லாமல் பித்த பிரம்மைகொண்டவர்களைப்போல் ஓலமிட்டு கதறியவர்களாய் ஓடினார்கள். இக்கூச்சலைக்கேட்ட பட்டணத்து ஜனங்களெல்லாம்

ஏகமாய்க்கூடி ஊர்முழுவதும் சிம்மம் சிம்மம்என்றசப்தமே பெருங்கூச்சலாய்விட்டது. ஒருவருக்கொருவர் அப்பப்பா பெருத்த சிம்மமொன்று கோட்டை வாசற்படிக்கெதிரில் மேட்டின்மேலேறி நின்று பட்டணத்தைப்பார்த்தவண்ணமாய் இருக்கின்றது. ஐயோ! இவ்வூருக்குள் பட்டணத்திற் குள்ளும் நுழைந்திருக்கலாம் ஒருவரும் வெளியே திறந்திருக்கும் ஓடிப்போய்விடுங்கள் என்று சப்தமிட்டவர்களாய் அலறிச்சென்றார்கள். சிலர் அப்பா! எங்கள்கூட வந்த மனிதன் ஒருவன் அச்சிம்மத்தைக்கண்டுபயந்து மூர்ச்சையாகி பூமியில் வீழ்ந்துவிட்டான். இவ்வளவு நேரம் அவனைஎடுத்து ஒரேவாயில் விழுங்கி இருக்கலாம் என்று சொல்லிக்கொண்டோடினார்கள் இச்சத்தமானது பட்டணமுழுவதும் பரவி அப்பட்டணமே கீழ்மேலாய் புரளஆரம்பித்தது, ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வீட்டின் கதவுகளை பந்தனஞ் செய்துகொண்டு துப்பாக்கியில் குண்டுமருந்து நிறைத்து கிட்டித்து தயாராக்கி சக்கிமுக்கிக் கற்களையும், பஞ்சுகளையும் கையிலெடுத்து வைத்துக்கொண்டு உப்பரிகையின் மீதேறி உயரத்தில் இருந்துகொண்டு சிம்மம் வரும்வழியை உற்றுநோக்கினவர்களாய் துப்பாக்கியை மார்போடணைத்துப் பிடித்துக்கொண்டு தயாராய்நின்றார்கள். ஊரவர்களெல்லாம் இம்மாதிரியே பொல்லாதகாலமாயிருக்கின்றது பட்டணத்திற்குள் காட்டு சிம்மம்வந்து நுழைந்து விட்டால் ஜனங்களை அநேகமாய் கிழித்தெறிந்துவிடும் என்று ஒருவர்க் கொருவர் பேசி முடிவு செய்துக்கொண்டு பாதுஷாவினிடத்தில் அறிக்கை செய்தார்கள். அதைக்கேட்ட பாதுஷாவானவன் எழுந்து கோட்டையின் கோபுரத்தின்மேலேறி நான்குபுறமும் பார்த்தான் அவ்வேளையில் பாதுஷாவின்கூட அநேக ஜவாம்பர்தி தனமுடைய பயில்வான்களும் மந்திரி பிரதானிகளும் போயிருந்தார்கள். அவ்வேளையில் பாதுஷாவி னுடைய திருஷ்டிக்கு மேட்டின்மேல் முறைத்து, பார்த்து பாயும்படியான தன்மையில் சிம்மம் இருக்கக்கண்டான். அச்சிம்மத்தைப் பார்ப்பவர்களெல்லாம் நடுநெஞ்சு வல்குழியில் கழிந்துகொள்பவர்களும் சிறுநீர் செய்து, உடுபுடவைகளை நனைத்துக்கொள்பவர்களுமாய் திட்டம் பிடிக்கையில் பயத்தினால் கால்கள் பின்னி தடுமாறி பூமியில் முகங் குப்புறவிழுந்து, நெற்றி முகம் உதடு பற்கள் முழங்கால் முதலியவைகளை உடைத்துக்கொண்டு இரத்தம் ஓட தட்டுக்கெட்டுத் தடுமாறி உருண்டு புரண்டு எழுந்து கடந்து ஓடுபவர்களாய் கண்டான் அவ்வேளையில் அகஸ்மாத்தால் மக்பூல் வபாதாரானவர் பாதுஷாவின

டையு முலாகத்திற்காக அவிடம்சென்று, அந்த சிம்மம்நிற்கும் மேட்டினருகில் அடித்து வரும்பொழுது அச்சிம்மமானது அவர்கண்ணுக்கு தென்பட்டது உடனே வீல்லே வீரேத்து, அம்பைப்பூட்டி நாணேற்றிகரத்திற்பிடித்து அச்சிம்மத்தை நெருங்கிச்சென்று உற்றுநோக்கையில் சிம்மத்தின் சேகத்தில் சுவிப்புத்துடிப்பு உசுப்புதல் அசைவுதல் லன்றமில்லாம லிருக்கக்கண்டு மூத்தை நோக்கினார் அதின் முகமும், ஏமாற்றுத அடைய முஞ்சியாய்க் காணப்பட்டது. உடனே இஃது சோபிதா வென்னும் மாபாஜால வித்தையாயிருக்கும் இவ்வேலை நம்முடைய உபாவைத்தவிற வேறொரு வராலும் செய்ய முடியாது. ஆகையால் அவர்தான். இவ்விதகுறும்புக்கோலங்கள் செய்வதில் வல்லமையுடையவர். இதனால் தெரியவருகிறது, அமீர் அவர்கள் இங்கு வந்துவிட்டார்கள்? யென்று, வரும்வழியில் பேஷயேபைஜுன்னும் காட்டில்கெடுத்த சிம்மத்தின் செய்தியை அமீர் அவர்கள் அறிந்து அவ்வழியாய் வந்து, அச்சிம்மத்தை அடித்துக் கொன்றுவிட்டார்கள் உம்ரு அத்தோலை உரித்து இவ்வேலை செய்து இங்கமைத்துவிட்டு போயிருக்கின்றார், யென்று இவைகளை யெல்லாம் மனதில்நினைந்து இச்செய்திகளை யெல்லாம் விபரமாய் பாதுஷாவினிடத்தில் ஊரைத்தார். இச்செய்தியைக் கேட்ட பாதுஷா மத்பூல் சொன்னவைகளெலலாம்மெய்யாகவிருக்கக்கண்டு. அதிக சந்தோஷமுற்று, தங்க அஷ்ரபிகள்நிறைத்த மூன்று பெட்டிகளை மத்பூல் உபாதாருக்கு இனமாகக் கொடுத்து, இன்னும் அநேக ஆடை ஆபரணாதிகளை யெல்லாம் நன்குடையளித்து, சொல்லத்தடங்கினன் மத்பூலே அமீர் ஹம்ஜா அவர்கள் எங்கேவந்து இறங்கி இருக்கின்றார்கள் அதி சீக்கிரமாய்ப் பார்த்து வந்து தெரியப்படுத்துமென்று ஊரைத்தான். உடனே மத்பூலானவர் பேஷ்பைஸ்யென்னும் காட்டின் பாட்டையை நோக்கிச்சென்றார். அவ்வேளையில் உம்ரு ஆளர், அமீர் அவர்களை லஷ்கரில் கொண்டு போய்விட்டுவிட்டுதிரும்பி பட்டணத்தை நோக்கி அமீர்வந்த செய்தியை பாதுஷாவினிடத்தில் அறிவித்துச்செய்வதற்காக வந்துகொண்டிருந்தார். அப்பொழுது துலிதூரத்தில் ஒரு கூட்டம் கோட்டையைவிட்டும் வெளியாகி எதிரேவரக்கண்டு நெருங்கிப் பார்க்கையில் மத்பூல் வ்பாதார் வருவதையறிந்து, ஓஹோ!இவர் நம்முடைய சகோதரராகிய மத்பூலென்றறிந்து ஒருவரை யொருவர் அடித்து, அருகில்நெருங்கிய பொழுது, மத்பூலென்பவர் உம்ருவை நோக்கி சகோதரரானவரே

தாங்களெக்கே செல்கின்றீர்கள். அமீர் முலாகியபாவரும் எங்கே கூடாரமடித்து இறங்கி இருக்கிறார்கள் பென்று வினவினர் இவ்வார்த்தைகள் உம்ரு ஐபாருக்கு மனதிருப்திகரமில்லாத சொற்களாய் காணப்பட்ட படியால் கோபமாகி மனதில் நினைக்கிறார் முனிவர்களைக் கண்டவுடனே சலாம் சொல்லுமலும் நமஸ்காரத்தைவிசாரிக்காமலுக் எங்கே இறங்கி இருக்கின்றீர்களென்று வடக்கத்தி விறகு கட்டுக்காரனைப்போல் காரசாரம் சொல்லவந்தார்யெனக் கருதியவராய் மத்பூலிப்படார்த்து ஓ! கறமுறைந்தோரு மனிதனே நீன் உன்னை அமீர் அவர்கள் பாதுகாவினுடைய ஹுஜூரில் இருந்து கொண்டிருமென்று உன்னை அனுப்பினார்களோ? உன்சுற்றி பொறுக்குவதற்காக அனுப்பினார்களோ? யென்று கேட்டார் அதற்கு மத்பூல் உம்மை நோக்கி உம்மை யான் வரக்கண்ட வழியில்லை அமீர் அவர்களை இருபதாகவும் இப்பொழுதுதான் சென்மேருவுக்கு முன்பதாகவந்திறங்கியதாகவும் யான் கேள்விப்பட்டு பாதுஷாவினுடைய சமுகத்திலிருந்துதான் வருகின்றேன். யானுமெங்களும் வார்சுற்றபுறப்பட்டவில்லை யென்றுரைத்தார், அப்பொழுது உம்ரு மத்பூலை நோக்கி நீர் செய்தகாரியம் மிகவும் பெட்டகாரியமாயிருக்கும், அச்செய்தியைவில் அமீர் அவர்களின் முலாகத்திற்காக நீர் புறப்பட்டது மிகவும் கெட்டகாரியமாயிருக்கின்றது யென்றுரைத்தார், அதைக்கேட்ட மத்பூல் உம்மோடெனக்கென்ன பயித்தியம் தொண்டிவிட்டதோ நீ என்னோடு சமானமாய் பேசுகின்றாய் யென்றுரைத்தார். இவ்வார்த்தைகளைக்கேட்ட உம்ரு முன்னமே அக்கினியைக்கக்கொண்டு உருகிவிடித்துக்கொண்டிருந்த பாவனையாயிருந்தவராணபடியால் இதுதான்சமயமென்று ஓய்! காக்காஜாதாவென்னுற்குலர்களின்வம்சத்தாரே நீயும் இப்பொழுது உயர்ந்துவிட்டாயோ யிருக்கின்றது எனக்குச்சமாலமாய் கின்றுகொண்டு என்னை கேட்கின்றாய் என்னோடு சரிபாய் பேசுகிறுயென்றுசேட்கின்றாய் அல்லவா வினக்கு பாதுஷா கொடுத்தவான்கொடுத்த மூன்றுபெட்டி அஷ்ரபிகளின் பகத்தையோ இவ்வளவு மதிப்பில்லாமல் பேட்டகாரியம் அம்மூன்று பெட்டிகளை பெற்றுக்கொண்டவுடனே நீ காஜாவாகி விட்டாயோ கண் இப்பொழுது பஞ்சடைத்து விட்டாற்போல் காண்கின்றது யென்று உடனே தம்முடைய சிரசினைக்கிருந்து செப்பியைக் கழட்டி, அதற்குள் இருந்த கலவையெடுத்து அவிழ்த்து அதற்குள் பதினைபட்டைகளாய் மூப்பத்திரண்டு கோணங்களாய் பட்டைதீட்டி குரியனைப்போல் பிரகா

சம் ஜொலிக்கின்றனவும் சந்திரனையும் மத்தாப்பின் பிரகாசத்தையும், நிகர்த்த வெடிமருந்துகளினால் தயார்செய்யப்பட்ட ஓர் அழுக்தமா கிய உறுதியுடைய பளுவான கல்லை தம்முடைய ஐயாரிபையில் கின் றும் எடுத்து, கவணில்வைத்து சுழட்டி குறிப்புவைத்து எறிந்தார். அக்கல்லானது வேகமாய்ச்சென்று மக்பூலுடைய நெற்றியில் தாக்கி இரத்தமானது காரிஞ்சாவைப்போல் பீறிட்டு பாய ஆரம்பித்தது. உடனே மக்பூல் ஒழுகிப்பாய்ந்து ஓடிம் இரத்தங்களுடனே அமீர் அவர்களிடம் அழுதுகொண்டு நெருங்கினர். அதையறிந்த அமீர் அவர்கள் தங்கள் மனதில் மக்பூலே இம்மதாயின் பட்டணத்தி லுள்ள மனிதர்கள்கூடி இவ்விதமாய் இரத்தவெள்ளம் ஓடும்படியோட அடித்திருக்கின்றார்கள் எந்த துஷ்டனே இவ்வித அக்ரமம் னவேலை செய்திருக்கின்று னெனக் கருதியவராய் நேரபமீறி பக்பூலே யழைத்து, ஓ! சகோதரரே உம்மை இக்கோலம் செய்தவன் யார்? சிக்கிரம் சொல்லும்யெனக் கேட்டார். அதைக்கேட்ட மக்பூல் அமீர் அவர்களே நோக்கி அமீரே என்னே உம்ரு யென்பவர் இவ்வித மடித்தா ரென்றுரைத்தார். அமீர் அவர்கள் உம்ருவைக் கூப்பிட்டு ஓய் உம்மே இம்மதென்ன ஆகாதகாரியம் ஒன்றுக்குள்ளொன்று உடலுக்குள் பகை விளைவிப்பதுபோல இவ்வித குறும்புத்தனம் செய்வது ஆகாதகாரிய மல்லவா? யென்று கேட்டார் அதற்கு உம்ரு வானவர் அமீரே சரி யாய்ச்சொன்னீர்கள். அப்பழமொழிக் கிணங்கத் தான் இருக்கின்றது இப்பொழுது நடந்திருக்கும் விஷயம்கூட, அம்மதெவ்வித மெனில் நாட்டுப்புரத்தானொருவன் ஞாயம் சொல்லிக்கொள்வதற்காக நியாய ஸ்தலத்திற்கு சென்று நியாயதிபதியிடம் வாக்குமூலங்க ளெல்லாம் எதிரித்தரப்பில் பாதகமாகசொல்லி கடைசியாய் ராஜிபாய்ப்போய் விட்டேனென்று சொன்னதும் அதுபோல் தான் இருக்கின்றது இவ்வழக்கும்கூட யென்றுரைத்து, தாங்கள் ஒரு தரப்பு வாக்கு மூலத்தைமாத்திரம் அறிந்துகொண்டு தீர்ப்பு செய்துவிடக் கூடாது எதிரித்தரப்பு வாக்கு மூலமாகிய எனதுடைய செய்தியையும் விசாரித்துக்கொண்டு பின்பு தீர்ப்புசெய்யவேண்டும் யென்றுரைத் தார், அதைக்கேட்ட அமீர் அவர்கள் சரி! அப்படியானால் உம்முடைய பிரியாதென்ன அதின் வாக்குமூலத்தைச் சொல்லும் யென்றுரைத் தார். அதைக்கேட்ட உம்ரு அமீரை நோக்கி ஹாஜத்துக ளெல்லாம் நிறைவேறும் ஸ்தானமாகிய அமீரே இன்ஸானனவன் பிறமனிதனி டத்தில் நம்பிக்கை வைக்கின்றன் முகமறியாத வழிப்போக்கர்கள்

ஒருவரை யொருவர் சந்தித்தால் இவன் தன்ஜாதி யென்று நினைத்து, சலாமுன் அலேக்கும் வ! அலேக்கும் மஸ்ஸலாம்யென் றொருவர்க் கொருவர் சொல்லிக்கொள்வார்கள். அப்படியிருக்க. மக்பூலானவர் தமுடைய சகோதரவாஞ்சை யுடையவராயிருந்தும் வெகுதூரம் நிமை விட்டு பிரிந்து ஒருவரை யொருவர் காணதவர்களாயும் பின்பு சந்திருக்க இம்மனிதன் சலாம் அலேக்கும் யென்ற சொல்லிவிட்டால் இவர் வரவென்ன கோலைாய் விடுமா? நம் முடைய சகோதரவாஞ்சை யொருபக்கத்தி லிருக்கட்டும் இஸ்லா மென்னும் ஒரு ஜாதி அபிமானத்திற்காக வாகிலும் ஒருசலாம் சொன்னதென்னகுறைவு வந்துவிடும் சலாம் செய்வது மனிதத்தன த்தின் அடையாளமாயிருக்க இவர் குதிரையை விட்டும் கீழிறங்கி ஒருவரைபொருவர் கட்டித்தழுவி மினவிக்கொண்டால் இவரென்ன ஜாதியில் உயர்ந்துவிடுவாரோ? அமீரே! இவர்செய்த குறைகளெல் லாம் தங்களிடத்திலே இப்பொழுது யான் சொல்லிவந்தேனே இவை களை சீர்தூக்கி யோசித்துப்பாருங்கள் குற்றம் எங்கிருக்கின்றது அடி த்தாலென்ன அக்காயம் மருந்துபோட்டால் ஆறிப்போகும் இவர்செ ய்த அவமரியாதை பேதிஜத் முதலியவைகள் கியாமநாள் வரையில் நெஞ்சிற்புண்ணுகி அதுஆறுதல்லவா? ஆகையால் எதுபெரியகுற்றம்? இன்னம்யாள் இவரை சும்மாவிடவேனே? எனக்கு மிவருக்கும் இப் பொழுதிருக்கின்ற தக்காரார்களெல்லாம் நாங்களிருவரும் ஒரு பெட்டி யினுள் அடக்கிய ஒரு வஸ்துவைப்போல் ஒற்றுமையாய் இருப்பவர் களாகையால் யான் இவரைக்கண்டவுடனே சந்தோஷமாய் மூலாகத் தி்ற்காக தழுத்து நின்றிருக்க இவர் குதிரைவிட்டு கூட கீழே இறங் காமலும் இருந்த இருப்பிலேயே அமீர் அவர்கள் எங்கே இறங்கி இருக்கின்றீர்கள் நீங்கே செல்கின்றீர் யென்றுகேட்டார். இது தானு மனிதத்தன்மை இவரை அடித்தால் என்னகுற்றம் இவ்விதம் கேட்டவரை யான் சமாதானவார்த்தையாய் ஓய் உம்மை அமீர் அவர் கள் பாதுஷாவின் சமுகத்தில் ஹாஜராயிருந்துகொண்டிருமென்று அனுப்பினார்களோ வேறெந்தவிதத்திலாவது அனுப்பினார்களோ யென்று தானே கேட்டேன் அதற்கு இவர் என்னே கேட்டார் ஓய் நீ என்ன என் னோடு சபானமாய் பேசுகின்றாயே யென்று உரைத்தார். ஜனபாகிய அமீர் அவர்களே இனி தாங்களே யோசித்து தீர்ப்புசெய்யுங்கள் தங்களுடைய கீர்த்தியினால் அல்லாஹுதாலா இம்மனிதனுக்கு கௌஷேரவாலி கொடுக்கப்பெற்ற கில்அத்து யென்னும் வெகுமதி

களை அணைத்திருக்கச் செய்திருப்பதினால் இவருக்கு கண் புகைத்து மங்கலாய் விட்டதுபோல் தலையின்னது கால் இன்னது யென்று தெரியாமல் தலையைக்காலென்றும், காலைத் தலையென்றும் மிகுந்த தலைகீழாய் நிற்பவரைப்போல பேசிவிட்டார். இன்னம் நெரோஷேரவான் கொடுத்த மூன்றுபெட்டி அஷ்ராபிகள் தன்னிடத்திலிருப்பதினாலும் இவர் இவ்விதம் மதிக்காமல்பேசினார். அல்லாஹுத்தஆலா கம்ஜாத்தானவனுக்கு வாழ்வையும் சொரிபிடித்தவனுக்கு நிகத்தையும் கொடுக்கக் கூடாதென்று முன்னோர்கள் சொன்ன பழமொழி வீணல்ல சொரிபிடித்தவன் விரல்களில் நிகம் வளர்திருந்தால் சொரிந்து சொரிந்து சதைகளெல்லாம் பெயரும்படி சண்டிவிடுவான் கம்ஜாத்திற்கு வாழ்வுவந்தால் தான் தன்னுடைய புழைய அற்ப புத்தியைவிட்டு நீங்கமாட்டான். பெருமை அதிகரித்துவிடும் அற்பருக்கு பலிசுவரில் அர்த்தராத்திரியிலும் குடைபிடிப்பாரென்ற பழமொழிக்கிணங்க இருக்கின்றது யென்றுரைத்தார். இவ்வார்த்தையை கேட்டிருந்த அமீர் அவர்கள் மப்பூலி நோக்கி மப்பூலே ஞாயந்தான் இவ்வழக்கில் குற்றம் உம்மீதுதான் இருக்கின்றது நீர் தான் உம்ருவை வலிய சண்டைக் கழைத்திருக்கின்றீர் ஆகையால் நீங்களிருவரும் ஒன்றுக்கொன்று இவ்வித சச்சரவு செய்துக்கொண்டிருப்பது நீதியாய்க் காணப்படவில்லை. ஆகையால்நீங்களிருவரும் இப்பொழுதே சமாதானமாகி ஒற்றுமைப்பட்டு விடுங்கள் என்றுரைத்தார் உடனே மப்பூல் ராஜியாகி விடுவதற்கு சம்மதித்து தயாராய் நின்றார் உம்ருவானவர் ராஜியாகசம்மதிக்காமல் அமீரைநோக்கி அமீரே யான் ஏழைப்பட்டவன் மப்பூலோ ஐஸ்வரியவந்தனும் நகை கட்டு காசுபணம் உடமைப்பண்டி உடுபுடவை முதலியவைகளாலும் நிறைந்திருக்கின்றபடியாலும் இன்னம் ருத்பா வென்னும் பெரியதனத்திலும் மிகவும் ஜலா துடையவராய் இருக்கின்றார் சொற்ப மனிதனுடைய ஐயாரென்னும் தொழிலையுடையயானும் அவரும் சடாகுவோமா? யென்றுரைத்தார். இவைகளை கேட்டு நின்ற மப்பூல் ஏது இவ்விரு ராஜிக் கிணங்கமாட்டார்போல் தெரிகின்றது, யென்று யோசித்து ஒரு பெட்டி அஷ்ரபிகளை உம்ருக்கு கொடுத்து சகோதரரே இதோ இதை பெற்றுக்கொண்டு என்னுடைய குற்றங்களை மன்னித்துவிடும் இனி கோபம் வேண்டாமென்று சொன்னார். உம்ருவுக்கு முன்னமே பொருளாசையென்பது,இல்லரையாய் அறவே இல்லையென்று யாவருக்குந் தெரிந்தவிஷயந்தானே உடனே மப்பூல்கொடுத்த பெட்டியை இரண்டு காங்களையும் எந்தி மகிழ்ச்சியோடு வாங்கி வைத்துக்கொண்டு சமாதானமாகிவிட்டார். மறுநாளுதயத்தில் காஜா புஜுர்க் உமீது அவர்கள் பாதுஷாவினிடத்தில் சென்று தாங்கள் இவ்விடம்விட்டுச் சென்றது மூதல் அமீர் அவர்களைக்கண்டு பின்னும் மதாயின் தேசத்தில் யாவரும்வந்து சேர்ந்தது வரையில் விபரமாயுரைத்தார். அதைக்கேட்ட பாதுஷா அதிக சந்தோஷமுற்று மகிழ்ச்சியாய் மறுநாள் காஜாபுஜுருச்மெஹர் முதலாகியமந்திரி பிரதானிகள் யாவருடனும் அமீர் அவர்களுடைய முலாகத்தென்னும் சந்திப்புக்காக போகவெண்ணமுற்றவர்களாய் இருந்தார்கள் அச்சமயத்தில் பஃதக்கென்னும் இருஜாதிக் குட்டியானது ஸாஸானிக்கினாஞர்களை வரவழைத்து இவர்களுக்கு சொல்லிக்கொடுத்து பாதுஷா நாளை ஹம்ஜாவை எதிர்சென்று முழைப்பதற்காக புறப்பட ஆயத்தமாயிருக்கின்றார். நீங்கள் யாவரும் பாதுஷாவினிடம் சென்று இம்தென்ன எங்குமில்லாத வளமையாய்இருக்கின்றதே தாங்கள் ஹப்தக்லீம் பாதுஷாவாயிருக்க ஒரு சொற்பமனிதனுடைய சிப்பாய் அதிலும் ஜாதிபேதகமுடைய மனிதன் தங்களுக்கும் அவனுக்கும் வானம் பூமியுடைய ஏற்றத்தாழ்ச்சி இருக்கின்றது தாங்கள்போய் அச்சொற்ப மனிதனை எதிர்சென்று முழைப்பதென்றால் என்னவிதியென்று சொல்லுகின்றது, இதுவும்தகுமா ஹப்தக்லீம் ஆகிய தாங்கள் எதிர்சென்று ஒருவேலைக்காரஉத்தியோகஸ்தனை அழைத்து வருவதென்றால் உலகம் நகைக்காதா? யென்று பாதுஷாவை செல்லாமல் தடுத்துவிடுங்கள் யென்று நைத்தான் இச்செய்திகளை யெல்லாம் அக்கூட்டத்தின்கூட இருந்த புஜுருச் மெஹரானவர் அஸ்ஸாஸானிக்கினாஞர்களை நோக்கி, ஓ! பில்வான்களே நீங்கள் பஃதக்குடைய வார்த்தைக்கிணங்கி பாதுஷாவினிடத்தில் அச்செய்திகளைச் சொல்லி தடைக்காதீர்கள் அப்படி என் சொல்லிலீறி நடப்பீர்களாகில் உங்கள்மீது பாதுஷாகோபமாகி உங்களை தண்டனைக்குள் ளாக்குவார். ஆனாலென்னவில் ஹம்ஜாவானவர் பாதுஷாவினுடைய தத்துப்புத்திரனுகவும் இன்னும் இழந்துபோன தேளலத்தை திரும்பதிருப்பிக் கொடுத்தவராயும் இருக்கின்றார். இதுவுமல்லாமல் உங்களனைவரையும் புஸ்பின்வாயில் நின்று மீட்டு தப்பிப்பிழைக்க வைத்ததுபோல் அந்த பொல்லாத ரூஸ்ஸாம்பின் அலக்மாகை பரியென்பவனுடைய சிறையில் நின்றும் மீட்டு உங்களனைவருக்கும் கில்அத்தென்னும் அநேக வெகுமதிகளளித்து மீட்டு விட்டவருமாய் இருக்கின்றார். ஆகையால் நீங்கள் யாருடைய வார்த்தை

யையும் கேட்டுக்கொண்டு பாதஷாவினிடத்தில் போய் அமீர் அவர்களை அழைப்பதற்காக தாங்கள் போவது சரியல்லவென்று சொல்லாதீர்கள். அப்படிச் சொல்லிடில் கபர்தார் வருவதை அனுபவித்து நீருவீர்கள் என்றுரைத்து. இன்னும் சொல்லுகிறார் நீங்கள் பாதஷாவினிடத்தில் ஒன்றுந்தெரியாதவர்களைப்போல் சும்மாயிருந்துவிடுங்கள்என்றசொன்னர். இவ்வார்த்தையைக்கேட்டகூட்டத்தார்கள் பெருத்த ஆர்பாட்டத்துடனே பாதஷா அவர்கள் அமீரை அழைக்கப்போவதை தடுக்கும் விஷயத்தில் இடுப்புக்கட்டிநின்ற ஜனங்கள் யாவரும் வாயைமூடிக்கொண்டு அவரவர் பேசாமல் போய்விட்டார்கள் பின்பு பாதஷா நௌஷேரவான் தான்கு யானைகள் கட்டிய ரதத்தின் மீதுஏறி மந்திரிபிரதானியர்களும் மற்றுமுண்டான அநேகபௌஜுகளுடனும் புடைசூழ புறப்பட்டு அமீர் அவர்களை எதிர்சென்றழைப்பதற்காக நடந்தார்கள் அப்பொழுது அப்பட்டணத்திலுள்ள பெருத்த பெருத்த சீமான்களும் உத்தியோகஸ்தர்களும் வங்கிஷத்தால் மேலான பெரியோர்களும் கூட்டங்கூட்டமாய்ச் சென்றார்கள், இவ்விதமாய் இரண்டு கோஸ்தூரம் நடக்கையில், எதிரில் சேனையின் காலடி தூளானது இளம்பி சூரியனை மேகம்போல் மறைக்கும் படியாய்க் காணப்பட்டது. அக்நேரத்தில் காற்று வேகமாய்வீசி அடித்தபடியால் அத்தூசிகள் ஒதுங்கி, முப்பது வெற்றிக்கொடிகளும், முப்பதினாயிரம் ரணசூரர்களாகிய பௌஜுகளுமாய் வருகின்றது நௌஷேரவானுக்குத் தெரியவந்தது. இப்படைக்கடலின் நடுவில் பாம்பின் உருவமாய் அமைக்கப்பெற்ற கொடியானது உலாவிப்படக்கவும் அக்கொடியின் நிழலின்கீழ் கோடிசூரிய ஹுதயமானதுபோல் அமீர் அவர்கள் ஸியாகீத்தாஸ் என்னும் தங்கள் மாயாபுரியின் மேல் சவாரானவர்களாய் காணப்பட்டார்கள். இன்னம் அமீர் அவர்களின் படைக்கூட்டத்தின் நடுவில் சந்திரனைசூழ்ந்த நக்ஷத்திரகூட்டங்களைப்போல் பெருத்த பெருத்த சரீரத்தையுடைய மஹாவலுப்பமான அநேக இராஜாக்களும் வருவதாய்க் காணப்பட்டது. இவ்விதமாய் ஏக ஆடம்பரத்துடனேவரும் கூட்டத்தின் முன்விசையில் சர்தாராக கஞ்சர் குஜார்காஜா உம்ரு ஐயார் ஆனவர் சந்திரனைப்போல்ஒளிவிலக்கும் இரத்தினஜிக. ளமைத்த பொற்தாஜை சிரசிலணிந்தவராய் தங்கச்சரிகை நிறைய இழைத்த மஹத்தாபென்னும் பிபாலுகளை தேகத்தின்கண் தரித்து பார்ப்பவர்கள் கண்கள் சூரியனைப்பார்க்கும் விழிகளுக்கொப்பாய் கூசி மூடிக்கொள்ளும் விதமாய் ஒளிப்பிரகாசம்தின்ன ஒன்பதுவகை இரத்தினங்களீர் இழைத்த பிடியமைந்த நீம்ச்சா வென்னும் வாளாயுதத்தை கரத்தி லுருவிப்பிடித்தவராய் அநேக விலையுயர்ந்த இரத்தினங்களை அணிவினோதவிசித்திரமாய் வரிசைக்கிரமமாய் அமைத்திலங்கும் கைப்பிடியினையுடைய ஜம்தாடு இடையில் சொருகியவராயும் மின்னலைப்போல் பிரகாசிக்கும்பொருந்திய வில்லை வலதுதோளிலும் அம்புறத்தூணி இடதுதோளிலும் மாயாவினோத உருவுசருக்கு தோளிலும் மனிதனே எறிந்து மீனைப்போல் அதிசருக்கில் வாரி கருட்டி இழுத்துக்கொள்ளும் தந்திரவலை இடதுபக்கத்திலும் அமைந்தவராய் ஆறுவித சப்தத்துடனே பனிரெண்டு ஸ்தானங்களில் அடிப்போட்டுபாவலாய்ச் செய்தவராய் இருபத்துநாலுவிதமாய் மாயாஜால வித்தைகளைச் செய்தவராயும் இருபத்தெட்டு மூலிகளையும் விடாமல் கட்டி சுற்றி பம்பரம்போல் சுழன்று நிர்த்து வருபவருமாய் அவரைச்சூழ தன்னுடைய ஷாகிர்துகளை அழைத்துக்கொண்டு வருவதையும் பாதஷாமுதலாகியவர்கள் கண்டார்கள். இன்னம் அமீர் அவர்களின் பௌஜுகளும் வரும் அலங்காரத்தை பார்த்த பாதஷா முதலாகிய யாவரும் இஃது மனிதக்கூட்டங்தானே அல்லது வானலோகத்தின் மலாயிகத்துகளென்னும் அல்லாஹுத்த ஆலாவினுடைய தூதக்கூட்டங்கள் தானே குதாத்தென்னும் புதுமையாயிருக்கின்றதே என்று மயங்கி நியங்கும் வாறுவந்து வந்தார்கள். அவ்வேளையில் இரண்டு கூட்டங்களும் சமீபத்தில் லபித்தபொழுது பாதஷா அமீர் அவர்களை பார்த்தான். அவர் பதினேந்து, பதினாறு வயதையுடைய இளம் வாலிபனையும், அல்லாஹுத்த ஆலாவினுடைய குதரத்திலைகிய தேஜஸென்னும் பிரகாசமானது முகத்தில் இலங்க சூரியனைனது அமீர் அவர்களின் முகத்தின் அழகு பிரகாசத்தைகண்டு வெட்கி நாணமடைந்து பூமிச்சூரியனுகிய அமீர் அவர்களின் முகத்திற்கு முன் யாம் சென்றால் பார்ப்பவர்கள் நம்மை இகழ்ந்து பரிகாசிப்பார்களென நினைத்து, இருளடர்ந்த கருமேகத்திற்குள் ஒடி.யொளித்துக் கொள்ளும் பாவனையான முகத்தோடும் தாக்கத்து கூவத்து சுஜாஅத் ஆகியமேலான குணங்கள் நிரைந்து லிபாகீத்தாஸ்என்னும் மாயாப்புரியின்மேல் சவாரனவர்களாய் கண்டு மனதில் நினைக்கின்றன். அல்லாசுபுஹானஹுவத்தஆலா இந்த துனியாவில் இவ்விதபதினேட்டு இலக்ஷணங்களையும் பூரணமாய்பெற்றமனிதனை இதுவரையிலும் படைத்திருக்கமாட்டான் நாம் காணவுமில்லை கேட்டதுமில்லை இன்னம் இவ்விதகமாலென்னும்

சூரர்களாயிருந்தவராயும், தயாளம், தயவு, தாக்ஷண்ணியம், சகை, கம்பிக்கை முதலாகிய சர்க்குணங்களே முழுதும்நிறைந்த ஓர் மனிதரே இந்தவனியாவில் அல்லாஹுத்தஆலா இந்த அமீரையேயோழியவேறே படைக்கவில்லை, என்று, பலவிதமாய் பெண்ணி யெண்ணி அமீர் அவர்களே பார்த்தகண் இமைகொட்டாமல் ஒரேபார்வையாய் ரதத்தை நடத்திச்சென்றான். அவ்வேளையில் பாதுஷாவின் கூடச் சேர்ந்த பாவரும் பாதுஷாவைப்போலவே அந்த குர்ஷீதே ஜாஹோ ஜலாலே ன்னும் அற்புத அழகுநிறைந்த அமீர் அவர்களின் முகாரவிந்தத்தை இமைகொட்டாமல் கூர்மையான முழுப்பார்வையாய் நோக்கிச் சென்றார்கள். பாதுஷாவினுடைய கூட்டத்தோர்கள் முன் தாங்கள் நினைத்திருந்த தற்புகழ்ச்சியென்னும் பெண்ணங்களெல்லாம் அமீர் அவர்களே கண்டமாத்திரத்தில் பயந்து நடுங்கி, ஓடுங்கி, நாணி, அஞ்சி அவரவர்களே விட்டும் காணுமல் ஓடிவிட்டது, இன்னம் தன்னைப் போல் பலக்கிரசாலிகள் இல்லையென்று நினைத்தவர்களின் வீரங்களெல்லாம் மண்ணோடு மண்ணாகி மறைந்த இடந்தெரியாமல் போய் விட்டார்கள். அவ்வேளையில் அமீர் அவர்கள் பாதுஷாவினுடைய இரத்தை பார்த்தார். உடனேதாங்கள் ஏறியிருந்த பரியைவிட்டும் கீழே குதித்து அதிக தாழ்மையான மரியாதையோடும் பாதங்கள் பூமியிற் பட பாதுஷாவினுடைய மூலாகத்திற்காக நடந்து எதிர்சென்று பாதுஷாவையடுத்து பாதுஷா ஏறியிருக்கும் இரதத்தின் சிம்மாசனக் கால்களுக்கு முத்திகொடுத்தார். பின்பு, ஹஸ்ஸாமென்பவன் எடுத்தோடிய தக்த்து, தாஜ், முதலியவைகளே தங்கள் சிரசின்மேல் சுமந்தவர்களாய் கொண்டுவந்து பாதுஷாவின் சமுகத்தில்கொடுத்தார்கள்.

ருவியெழுதுகிறார்:—அமீர் அவர்கள் பாதுஷா நௌஷேரவானுடைய தக்த்து, தாஜ்களே தன் சிரசிற் சுமந்துகொண்டுபோய் கொடுத்தாரென்பதில் அதற்கு முற்காலத்தில் கேயே குஸ்ரு என்னும் பயில்வான் தூரான் என்னும் பாதுஷாவின் தக்த்தை கைப்பற்றிகொண்டு போனபொழுது ஜாலுடையமகன் ருஸ்துமென்பவர் கேயே குஸ்ரு வென்பவனே ஜெயித்து தக்த்தைத் திருப்பி அந்தபாதுஷாவுக்கு சிரசிற் சுமந்துகொண்டு முப்பது அடி தூலதூரம் பாதுஷாவினுடைய அதபுக்காக சென்றிருந்தார் ஆகையால் அமீர் அவர்கள் நௌஷேரவானுடைய அதபை பேணி காற்பதடிதூரம் தக்த்தை சுமந்துகொண்டுபோய் கொடுத்தார்கள் என்று வருகிறது.

அமீர் அவர்கள் தூறபே எடுக்க முடியாத நௌஷேரவானுடைய தக்த்தை அதிக இலேசாய் பூச்செண்டை கரத்தி லெடுப்பதைப்போல் எடுத்துக்கொண்டு நினைக்கின்றீர் யான் அந்த ருஸ்துமைக்காணப் பதின்மடங்கு அதிக கூவத்துடையவன் இவ்வுலகத்தில் தனக்கு மிஞ்சியவன் ஒருவரும் இடையாதென்று மதங்கொண்டு நெஞ்சை நிமிர்த்து, வீரம்படைத்து மொழியும் பயில்வான்களுக்கெல்லாம் யான்தலைமையாயிருக்கும் என்றெண்ணியவராய் தக்த்தை சிரசின்மேற்சுமந்து நடந்துசென்றார். அவ்வேளையில் அமீர் அவர்களது அதிகமரியாதை அதபுடனே தக்த்து தாஜுகளே சிரசிற் சுமந்துகொண்டு வருவதையறிந்து ஒருகாலுமில்லாத அதிக சக்தோஷத்தில் மூழ்கியவனைப் தன்னருகிலிருந்த பெரிய பெரிய உத்தியோகஸ்தர்களே யழைத்து ஓய் மந்திரிகளே வஜீர்களே, அமீர்களே, ஹக்கீம்களே, ஹாக்குமாக்களே! சிக்கிரம் செல்லுங்கள் யென்னுடைய ஹம்ஜா சிரசிற் சுமந்துவரும் தக்த்தை அதிசிக்கிரமாய் ஒடி சிரசை விட்டும் இறக்கி உங்கள் சிரசுகளில் சுமந்துகொள்ளுங்களென் றுரைத்து பாதுஷா! தாமேறியிருக்கும் சிவிகையை விட்டு இறங்கி அமீர் அவர்களின் சமுகத்தில் நடந்து அருகில் அடுத்து அவரை அதிக பிரியத்தோடும், ஒரே பார்வையாய்ப் பார்த்துக்கொண்டே கெருங்கினன் அவ்வேளையில் அமீர் அவர்களும் அதிகமரியாதை, அதபு, சங்கை, இஜ்ஜத்தோடும் பாதுஷாவின் சமுகத்தில் நெருங்கி மிக பணிவுதலோடு பாதுஷாவின் பாதங்களே தொட்டு முத்தியிட்டார்கள். ஆனதக்கண்ட நௌஷேரவான் அமீர் அவர்களே அதிகமாய் குனியவிடாமல் இரண்டுகைலா பக்கங்களையும் தன்னுடைய இரண்டு கரங்களினால் அணைத்து பிடித்து நிமிர்த்தி மிகமகிழ்ச்சியோடும் ஆனந்த முற்றவனைப் மார்போடுமார்பும் கழுத்தோடுகழுத்தும் கட்டியணைத்து, தீழுவினன் உடனே தன்னுடைய இரண்டு புத்திரர்களாகிய ஹர்முஷ் யென்பவனையும், பருமூஷ் யென்பவனையும் அழைத்து அமீர் அவர்களுடன் கட்டித்தழுவி, முலாகத்து செய்யும்படி எவியதோடு, மற்ற ஹக்கீர் வஜீர் முதலாகியவர்களையும் ஹம்ஜா அவர்களிடத்தில் முலாகத்து செய்யும்படி எவினன். பின்பு, அமீர் அவர்களே நோக்கி ஒவ்வொரு உத்தியோகஸ்தர் தலைமைக்காரர் முதலாகியவர்களையும் இன்னார் இன்னார் இன்னின்ன உத்தியோகஸ்தர்கள் இன்னின்ன வங்கிஷத்திலுள்ள பெரியோர்கள் என்று விபரம் விபரமாய் அமீர் அவர்களின் மனதில் நன்றாய் பதியும்படி பாதுஷாவே உரைத்து காண்பித்தான்.

அமீர் அவர்கள் மதாயின் பட்டணத்தின் கோட்டைக்குள் செல்வதும் தர்பாரில் சென்று குஸ்துமுடைய ஆசனத்தில் உட்காருவதும் குஸ்துமுக்கு மேலானகீர்த்தி பெறுவ தையும் பேசுகிற பாபாயிருக்கும்.

பதினான்கு சீர்க்கழி நெடிலடி லாசிரிய விருத்தம்

அண்ட ரண்டங்கள்கு ழெண்டிசைக் கதிபனுய்
அவனியை படைத்த நாதன்
அல்லாவி னுதவியைக் கொண்டுயா னித்தநி
ஆலீம்க ளாற் புகலரும்
மண்டலத் ததிபர்களை வென்று இஸ்லாமெனும்
மார்க்கத்தி னிற் பொருத்தி
மகிழதாய் தினமே நிறுத்திய ஹம்ஜாமகிபர்
மதாயின் தேசத்தை யணுகி
விண்டல மெலாம்புகழ் குஸ்த்தும் தகத்தினில்
வீற்றிருந் தினமை யாக
வீரப் ரகாசமாய் விருதோ டிருந்திடும்
விஜய ஜெய நிரத்தை யான்
கண்டிலே னென்றிடினும் ஹக்கனின் கிருபையால்
காசினி யோ ரறிவதற்கு
கருதிய செந்தமிழ் பாவலர் மகிழ்ந்திட
கழறுவேன் புலியுளோரே.

சண்டமாருதத்திற் கொப்பாகிய தொனியையுடைய பிரசங்க வல்லமையை அரும்பொருட் காரணிபாய் சரித்திரத்தை கோர்த்து தொகுக்கும் மதனவாக்கினியுடைய ரூலிகளும் காத்திபுகளும் எழுதுகிறார்கள். அமீர் முதலாகிய யாவரும் கௌஷோவாஜுடன் சந்தோஷமாயிருந்து மறுநாளுதயத்தில் யாவரும் தர்பாரில் ஹாஜராஞர்கள். அப்பொழுது காஜாபுஜுருச் மெஹரானவர் உம்ரு ஐயார் கஞ்ஜர் குஜார் அவர்களை அழைத்துச் சென்று பாதஷாவினிடத்தில் முலாகத்து செய்துவைத்து உம்ருவுடைய சாமர்த்தியப், வல்லமை, முதலாகிய தாரீப்களை பாதஷாவுக்கு சொல்லி காண்பித்து பாதஷா சந்தோஷப்படும்படியாய் உரைத்தார். இன்னம் உம்ரை யாருடைய ஜோஸ்ய

சென்னும் வேலைத்திறத்தின் பிரமையை யெல்லாம் படிப்படியாய் சொல்லிக்காண்பித்தார். அவ்வேளையில் பாதஷா உம்ரு ஐயார்மீது அதிக கிருபையுடையவனுய் சந்தோஷமுற்று, தக்தில் இருந்த படியே தன்னிரண்டு கால்களையும் உம்ரு முத்தியிட்டுக் கொள்ளட்டு மென்று மீட்டி காய்களை முட்டிக்காலின்மீது வைத்துக்கொண்டிருந்தான். அதையறிந்த உம்ரு ஆனவர் பாதஷாவினுடைய பாதங்களை தொட்டு முத்தியிட்டு கறங்களை கண்களில்வைத்து முத்தி முகந்தார். அப்படி முத்தியிடும் வேளையில் பாதுஷா ஞஞ்சிற்றும் அறியாத விதமாய் அவின் கைவிரலிலிருந்த விலைமதிக்க ஒவ்வாத மோதிரத்தை வெகுதந்திரமாய் கழட்டி பெடுத்துக்கொண்டு மற்ற உத்தியோகஸ்தர்கள் யாவரிடத்திலும் முலாக்கத் தென்னும சந்திப்புசெய்தார். அப்படி முலாக்கத்து செய்துவரும்வேளையில் காஜா குராஜுத்தீன் பஹத்தக் பென்பவனிடத்தில் சந்திக்கும் முரைவந்தெய்தி அவனை கட்டியணைப்பதுபோல் அவனுடைய ஜேபியில் பாதஷாவினுடைய மோதிரத்தை அவனும் அறியாதவண்ணமாய்ப் போட்டுவிட்டார்.

பின்பு, பாதஷா முதலாகிய யாவரும் அவரவர்கள் வாகனங்களிலேறி மெதுவான நடைபோடி மதாயின்பட்டணத்தின் கோட்டைக்குள் வருவதற்காக நடந்துவந்தார்கள். அவ்வேளையில் உம்ரு வானவர் தம்முடைய ஷாக்கிர்தகளாகிய ஐயார்களை சூழ பாதஷாவுக்கு முன்பில் துள்ளிப்பாய்ந்து வேடிக்கை விநோதமாய்ச் சென்றார். அந்தக்கண்ட கௌஷோவாஜுடைய ஐயார் மேத்தர் ஆத்தஷ் யென்பவன் மனம் நொந்து ஆத்திரமுற்றவனுய் உரத்த சப்தத்துடனே ஏ! நிறவனே நீயப்பொழுதுவந்தவன் இதற்குள் இவ்வளவுபெருத்த ஆடம்பரங்களை பண்டுபட்டவரைப்போல் நடந்தக்காண்பிக்கின்றாய் இந்த இடமானது உன்னுடைய ஆட்டங்கள் பலிக்கும் ஸ்தானமல்ல என் சமுகத்தில் நீவ்வளவும் தகுதியுடையபயனல்ல உன்னுடைய அந்தஸ்திற்குத்தக்கபடி நேடந்துகொள் தெடுங்கால்வைத்து சருங்கிழே விழாதே உன் ஆட்டத்தை இக்குகாண்பிக்காதே என்று பாதுஷாவினுடைய தர்பாரில் நீவோத்தகுதியுடையவனல்ல இரும்படிக்கும்ஸ்தானத்தில் காய்க்குவேலிகிடையாதல்லவா? ஆகையால் என்னுடைய சுல்தான் அவர்கள் முன்பில் உனக்கென்ன வேலையிருக்கின்றதென் நிவ் விதமாகிய கோரவார்த்தைகளை உரைத்தான். அவைகளை செவியுற்ற உம்ரு ஐயார் சொல்லத்தடங்கினர். ஏ! நிழவா! முதலாவது நீவயோ

திபனவன், யாரே இளம்பட்டாவான வாலிபன் இரண்டாவதி
நீ ! ஒருவனுயிருந்தாய், இப்பொழுதே யான் உனக்கு சமானமாகிய
ஜோர் வந்துவிட்டேன். உலகத்தில் சுலோகம் சொல்வதை அறிய
இல்லேயா ? தண்ணீரில்லாதவரையில் தயம்செய்துக்கொள். தண்
ணீர் அகப்பட்டவுடனே தாகத்தை தீர்த்துக்கொள் என்பதை நீர்
இவ்வளவு வயதாகியும் அறியவில்லேயா ? என்முன்னுல் உன்னுடைய
ஜம்பத்தைக்காட்டித் திரியாதே. நீயோவயதுசென்று குழியிற்காலே
நீட்டிக்கொண்டிருக்கப்பட்டவன் இக்காலத்தில் பாதுஷாவின் சமு
கத்தில் ஏதாவது பிச்சைபோல் பின்ஷன்வாங்கிக்கொண்டு மூலையில்
ஒதுக்கித்தள்ளிய குப்பையைப்போல் கிடக்காமல் இவ்விடத்தில்
அடிபட்டநாயைப்போல் குலைக்கின்றாய், சீ! உன்வேலையைப்பார் என்
றுரைத்தார். இவ்விதகோரவார்த்தைகளே செவியில்கேட்ட
மேத்தர் ஆத்தஷ் யென்பவன் கெருப்பைப்போல ஆத்திரம் பொங்கி
யவனுய் உம்ருவைநோக்கி பலவித துர்வசனங்களேமொழிய ஆரம்பித்
தான். இவ்விருவரும் இவ்விதவாய்ச் சண்டைசெய்துக்கொள்வதை
அமீர் அவர்களும், பாதுஷாவும் கண்ணுற்றபோழுது பாதுஷா கீழ
ஜாரை நோக்கி, ஹே ! மேத்தர் ஆத்தஷே என்ன இவ்விடத்தில்
சச்சரவுசெய்து சப்தமிடுகின்றீர்கள் யென்றுரைத்தான். அப்பொ
ழுது மேத்தர் ஆத்தஷ் யென்பவன் பாதுஷாவைநோக்கி சொல்லுகி
றன். எனதிரையே தங்களுடைய உப்பளசாதனின்று பிழைப்பவ
னுகிய தங்கள் ஊழியனவன் இந்த மதாயின்பட்டணத்தில் வசிக்
காகின்ற கோடானகோடி ஜயார்களுக்கெல்லாம் சிரசாகிய கீர்த்தி
வாய்ந்த தங்கள்சமூகத்தின் ஜயார் யாரிருக்க நேற்றுப்பிறந்த ஜயார்
குட்டியானவன் ஹாஜர் அவர்களின் முன்பில் என்னே நடக்கவிட்டா
மல் தள்ளித்திரிந்து தடுக்கின்றனென்றுரைத்தான். இவ்வார்த்தை
யைக்கேட்ட நௌஷேரவான் உம்ருவைநோக்கிசொல்லுகின்றான் உம்
ரே நீரென்னசொல்லுகின்றீர் உரையும் உப்பிடத்தில் சமாலென்னும்
வேலைத்திரம்இருக்கிறதென்று நீர்அதிகஅகங்காரம்கொண்டு திரிகின்
றீரோ யென்றுகேட்டான். அவ்வார்த்தையைகேட்ட உம்ருவானவர்
பாதுஷாவை நோக்கி ஆலமென்னும் உலகத்திற்கு கிப்லாவென்னும்
மூலஸ்தானமாகிய ஜஹாப்பானுவே ! கேளுங்கள் ஜயாரி யென்று
சொல்லப்படும் வேலைத்திறமானது வாயினுல்முடியும் காரியமல்ல.
முக்கியமாய் அவ்வேலையானது சாமர்த்தியத்தோடு செய்துகாண்பிக்
கும் வேலைத்திறமாயிருக்கும் இவ்வேலையில் மிகவும் சாமர்த்தியமும்,

தூரதரிசனமும் முக்கியமாவேண்டும். இப்பொழுது, இந்த ஆத்தஷ்
யென்பவருக்கு என்னேபரீக்ஷிக்க இஷ்டமானுல் இந்த மைதானமே
தகுதியாயிருக்கிறது. தாமதிக்கவேண்டாம். சீக்கிரம் வேலையைநடத்த
த உத்திரவுகொடுங்கள் யென்றுரைத்தார். அதைக்கேட்ட பாதுஷா
உம்ருவைநோக்கி, உம்ரே நீர் இப்போது சொன்னவார்த்தை மிகவும்
உத்தமம். அது நம்மனதிற்கு நன்றுயிருக்கின்றது. இவ்விடமிருந்து
கோட்டையின் வாசற்படி இரண்டமைல் தூரமாயிருக்கின்றது. நீங்
களிருவரும் ஆளுக்கோர் அம்பைபெடுத்துக்கொண்டு ஓடி உங்களிரு
வரில் யாரொருவன் அவ்வாசற்படியில் நிற்கும் காவற்காரனிடத்தில்
அம்பைகொடுத்துவிட்டு முந்தி வருகின்றானே அவனே சரியான
ஜயாராகும் யென்றுரைத்தான். உடனே அவ்விருவரும் தலைக்கோரம்
பை வாங்கிக்கொண்டு ஓட ஆரம்பித்தார்கள். எவ்விதமெனில் வில்
லில்வைத்து நாணேற்றிய அம்பின்வேகம்போல் ஓடினர்கள். சிலதூ
ரம்சென்றபின் உம்ருவானவர் ஓடமுடியாதவரைப்போல் தரித்து
ஓடாமல்நின்றுவிட்டார். ஆத்தஷ் யென்பவன் உம்ரைவிட ஒன்ப
தரைமைல் அதிகமாய் ஓடினன். அப்பொழுது, பொஜின்கன்
னிறைந்தகூட்டங்கள் யாவரும் உம்ரு ஓடமுடியாமல்நின்றுவிட்டதாய்
யென்னி சொல்லுகிறார்கள். அநியாயமாய் உம்ருவென்பவன் ஆத்
தஷினுடே பந்தயங்கட்டிநின்றுல்முடியாமல் தோற்றுநாணமடைந்து
போய்விட்டான். மேத்தர்ஆத்தஷ் உம்ரைவிட அதிகமாய் ஓடிஜெயித்
தக்கொண்டான் யென்று பலவிதம் நிந்தித்துக்கொண்டிருக்கும் வே
ளையில் மேத்தர் ஆத்தஷானவன் ஓடி கோட்டைவாசலை அடைந்த இன்
னும் நாறுஜெம் பாக்கியாயிருக்குவேளையில் உம்ருவானவர் தம்
முடைய காலேச்சுழட்டி வேகம்செய்தார் பாக்கியிருந்த நாறுகெஜத்
தில் ஆத்தஷென்பவன் பத்து கெஜம் ஓடுவதற்குமுன் உம்ருவானவர்
கோட்டைவாசலில்காவல்கார்த்துகிற்கும் தர்பானே அடுத்து அவ
னிடத்தில் அம்பைக்கொடுத்துவிட்டு திரும்பிவந்து ஆத்தஷென்பு
வினே இரண்டுதைகள் உதைத்தார். அவ்வுதையோடும் அவன் பூமி
யில்விழுந்து மண்டைஉதறி இரத்தம்ஓட தேகமுழுவதும் காயமாகி
இரத்தப்பிரவாகத்தில் மூழ்கிக்கிடந்தான். அவ்வேளையில் உம்ருவா
னவர் அவன் சிலிலைவிந்திருந்த கொப்பியைக் கழட்டிக்கொண்டு
பழையபடி தர்பானிடத்தில்சென்று அவனே நோக்கிசொல்லுகின்றார்.
ஏ! காவல்வீரனே நீயென்னை நன்றுய் அறிந்துகவனித்துக்கொள் என்
பெயர் உம்ருஜயாராயிருக்கும் என்னுடைய ஜயாரி வேலையானது உல

கமெல்லாம். ஊரூராய் பிரசித்திபெற்று, பெய்யரானவர்கள் குடியிருக்கும் வீட்டுகளுக்குள் அவர்கள் தழைந்து, கதவைச்சாத்திக்கொண்டு தூங்கிவிடச் செய்திருக்கும் இன்னும் பொய்சொல்லுபவர்களை நன்றாய் அறிந்துகொண்டேன். சபர்தார்! நீயொருவேளை ஆத்தஷேன்பவனிடத்தில் ஏதாவது லஞ்சம்வாங்கிக்கொண்டு பொய்வார்த்தைகளை சொல்லப் போகின்றாய். ஜாக்ரதை அப்படி ஏதாவது ஓர் அசுத்தமாவது பொய்சொல்ல இக்காரணங்களில் கேட்பேனுகில் உன்னை இவ்வூரிலும் கலெக்காட்டாமல் இருக்கமாட்டேன். சபர்தார்! சபர்தார் பாதுஷாவந்துகேட்டால் உள்ளதுஉள்ளபடிசொல்லவேண்டும் என்றுரைத்தார். இவ்வார்த்தைகளைக்கேட்ட தர்பானுனவன் காமரைக்காய் வெடிக்கும்படியான அச்சத்துடனேபயந்து ஆண்டவனே இஃதென்ன பலசியாயிருக்கின்றது என்று நினைத்து அப்படியே தங்களுத்திரவின்படியே சொல்லுகின்றேனென்று மறைத்தான். பின்பு, உம்ருவானவர் அவிடத்தைவிட்டும் திருப்பி ஓடி பாதுஷாவினிடத்தில் அடுத்து பாதுஷாவினுடைய ரிக்காபென்னும் அங்கு படியை முத்தியிட்டு மேற்தர் ஆத்தஷேன்பவனுடைய நீம்தாஜேன்னும் தொப்பியை யெடுத்து காண்பித்தார். பாதுஷாவானவன் உம்ரை யாருடைய சாலாக், சாதுரிய, முதலியவைகளை நினைந்து மிகமிக சிறித்தான்.

இஃதிவ்விதமிருக்க உதைபட்டு விழுந்து, இரத்தவெள்ளத்தில் புரண்டுகிடக்கும் ஆத்தஷேன்பவன் செத்தபிசாதத்தைப்போல் வெகு நேரம் கிடந்து, பின்பு உஷ்யாராகி மெள்ளவெழுந்து வெட்கத்தினுல் பாதுஷாவின் சமுகத்திற்செல்ல நாணமுற்றவனுய் அவ்விடம் செல்லாமல் தன்னுடைய சிரசை காத்தினை லழுத்திப்பிடித்தவனுய் வீடுபோய்ச் சேர்ந்தான். பின்பு, பாதுஷாவினுடைய சவாரியான தூ கோட்டைவாசலை அடுத்தபொழுது, பாதுஷாவானவன் அமீர் அவர்களின் பொஞ்சுகளை கோட்டைக்குவெளியில் தல்ஷாத்காமென்னும் ஸ்தானத்திலிறங்கும்படிஉத்திரவுசெய்தான். அதுபோல்ஸாஹு ஹேரான் அமீர்ஹம்ஜா அவர்கள் அந்தவிசாலம்பொருந்திய நல்ஷாத்காமென்னும் மைதானத்தில் இறங்கி டோரா அடிக்குப்படி உத்திரவுசெய்தார்கள். நோஷேரவான்சென்று தன்னுடைய அரண்மனையிற்போய்ச் சேர்ந்தான். அமீர் அவர்கள் இறங்கியிருக்கனேமித்த இடமானது சமுத்திரக்கரையோரமாயும் நல்லஸ்தானமாகவும், இருந்தது அப்பொழுது பொஞ்சுகளெல்லாம் அவரவர்களுக்கு வேண்டிய வேலைகளையெ

ல்லாம் சிரமப் முடித்துக்கொண்டு அவிடத்திலேயே தங்கியிருந்தார்கள். ஸாஹுபேகரான் அவர்கள் மாத்திரம் பாதுஷாவின் கூடவே அரண்மனைக்குச் சென்றிருந்தார்கள். அவ்வேளையில் தெருக்களெல்லாம் அலங்காரஞ் செய்யப்பட்டிருந்தது மூலைக்கு மூலைப் பந்தல்களும், மகுடதோரணங்களும், கமுகம்பாளை தென்னாய்குலை முதலியவைகளால் பந்தல்களை அலங்காரஞ்செய்யப்பட்டிருந்து அவ்வேளையில் ஸாஹுபேகரான் அவர்கள் சுற்றிலும்பார்த்தார்கள். பட்டணத்தின் ஜனங்களெல்லாம் ஏகோபித்து, கூட்டங்கூட்டமாய்வந்து நெருங்கி ஜனத்திரள் நிறைந்திருந்தது. அன்றையதினம், ஊர்முழுவதும் பெருத்ததிருநாளைப்போல்கொண்டாடியிருந்தார்கள். அமீர்அவர்கள் ஹஸ்ஸாமுடையசிறையில்நின்றும் மீட்டுகில்அத்துகள் கொடுத்தனுப்பிய ஜனங்களெல்லாம் அமீர் அவர்களைக்கண்டவுடனே வானத்தளவில் கையை உயர்த்தி யாஅல்லாஹு இந்த ஸாஹிபேகரான் அமீர் ஹம்ஜா அவர்களுடைபதீர்த்தியையும் வல்லமையையும்வெற்றியையும் சங்கையும், பெருமையையும் இன்னும்மென்மேலும் பெருகச்செய்தருள் ஆண்டவனே! அவருடைய ஹயாத்தை நீடித்துகொடுத்தருள் என்று ஏகோஷ்டமாய் துஆச் செய்தார்கள். பின்பு, பாதுஷா அமீர் அவர்களுடனும் மற்று மந்திரி பிரதானியர்சூழ, பார்காஜம்ஷீதென்னும் கொலுவினிடம்போய்ச்சேர்ந்தார்கள். அப்பொழுது அவ்விடத்தில் அதிக கீர்த்திபெயர்வாய்ந்த பெரிய பெரிய பயில்வான்களெல்லாம் வந்து கூடினர்கள். அதையறிந்த பாதுஷாவானவன் சொல்லுகின்றான். சங்கைபொருந்திய இஸ்லாம்மார்க்கத்தையுடையயாவரும் வலதுபக்கத்திலிருங்கள் மற்றவர்களெல்லாம் அவரவர்கள் இருக்கும் ஸ்தானங்களில்இருங்களென்றுரைத்தான். யாவரும் இருந்தபின் உம்ருவானவர் ஓர்காற்காலின்மீது உட்கார்ந்துதன்மீசையை முறுக்கிக்கொண்டிருந்தார். அவ்வேளையில் பாதுஷாவானவன் ஸாஹிப்கரானேநோக்கி சொலலுகின்றான். அயே அபுல்உலா இதை தங்கள் சொந்த வீடாகபாவித்து தங்களுக்கு இஷ்டமான இடத்தில் உட்காருங்களென்றுரைத்தான். அப்போது, அமீர் அவர்கள் தன்மனதில் நினைக்கின்றார். நாமிருக்கும் ஸ்தானமானது எப்படியிருக்கவேணுமானால் இச்சபையின்கண் ஆஜராயிருக்கப்பட்டவர்களின் ஆசனத்திற்கெல்லாம்மேலானதாயும் அவ்வாசனத்தில் ஒருவரும் உட்காராததாகவும் நாம் இருந்தபின் அதைவிட்டு யாதொருகாரணத்திற்காகவும் நம்மிஷ்டப்பட்டே யல்லாமல் எழுந்திருக்காததாயும் உடைய

ஸ்தானத்தில் இருக்கவேண்டுமென்று எண்ணியவராய் பாதுஷாவி னுடைய சிம்மாசனத்தின் பக்கத்தில் அதற்கு சமானமாய் அமைத் திருக்கும் தக்த்தேகுஸ்தும் யென்னும் சிம்மாசனத்தில் வீற்றிருந்தார். அமீர் அவர்கள் அச்சிம்மாசனத்தில் உட்கார்ந்தினேக்கு அடிபெயர்த்து வைக்க நாடுந்தருணத்தில் சாஸானி ஜாதியார்களின் மனங்களில் கூர் மைபொருந்திய நஞ்சேற்றிய ஆயிரம் அம்புகள் தைத்ததுபோலிருந் தது அப்பொழுது அவர்கள் தங்கள் தங்கள் மனங்களில் நினைத்துக் கொண்டது யென்னவென்றால் இன்றையதினத்தில் இவ்விஷயத் தில் யாதொரு வார்த்தைகளையும் மொழியக்கூடாது. நாளைமறுநா ளில் சமயம் வாய்த்தபொழுது யோசித்துக்கொள்ளலாம். அச்சம யத்தில் நாம்கேட்கும் சவாலுக்கு இந்த ஹம்ஜா என்னசொல்லுகிறார் பார்ப்போமென்று நினைத்திருந்தார்கள். அச்சமயத்தில் பாதுஷாவா னவன் பொற்றபக்குகளில் நிறைய பசும்பொன்னினுற்செய்து வரித் திரவேலியமைந்த தங்கநாணயங்களை அமீர் அவர்களுடைய சிரசைச் சுற்றி ஷத்காவாக வாரிவாரி அங்குமிங்குமாய் எங்கும் இறைத்தான். அச்சமயத்தில் ஸாஹிபேகரான் அவர்களும் தாங்கள் கொண்டுவந் திருந்த அநேகவிதவிலையுயர்ந்த பற்பலசாமான்களையும் எடுத்தெடுத் து பாதுஷாவின் முன்பில்வைத்தார்கள். அவ்வேளையில் அமரவாசை இருளையொத்து நீண்டுவளர்ந்த கூந்தலில் அங்கிருந்தால் நெனும்மின் னலையொத்த பளபளப்புடையீ பிரகாசம்வீசுலிக்கும்படியாகிய கூர் மைபொருந்திய இளம்பிறையையொத்த நெற்றிகளில் மன்மதனு டைய வில்லைத்தொங்கவிட்டதுபோல் பொருந்திநிற்கும் புருவத்தி னையும், அவ்வில்லில்வைத்தெய்யும் அம்புக்குபதிலாய் வேலைதொடுத் தபாவனையாயுடைய கண்களையும் அழகில் பரிகளுக்கு ஒப்பாய் நடக் கும் இளம்வாலிபப்பெண்களை பாதுஷாவானவன்மீதாக்கி அதிமதூரம் பொருந்திய குடிப்பினங்களாகிய ஷர்பத்து வகைகளைக்கொண்டுவரும் படி இஷாராசெய்தீன். அதுபோல் அம்மடந்தையர்கள் பொற்கிண் ணங்களில் பலவித ஷராப்பென்னும் குடிவகைகளை நிறைப்பி மிருது வாகிய கரங்களில் ஏந்தி மானைப்போல் விழிகள்சுழல மயிலைப்போல் அடிகள் பெயர்த்து அன்னத்தைப்போல் நடந்து ஷர்ப்பத்துகிண் ணங்களை பாதுஷாவின் சமுகத்தில் கொண்டுவந்து கொடுத்தார்கள். அதை பாதுஷாவாங்கி தாமும் இரண்டாவது அமீர் அவர்களும் அருந்தியபின் முறைபடியே சபையின்கண் ஆஜராயிருந்த யாவருக் கும் கொடுத்து முடிந்தபின் பலவித ராத்தினங்களிழைத்து தயாராக

கப்பட்ட பொற்பாத்திரங்களில் அநேகவித நிமத்துகளாகிய மே லான வஜீபனங்களை அழகில் குல்பாம்க்கு உவமைசொல்லக்கூடிய இளம்வாலிபர்கள் இரத்தினங்களை இழைத்த இடைக்கட்டுபட்டிகளை யணிந்தவர்களாய் பொற்பூஷணலங்காரத்துடனே கொண்டுவந்து பரத்தினர்கள். அப்பொழுது பாதுஷா அமீர் முதலாகிய யாவரும் புசித்து அதிகமகிழ்ச்சியோடிருந்தார்கள். அவ்வேளையில், பின்னும் விதவிதமான குடிப்பினங்களை ஒருவர்க்கொருவர் மாற்றி மாற்றி குடிக்க ஆரம்பித்தார்கள். ஆடல்பாடல் முதலாகிய விதவிதகேளிக் கைகள் நடந்தது அச்சமயத்தில் மிகவிலையுயர்ந்த சித்திரவேலை அமை த்துள்ள பளிங்குக் கிண்ணங்களில் ஷர்பத்து வகைகளை நிறப்பி அழ கிற் சிறந்த இளம்வாலிபர்கள் கரங்களிலேந்தி ஒப்பாரமாய்ச் சுற்றி சுற்றித் திரிந்து, ஒவ்வொருவருக்கும் கொடுத்துக் கொண்டுவந்தா ர்கள். அதை பாதுஷாவானவன் அடிக்கடி குடித்துக்கொண்டு வந்தபடியால் மயக்கம் தலைக்கேறி மஸ்த்தாகி உம்ரு ஐயாரைநோக்கி பாடும்படி உத்திரவு செய்தான் அதையறிந்த உம்ரு பாட ஆரம் பித்து, இரண்டுதார மமைந்த தமது கைவீணையை யெடுத்து சுதி மீட்டி தானே வென்னும் இராக ஆலாபரணம்செய்ய ஆரம்பித்து பாடினர். அப்பொழுது புள்ளினங்கள் முதல் விலங்கினங்கள் யாவும் இந்த தெதாழில்களாகிய இரை யெடுப்பதையும், இரைதேடு வதையும், உறங்குவதையும், அகல்வதையும் ஆடுவதையும பாடுவதை யும், பரப்பதையும், நடப்பதையும், நிறுத்திவிட்டு. உம்ரு அவர்கள் பாடும் இராகத்தின் இனிமையை செவிகொடுத்துகேட்க ஆரம்பித்தேன் னால் அச்சபையின்கண் ஆஜராயிருந்த சபையோர்கள் கதி எவ்விதமி ருக்கும். அவ்வேளையில் அவர்கள் யாவரும் தன்னைமறந்து மரம்போல சைவற்று உம்ருடைய பாடலின்மீது ஆவியைச்செலுத்தியிருந்தார் கள். ஸோரியென்னும்பாடகனும் உம்ருடையபாடலைக்கேட்டுகாண முறும்படியா யிருந்தது வரணலோகத்தின் மலக்குகளும் உம்ருடைய பாடலைகாதுகொடுத்துகேட்டார்கள் அவ்வேளையில்ஒவ்வொருவரின் வாய்தளினின்றும் தன்னையறியாமல் வாஹ்வா! மாஹ்வபா! மாஹ பா!! வென்று தலைசுழட்ட ஆரம்பித்தார்கள்: பாடலில் அதிவல்லமை பொருந்திய உலகப்பிரசித்திபெற்ற அரம்பாடிங் தன்னையையுடைய தான்ஸீன்யென்பவனுடைய கபருக்குள் கிடந்தமையத்தினுள் அவ னுடைய உயிரானது புகுந்து உம்ருடைய பாடலைகாமும் சற்றே கேட்போமாவென்று நினைந்ததாம்.

அவ்விதமாய் உம்ரு பாடுந்தருணத்தில் அதைக்கேட்டு சுன்தாக் யிருந்த பாதுஷாவானவன் சந்தோஷமுற்று தன்னுடையு கையிலிலி ருந்த மோதிரத்தைக்கழட்டி உம்ரு அவர்களுக்கு பரிசளிக்கநினைத்து மோதிரத்தைக்கழட்ட தன்விரலைநோக்கியபொழுது விரலில் அதை இல்லாதிருக்கக்கண்டு இஃதென்ன ஆச்சரியமாய் இருக்கின்றதென்று நினைந்து, அவிடத்தில் ஆஜராயிருப்பவர்களைநோக்கி என்னுடைய கரத்திலிருந்த மோதிரமானது ஆச்சரியமாய்மறைந்து மாய்கையாய் போயிருக்கின்றதே அதனையான் யாரிடத்தில் கொடுத்தேன்யென்று வினவினான். அவ்வேளையில் தூண்டிக்காரனுக்கு மிதப்பின்மீதகன் என்றபடி பாதுஷா யெப்பொழுது மோதிரத்தை தேடுவானென்று காத்திருந்த உம்ருவானவர் பாதுஷாவைநோக்கி ஹஜரத் ஜில்லே சுபுஹானி கலிபத்துல் றஹ்மானியாகிய பாதுஷாவே அம்மோதிரம் எங்கே போகும் இச்சபையின்கண் இங்கிருப்பவர்களைத் தவிர வேறொருவரும் வரவேயில்லை. ஆகையால், இங்கிருப்பவர்களிடந்தான் அம்மோதிரம் இருக்கவேண்டும். ஆகையால், கல்தானே ஆலம் பாதுஷாவினுடைய ஹுக்கும் யென்னும் உத்திரவானல் இவிடமிருக்கும் ஒவ்வொருவரையும் ஜட்டிபார்த்துவிடுகின்றேன். தங்களுடைய உதவியால் மோதிரத்தைக் கண்டுபிடித்து எடுத்துக்கொடுக்கின்றேன் யென்று ரைத்தார். இன்னும் அச்சபையில் உள்ளவர்களைநோக்கி ஓ! கனவான்களே நம்முடைய பாதுஷாவின்மோதிரத்தை யாராகிலும் எடுத்து வைத்திருப்பீர்களாகில் அதை திரும்பக்கொண்டுவந்து கொடுத்தால் கொடுப்பவர்களுக்கு தக்க இனம் பாதுஷாவின் சமுகத்திலிருந்து வாங்கி கொடுக்கிறேனென்று உரத்த சத்தமாய் கூவினதோடு இன்னும் சொல்லுகின்றார். ஜனங்களே, இப்பொழுதே வைத்திருப்பவர்கள் கொடுத்துவிடுங்கள் இல்லாதவரையில யான் ஜட்டிப்பார்த்து, மோதிரத்தைக் கண்டுபிடிப்பேனாகில் கொடுக் தல்பத்திற்குள்ளாகுவீர்கள் யென்றுமொழிந்து, அங்கு ஆஜராயிருக்கும் சபையோர்களின் சட்டைப்பைகளிலும், இடுப்புகளிலும், தலைப்பாகை கைக்குட்டை முதலாயிவைகளிலும் சோதனைசெய்ய ஆரம்பித்து தொட்டுத் தடவி நசுக்கி அமுக்கி உதறிப்பார்த்தார். அவ்வேளையில் ஒவ்வொருவரும் சொல்லத்தொடங்கினார்கள். கல்லவேளையாய் யான் தர்பாரை விட்டும் வெளியே செல்லாமலிருந்தேன். இல்லாதிருக்கில் என்மீது சந்தேகமுண்டாகுமென் றரைத்தார்கள்.

இவ்விதம், உம்ருவானவர் அநேகரை ஜட்டிபார்த்துவிட்டு பாதுஷாவைநோக்கி ஜஹாம்பனு! எனக்கு இந்த முஸ்லீமானவர்களின்மீது சந்தேகமில்லை. ஏனெனில், அவர்கள் மற்றவர்களைப்போல் ஈமானை இழந்தவர்களல்ல ஆகையால் அவர்களை யான் ஜட்டிசெய்தாலும் அவர்கள் என்மீது யாதும்குற்றம்பிடிக்கமாட்டார்கள் மற்றவர்களோ வெனில் மதவித்தியாசத்தினால் என்மீது யாவருக்கும் சந்தேகம்உண்டாகும்ஆகையால் வேறே யாரையாவது விடுத்து அவர்களை பரிசோதனை செய்யச்சொல்லுங்கள் யென்றுரைத்து மறுபடியும் உம்ருவானவர் சாத்மீகமான உத்தியோகஸ்தர்களல்லாத பெயர்களையெல்லாம் ஜட்டிபார்த்து விட்டிருந்தார் பெரிபெரிய உத்தியோகஸ்தர்களும் முஸ்லீம்களும் மீதியாயிருந்தார்கள். அப்பொழுது, உம்ருசொன்ன வார்த்தைகளைக்கேட்ட பாதுஷாவானவன் காஜாபுஜுருச்மெஹரை நோக்கி காஜாவே தங்களெழுந்து நமது ஹுக்குமாக்களையும் உம்ராக்களையும் அமீர் வஜீர் முதலியவர்களையும் ஜட்டிபாருங்களென் றுரைத்தான். உடனே, காஜா எழுந்து, பாதுஷாவினுத்திரவுபடியே ஒவ்வொருவரையும் உம்ருபார்த்ததுபோல் பார்த்துவந்தார். யாவரையும்பார்த்தாய்விட்டது கடைசியாய் பஃதக்கென்பவனை சோதிக்கும் முறைவந்தடுத்தது. அப்பொழுது, காஜா அவனருகிற்சென்று, தலைமிலிருந்து துடங்கிசோதித்துக்கொண்டேவந்தார். அவன் ஜேபில்கையைவிட்டு தடவும்பொழுது மோதிரம் புஜருச்மெஹரவர்களின் கரத்திலகப்பட்டது. உடனே அதையெடுத்து பாதுஷாவின்கரத்திலீந்தார். அப்பொழுதே மோதிரம்கன்ஜேபிலிருந்து யெடுக்கப்பட்டபடியால்பஃதக்கென் பவன் வெட்கத்தினால் சரீரம்குன்றி முகம்வெளுத்து, குறவிதலையை குனிந்து ஒன்றும்பேச நாவெழாதவனுப் எண்ணுதமெண்ணி இடிந்து, மங்கி இருந்தான். அவ்வேளையில உத்தியோகஸ்தர்கள் யெல்லாம் தங்கள்தங்கள் ஆட்காட்டி விரல்களைவாயில்வைத்து பல்லினால் கடித்தவர்களாய் பாதுஷாவையும், பஃதக்கையும், பார்த்துக் கொண்டே மரம்போ லசைவற்றிருந்தார்கள். அவ்வேளையில் உம்ருவானவர் பாதுஷாவைநோக்கி ஷாஹேஜஹான் யான் கேள்விப்பட்டிருக்கின்றேன். உலகத்தில் ஐயாரிவேலைசெய்பவன் திருடுவது வழக்கமென்று கேள்விப்பட்டிருக்கின்றேன் வஜீர்மார்கள் திருடுவார்களென்றுயான் கனவிலும் கண்டதுமில்லை. இன்றைபதினம் தங்கள் தர்பாரில்தான் பஃதக்யென்னும் மந்திரியானவர் மோதிரம்திருடியதை கண்ணினால் கண்டேன். இன்றுமுதல் மனசாக்ஷிக்குவிரோதமில்லாமல் கேட்ப

வர்களுக்கு மந்திரிகளும் பாதுஷாக்களிடம் திருடுவார்களென்றுசொல்வேனென்றுரைத்ததோடு இன்னும்சொல்லுகிறார். இருபதுமுப்பதுலக்ஷம்பொறும்படியான திருட்டாய்திருடினதும் மந்திரி உத்தியோகஸ்தருக்கு தகும். இக்கொஞ்சதூரமாகிய மோதிரத்தை இந்த பஸீதக்கென்றபடியால் ஆசித்துதிருடினார். இச்சொற்பசொத்தின்மீதும் இச்சைவைத்து திருடியதிருட்டுக்கும் மந்திரி உத்தியோகம் கிடைத்தவிட்டது இப்போர்ப்பட்ட ஹபீதக்கீம் கிஸ்வர்பாதுஷா அவர்களுடைய சமுகத்திலிருக்கும் இத்திருடனுடைய வீட்டிலும் அப்பாதுஷாவின்பொருட்டால் இதைவிட மேலானவகைகள் ஏராளமாயிருக்கக்கூடும் அப்படியிருந்தும் இம்மோதிரத்தை களவெடுத்தாரே இவருடைய அந்தஸ்து எவ்வளவிலிருக்கும் நினைக்கநினைக்க எனக்கு ஆச்சரியமானது பொங்கிக்கொண்டேயிருக்கின்றது. இவருடையகோத்திரம் அல்கஸ்ஸுடைய கோத்திரமாய் இருக்கின்றது. அதைபோகித்துப்பார்க்கில் அவ்வல்கஸ்ஸுடைய குணமும் இவ்வற்பகுணமாகவே காணப்படுகின்றது. அந்த நம்மக்ஹராமாகிய அல்கஸ்ஸென்பவனும் அப்படித்தானே முன்னாளில் சத்தாதுடைய ஏறப்த்தகஞ்ஜென்னும் ஏழு களஞ்சிய திரவியங்களுக்காக பாதுஷா கிப்தே காம்றன் அவர்களுக்கு துரோகஞ்செய்து தனது பிரைக்கொலைசெய்து, அபகரித்துக்கொண்டானல்லவா? அவன் வழியிலுள்ள இவனும் அப்படித்தானேயிருப்பான். சரி அப்படியானால் அவனுடைய பாட்டனாகிய அல்கஸ்ஸென்பவன் பெருங்கொள்ளையடித்த திருடனாயிருக்கையில் இவன் இச்சொற்ப வஸ்துவைத்திருடிய சின்னத்திருடனால் என்னகுற்றம்? ஆனால் தன்னுடைய நாணுவாகிய அல்கஷ்ஷின் பெயரை மறைக்காமல் முன்னுக்கு கொண்டுவரயெண்ணமுற்று இவ்வேலைசெய்ததேயல்லாமல் வேறல்லவென்று நினைக்கின்றேனென்றார். அப்பொழுது நௌஷோவான் கோபமீறி நம்மக்ஹராம் பூனைக்குப்பிறந்தவனே! லதனந்துப்பெற்ற மூதேவியே இனி நீ இந்த தர்பாரில் நின்றுகொண்டிருக்கவும் இலாயக்கில்லாதவனுகையால் இனி நீ என்முன் நில்லாதே இப்பொழுதே ஓடிப்போய்விடுயென்றுரைத்தான். அதைக்கேட்ட, உம்ருவானவர் பாதுஷாவைநோக்கி பாதுஷாவே! இவ்விதத் திருடனுடைய காதுகளைவெட்டிவிடும்படி ஹுக்குமென்னும் லாச்சொல்லுகிறபடியால் இப்போர்ப்பட்ட திருடனுக்கு இன்னும் அதிகமாய் எத்தண்டனைகொடுத்தாலும் தகும் யென்றுரைத்தார். அவ்வேளையில் பஸீதக் ஆனவன் கண்மணிகலங்குகிறான் என் வாழ்வினைப்பயனே

இவ்வற்பனுடைய ஐயார் என்காதுகளை தரித்துவிட ஆக்ஞாபிக்கின்றான் என்னகாலமோ இது என்தலைவிதியோ பொல்லாதவேளையில் பிறந்தது. பலனை நல்லாரைகைத்துக காசமென்தலையில் நணுகியடித்ததோ முன்னோர் செய்த மோச மிந்நாளில் முழுதுந்திரண்டு மொய்த்ததோ வென்றுக்கி! ஐயாராக்கினை யமைத்திடலாச்சுதே யென்று பலவாறு எண்ணுதமென்னியிருந்தான். அவ்வேளையில் புஜாருக்மேஹரானவர் பாதுஷாவினிடத்தில் மிகமிகக்கெஞ்சி மன்றாடி காதுகளை தரிக்காமல் விட்டுவிடும்படி கேட்டுக்கொண்டார். அதுபோல் பாதுஷாவும் அவனை மாஜாரென்னும் குறையுள்ளவனுய்செய்யாமல் இனிதர்பாரில் வரக்கூடாதென்று பிடரியிற் கையைக்கொடித்துத்தள்ளி வெளியில் கொண்டுபோய்விடும்படி ஆக்ஞாபித்தான் அதுபோல் ஏவலாளர்கள் ஒருகைபிடரியிலும் ஒருகை முதுகிலும்கொடுத்து தூக்கிப்பிரபாவென்று தள்ளிக்கொண்டுபோய் தர்பாருக்குவெளியில் தூக்கிவிட்டார்கள். பின்பு, சிலநேரம்சென்றபின் சாஹிபேகரான் அமீர் ஹம்ஜா அவர்கள்பாதுஷாவைநோக்கி ஜஹாம்பனுபஸீதக்கென்பவன் யாதொரு குற்றமும்செய்யாத பேருனுவரயிருக்கின்றான் இவ்வேலைகள்எல்லாம் உம்ரு உடைய வேடிக்கையினிமித்தம் நின்றுமுள்ள ஓர்சின்னவிளையாட்டாயிருக்கும் ஐயாரி தனத்தின் சாமர்த்தியமும் மனதிடமையும் பஸீதக் இடத்தில்செய்து நமக்குக் காண்பித்தார் யென்றுரைத்து, அந்த பஸீதக்கைத் திரும்ப தர்பாரில் சேர்த்துக்கொள்ளவேணுமென்றுகேட்டுக்கொண்டார்கள். அப்பொழுது பாதுஷா உம்ருடைய்ஐயாரி தனத்தின் சாமர்த்தியத்திற்காக அவரை அதிகமாய் பெச்சிக்கொண்டோடி புதுமையாகினான். பின்பு அமீர் அவர்களின் வேண்டுகோளின்படி பஸீதக்கை பழையபடி தர்பாருக்கு வரவழைத்துக்கொண்டு உம்ரு ஐயார்மீது அதிக சந்தோஷமுற்றவனுய் அம்மோதிரத்தை உம்ரு என் பவருக்கே கொடுத்துவிட்டு அமீர் அவர்களைநோக்கி தாங்கள் தங்கருடைய கூடாரத்திற்போய், தேக ஆயாசத்தை தீர்த்துக்கொண்டு ஒவ்வொருநாளும் தர்பாருக்கு தங்கள் நிநேகர்களுடன் வந்து கொண்டிருக்க மறந்துவிடாதீர்கமென்றுரைத்தான். அமீர் அவர்களும் பாதுஷாவினுத்திரவுபெற்று, தங்கள் கூடாரம்போய்சேர்ந்தார்கள். பாதுஷாவும் தன் அரண்மனைக்குச்சென்றான்.

குஸ்தமென்பவன் சீனதேசத்தரசனுகிய பஹ்ராம்கிர்தே காக்கான்என்பவனை சிறைபிடித்து மதாயினுக்குக் கொண்டுவருவதை பேசுகிறபாடு.

விருத்தம்.

நிர்த்தனுரூதுமோசம் நிலமையிற்சிறந்தபொல்லா
சித்தையில்கபடமுற்ற திறமிலாகுஸ்தமென்போன்
சுத்தரபஹ்ராம்தன்னை சிறைபிடித்தாண்மைகூர்ந்து
வர்த்தோர்விபரமெல்லாம் வழுத்துவோம்கலிவல்லோரே.

இச்சரித்திரத்தை எழுதுகின்றவர் தன்னுடைய வல்லமையைக் காண்பிக்கின்றார், அம்தெவ்விதமெனின் யுத்தகளமென்னும் மைதானத்துக்குச் சம்பந்தமுள்ள ராயிதத்தில் கலமென்னும் வாளாயுதத்தைக் காத்திற்பிடித்தி, கஸ்ஸாவென்னும் ஜங்ஙை சங்காரஞ்செய்து வருகையில் அம்மைதானமென்னும் காயிதம்முழுவதும் இரத்தமென்னும் மையானது அவ்வாளாயுதமென்னும் எழுதுகோலின் முனையில்நின்று சிந்தி நனைத்து நிறைத்துவிட்டு பாவனையாய் எழுதுகிறார் அஃதாவதெனில் அமீர் அவர்கள் தங்கள் கூடாரத்திற்சென்று ஆயுதாதிகளையெல்லாம் கழற்றிவிட்டு உடைகளையும் களைத்துபபித்து ஆயாசம் தீர்த்துக்கொள்வதற்காக இருக்கும் சமயத்தில் பஸ்தக் இடத்திலிருந்து, ஒருதூதன் உம்ரு அவர்களுக்கு ஒருகடிதமும் பைநிறைய ரூபாய்க்களையும் கொண்டுவந்து கொடுத்தான், அதை உம்ரு வாங்கிக் கொண்டு அமீர் அவர்கள் இடத்தில் கடிதத்தைக் கொடுத்தார், அந்தக் கடிதத்தை உடைத்து வாசித்தார், அதில் பஸ்தக் என்பவன் உம்ரு அவர்களுக்கு எழுதி யிருக்கின்றான் அது யாதெனில் காஜா உம்ரு ஐயார் கஞ்ஜர்தூஜார் அவர்கள் அறிய எழுதுவது யாதெனில், காஜாவே ! தங்களுக்காக யான் ஒரு பை நிறைய ரூபாய்கள் அனுப்பி யிருக்கின்றேன், அதனை தாங்கள் கபூல்செய்து கொள்ளுங்கள் இதையன்றி அப்போதைக் கப்போது வேண்டிய பொருளுதவி செய்வதற்காக ஹாஜராயிருக்கின்றேன் இனி என்னை தாங்கள் இவ்விதம் தாபார்முதலிய இடங்களில் அவமானப்படுத்தி மானபங்கம் செய்யாதிருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன், எக்கிப்பொழுது இவ்வூரில் ஸாஸ்தாவானஞ்ஞரிடத்தில் மாத்திரம் கொஞ்சம் இஜ்ஜத் இருக்கின்றது, அதையும் இழக்கிவிடாதேயுங்கள் என்னை இஜ்ஜத்

தோடும் வையுங்களென்று எழுதியிருந்தான், அப்பொழுது உம்ரு வானவர் பணத்தை பார்த்தவுடனே ஆனந்தமுற்று மனதிலெண்ணுகிறார் அல் ஹம்துலில்லாஹி முதல் முதல் மதாயின் யென்னும் பட்டணத்திற்குவந்து பஸ்தக் கையால் ரூபாயின் முகத்தை பார்த்தேன் இது என்னுடைய கல்லகாலத்தின் முதல் அடையாளமா யிருக்கும். அல்லாஹுதஆலா வீட்டிலிருந்தபடியே எனக்கு கொடுத்து அனுப்பினன் யென்று சந்தோஷமுற்றவராய் பஸ்தக் யென்பவனுக்கு பணம்பெற்றுக்கொண்டதற்காக ஓர் ரசீது எழுதியனுப்பிவிட்டு, அவரவர்கள் இருக்கும் ஸ்தானத்தில் இருந்தார்கள், மறுநாளுதயத்தில் அமீர் அவர்களும் மற்றும் அவர்களுடைய தோஸ்துகளும் கூடாரத்தை விட்டு நீங்கிசென்று பாதுஷாவினுடைய அரண்மனையிற்போய் தர்பாரில் அமைத்திருந்த சந்தன்மரத்தின் தக்த்தில் அமீர் அவர்களும் மற்றவர்கள் அவரவர்கள் இருக்கும்ஸ்தானத்திலும் வீற்றிருந்தார்கள், அவ்வேளையில், அதிவிரபொருந்திய ஓர் பயில்வான்தேகத்தின் மேல் இரும்புக்கவசமணிந்தவனுய் பனைமரம்போல் அதிக உயரமாய் வளர்ந்து நீண்டவனுயும் அவ்வுபாத்திற்குத்தக்க ஆஜானுபாஹுவனுயும் சிரசில் எழுதினுலாகிய டோப்பி அணிந்தவனுயும் இருபாதங்களில் இருப்பு மோஜாவின் ஏடிகளில் முட்சக்கரங்களைமைத்து அணிந்தவனுயும், இருப்புச்சட்டையின் ஓரங்களிலெல்லாம் அவ்விரும்பினுலையே சிலங்கைகள் கொருக்கக்கோர்த்து, காங்களில் இருப்புக்குழாய்கள் இட்டவனுயும் இடையிற்றொங்கும் வாளாயுதத்தின்பிடியை கரத்தில்பிடித்தவனுயும் தர்பாரில்வந்து ஆஜராகி, பாதுஷாவுக்கு மிகமரியாதை வணக்கமாய் மார்பால்நகர்ந்து ஊர்ந்து பாதுஷாவின் பாதங்களில் சிரசைவைத்து முத்தி, எழுந்து கைகட்டியவனுய் ஓரிடத்திலிருந்து, கடைக்கண்ணுல் அமீர் அவர்களைநோக்கி பாதுஷாவைப் பார்த்து சொல்லுகின்றன். பாதுவே ! என்னுடைய தகப்பனை சீனதேசத்திற்கு சண்டைக்காக அனுப்பியிருக்கிறீர்கள், அவருடைய ஆசனத்தில் ஓர் இஸ்லாமானவரை உட்கார வைத்திருக்கின்றீர்கள், இது என்னநியாயம்! எப்பேர்ப்பட்டநீதி ? உயிரைக்கொடுப்பவர்கட்கு செய்யும்நன்றி இதுதானே? எனது தகப்பனர் அதிசீக்கிரத்தில் ஜெயமடைந்து, திரும்பிவந்துவிடுவார், அப்பொழுது இந்த அரபி இச்சந்தனமர ஆசனத்தில் எவ்விதம் உட்காருகிறான் மமதைகொண்டு இருக்கின்றார் பார்ப்போம் யென்றுசொன்ன இவ்வார்த்தையைக் கேட்டிருந்த அமீர் அவர்கள் அவனுடைய மதம்கொண்ட வார்த்தை

களை சகிக்கமுடியாதவராய் பாதுஷாவைநோக்கி, ஷாஹேஜஹான் இவன் யார் எங்கிருப்பவன்? மிகவும் அகங்காரமான மொழிகளை புகலுகின்றார் யென்றுகேட்டார்: அதற்கு நௌஷேரவான் சொல்லுகின்றான் அமீரே இவன்பெயர் போலாத்பின் குஸ்தும் யென்று சொல்லிக்கொள்ளுகிறான். இவனுடைய தகப்பன் குஸ்தம் யென்பவனை பஹ்ராம்கிர்த்தே காக்கானே சீன் என்பவனிடத்தில் யுத்தத்திற்காக அனுப்பியிருக்கின்றேன். அவன் அந்த பஹ்ராம்கிர்த் யென்பவனை ஜெயித்து, பிடித்து சிறையாக்கிக்கொண்டு வருகின்றான். இவ்வளவுநாள் நமதுதேசத்தை படுக்க சமீபத்தில் கடந்துகொண்டிருப்பான். தாங்களிருக்கும் அந்த சந்தனமர ஆசனமானது, அவனுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதில் தாங்களிருப்பது அவன்புத்திரனுக்கு மனத்தாளாமல் அவனுடைய கூடத்தில் தாங்கள் ஏறி உட்கார்ந்திருக்கும் பாவனையாய் ஆகிவிட்டான். அவனுடைய எண்ணம் தன்தகப்பன் உட்காரும் ஆசனத்தில் மற்றொருவர் எப்படியிருக்கலாமென்று கேட்கிறானென்றுரைத்தான். அதைக்கேட்ட அமீர் அவர்கள் சொல்கின்றவராயினர். யாதெனில், ஹா! அப்படியா? யானும் அதைத்தான் கோருகிறேன் இவனுடைய தகப்பன் என்னுடன் எதிர்த்து ஜோர்செய்தால் அப்பொழுது "கெலிப்பவனுக்கு, தோற்பவன் அடிமையாக வேண்டும் யென்று" உரைத்தார் இவ்விதம் உரைத்த அமீர் அவர்களின் வாக்கியங்களை செவிக்கேற்றிய போலாத் யென்பவன் கடுங்கோபமுற்று அமீரைநோக்கி ஓ! அரபியே என் தகப்பனிடத்தில் பின்னல் ஜோர் செய்யலாம் முகத்தி யென்னிடத்தில் பஞ்சா சேர்த்து ஜெயித்துக் கொள் யென்று உரைத்தான். அதைக் கேட்ட அமீர் அவர்கள் அவனை நோக்கி அதுவும் சம்மதம் பிஸ்மில்லா! இறங்கி நில்யென்றுரைத்தார். உடனே போலாத் யென்பவன் அமீர் அவர்களின் முன்பாகத்திரும்பி உட்கார்ந்துகொண்டு கையைநீட்டினான் அப்பொழுது அமீர்அவர்கள்தங்கள்கையையும் அவன்கையோ சேர்த்து பஞ்சாகொடுத்து ஏற்றியிழுத்து அடித்தார் அவ்வோர் இழுப்பேதி அவன் உட்கார்ந்திருந்த நாற்காலியை விட்டும் முகங்குப்புற கீழேவிழுந்தான், விழுந்தவன்நாணமுற்றுவெட்கி எழுந்துவாளையுருவிக்கொண்டு அமீர் அவர்களை வெட்ட அருகிலோடினான், அமீர்அவர்கள் இருந்தஇருப்பிலேயே அவன் காத்திருந்தவாளாயுதத்தையும் இலேசாய்ப்பிடுங்கி எடுத்துகொண்டார். அப்பொழுது நௌஷேரவானுடைய புத்திரனாகிய ஹர்மூஸென்பவன் அப்போலாதென்

வனை நோக்கி சொல்லுகின்றான். அயேபோலாத் யென்பவனே உன்னுடைய எண்ணம் இந்த மஜ்லீஸை அல்லோல சல்லோல படுத்தவேணுமென்னும் நாட்டமாய் இருக்கின்றதாய்க் காணப்படுகின்றது, நீ இவ்வளவு வெட்க முடையவனாகியும், இன்னும் உன்னுடைய மானம் குறையாமல் "குப்புறவிழுந்தும் மீசையில் மண்ணில்லை" பாரென்று காட்டியதுபோல் பின்னும் பின்னும் உதைப்பட்ட நாய் மறுபடியும் உதைபட குலைத்து நெருங்குவதுபோல் ஏன் துள்ளுகின்றாய்? சீ! உன்னுடைய ஸ்தானத்தில் வாயை மூடிக்கொண்டு கைகால்களை பேசாமல் வைத்துக்கொண்டு மவுனமாயிரு, அதிகமாய் காபுரா செய்யாதே, இல்லாத வரையில் நீ மிகவும் துன்பத்திற் குள்ளாவாய், தர்பார்நிறைந்த இச்சமயத்தில் என் உன்னுடைய பவுஷைக் கெடுத்துக் கொள்ளுகின்றாய் யென்றுரைத்தான். இவ்வார்த்தைகளை கேட்ட போலாத் யென்பவன் வெட்கித் தலைகுனிந்தவனாய், ஒரார்மூஸ் பக்கத்தில் வாயை மூடிக்கொண்டுபோய் உட்கார்ந்தான். அப்பொழுது பாதுஷா அமீர் அவர்களை நோக்கி, அமீரே அப்புத்தியில்லாத மடையன் செய்த காரியத்திற்காக தாங்கள் யோசிக்காமல், மன்னித்துவிடுங்கள் யென்றுரைத்து, அவரவர்களை அவரவர்க ளிருப்பிடத்திற் கனுப்பிட்டு பாதுஷாவும் தன்மாளிகைக் கேகினான். பின்பு ஒவ்வொருநாளும் அமீர் அவர்கள் பாதுஷாவி னுடைய தர்பாரில் போய்க் கொண்டிருந்தார்கள்.

அப்படியிருக்கும் நாட்களில் ஓர்நாள் ஒற்றர்கள் ஓடோடியும் வந்து பாதுஷாவி னிடத்தில் சொல்லுகின்றார்கள். அஃதாவது "ஈரானில் பாதுஷாவே குஸ்தம் என்பவன், பஹ்ராம்கிர்தே காக்கானே சீன் என்பவனுடனே அல்பக் பென்னும் ஜாதி பயில்வான்களில் காலாகீன் வீரர்களையும் சிறையாகப்பிடித்து கட்டிகொண்டு வந்திருக்கின்றான் இங்கிருந்து நான்கு கோஸென்னும் இருபத்தெட்டு மைல் தூரத்திற்கப்பால் இறங்கி யிருக்கின்றார்கள், தங்களுடைய உத்திரவை எதிர்நோக்கி யிருந்துகொண்டு தங்களுடைய உத்திரவு எப்பொழுது பிறக்கின்றதோ அப்பொழுது வர ஆயத்தமா யிருக்கின்றார்கள் பென்றுரைத்தார்கள் இஃதிவ்விதமிருக்க பஃதக் யென்பவனுடைய மனதில் அமீர் அவர்களின் மீதுவைத்திருக்கும் பொறாமையென்னும் நீங்கு நிறைந்து இருந்தபடியால் ஒவ்வொருநாளும் அதற்காக என்னதந்திரம் செய்வதென்று ஆலோசித்தவனாய் நாட்களை

யெல்லாம் அவ் வியோசனைகளிலேயே கழித்துக் கொண்டிருந்தான், எவ்விதத்திலேனும அமீர் அவர்களை அவமானப்படுத்த வேணுமென்னும் துர்ச்சண்ணமே மேற்கொண்டிருந்தது, அஃதேனெனில் பாதுஷாவே அமீர் அவர்களை எதிர்சென் றழைத்துவர்த படியால் அவிசேஷ செய்தி ஊரூராய்ப்பரவி அமீரவர்களுடைய கவுரவம் மென்மேலும் அதிகரித்து, கீர்த்தி பரவி இருக்கின்ற படியால், அவரை எவ்விதத்திலேனும் அவமானப் படுத்த வேணுமென்ற யெண்ணம் நிறைந்தவனா யிருந்தான், ஆகையால் குஸ்தத மென்பவன் வந்து விட்டானென்ற செய்தி யரிந்து பஃதக் பென்பவன் எண்ணுகின்றான், இது தான் சமயம் குஸ்தமென்பவன் ஜெயமடைந்து வந்திருக்கிற படியால் பாதுஷாவை அத்தஸ்த மேன்பவனை எதிர்சென்றழைத்து வரும்படிசெய்பவேண்டும் அப்பொழுது அமீரடைய பெருமைகுறைந்துவிடும். அஃதெவ்விதமெனில் சொற்பமனிதன் சண்டைக்குப் போய் ஜயமடைந்து திரும்பிவந்தாலும் பாதுஷா எதிர்சென்றழைத்து வருகின்றார் அதுபோல் ஹம்ஜாவையும் அழைத்துவந்தாரென்ற அலகுபிமாய்போய்விடுமென்று. தன்மனதில்நினைத்துவிஞப் பாதுஷாவிடத்தில்சொல்லி குஸ்தமுடைய அழைப்புக்கரக பாதுஷாவை அழைத்துச்சென்றான். அப்படிப்போகும்வழியில் புஜாநச்மேமேஹராளவர் பாதுஷாவைநோக்கி, பாதுஷாவே! இச்சமயத்தில் அமீர் அவர்களை கூட அழைத்துசென்றால்மிகவும் உத்தமமாயிருக்கும் அஃதேனெனில், அதிவீர பராக்கிரமசாலியாகிய அற்புதவல்லமையமைத்த அமீர் அவர்கள் தங்கள்கூட வருவதனால் தங்களுக்கு பெருங்கீர்த்தியும் ஜெஜத்தும் மரியாதையும் உண்டாகும் யென்றுரைத்தார். அவ்வார்த்தைக்கிசைத்த பாதுஷாவானவன் அமீர் அவர்களுக்கு சொல்லியனுப்பியதாவது யாதெனில் சாஹிப்கரானே யாங்கள் குஸ்தமை எதிர்சென்றழைக்க போகின்றபடியால் தாங்களும் தங்கள் பவ்ஜமேதராய் எங்கள்கூட புறப்பட்டு வாருங்களென்று சொல்லி யனுப்பினான்.

இஃதிவ்விதமிருக்க பாதுஷா அமீர் அவர்களுக்கு சொல்லியனுப்பியபின் பட்டணத்தைவிட்டும் ஒருகோஸ் வெளிபிற் செல்கையில் குஸ்த்து மென்பவனும் படை முஸ்தீப்புக்களணிந்தவனாய் குதிரையின்மீதேறி மீசையை முறுக்கிக்கொண்டு சாண்டாமிருகத்தின் உருவமமைத்த சித்திரப் படத்தையுடைய வெற்றிக்கொடியின்கீழ் வெகு

ஆடம்பரத்துடனே எதிரில்வந்துகொண்டிருந்தான். அவன்வருவதை எப்படியிருந்தென்றால் பஹிரும்கிர்தகாக்கானேசீன் யென்பவனை ஜெயித்துபிடித்து சிறையாக்கி கொண்டுவரும் மமதையான்று தன்னை யில்ல எதிரிகள் உலகத்தில் ஒருவருமே இல்லையென்னும் ஆணவமிருத்து இறுமாப்புற்றவனாய்வந்துகொண்டிருந்தான். அப்படிவரும் குஸ்தமை பார்த்த காஸானிக்கிளைஞர்களிலுள்ள உம்ரூக்களும் உத்தியோகஸ்தர்களும் ஆனந்த மிழ்ச்சியுற்று, இனி அமீருடைய சொட்டம்அடங்கிவிட்டதென்று நினைந்துசென்றார்கள். அவ்வேளையில் குஸ்துமுடைய பவ்ஜும் கிட்டநெருங்கிவிட்டபடியால் தஸ்தும்மென்பவன் குதிரையைவிட்டும் கீழேஇறங்கி பாதுஷாவினுடைய பாதங்களைமுத்தியிட்டு தான்சினதேசம்சென்று சண்டைசெய்ததையும் பஹிராம்கிர்தேகாக்கான் என்பவனுடைய வல்லமை சண்டைத்திறம் பலம்முதலியவைகளையும் அவனை பிடித்துச்சிறையாக்கிய தன்னுடைய சாமர்த்தியத்தையும் இன்னும் அவ்வுரின் விசேஷங்களையும் படிப்படியாய் மிகவும் சந்தோஷகரத்துடனே சொல்லிக்காட்டினான். அவைகளைகேட்ட நௌஷேரவான் தன்னுடைய நாற்றி எழுபுத்தைந்து சாமிகளுக்கும் சாஷ்டாங்கநமஸ்காரம்புரிந்தான். பின்பு, பட்டணத்தைநோக்கி யாவரும்திரும்பிவிடுக்கார்கள். அவ்வேளையில்பஃதக்கென்பவன் குஸ்துமை நோக்கி சைகையால்பின்னுற்தரித்து மெதுவாய்வாவென்றுரைத்தான் அதுபோல குஸ்துமென்பவனும் பாதுஷாவைவிட்டும் பின்தங்கினான். பாதுஷா நௌஷேரவானவன் யாவருக்கும் முன்னுல்சென்றுவிட்டான். அப்படி முன்னேசெல்லும் பாதுஷாவின் எதிரில் அமீர் அவர்கள் பவ்ஜ்களோடுவரக்கண்டு பாதுஷாவானவன் அமீரைநோக்கி யான் முன்னேசெல்கிறேன் தாங்கள் இப்படியேசென்று குஸ்துமென்பவனை கண்டு அவனுடைய வார்த்தைகளைக்கேட்டு மனக்களிப்பெய்தி அவனுடைதேசேர்ந்துவாருங்களென்றுரைத்து அமீர் அவர்களை அனுப்பிவிட்டான் அரண்மனைக்குச்சென்றான். அமீர் அவர்களி பாதுஷாவினுடைய உத்திரவை சிரம்வணங்கி லுப்புக்கொண்டவர்களாய் குஸ்தும் வரும் வழியைநோக்கிசென்றார்கள். இஃதிவ்வாறிருக்க பஃதக் கென்பவன் குஸ்துமென்பவனிடத்தில்அமீர் அவர்களைபற்றி தன்மனதில்எவ்வளவு நினைந்திருந்தானே அதற்குமேலும்இல்லாதபொல்லாவார்த்தைகளைஎல்லாம் உரைத்து குஸ்துமுடைய மனதைசோர்வடைப்பில் தீமூட்டி பற்றவைத்ததுபோல் எரியச்செய்துவிட்டு அதன்மேல் எண்ணையைவிட்டதற்கொப்பாய் இன்னும்சொல்லுகின்றான். குஸ்தமே நீ என்னகண்

டாய் அந்தஹம்ஜாவுக்கு பிடித்திருக்கும் ஆணுவமதமானது ஒரு வரையும் மதிக்காமல் நிகரற்றவனும், நீ ஏறி உட்காரும் பாதுஷா முகத்தின்சந்தனமர ஆசனத்தில் கொஞ்சமும் அச்சமில்லாமல் தானே றி உட்கார்ந்ததோடு உன்னுடைய மகிமையும் சண்டைக்கழைத்தி கூடியிருக்கும் சபையின்முன் அவனே மானப்பங்கம்செய்துவிட்டான் கல்லவேனே நீர்வந்துவிட்டீர் அதற்காகயான் ஆண்டவனிடத்தில் சுக் கூர் செய்கிறேன். சிக்கிரம்வந்துவிட்டீர்கள். ஹம்ஜா தங்களைகண்டு கொள்ள வந்து தங்களிடத்தில் ஒருவர்க்கொருவர் அணைத்து, தழு விக்கொள்ளும்வேளையில் அந்தஹம்ஜாவை இறுகக்கட்டிபிடித் தழுத் துவதினால் விழிகள்பிதுங்கி மூச்சுத்திணறி திக்குமுக்காடாகும்படி செய்துவிடுங்கள். அப்பொழுதுதான் தங்களுடையபயங்கரம் ஹம்ஜா வுக்கு தெரிந்திருக்கும்காளடைவில் தங்கள்சமுகத்தில் அவனுடைய அகங்காரம், பெரியதனம் முதலியவைகளை காட்டாமல் இருப்பானென் றுரைத்தான். அதைக்கேட்ட குஸ்தும் அதற்கென்ன இஃதோர் பெரியகாரியமல்ல அப்படியே செய்கிறேனென்று சம்மதித்தான். அவ்வேளையில் அமீர் அவர்களுடைய சவாரியும் அவ்விடத்தில் வந்து விட்டது. அப்பொழுது அமீர் அவர்கள் குதிரையைவிட்டும் கீழே இறங்கி குஸ்தும் இடத்தில் கிட்டே அடுத்தார்கள். அதைக்கண்ட குஸ்துமேன்பவனும் அமீர் அவர்களைக்கண்டு தானும் வாகனத்தை விட்டிறங்கி நடந்து அமீரைபடுத்தான். அவ்வேளையில் இருவரும் ஒருவர்க்கொருவர் கட்டித் தழுவிகொள்கையில் குஸ்து மென்பவன் அமீர் அவர்களிடத்தில் மிக நயந்தவார்த்தையாய் காயினால் பேசிக் கொண்டு தன்னுடைய பலத்தையெல்லாம் ஒன்றுசேர்த்து அதிதீவலுவாய் அமீர் அவர்களைநெருக்கினான். அதைக்கண்ட அமீர் அவர் கள் குஸ்தமுடைய வஞ்சகக்கபடநெஞ்சத்தை ஓர்நொடியி லறிந்துக் கொண்டு தாங்களும் அதிகவலுவத்தைகாண்பிக்காமல் சற்றுஉரக்கபிடி த்தணைத்தார்கள். உடனே நினைக்கத்தனக்கென்றபடி அவனுக்கு மார் பிற்குமேல்நின்ற மூச்சானது தொண்டையினால் வெளிவராமல் கண் கள் காதுகளினால் புறப்பட ஆரம்பித்து விழிபிதுங்கியதோடு நெஞ் சிற்குக் கிழ்ப்பட்ட காற்றானது உள்ளே தங்க இடமற்று பின்தவா ரத்தினால் கும்ப ஊதிபித்து குடலைச்சுற்றிகலக்கிகொண்டு புறப்பட் டபடியால் அக்காற்றிற்கு முன்னால் நின்ற இளகியமலம், கெட்டிமல மாகியவைகளை பீச்சுபீச்சுவென்று வெளியிற்றள்ளிக்கொண்டுகிளம்பி படியால் அவனுடைய காற்சட்டைமுதலியவைகளி லெல்லாம் மலம்

நிறைந்து தேகமாதியங்களும் அம்மலமே புரண்டுகொண்டது. அவ் வேளையில் குஸ்துமென்பவன் காணமுற்றவனும் அமீர் அவர்களின் காதில் வாயைவைத்து மெதுவாய் யா! அமீர் தாங்கள் மிகவும்பலம் நிறைந்த குறையாத பொக்கிஷமாயிருக்கும். இவ்விதம் கடினவிஷ யங்களை யாவும் தங்கள் மனதிலேயே வைத்தக்கொள்ளவேண்டும். வெளியில்சொல்லி என்னை அவமானபடுத்தவேண்டாம். என்னை கை யாலாகாத லகம்மிலுட்டியென்று பிரஸ்தாபப்பித்தாதிர்கள். நாம் இருவருக்கும் தெரிந்தவிஷயமாகவே போய்விடவேண்டுமென்றுரைத் தான். அமீர் அவர்களும் அதுபோல்செய்கின்றேனென்று சம்மதித் திகொண்டார்கள். பின்பு குஸ்துமுதலாகியவர்களும் கோட்டையை காடிகடந்தார்கள். அமீர் அவர்களும் அவர்களுடைய சேனையும் வை சுற்றி உலாவிவருவதற்காக புறப்பட்டு, வேடிக்கை விநோதமாய் லெயர் செய்துக்கொண்டிருந்தார்கள். அவ்வேளையில், அமீர் அவர் கள் ஒருபுரம் திரும்பிப்பார்க்கையில் ஒரு இருப்புக்கூண்டை அதிக பலமான ஜஞ்ஜீரென்னும் இரும்புச் சங்கிலிகளால் பிணைத்து, நாலா யிரம் ஏப்பாய்கள் உருவினைத்தியோடு சுற்றிலும் பாராகொடுத்த வர்களாய் அநேகம்வீரர்கள் அவ்விருப்புக்கூண்டை இழுத்துச் செல் லக்கண்டு, அக்காவல் வீரர்களைபார்த்து, அவ்விருப்பு கூண்டுக்குள் என்ன இருக்கிறது? ஏன் இதை இவ்விதம இழுத்தேகின்றார்கள்? யென்றுகேட்டார். அதைக்கேட்டவீரர்கள் அமீரைநோக்கி இக்கூண் டுக்குள் பஹிராம்கிர்தே காக்கனை சின்யென்பவனைக்கட்டி உள்ளே போட்டிருக்கின்றது. அவனுடையபலமும், வீரமும் இவ்வுலகமெல் லோம் பிரசித்தியாகி இருக்கின்றதுயென்றுரைத்தார்கள். அதையறி ந்தஅமீர் அவ்வீரர்களைநோக்கி சொல்லுகின்றார். இஃதென்ன புதுமை யாயிருக்கின்றதே எவ்விடங்களிலாவது பயில்வான்களையும் பாதுஷா க்களையும் பிறைபிடித்தால் இவ்விதம் கூண்டிற்குள் புளியைப்போட் டடைத்துக்கொண்டு வருவதுபோன்றவழக்கம் உண்டோ ஜவாம்மர் தாகிய வீரர்களை இவ்விதம் கஷ்டப்படுத்திகொண்டு வருவதும் நீதி யாமோ? என்று பலவாறுமொழிந்தவராய் அக்கூண்டை இழுத்துச் சென்றவீரர்களை இழுக்காமல் நிறுத்தச்செய்து தங்கள் ஏவலாளர் களைவினித்து அக்கூண்டைதிறக்கச்செய்தார்கள். அப்பொழுது அதில் ஓர் ஜவாளனவன் மிகவும் சவுக்கரிய ரூபமுடையவனும் இரும்புவி லங்குகளால் வரிந்துபுரள அசைய இடமில்லாமல் கட்டிப்பிணைத்து, மயக்கிக் கிடக்கக்கண்டு அமீர் அயர்கள் அவனை அக்கூண்டைவிட்டும்

வெளியிலெடுத்து விலங்குகளையெல்லாம் தரித்துவிட்டு பங்கீர்முதலாகிய குளிர்ந்தவாசனையையுடைய ஜலங்களைக்கொண்டும் அவனுடைய முகம் நேத்திரங்களில்தெளித்து அடித்து, மாதளம்பழச்சர்பத்து, சேபுப்பழச்சர்பத்து முதலியவைகளை அவன்வாயில் தனித்தனியாய்ச் சிறுக சிறுக்விட்டு அவன் நல்ல உஷ்யாரானபின் அவனைநோக்கி அமீர் அவர்கள் கேட்கலாயினர். அஃது யாதெனில், ஏ! பஹதூரானவனே நீ! யார்? உன்பெயரென்ன? என்றுகேட்டார். அதைக்கேட்ட அவன் சொல்லுகின்றான். சாஹெபானவர்களே! என்னை தங்களிருப்பிடத்தில் அழைத்துச்செல்லுங்கள். அங்குசென்றபின் என்னுடைய சமஸ்தாரங்களையெல்லாம் ஆதியோடந்தமாய் சொல்லுகின்றேன். எல்லா விஷயங்களையும் அனுவனுவாய் அறியச்செய்கின்றேன் இப்பொழுது எனக்குபேசசக்தியுமில்லை புத்தியும் நேராக சுவாதீனத்திலில்லையென்றுரைத்தான். அவ்வார்த்தையைக்கேட்ட அமீர் அவர்கள் உடனே ஒரு குதிரைமேல் கொண்டுவரச்செய்து, அதின்மேல்அவனை ஏற்றிவிட்டு, அவனுடன் கைதுசெய்யப்பட்ட கிறைகள் முழுமையும் விடுதலைசெய்துவிட்டு, அதிக பரியாதையுடனே தங்கள்திருப்பிட மஞ்சத்தேகி, கூடாரத்திற்போய்சேர்ந்து, பஹிரம்கிர்தே காக்கானேசீன் யென்பவனை தங்களுடைய கட்டிலின்மேல் படுக்கவைத்து; அவன்மூளையில் நல்லபலம் உண்டாகத்தக்க அதிக குளிர்ச்சிபொருந்திய வாசனை திரவியங்களை முகரும்படிகொடுத்தார்கள். இன்னும் உடலுக்குநல்ல தைரியம்பிறக்கும்படி ஹரீதா முதலாகிய மிர்துவான தேகத்திற்கு வலுவைக்கொடுக்கும் பலவித சிற்றுண்டிகளை செய்துகொடுக்கும்படி ஆக்ஞாபித்தார். இம்மாதிரியெல்லாம் அந்த பஹிராம்யென்பவனுடன் சிறைப்பட்டுவந்த வீரர்களுக்கும் அநேகவிதமேலான அனுகூலவைப்பதார்த்தங்களை தயார்செய்துகொடுத்தார்கள். பஹிராமென்பவனுக்கு கனவு தெளிந்து, ஆயாசம் நிவர்த்தியாகி புத்தி சுவாதீனமுண்டானது, அப்பொழுது அமீர் அவனைநோக்கிசொல்லுகின்றார் உம்முடைய செய்திகளை உம்மைக்கொண்டே சொல்லச் செய்வது மனுஷத்தன்மும் சமயோசிதமான காரியமும் அல்ல ஆனால் தம்முடைய வதனுலங்காரத்தினால் நீர்பெருந்தன்மையையுடைய ராஜவம்மிஷத்தில் உள்ளவராயும் மேன்குலத்தினராயும் தெரியவருகின்றது ஆனால் இவ்வேளையில் இவ்விடத்தில் தங்களுடைய விஷயங்களை கேட்டுத் தெரிந்துக்கொள்வதற்காக சொல்லப்பட்ட தக்கமனிதன் கிடையாது. யாராகிலும் சொல்பவர்கள் இனிவருவார்களென்னும் நம்பிக்கையும் கிடையாது. ஆகையால், மூக்கியம் உம்முடைய செய்திகளை அறிந்துகொள்ளவேண்டியது அவசியமாகையால் நீரேசொல்வது மேலாயிருக்குமென்று நினைக்கின்றேன். உம்முடையசெய்திகளை நீரே சொல்லுமென்றுவினவினார். அதைக்கேட்ட பஹிராமென்பவன் அமீர் அவர்களை நோக்கிசர்தாரானவர்களே தாங்கள்என்னுடையஉயிரைமீண்டுந்திருப்பிகொடுத்தகர்தாவாயிருக்கின்றீர்கள். இல்லாதவரையில் யான் இவ்வளவுநேரம் மூச்சடங்கிபிரேதமாகி என்னுயிரானது தாருல் பஃனாவுக்கு சென்றிருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை அநேக நாட்களாய் இந்த இருட்புக்கூண்டில் அன்னந் தண்ணீர் காரமில்லாமல் அடைபட்டுக்கிடந்தேன். ஒவ்வொருவேளையும் ஆண்டவனிடத்தில் என்னுடைய உயிரை வாங்கிக்கொள்ளென்று மவுத்தை அழைத்தவனுய் கேட்டுக் கொண்டிருந்தேன் அந்த அல்லாகுபுஹானஹுதவுத் தஆலாவானவன் என்னைத் தங்கள்வரையில் கொண்டுவந்து சேர்த்து இந்த மகிழ்ச்சியாகிய நாளை காண்பித்தான். ஆகையால் எனக்கு இன்னம் கொஞ்சகாலம் இவ்வுலகத்தின் வாழ்வு பாக்கியாயிருக்கிறதாய் தெரியவருகின்றது யென்றுரைத்தான். அப்பொழுது அமீர் அவர் பஹிராமை நோக்கி சொல்லுகின்றார் பஹிராமே இந்த குஸ்து மென்பவன் உம்மை எவ்விதம் ஜெயித்து பிடித்தான்? நீர் அவனுடைய கையில் எப்படிசிக்கினீர்? என்றுகேட்டார் அதைக்கேட்ட பஹிராம் சொல்லுகின்றான் யான் சண்டைக்களத்திலே அவனை ஜெயித்துவென்று கைதியாக்கினேன். இன்னும்அவனுடைய லஷ்கரில் அநேகரைவெட்டி மண்ணுக்கிறையாக்கினேன். அநேகரைப்பிடித்து சிறையாக்கினேன். ஆப்பொழுது அவர்கள் யாவரும் எனக்கு உட்படிந்து அமைமையாகி என்னிடத்தில் நாலுவருஷகாலம்வரையில் ஊழியர்களாய் அமைத்தொழிற்புரிந்து வந்தார்கள். அப்படியிருக்கும் நாட்களில் ஒருநாள் யான் வேட்டையாடிக்கொண்டே அதிகதூரம்சென்றுவிட்டேன் என்னுடைய பல்லாக்கள்யெல்லாம் அதிக தூரத்தில் பின்னுக்கு நின்றுவிட்டார்கள். அவ்வேளையில் எனக்குவெய்யலின்கொடுமையால் தாகமதிகரித்தது இவன் என்னருகில் இருந்தபடியால் தாகத்தை தீர்த்துக்கொள்வதற்கு ஜலங்கொண்டுவந்து தரச்சொன்னேன் அவ்வேளையில் அவன் கண்ணீரில் லாகிரி வஸ்துவைக்கலந்து, கொண்டுவந்து கொடுத்துவிட்டான். அதை யறியாமல் யான்வாங்கி அருந்தியவுடனே மயக்கம் தலைக்கேறி அறிவுமக்கி கீழேவிழுந்து விட்டேன். அதையுணர்ந்த இவன் தன்னுடைய வீரர்களையும் சிப்பாய்களையும்

அழைத்து, என்னை கைகால்களுக்கு விலங்கிட்டு தளைத்து, இவ்வி ரும்பு கூண்டில் உடைத்து, விதவிதமாகிய துன்பங்களை யெல்லாம் என்னையனுபவிக்கச் செய்து கொண்டுவந்தானென்று சொன்னான். இவைகளைக்கேட்ட அமீர் அவர்கள் அவன் மனதைத்தேற்றி தைரிய வார்த்தைகள் சொல்லி, அப்பொழுது பஹிராம் மிகுந்த சக்தோஷ முடையவனாய் அமீரை நோக்கி நாயகமே யான் சுக்கூர் செய்து துக் கேட்கின்றேன் ஒருவர்க்காக அஞ்சுகந்த ஒருவரைனல்லனைக்கு இல்லையென்னும் உதவிபுரிந்து காப்பாற்றிய ஒருவருக்கா யிருக் கும் அவ செப்பேர்ப்பட்டவ ரெனில் இவ்வுலக முழுவதிலும் அவரு க்கு நேரான ஒருவன் பிறந்திருக்கமாட்டானே அப்பேர்ப்பட்ட ஒரு வருக்கா யிருக்கும்யென் றுரைத்தான்.

இஃதிவ் வாறிருக்க அமீர் அவர்கள் பஹிராமையும், அவனுடைய பவ்ஜையும் விசித்தல யாக்கி அழைத்துச்சென்றுசேர்ந்த செய்தி குஸ்த மென்பவன் அறிந்து கோபத்தினால் விழிகள்சிவந்து அக்கினிச்சுவா லையாகி; சரீரம் படபடத்து அடக்கமுடியாமல் உடனே ஓடோடியும் சென்று பாதுஷாவினிடத்தில் விஷயங்கள் யாவையும் முறையிட்ட ழுதான். அதைக்கேட்ட பாதுஷாவும் அமீர் அவர்களின் செய்கைக் காக மனம்வெறுப்புற்றவனாகி, உடனே அமீர் அவர்களைஅழைத்துவரு ம்படி ஆளனுப்பினன் அமீர் அவர்களும் பாதுஷாவினுடைய உத்திர வுக்கெழுந்துசென்று சமுகம்மடித்தார்கள் அவ்வேளையில் பாதுஷாவா னவன் அமீரை நோக்கி சொல்லுகின்றன் யாதெனில் ஐ! அபுல்ஃ லாவே தாங்கள் அறியவில்லையா "அந்த பஹிரா மென்பவனைப்போல் ஒருவன் இவ்வுலகத்தில் எனக்கெதிரி இல்லையென்று" அப்படியிரு க்க, தாங்கள் என்னுடைய ஞாபகத்தை மனதில் நினையாமல் அசட் டைசெய்து விட்டீர்கள். தாங்கள் எந்த யோசனையினால் அவனை கைதைவிட்டும் விடுதலையாக்கினீர்கள் யென்றுரைத்தான் அவ்வார்த் தையைச் செவிமடுத்திய அமீர் அவர்கள் பாதுஷாவைநோக்கி சொல் லுகின்றார். அயே! கிட்டேயே ஆலம் தாங்கள் ஷேஹின்ஷா அப்தகிஸ் வராயிருக்கும் உலகத்தில் எந்த பயில்வான்களையும் பஹதூர்க்களையும் இவ்விதமாறுபாடாய்ப் பிடித்துக்கட்டிகொண்டுவந்தால் உலகத்தார் பாதுஷாக்களை நிந்தனைக்குள்ளாக்கி தூஷிக்க இடமுண்டாகிவிடும், தவாரீக் யென்னும் இதாபுகளிலும் எழுதப்பட்டு உலகமுள்ளநாள் வரையில் இன்னபாதுஷாவுடைய அநியாயம் இப்படி நடந்துவந்தென்

ன்று கியாமநாள்வரையில் பாதுஷாக்கள் ராஜாக்களுடைய சபை களில் எல்லாம் பிரஸ்தாபமாய்க் கொண்டேவரும் முடிவாய் தங்களு டைய பெயர்கெட்டுப் போகுமேயொழிய வீரர்களுடைய பெயர்கெ ட்டுப்போகாது அஃதெவ்விதமெனில் ரௌஷேரவானனவன் குதுமார் க்கமாய் கபட வஞ்சனைசெய்து வீரர்களை எதிர்த்து ஜெயிக்காமல் மாறுமாடாய் பிடித்து, கஷ்டப்படித்தினனென்று தங்கள் பெயர் தான் கெட்டுப்போகுமேயொழிய வேறில்லை. இன்னும் தங்களுடைய பயில்வான்களும் "சதாமக்கர் சூது, மோசம் முதலாகிய எண்ணங்க ளையே உடையவர்களா யிருந்தார்களென்று அபகீர்த்தி உண்டாகும் தவிற இந்த பஹிராமென்பவன் அப்படி என்ன மிகுந்த பராக்கிரம சாலியானவன் அவனை சண்டைக்களத்தில் எதிர்த்து ஜெயிக்காமல் மோசச்சுருத்தாய் சூதுமார்க்கம்செய்து பிடித்துக்கொண்டுவர," அந்த பஹிராமென்பவன் என்ன அப்படி ஒருவருக்கும் நிகரிலாத சுத்த வீரன் அவனைப்பிடிக்கஇயலாமல்போவதற்கென்றுரைத்தார் அவைக ளைக்கேட்டபாதுஷாவானவன் அமீரைநோக்கிஅச்சபஹிராமென்பவன் எங்கிருக்கின்றன்?" அவனை இங்கே வரவழைத்து தர்பாரில் "ஹாஜர் செய்யுங்கள். அவனை எவ்விதமாய்ப் பிடிக்கப்பட்டதென்று யான்கே ட்டு தெரிந்துக்கொள்கின்றேன் யென்றுரைத்தான். உடனே அமீர் அவர்கள் தங்கள் கூடார்த்தின்கண் விட்டுவந்த பஹிராமென்பவனை வரவழைத்தார்கள் அவன்வந்து தர்பாரில் ஹாஜராய்நின்றன். அப் பொழுது பாதுஷா! அவனை நோக்கி கேட்கின்றன பஹிராமே குஸ்து மென்பவன் உன்னை ஜவாம்மர்தி ஆணுவங்காட்டிஎதிர்த்து ஜெயித்து பிடித்தானா? அல்லது நாமர்தா னமாகிய சூதுமார்க்கமாய் பிடித் தானா? வென்றுகேட்டான். அப்பொழுது பஹிராமென்பவன் சொல் லுகின்றன் பாதுஷாவே தங்களுடைய கண்களினால் என்னைபார்த்து நன்றாய் தெரிந்துகொள்ளுங்கள் என்னை நாலுமாதகாலமாய் அன்னந் தண்ணீராகாரமில்லாமல் வாட்டிவதக்கி தூர்ப்பலமாக்கி யான் மிக வும் பலஹீனப்பட்டு இருக்கின்றதை தாங்களறிந்து கொள்ளுங்கள் இவ்விதம தூர்ப்பல மடைந்திருக்கும் இவ்வேளையிலும் என்னுடன் அந்த குஸ்துமென்பவனை விடுவீர்களாகில் அவன்கரத்தில் பிடித்தி ருக்கும் வாளாயுதத்தை பிடுங்கிக்கொள்ளாதபோனல் யானவனுக்கு அடிமையாகி விடுகின்றேன் என்றுரைத்தான் அவ்வேளையில் குஸ்த் தும் தர்பாரில் படைமுஸ்தீப்புக்க ளணிந்தவனும் ஹாஜரு யிருந் தான் அவனை நோக்கி பாதுஷாவானவன் ஏ குஸ்துமே பஹிறும்

சொன்னவைகளை கேட்டுக்கொண்டிருந்தியல்லவா அதற்கு நீ என்ன சொல்கின்றாய் என்று கேட்டான் அப்பொழுது குஸ்தாபென்ப வன் கோபத்தினால் கலேயை குனிந்துகொண்டு பூமியைபார்த்திருக் தான் அதையறிந்த பாதுஷா பஹிராமை நோக்கி சொல்லுகின்றான் யாதினில் நீ நம்முடைய அமீர் ஹம்ஜாவோடு ஜோர்செய்கின்றாயா வென்று கேட்டான் அதையுணர்ந்த பஹிரும் பாதுஷாவே பயில்வா னென்று பெயர் படைத்து கையிலாகாத கைம்பெண்டாட்டிகளை போல் முடியாதென் றுரைப்பவனுக்கு பயில்வான்பட்டம் யாதற்கென் றி சொல்லியதோடு தங்களுத்திரவாலும் இதோ தயாராயிருக்கின் றேன் வரசொல்லுங்களென்றான் அதை யறிந்த அமீர் அவர்கள் பாது ஷாவைநோக்கி ஜஹாப்பனுவே பஹிரும் என்பவன் அதிக தாப்பலப் பட்டு அதிக பலவீனனுய் இருக்கின்றபடியால் அவனை கார்ப்பதாசர் வரையில் சுயோன சவரகூஷனில் வைத்து பின்பு குஸ்த்திக்கி வீட்டு பார்த்தால் அப்பொழுது குவ்வதை தெரிந்துகொள்ளலாம் இப்பொ ழுது பார்ப்பதனுல் என்ன பிரயோஜனம் உண்டாகுமென்றரைத்தார் அதைக்கேட்ட பாதுஷா அமீரே தாங்கள் சொல்லியது மிகவும்சரி அதுபோல் கார்ப்பதாசர்வரையில் தங்களுடைய சமுகத்திலேயே பஹிருமைவைத்து நல்ல ஹுன் தீன் முதலியவைகளை கொடித்து தயார்செய்யுங்கள் அக்கார்ப்பதாசர்களும் சென்றபின் இருவரும் தற்பாரில்ஹாஜருனுல் உங்களுடையசாமர்த்தியத்தை அறியலாமென் றரு அவைகளைசெவியுற்ற அமீர் அவர்கள் சந்தோஷமுற்றவர்களாய் பஹிருமை தங்கள் கூடாரத்திற்க்கழைத்துச்சென்று கார்ப்பதாசர்கள் வரையில் மிக நல்ல விதங்களாகிய ஆகாருதிகளை புகிக்கக்கொடுத்து தயார்செய்தார்கள் காற்பத்திஞாம்நாள் அமீர் அவர்களும் பஹிராம் என்பவனும் தர்பாரில் பாதுஷாசமுகத்தில் ஹாஜராஞர்கள் அப் பொழுது பாதுஷா அமீர் அவர்களை நோக்கி சாகிப்கறமே இப்பொ ழுது பஹிரும் தயாருகி இருக்கின்றபடியால் தர்பாருக்கு முன்பில் குஸ்த்திசெய்யுங்கள் என்றரைத்து பஹிராமைநோக்கி ஓ சந்தவீர னே உன்னுடைய எண்ணம் எப்படி இருக்கின்றது சொல்லென்றான் அவ்வார்த்தையைக்கேட்ட பஹிராம் என்பவன் பாதுஷாவை நோக்கி சொல்லுகின்றான் ஜஹான்பனுவாகிய பாதுஷாவே தாங்கள் வாய்தி ரத்தசொன்னதின்பின் எப்படியான் மருத்தரைக்கக்கூடும் இதோ தயாருபிருக்கின்றேன் என்றரைத்தான் அதையறிந்த பாதுஷாவான வன் பஹிராமைநோக்கி நல்லவார்த்தையுரைத்தாய்காமும் வேடிக்கை

பார்ப்போம் இறுவரும் தங்கள்தங்கள் ஜோக்களைகாண்பியுங்கள் என் றரைத்து குஸ்திசெய்ய உத்திரவழித்தான் உடனே அமீர் அவர்களும் பஹிராமென்பவனும் புலித்தோல்களால் அமைக்கபெற்ற சொட்டிமோ ஜாக்களணிந்து லங்கோட்களை இழுத்துவரிந்து கட்டிகொண்டு பூஜம் தட்டியவர்களாய் கோதாவென்னும் சண்டைக்களத்தில் இரங்கி ஒரு வர்க்கொருவர் கழுத்தில் கரங்களைபோட்டு மாட்டியிழுத்து மற்புத் தம்செய்ய ஆரம்பித்து இருவர்சிரங்களையும் ஒன்றேடொன்று மோதி கொண்டார்கள் அம்மோதுதலானது எப்படி இருந்தெனில் எழுகி னுலமைத்த கிரசாகினும் ஆயிரம்சுக்கல்களாய் உடைந்துபோய்விடும் அவ்வித உரத்த இடியாய் இடித்துகொண்டார்கள். அதனுல் இரு வருக்கும் யாதும் அபாயகரமுண்டாசவில்லை பின்னும் ஒருவர்கொரு வர் குஸ்தியில் மல்லாடிகின்றார்கள் ஒருவரையொருவர் ஏய்கர்களப் பமுடியாமல் வெகுநேரம்குஸ்திசெய்தார்கள் இவ்விதம் நடக்கும் வேளையில் அமீர் அவர்கள் அல்லாஹு அக்பரென்ற உரத்த சப்தத் தோடும் பஹிராமென்பவனை இடுப்பில் கையைப்போட்டுபிடித்து ஓரே மூச்சில்தூக்கி சிரசுக்குமேல் உயர்த்திக்கொண்டார் அதையறிந்தயா வரும் சஹபாஷ்! சஹபாஷ்! மரஹபா! மரஹபாவென்ற உரத்தசப்தமி ட்டார்கள் அமீர்பஹிராமை அப்படியேஅரைநாழிகைநேரம் வரையில் கரத்தில்தாங்கியவருய் அங்குமிங்குஉலாவிதிரிந்தார் அப்பொழுது பஹிராம்என்பவன் அமீர் அவர்களைநோக்கி ஸாஹிப்கருனே யான்தங் களுக்கடிமையாகிவிட்டேன் என்னை பூமியிலடித்தசாகசெய்யாமல்வி ட்டுவிடுங்களென்றரைத்தான். உடனே அமீர் அவர்கள் அவனை பது வீராய் பூமியில்விட்டார்கள். உடனே பாதுஷா மனக்களிப்பெய்தியவ னும் அமீர் அவர்களுக்கும் பஹிராமென்பவனுக்கும் மிகவிலையுயர்ந்த அனேகம் கில்அத்தென்னும் வெகுமதியழித்து அமீரை மிகவாய்ப் புகழ்ந்தான் அமீர் அவர்களும் பாதுஷாவுக்கு சலாம்சொன்னர்கள். பின்பு அமீர் அவர்கள் பஹிராமென்பவனைநோக்கி பஹிராமே! இனிநீர் நமது ஹப்தக்லீம்கிஸ்வர் பாதுஷாவினுடைய சமுகத்தில் இருக்கலா னதண்டையிருக்கின்றதுயென் றரைத்தார். அதைக்கேட்ட பஹிராம் அமீர் அவர்களைநோக்கி ஷாஹேஜஹான் அடியேன் தங்களைத்தவிர வேறொருவரிடத்திலும் இருக்கமாட்டேன் தாங்கள் என்னை நிரய மில்லாமல் கிரயத்திற்குவாங்கிக்கொண்ட ஜமானுயும் யான் தங்களு க்கு அமைமையாயும் ஆகிவிட்டபடியால் தங்களைத்தவிர வேறொருவரி டத்திலும் இருக்கமாட்டேனென் றரைத்தான். இவ்வார்த்தைகளைக்

வெட்டிருந்த பாதுஷாவானவன் அமீரைநோக்கி அயே ! அபுல் உலா ! அந்தபஹிராம் தங்களிடத்தில் இருந்தால் என்னிடத்திலிருப்பதற்கு சமானமேதவிர வேறில்லையென்றுரைத்து பின்னும் அதேவெகுமதிகளை அவ்விருவருக்கும்கொடுத்தான். பின்பு அமீர் அவர்கள் பஹிராமைத்தனதுபவ்ஜூக்குள் அழைத்துச்சென்றார்கள். அப்பொழுதுபவ்ஜில்உள்ளவர்கள்யாவரும் பஹிராமென்பவனுக்கு அதபுமரியாதைசெய்தார்கள். அமீர் அவர்கள் கூடாரமுதலாகிய யாவும் தனியேஅமைத்துக்கொடுத்து இருக்கும்படி உத்திரவுசெய்து, தங்களுடைய டவ்ஜில் நின்றும் நீன்முதலாகிய பொன்வெள்ளி சோடனைகளோடு நாற்பது இறக்குதேசத்தின் அதிமேன்மையான குதிரைகளும், இன்னும் எழுபது ஒட்டகங்களும் அவைகட்காருமான சாமான்களும் ஆற்றுக்கணக்காக கோவேறுகழுதைகளும் அதேபருப்பமான காட்டுகழுதைகளும் கூடுத்து, தங்களுடைய மென்தேசத்தின்வருமானமாகிய செம்பாதிப்பங்கையும் இனமாய்க்கொடுத்துவிட்டு, அமீர் அவர்கள் தாங்கள் மக்மூராநகரத்தை விட்டும் புறப்பட்டதுமுதல் பஹிராமுக்கு இளம்முதலியாவும் கொடுத்ததுவரையில்நடந்தசரித்திரத்தில்எழுதி உம்ரு ஐயார் அவர்கள் காதிலிருந்து காஜா அப்துல்முத்தலீபு அவர்களிடம் கொண்டுபோய் கொடுக்கும்படி மக்மூராநகரத்திற் கனுப்பிவைத்தார். இம்மிவ்வாறிருக்க சாலானிக்கிராஜரின்செய்தியை சொல்லுகின்றோம். அதுயாதெனில், பஸ்ரத்தக்கென்பவனும்சாலானிக்கிராஜர்களும் ஒருமித்துகூடிப்பேசி யோசனைசெய்துகொண்டு குஸ்தமென்பவனிடத்தில்சென்று அவனிடத்தில்முறையிட்டழுகலாயினர். இம்மியாதெனில் சிறுவர்களும் பெரியோர்களும் ஒன்றுசேர்ந்து பெருங்கூச்சலுடனே சொல்லுகின்றார்கள் ஓ! பயில்வானே நாங்கள்யாவரும் இந்த அமீர் ஹம்ஜாவினுடைய முன்பில் அதிகாணமுற்று, வெட்கித்தலைகவிழ்ந்தவர்களாய் எங்களுடையஇஜ்ஜத்து,ஆபருமுதலியவைகளை இழந்து இருக்கின்றோம்.ஆகையால், அந்த ஹம்ஜாவை எவ்விதத்திலாவது பெயரே இல்லாமல் காணுமலாக்கிப்போடுவதற் காகவேண்டிய உபாயத்தைதாங்கள்செய்துமுடிக்கவேண்டும். அப்படிசெய்யாதவரையில் நாங்களிவ்வூரில் ஜீவித்திருப்பது ஹராமாகிவிடும். ஒருவரும் உயிரைவைத்துக்கொண்டிருக்கமாட்டார்கள். ஒவ்வொருநாளும் பாதுஷாவினுடைய உதவி அந்த ஹம்ஜாவுக்குமென்மேலும் அதிகரித்துக்கொண்டு வருகின்றது. நம்மினத்தவர்களுக்குச் செய்யும் உதவிகள்

நாளுக்குநாள் கூடிணதிசையடைந்து வருகிறது யென்றுரைத்தழுதார்கள். அதைக்கேட்ட குஸ்துமென்பவன் அசட்சணங்களைநோக்கிசொல்லுகின்றான். வல்லமையிலும் பலத்திலும் ஜோதியிலும் ஹம்ஜாவை எதிர்க்க இவ்வூரிலும், மற்றெந்த்வூரிலும் ஒருவன் இருக்கிறானென்று கனவிலுமநினைக்க இடமில்லை. ஆகையால், இன்னும் இரண்டுமூன்று தினங்களில்அந்த ஹம்ஜாவுடன்கல்லாசப்செய்துபழகி எந்தவிதத்திலும் அவனைகொல்வேன். அவனுடையநாமமே இவ்வூரில் இல்லாமற்செய்துவிடுகின்றேனென்யென்றுரைத்து, அன்றிரவைபெல்லாம் குபாடமான எண்ணத்திலேயே போக்கி பொழுதுவிடிந்தவுடனே குதிரையின்மீது வாருகி அமீர் அவர்களுடைய பவிஞ்சின்கண்சென்று, அமீர் அவர்களின் சமுகத்திலடித்து மிகவும் மரியாதை அதபுடனேநயந்துவார்த்தைகளாய்பேசி உறவாடினான். அதை அறிந்த அமீர் அவர்கள் அவனைமிகவும் அந்நியமாய்பேசி ஆசனங்கொடுத்து இருக்கச்செய்தார்கள். பின்பு, இருவரும் குதிரையின் மீதேறி பாதுஷாவினுடைய சமுகத்தில் போவதற்காக செல்கையில் வழியில் இருவரும் அநேக நயந்த சம்பாஷணைகளாய் வசனித்துக்கொண்டு சென்று பாதுஷாவினுடைய தர்பாரில்போய் சிலநேரமிருந்து, பின்பு அமீர் அவர்கள் தங்கள் பவ்ஜிற்குசெல்ல எழுந்து, தர்பாரைவிட்டு வெளியில்வந்தார்கள். அப்பொழுது குஸ்துமென்பவனும் அமீர் அவர்களுடன்கூட்டவேசென்று அமீர் அவர்களின் கீமாவென்னும் கூடாரம்வரையில் கொண்டுபோய் விட்டுவிட்டு, தன்னுடைய மோசக்கருத்தென்னும் சூழ்ச்சிய சுருக்குவலையை விரித்துவைத்துவிட்டு, திரும்பித்தன்னிருப்பிடம் வந்துசேர்ந்தான். பின்பு, ஒவ்வொருநாளும் கரீலமாலை இரண்டுவேளைகளிலும் அமீர் அவர்களைபோய் கண்டுகொள்வதுபோல் தான் விரித்துவைத்திருக்கும் மோசவலையை சுருக்கமில்லாமல் செய்துவைத்துவிட்டு வருவதுபோல் போய்வந்துகொண்டிருந்தான். அவ்விதம் இருக்கும்நாட்களில் குஸ்துமென்பவன்செய்யும் பலவிதைகளிலும் மரியாதைகளிலும் நன்மதிக்கைகளிலும் அமீர் அவர்களுக்கு அவன்மீது நம்பிக்கையுண்டாகும்படி செய்துக்கொண்டான். இவ்விதம்நடந்துவரும் நாட்களில் ஒருநாள் குஸ்துமென்பவன் அமீர் அவர்களைநோக்கி மிகமரியாதையோடு சொல்லுகின்றான் யாதெனில், அமீரே ! தங்களுடன் யான்நேசித்து யாம் இருவரும் அன்னியோன்னியமாயிருப்பது இம்மதாயின் பட்டணமுழுவதும் பறையறைவித்தது போல்யாவருக்கும் கன்றுப்பிரஸ்தாபமாயிருக்கிறது ஆகையால், இவ்

வதம் அங்கியோங்கியமாய் இருக்கும் தங்களுக்கு யான்யாதொரு
விருத்து முதலாகிய நடப்புகள்நடத்தாமல் இருப்பது என்மனதை
பெரும்நோவினை செய்துகொண்டிருக்கின்றது. ஆகையால் என்மீது
கிருபைவைத்து கடைக்கண்நோக்கி என்னுடைய தோட்டத்திற்கு
எழுந்தருளியாகி தங்கள் பாதாரவிந்தங்களை அத்தோட்டத்தின்கண்
படச்செய்து காலைந்துதினம்வரையில் அவ்விடத்தில்தானே சுகண்
டியனுபவித்து என்னை கனப்படுத்துவீர்களென்று தங்கள் மேலான
கருத்தை வெகுவாய் மன்றாடி கேட்டுக்கொள்ளுகிறேனென்று. தான்
வித்துவைத்திருக்கும் மோசவலைக்கு உருவசருக்கென்னும், கபிறு
கோத்துவைத்தான். இப்பாசாங்கு வார்த்தைகளை சாதுவாகிய அமீர்
அவர்கள் கள்ளங்கபடில்லாமல் மெய்யென்றுநம்பி சம்மதித்து விட்
டார்கள். அப்பொழுது பாதுஷாவினுடைய தர்பாரின்வழக்கம் யா
தெனில் ஒவ்வொரு வாரம் அதாலத்தென்னும் நீதம்புரிவதும் மறுவாரமுழுவ
தும் ஆட்டம்பாட்டம் கூத்து கேளிக்கை முதலாகிய சுகுணசுந்தரி
களின் சல்லாபவிநோதத்தில் போக்குவதுமாய் இருந்தபடியால் குஸ்
தும் என்பவன் அமீர் அவர்களைவிருந்து செல்லியழைத்த நாளானது
பாதுஷாவினுடைய அந்தப்புரத்தின் கேளிக்கைமுறையாயிருந்தபடி
யால், குஸ்தும் என்பவன் அமீர் அவர்களைநோக்கி காயகமே இவ்வா
ரமானது பாதுஷாதர்பாரில் வராதநாளாய் நமக்கு பிரியத்தானவார
மாயிருக்கின்றபடியால் இவ்வாரத்திற்றானே இவ்வதிமையானவனு
டைய தோட்டத்தின்கண் யெழுந்தருளியாகவேணுமென்றுகேட்டுக்
கொண்டான். அப்பொழுது அமீர் அவர்கள் அவனுடைய மாயவலை
யை அறியாமல் தாங்களும் பஹ்ராம், மக்பூல் இன்னும் சிலநேயர்க்
ளையுங்கூட அழைத்துக்கொண்டு குஸ்துமுடைய தோட்டத்தைநாடிச்
சென்று, அத்தோட்டத்தின் வாசற்படியை அடித்தார்கள். அப்பொ
ழுதுஎன்னகாண்கிறார்களானால் அத்தோட்டத்தின் வாசற்படிதொ
டுத்து குஸ்துமுடையமாளிகைவரையில் வெள்ளிசரிகையினால் விநோ
தமான பூவேலைகள்செய்தமக்மல், கிம்காப்முதலாகிய பட்டுகளை விரி
த்து அதிவிநோதமாய் அமைத்திருந்தான். அதன்மேல் அமீர்முதலா
கிய யாவரும்நடந்து மாளிகையிற்போய்ச்சேர்ந்து, இருந்தார்கள்.
அம்மாளிகையில் அமீர் அவர்களுக்காக மிகவிலையுயர்ந்த மேலானவிரிப்
புகளை விரித்துவைத்திருந்தான். யாவரும்கண்டு, அதிகசந்தோஷ
முற்றவர்களாய் அமீர் அவர்கள் குஸ்துமென்பவனை தாரிப்பென்னும்
புகழ்ச்சியாய்க்கொண்டாடினார்கள். அப்பொழுது அக்கள்ளன் அம்ம

தாயின் பட்டணத்தின் அதி உன்னதமாகிய மேவாக்களென்னுமிட்
டாய், ஒல்வாமுதலாகிய வஸ்துக்களும் நேர்த்தியான ருசிகரம்பொ
ருந்திய அறுசுவை பதார்த்தங்களும், இன்னும் நானாவித சிற்றுண்டி
களும் அமீர் அவர்களின்முன்பில் தட்டந்தட்டமாய்க் கொண்டுவந்து
நிறப்பினன். அவைகளை யாவரும்மனமகிழ்ச்சிபோடு புசித்தானபின்
ஷாபென்னும் ஷர்பத்துவகைகளை விசித்திரவேலையமைந்த பளிங்கு
கிண்ணங்களில் அதிருபலாவண்யமுள்ள சிறுவாலிபர்கள் கரங்களி
லேந்தி கொண்டுவந்துகொடுக்க யாவருமவ்வாங்கியருந்தி ஆனந்தமுற்
றிருக்கும்வேளையில் குஸ்துமென்பவனும் நாழிகைப்போக்குவதற்காக
பல்வேறுவர் செய்பவனைப்போல் அங்குமிங்கும் நடந்து திரிந்து
கொண்டு நடித்துக்காண்பித்துநின்றான். அவ்விதம் சுற்றித்திரிந்து
கொண்டிருந்தானும் தூண்டிக்காரனுக்கு மிதப்பின்மேல் கண்ணென்
றபடி தான்செய்த குபாடமாகிய மயக்குமருந்தின் குணம்தலைக்கேறி
விட்டதாவென்று பரிசோதனைசெய்வதற்காக அமீர் அவர்களுடன்
கூட வந்திருக்கும்வீரர்களொவ்வொருவரை கவனித்து உற்று
நோக்கி திரிந்துசென்றுகொண்டிருந்தான். அமீர்அவர்கள் குஸ்துமு
டைய மாளிகைக்குவருவதற்குமுன்னமே அக்கபடன் தனக்கு அதிக
நம்பிக்கையுள்ள நாலுமூன்றுவீரர்களான பயில்வான்களை அத்
தோட்டத்தின்கண் பதுக்கிவைத்திருந்தான். அவர்களிடத்தில் ஏற்
க்கனவேசொல்லி பதுக்கிவைத்தகாரணமானமே அக்கபடன் தனக்கு அதிக
நம்பிக்கையுள்ள நாலுமூன்றுவீரர்களான பயில்வான்களை அத்
தோட்டத்தின்கண் பதுக்கிவைத்திருந்தான். அவர்களிடத்தில் ஏற்
க்கனவேசொல்லி பதுக்கிவைத்தகாரணமானமே யாதெனில் வீரர்களே!
யான் ஏச்சமயத்தில் மூன்றுதரம் கையோடுகைசேர்த்துத்தட்டி குஸ்
துத்தென்னும் சப்தம்செய்கின்றேனை அச்செய்கையறிந்து நீங்கள்
யாவரும் அதிசுறுசுறுப்பாய் வந்து விழுந்து ஹம்ஜாவையும் அவன்
தோழர்களையும் முன்பின் யோசியாமல்வெட்டி துண்டமிரண்டாய்
வீழ்த்திவிடுங்கள் கபர்தார்! கபர்தார்!! பாதுஷாவினுடையவும் புஜரூ
மெஹருடையவும் அச்சமென்பதை அறவேமனதைவிட்டு நீக்கி அவ்
வேளையில் துணியவேண்டுமென்று சொல்லிவைத்திருந்தான். மயக்
மருந்துசேர்த்த ஷர்பத்து குடிப்பாடிவிட்டு பரிசோதனைபார்த்
துக்கொண்டிருந்த குஸ்துமென்பவன், சுற்றிச்சுற்றி கடைக்கண்சா
த்து ஒவ்வொருவரையும் பார்த்துக்கொண்டு வரும்வேளையில் நேர
மும் நடுப்பாதி இரவாகிவிட்டது. அவ்வேளையில் மருந்தின் லாகிரிம
யக்கமானது தலைக்கேறி அமீர்முதலாகிய யாவருக்கும் வெள்ளைகறுப்
பென்று புலப்படாதவண்ணமாய் மயக்கம்உண்டாகிஇருக்கும் அவ்வே
ளையில் குஸ்துமென்பவன் மாளிகையின் வெளிவாசற்படியில் வந்து

நின்று மூன்றுதரம் கைதட்டிகோஷ்டஞ்செய்தான். உடனே பதுங்கி யிருந்த நானூறுவீரர்களும் பரபரப்புடனே யெழுந்துவந்து குஸ்தமு டன் சேர்ந்து மாளிகைக்குட்புகுந்து, சிலர் அமீர் அவர்கள் சாய்ந்து கிடக்கும் ஸ்தானத்தில் அவர்தலைமாட்டிலும் பலர் அமீர் அவர்களின் தோஸ்துகளாகிய சிற்சிலரிடத்திலும் போய்நின்று வாளையுருவி கரத் தில்பிடித்துக் கொண்டிருக்கும் சமயத்தில் குஸ்துமென்பவன் அமீர் அவர்களின் முன்பிலடுத்து விழிகளைநிறுத்து பல்லைநெறநெறத்து ஏ! அரசர்களின் ஜாதியானே நீ! இம்மதாயின்னென்னும் பட்டணத்தில் வந்தபின் அதிகமாய் தலையெடுத்து நீக்குபோக்கு தெரியாமல் மதங் கொண்டு பமதையாய் ஆணவம்படைத்துவிட்டா யல்லவோ? இதோ பார்உன்னுடைய கலாவென்னும் மௌத்துவந் தடுத்துவிட்டது, யென்றுசொல்லி வாளாயுதத்தையோங்கி அமீர் அவர்களின்சிரசைலக்குவை த்து ஓர்வெட்டுவெட்டினான். அவ்வேளையில்பஹிராம்கிர்த்காக்கானே சீன் யென்பவர் மயக்கத்தில் மூழ்கி தலைதடுமாறியிருந்தும் அமீர் அவர் களை குஸ்துமென்பவன் வெட்டவே அமீர் அவர்களின்மீதுவெட்டுவிழா மல் தன்னுடைய தேகத்தை கேடகமாகபாவித்து அவ்வெட்டைதாங் கினான். அவ்வெட்டானது அமீர் அவர்களின்மேனியில்படாமல் பஹி ராமுடைய முதுகில்பட்டது அப்படிப்பட்ட கத்தியின்வெட்டானது கேரே ஓரேபிளப்பாய் முதுகுமுழுவதும் இருபிளப்பாய்பிளந்துவிட் டது. எலும்புகளெல்லாம் துண்டுதுண்டாகி பிளந்துபோனபடியால் பஹிராமுடைய குடல்களெல்லாம் முதுகின்வழியாய் வெளியே பிது ங்கிவிட்டது. அவ்வேளையில் மக்பூல்வபதாரானவர் குடிப்பில் மிதமாய் குடித்தவராயும் மஜ்பில்யென்னும் சபையின் காரியம் எவ்விதமாகின் றதென்று பார்த்தவருமாய் உஷ்பாரென்றும்ஜாக்கிரதையோடு இருந் தபடியால் இக்கோலாகல கொடுமையைக்கண்ட வுடனே வில்லை வளைத்து நாணேற்றி அம்பைதொடுத்து எய்ய ஆரம்பித்து ஒன்றின் மேலொன்றாய் சில அம்புகளைவிடுத்தபடியால் "மக்பூல் உடைய அம் பின்சேதி முன்னமேசொல்லி யிருக்கிறோமல்லவா" ஆகையால் மக் பூலுடைய அம்பின்கூர்மையால் நானூறுவீரர்கள்வரையில் பூமியிற் சாய்ந்துமடிந்தார்கள் அத்தோட்டத்தில் பிணக்கு வியல்களாக்கிவிட் டார். அச்சமயத்தில் குஸ்தமென்பவன் அமீர் அவர்களை வெட்டிய வெட்டு பஹிராமென்பவரின் முதுகில்பட்டது அறியாமல் அமீர் அவர் கள்தான் வெட்டுண்டிறக்துவிட்டாரெனக் கருதி இனி இவ்விடத்தில் நின்றிருந்தால் மக்பூலுடையமனுஷியைபோக்க அம்புக்கிரையாகிசாகு

வதிற்சந்தேகமில்லையென கருதியவனும் தன்னுடையசேனையர்களில் குத்தண்டிறந்தவர்கள்போக மிருதமாயுள்ளவர்களையும்கூட அழைத் துக்கொண்டு ஓட்டம்பிடித்தான். பின்பு, அமீர் அவர்களுக்குமருந்தின் மயக்கம்தெளிந்து கண்ணைவிழித்து பார்த்தார் அவ்வேளையில் அம்மஜ் லீஸ் இருக்கும் கோலாகலகொடுமையை தெரிசித்து மனம்பதறி இஃதென்ன தாவத்தின் விநோதம் இப்படியிருக்கின்றது. மானிடை யானது நாணக்களமாய் ஆகிவிட்டதேயென்று பஹிராம் வெட்டுப்பட்டு குடல் வெளியேபிதுங்கி அபாயகரமாய்கிடப்பதையும், நூற்றுக்கதிக மான வீரர்கள் அம்பாலெப்புண் டிறந்துகிடப்பதையும் கண்ணுற்று மக்பூலையழைத்து என்னவிநோதம் இங்குநடந்ததென்று வினவினார். அதற்குகேட்ட மக்பூல் குஸ்துமென்னும் நாமதாரானவன் செய்த குபாடமான தந்திரவேலைக்குள் நம்மையெல்லாம் ஒருவருமறியாத விதமாய்சிக்கச்செய்த இக்கோலமாக்கினானென்றுரைத்து, இன்னும் சொல்லுகிறார். அமீரே! அந்த நாமதாரானபடி, பெட்டை, உலுத் தன், கைம்பெண், கசடன், தரோகியாகிய குஸ்துமென்பவன் நம்மை நேசித்து,குபாடவஞ்சனைசெய்து நம்மையிக்கனமுத்தவந்து, கொல்ல வழிதேடிவிட்டான்அத்தரோகியானவன் அமீரே! நங்களைவெட்டவா ளாயுதத்தையோங்கிவீசும்பொழுதும் இந்தபஹிராம்என்பவர் குறுக்கிட்டு தம்முடைய தேகத்தைகாட்டி தங்களின்மீது வெட்டுவிழாமல் தடுத் தபடியால்பஹிராமுக்கு வெட்டுப்பட்டுகடுங்காயமுற்றார் யென்றுரை த்தார். இச்செய்தியானது மதாயின்பட்டணமுழுவதும் பரவி குஸ்து மென்பவன் ஹம்ஜாவை குபாடமாய்விருந்துசொல்லி அழைத்துசெ ன்றுவெட்டி கொன்றுவிட்டான்யென்று பிரபல்லியமாகி விட்டது. அச்செய்தியை நௌஷேரவான்கேள்வியுற்று அடக்கொண்ணாக்கோப கரத்திலாழ்ந்தியவனும் விசனமுற்று தன்னுடைய புத்திரன் ஹர்மூஸ் தாஸ்தாரேன்பவனையும், புஜூர்ச்மெஹரேன்பவரையும், பஃதக்யென் பவனையும் அழைத்து கீழ்கள் அதிசிக்கிரமாய்ச்சென்று ஹம்ஜாவினு டைய செய்கியையறிந்து அவருக்குகாயப்பட்டு உயிர்தப்பியிருந்தால் மருந்து முதலாகிய சிகிச்சைகளினால் அவரைசௌக்கியப்படுத்தி கோப் பாற்றுங்கள் கபர்தார் சிக்கிரம்போய் ஜாக்கிரதையாய் பார்த்துசெப் யவேண்டியவைகளைச் செய்யுங்களென்றுரைத்து அவர்களை அமீர் அவர்களிடம் அனுப்பிவிட்டு அலக்மாசாத்தூர்தஸ்த் என்பவனுடன் மூவாயிரம்குதிரைவீரர்களை சேர்த்தனுப்பி குஸ்துமென்பவனைதே டிப்பிடித்து வாருங்களென்று அனுப்பிவைத்து, அவ்வீரர்களைநோக்கி

புகன்றதாவது ஓ அலக்மார்சாத்னூர் தஸ்தே ஈ, குஸ்தும் என்பவனை பிடித்துவந்தால் உனக்குவேண்டிய இனம்கொடுப்பேனென்றுசொல்லியனுப்பினன். இவ்விதம் அலக்மா என்பவன் தன்னைபிடிக்கவருகின்றனென்று குஸ்தும்யென்பவன் அறிந்தவுடனே தான் இன்னவிடம் போனனென்று புலப்படாதவிதமாய் ஓடி ஒளித்துக்கொண்டான். பின்பு, புஜ்ருச்மேஹர், ஹர்முஸ்தார்பஹ்த்தக், ஆகிய இம்மூவரும் குஸ்தும் என்பவனுடைய தோட்டத்தில்சென்று மாளிகையில்நுழைந்து, அமீர் அவர்கள்சலாமத்தாகயிருக்கக்கண்டு, சந்தோஷமுற்றவர்களாய் அல்லாஹுத்த ஆலாவைபுகழ்ந்து பஹிராமுடைய படகாயத்தைநோக்கி அதிக விசனமுற்றவர்களாய் திகைத்துநின்றார்கள் அதையறிந்த அமீர் அவர்கள், காஜாபுஜ்ருச்மேஹர் அவர்களை நோக்கி, காஜாவே தாங்கள் ஹக்கிமாக யிருக்கின்றபடியால் ஆலோசனைசெய்யாமல் அதிசீக்கிரமாய் பஹிராமென்பவருக்கு இலாஜ் என்னும் பக்குவங்கள் செய்யுங்கள், அவருக்கு சொல்லப்படாமல் இக்காயத்தோடு இறந்து விடுவாரில் சாசனி ஹுனூரின் வம்சங்கள் யாவையும் பெயருக்காகிலும் ஒரு மனுஷன்டில்லாமல்வெட்டி நாசமாக்கி காகம் பருந்திற்கு இரையாக்கிவிடுவேன். இது சத்தியமென்றுரைத்தார் அவ்வேளையில் புஜ்ருச்மேஹரானவர் பஹிராமுடைய காயத்தைப்பார்த்துமதிமயங்கி திகைத்து. யாது செய்கின்றதென புலப்பட்டாதவராய் யோசிக்கின்றார், யாதெனில காயமோ மிகவும் அபாயகரமாயிருக்கின்றதாகிலும் குடல்கள்யாவும் வெளியில் வந்துவிட்டது இதை எவ்விதம் உள்ளே தள்ளுகின்றது எவ்விதம் தைத்து மருந்துவைப்பது என்று பலவாறுயோசித்து கிற்தம்வேஹியில் (பாபாயேதூந்தகான்) உஸ்தாத்ஷோபிதேபாஜகாண்) ஜான்ரேஷ்தருசிந்தே காபருன்) ஐயாரேஜமான்) என்னும் காஜா, வும்பிபனு, வுயாஜுரி அவர்கள் வந்துசேர்ந்துவிட்டார்கள். வந்தவுடனே அமீர் அவர்களிடத்தில் காஜா அப்துல்முத்தல்லீபு அவர்களுடைய க்ஷேம சமாச்சாரங்கள் யாவையும் சொல்லிமுடித்தவிட்டு பஹிராமுடைய காயத்தைப்பார்த்து அதிகமனவருத்தமுற்றவராய் வாய்விட்டலரியழுது அமீர் அவர்களைநோக்கி சொல்லுகின்றார். அயே, சாஹேபேகரான் இவ்விதன்ன கொடுமை இவ்விதமாய்தான் மனிதர்களிடத்தில் தோல்த்தென்னும் சிநேகம்செய்கின்றதோ கன்றயிருக்கின்றது சினேகிதம்செய்தாலும் இவ்விதம் தான் செய்யவேண்டும். இவ்விதம்செய்வதற்காகதானே இந்தபஹிராமுக்கு உதவிபுரிந்து நேசித்தீர்களோ என்றுரைத்தார். இவ்வார்த்தையைக்

கேட்ட அமீர் அவர்கள் உம்ருவைநோக்கி உம்ரே இவ்வேளையானது நகிஹத்து செய்யும் வேளையல்ல மனைபொருளாய் மதிழ்ச்சியைப் போல் மனிதனை மரியாதைகுலைக்கும் வேளையல்ல ஆகையால்சீக்கிரம் பஹிராமென்பவருக்கு சௌக்கியமாகும் வழியை தேடும் அவருடைய விஷயத்தை நன்றாய் கவனித்து யோசனைசெய்யும் என்றுரைத்தார். அப்பொழுது உம்ருவானவர் புஜ்ருச்மெஹரை நோக்கி சொல்லுகின்றவராகினார் யாதெனில் தாங்கள் அல்லா சுபுஹானஹுவத் தஆலாவினுடைய உசவியைக்கொண்டும் ஹக்கீம்முல் ஹக்மாவாக விருக்கின்றீர்கள் ஆகையால் பஹிராம் விஷயத்தில் என்னஆலோசனைசெய்து முடிவுகட்டினீர்கள் என்றுகேட்டார் அதை செவியுற்ற காஜாவானவர் உம்ருவை நோக்கி உம்ரே! அவர் விஷயத்தில் யோசித்தவனுகத்தானிருக்கின்றேன் காயமோ அபாயகரமானகாயமாயும் குடல்கள் வெளியில் பிதிங்கியும் இருக்கின்றபடியால் கங்களினால் தொட்டு வேலை செய்யும்படியான வேளையிதல்ல கங்களினால் தொட்டால் இவர் பிழைப்பது அரிதாகிவிடும். அதைக்குறித்துயோசனைசெய்திருக்கின்றேன் இன்னும் வெளியில் பிதிங்கியிருக்கும் குடல்கள் தானே உள்ளுக்குசெல்கின்றவரையில் கையால் தொடக்கூடாது கழுத்தின் நரம் புகளெல்லாம் இரத்தம்வற்றி காய்ந்திருக்கின்றது ஈரக் குலையானது வெளியில் தொங்கிக்கொண்டிருப்பதினால் அதைத்தொட்டு உள்ளுக்கு வைத்தாலும்பன்றல் காய்ந்திருக்கும் பிரதான விசைநரம்புகள் சேர்ந்துவிடும் அப்படி அருந்துவிட்டால் உடனே இவர் இறந்துவிடுவார். ஆகையால் யோசனை செய்துகொண்டிருக்கின்றேனென்று உரைத்தார் இவ்வார்த்தையையறிந்த உம்ருவானவர் புஜ்ருச்மேஹரை நோக்கி காஜாவே தாங்கள் உண்மையில் ஹக்கீமே ஹாஜிக் என்னும் பிணியாளிகளின் ஹாஜத்தை நிறைவேற்றிவைக்கும் வைத்தியராயிருக்கும் இன்னுமெனக்கு உஸ்தாதாயும் இருக்கும் ஆகிலும் ஹிக்மத்தாகிறது மிகவும் கடினமானதா யிருக்கின்றது உலகத்தில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிஷயத்தில் தோற்சியும் பழக்கமும் இருக்கும் ஆகையால் என்னுடைய மனதில் ஓர் யோசனை பிறக்கின்றது அதைதங்கள் நேத்திரங்களால் பார்த்துக்கொண்டிருங்களென்று சொல்லி தம்முடைய சட்டை ஜேபினின்றும் கூர்த்தியான பளபளப்பையுடைய மடக்கு கத்தியொன்றை யெடுத்து கத்தியை நீக்கி கரத்தில் பிடித்துக்கொண்டு பஹிராமை தங்களிரண்டுகால்களுக்கிடையில் ஆக்கிக்கொண்டு பிதிங்கிக் கிடக்கும் குடல் சரல் குலைகளிருக்கும்

தானத்தைநோக்கி கத்தியை நீட்டினர் உடனே காஜா புஜ்ருச்மெஹ
ரானவர் உம்ருவை விழித்து ஓ! உம்ரே! என்ன செய்யப் போகின்றீர்
தங்களுடைய யோசனை இன்னதென்று உரைத்துவிட்டு பின்புவதொரு
வேலையும் செய்யுமென் றுரைத்தார் அதைச் செவியுற்ற உம்ரு புஜ்
ருச்மெஹரை நோக்கி சொல்லுகின்றதாவது யாதெனில், காஜாவே
செய்வதென்ன யோசனை என்ன இருக்கின்றது வெளியில் தொங்கி
பிதுங்கிக் கொண்டிருக்கும் குடல் முதலியவைகளை அவ்வளவோடு
கத்தியால் அருத்து சுத்தமாக்கி விடுவதற்காகதான் போகின்றேன்
வேறொன்றுமில்லை அறுத்து சுத்தம்செய்தபின் தாங்கள் செய்யவே
ண்டிய வேலைகளை செய்துக் கொள்ளுங்களென் றுரைத்தார் இவ்வார்
த்தையைக்கேட்ட காஜாவானவர் உம்ருவை நோக்கி உம்ரே என்ன
யோசனை செய்தீர் பஹிருமென்பவர் உமக்கென்னகொடுமைசெய்தார்
அவரைகொல்ல நினைக்கின்றீர் நன்று யிருக்கின்றது போதும் நீர்
செய்தவைத்தியம் இப்பால் எழுந்துவாரும் என்றுரைத்தார். அச்சம
யத்தில் பஹிருமேன்பவர் உம்ருவுடைய இக்கொடிய பயங்கரமான
மொழிகளைக் கேட்டு திகில்கொண்டு நினைக்கலாயினர், யாதெனில்
நமக்கு இதுதான் முடிவுகாலம் போலிருக்கின்றது நம்முடைய வாழ்
நாட்கள் எல்லாம் இவ்வளவுதானுக்கும் அல்லா சுபுஹானஹுவதஆ
ஆலாவானவன் எப்படிநாடுகின்றானே அதில் ஓர் அணுவளவும் கூட
வும் குறையவும் ஆக்குதற்கு யாராலும் முடியாதென்று அல்லா சுபு
கானஹுவதஆலாவினிடத்தில் யாரஹுமானே நியாகுரவுன் வெ
ப்பத்திலெல்லாம் வலுப்பமுடையவன் பாவங்களைப்பொருத்து அடி
மைகளை கரைசேர்ப்பவன் நீயானபடியால் என்னுடைய பாவங்களை
யும் பொருத்து உன்னளவில் சேர்த்துக் கொள்ளென்று ஆபாசத்து
டனே கூட்ட பெருமூச்சு விட்டிழுத்தார். அம்மூச்சு இழுத்துவிட்ட
படியால் வெளியில் கிடந்த குடல்கள் யாவும் வயற்றுக்குள்சென்று
அந்தந்ததானங்களில் நின்றுவிட்டது. உடனே உம்ருவானவர் காஜா
புஜ்ருச்மெஹரை யழைத்து காஜாவே இன்னும் என் காமதம் தங்கள்
அபேக்ஷையின்படி குடல்களை எல்லாம் அதின்தானங்களில் செல்ல
வைத்துவிட்டேன் இனி தங்கள் வேலையை சீக்கிரம்பாருங்கள் என்று
ரைத்தார். அதையறிந்த காஜாவானவர் உம்ருவுடைய புத்திசாதுரி
யத்திற்காக வெகுவாய்ப்புகழ்ந்து போற்றினர். மஜ்லீசென்றும் சபை
யில் இருந்தவர்கள் யாவரும் உம்ருவுடைய புத்திசாதுரிய தந்திர
போசனைக்காக மிகமிகபுகழ்ந்து சிரித்தார்கள். அப்பொழுது காஜா

புஜ்ருச்மெஹரானவர் பஹிருமுடைய காயத்தை பொருந்தி தைத்து
மூலஹம்முதலாகிய மருந்துகள்வைத்துக்கட்டி வெளியாகிச்சிவிட்ட.
இரத்தத்தின் பலவீனத்தைதபழபடி வெகுசீக்கிரம் உண்டாக்கத்தக்க
மாவுல் ஹயாத்மாவுல்ல ஹம் ஷர்பத்தே நீலோபர் முதலிய அரூப
அவிழ்தங்கள் குடிக்கக்கொடுத்துக்கொண் டிருந்தார்கள். அவ்வேளை
யில் புஜ்ருச்மெஹரானவர் அமீரை நோக்கி சாஹிப்கருனே இந்த
பஹிருமுடைய கை, கால்களை நன்றாய் அசையாமல் கட்டிவைக்கவே
ண்டும் அஃதேதெனில் இவ்வேளையில் அப்படி இப்படி அசைந்தால்
இழையிட்டுத் தைத்திருக்கும் காயமானது வாய்விட்டுபிளந்து இழை
களருந்துவிடும் ஆகையால் கட்டிவிடும்படி உத்திரவுசெய்யுங்கள் இல்
லாதவன்யில் இவர் பிழைப்பது அரிதாகிவிடும் யானும் பிரதின
மும் இருவேளையும் வந்துப்பார்த்து சிகிச்சை செய்கின்றேன் என்று
ரைத்து காஜா முதலாகிய யாவரும் தத்தம் ஆண்மனை சென்றார்கள்
அமீரவர்கள் பஹிருமிடத்தில் அதிக பற்றுதலா யிருந்தாரென்று
முன்னமே சொல்லி யிருக்கின்றோமல்லவா ஆகையால் இச்சமயம்
பஹிரு மேன்பவருக்கு படுகாய முற்றிருப்பதனால் மிகவும் மனம்வாடி
யவராய் அந்த குஸ்தமுடைய பங்களாவில் தானே பஹிருமுக்கு
சொஸ்தமாகுன்றவரையில் நாம் யாவரும் இவ்விடத்தில் தானே
இருக்கவேண்டுமென்றுரைத்து அந்த பங்களாவில்தானே இருந்தார்
கள். பிறகு புஜ்ருச்மெஹரானவர் பாதுஷாவினுடைய சமுகத்தடு
த்து அமீர் அவர்கள் சமுகத்தில் நடந்த செய்திகள்யாவும் விபரமா
யுரைத்தார் அவைகளைகேட்ட பாதுஷாவானவன் காஜாவை நோக்கி
சொல்லத்துடங்கியது. யாதெனில், காஜாவே இந்த மதாயின் என்
னும் பட்டணத்தின்கண்உள்ள தோட்டங்களில் பாகேதாத்தென்னும்
தோட்டத்தைவிட எல்லா விஷயங்களிலும் மிக ஆரோக்கியமுடைய
தோட்டம் ஒன்றுமேகிடையாதாதையால் நம்முடைய ஹம்ஜாவை
இலகான் அவ்விடத்தில் வசிக்கும்படி செய்யவேண்டுமென்னும் யோசனை
எனக்கு உண்டாகின்றது ஆகையால் அவரை அத்தோட்டத்தில் இரு
க்கச்செய்து தொஹபாக்களிருந்து சுவாதீனம் புரிந்து வரவேண்டும்
வனெனில் ஹம்ஜாவுக்கு மனதில் யாதும் விபரீதம் உண்டாகாமலிரு
க்கவேண்டி செய்யவேண்டும் அப்படி செய்யாதவரையில் ஹம்ஜாவா
னவர் என்மீது சந்தேகம் கொண்டுவிடுவார் அஃதேதெனில் யான்
அந்த குஸ்தும் என்பவனைபேய்கண்டுகொள்ளச் சொன்னபடியால்
தானே, அவர் சென்று சந்தித்தார் இல்லாதவரையில் ஹம்ஜாவுக்கும்

அவனுக்கும் யாதாமொரு பற்றுதலுண்டாகாதல்லவா, அந்த குஸ்த் தும்னன்பவன் என்மனதிற்கு அதிகவருத்தத்தை உண்டுபண்ணிவிட் டான் சத்தியமாகசொல்கின்றேன் அந்த சண்டாளன் குஸ்த்தும்னன் பவன் கனவிலும் இவ்விதம் செய்வானென்ற எண்ணம் எனக்கில்ல வே இல்லை காஜாவே தாங்களும் அமிர்திருக்கின்றீர்கள் அப்பாவியா னவன் இவ்வித கொடுமை செய்தானென்று என்னுடைய காதிலில் கேட்டவுடன் அவனைப் பிடித்துவரும்படி ஆள் அனுப்பி யிருக்கின்றே னல்லவா இன்னும் பலஇடங்களுக்கும் கடிதமும்எழுதிகுஸ்த்தும்என் பவனை எங்கே கண்டாலும் பிடித்து கடின கைதிசெய்து அனுப்பும் படி எழுதியதோடு பலபாகங்களுக்கும் ஹற்காற் என்னும் தூதர்களை யும் அனுப்பியிருக்கின்றேனல்லவாவென்று பலவாறு சிந்தித்தவனாய் அமீர் அவர்களுக்கு அதேகம் தோஹபாக்களென்னும் வெகுமதிக ளனுப்பினான் இன்னும் அமீர் அவர்களிடம் தான்வருவதாயும் சொல்லி யனுப்பினான் மறுநாள் புஜ்ருச்மெஹ்ரானவர் பதிஹுறுமைப்பார்த்து பருந்து முதலாகியவைகள்கொடுத்து பக்குவம்செய்து வருவதற்காக அமீர் அவர்களிருக்கும் இடத்திற்கேகி அமீர் அவர்களை நோக்கிச் செல்கின்றார். அயே! சாஹிப்களுரே! நமது பாதுஷா ரௌஷேரவா னவர் தங்களிடம் சொல்லச் சொன்னதாவது யாதெனில், யான் அந்த குலேபாதகனுகிய குஸ்த்தமை பிடித்து வருவதற்காக ஆற பெளஜுகளை அனுப்பியிருக்கின்றேன். அல்லாமலும் அதேக இரகசிய களுக்கும் இரகசிய கடிதங்கள் எழுதி யிருக்கின்றேன் எவ்விதத்திலும் அவனைப் பிடித்துக்கொண்டு வருவார்கள் வந்தவுடனே யாவரும் அறிய அவனைப் பலவித ஜில்லத் தென்னும் கோஷினைகள் செய்து வயற்றைப்பிளந்து தண்டு துண்டாக்கி காய் நரி காகம் பருந்துகளுக் கிரையாக்கிவிடுகின்றேன். என்றும் இன்னும் யான் நமது ஏகதுவித தத்துவ உத்தம உல்லாச சல்லாபனை அல்லா சுப்ஹானஹு வத் தஆலாவினிடத்தில் ஆயிரம் ஆயிரம் சுக்கூர் செய்கின்றேன் எதற்காக வானால் "அம் மூதேவியானவளுடைய கர்ப்பத்தால் தங்களுக்கு யா தும் அபாயம்நேரமல்தப்பிவந்தானே அதற்காகவேண்டி" பதிஹுறு மென்பவருக்கும், தம்முடையபுறத்தால் நல்லதிலாசாவெனும் தைரிய மானவார்த்தைகள் சொல்லி மனதை தேற்றுதல் செய்யவேண் டும். தவிர இன்னும் சொன்னதாவது பதிஹுறுடைய காயம் வெகு சீக்கிரத்தில் ஆறும்படியான பருக்குகள் செய்து வெகு சீக்கிரத்தில் அவருக்கு சொஸ்தமுண்டாகச் செய்யவேண்டும். டீத்தக் உம்ரு

இருவர் நீங்கலாக அமீர் அவர்களை ஒருவாரம் வரையில் பாகேதாத் என்னும் தம்முடைய தோட்டத்தில் அழைத்துக் கொண்டுபோய். வைத்து சுகமனுபவிக்கசெய்யவேண்டும் பக்கத்து உம்ருஇருவரையும் அழைத்துச்சென்றார் அவர்களிருவரின் மனதுகளில் பகஜ் என்னும் பொருமை இருக்கின்றபடியால் அவ்விடத்திலும் எதாகிலும் சச்சரவு செய்து கொள்வார்கள். ஆகையால் அவர்களிருவரும் தவிர மற்றவ ரையும் அழைத்துச் செல்வதாயும் சொன்னர் என்று காஜா புஜ் ருச்மெஹர் பாதுஷா சொன்னவைகளை எல்லாம்சொல்லி முடித்தார் அவைகளை கேட்டிருந்த அமீரவர்களும் மன சந்தோஷமாய் சம்மதித் தார்கள். மறுநாள் பாதுஷாவானவன் பாகேதாத்தென்னும் தோட்டத் திற்குச்சென்று அவ்விடத்தி விருந்துகொண்டு அமீர் அவர்களை கூப் பிட்டனுப்பிவிட்டு தோட்டத்தின் பங்களாவில்தன்னுடைய சிம்மாச னத்திற் கருகில் அமீர் அவர்களுக்காக வேறேயொரு சிம்மாசனம் அதிவிசித்திரமாய் அமைத்து வைத்திருந்தான் அப்படியிருக்க அமீர் அவர்களை அழைத்துச் செல்வதற்காக ஆள்வந்த உடனே சாஹிப் க்ருன் அவர்கள் தங்கள் கூட மக்பூல்வபாதாஷாவையும் ஆதிகரப் பென் பவரையும் அழைத்துக்கொண்டு பாகேதாத் என்னும் தோட்டத்திற் குச்சென்று அவ்விடத்தில்பார்க்கையில் அத்தோட்டமானதுநிருளத் தில் பனிரண்டு நாழிகைவழி தூரமாகும் அவ்விடத்திலும் அப்படி யே இருக்கின்றது எங்கே பார்த்தாலும் பலவித மதுரம்பொருந்திய கனிவகைகள் நிரைந்து கிளைகள்வளைந்து தொங்கிக்கொண்டிருக்கும் மரங்களும் விதவித வாசனையுடைய புஷ்பங்கள்நிறைந்த செடிகளும் நிரைந்து பார்ப்பவர்கள் கண்களெல்லாம் குளிர்ந்து மனமானது பூரி த்து ஆனந்தம் கொள்ளும்படியாய் இருந்தது. சுருக்கமாய் சொல்லு மிடத்தில் அத்தோட்டத்தை சுவர்க்கலோகமோவென்று சந்தேகிக் கும்படியா யிருந்தது. இவ்விதம் அழகமைந்த தோட்டத்தில் நான்கு புரங்களையும் பார்த்துக்கொண்டே பங்களாவிற்குள் சென்று பாது ஷாவைக்கண்டு மரியாதையாய் சலாம்தாஜீம் செய்துவிட்டு அமீர் அவர்கள் பாதுஷாவின் வலதுபுறத்தில் அதி விசேதமா யமைந்திரு க்கும் சிம்மாசனத்தில்உட்கார்ந்தார்கள். அமீர் அவர்களுக்கு எதிரில் ஹர்மூஸ்தாஜ்தாரும் இடதுபக்கத்தில் மக்பூல்வபாதாரும் காஜா புஜ்ருச் மெஹரவர்களும் இன்னம் மற்றுமுண்டான உத்தியோகஸ்தர்களும் அவரவர்களின் தாரதம்மைக் கியற்றவாறு ஆசனங்களிலிருப்பவர்க ளாயும் நிறப்பவர்களாயுமிருந்தார்கள் அவ்வேளையில் இரும்புக்கொப்

பாக்கிய கல்நெஞ்சமும் கரைந்துருகத்தக்க மனக்களிப்பை யுண்டுபண்ணக்கூடிய வாத்தியம்வாசிப்பவர்களும் மத்தளமடிப்பவர்களும்ராகம் பாடும்பாடகர்களும் அதிவிநோதமாய்நடிக்கும்நாட்டியக்காரர்களும் அவ்விடத்தில் வந்து ஹாஜரானர்கள். அவ்வேளையில் பாதுஷாவானவன் அவர்களுடையவேலையை ஆரம்பிக்கஉத்திரவுகொடுத்தான். ஆடல் பாடல்கள் ஆரம்பித்து ஷரப்என்னும் ஷர்பத்துகளை குடிக்கனத்தனித்தார்கள் இப்படியிருக்கையில் அமீர் அவர்கள் அத்தோட்டத்திற்குசென்றமுதல்நாள் பாதுஷாவானவன் ஒருபங்களாவில் அமீர்முதலியவர்களுக்கு தாஅவத்துசெய்தான். அன்று மாலையுங்கு ரியனும் அடைந்தபின் எங்கும் இருள்வந்தடர்ந்து முடிக்கொண்டது, பின்பு சந்திரனுதயமாகி எங்கும் பிரகாசமுண்டானது அவ்வேளையில் அழகிற் சிறந்த இளம் வாலிபர்கள் தங்கள் காங்களில் பசும்பொன்னினுற்செய்து அதில் பலவித விலையுயர்ந்த ரத்தினங்களழுத்திய கொட்டேறுக்களில் ஷரப் என்னும் ஷர்பத்துகளை நிரப்பி எடுத்து சபையில் வந்து ஹாஜரானர்கள். சபையின்கண் ணுள்ளவர்கள் யாவரும் அந்த ஷர்பத்துக்களை வாங்கி வாங்கி குடிக்க ஆரம்பித்தார்கள். அப்பொழுது, பாதுஷாவானவன் தன்னுடைய சிரப்பு பொருந்திய கரங்களினால் அமீரவர்களுக்கு ஒரு கொட்டேறு ஷர்பத்தை கொடுத்தான். அதை அமீர் அவர்கள்மிகமரியாதையோடும் இருகரங்களினுல் வாங்கி வாங்கிக் கொண்டு தஸ்லீம்செய்து அச் சர்பத்தையருந்தினார்கள் பின்புசபையோர்களுக்கெல்லாம் ஷர்பத்து வினங்கப்பட்டது யாவரும் ஒருவருக்கொருவர் மாற்றி மாற்றி குடித்துக் கொண்டிருந்தார்கள்? இவ்விதமே அவ்விரவெல்லாம் வேடிக்கை விநோதத்தில் மனதைக் கழித்தார்கள் அவ்வேளையில் சூரியனும்உதயமாகி பொழுதுவிடிந்தது பின்னும் அவ்விடங்களிலுள்ள சுவர் மரம் மட்டைகள் யாவும் அவ்வேடிக்கையைப் பார்ப்பதற்காக அசைவற்று நிற்கும்படியாகிய ஆடல் பாடல் முதலியவைகள்ஆரம்பித்து நடந்து கொண்டிருந்தது இஃதிவ்வாறிருக்க ஹுஸ்யார்ச் சாலாக் சாமர்த்தியம் அய்யாரித்தனம் முதலியனவைகளில் பெயர்பெற்ற காஜர் உம்ரு ஐயர் அவர்களுடைய சில செய்தியைச்சொல்ல ஆரம்பிக்கின்றேன். இதைச் சற்று கவனித்து கேட்பவர்கள் தங்களுக்கு அதி முக்கியமாகிய சொரிந்துகொள்ளும் வேலையிருந்தாலும் அதையும் நிறுத்திவிட்டு காதுகொடுத்து கேளுங்கள் அஃதென்னவெனில், உம்ருவானவர் அமீர் அவர்களை ஓரிரவும் பகலுங்கானுமல் ஊணுங்கலுந்தியாரும், தாமிருந்த விடம்விட்டு வெளி

யாகி தோட்டத்தை அடுத்து நடந்து சென்று வாசர்ப்படியை அடுத்துப்பார்க்கையில் அவ்விடத்தில் ஆதிக்கரப் என்பவர் உட்கார்ந்து கொண்டு ஷரப் கபாப் முதலியவைகளை முடையாரபுசித்தவருயிருக்கவும் அநேகம் வேலையாட்கள் விதவிதமான சாமான்களை தட்டம் தட்டமாய் அவர் முன்பில் கொண்டுவந்து கிரப்பிக்கொண்டேயிருந்தார்கள் அத்தோட்டத்தின் காவல் எப்படி இருக்கின்றதெனில் பறவையும்கூட அவ்விடத்தில் செல்லமுடியாதென்றல் மனிதர்கள் எப்படி செல்லக்கூடும் அவ்விதமான கடுங்காவலோடு பாறுக்காரர்கள் உருவிய கத்தியை உயர்த்திப் பிடித்தவர்களாய் வைக்கத் துடனே அவ்வாளசையாமல் பிடித்து நின்றார்கள் இவைகளை அறிந்த உம்ருவானவர் அக்காவல் வீரர்களிடத்தில் கேட்கின்றவருயினர். ஓ வீரர்களே அமீர் அவர்கள் தோட்டத்தினுள் விருக்கின்றார்களா இந்த ஆதியானவர் பேன் வெளியில் வந்திருக்கின்றார் என்று கேட்டார் அதை யறிந்த காவ்லாளர் உம்ருவைநோக்கி ஓ, மனிதனே அமீர் அவர்களுடைய உத்திரவு யாதெனில், உம்ரு பக்தக் இருவரில் ஒருவரு வது இத் தோட்டத்திற்குள் வரக்கூடாது என்று ஆதியைக் காவல் வைத்திருக்கின்றார் என்றுரைத்தார்கள். இவ்வுத்தரவார்த்தையை யறிந்த உம்ரு வானவர் மெதுவாய் நடந்து ஆதியை அடித்து அவரை நோக்கி, சலாமுன்அலேக்கும் ஆதிகரப்! என்றுரைத்தார். ஆதியும் வ அலிக்குமஸ்ஸலாமென் றுரைத்து திருப்பிப்பார்த்தார் உம்ரு சலாம் சொல்லிவிட்டு தன்னருகில் வந்துட்காரக்கண்டு நேசமாய் வார்த்தையாடினர் அப்பொழுது ஆதியானவர் உம்ருவை நோக்கி உம்ருவே இங்கு எவ்விதம்வந்து சேர்ந்தீரென்றும், என்ன காரணமாய் இவ்விடத்திற்கு வந்தீரென்றும் கேட்டார். அதை யறிந்த உம்ரு அவரை நோக்கி, இவ்விரண்டு நாட்களாய்த் தம்மைக் காணமையால் யான்றின்னும் அன்னகாரம்கூட உடலில் ஒட்டவில்லை யெனக்கு புத்தி அவிடத்திலிருக்க இடந்தராம லிருந்தபடியால் மெதுவாய் இவிடம் வந்தேன். நீரென்னை மறந்து விட்டாலும் மிஸ்கின் மறக்காமல் தம்மைத்தேடி இவ்வளவு தூரம் வந்துவிட்டேன் யென்றுரைத்தார். உம்ரு உரைத்த வார்த்தையைக் கேட்ட ஆதிகரப்! சந்தோஷமாய்த் தான் புசித்துக்கொண்டிருந்த ஷரப் கபாப் முதலியவைகளை உம்ரு இடத்தில் நகர்த்தி, உம்ரே! கூச்சப்படாமல் நன்றுப்பப் புசியுமென்றைத்தார். உம்ரு அந்த சமயில் நின்றும் ஒருபியாலா மட்டும் கொட்டேறு அருந்திவிட்டு, ஓ ஆதியே! [illegible]

இன்று யான் ஓர் இரத்தினம் விலைக்குவாங்கினேன். அது என் மனதிற்கு மிகவும் குறைந்தவிலையாய் வாங்கினதாகக் காணப்படுகிறது அதைத் தாய்களும் பாருங்கள், யான் ஏமாற்றுவிட்டேனு அல்லது ஏமாறவில்லையா பார்த்து சொல்லுங்கள் யென்று சொன்னார். அப்போது ஆதியானவர் நினைக்கின்றார். நாம் இரத்தினப் பரீக்ஷையிற் தேறினவனென்று உம்ரு நினைத்து நமக்குக் காண்பிக்கக் கொண்டு வந்திருக்கின்றானென் றெண்ணியவராய் உம்ருவை நோக்கி காஜாவே! தங்களுக்கு நிகர் இரத்தின பரீக்ஷையில் யாரிருக்கின்றார்கள் தாங்களுங்கூட ஏமாந்து பணத்தைக்கொடுத்து விடுவீர்களா ஆகிலும் அதை யெடுங்கள் யான் மதிப்புப்பார்க்க அறிவுளவாய் அறியாதவனாயினும் கண்களாலாயினும் பார்க்கின்றேன் யென்றுரைத்தார். இவ்வார்த்தையைக் கேட்டவுடனே உம்ருவானவர் தம்முடைய சட்டைஜேபில் கையைவிட்டு ஒரு பிடிமண்ணை கைக்குளடக்கி யெடுத்து ஆதியினுடைய கண்களில் தூவிவிட்டார். ஆதியானவர் கண்களைக் கசக்கி துடைக்க ஆரம்பித்து சொல்லுகின்றார். ஓ! நேர! உம்ரு! என்னுடைய கண்களை யெடுத்து விட்டாரென்று சப்தமிட்டார். இச் சப்தத்தைக் கேள்வியுற்ற அத் தோட்டத்தின் கண் இருந்த சிலர் ஓடோடியும் வந்து, ஆதியினுடைய கண்களை யுதவும் துடைக்கவும் பக்குவஞ் செய்துகொண்டிருந்தார்கள். இவ்வேளையில் உம்ருவானவர் பாய்ந்து குதித்து தோட்டத்திற்குள் நழைந்தோடிப்போய் விட்டார். பின்பு, ஆதி தன்னுடைய கண்களை துடைத்து மண் முகலாதிய தூசிகளை தண்ணீரினால் கழுகி, கண்களின் பாதையை நீக்கிக் கொண்டு உம்ரு எங்கேயென்று தேடினார். அவ்விடம் நின்றவர்களில் யாவரையும் ஒவ்வொருவராய் உம்ரு எங்கே சென்றாரென்று வினவ, அவர்கள்யாவரும் உம்மென்றால் என்னவென்றுகேட்டு சிரித்தார்கள். உம்மைக் காணுதபடியால் ஆதிகரப்பென்பவர் மனமிடைந்து நினைக்கலாயினர். யாதெனில், உம்ரு ஆனவர் என்னுடைய பயத்தினால் எங்கேயோ ஓடிப்போய் விட்டாரென்று நினைத்தவராய் கம்மரிருந்து விட்டார்.

இஃதிவ்வாறிருக்க கண்களில் மண்ணைத்தூவிவிட்டு தோட்டத்திற்குள் ஓடிச்சென்று உம்ரு ஆனவர் தோட்டத்தைப் பார்த்து, ஆச்சரியமுற்று இன்னவித மென்று சொல்லமுடியாத சந்தோஷமுற்றவராய்[illegible]! இஃதென்ன தோட்டமோ? சுவர்க்கமோ? யான்

காண்பதென்ன கனவோ? நினைவோ? ஒருவேளை யான் இறந்து சொர்க்கத்திற்கு வந்துவிட்டேனோ வென்று பலவாறு யோசித்தவராய் கண்களை கசக்கி புத்தியை விளக்கி தெளிந்து ஆலோசித்து, இல்லை இல்லை நாம் வாஸ்தவமாகவே பாகேதாதென்னும் இத்தோட்டத்திற் குள்வந்து இக்காக்ஷியை காண்கின்றோமென்று நினைத்து அத்தோட்டத்தின் கண் பல இடங்களிலும் சுற்றித்திரிந்து, அவ்வவ்விடங்களிலுள்ள பலவகைக் கனிகளைப்பறித்துப் புசித்துவிட்டு பாதஷா! அமீர் முதலாகியவர்களிருக்கும் மாளிகைக்குசமீபத்திற்சென்றார். அவ்விடத்தில் அதிதுல்லிதமாகிய நக்கீரோடையொன்று ஓடிக்கொண்டிருக்கவும் அதினருகில் ஓர்மிகத்தூரமானருசியையுடைய பழங்கள்நிறைந்த கிளைகள் தாங்கமுடியாமல் வளைந்து தொங்கிகொண்டிருக்கும் மாதுளாமரம்ஒன்று இருக்கவும் கண்டு அகமகிழ்ந்து தம்முடைய அதிதான வீணையை கையிலெடுத்து சுதிமீட்டி ராகம்ஒத்து வாசிக்கஆரம்பித்தார். உம்ருடைய பாட்டும் ராகமும் வீணையினுடைய சப்தமும் செந்தமையத்தை எழுப்பக்கூடிய தென்று யாவரும் அறிந்த விஷயமல்லவா? அப்படியிருக்க இப்பொழுது வேணுமென்றே மனம் லயித்து வீணைவாசித்துப்பாட ஆரம்பித்திருக்கும் பொழுது அஃதெவ்விதமிருக்குமென்று படிப்பவர்களும் கேட்பவர்களும் நன்றாய் அறிந்து கொள்வார்கள். அப்படியிருக்க, உம்ருவுடைய வீணையின் சப்தமும் பாடலுடைய தொனியும் கண்டசுத்தியும் மாளிகையினுள்ளிருந்த அமீர் அவர்களின் செவியில் உம்ருவானவர் மஹா தந்திரமாய் சாமர்த்தியஞ்செய்து தோட்டத்தினுள் வந்து சேர்ந்து பாடுகிறதென்று சொல்லிற்று, இச்சப்தம் அமீர் அவர்களின் காதில் கேட்டவுடன் மக்பூலை அழைத்து, ஓ! மக்பூலே உம்ருடைய பாடலின் கண்டமும் வீணையின் சுதியும் வருகின்றது அவரெப்படி இங்கடைந்தார். அவரை இவ்விடத்தில்வரக்கூடாதென்றஆக்ஞையால் ஆதிகரப்பென்னும் பயில்வானை வாசற்படியில் காவலாய் வைத்திருக்கிறதே அஃதல்லாமலும் இன்னும் அநேகவாராக்காரர்களாகிய சிப்பாய்களையும், விழித்த கண் இமைகொட்டாமல் உருவிய வாளை உயர்த்திப்பிடித்து நிற்பவர்களாய் அமைத்திருக்க இவ்வளவு காவலையும் கடந்து எப்படி வந்து விட்டார்? ஆகையால் நீர் சென்றவ்வாதியை அதி சீக்கிரமிங் கழைத்து வாருமென் றனுப்பினர். அவ்வார்த்தைகளை அருகில் வீற்றிருந்து கேட்டுக்கொண்டிருந்த நௌஷேரொலனவன் அமீரை நோக்கி சாஹிப்கரானே தாங்கள் எந்த ஆதிய அழை

க்கவேண்டும் உம்ரு உடைய குற்றத்தையாம் மன்னித்தோம், ஆதியை அழைக்கவேண்டாம் சோப்தார்களே விடுத்து, உம்மை யாரை இங்கழைத்துவரச்சொல்லுங்கள் பென்றுரைத்தான் உடனே சோப்தார்களெழுந்து சென்று உம்ருவைபடுத்து அமீர் அவர்கள் தங்களே அழைத்துவரச் சொன்னார்களென்றுரைக்க, அதைச் செவியுற்ற உம்ருவானவர் அச்சோப்தார்களே நோக்கி, ஏவலாளர்களே! பெருந்தன்மையுடைய பாதுஷா, அமீர் முதலாகிய கனவான்கள் கூடியிருக்கும் சிறந்த மஹா சபையின்கண் இவ்வற்பனுகிய ஐபாரானவனுக்கு என்ன வேலை யிருக்கின்றது யான் அவ்விடம் வரலும்தகாது இந்த பாதே தாதென்னும் தோட்டத்தின் பெருமையை சிலசமயம் கேள்வியுற்றவனுய் இருந்த விஷயத்தில் இத்தோட்டத்தைக்கண்டு களிப்போமென்று இவ்வளவுதூரம்வந்து ஒரு மூலையில் ஒருவரும் காணுதபடி மாய் தனித்து உட்கார்ந்திருந்து, இத்தோட்டத்தின் புட்பங்கள் மலர்ந்துவிரியும் வினுதங்களையும் புல்புல், டையர் வானம்பாடி முதலாகிய பக்ஷிகளின் இனிமையாகிய பாடும் ராகத்தையும் கேட்டவனுய் இருக்கின்றேன் அப்படியிருக்க என்னை மாளிகையின்கண் வரச்சொல்லி அழைக்கின்றீர்கள், யாதொருவேளை உங்கள் வார்த்தையை நமீறுமல் அவ்விடத்திற்கு வந்துவிட்டேனுகில் என் என்னால் சிலருடைய மனதிற்கு சஞ்சலமும் வருத்தமும் துயரமும் சேரிடவேண்டும்? அவர்கள் அதனால் என்னை தண்பத்திற்குள் ஆக்கவேண்டும், அதைவிட இப்படியே தனித்து ஒரு மூலையில், "தானடங்க தன்குல மடங்க" வென்னும் பழமொழிக் கொக்கவிருப்பது மேலாக காணப்படுகின்றது, தனித்து ஓர் மூலையில் ஒண்டியாய் இருப்பதுதான். என் மனதை சந்தோஷிக்கச் செய்கின்றது யென்றுரைத்தார். இவைகளைச் செவியுற்ற சோப்தார்கள் மன மிடைந்தவர்களாய் திரும்பிச்சென்று பாதுஷாவின்முன்பில் நிகழ்ந்தவைகளியாவையும் உரைத்துநின்றார்கள் அப்பொழுது உம்ருவுடைய வாக்குச் சாதுர்ய நவீன மொழிகளையும் சமயோசித தந்திர வார்த்தைகளையும் செவியுற்ற பாதுஷா! முதலாயி பாவரும் சிரித்த சிரிப்பால் அப்பப்பா வென்று அடிவயற்றை அள்ளிப் பிடித்துக் கொண்டார்கள். அவ்விதம் சிரித்தானபின் பாதுஷா கௌஷேரவான் அமீர் அவர்களின் கரத்தை ஓர் கரத்தால் பிடித்து இருவரு மெழுந்து மாளிகையின் வெளியில் வந்து தோட்டத்தில் உலாவி வருவதுபோல் எந்த இடத்தில் உம்ரு இருந்து சதிமீட்டிக் கொண்டிருக்கின்றரோ அவ்விடம்வந்து சேர்ந்தார்கள். அப்பொ

ழுது உம்ருவானவர் பாதுஷாவும் அமீர் அவர்களும் மற்றும் சபையோர்களும் தன்னருகில் வருவதை அறிந்து ஓரே பாய்ச்சலாய் எழுந்து பாய்ந்து பாதுஷாவின் பாதங்களில் வீழ்ந்து முத்தியிட்டு அல்லாஹுத் தஆலாவினிடத்தில் பாதுஷாவுக்காக துஆச் செய்தவராய் எழுந்துநின்று சொல்கின்றவராயினர், அமீரு யாதெனில் இவ்வடிமையானவனுக்கு எவ்வளவும் மனதில் உறுதியே யில்லை யானும் தங்களுடைய மஜ்லீஸில் சேர்ந்தவனுய் கூடியிருந்து சுகமனுபவிக்கலாயக்கானவனேன்று அறவே நினைக்கவில்லை, ஹம்ஜா அவர்களை என்னதான் சொல்லுவேன் சேஷ விஸ்வாசத்திலும் தோஸ்து முகப்பத்திலும் இவரைவிட உலகத்தில் ஒருவருமே இருக்கமாட்டார்கள், தன்னந்தனியே மஜாவென்னும் அனுபவித்துக்கொண்டு உயிர்த்துணைவர்களை மஸ்தேன்னுடன்கண்டியினுல் மறந்து விடுகிறுரென்றுரைத்தார். அவ்வார்த்தையைக் கேட்ட பாதுஷா குலுங்க நகைத்து உம்ரு உடைய கரத்தைப் பிடித்துக்கொண்டு மாளிகைக்குள் அழைத்துச்சென்றார், பாதுஷா முதலாகியவர்களும் அவரவர்களின் ஆசனத்தமர்ந்தபின் உம்ருவைநோக்கி பாதுஷாவானவன் உம்ரே இவ்வேளையில் தங்கள் கரங்களினுல் ஷர்பத்தென்னும் குடிப்பை யாவருக்கும் கொடுப்பீர்களாகவென் றுத்தரவிட்டான் அதின் படியே உம்ருவானவர் யாவருக்கும் ஜாமென்னும் கொட்டோராக்களில் ஷர்பத்தை நிறைத்து நிறைத்துக் குடிக்கக் கொடுத்துக் கொண்டு தம்முடைய வேடிக்கை விநோத சாமர்த்தியத்தை காண்பித்துத் திரிந்தார். இவ்விதம் அவ்விரவு முழுவதையும் அச்சர்பத்து குடிக்கக் கொடுப்பதிலேயே போக்கினர். உம்ரு சாஹிபி யென்னும் குடிப்புபுகட்டும் அச்சரியமான வினோதத்தை கண்டுகளித்துக்கொண்டிருந்த இருளென்னும் இரவை சூரியனுனது ஓ! இரவே! இவ்வளவு நேரம் நீ பார்த்து மகிழ்ந்ததுபோதும் நீ விலகிப்போய்விடு யானும் அவ்வும்ருவுடையவேடிக்கையைக் கண்டுகளிகூற வேண்டுமென்றறிவித்து விரட்டியதுபோல் இருளையகற்றி ஒளியென்னும் சூரியனுடைய வெளிச்சமானது வெளிபரவுசுபுசாதிக்கின்றபோதுமுன்னுப்பி அவ்விருள்ஓடிப்போய்விட்டதாபாவென்று தூதனுப்பியதுபோல் சுபுஹ் நேரம்வந்திருந்த அவ்வேளையில் உம்ருவானவர் தம்முடைய வேடிக்கையைபார்த்திருந்த இருளை அகற்றிவிட்டு சூரியனுனதும்முடைய வேடிக்கைவினோதங்களை காணவருகின்றபடியால் அதற்குவேறு விதமான வேடிக்கைகாண்பிக்கவேண்டுமென்று கருதிய பாவனையாய்

தம்முடைய ஏழுதந்திகளமைந்த தம்பூரை கையிலெடுத்து ச-ரி-க-ம-ப-த-னி-ச-என்னும்சுரங்களை சுதிமீட்டிப்பாடஆரம்பித்து, இல்லோன் தாவுதியேன்னும் தாவுத் அலைகிஸ்ஸலாமுடைய ராகத்தில் நின்றும் பலராகங்களை ஆலாவர்ணமிட்டு பாடினர் அவ்வேளையில் பாதுஷாவும், அமீர் முதலாகிய சபையோர்கள் யாவரும் கண்களில் நின்றும் நீரோனது தாரைதாரையாய் ஓடஅழஆரம்பித்தார்கள். அழுதகண்ணீரால் நனைந்த கைருமால்கள் அநேகமாய் நனைந்து தொப்பல் தொப்பலாயின. பாதுஷாவானவன் உம்ருஅவர்களின் முக்தானிகளை விலையுயர்ந்த ஆணிமுத்துகளினால் நிரப்பிவிட்டான். இன்னும் பலவித விலையுயர்ந்த கில் அத்துகளையும் இனம் முதலியனவிகளையும் வெகுமதியளித்துவிட்டு, தாங்கள் கூடியிருந்த பைரோஜ்க் கற்களினால் அமைக்கப்பெற்ற மாளிகையை விட்டு ஜர்மூகஸ்ரே ஜர்ரீன் யென்னும் பொற்கற்களை அபரஞ்சி தங்கங்களை உருக்கிவார்த்து, புதைத்து சுவர்களை முழுப்பி கட்டப்பெற்றிருந்த மாளிகைக்கு சென்று அதில் யாவரும் வீற்றிருந்தார்கள்.

இஃதிவ்வாறிருக்க படிப்பவர்கள் கேட்பவர்கள் யாவருக்கும் ஓருவிஷயத்தில் ஞாபகம்சென்று அதன்மேலேயே நினைவாய் இருப்பார்கள் அல்லவா? அஃதென்னவிஷயமாஞல் இச்சரித்திரத்தில் அதிக தூலதூரத்தில் விட்டுப்போன பஃதக்குடைய செய்தி இதுவரையில் வாவில்லையல்லவா? அவ்விஷயத்திலும் வஞ்சகமில்லாமல் காதுவார்த்தை சொல்லிவிடுகின்றேன். அஃது யாதெனில், உம்ருவானவர் பாகேதாத் தென்னும் தோட்டத்திற்குள் சென்றுவிட்டாரென்ற செய்தியை பஃதக் கென்பவன் செவியில் கேட்டமாத்திரத்தில் குன்ம நோயுற்றவனைப்போல் வயற்றைபிடித்துக்கொண்டு ஹா!ஹா!! வென பெருமூச்செறிந்து, அங்குமிங்கும் எங்கும் சுற்றுபொற்றுகளெல்லாம் அலைத்து திரித்து நடத்து, எவ்விதமாய் யாம் அத்தோட்டத்திற்குள் செல்கின்றதென்று எண்ணுதுமென்னி மனம்புண்ணுகையனுப்த் திரியும் வேளையில் எண்ணுகின்றான் உம்ருவானவன் நம்மைபல்லாமல் பாகேதாதென்னும் தோட்டத்திற்குச் சென்று என்னென்ன விநோத பேழ்ச்சையான சுகமனுபவிப்பதோடு நமக்காக எவ்வித தீங்குகளை திட்டப்படுத்தி வைத்திருக்கின்றனரோ? என்னமோ தெரியவில்லையே யென்று பலவாறு யோசித்தவனுய் தன்னுடைய வீட்டில்துழைந்த மக்மல், அத்லஸ், கிம்காப், மஹுத்தாப், முதலாகிய விலையுயர்ந்த பிடவைகளின் தான்களில் சிலதையெடுத்து அக்குளில் இடுக்கிக்கொண்டு வீட்டை விட்டும் வெளியாகி என்ன தீங்கு வந்தாலும் வரட்டுமென்று மனந்துணிந்தவனுய் பாகேதாதென்னும் தோட்டத்தை நாடிச்சென்று, அத் தோட்டத்தின் வாசற்படியை அடுத்து, ஆதியை நோக்கி மிகமிக, நல்ல குளிர்ந்த வார்த்தைகளாய் வசனித்து சிநேகிதம் பாராட்டினன். அதையறிந்த ஆதி பஃதக்கை நோக்கி, தாங்கள் இவ்வளவுதூரம் பிரயாசை யெடுத்து அதிக கஷ்டத்தோடு இங்கு வந்த காரணம் யாது, எங்கு செல்லப்போகின்றீர்கள்? யாதுகாரணம் எங்கேயாவது வழிப்பயணம் செல்ல நாடி நடந்து வழிதவறி இங்குவந்து விட்டீர்களோ? யென்று கேட்டார். அதையறிந்த பஃதக் கென்பவன் ஆதியை நோக்கி தங்களுக்காக சிலதோஃபாவென்னும் வெகுமதி கொண்டு வந்தேன். அதை தாங்கள் மெஹர்பானிசெய்து பெற்றுக்கொண்டு தோட்டத்திற்குள் யான் செல்ல வழிவிட்டு என்னை அனுப்புங்கள் யென்றுரைத்தான். இவ்வார்த்தையைக் கேள்வியுற்ற ஆதியானவர் கோபமீறி கண்கள் சிவந்து மீசைதுடிக்க சொல்ல ஆரம்பித்தாவது யாதெனில் ஹே! பஃதக் யென்பவனே என்ன உனக்கு கேடுபிடித்தது, உன்னுடைய முடிவு காலமானது இங்கிழுத்துக்கொண்டு வந்து உன்னைவிட்டதோ நீ என்னை லஞ்சம் வாங்குகின்றவனென்று நிர்மானம் செய்துவிட்டாயோ? லஞ்சம் கொடுத்துவிட்டு தோட்டத்திற்குள் போய்விடலாமென்று நினைத்தாயோ உன்னுடைய மரியாதை தக்க வேண்டுமானால் என்னுடைய முன்பில் நில்லாமல் எட்டி யோடிப்போய்விடு இல்லாதவரையில் உன்னுடையமானமெல்லாம் குலைத்து அவமானப்படுத்தி விட்டுவிடுவேன். காவல்வீரர்களைவிட்டும் உனதுபிடரியைப்பிடித்து உதை கொடுத்து வெளியிற் தள்ளச்செய்வேன் என்றுரைத்தார் இக் கோரமான வார்த்தைகளைக்கேட்ட பஃத்தக் என்பவன் மறுமொழியுரைக்க வழியற்றவனுய்பேசாமல்திரும்பி தன்னகம்சென்று, அப்பகல்முழுவதையும் அழுதழுது கழித்தான், அவன்மனம்போல் ஒத்த இருளென்னும் இரவுவந்து அடுத்தது, அப்பொழுது ஓர் பெரிய கறுத்த கம்பளிபோன்றை எடுத்து தலைமையமூடிக்கொண்டு தான் அணியும் விலையுயர்ந்த வஸ்திரா பரணங்களை யெல்லாம் மூட்டையாய்க் கட்டி அக்குளில் இடுக்கிக்கொண்டு திருடனைப்போல்பதுங்கிப் பம்மிப்பம்மி காவல் வீரர்களின் பார்வைக்கு தப்பி ஒளித்து பாகேதாதென்னும் தோட்டத்தின் வெளிமதிற் சுவற்றை யடுத்து தன் காத்திருந்த

உடுபிடவைகளின் மூட்டையை மதிற்சுவற்றின் மேலீர்கவிசி தோட்டத்திற்குள் எறிந்துவிட்டு, அவ்விடத்திலிருந்த சாக்கடைக்கால்வாயின்வழியாய் தோட்டத்திற்குள் நுழைந்தான். அவ்வேளையில் காஜா உம்ருவானவர் பாதுஷாவினுடைய உத்திரவுபடி ஷர்பத்தென்னும் குடிப்பினங்களை யாவருக்கும் புகட்டிக்கொண்டிருந்தார். அப்பொழுது தம்முடைய இர்தயமானது துடித்து வேற்றுமைப்பட்டு ஹராரத்தென்னும் வெப்பம் தேகத்தில்தாவி நினைக்கின்றார். அஃதாயாதெனில் இவ்விதந்தானல்லவோ படுபாவியான குஸ்த்துமென்பவனும் அமீர் அவர்களுக்கு விருந்திட்டு குபாடஞ்செய்தானல்லவா? அதுபோல் ஒருவேளை இங்கும் எங்கு கடிதிதேரப் போகின்றதோவென சங்கேக மனக் கொதிப்புடையவராய் அங்குமிங்கும் பலசுத்து பொந்துகளையும் திரும்பித்திரும்பி முறைக்க வினைக்கபார்த்துக்கொண்டு நின்றுவிட்டு கலா ஹாஜத் யென்னும் பைகானுவிற்கு போய்வருவதாய் வெளியில் வந்து, தோட்டத்திற்சென்றி உலாவி வருபவரைப்போல் அங்குமிங்கும் பல பாகங்களையும் திரும்பித்திரும்பி பார்த்துக்கொண்டே சாக்கடைக்கால்வாயின் பக்கமாய் வந்தார். அவ்வேளையில் ஆதியானவர் அங்குள்ள ஓர் சுரங்கவீரனை நோக்கி சொல்லுகின்றார்: யாதெனில் இன்று பரீத்தக்கேன்பவன் எனக்கு இலஞ்சங்கொடுத்துவிட்டு தோட்டத்திற்குட் செல்ல முயன்றுவந்து என்னிடம் உள்ளேபோக உத்திரவு கேட்டான் யாரை அவனைசெல்ல வழிகொடுப்பவன் என்னையும் அவனுடைய பாட்டன் அல்கல் யென்னும் நம்மை ஹராமென்று நினைத்துவிட்டான் போலும், லஞ்சம்கொடுத்துவிட்டு தோட்டத்திற்குள் செல்ல நினைத்தான்யென்று சொன்னார். இவ்வார்த்தைகளை அருகிலிருக்கும் சாக்கடைக் கால்வாயின் ஓரமாய் நின்றுகொண்டிருந்த உம்ருவானவர் ஆதியினுடைய வார்த்தைகளை யெல்லாம் உற்றுநோக்கி கேட்டுத்தொண்டிருந்துவிட்டு தன்மனதில் நினைக்கின்றார் பரீத்தக்கேன்பவன் ஆதியை ஏமாற்றி தோட்டத்திற்குள் நுழைய முயன்றும் அஃதுகூடாமல் போனபடியால் எவ்விதத்திலும் இன்று என்னதந்திரமாவது செய்து எவ்வழியாலாயினும் இத்தோட்டத்திற்குள் நுழைந்து வருவான். இஃதுண்மையென்று சருதியவராய் ஒவ்வொரு மரஞ்செடிகளையும் இண்டு இடுக்குகளையும் உற்றுநோக்கி அதிக கவனமாய் பார்த்துக்கொண்டிருக்கையில் அகஸ்மாத்தாய் அவ்விடத்தில்பரீத்தக்கேன்பவன் வெளியில் நின்றும் எறிந்த உடுபிடவையின் மூட்டையானது ஓர் பக்

கத்தில் கிடக்கக்கண்டு அதையெடுத்து அவிழ்த்துபார்க்கையில் பரீத்தக்குடைய விலையுயர்ந்த போஷாக்கென்னும் லிபாஸுகளிருக்கக்கண்டு; தம்முடைய எண்ணத்தின்படி காரியம் நிறைவேறியபடியால் மனம் பூரித்து ஒருபுஜம் இருபுஜம் இருபத்துநாலு புஜமும் ஒன்றுபோல காங்கிதம் கொண்டு கூத்தாடி தலையசைத்த ஜட்பட்டென்று மூட்டையைக்கட்டி மறைவான ஓரிடத்தில் பதுக்கிவைத்துவிட்டு ஐயா! ஹராம் ஜாதன் வரும்வழியை பார்த்துகொண்டு. எவ்விடத்தில் நின்றும் வருகின்றானென, நினைத்து பல இடங்களையும் பார்த்தவராய் பெண்ணுகின்றார். இவ்விடத்திற்கு வருவதற்காக வழி யாதொன்றுமில்லையே எவ்வழியாய் வருவான் வழிகள்தோறும் காற்றும் செல்ல அஞ்சுமாறு வீரர்களுருவியை உயர்த்திபிடித்தசைத்துநிற்பதைகண்ட கள்ளனும் கடுகி முசுமாமல் ஓடிப்போய் விடுவானே அவ்விதமிருக்க இவ னெவ்விதமாய் இத் தோட்டத்திற்குள் வரப்போகிறா னென்று சங்கேகித்தவராய் மதிற் சுவற்றையும் மற்ற இடங்களையும் பார்த்த கண் இமைகொட்டாமல் நின்று கொண்டிருந்தார், அவ்வேளையில் சாளர கால்வாயின் வழியில் ஓர் தலைதோன்றி சுவற்றிற்கு இப்புறத்தில் கீட்டி தலையைப் புரட்டி புரட்டி நான்கு பக்கமும்பார்க்கக்கண்ட உம்ரு அதைகுனித்துபார்த்தார். உடனே அத்தலையானது வெளிக் கிழுத்துக் கொண்டது, அதை யறிந்த உம்ரு இவன் பரீத்தக்கே அல்லாமல் வேறொருவனும் அல்லவென்று தன்மனதில் நிர்மானித்துக்கொண்டு அத்தோட்டத்தின் பெரிய மாலியாகிய காஜா அலப்! போஷ் பென்பவரிடத்தில் சென்று ஓய் தோட்டக்காரரே என்ன இவ்வளவு அஜாக்கிரதையாய் கலியாணத்தில் கண்விழித்தவரைப்போல் காலை நீட்டிவிட்டு குறட்டைபோட்டு தூங்குகின்றீர், தோட்டத்தில் என்ன நடக்கின்றது என்னபோச்சுது என்பது உமக்கு அறவே தெரியாதுபோலிருக்கின்றதே சீக்கிரம் எழும்பும் இத் தோட்டத்திற்குள் ஓர் திருடன் நுழைந்து வர யெண்ணமுற்று சாளரத்தின் வழிபாய் தலையூசீட்ட யான் கண்டேன். உடனே அவன் தலையைவெளியி லிழுத்துக்கொண்டான், உம்மையான் புத்திசாலியென்று நினைத்து முகப்பத்தென்னும் நேசத்தினால் உமக்கறியப் படுத்திவிட்டேன். இனி நீருண்டு, அத்திருடனுண்டு, உம்முடைய வேலையுண்டு, பாதுஷாவினுடைய ஆக்ஞையுண்டு யான் சொல்வதை சொல்லிவிட்டேன், அப்படி யான் சொல்லியும் நீர் கவனிபாமல் ஜாடையா யிருந்து விடுவீராகில் பொழுது விடியாமலும்

போகாது கைதுகாலுவில் உம்மை யான் காணமலும் போகமாட்டேன். இத்தத் தோட்டத்தையும் நீர் அப்புறம் பார்த்தமாட்டீர் யென்றுரைத்தார். இவ்வார்த்தையை செவிபாரோதுணஞ் செய்த மாலியானவர் மனம் நடுங்கி பதறிபவராய் எழுந்து, தனதுவசத்தில் வேலை செய்யும் சில தோட்டக்காரர்களை கூட அழைத்துக்கொண்டு உம்ரு சொன்ன அடையாளத்தின்படி சென்று மறைந்திருந்து சுவற்றேறி சுவரூய் ஒதுங்கி பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவ்வேளையில் பஃத்தக்கேன்பவன் சாக்கடைக் கல்வாயால் நுழைந்து தோட்டத்திற்குள் புகுந்தான். உடனே மறைவாய் ஒளிந்து நின்ற தோட்டக்காரர்கள் ஆட்டுக்கிடாயை பாய்ந்து பிடிக்கும் பலபுலிகளுக்கொப்பாய் தாவிப் பாய்ந்து பற்றிப் பிடித்துக்கொண்டார்கள். அப்பொழுது பஃத்தக்கேன்பவன் அம்மாலிகளை நோக்கி ஓ! தோட்டக்காரர்களே! யான் பஃதக்கேன்னும் மந்திரியா யிருக்கும் என்னை விட்டுவிடுங்கள். யான் திருடனல்ல என்று பலவாறு புகன்றும் அவர்கள் அதை செவிக் கொடுக்காமல் ஓர் மரத்தில் அவனை இறுகப்பிணைத்து ஒவ்வொருவரும் விதிதம் போட்டுக்கொண்டு ஆளொன்றுக்கு இரண்டிரண்டுகுத்துகள்விதமாய்க்குத்தி பஃத்தக்கினுடையஉதரத்தைகம் கையும்படியாய்ப் புடைத்தார்கள். அதனால் அவனுடையஉயிர்புகளெல்லாம்கலகலத்து தேகமெல்லாம் வீங்கிவிட்டது. அப்பொழுதுஉம்ரு வானவர் காஜா கலப்! பேரஸ் யென்பவரை நோக்கிமாலியே யென்னுடைபுடலான கூச்சலா யிருக்கின்றதே யாது காரணமென்று ஒன்று மரியாதவரைப்போல் வினவினார். அதைக்கேட்ட மாலியும்ரைநோக்கி உம்ரே யாங்கள் யாவரும் கைராபியத்தாயிருக்க ஓர்திருடனைபிடித்து இதோமரத்திற்சேர்த்து பிணைத்துக் கட்டிவைத்திருக்கின்றோ மென்றுரைத்தார். அப்பொழுது பஃதக் ஆனவன் உம்ருவுடைய குரலையறிந்து ஓ! காஜா உம்ருவேயென அழைத்து அவரிடத்தில் மறைபொருளான ஜோரி பாஷையில் சொல்லுகிறான் காஜாவே! இவ்வேளையில் என்னை இச்சண்டாளர்களின் கரத்தில் நின்றும் மீட்டு என்னைக்காப்பாற்றி விடுதலைசெய்யுங்கள். இவ்வுபகாரத்திற்காக என் ஆயுள் முழுவதும் தங்களுடைய நன்றி மறவாதவனாய் இருப்பேன் எவ்விதமான தங்களுடைய உத்திரவையும் ஒரு பொழுதும் தவிர்க்கேன் யென்றுரைத்தான். அதைக்கேட்ட உம்ரு மாலியை யடித்து ஓய் காஜா கலப்! போஷ் யென்பவரே வாஸ்தவத்தில் இவர் பாதுஷாவினுடைய மந்திரி பஃதக்தான் என்னமோவகைமடிப்பாய் இவ்விடத்தில்இவ்விதம்

மாய்வந்து அகப்பட்டுக் கொண்டார் ஆகையால் உடனே இவரை அவிழ்த்து விட்டுவிடுங்கள் யென்று உரைத்தார். அதைக்கேட்ட அங்கு ஹாஜரா யிருந்ததோட்டக்காரர்கள்யாவரும் குலுங்க குலுங்க நகைத்து காஜா சாஹிபே! தாங்களென்ன தூங்கி விழித்தீர்களோ கனவுகண்டு கனாசொல்வதுபோல் உளறுகின்றீர்கள் பஃத்தக் என்பவருக்கு தலையில் என்னவிதி எழுதியிருக்கின்றது இவ்விதம் உரித்த கோழியைப்போல் முழு முண்டமாய் சாக்கடையில் நுழைந்து தோட்டத்திற்குள்வர; அவர் பாதுஷாவினுடைய ஸமூகத்திலிருப்பவராயிருக்க இவ்விதத் திருட்டுக்கோலமாய் வரவேணுமென்று என்ன அக்கரை யிருக்கின்றது, கடையில்லாமல் இவன் திருடன் தான் அதிற் சந்தேகமில்லை பெருத்த னவுக்குமுடைய திருடனைபடியால் நெஞ் சஞ்சாழல் இவ்விடத்தில் வந்தான் இவன் நெஞ்சழுத்தத்திற்கு தக்க தண்டனை செய்யாமல் விடக்கூடாது. இத்தோட்டத்தில் அவன் வந்ததற்கு நியாய் அவனை தண்டிக்க வேண்டும். ஒருவேளை தாங்கள் சொல்வதுபோல் பஃத்தக்கா யிருந்திட்டாலும் இவ்வேளையாங்களென் அவனை விடப்போகின்றோம். பொழுது விடியும் வரையில் இவனை இவ்விடம்விட்டு அடிபெயர்த்துவைக்கவும் விடமாட்டோம் பொழுது விடிந்தபின் பாதுஷாவின் சமூகத்தில் கொண்டுபோய் விடுத்து அவர் எவ்விதம் செய்ய காடுகின்றாரோ அதுபோலாகட்டும் யென்றுரைத்தார்கள். அதை கேட்டுக்கொண்டிருந்த பஃத்தக் ஆனவன் உம்ருவை நோக்கி, காஜாவே என்தலையின் விதியைப்போல் ஆகட்டும் என்னுடைய உடுபுடவைகளை யாவது கொடுக்கச் சொல்லுங்கள் அதையாவது உடுத்திக்கொள்ளுகின்றேன். அவ்வளவு சகாயமாவது செய்யட்டும் யென்றுரைத்தான். அதை கேட்ட உம்ரு அவனை நோக்கி ஓய்! பஃத்தக்கே! உம்முடையவிபாசுகளை யானுமறியமாட்டேன். இத்தோட்டக்காரர்களிடத்தில் ஒருவேளை யிருந்தாலும் அவர்களுக்கும் எனக்கும் அவ்வளவாய் பழக்கம் இல்லாதபடியால் யான் எப்படி அவர்களிடத்தில் சொல்லி வாங்கி கொடுக்கக்கூடும் யாரெடுத்தார்களோ யானறியேன் எந்தத் தோட்டக்காரன் எடுத்தொளித்துக்கொண்டானை தெரியவில்லையென்று சொல்லிவிட்டு உம்ருவானவர் பாதுஷாவின் சமூகத்தில் சென்று அவ்விரவு முழுவதும் அவர் வேலையாகிய ஷர்பத்து புகட்டும் தொழிலை ஒப்புக்கொண்டு வேலையை நடத்திக் கொண்டிருந்தார். பொழுதும்விடிய ஆரம்பித்து சுபஹ்ஸாதி யென்னும் விடிவெயருனபொழுது உம்ரு பாதுஷாவை நோக்கி ஜஹாம்ப

ருவே இவ்வதிகாலையான வேளையில் குளிர்ந்த சுகமனவாடையும் மரங்களின் இலைகள் நிறைய முத்துகளைப்போன்ற தல்லிதமாகிய பனித்துளிகள் தங்கி ஜொலித்துக்கொண்டிருக்கின்றது பொழுதும் விடியத் தொடங்கி கிழக்கு வெளுத்து நிலாத்தெளிக்க வருகின்றது. இவ்வேளைதான் தோட்டத்திற் சென்று உலாவிவரத் தகுதியான வேளை சேவல்கள் இறக்கைகளை யுதறி இன்பமான குரலோசையைக் கிளப்பி அல்லாஹுத் தஆலாவினுடைய அடியார்களே நித்திரையில் நின்றும் கண்விழித்தெழுந்து சர்வபரிபூரணனான அல்லாஹுத் தஆலாவை காடி துதியுங்களென்று அழைக்கின்றதுகள் அதிக இன்பமான வாசனையைப் பரவச்செய்யும் புஷ்பங்களானது அலர்ந்து மலர்ந்து பாதுஷா அவர்கள் இத்தோட்டத்தின்நிணைகையின்கண் வந்து சுகமனுபவிக்கின்றார்கள் இவ்வேளையில் இவ்விடத்தில் வருவதர்கள்ளில் நம்முடைய இன்பமான வாசனையை அவர்களின் நாசியில் புகுதவிட்டு மனமகிழச் செய்யலாமென்னும் எண்ணத்தினால் அப்பூக்களெல்லாம் தாங்கள்வரும்வழியைஎதிர்நோக்கி சிரித்துக்கொண்டிருக்கும் பாவனையா அலர்ந்தமலர்ந்துகொண்டிருக்கின்றது. மெதுவான மெல்லிய சிறுதளிகளான பனியினால் தூசுகளானது அவ்வவ் விடங்களில் காற்றில் எழுந்து பறக்கஇயலாமல் இலைகளையும் மரங்களையும் தரைகளையும் கவ்விப்பிடித்து, பாதுஷா அவர்களின் பாதாரவிந்தமானது எங்களின்மீதுபடாதாவென்றுவழிபார்த்து தயங்கிஇருக்கின்றவேளை இதுவாயிருக்கும் என்றுநாத்தர். உம்ரு சொன்ன இவ்விதமான அருமையான தேனுமிர்தம்போன்ற மொழிகளை செவிமாந்திய பாதுஷாவினுடைய மனமானது உம்ரு உடைய சொல்லின் வழிகளில் சென்று, அதுபோல் பெருத்த அமீர் அவர்களின் காத்தைப் பிடித்தவனும் சபையோர்கள் சூழ நடந்து தோட்டத்திற் சென்று உலாவிக்கொண்டே நடக்கும் வேளையில் உம்ருவானவர் பாதுஷாவை விளையாட்டு வேடிக்கை விநோதமாய் பஸ்ஸாத்தக்கை கட்டிவைத்திருக்கும் மரத்தின் பக்கமாய் அழைத்தேகினார். அவ்வேளையில் பாதுஷாவானவன் என்ன பார்க்கிறானெனில் பஸ்ஸாத்தக் என்பவனோ காலு விரற்கடைத்துணியும் அவன் தேகத்தில் அறவே இல்லாத முழுமுண்டமாய் மரத்திற் பிணைத்து இறுக்கிக் கட்டியிருக்கக் கண்டான். அப்பொழுது பஸ்ஸாத்தக் என்பவன் பாதுஷாவை நோக்கி முறையிட் டழுதவனும் என்னுடைய பிராகிய முர்ஷதே! இத்தோட்டத்தின் பாற்பானென்னும் தோட்டக்காரர்கள் என்னை இக்கோலத்தில்ஆக்கி அவமானப்

படுத்திவிட்டார்கள் என்று முறையிட்டழுதான். மற்றொரு பக்கத்தில் காஜா அஸ்ப்! போஷ் என்னும் தோட்டக்காரன் பாதுஷாவைநோக்கி ஜஹாம்பனு! இன்நிரவு நம்முடைய இத்தோட்டத்தின்கண் ஓர் திருடனைவன் சாக்கடைகால்வாயின் வழியாய் உள்ளே நுழைந்து வந்தான் அவனை பிடித்துக்கட்டி வைத்திருக்கின்றோம். இரவெல்லாம் அத்திருடனைகாவலாளர்கள் நான்கு பக்கமும் கல்லுதிமான குத்துகளாய் குத்திப் புடைத்து தொலுக்கி விட்டார்கள் அப்பொழுது அவன் பாதுஷாவினுடைய மந்திரி பஸ்ஸாத்தக்காயிருக்குமென்று பெருத்த பொய்வார்த்தைகளை மொழிந்து தப்பித்துக்கொள்ள வழிதேடினான் வாய்கள் விட்டாமல் கட்டிப்போட்டு வைத்திருக்கின்றோம் அதோபாருங்க ளென்றுரைத்தார் அவ்வார்த்தையை செவியுற்ற பாதுஷா அமீர் முதலாகிய யாவரும் அவன் யாரென்று பலபடமும் திரும்பித் திரும்பிப்பார்த்தும் வேறொருவருமில்லாமல் பஸ்ஸாத்தக்காகவேதானிருக்கக்கண்டு ஆச்சரியமுற்றவர்களாய் திகைத்து நிற்கையில் உம்ருவானவர் பரபரப்பாய் பாதுஷாவின் முன்பிலாகி ராஹேஜஹான் பஸ்ஸாத்தக் என்பவர் அதிகபுத்திகூர்மையுடையவரென்பதில் அவருக்கென்ன சந்தேகம் பொல்லாத விதிவசத்தது இவ்விதம் முழுமுண்டமாய் சாக்கடையில் தனைந்து தோட்டத்திற்குள் திருடனைப்போல்வர துஷ்கயால்இவ்விதம் பஸ்ஸாத்தக் அல்ல பஸ்ஸாத்தக்உடைய ரூபமாய் வைத்தானவன் வேஷமிட்டு வந்திருக்கின்றான். ராஜரூடையு மனதை களிப்பிக்கச்செய்வதற்காக வைத்தானை பிசாசும் கூட இத்தோட்டத்தில் பஸ்ஸாத்தக் உடைய வேஷமெடுத்து வந்திருக்கின்றது நிஜமாய் சொல்லுகின்றேன். இன்னும் ஒருஷாஅத்தேனும் இரண்டரைநாழிகை நேரத்தில் காற்றோடுகாற்றாய் மாய்கையாய் போய்விடும். பின்பு இவ்விடத்திலுள்ள ஒருவர்கண்ணுக்கும் புலப்படாது என்றுரைத்தார். இவ்வார்த்தையைக்கேட்ட பாதுஷா முதலாகியயாவரும் பஸ்ஸாத்தக்கை கட்டிவைத்திருக்கும் இடத்தின் சமீபத்தில் பேசிக்கொண்டே அடைந்தார்கள் அப்பொழுது அமீர் அவர்கள் இது உம்ரு உடைய பித்தலாட்ட பசாதே யொழிய வேறில்லை அவர்தான் இக்கோலங்களெல்லாம் செய்யும் வேடிக்கைக்காரர் என்று நினைத்தவராய் விட்டே அடித்து முத்தைபார்க்கையில் பஸ்ஸாத்தக்என்று திட்டவட்டமாய்த் தெரிந்துகொண்ட பாதுஷாவானவன் ஹா! ஹா!! ஹா!!! வென கெக்கலிபோட்டு குலுங்க நகைத்தான். கூடவிருந்த சபையோர்கள் யாவரும் கூட நகைத்தார்கள். அச்சமயம் சபை

யோர்கள் எவ்விதம் நகைத்தார்களெனில் பாதுஷாவினுடைய மர்
யாதை யென்பதையும் கவனியாதவர்களாய் பெருஞ்சப்தத்துடனே
துடைதட்டி நகைத்தார்கள். உடனே அமீர் அவர்கள் பஃத்தக் யென்
பவனை அழித்துவிடும்படி உத்திரவுசெய்து மீட்டும் பஃத்தக் இரவெ
ல்லாம் அனுபவித்திருந்த மஹா துன்பத்தில்கின்றும் விடுதலையாக்கி
பார்க்கையில் அவனுடைய தேகமுழுதும் ஏடிக்காயங்களாலானது
இரத்தம் தேகமெல்லாம் ஓடிக்கொண்டிருந்தது, சந்திரன் மறைந்து,
சூரியனும் வெளியானன். அவ்வேளையில் பாதுஷா நௌஷேரவானுனு
வன் ஏவலாளர்களை விளித்து பஃத்தக்கை அரைகாழிகையும் கூட
இவ்விடத்தில் தரிக்கவிடாமல் வெளியிற்றூரத்திவிடுங்களென் றுரை
தான். அப்பொழுது அமீர் அவர்கள் பாதுஷாவினிடத்தில் அதிக
மாய் மன்றாடிகெஞ்சி பஃத்தக் உடைய குற்றத்தை மன்னிக்கும்படி
கேட்டுக்கொண்டார் உம்ருவை அழைத்து மூன்றூறு அஷ்ரபீ பஃத்தக்
இடத்திலிருந்து வாங்கி அவருக்கு கொடுத்துவிட்டு புடவைகளை
வாங்கிகொடுக்கும்படி உத்திரவு செய்தபின்பு தங்களோடி பஃத்தக்
கையும் கூடவே அழைத்துக் கொண்டு மாளிங்கபுரமாய் சென்று
யாவரும் அவரவர்கள் இருக்கும் ஸ்தானங்களில் இருந்தபின்பு உம்ரு
வானவர் அம்மஃபிலென்னும் சபையோர்களின் பெயர்களை எழுதி
வைத்திருந்த டைரிபுத்தகத்தின் தலைப்பில் பஃத்தக் உடையபெயரை
வரைந்துவிட்டு, பாதுஷாவைநோக்கி ஜில்லே சுபஹானி கலிபத்தூர்
றகுமானியாகிய எங்க ளிறையே இந்த பஃத்தக் யென்பவரை தோட்
டக்காரர்கள் இரவெல்லாம் முகந்தெரியாமல் புடைத்த புடையால்
எலும்புகளெல்லாம் நொறுங்கி சரீரமெல்லாம் புண்ணுமி சரசில் ஓர்
முடியும் மிருதியில்லாமல் மொட்டையாய் போயிருக்கின்றார் திரேக
மெல்லாம் வீங்கி மினுமினுப்புத் தட்டி இருக்கின்றது. அஃதெவ்வித
மெனில் பீக்கங்கள் யாவும் பளிங்குக் கண்ணாடியைப்போல் பளபளத்
திருக்கின்றது. ஆகையால் அக்காயங்களுக்கு மற்ற மென்னும் பூசு
மருந்தாகிய மோம்பாதடவினுல் ஆவகளெல்லாம்சுகமாகும்தங்களு
டைய அனுமதியண்ணியில் இத்தோட்டத்திற்குள் வந்ததற்கு தெண்
டனை இதுபோதும். இனி இவ்விதக் குற்றம் ஒருபோதும் செய்யமாட்
டானென்று நினைக்கின்றேன் ஒருபோதும் இந்த அறிவுகெட்ட வேலை
செய்யமாட்டார் யென்று உரைத்தவராய் பஃத்தக்கின் அருகில்சென்
று, அவனை நோக்கிசொல்லுகின்றார். அஃதாயதெனில் பஃத்தக்கே
யெழுந்து மரியாதையாய் கைகூப்பி வணங்கின்று பாதுஷாவின்

முன்பில் தௌபாவென்னும் பிழைபொறுக்க தேடும்யென்று பல
வாறு கல்லுமரைப்போல் போதித்து பரிகாசஞ செய்துநின்றார் அதை
யறிந்த ஹாஜரீன் பெண்ணும் சபையோர்கள் யாவரும் சிரித்துக்கொ
ண்டிருந்தார்கள் அவ்வேளையில் பாதுஷாவானவன் பணிவிடைக்கா
ரர்களை நோக்கி ஆதி யென்பவரை அழைத்துவரும்படி ஆஞ்ஞாபித்
தான். உடனே ஏவலாளர்கள் சென்று ஆதியை அழைத்துவந்து
பாதுஷாவின் சமூகத்தில் விடுத்தார்கள் பாதுஷாவானவன் ஆதியை
நோக்கி உம்மை இத்தோட்டத்திற்குள் ஒருவரையும் விடக் கூடா
தென்று பாராவைத்திருக்க நம்மூன்டைய ஆக்கினையை அனுவாய்
மதித்து, அசட்டையாக்கி பஃத்தக் யென்பவனை தோட்டத்திற்குள்
விட்டு இவ்வளவுதூரம் வரும்படியாய்செய்தீர் அவன்வர்த்தை அறவே
நீர் அறிபமாட்டீர்போலும் காண்கின்றது உம்முடைய காவல் அவ்
வளவு ஜாக்கிரதையாய் கார்த்திருந் திருக்கின்றீர்களென்று கேட்
டான் புதைகேட்ட. ஆதிபாதுஷாவைநோக்கி ஜஹாம்பனு அந்த
பஃத்தக் யென்பவருக்கு என்னதாக்கத் இருக்கின்றது: உத்திரவில்லா
மல் இத்தோட்டத்திற்குள் வந்து முழைய தங்களுடைய இஷாரு
வென்னும் சைகையின் குறிப்புணராவண்ணம் இத்தோட்டத்தின்
வாசற்படியையும் கேத்திரங்களா லொருவன் பார்க்க தைரியசாலி
யானவன் இவ்வுலகத்தில் பிறந்திருக்கின்றானு? அந்த பஃத்தக் யென்
பவன் யென்னிடத்தில் இலஞ்சங்கொடுத்துவிட்டு உள்ளே முழைய
உத்திரவு கேட்டான் யான் அவனை அதட்டி கோபித்தேன் அப்பொ
ழுது வெட்க முடையவனுப் வீட்டுக்குச் சென்றான் யென்றுரைத்
தார். அதைக்கேட்ட பாதுஷா! ஆதியை நோக்கி இதோ உட்கார்ந்
திருப்பவன் யார் சற்று பாரும் அவன் பஃத்தக்தானே? அல்லது
வேறே யாராயினும் வந்திருக்கின்றானே? யென்றுரைத்தான். அம்
மொழியைக் கேட்ட ஆதி திரும்பிபார்த்து பஃத்தக் இருக்கக்கண்டு
அவனையதித்து இடதகையை பிடரியிற்கொடுத்து விழிகள் பிதுங்க
அழுத்தி ஏ! பஃத்தக்கே! நீ! தோட்டத்திற்கு வெளியில்வா! உனக்கு
எவ்விதமரியாதை நடத்தி வைக்கின்றேன். பார்யென்று பிடித்திழுத்
தள்ளிகின்றார். அவ்வேளையில் அமீர் அவர்கள் ஆதியை நோக்கி ஓய்
ஆதிகரபே பஃத்தக்கை விட்டுவிடும் பாதுஷாவானவர் பஃத்தக் உடைய
குற்றத்தை மன்னித்துவிட்டார்கள். ஆகையால் நீர் அவரைவிட்டு
விலகிநில்லும் அவர் விஷயத்தில் யாதொன்றும் சொல்லவேண்டாம்
என்றுதடுத்து விலக்கி நீர் எங்கிருந்தீரோ அவ்விடத்திற்குச் சென்று

இனியாகிலும் ஜாக்கிரதையாய் காவல்புரியும் யென்றுரைத்தா
அம்மொழிகளே யுணர்ந்த ஆதி தாம் காவல்புரியும் தோட்டத்தி
வாசற்படியை யடித்து அங்கு தப்முடைய ஆசனத்தில் வீற்று
காவல்புரிந்தார். பின்பு சபையில் ஷர்பத்து பரிமாறும் முறைவ
ய்தியது அவ்வேளையில் சூரிபன் அடைந்து சந்தோஷதபமானன் ஆ
காங்கு பலவித ஒளிவுபொருந்திய பிரகாசதீபங்கள் அமைக்கப்பெ
றது ஆடல் பாடல் முதலாகிய கேளிக்கைகள் நடத்தப்பட்டு அ
வினோதமாய் நடந்துகொண் டிருந்தது. உம்ருவானவர் ஒவ்வொரு
ருக்கும் வெகுவினோத ஆட்டத்தோடு ஷர்பத்தை புகட்டிக்கொண்
டிருந்தார் பொழுதும் விடிந்தது அப்பொழுது, பாதுஷாவானவர்
அமீர் முதலாகிய யாவர்களுடனும் நாற்பது பளிங்குத்தூண்களால்
அமைக்கப் பெற்ற அதிவினோத அலங்கார முத்துமாளிகையி
போய்ச் சேர்ந்தார்கள் அமீர் அவர்கள் அம்மஹலுடைய நிர்மாண
விசித்திர வேலைத்திறத்தைப்பார்த்து தாரிப்பென்னும் புகழ்ச்சி செ
ய்தார்கள் இவ்விதமே பாதுஷாவான்வின் ஒவ்வொருநாளும் அமீ
அவர்களோ வெவ்வேறு மாளிகைகளுக்கு அழைத்துச்சென்று வே
டிக்கை வினோத விருத்தளித்துக்கொண் டிருந்தான். இப்படி
ஐந்துநாள் வரையில் இரவும் பகலும் பாதுஷாவினுடைய கண்களை
நித்திரை செய்யாமல் விழித்திருந்து வினோதங்கள் செய்துக்கொ
ண்டிருந்தபடியால், அவ்வேளையில் பாதுஷாவுக்கு நித்திரையும்
உண்டாகி தூங்கிவிட்டான். அமீர் அவர்களும், தங்களுடைய உ
பிடவைகளை மாற்றிக்கொள்வதற்காக அம் மாளிகையின் அந்தப்
புரத்திற்குச் சென்றார்கள். அவ்வேளையில், அமீர் அவர்களுடன்
அவர்களின் நேசர்களும் சென்று யாவரும் உலாவி செல்வதுபோல்
அத்தோட்டத்தின்கண் ஓரிடத்திற்குப் போய் சேர்ந்தார்கள். அவ்
விடத்தில் ஓர் சுத்தமான ஜலம் நிறைந்து ஓடிக்கொண் டிருக்கவும் அவ்வரு
வியினின்றும் அநேக கால்வாய்கள் பிறக்கப்பட்டு பலமாளிகைகளுக்
கும் ஒவ்வோர் கால்வாய்கள் செல்வதாயிருந்தது, அவ்வித அநுபவ
பொருந்திய ஜலத்தைக் கண்ணுற்ற அமீர் அவர்கள் குசல் செய்ய
நாடியவராய் மக்பூலை யழைத்து மக்பூலே இந்த நதியில் மூழ்கி உட
ம்பை சுத்திசெய்துக்கொண்டு வேறே பிடவைகளை மாற்றிக்கொள்ள
வேண்டும். ஆகையால் வேறேஉடுபிடவைகள் கொண்டுவாருமென்று
ஆஜ்ஞாபித்து அவ்வாற்றின்கண் அமீர் அவர்களிறங்கி குளிக்க ஆரம்

பித்தார். அப்பொழுது அவ்வாற்றங்கரையின் அருகிலிருந்த மாளி
கை உப்பரிகைச்சாளரவழியாய் பாதுஷா நௌஷேரவானுடைய எக்
புத்திரியாகிய மெஹர் நிகாரென்னும் அதிசவுந்தர்ய ரூபவதியான
வள் தோட்டத்தை நோக்கியவளாய் உட்கார்ந்திருந்தாள். அவ்வேளை
யில் பாதுஷாவினுடைய புத்திரியினுடைய பார்வையானது அமீர்
அவர்களின்மீது பட்டது உடனே இஷ்க் யென்னும் ஆசையின்
அம்பானது அம் மங்கையின் மார்பில் பாய்ந்து வடுருவி தனைத்து
ஹிர்தயத்தில்பட்டு ஆ! ஸ்ரா!! என்னே இவ்வழகுபொருந்திய அதிரூ
பலாவண்ய சொரூபனுடைய வாலிபனின் ஆசையென்னும் வலைக்குள்
நிக்க செய்துவிட்டார். இருந்த இருப்பிலேயே இவ்விஷ்க் யென்னும்
டனது என் நெஞ்சத்தை ஆழுகபுண்ணுய் ஆக்கிவிட்டதே யான்
இதேலத்தில் அவருடைய மாய்கையில்சிக்கி தவித்து மயங்கி இரு
க்க அவ மாத்திரம் யான்படும் கஷ்டத்தை பார்க்காமல் சலாபத்தாக
செல்லுவதே வென கருதி பொறுமையுள்ளவளாய் தன்னுடைய
முத்தில் அணிந்திருந்த முத்துமாலையை கழட்டி சுழட்டி அமீர்
வத்துவைத்து வீசி யெறிந்தாள். அது நேரே சென்று
மெஹர் நிகாருடைய எண்ணத்தை நிறைவேற்றி வைப்பதற்காக இவ்
ளவுநாள் அக்கன்னிகையின் கழுத்தில் கிடந்து மார்பிற் புரண்டு
கொண்டிருந்தேன். அதின் கூலியாகிய பணிவிடையை இன்று யான்
செய்ய நேரேசென்று அமீர் அவர்களே உசுப்பி மெஹர் நிகாரை
பார்க்கும்படி செய்கினறே வென்று சொல்லிக்கொண்டு செல்லும்
பாவனையாய் அவள் கரத்தைவிட்டு வெள்கத்கையது முதல அமீர்
அவர்களின் தோளில்வந்து விழும்வரையில் கலகல ஜலஜல கலகல
ஜலஜல வென்று சப்தித்தகாய் ஜல்லென்று வந்து புஜத்தில் விழுந்
தது. உடனே அமீர் அவர்கள் அம்மாலையை கரத்தில் பெடுத்து
அது சப்தித்து வந்தவழியை நோக்கி நோட்டமிடுகையில் அவ்வுப்ப
ரிகையின் சாளரத்தெதிரில் அல்லா சுபுஹானஹுவத் தஆலாவி
னுடைய குதரத்தென்னும் திருக்காகிழையைக் கண்ணுற்றார். அம்
பாதெனில் அவ்விடத்தில் மின்னலோ மின்னின் ஒளியோ பொன்
னொளி மதியோ? பூரணத்தெளிவோ பொன்னரும் பதுமையோ
பொற்குடக் கலசமோ தன்னை நினைவோ வென மதி மயங்கும்வாறு
பார்த்து ஆசையானது சகிக்கமுடியாதவராய் மனமயங்கி ஸ்மரணை
யற்று அச்சலத்திற்றனே விழுந்துவிட்டார். உடனே மக்பூல்யென்
பவர் ஜலத்திற் குதித்து, அமீர் அவர்களைத்தூக்கி படிமீதமர்த்தி சோ

கந்தெளிய சிகிச்சை செய்தார். அப்பொழுது அமீர் அவர்கள் ஹஸ்யாராகி ஓர் பெருமூச்செறிந்தார் அப்பெருமூச்சினில் அமீர் அவர்களின் ஹிர்தயகமலத்தின்கண் ஆசையென்னும் தீயானது மூண்டு எரிய ஆரம்பித்தது, அத்தீயின் வெப்பமானது முளையில்தாவி அச்சுட்டிலுல் முளையுருகி கண்களால் நெய் சொட்டுவதுபோல் கண்ணீர்வடிந்தது, மனதில் எண்ணுகிறார் அதுயாதெனில் ஹாய்! இவ்வென்னும் ஓயாத துளிர்விட்டெரியும் அவியாத நெருப்பே! உன்னுடைய காங்கையால் மலைகளெல்லாம் உருகி நீராகிவிடும் கரையாத கல்களெல்லாம் மெழுகைப்போல் கரைந்துருகி யோடும் இரும்பும் தண்ணீராய் உருகிவிடும் இப்பேர்ப்பட்ட இஷ்க்கென்பதை இதுகாலம் யானறியாமல் இருந்த யென்னை இப்பொழுது அவ்விஷ்க்கானது தூங்கிக்கொண்டிருந்தவனை பெழுப்பியதுபோல் விழித்தக்செய்து அவ்வாசையென்னும் அக்னிசுவாலைக்குள் அகப்பட்டுதீய்ந்து கருகச்செய்கின்றதே யென்று பலவாறு சிந்தித்தவ்ரய் எங்கி பலகால் பெருமூச்செறிந்து சுழன்று கோர்த்து மக்பூலுடைய மடிமீதுபுரண்டார் இவ்விதம் மதிமயங்கி: ஞானியைப்போல தன்னை இஷ்க்கென்னும் நோயால் வருத்தி தாயகும் அமீர் அவர்களை மக்பூலென்பவர் நோக்கி எங்கள் பாதுஷாவாகிய அமீர் அவர்களே எல்லாமுணர்ந்த தங்களுக்கு யான்மேல் யோசனை சொல்ல எவ்வளவும் பாத்திரனல்ல, தவறுனினும் இவ்வேளையில் மிகுந்துடைய சிலவசனங்களை தாங்கள் நன்றாக் கவனிக்கவேண்டியதா யிருக்கின்றது, அஃதாயாதெனில் அமீரே முகாமென்னும் ஸ்தானமானது தாங்கள் இவ்விதம் கலங்கிப் புலம்பும்படியான ஸ்தானமல்ல அதிசிக்கிரம் தங்களுடைய எடுத்து நீக்கிவிட்டு மாற்றுடையுடுத்திக்கொண்டு மாளிகையின்கண் செல்லுங்கள் யென்றுரைத்தார்: மக்பூல் உரைத்த அன் னியாய போதனையை உணர்ந்த அமீர் அவர்கள் தூங்கிவிழித்தவரைப்போல்திடுக்கிட்டுமக்பூலே நீர்நல்லவேளையில் சமயோசிதமான நீதம் பகர்ந்தீர். இதற்காகவன்றோ மூன்றோர் மொழிந்துளார் "செல்லிடஞ் செல்லிலும் சேர்துணையோடெழி" என்றுரைத்துளார் யென்பகர்ந்தவராய் மக்பூலை நோக்கி மாற்றுடைகளை கொண்டுவருமென்றுரைத்து அவைகளை வாங்கி அணிந்துகொண்டு மனதை திடப்படுத்தி "எனக்கமது கைவிடல்" என்பதுபோல் தைரியத்தை விடாதவராய் உடைபது விளம்பேலென்னும் மர்மத்தை வெளிவிடாமல் சபையின்கண் நடந்துசென்றார்கள், எவ்விதம் சபையில் அமீர் அவர்

களுக்கு மருந்து, மரியாதை முதலாகிய மனக்களிப்பெய்யும் விஷயங்கள் நடப்பினும் அவைகளெல்லாம் கடலிற்கரைத்த புளியைப்போல் அமீர் அவர்களுக்கு காணப்பட்டதே யொழிய ஒன்றிலும் மனம் செல்லாதவராய் தாங்கள் கண்ட அக்காக்ஷியின் ரூபமானது மனதில் சித்திரப்படம்போல் பதிந்து போய்விட்டபடியால் மீனது யாதொன்றிலும் செல்லாமல் வியாகூல முற்றிருந்தார்.

இம்ஙினமவ்வாறிருக்க மாளிகையின் உப்பரிகையின் மீதிருந்த மலிக்காமெஹர் நிஹாரென்னும் பெண்மணியின் செய்தியை சொல்லுகின்றேன் செவிகொடுத்துக் கேளுங்கள் அமீர் அவர்களைத்தான் அவ்விஷ்க்கென்னும் அக்னியானது வாட்டிவதக்கிக்கொண்டிருக்கிறதென்று எண்ணுகின்றீர்களோ இல்லை இல்லை அவ்வாசையென்னும் தீயானது எல்லிதத் தீயானுல் யோகிகளின் கோபப்பார்வையானது ஓர்வஸ்துவின் மேல்பட்டவுடன் எப்படி குபீரென்று பத்திகெரிய ஆரம்பிக்கின்றதோ அதுபோல் மெஹர்நிகாருடைய கண்திருஷ்டியின் அக்னியானது அமீர் அவர்களை சுட்டுவாட்ட ஆரம்பித்துவிட்டனே அமீர் அவர்களின் நேத்திரதிருஷ்டியின் சுவாலையாகாது மெஹர்நிகாரென்னும் பெண்மணியின்மீது தாவி சூழ்ந்து அமீர் அவர்களை வாதிக்கும் கொடுமையிலும் ஆயிரம்மடங்கு அதிகமாய் பற்றியெரிந்து வாட்டிவதக்க ஆரம்பித்தபடியால் மெஹர்நிகாரென்னும் மாது சிரோன்மணியானவள் மூர்ச்சையாகி ஸ்மரணையற்று தான் குந்தியிருந்த சப்ரகட்டில் மஞ்சத்தின்மீது வீழ்ந்து விட்டாள். உடனே தாதிப்பெண்களும் பாத்திகளும் பணிவிடைக்காரர்களும் மெஹர்நிகாரை வந்துசூழ்ந்து, அம்மம்மா சேஹஜாதியே யாதுவந்துற்றது? என்ன செய்கின்றது யாதொன்றும் தெரியவில்லையே யென்று பலரும் பலவிதமாய் சிகிச்சைசெய்ய ஆரம்பித்து, சிலர் காக்கைவலியென் றுணர்ந்து நாற்பது இரும்புத் திறவுகோல்கள் சேர்ந்த கொத்துச்சாவி யென்னும் செகல்குஞ்சியை ஜலத்திற்கழுவி அதை குடிப்பாட்டுகின்றவர்களும், சிலர் பேய்பிசாசின் பார்வையாயிருக்குமென்றும், ஆயத்து லிகுர்ஸியை கல்லஜலத்தில் ஓதி ஊதிக் குடிப்பாட்டுகிறவர்களும், சிலர் காதே அலிறயன் மலஹல் அஜாயிப் யென்னும் துஆவை ஓதி முகத்தில் ஜலமடித்து குடிப்பாட்டுகின்றவர்களும், சிலர் வேப்பிலையடித்து குழையடிப்பவர்களும் சிலர் கன்னத்தை துணிகளை சுருட்டி நெருப்பில் பற்றவைத்து மூக்கில் புகை

வற்றுகின்றவர்களும், சிலர் பீச்சீரினல் முகத்தை கழுவித் துடைப் பவர்களும், சிலர் குதை, குலாப், மோந்தியா, வேப்டா, தல்வு, கஹ்ரக், இவினு, முஷ்க்கேஹினு, சூலே குல்லரி சூலேமேந்தி, சூலே ஆம்! முதலாகிய பற்பல கற்கந்த வாசனை நிரியக்களாகிய அத்தர் நினுசிகளை முகரக் கொடுப்பவர்களுமாகி சிகிச்சைசெய்ய ஆரம்பித் தார்கள் இன்னும் சிலர் கேசத்தையும் கைகால்களையும் சிரசையும் தாழ்வாய்க்கட்டையையும் மெதுவாய்ப் பிடித்து அசைத்துதடவி அம்மம்மா! மெஹர் நிகாரே சற்று கண்ணைத்திறந்து என்னைப்பார் இதோ உன்கள் தந்தையாகிய பாதுஷா அவர்கள் வருகின்றார்கள் கண்ணை விழித்து, அவரைப்பாரம்மா குளிர்ந்த தண்ணீர் வேண்மோ யென பலவாறு புகன்று சிகிச்சைகள் செய்து அச்சித்திரச் சிலை யான பொற்பதுமையையொத்த மெஹர்நிகாரை சோகத்தில் நின் றும் விழிக்கச்செய்து, உஷ்யாராக்கினார்கள். உடனே மெஹர்நிகா ளவள் யெழுந்து உட்கார்ந்து ஒருவரிடத்திலும் ஒன்றும் பேசாமல் மனதில் யோசிக்கத் தொடங்கியதாவது யாதெனில் இவ்விரகசியத் தை தம் மனதின்கண் அமைத்து முடிவைப்பதையே பெரிய ஜாக் ரென்னும் பிரசங்கத்தில் விடிவோமாயின் பழிப்புக்கிடமாகி விடுவே னக் கருதியவளாய் பணிவிடையாளர்களை நோக்கி தோழிகளே! நாதிகளே! பார்திகளே! நீங்கள் யாவரும் யாதொன்றையும் யோசி த்து மனம்புதறவேண்டாம் எனக்கொன்றுமில்லை ஏதோ தற்செய லாய் ஓர்மயக்கம்உண்டாயிற்று அதுவேயொழிய வேறொன்றுமில்லை யென் றுரைத்தாள். இம்மிவ்வாறிருக்க அமீர் அவர்கள் இத்தினுசான் பாகேதாதென்னும் தோட்டத்தில் சுகமனுபவித்திருந்த நாட்களெல் லாம் எப்படிக் கழிந்ததென் றறியாதவராயினும் இப்பொழுது மெஹர்நிகாரை கண்டு சபையில் வந்தமுதல் சூரியனே எப்பொ ழுது மேற்கேபோய் அடையுமென்று அடிக்கடிநோக்கியும் அச் சூரி யனுடை அமீர் அவர்களிடத்தில் எதாவது வெகுமதி பெற்றுக்கொ ண்டு செல்வேவேயொழிய அதற்கிடையில் இருந்த இடத்தைவிட்டு சுகமாட்டேனென்று தீர்மானம் செய்துகொண் டிருப்பதும் கொப் பாய் அமீர் அவர்கள் அதைப் பார்க்குந்தோறெல்லாம் அவ்விடத்தி லேயே இருப்பதாய்த் தோணப்பட்டபடியால் அமீர் அவர்களுக்கு அச்சூரியனின்மீது கோபம்மூண்டு பல்லை நெற நெறவெனக் கடித்து உறுக்கிப்பார்த்து சீக்கிரம் செல்லமாட்டாயாவென மனதில் கினைந் தவராய் இருந்தபடியால் சூரியனுடை அமீர் அவர்களின்கோபப்பார்

வையினல் ஒருவேகோ எங்கு பாய்ந்து இதற்குப்பின் முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைகிவசல்லம் அவர்கள் சந்திரனை இரு பிளப்பாக்கப் போகின்றார்களே அதுபோல் இவரும் சூரியனுடை நம்மை பிளந்து விடுவரோவெனப் பயந்து அமீர் அவர்களைப் பார்த் துக்கொண்டே பின்னுக்கிடைந்து செல்வதைப்போல் மெல்லமெல்ல நகர்ந்து மேற்பாற்கடலின் திசையில் ஓடி யொளிந்துக் கொண்ட பாவனையாய் மறைந்து அஸ்தமித்து, இரவுவந்தடைந்தது அவ்விதம் இரவுகாலம் அடுத்தும் தக்கசமயம்வாய்க்காத முற்பொழு திரவாய் இருந்தபடியால் அதின் பிற்பாதி இரவெப்பவருமென வழிபார்த்த வராய் கடிகை, நாழிகை, முதலாகிய நேரத்தினை வெகுசஷ்டத்தோடு கழித்துக்கொண் டிருந்தார். அவ்வேளையில் முற்பாதி இரவெல்லாம் நீங்கி பிற்பாதி இரவின் ஆரம்பம் துவக்கமாகவே அமீர் அவர்களின் நப்ஸ் வென்னும் அம்மாருவானவன் யெழுந்துநின்று அமீர் அவர் களை இதுவே சரியானவேளை கிளம்புங்கள் யான் வழிகாட்டுகிறே னென்று முன்னுக்குச் சென்று வழிகாட்டுபவனைப்போல் துடி துடித்து நின்றது. அவ்வேளையில் அமீர் அவர்கள் மனதை அடக்க முடியாதவர்களாய் பாதுஷாவை நோக்கி ஜஹாம்பனுலாகிய பாது ஷாவே! இவ்வாறு நினங்களாக என்னுடைய கண்கள் இமையோடு இமைசேராமல் இரவிம் பகலும் ஒரே விழிப்பாயிருந்தபடியால் இன்னைக்கு ரஜாவென்னும் விடுமுறை தந்தருளவேண்டும் யான் எங்கேயாவதோர் தனித்த இடத்தில் சென்று நித்திரைசெய்து விடிவேற்றுவதுடன் எழுந்து ஹாஜரில் ஹாஜராகுகின்றேனென ன்று உத்திரவு கேட்டார்கள். உடனே பாதுஷா! அமீர் அவர்களின் விண்டுகோளுக்கிணங்கி உத்திரவளித்தான் உத்திரவு பெற்ற அமீர் அவர்களும் மக்பூல் வபாதாரும் யெழுந்து அம்மஹலினிட்டும் வெளி யாகி மெஹர்நிகார் வசிக்கும் அம்மாளிகையின் மதிற்சுவற்றைத் தாண் டி, சற்றிலும் நான்குதிசையும் வழிபார்த்தும் மாளிகைக்குட் செல்ல பாதை அகப்படாதபடியால் தயங்கியோசித்து நிற்கும் வேளையில் ஓர்மரமானது அம்மஹாலைத்தாண்டி வளர்ந்து சுவற்றோடு சேர்ந்து நிற்பதை யறிந்து, அம்மரத்தின் கிளையானது, அம்மாளி கையின் உப்பரிகையின்மீது படர்ந்து நிற்குபடியாலும் இருதபடி யால் மக்பூலென்பவரை அம்பரத்தினடியில் நிறுத்திவைத்து விட்டு தாங்கள் மரத்தின் வழியாயேறி சாய்ந்து படர்ந்திருக்கும் கிளையின் வழியாய் உப்பரிகையின் மீதிறங்கினார்கள்.

அமீர் அவர்கள் மெஹர்நிகாருடன் முதல் சந்திப்பு.

இவ்வுலகத்தின்கண் மானிடப் பிறப்பினர் அனைவரிலும் அதிரூ பலாவண்ய சவுந்தரிய சொரூபிகளாகிய மாது சிரோன்மணிகளின் அழகுகளெல்லாம் சிரசாய் விளங்கிநிற்கும் மெஹர்நிகாரென்னும் கிருபைகிறைக்கு குளிர்ந்த பார்வையினையுடைய அதிசவுந்தரிய ரூப வதியை காண்பதற்காக அமீர் அவர்கள் அம்மாளிகைக்குள் செல்ல வழி தேடினார்கள். அஃதேனெனில் இதன் கீழ்வரும் பாடலி யொத்த இஷ்க் என்னும் ஆசையின் ஒருப்பானது அமீர் அவர் களை அக்கடிவிரவிலே அம்மாளிகையின் உப்பரிக்கைமீதும் சுற்றி சுற்றி உள்ளே நுழைய வழி பார்க்கச்செய்ததே அப்போர்ப்பட்ட இஷ்க் ஆனது எதுவானால்.

பதினெண்குசீர்க்கழி நேடிலடி லாசிரியவிருத்தம்.

திருவனரும் புவியில்வாழ் மாந்தர்கட் கெய்திடும்
திகழ் கருமமும் புதிதுதான்
செய்யரிய வதன்குணம் புதிதுதா னென்றிடினும்
செப்பெரிய மோக மெனிலோ
அருமையே பென்றிடினும் அங்கஜன் கணையினல்
ஆவியுந் தரிப்ப தரிது
ஆனந்தக் கண்ணீர் சொரிந்துதான் மனதினை
ஆராத புண் படுத்தி
அனுதினமும் சரசகா யகியுடன் காதலாய்
அன்புடன் சுகித் திருக்கில்
பெருமையாய் மோகத்தி லாழ்ந்திடச் செய்திடும்
பெட்புதும் மாதிலுடனே
மருவியே சுகலீலை யினிதாய்ப் புரிந்திடில்
மன மகிழு மாசையாலே
மாசுமிலையாய்ச் சாதுர்ய மாகவே யிருப்பவர்
மனிதரிற் சிறந்து ளோரே.

இர்தயத்தைப் பிளந்து கர்மைபொருந்திய கலமென்னும் எழுது கோலாக்கி அக்கலமென்னும் எழுதுகோலின் மூலவழியாய் வடி யும் இரத்தத்திற் கொப்பாகிய மையினல் எழுதத்தணியும் ப்ரபரப் பான கரத்தையுடைய காத்திபுகள்எழுத உலமாக்க ளென்னும் வேதா ந்திகள் சொல்லுகின்றார்கள். யாதெனில், அமீர் அவர்கள் மெஹர் நிஹாரை சாணுவதையும் பின்பு அம்மங்கையை விட்டுப் பிரிந்து வேறுகி வெளியில் வருவதையும் சொல்லுகின்றே னென்று அவ் வேதாந்திகளுரைக்க அதையுணர்ந்த கலமென்னும் எழுதுகோலா னது தங்களுக்கேன் அவ்வளவு கஷ்டம் அவ்வேலையை யானேசெ ய்து விடுகிறேனென்று எழுதத்தொடங்கி என்ன எழுதுகிறதானல் அமீர் அவர்கள் உப்பரிகையின் மீதிருங்கினு ரென்று முன்னமே சொல்லி யிருக்கின்றே மல்லவா? அப்படி இருந்த அமீர் அவர்கள் உள்ளே நுழைய வழிபார்த்து உற்று நோக்கி நிற்குங்காலையில் ஓர் வாசற்படி தென்பட்டது. அவ்வழியே நோக்குகையில் மலிக்கா மெஹர் நிகாரென்னும் பெண்ணனது தாதியர்பாங்கியர் சூழ கோடி நக்ஷத்திரக்கூட்டங்களுக்கு நடுவே பூரணச்சந்திரனது ஒளிபரப்பி வீற்றிருப்பதுபோல் கண்டார். ஷாபென்னும் ஷர்பத்து வகைகள் நிறைந்த அனேகபொற்கூஜாக்களும் அச்சர்பத்தைவார்த்து அருந்தும் பாத்திரங்களாகிய நவரத்தினங்க ளிழைக்கப்பெற்ற பசும்பொற் கிண் ணங்களை அருகில் அக்கூஜாக்களை சூழவைத்திருக்கவும் ஓர் இரத்தி னத்தினல் கடைந்தெடுக்கப்பட்ட விலையுயர்ந்த இரத்தினக் கிண்ணத் தில் ஷர்பத்தை நிறைத்து கரத்திலேந்தியவளாய் மெஹர் நிகார் சிம்மாசனத்தில் வீற்றிருக்கவும், கரத்திலிருக்கும் இரத்தினக் கிண் ணத்தின் உள்ளிருக்கும் ஷர்பத்தானது அம்மலிக்காமெஹர்நிகாரு டைய சாயல்பட்டு மின்னலிப்போல் ஜொலிக்கவும் அமீர் அவர்க ளின் எண்ணமேலிட்டு ஒன்றின் பின் னொன்றும் மூத்தகளைத் கோர் த்து தொங்கவிட்ட பாவனையாய் மலிக்காமெஹர்நிகாரின் வேலினை யொத்த நிறைய கண்களில் நின்றும் கண்ணீர்வடிவது அம்மூத்தச் சரத்தைப்போல் மடிமேல் விழுந்துகொண்டிருக்கவும் இஷ்க்கென் னும்ராஜனது இளம்மார்பில் பற்றிப்பிடித்து துடித்து நிற்கவும் ஹ! ஹ! வென்னும் ஆயாஸக்குறி கொவ்வைப்பழ இதழ்களில் துடி த்து நிற்கவும் அப்சு ளென்னும் பெருமூச்சானது அடிக்கடி கிளற் றில் விடுத்து ஜலத்தை மொள்ளும் தாம்புக்கயற்றைப்போல் உந்தி யில்நின்றும் நாசிவழியாய் சீறி செல்லவும் இவைகளை யெல்லாம் அமீர்

அவர்கள் அருகில் நின்று உற்று நோக்கினர். அவ்வேளையில் அமீர் அவர்களுக்கு எவ்வித மிருக்கதெனில் மெகர்நிஹாருடைய அழகுக்கு முன்னுல் சூரியனுக் கெதிர்ப்பட்ட வைரமிம்மமும் வெட்கித் தலை குனிந்துப் போய்விடும்படியான அழகாயும் பதினுலாம் பக்கத்து பூர்ணசந்திரனும் மெஹர்நிகாருடைய முகத்தை கண்டு வெட்கி தலைகுனிந் தோடிப்போய்விடும்படியான முகத்தை யுடையவளாயும் தாழ்வரைக் கட்டையின் கடையில் உள்ள பதிந்த கோட்டை ஹாரூத் மாரூத் யென்னும் மலக்குகளும் பார்த்தால் தன்னை மறந்து, பனு வாகிப் போய்விடுவார்களே அப்பேர்ப்பட்ட அழகான தாழ்வாய்க் கட்டை யுடையவளாயும் கன்னங்களைப் பார்த்த துருஞ்சிப் பழமா னது தன்னுடைய பற்கள் கூசி உதிர்ந்து போகும்படியான நிலைமை யிலாகிவிடுமே, அவ்வித அழகு பொருந்திய கன்னங்களை யுடையவ ளாயும் தேகத்தில் நாஜூக்கான ஒழுங்கை பார்த்த காற்றும் மீரமா னது மஜூனுனென்னும் பைத்தியம்பிடித்து திரிந்தலைந்து மாறுமே அவ்வித நாஜூக்காகிய மேனியை யுடையவளாயும் கன்னமுகட்டை நோக்கிய செம்பரத்தம் பூவானது வெட்கி மனவருத்தத்தில் நீங் கிருஞ்சிப்போய் விடும்படியானதாயும் கன்களைக் கண்ட் சீனதேசத் தின் மான்களானது இனிநாம் இவ்வூரில் வசிப்பதைவிட் எங்கேயா வது முகம்போனபோக்காய் ஓடிப்போய் நித்தனைக்குள்ளாகாமலிருப் போமென்று காட்டினிடமாகச் சென்று விட்டதற்போலும் புருவத் தைக்கண்ட முதல்நாள் பிறந்த இளம்பிறையானது தன்னுடைய விரல்களை நீட்டி மலிக்காவைக்காட்டி நகூத்திரங்களை நோக்கி! ஓ! நகூத்திரங்களே அல்லாகுத் த ஆலா என்னைப்போல் வேறொன்றை யும் படைக்கவில்லையென்று நினைத்திருந்தேன். இப்பொழுது பார்த் தால் மலிக்காமெஹர்நிஹாருடைய புருவக்களிரண்டும் என்னிலும் தூரமடங்கு பிரகாசமாய் ஜொலிக்கின்றதைப் பாருங்களென்று மலிக்காவைச் சுட்டிக்காட்டிய பாவனையாயும் சீம்பிலென்னும் அழ குபொருந்திய அநிபிர்துவாகிய ஓர் நற்கந்த செடியின் தளிரானது மலிக்காவினுடைய ஜூல்ப் யென்னும் காதின் அருகில் வளர்ந்து சுருண்டிருக்கும் முடியைநோக்கி யான் நெஞ்சோவானுடைய பேட்டத்தில் சுத்திருக்க என்னைக்காண அதினிலேதம்பொருந்திய பளபளப்பை யுடைய தளிரானது மலிக்காவினுடைய காதினோ மாய்ச் சுருண்டிருக்கின்றதே இஃதென்ன ஆச்சரியமென்று பிர்ம் மித்து, போய்விட்டதாம் கண் இமையைக்கண்ட ஆதங்குகளின்

இர்தயத்திற் வேல்போல் பாய்ந்து ஊடுருவிச்சென்று அவ்விர்தய த்தை புண்ணுக்கிவிட்டதாம். காதைக்கண்ட சந்திரனுடையவட்டமா னது மலிக்காவுடைய காதுக்கு யான் அடிமையாகி விட்டேனென்று சொன்னதாம். இன்னம் மலிக்காவினுடைய இடையை கண்ணுற்ற அதிகர்மைபொருந்திய பார்வைக்காரர்கள் அரிமென்னும் கண் ணுடிவைத்து பார்த்தாலும் ரோமத்தின் பெர்ப்பத்திற்கு அதிமாய்ச் சொல்லப்படாததா யிருந்தது. இன்னும் ஒவ்வொரு அவயவங்க ளின் சிறப்பை இங்கெழுதிட விரிவாகுமென சுருக்கி சொல்லப் பட்டது.

விருத்தங்கள்.

தினகரன் நேத்திரத்தை நிறந்திவள் தன்னைநோக்கி
தனதகன் கூசிரோணி தரணியை நோக்கிடாமல்
மனத்தினில் வெட்கமுற்று மங்கையா மெஹர்நிகாரை
நினைத்திடின் வியப்புற்றுனல் நீலிலத்தோ சென்செய்வார்.

தங்கம்போற் பிரகாசிக்குமேதையலாள் மெஹர்நிகாரின்
அங்கத்தை உற்றுநோக்கி அவனியில் அழகாய்தோற்றும்
மங்கையின் முகத்தைக்காணில் மதியிவள் தானேவென்னும்
சங்கையால் வெட்கமுற்று சந்திரன் மறைவதானுன்

மாநிலம் புகழும்படி வதனசிங்காரம் வாய்ந்த
தானவர் நடியுரூபு தையலாள் மெஹர்நிஹாரை
காண்பவர் பழுத்தகீறை கத்தியால் விரலறுத்து
காணியே இகைப்பரென்னில் தரனிலம் மயங்கிடாதோ.

தையலாள் மெஹர்நிகாரை தரிசித்த ஜூலேகாமாதா
ஐய வற்புபார்த்தா அவர்தீன் நோக்கிடாது
மெய்யிவள் மீதிற்சிந்தை மேலிட்டித் தியங்குவாரேல்
வையமீ திருக்குமாதர் மயங்கிடக் குறைவேதுண்டோ.

தரிரவன் நடவடிபு சனகளென் றெளிருமாப்போல்
மதிமுகத் தாரிகாரி மனிதொளி வீசக்காணும்
பதிதனி லிவள்ரூபத்தை பகர்ந்திட கலிவல்லோர்கள்
மதிமயங் கிவோரென்னில் மதனனும் காணுவானே.

சேயிழை மெஹர்நிகாரின் செவியழ கதனிற்கொப்பாய்
மேவியே உவமையோத மேன்மைசேர் இரத்தினந்தி
தாவியே குவித்தாற்போல தளதளென் றிலங்குமாதை
பூவுலகத்தோர் காணில் பொறுப்பரோ விரகர்தன்னை.

இமையவர் மெஹர்நிகாரின் இதழலங்காரங் கண்டு
மென்பதி தன்னிற்பூர்க்கும் எழில்மிலை மாணிக்கங்கள்
இமைப்பொழு திங்குயாமும் இருந்திடிற் பழிப்பாரென்று
அமைத்தோர் மண்ணுக்குள்ளே ஆழ்ந்தன வைகளெல்லாம்.

தாணியோர் புகழுமித்த தையலார் மெஹர்நிகார்தன்
சரமதா யலமர்த்தத்தந்த சந்தூரு பந்திதன்னை
வரம்பெறும் வைரக்கற்கள் வகையுட னழிவில்வெட்டி
சிரமது குனிக்குகாணி செய்நிறமாகு மன்றே.

மங்கையரம் மெஹர்நிகாரின் வாயழ கதனைக்கண்ட
பங்கமற் றிதழ்விரிக்கும் பார்புகழ் ரோஜாபூக்கள்
தங்களின் முகந்திருப்பி தாவியே ஜலத்திற்குள்ளே
முங்கியே யொளிந்ததென்று மூதறிவோர் சொல்வாரே.

இன்னுமவ் வாயினூரல் இனிமையைக் கண்களித்த
மன்னவர் ஹிலுரருந்தி மீவுத்தனுகா திருக்கும்
சன்னலம் வாய்ந்தழகே நல்ஹபாத் தென்னுமீரும்
பின்னிடைந் திருளிலோடி பிணங்கியே மறைந்ததன்றே.

அன்னமே யுந்தன்சொல்லி அறையயிவ் வுலகத்தோர்கள்
என்னென்ன விதமாயோத இயன்றவா ரெல்லாம்நோக்கிப்
அன்னவர் தம்பாலாகா தயர்ந்தவர் வாயைமூட
மின்னெழி மணியேயுண்ணு மெச்சிடர்க் கியலுமோதான்.

இருதயக் குடிக்கச்செய்யும் இன்பூறுந் தாள்வாய்க்கட்டை
பெருகிய ஒளிவாலான பிறைக்கடல் நடுவில்தோன்றும்
உருகிய சுழியிற்கொப்பாய் உகக்குதென் ஆவி யுன்மேல்
மருகிடார்க் கென்னுலாமோ மதிமுக வடிவினளே.

காலியி லுதிக்கும்பால கதிரவ னெளிபோல்மின்னும்
மேலக கழுத்தின்ஜோதி மிகைக்குதென் வீரம்தன்னை

லீலைகொள் வடிவுள்ளாளே நின்கழுத் ததற்கிடாக
பாலியும் நிகர்த்தவெண்மை பார்வலம்புரிச் சங்கிடோ.

இருதயங் கொள்ளைகொள்ளும் இனியவுன் கழுத்தின்ஜோதி
திருவொளி கதிரோன்முன்பில் திரும்பிபூகனில் நின்றுற்போல்
பெருகிய அழகுவாய்ந்த பேரிளங் கழுத்தென்முன்பில்
குருகியென் விழித்திரும்ப கோதையே மயங்குகன்றோ.

நின்சரவிலைக்கண்ட என்விழி மருண்டகாலே
தன்விரல் தனியிற் றேய்த்த தாஞ்சிகப்ப தன்சுடர்க்கள்
உன்னிய இருளகற்ற உகந்த தீவர்த்தியைப்போல்
என்னிருபுரமும்ஜோதி இலங்குதுன் அங்குசங்கள்.

கிமிர்ந்தெனை பூரிப்போடி நின்றயி லொதக்கினோக்கும்
இமிர்ந்தடி பருந்துலட்டம் இரண்டபொற் கலசம்போன்ற
குமிழ்ந்தன பிரஸ்டிற்காக கொடும்பலி தூதுவேர்த்
குமித்தவர் சிங்கொடுக்கில் கூடுமோ நிகரென்னுவி.

ஆவியைப் பிழியாய்வேண்டும் அமிர்தகொங்கைகள் மண்டும்
தாவியே அழகுவாய்ந்த தீருச்சரு வதன்பால்ரெண்டு
மேவிய மதுரம்வாய்ந்த மாதுனைக் கனிகள்போன்று
காவினி விருந்தாப்போல கலக்குதே மெஹர்நிகாரே.

உன்முழில கச்சின்தோகை உருமுடிச்சதனுள் யெந்தன்
* தன்னிலா துயிர்போய்நிக்கி தவிக்குதே மானேயாவி
அன்னதை களைகள்நீர அவிழ்த்நிடி முடிச்சைநீதான்
என்பனதாவல்நீங்க யெப்பொழு துன்னைச் சேர்வேன்.

பனிக்குகண் ணுழிவெட்டி பார்த்திப ணுதியென்னை
மழுங்கிடச் செய்தாலுந்தன் மார்தளிர் வயற்றைநோக்கி
தழும்பியென் தேகம்நீறுப் துளித்தொளிர் தோடலானேன்
கழும்பிலா நெஞ்சனான ஹம்ஜாதன் மனைத்தேற்றே.

அன்னமே யுந்தன்உந்தி அழகிய சுழியைக்கண்ட
பன்னரும் தாரைக்கூட்டம் பதிவிட்டு மறைந்ததென்றுல்
மின்னுமுன் இடையிற்கையை மேன்மையாய்க் கோர்த்தனாதால்
என்னரும் விரகந்திரும் பென்றுமே மையலானார்.

* தன்னிலா தேகமில்லாத,

இவ்விதவர்ணிப்பான சவுந்தரூபவதியைக் கண்புணுற்ற அமீர் அவர்கள் மதிமருண்டு மெய்மறந்து சித்திரப் பாவையைப்போல் பார்த்தகண் பார்த்தபடியே பிரமித்து மென்மேலும் இஷ்க் யெண்ணும் அக்கினிச் சுவாலையானது அமீர் அவர்களைத் தீண்டிவாட்ட ஆரம்பித்ததே, இஃது இவ்வாறு இங்குநிற்க மலிக்கா [illegible] நிகாருடைய செய்தியை அறிய விருப்புவீர்க ளல்லவா? அதையும் கொஞ்சமெடுத்து சொல்லுகின்றேன். அஃது யாதெனில் மலிக்காவானவள் அமீர் அவர்களின் ஆசையென்னும் வலையிற் சிக்கி வேடன்வலையில் சிக்குண்ட மானைப்போல் தியங்கி மயங்கி திரங்கி சோர்ந்து இருக்கும் மலிக்காவை, அருகிலிருக்கும் தாதியர் தோழியர் முதலாகியவர்களும் அவர்களுக்குத் தெரிந்தமட்டில் பலவித தேறுதலான வார்த்தைகளை கூறி அவள்மனதை தேற்றிக்கொண்டிருந்தார்கள். அஃதெவ்விதமெனில் அம்மா மலிக்காவே தங்களுடைய அழுகும் கண்ணீரினல் முடிவு எவ்விதமாகுமோ இவ்விதமே தாங்கள் சிந்தித்திருப்பீர்களாகில் தங்கள் கதி எவ்விதமாகிவிடுமோ தெரியவில்லையே ஆகையால் இவ்வித அலங்கோலத்தை விட்டும் தெளிந்து தைரியாராகி மனதை திடப்படுத்திக் கொள்ளுங்களம்மா வென்று சொல்லி இன்னும் சொல்லுகின்றார்கள். அம்மம்மா தாங்கள் யார்விஷயத்தில் இவ்வித மையல்கொண்டீர்களோ அறிகிலோம். அவ்வாஷ்க் ஆனவரும் தங்களை தெரிசித்தாரோ அப்படி தெரிசித்திருக்கில் தங்கள் கதியைக்காண ஆயிரமடங்கு அதிகமாய் அவ்வாலிபரும் வருந்துவாரன்றே? இன்னும் தங்களுடைய மையலினல் அவர் மஜ்னூனாகி போய்விடுவாரென்பது திண்ணம் ஆகையால், எந்த விதத்திலாவது தங்களுடன் வந்து சந்திப்பதற்கு முயற்சியெடுப்பாரே யொழிய ஒருபோதும் சும்மாயிருந்து விடமாட்டார் யென்றும் இவ்விதம் பலவாறு ஆறுதல் தேறுதல் செய்ததினல் மலிக்காவினுடைய அழுகையானது நின்று கண்ணிலிருந்து ஓடிக்கொண்டிருந்த நீரும்நின்றது. அவ்வேளையில் மலிக்காமெஹர் நிகாருக்கு பால்கொடுத்த தாதியினுடைய புத்திரி பித்துபானே வென்பவள் இரத்தினங்க ளிழைக்கப்பட்ட விலையுயர்ந்த பொற்கிண்ணத்தில் ஷராபென்னும் ஷர்பத்தை நிறைத்துக்கொண்டுவந்து மலிக்காவினுடைய கரத்திலீந்து குடிக்கும்படி கொடுத்து, அம்மா இச்சர்பத்தை அருந்துவீராகில் இச்சமயம் தங்களுக்கு கேர்ந்திருக்கும் துக்கம் பியாகுலம் யாவும் உடனேநீங்கி சந்தோஷமுண்டாகி விடும்

யென்றுரைத்தாள். அதைக் கேட்ட மலிக்கா பித்துபானு வென்பவளைநோக்கி நாம் பின்னல் ஷர்பத்தருந்துவோம் நீங்கள் யாவரும் முந்தி அவரிவர்களின் ஆசைநேசர்களை விசுவாசத்துடன் மனதில் நினைந்தவர்களாய் அவரவர்களின் திருநாமங்களை வாயினல் மொழிந்து ஷர்பத்தை அருந்துங்கள் யென்றுரைத்தாள். அப்போழுது யாவருக்கும் முந்தி பித்துபானு வென்பவள் ஓர் கிண்ணத்தின் ஷர்பத்தையெடுத்து யென்னுடைய ஆசைநாயகரின் பெயரானது உம்ரு ஐயாராயிருக்குமென்று சொல்லிக்கொண்டே கடகடவென் றருந்தினுள் இவ்வார்த்தையைக் கேட்டவுடனே அமீர் அவர்களின் மீனமானது பிரம்மித்து அடடா! இஃதென்ன பெரும் புதுமையாயிருக்கின்றதே நாம்தான் முதல்முதல் இம்மாளிகைக்கு வந்தோமென்று நினைத்தோமல்லவா? நமக்குமுன் உம்ரு இவ்விடத்திற்கு வந்தல்லவா சென்றிருக்கின்றார் என கருதியவராய் ஆச்சரியமுற்று இன்னுமென்ன நடக்கிறதென்று கவனித்துகின்றார் அப்பொழுது மற்றோர் சுந்தரி எழுந்து புன்முகைசெய்து தோளையும் மேலையும் உதறிக்கட்டி வந்து ஓர் கிண்ணத்தின் நிறையவிருக்கும் ஷர்பத்தை கரத்திலெடுத்து மனம் நாணுதலுளாய் என்னுடைய பிரியநேசரின் திருநாமமானது மக்பூல் உபாதாரா யிருக்குமென்று நாக்கை தலைவிட்டுத்தி, மடமடவென் றருந்தினுள் இவ்விதமே ஒவ்வொரு தாதிப்பெண்களும் அவரவர்களின் நேசர்களின் திருநாமங்களை உரைத்துரைத்து ஷர்பத்தை குடித்தார்கள் அவ்வேளையில் அமீர் அவர்கள் அங்கு நடக்கும் விஷயங்களை யெல்லாம்பார்த்து புதுமையாயி பெருத்த யோசனையில் நின்றுகொண்டிருந்தார். அப்பொழுது மலிக்காமெஹருன் நிகாரானவள் தனக்காகவைத்திருக்கும் ஷர்பத்து கொட்டோரவை கரத்திலெடுத்து ஹஸ்னாம்பின் அலிமா கைபரி யென்பவனை ன்திர்த்து ஜெபித்து வெற்றியடைந்து அவனெவெட்டி நாகம் புதுத்திவைத்து சாஸனியர்களை சிறைமீட்டுவப்பிவைத்த பயில்வான் ஜவாம்மர்தானவர் என்னுடைய அதிநேச விஸ்வாச பிரியகாதலராயிருக்குமென்று ஷர்பத்தினிண்ணத்தை உதட்டில்வைத்து மெதுவாயருந்தினுள். இவ்விதம் சொல்லி யருந்திய மலிக்காவினுடைய தேனுபிர்த்தத்தைப் பார்ப்பதிப அதிமதுரம்பொருந்திய இனியபொழிகளை அமீரவர்கள் செவியாரகேணுசெய்த உடனே மனமானது எப்படியிருந்ததென்றால் இதைபடிப்பவர்களே உணர்ந்துகொள்வார்களல்லவோ முன்னமே அமீர் அவர்கள் மையலில்சிக்கி மதிமருண்டு

நின்றார்களென்று சொல்லியிருக்கின்றேமல்லவா இப்போழுது ஒரு புஜம் இருபுஜம் இருபத்தினலு புஜமாய் பூரித்து தங்களணிந்திருந்த அங்கிகளெல்லாம் தேகவிம்மலினல் பட்டுப்பட்டென்று தெரித்துக்கிழியும்படியாய் ஆய்விட்டார்கள். இவ்விதத்திலேயே மலிக்காவினுடைய சம்பயில் ஒருஜாமம்வரையில் ஷர்பத்து பரிமாறும் வேலையாகவே இருந்தது, அவ்வேலையில் மலிக்கமேஹர்நிகாரானவள் ஒவ்வொரு தடவையும் ஷர்பத்துகளருந்தும் வேளையெல்லாம் அடிக்கடி சாஹிப்காரான் சாஹிப்காரான் பென்று மொழிந்தவளாய் குழைத்துக்கொண்டிருந்தாள். இவ்விதமே இரண்டாவது ஜாமமடைகிறவரையில் குழைத்துக்கொண்டிருந்துவிட்டு சபைகலைந்தது அவரவர்கள் தத்தம் படுக்கை ஸ்தானங்களில் போய்சேர்ந்து நித்திரைசெய்தார்கள் மலிக்காவும் தனக்கு நிட்டப்படுத்தி வைத்திருந்த சப்ராகூட மஞ்சத்தின்மேல் துயில்பவளாயினள். எவ்விதம் புரண்டு புரண்டு படுத்தாலும் மலிக்காவானவளுக்கு அமீர் அவர்களின் எண்ணத்தினல் நித்திரைவராமல் பெருமூச்செறிந்து புரண்டுகொண்டே அமீர் அவர்களை நினைத்து, நினைத்து கண்ணீரோட அழுதுகொண்டிருந்தாள் இவ்விதம் வெகுநேரம் அழுதுக்கொண்டிருந்து பின்பு தூங்கிவிட்டாள். அப்பொழுது அதையறிந்த சாஹிப்காரான் ஆனவர் யாவரும் அவரவர்களின் ஸ்தானங்களில்போய் சயனித்துக்கொண்டார்கள் மலிக்காவும் துயிலுகின்றாள் இதுதான் தருணமெனக் கருதியவராய் படிக்கட்டின்வழியாய் மேலுப்பரிகை பிரித்து கீழே இறங்கி மெல்ல மெல்ல அடிபெயர்த்து நடந்து மலிக்காவினுடைய மஞ்சத்தையடைந்து பார்க்கையில் மலிக்காவானவள் அயர்ந்து நித்திரை செய்யக்கண்டு முகத்தை உற்று நோக்கினர்கள் அப்பொழுது அவள் நித்திரை செய்துக்கொண்டிருந்தாலும் பிரியநாயகரை தேடிக்கொண்டிருந்த அவள் கண்களானது அமீர் அவர்கள் வரவை எதிர்பார்த்தவளாய் திறந்துகொண்டிருந்தது.

விருத்தம்.

ஜெகாலு மீசாற்றுமன்னன் செழுந்தலத் தித்தபெண்ணுள்
மெஹர்நிகார் ஹப்ஜாமீது மையலுற்றிருந்த யெண்ணம்
மகிழுடன் அவர்மேற்சென்று மாசுமியாய்த் தயின்றவேளை
புகழுமுன் தனதென்னைந்தான் பூர்த்தியானதையும் சொல்லோம்.

இவ்விதமாச்சரியமான நித்திரைசெய்யும் மலிக்காவை சிலநேரம் வரையில் அமீர் அவர்கள் உற்றுநோக்கிநின்று மனதிலெண்ணுகிறார் யாதெனில் ஹம்ஜாவே நீ அதிக கஷ்டமெடுத்து இவ்வளவு தூரம் வந்துவிட்டாய் வந்தும் அப்பிரயாசையெல்லாம் வீணாகாமல் உன்னுடைய நலீபானது மலிக்காவை சந்தித்துக் கொள்ளசெய்தது, இனி உன்னுடைய பன இச்சையென்னும் ஆசையை நீக்கிக் கொள்ளென்று நினைத்தவராய் தங்களிரண்டு கரங்களாலும் மலிக்காவினுடைய மஞ்சத்தின்மீது அவள் பக்கத்தில் கிடக்கும் வட்டத்தலையணையின்மீது வைத்துக்கொண்டு குனிந்து நினைகின்றார் யாதெனில் சிவந்த இந்த மாணிக்கத்திற் கொப்பாகிய அதிக மதுரம்பொருந்திய உதடுகளில் தங்கள் உதட்டைசேர்த்து போஸாவென்னு முத்திகொடுப்போமா வென்று குனியுந்தருணத்தில் தலையணையின் மேலிருந்த இரண்டு முட்டுக்கைகளும் அத்தலையணையையிட்டும் கழுவிச் சரித்துவிட்டபடியால் அப்படியே பொட்டென மலிக்காவின் மார்பின்மேல் குப்புற் விழுந்தார் அமீர் அவர்கள் குப்புறவிழுந்த அதிர்ச்சியால் மலிக்காமேஹர் நிகாரானவள் திடுக்கிட்டுப்பதறி விழித்து அமீர் அவர்களின் முகமில்லாமல் அளவிற்குமிஞ்சிய சப்தமாய் கள்ளன்! கள்ளனென்று கூக்குரலிட்டாள். இச்சப்தத்தை கேட்ட காஜியர் மூப்பியர் பாக்கியர் தோழியர் முதலாகிய யாவரும் நான்குபுறத்திலுமிருந்து ஹா ஹா வென்ற கூச்சலுடனே வந்து கூடினார்கள். இதற்குள் அமீர் அவர்கள் மலிக்காவை நோக்கி மாஷூக்காகிய மலிக்காவே பதறவேண்டாம் யானிறவன் குலிக்தெயே ஹல்லாம்பின் அலீமா கைபரியாகிய சாஹிப்காரால் பிருக்கும் பென்னரைக்க, அதைக்கேட்ட மாஷூக்கும் திடுக்கிட்டு உஷ்பாராகி அமீர் அவர்களென் றறிந்து தான்செய்த அபாரத்திற்காக வெட்கியவளாய் அமீர் அவர்களை நோக்கி தன்னுடைய குற்றத்தை மன்னிக்கும்படி வெகுவாய் வேண்டிக்கொண்டு அவர்களை மஞ்சத்தின் மீற் தனித்தனிவைத்துவிட்டு தான்மாத்திரம் ஒன்றுமறியாத பத்தினிப் பெண்ணைப்போல் மஞ்சத்தின்மீது உட்கார்ந்திருந்தாள். இதற்குள் காஜியர்கள் யாவரும் வந்துகூடி அம்மா எங்கே கள்ளன்? என்ன கள்ளன் எப்படிப்போனன் எங்கிருந்து வந்தான் என்னசெய்தானம்மா எல்லரியாய் ஓடினன் அம்மாவென பலபலவிதமாய்க் கூச்சலிட்டுக் கேட்டுக்கொண்டுவந்து கூடினர்கள். இவர்களின் ஆடம்பரத்தை அறிந்த மலிக்காவானவள் அவர்களை நோக்கி ஒருவரும்

பதறவேண்டாம் ஒன்றுமில்லை யான் இனவுகண்டு விழித்தேன். அதனல் கூச்சலிட்டேனே யொழிய வேறொன்றுமில்லையென உரைத்து அவரவர்களை அவரவர்களின் படுக்கை யறைகட்கு அனுப்பிவிட்டாள் யாவரும் சென்றபின் அமீர் அவர்கள் மெல்லவெழுந்து வெளியில்வந்து மஞ்சத்தின்மீதமர்ந்து உட்கார்ந்தார். பகலில் அமீர் அவர்களை தூரத்தில் பார்த்து இவ்வளவு மையலில்சிக்கி இருக்கின்றவளாய் இருந்தாளென்று முன்னமே கூறியுள்ளோமல்லவா இப்பொழுது சமீபத்தில் அருகில் குந்தியிருக்கண்ட மலிக்காவின் கதி எப்படியிருக்கும் யோசித்துபாருங்கள் அமீர் அவர்களின் ரூபலாவண்ய சவுந்தரிய முகாவிந்தத்தை அருகில்கண்ட மலிக்காவானவள் மதிமயங்கி திகைத்து சுழன்று ஸ்மரணையற்றவளாய் அப்படியே மஞ்சத்தின்மீது வீழ்ந்துவிட்டாள். அவ்வேளையில் அமீர் அவர்கள் மலிக்காவை இருகரங்களா லேந்தி தூக்கியெடுத்து மார்போடு சேர்த்து சாய்த்துப்பிடித்துக்கொண்டு முகத்தோடுமுகமும் வாயோடு வாயும் உதட்டோடு உதடும் சேர்த்தமுத்தியிட்டார் அமீர் அவர்களின் தேகத்தின் அருமையான நற்சந்தத்தின் வாடையை நாசியினல் உட்கொண்ட மலிக்காவுக்கு ஸ்மரணை உண்டாகிதெளிந்து ஹர்ஷபாராகினள். இதற்குள் கீழ்த்திசையில் சூரியன் உதயமாகும் தருணமாகி கிழக்கு வெளுத்தது, அவ்வேளையில் அமீர் அவர்கள் தங்கள் கண்களில்நின்றும் நீரொலித்தோட மலிக்காவை நோக்கி எதனபிற் சிறந்த அரும்பொற்பாவையே பொழுது விடிவேறுயிற்று, யானினி இங்கிருப்பது தகுதியன்று, ஆகையால் யான் செல்ல விடைகொடுத்தருள்வாயென்று அதிக துக்கத்தோடு வேண்டிக் கேட்டுக்கொண்டு, இன்னும் சொல்லுகின்றார் யான் [illegible] தூங்கப்போகிறேனென்று போக்குவிட்டுவந்தேன். பொழுதுவிடிந்து யாராவது யான் இங்குவந்து செல்வதை யறிந்தால் துன்பத்திற் கிடமாகும் ஆகையால் யான் இப்பொழுதுசென்று ஆண்டவன் உதவிசெய்தால் நாளையதினம் வருவேன் இப்பொழுது அப்படிப்போகாமல் இங்கிருந்திடவேனில் பெருந்துன்பத்திற் கிடமுண்டாகிவிடும். ஆகையால் யான்போய் வருகின்றேனென்று மிகவுருக்கத்தோடு கண்ணீர் வடிய உரைத்து, இன்னுஞ் சொல்லுகின்றார். எனதருமைநிறைந்த ஷெஹ்ஜாதியே இதோ பிஸ்மில்லாஹைத்து கரத்தில்பிடித்த வாளையுடைய என்னை மறக்கக்கூடாது. இப்பொழு திருக்கும் நேசத்தை எப்பொழுதும் மனதைவிட்டகலச் செய்யாமல் இருக்கவேண்டும் யென்றுரைத்தார்.

இவ்வார்த்தையை செவியுற்ற மலிக்காவானவள் ஹா! வென்று பெருமூச்செறிந்தவளாய் அமீரைநோக்கி நேசரே எனவழைத்து கண்ணீர் வடிய உரைக்கின்றதாவது யாதெனில், எனதன்பு நிறைந்த உயிர்த்தோழரே தாங்கள் நாளையதினம் வருகின்ற பரியந்தம் எவ்விதம் யான் தங்களைவிட்டு பிரிந்திருப்பேன் என்னவிதமாய் என்மனம் தங்களைக்காணுமல் சகித்திருக்கும் யாவற்றிற்கும் அல்லாஹ்த் தஆலா போதுமானவனு யிருக்கும். தாங்கள் அலனுகவியாய் போய்விட்டு இவ்வடியாளை மறக்காமல் நாளையதினம் வந்து சேருங்கள். தாங்கள் வரும்வரையில் எனக்கு என்னென்ன துக்கம்வந்தாலும் அவைகளை பொறுத்து சபர்செய்துகொண்டு இருக்கின்றேன் தாங்கள் போய்வாருங்களென் றுரைத்தாள். இவ்வார்த்தைகளை யெல்லாம் அமீர் அவர்கள் செவியா லுட்கொண்டு மனதில் அறிந்தவராய் அவ்விடம் விட்டெழுந்து புறப்பட்டுவந்த வழியோடு சென்று மரத்திலேறி அதின் வழியாய் பூமியிலிறங்கி மக்பூலவர்களையும் கூட வழைத்துக்கொண்டு மஜிலீஸுக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

அவ்வேளையில் பாதுஷாவும் சயனித் தெழுந்து மஜிலீசின் கண் வந்து சேர்ந்தான். பின்பு மந்திரி பிரதானியர் முதலாகிய யாவரும் ஒவ்வொருவராய் வந்துகூடி மஜிலீஸ் நிறைந்தது. சூரியனும் உதயமாகி எவ்விடங்களிலும் பிரகாசமுண்டாயிற்று. சூரியகாந்தி புட்பங்கள் இதழ்விரித்து, அலர்ந்து, மலர்ந்து, தன்னைப்போல் அச்சூரியனுடைய எங்கேயாகிலிடப் போகின்றதோவென்று தன்னுடைய அழகை அச்சூரியனுக்குக் காண்பிக்காமல் மறைத்துக் கொண்ட பாவனையாய் புட்பங்களெல்லாம் திரும்பிக் கொண்டிருந்தனகள். அப்பொழுது பாதுஷாவானவன் அமீர் அவர்களின் கரத்தைப் பிடித்துக்கொண்டு அமீரே வாருங்கள் பூங்காவனத்தைச்சுற்றி உலாவிவரலாமென்று, அழைத்துக்கொண்டு சபையோர்கள் சூழ நடந்தார்கள். எவ்விதமான உல்லாசமான வேடிக்கைகளிநோதமான காக்ஷிகளை தெரிசித்துலாவி திரியினும் அமீர் அவர்களின் மனமானது தாம்பரையிலிலின்மேல் நிற்கும் தண்ணீர்போல் ஓரிடத்திலும் தரிகொள்ளாது யெண்ணமெல்லாம் தங்கள் மாஷூக்கின் மீதிலேயே சென்று நின்றது இவ்விதம் தோட்டமெல்லாம் சுற்றி மாளிகையில்வந்து விநோதமாய் நாழிகைகளைக் கழித்துக்கொண்டிருக்கும் வேளையில் அடிக்கடி பெருந்து வெளியிற் போவதும் வருவதுமாய் இருந்த

அமீரானவர் வெளியிற் செல்லுந்தோரெல்லாம் மலிக்கா மெஹர் நிகாருடைய மாளிகையின் திசையை நோக்கியவராய் அதிகூர்மையாய் பார்த்துவிட்டுதிருப்புவார். இவ்விதம் பேகரானிபெண்ணும் மனநிலையாமையை யறிந்த காஜாபுஜருச்-மெஹரானவர் தன்மனதிலெண்ணுகிறீர் யாதெனில் அமீர் அவர்கள் என்னமோ ஓர் விஷயத்தில் நாடியவராய் மனங்கலங்கி தடுமாறி இருக்கின்றரென உணர்ந்து, உம்ருவை நோக்கி அமீர் அவர்களின் குறிப்பை சைகையால்தீர்வித்தார் அதையரிந்த உம்ரு புஜருச்மெஹரை நோக்கி தங்களுக்குமுன் அமீர் அவர்களின் நிலைமையை யான் அறிந்துகொண்டேன். அவர் ஏதோ ஓர் கண்ணியில் சிக்குண்டவராய் அக்கண்ணியைதுறந்துக் கொள்ள சக்தியற்று, திபங்குகின்றார். என்று சைகையால் உணர்த்தினர் அப்பொழுது பஹ்த்தக் என்பவனும், அமீர் அவர்களின் கோலத்தைப்பார்த்து, ஓ! ஹோ!! அமீர் எங்கேயோ ஓர்பெண்மீது இச்சை வைத்தவராய் மஜிலீசை உளப்புகிறரென் றெண்ணியவனுப் பாதுஷாவைநோக்கி பாதுஷாவே! நிறைந்திருக்கும் சபையின்முன் மனிதர்கள் முடிக்கடியெழுந்து வெளியில்போய்க்கொண்டிருந்தால் மஜிலீஸுடைய அலங்காரமான அந்தஸ்து தெட்டுப்போகின்ற தல்லவா? ஆகையால் தங்களோர் உத்திரவுசெய்யுங்கள் யாராவது மஜிலீசை விட்டும் கலிகிறவரையில் எழுந்தவர்களுக்குத் தூறுதீறு அபாதமென்று நியமித்து விட்டால்களானால் ஒருவரும் மரியாதைக்குறைவாய் யெழுந்து செல்லமாட்டார்கள் அப்பொழுது மஜ்லிலுடைய இஜ்ஜத்திற்கு குறைவுவாதென் றுரைத்தான். இவ்வார்த்தையைக் கேட்ட பாதுஷாவுக்கு பஹ்த்தக் சொல்லியவார்த்தை ஞாயமாய் தெரிந்தபடியால் அமீர் அவர்களைநோக்கி யாரேனும் இனி மஜிலீசை விட்டும் யெழுந்தால் அவர்கள் தூறுதீறு அபாதம் கொடுக்க வேண்டும் யென்றுரைத்தான். அமீர் அவர்களும் அம்மொழிக்கிசைந்தவாய் மிகவும் கல்லேறப்பாடென்று சம்மதித்தார். எவ்விதம் சம்மதித்தும் அவர்மனம் தானாதபடியால் ஏற்பாட்டிற்குப்பின் இரண்டேதடவைகள் அமீர் அவர்கள் எழுந்து இருதூறு தீறு அபாதம் கொடுத்தார். இதை யறிந்த புஜருச்மெஹரானவர் மியான் உம்ருவைநோக்கி உம்மே தாங்கள் ஓர்யுக்திசெய்யவேண்டும் அவ்யுக்தியினால் இந்த ஹராம்ஜாதாவாகிய பஹ்த்தக்யென்பவன் இம்மஜிலீஸை விட்டெழுந்து ஓழிந்து பின்பிவ்விடம் வராமல் அதுவேபோக்காய் போய்விடும்படி உபாய தந்திரம் செய்யவேண்டும் யென்று

மெதுவாய் இஷாரூவென்னும் சைகையால் அறியப்படுத்தினர் அவ்விஷயத்தை யறிந்த உம்ரு புஜருச்மெஹரைநோக்கி, பூ! இதுதானு பெருத்தவிஷயம் காற்றுதானடித்துக்கொண்டிருக்கின்றது, அக்காற்றோடு நாம்செய்யும் குய்யுக்தியும்சேர்ந்து கலக்குவீசினால்ஒருகொடிப்பொழுதில் இந்தபஹ்த்தக் தானென்ன இவனைவிட காலித்கீன்பருத்த ஒன்றுக்குமுதவாத ஒதியமரமானாலும்அடிச்சல்லிவேர் முதலாகியவைகளையும் பரித்துப் பிடிங்கிக்கொண்டு, அக்காற்றோடேகூட பஸ்ரிக்புரத்தில் கொண்டுபோய் எறிந்துவிடுகின்றது யென்று கண்களாலும் உதட்டினாலும் கரத்தினாலும் அறியப்படுத்திவிட்டு பாதுஷாவைநோக்கி ஜில்லே சுபஹானி கலிபத்துற் றகுமானியாகிய பாதுஷாவே தங்களுடைய செவியானில் எட்டும்படியாகிய ஓர் விண்ணப்பம் அடியேனுரைக்க துணிந்தேன் அஃது யாதெனில் மனோரம்மியத்தை அடிக்கடி புதுப்பித்து உற்சாகத்தை உண்டுபண்ணிக்கொண்டிருக்கும் இந்த மஜிலீஸில் தற்சமயம் அதிவினோத காக்ஷிகள் நடக்கும் இவ்வேளையில் காதிமுடைய கரங்களினால் இரண்டொருகிண்ணம் ஷர்ப்பத்துகளை ஹுஜுரவர்களுக்கு புகட்டிவைக்க உத்திரவளிப்பீர்களாகில் மிஸ்கீன் நடப்பிக்கின்றேனென்று உத்திரவு கேட்டார். உடனே பாதுஷாவானவன் உம்ருவை நோக்கி அதற்கென்ன அவ்வேலையைக்காளை இச்சபையில் இவ்வேளையில்வேறே எந்தகாரியம் சிறப்பாயிருக்கும் அதுவே சிறப்பான வேலையானபடியால் காரியத்தை நடத்தும்யென்று உத்திரவுசெய்தான். உடனே இதுதான் கேட்டேன்என்று உம்ருவானவர் கொட்டோராவும் கூஜாவையும் கரத்திலெடுத்து தலையையாட்டிக்கொண்டு கிண்ணங்களில் ஷர்ப்பத்தை நிறைத்து நிரைத்து ஒன்றின்மேலொன்றுய் காலிந்து கிண்ணங்களை பாதுஷாவுக்கு குடிக்கக் கொடுத்தார். பின்பு ஸெஹஜாதா ஹர்மூஸ்தாஜ்தா ரென்பவனுக்கு ஒரு கிண்ணம்ஷர்ப்பத்து நிறைத்து கொடுத்துவிட்டு அமீர் அவர்களுக்கு கொடுத்தார். பின்பு, காஜா புஜருச் மெஹரவர்களுக்கும் புகட்டினர். இவ்விதமே சபையோர்கள் யாவர்களுக்கும் கொடுத்துக்கொண்டே காஜாகுருஜுத்தீன் யென்னும் பஹ்த்தக் யென்பவனுக்கும் ஓர் கிண்ணத்தில் நிறப்பி கொண்டுபோய் வாயில்வைத்து அருந்தச்சொன்னர். அவ்வேளையில் பஹ்த்தக் உடைய நெற்றி துடிக்க ஆரம்பித்தது. அதனால் அவன் மனதில் யெண்ணுகின்றான். யாதெனில் இவ்வேளை என்னமோ நமக்கோர் சங்கடம் நேரிடும்போல் காண்கின்றது யென்றுணர்ந்து, இவ்

உம்ரு பாதுஷாவினிடத்தில் உத்திரவுகேட்டு வலிய குடிப்பு புகட்ட ஆரம்பித்தபடியால் இக்காரியம் வீண்போகாதென் றுணர்ந்தவனுய் உம்ருல்வஹோக்கி காஜாவே! யான் நேற்றுமுதல் குடிப்பதைநீக்கி தௌபா செய்துவிட்டேன். ஆகையால் யான் குடிக்க மாட்டே னென்று மறுத்தான். அதை யறிந்த உம்ருவானவர் பாதுஷா முத லாகிய சபையோர்களுக்கெல்லாம் காதில் கன்றுய் கேட்கும்படி உர த்த சப்தத்துடனே பாதுஷாவுள்பட அஹ்லேமஜ்லில் ஆகிய சபை யோர்களெல்லாம் யான் புகட்டிய ஷர்பத்தை மனப்பிரீதியோடு ஒப்புக்கொண்டு சந்தோஷமாய் அருந்தியிருக்க இந்த பஃந்தக்யென் பவர் மாத்திரம் யான் கொடுக்கும் ஷர்பத்தை வேண்டாமென்று, மருக்குகின்றகாரணம் யாதோ தெரியவில்லே. அவர் நினைக்கவில்லே போலும் "இபுலீஷானவன் முன் என் கரத்தினுல் ஓர் கட்டோ ரா ஷர்பத்தருந்தியிருப்பானுகில், நபிஆதம் அலைகிஸ்ஸலாம் மவர் களுக்கு ஆயிரம், ஆயிரமாய் சுஜூது செய்து தானென்னும் ஆண்மை படைத்திருக்கமாட்டா னென்பதை" என்றுரைத்தார். இவ்வார்த்தையை செவிமார்த்திய சபையோர்களும் பாதுஷாவும் உம்ரு வுடைய சொற்சாதுரியத்திற்காக சிரித்த சிரிப்பினுல் சில ருக்கு பின் துவாரந்துறந்து, உரத்த சப்தத்துடனே காற்றுப்பரிய ஆரம்பித்தது. அப்பொழுது யாவரும் ஒருமொழியாய் பஃந்தக்கை நோக்கிச் சொல்ல ஆரம்பித்ததாவது யாதெனில், பஃந்தக்கே நம்மு டைய உம்ரு சாஹிபு அவர்களுடைய கரத்தினுல் அருந்தும் சுத்த ஜலமும் அமுர்தமாகி விடுமென்பதை நீர் அறியவில்லேயா? நீர் மறுப்பதை பார்த்தால் பெரும் ஆச்சரியத்திற் கிடமுண்டாயிருக் கின்றது. இதுவரையில் ஒருவராவது மியான் உம்ரு சாஹிபுடைய் குடிப்பை மறுத்தவர்கள் ஒருவருமே இல்லாமலிருக்க நீர் மாத் திரம் வேண்டாமென்பதை யோசிக்கில் எங்களுக்கெல்லாம் அதிக ஆச்சரியத்தை உண்டுபண்ணுகின்றது யென்றுரைத்தார்கள். இவ் வார்த்தைகளை கேட்ட பஃந்தக் யென்பவன் வேறுவழி யற்றவனுய் எண்ணுது மெண்ணி அதிக வருத்தத்தோடு கிண்ணத்தை கரத்தி லேந்தி நஞ்சைப்போல் அருந்தினுன். அந்த பஃந்தக் குடித்த ஷர் பத்தில்மாத்திரம் பச்சை நேர்வாளத்தை வெகு பிரயாசையோடு தூற்றுக்கொறு வித்தாய் பொறுக்கியெடுத்து வாங்கிவந்து அரைத் துக்கலந்திருந்தார். ஆகையால் குடித்த ஒருஷாஅத்து நேரத்திற் கெல்லாம் பஃந்தக் உடைய வயற்றை கெல்லி நோயெடுத்தது, அத

னுல் அவன் அச்சபையில் எல்லாரைப்போலும் சுகமனுபவிக்காமல் நோயினுல் வயற்றை கரங்களினுல் பிடித்தழுத்தி பாதையை அனு பவித்துக்கொண்டு இருந்தான். கொஞ்சநேரத்தில் நோய் அதிக ரித்து குடல் முழுவதும் கீழும் மேலும் புரள ஆரம்பித்து, கூச்ச லுடனே பேதியாக துடங்கிற்று உடனே பாதுஷாவினிடத்தில் பைகானுவிற்குபோய்வருவதாய்உத்திரவுபெற்றுக்கொண்டுசென்று மல உபாதையை நீக்கிக் கொண்டு சபையில்வந்து சேர்ந்தான். பழையபடி ஒரு நிமிஷநேரத்திற் கெல்லாம் வயற்றுநோய் அதிக ரித்துமலஉபாதை உண்டாயிற்று அப்பொழுதும் உத்திரவுபெற்றுக் கொண்டு மல உபாதையைநீக்க வெளியிற்சென்றுன். அதைஅறிந்த உம்ரு அவனைநோக்கி, பஃந்தக்கே இப்பொழுதுதான் நீர் வெளியிற் போய் வந்தீரே பின்னும் எங்கே செல்லுகின்றீர், யென்று கேட்டார் அவ்வார்த்தையைக்கேட்ட பஃந்தக் உம்ரை நோக்கி பின்னும் கலா ஹாஜத்திற்காகதான் செல்கின்றேனென் றுரைத்தான். அப்பொ ழுது உம்ரு இப்பொழுதுதான் போய்வந்தீரே பின்னுமென்ன கலா ஹாஜத்து நேரிட்டது நேகத்திற்கு என்ன குற்றம் நேர்ந்தது ன்கரியத்தாக இருக்கின்றீரோ? அல்லது ஏதும் தங்கடம் நேர்ந்த தோ? வென்றுகேட்டார் அதற்கு யாதொன்றும் சொல்ல நேரமற் றவனுய் தானுதானே அபராதம் கொடுத்துவிட்டு ஓடோடியும் சென்று மலவுபாதையை நீக்கிவிட்டு வந்து உட்காரவும் நேரம் கிடைக்கு முன் பின்னும் வயற்றை அலசிக்கொண்டு காகங்கள்வழி யாய் ஆகிப்போய் விடும்போல் காணப்பட்டபடியால் பின்னும் தானு தீனுகளைக் கொடுத்துவிட்டு ஓடிப்போய் பாதையை நீக்கிக்கொ ண்டுவந்து உட்காரிந்தான். உடனே இன்னும் பெரிய கலக்காய் வயற்றை கலக்கியபடியால் எத்தனேதரம் இந்தபாழும் மலத்திற் காக இதை யொரு பெரிதுபண்ணி அபராதம் கொடுப்பதென்று நினைத்தவனுய் அப்படியே ஆசனவாயைதான் இருத்தாற்காலியின் மீது அழுத்தியவனுய் அடக்கிக்கொண்டு உட்கார்ந்திருந்தான். எவ்வளவு நேரம் தான் இளகிய ஜலசூபமான மலத்தை அடக்கி யிருப்பான் அவனுல் கூடியவரையில் எவ்வளவு சமத்காரம் செய்து அடக்கியும் அவனுடைய ஹத்தைமீறி அம்மலம் வெளியாகி அவன் உடுத்தியிருந்த துணிகளெல்லாம் நனைந்து தொப்பலாகி கால் வழி யாயும் ஓட ஆரம்பித்தது அதையறிந்த உம்ரு குருடனுக்கு வேண் யது கண்தானே யென்பதுபோல் எனக்கு வேண்டியது இவ்வே

னையில் பஸீத்தக் அனுபவிக்கும் அவமானந்தானென்று, யெண்ணிய வராய் கரத்திலிந்த ஷர்பத்து கூஜாவை, ஓரிடத்தில் வைத்துவிட்டு பாதுஷாவையடித்து, அவனே நோக்கி ஹுஜூரவர்களுக்கு இவ் வேளை நிஷாவென்னும் மயக்கம், பிறந்திருப்பதாய்க் காணப்படுகிற படியால் தாங்களெழுந்து, மெல்ல நடந்து பூங்காவனத்தில் சென்று அக்குளிர்ந்தகாற்று தேகத்திற் படும்படி, சற்று உலாவி வந்தால் நல்ல ஆரோக்கிய முண்டாகும் தங்களுடைய துணைவினுல் இந்த நிர்ப்பாக்கியம் உலை யோர்களுங்கூட அவ்வாறேக்கியத்தை அனுப வித்தார். அவ்வார்த்தையைக் கேட்ட பாதுஷா உம்ருவைநோக்கி உம்மீர இவ்வேளை யென்னுடைய எண்ணமும் அது போல்தான் இருந்தது சமையத்திற்கேற்றபடி நீரும் நல்ல யோசனை யுரைத்தீர் யெனப் புகழ்ந்தவனுப் அமீர் அவர்களின் கரத்தைபிடித்துக்கொண்டு யெழுந்து சென்று தோட்டத்தை நாடி நடந்தார்கள். அப்பொழுது ஹாஜராயிருந்த மஜிலிஸோர்களும்கூட யெழுந்து பாதுஷாவின் பின்னேசெல்பவராயினர்கள் அதையுணர்ந்தபஸீத்தக்கெண்பவனும் என்ன செய்வான். எல்லோருடன் தானும்எழுந்திருக்காவிடில் மரியாதை குறைவு நேரிடுமென்பது அவனுக்கு நன்றாய் தெரிந்திருந்தபடியால் 'ஜோடையில் ஒக்கவோடு நாடோடையில் நடுவே யோடென்ற' பழமொழிக்கொக்க ஜீப்தஸ்திர்க்கு கைகட்டிய வனுய் மெல்ல இருப்பிடமாகியபுட்டத்தை நாற்காலியைவிட்டும் ஒப் பறக்கிதூக்கி யெழுந்தான். முன்னமே கட்டுக்கடை சரக்கெல்லாம் காற்சட்டைக்குள் நிறைந்திருந்ததென்று உரைத்துள்ளோமல்லவா? அஃது அவனெழுந்தவுடனே கள்கள சளசளவென கால்வழியாய்ப் அம்மஜிலீஸ் நீடில் வெல்லாம்ஊற்றி பெருத்தச் அருவியமாகி விட்டது. சபையோர்கள் அவன் இருந்த இடத்தையும் எழுந்துநின்ற இடத்தையும் பார்த்து மூக்கை பொத்தியவர்களும் ஹாவ்! ஹாவ்!! யென்பவரும் விரித்திருந்த இரத்தினக் கம்பளங்கள் கெட்டுப்போய் விட்டதேயென்று சொல்பவரும், அங்கு செல்லவேண்டாம் அங்கு செல்ல வேண்டாமென்று தெரியாமற் செல்பவர்களை தடுப்பவர்களுமா யிருந்தார்கள். அந்நேரம் உம்ருவானவர் பாதுஷாவை அடுத்து பஸீத்தக்குடைய காரியத்தை சொல்லி அவனிருந்த இடத்தையும் எழுந்துநின்ற ஸ்தானத்தையும் அவனையும் காண்பித்தார். முன்னமே தர்பாசனையினுல் பாதுஷாவினுடைய மூளையெல்லாம் கலங்கி இன்ன தர்பாசனையென்று அறியாதவனுப் அதனுலேயே முக்கால்

வரிசை சபையைவிட்டும் யெழுந்து உலாவப்போக யெண்ணியவனுபடியால் இது தெரிந்தவுடனே அதிக அருளிப்பட்டவனுய் ஆசனை யழைத்து இந்த மரியாதையில்லாத பத்தமீஸ் ஆகிய அசங்கியமான கழிவான் கர்மிடத்தில் கூடவிருக்க லாயக்கில்லாதவனை படியால் இக்ஷணமே இவனைப்பிடித்து வெளிபிற்றள்ளி தரத்திலிடு பென்று ஆக்ஞாபித்தான். உடனே அவ் வுத்திரவை செவியிற் கேட்ட அதிகரபானவர் ஏற்கெனவே பஸீத்தக்கின் மீது முழுவஞ்சம் வைத்திருந்தபடியால் பாதுஷாவினுடைய வாயிலின்றும் பிடித்துத் தள்ளென்ற வார்த்தை பிறந்தவுடனே இடதுகரத்தால் அம்மனுடைய துணியைப பிடித்து இழுத்துக்கொண்டுபோய் தோட்டத்தின் வாசற்படிக்கு வெளியிற்றள்ளிவிட்டான். அப்பொழுது காஜா புஜூருச்மெஹரானவர் கள்ளண்ணத்தைப்போல் பஸீத்தக்கென்பவனை தோட்டத்தைவிட்டும்வெளிப்படுத்தியாய்விட்டதை இனிஅவனுடைய ஜீவிதமத்தென்றும் இவ்விடத்தில்உடக்காது. ஆனல் அமீர் அவர்களுக்கு மாத்திரம் வரவு மனதுசோர்ந்து, கண்மருண்டுகொண்டிருக்கின்றது இவ்வேளையில் நாம் எதாவதோர் உபாயந்தேட வேண்டுமென மனதில்நினைத்தவராய் பாதுஷாவைநோக்கி ஜஹாம்பனு அமீர் அவர்களுக்கு இதலையில் தாங்கள்செய்துவந்த கதர்தானியென்னும்உபகாரத்தால் அதிக நன்றியுடையவராய் மனப் பூரிப்படைந்து, அவருடைய வாழ்நாட்களெல்லாம் தங்களுடைய நன்மைமறவாத விஸ்வாசகாதலராய் இருப்பா ரென்பதில் அணுவளவேனும் சந்தேகமில்லை. இன்னும் அவர் தம்முடைய ஆயுசுபரியந்தம் தங்களுடைய தாரீபென்னும் புகழ்ச்சியை உலகமெல்லாம் பரவச் செய்வார். ஆகையால் அதாலத்தென்னும் இராஜரீகத்தின் கொலுமண்டபத்தில் வழக்காளிகளும் ஞாயஞ் சொல்லிக்கொள்பவர்களும் வந்து நிறைந்து தங்களுடைய வருகையை எதிர் நோக்கியவர்களாய் பார்த்துக்கொண்டிருக்கிறபடியால் தாங்கள் தகுந்திபோய் அமர்ந்து அதாலத்தென்னும் ராஜரீகத்தை நடத்த கிருபைசெய்யுங்கள் யென்றுரைத்தார். புஜூருச்மெஹரு ரைத்த வார்த்தைகள் பாதுஷாவுக்கு மிகவும் நலமாய் தோன்றியபடியால் உடனே அமீர் அவர்களுக்கு கில்அத்து யென்னும் அரேகவிலே யுயர்ந்த ஆபரணங்களை யெல்லாம் பரிசளித்து அமீர் அவர்களின் இருப்பிடத்திற்கு போயிருக்கும்படி உத்திரவு செய்துவிட்டு தான் சபாமண்டபத்தின் கொலுவில் வந்தமர்ந்து ராயாதி விஷயங்களை யெல்லாம் கவனித்து நீதிபுரிந்துவந்தான்.

அமீர் அவர்களைத்தேடி மலிக்காமேஹர் நிகாரென்னும்
பெண்மணி அவருடைய கூடாரத்திற்குச் சேல்வதும்
அவருடன் சந்திப்பதையும் பேசுகிறதாயிருக்கும்.

விருத்தம்.

வுலகத்தின்வீரர் புகழ்ந்திடும் ஹம்ஜா மீது
நுவலாய் பெஹர்நிகாரும் அரண்மனை தனைவிடுத்து
மெவியே சென்றன்பாக மேண்மையாய் காதல்நீர
காவில் சந்தித்தசெய்தி கழறுவோம் புவியுள்ளோரே.

அறிவிற் சிறந்த கலைவல்லவர்களாகிய வாயத்திறத்தால் தேன் மாரி பொழிவதுபோல் வசனங்களை அள்ளி இறைக்கும் வாக்கினையுடைய "வித்வசிரோன்மணிகள் எழுதுகின்றார்கள்" யாதெனில் அமீர் அவர்கள் நௌஷேரவான் பாதுஷாவினிடத்தில் உத்திரவுபெற்றுச்சென்று தங்கள் இருப்பிடத்திற்போய் டேரா முதலாகியவைகளை புதிப்பித்தடித்துச் சித்தப்படுத்திக் கொண்டு அன்றையதினத்தின் பொழுதையெல்லாம் அவ்வேலைகளிலேயே கழித்து இரவானவுடனே அமீர் அவர்கள் அதிமேன்மை பொருந்திய விலையுயர்ந்த நூதன மான உடைகளை யெடுத்தணிந்தார். அவையாதெனில் பள பளப்பையுடைய கறுநிறம்வாய்ந்த அத்லஷ் யென்னும் பட்டினு லமைக்கப் பெற்ற ஜாமாவை சுழற்றிலணிந்து அதற்குமேல் இடையில் தங்கச் சரிகையால் அதி உன்னதமாய்க் கலீதா வேலை செய்யப்பட்ட இடைக்கட்டு டாக்கா சவுக்கத்தை கட்டி கறுப்புநிறம்வாய்ந்த மெல்லிய பட்டினுலாகிய தலைப்பாகையை சிரசிலணிந்து கஞ்சர், யென்னும் பிச்வாவும், ஷம்ஷீரென்னும் வாளாயுதத்தையும் இடையின் முன்புரீத்தில் சொருகி அதிமிருதுவாகிய மெல்லிய தோலால் சமைக்கப்பெற்ற மேஜோடிட்டி அதன்மேல் கம்தாவென்னும் பனுத்தினுல் செய்யப்பட்ட மோஜாவிட்டு ஷில்ஹு யெடுத்து இடது தோளிலணிந்து மற்ற ஆயுதங்களெல்லாம் அவையவைகளை யணியும் பாகங்களிலணிந்துகொண்டு முகத்தில் கறுப்பு முகமூடியிட்டு, மச்சூல் யென்பவரையும் கூட அழைத்துக்கொண்டு இவ்விதம் அலங்காரகோலத்துடனே கூடாரத்தைவிட்டும் வெளியாகி மலிசாமேஹர் நிகாருடைய மாளிகையை நோக்கி சென்றார். அவ்விதம் போகும்வழியில் உம்ருவானவர் ஓர் பக்கத்தில் மறைவாய் நின்றுகொண்டிருந்தார். அமீர் அவர்களும் மச்சூலும் செல்வதையறிந்த உம்ரு அவர்களை நோக்கி ஓ! திருடர்களே! கபர்தார் எங்கேபோகின்றீர்கள் என் உங்களை ஏனக்கு மறைக்கின்றீர்கள் நீங்களறியவில்லையா! "யான் காவல் புரிந்தவனுய் கற்றிக்கொண்டு நிற்கின்றேனென்று" இப்பொழுது யான் சோக்தாரர்களை தருவித்து அவர்களிடத்தில் உங்களை பிடித்துக் கொடுத்து விடியும்வரையில் உங்களை காவலில் வைத்துவிட்டால் அப்பொழுது இந்த இராக்காலத்தில் திருட்டுத்தனமாய் நடக்கும் குசியை அறிந்து கொள்வீர்கள் யென்றுரைத்தார். அதைக்கேட்ட அமீர் அவர்கள் உம்ரைநோக்கி ஹே! மக்காரையுடைய கள்ளனே! நிஜம் சொன்னீர் யான் செல்லும் வேலையின் நடுவில் குறுக்கிட்டு என் ஏறுக்குத் தென்னும் தடங்கல் செய்கின்றீர் யென்றுரைத்தார். அதையுணர்ந்த உம்ரு அமீரே யான் ஒன்றுமறியாதவனுய் இக்குநின்றிருக்க எனக்கு ஓளரித்து நீங்கள் ஏதொரு காரியமும் செய்வது ஞாயமாகுமா யான் அப்படியென்ன வேற்றுமனிதனுய் ஆகிவிட்டேன் யென்றுரைத்தார் அதைக்கேட்ட அமீர் அவர்கள் உம்ருவை நோக்கி நீர் வேற்று மனிதனுகிவிட்டால் பின்பெவர்கள் தான் சொந்தக்காரர்களாயிருப்பார்கள். உம்மைவிட எனக்கோர் சொந்தக்காரர் யிருக்கின்றார்களா இல்லை இல்லை. இவ் விஷயத்தை தயவிடத்தில் மொழிந்தால் நீர் எனக்கு நவிபத்தென்னும் புத்திபுகட்டி தலைப்படுகின்றீரென்று, மறைத்தேயொழிய, வேறில்லை. என்னசெய்வேன்? யான் என்னுடைய மனதை வசப்படுத்த முடியாதவனுய் என்னிஷ்டப்படி நடக்காமல் என்மனதின் இஷ்டத்தில் யான் இருக்கின்றபடியால் ஒன்றும் யெனக்கு புலப்படாமல் மதிமருண்டு இருக்கின்றேன் நீர் ஒன்றும் விசனியாசம் நினைக்கவேண்டாம், வேணுமானுல் நீரும் எங்கள்கூட வாரும் யான் செல்லுந் தெருக்களில் நீரும் நடந்து செல்லும் அவ்விதம் யாமனைவரும் சென்று வேண்டியதை மனதிற் குடிகொண்டிருக்கும் எக்கிருத்தை தெளிந்துக்கொள்ள செல்கின்றேன். யான் என்னுடைய மதிப்புபாகிய காதலியிடம் சென்று மூன ஆசையை நிறைவேற்றிக் கொள்ளபோகின்றேன் யென்றுரைத்தார். அதை செவியுற்ற உம்ரு அமீரை நோக்கி அமீரே அஃதென்ன அவ்விதம் மதிப்புபாயிகிய ரூபமானது மனிதர்தானே? அல்லது பரிஜாதியில் நின்றும் உள்ளதோ? அஃதெப்பேர்பட்ட சுந்தாவடிவழகியாயிருக்கும்? ஹூருலீன்களில்நின்றும் உள்ளதோ? அல்லது, இன்ஸான்களில்நின்றும் உள்ளதுதானே? அதற்காக தங்களுடைய அசையாதநெஞ்சம் அசைவுற்று, கலங்கி,

மெழுகாகி, உருகி, தளர்ச்சி, சிக்தி, சித்தமிழ்கின்றதே தங்களுடைய தைரியமுடைப்பு உறுதியான பலத்த நெஞ்சமே இவ்விதம் அலங்கோலத்தில் ஆகியிருக்குமாகில் இம்மனதைக் இத்தோலத்திலாக்கிய அச் சொரூபமானது எவ்விதம் இருக்குமோ யென்றுரைத்தார் அதற்கு உம்ருவை நோக்கி அமீர் அவர்கள் சொல்லுகின்றதாவது அவ்விஷயத்தை யான் வாயாற்சொல்லி நீர் கேட்பதைவிட நேரில்வந்து உம்முடைய நேத்திரங்களால் அக்காஷியை உணர்வீராகில் அப்பொழுது அஃது நீர்சொல்லிய இன்னானென்றும் பரிபென்றும் ஹரென்றும் தெரிந்துகொள்வீர் யென்றுரைத்தார். இவ்விதமே உம்ருவிடத்தில் வசனித்தவராய் நான் கடிபெயர்த்துவைக்கும் தூரத்தில் ஓரடிவைத்தவர்களாய்ஹதிவேகமாய்கடந்துபாகேதாதென்னும்நோட்டத்தைநோக்கிச் சென்றுகொண்டிருந்தார்கள்.

இப்பொழுது மலிக்காமெஹர் நிகாருடைய விஷயத்தைநோக்க ஆவலுற்றவர்களாய் வாயைத் திறந்துகொண்டிருப்பீர்களல்லவா? சொல்லுகின்றேன். அஃதி யாதெனில் அமீர் அவர்கள் மலிக்காவை விட்டுப்பிரிந்த அன்றுகாலை தொடுத்து, மறுநாள் அஸ்தமிக்கும்வரையில் மலிக்காவானவள் சூரியனைபார்த்து பல தடவைகளிலும் அச்சூரியனை முனிந்தவளாய் மூழ்குசூரியனே இத்தனை நாள் நீகேரேமேற்றிசையின்கண்வனையைபோல் அதிவேகமாய்சென்று கொண்டிருந்து இன்றையதினத்தில்மட்டும் மெல்லமெல்ல சஞ்சரிப்பதுபோல்செல்கின்றனையே அஃது எதற்காக என்னைலேதனைசெய்து மனப்புண்ணை விஸ்தீர்ணமாக்கி தின்பதில் ஆழச் செய்வதற்காகவேண்டியல்லவா? நீ இவ்விதம் மெல்ல மெல்ல நடந்து செல்கின்றாய் ஏன்மீ னுனக்குற்ற வருத்தம்பாது வானுன்னை ஒன்றும் குற்றம் சொல்லாயிருக்க எனனை நீ இவ்விதம் அலங்கோலத்தில் ஆலையச் செய்வது நீதியல்ல ஆகையால் சீக்கிரம் சென்று இரவை வரச் சொல்லென்பதாய் விரகவேதனை யடைந்துக்கொண்டிருந்து அப் பகலையெல்லாம் வைதீக்கி, நீள்கீக்கி, குடிப்புக் கொண்டாட்டம் நீக்கி சிரிப்பு விளையாட்டை நீக்கி மஞ்சத்தின்மீது நிறையப் போர்த்துக் கொண்டவளாய் எழுந்தான். ஆகாரத்திற்குப் பதிலாய் தன்னுடைய ஹிர்தயத்தை புசித்தவளாயும் நீருக்குபதிலாய் கண்ணீருகிர்தவளாயும் இருக்கையில் யாராவது வந்துவிட்டால் உடனே தன் கண்ணீரை துடைத்துக்கொண்டு தலைவிக்கொஞ்சுவதற்கு பதி

லாய் கைவிரல்களினால் முன் நெற்றியே[illegible]துக்கொள்பவளாயும் ஆடையுடுத்திக் கொள்வ[illegible]டிக் பட்டியால் தேக முழுவதையும், மூடிக்கொண்டவளாய், தனித்தில் ஒருவருமில்லாமல் தனித்திருக்கும்தோசெல்லாம் அங்குமிங்கும்பார்த்துவிட்டு பெருமூச்செறிந்து காட்டிற்பிடித்த புத்திமான் மிரண்டு வெறித்ததுபோல் கண்களால் முத்தைப்போன்று நீரொலித்தொழுக அழுகலவளாயும் இப்பாடல்களை அடியிற்காணுமாறு பாடவாரம்பித்தனள். அந்த பைத்தின்மானு ஆகிறது.

விருத்தம்.

ஒங்கியே துயிலும்போது உன்னிடம் துவாலைகேட்டு
எங்கிநான் விரும்பும்சித்தை யாதெனில் இறையேஆஷாக் *
தாங்கிய பாதத்தோசை தானியில் தோயும்சப்தம்
விங்கியே செவியில்கேட்டு விழித்திட அருள்செய்வாயே.

புங்கியிற் கோடிசித்தை புருத்தெனை யூனத்திட்டாலும்
நிந்தனைக் குள்ளாகாமல் நீனிலத் தவர்களெல்லாம்
எந்தனை நோக்கில்யாதும் இருதயங் குளிர்ந்தாற்போல
விந்தையா யிருப்பதல்லா லெண்மன மறிந்திடாரே.

என்னிட மன்தேநர்புட்ப மீதினி லாசையுற்று
விண்ணம தாகவேதான் வெறிகொண்ட தாகையாலே
அன்னவோர் புட்பத்தானும் ஆசையாக னேபான்
† என்னரும் மாஷ்டபுட்பம் பென்றுயா னறிந்திட்டேனே.

ஆசையின் மனமமிர்த அளவோடு நிறைத்திருப்பி
கூடிடா விழிகள்ரெண்டும் குறித்தெதற் கொப்பேயானால்
நேசர்க ளிருந்தும்பானம் நிறைந்துள நிண்ணம்போலும்
பேசுமுன் தழும்பிக்கண்ணீர் பிதற்றிட லாயிற்றன்றே.

எண்ணமென் கவலையெல்லாம் இன்புறும் நேசர்மீது
மின்னியே தாவிமாய்கை மீண்டிடா அன்டிற்போல்
நிண்ணமா யிருந்தவுள்ளம் நியங்கிய மதிக்குடம்போல்
குன்னியே நறைத்தபொங்கி குணமதை நோக்குதற்தோ.

* காதலர்.

† இங்குபதவியல்பின் தடர்ச்சியினால் இங்கு ஆசையின்பொ

மெழுகாகி உருகி, தளர்ந்து நெஞ்சமும் பகையதாகி
தைரியமுடைய உறுதியு பகைத்தனல் தனிலேலவாட்டி
வத்தில் ஆலிங்கனஞ்செய்து அனல்மெழு குபுகுமாப்போல்
மோச்மே செய்குதெந்தன் முடிவிலா புந்திதானே.

அரம்பை யானலுமெந்தன் ஆஷாக்கை காண்பாளாகில்
திரும்பியே செல்லாமற்றுன் திகைத்தவள் மனமயங்கி
வருந்தியே தழுவிச்சேர வகையேதென் றுன்னிமாண்டால்
காதல கமலம்போன்ற கன்னியெவ்வா றுய்வேனே.

ஒழிவது விலங்குர்தீப ஒங்கிய வெளிச்சம்போன்ற
சுளியது நிறைந்திருக்கும் சகத்திரு வதனந்தன்னை
களிப்புற யானும்கண்டு கருதுஅண் டிற்கொப்பாக
ஒளிமிக வதனந்தன்னில் ஒப்விலா காதல்கொண்டேன்.

புள்ளினத் தோய்ந்தபுல்பு புகழுறுந் தண்மையான
துள்ளிய யெந்தனுசை துலங்கிடு ஜுல்பின்ரோமம்
கொள்ளையிட் டென்னையந்த கூர்வலி யதிற்சிக்காக்கி
தென்னிய புசிப்புபோல தேமலி ஈர்ந்ததன்றே.

மன்மத னுசைபொங்கி மனமெனும் பாலைபூமி
கண்ஜல மாரிபேய்ந்து கழையுற செழித்தாற்போல
எண்ணுயிர் பகையிலேடு இன்பமாய் நேசஞ்செய்தேன்
அன்பெலா மவர்மேல்விட்டு ஆவியை ஈந்தேனன்றே.

விழியழ கோய்ந்தயுச்சம் விளித்திர ருபந்தன்னில்
கழிப்புற விணங்கக்கஷ்டம் கனமதாய் யெடுத்துச்சிசர்ந்தேன்
வழிவெளிக் களம்பகோக்கி வகையறியாமல் யானும்
கிழிவலை சிக்குண்டாற்போல் கிடங்குகின்றேனே வல்லீ.

எத்தனை மதமேபூவில் இருந்திடிலதனிலெல்லாம்
சுத்தமாம் இஷ்க்கின்மார்க்கம் சொல்லிடற் கரியபாதை
மெத்தவே கடினமம்மா மேதினி தன்னிலேஆசை
மற்றெலாம் பெரிதேயல்ல மாமத மிதுவேயாகும்.

ஆசையே மனிதருக்குள் ஆளவுக் கதிகமானல்‡
சுசல்கள் யாவும்கூட இறைகபி சுலைமான்போல்
கூடிடா தாகிபிந்த குவலய முழுதும் விந்தை
பூசமாய்ப் பெருகூனில் படர்ந்திடும் உண்மைதானே.

‡ ஆசுக் என்பது மாசுக்காயமாரியது.

ஆசையே உலகிலில்லா தமர்ந்தொளிர் திரு
நேசர்கள் கருத்தில்ஆழ்ந்த நிலைதரு ஞானமா
பேசிட பிரசங்கத்தில் பெட்புற வெளியெங்காகும்
பாசமொன் றிருந்ததாலே பகர்ந்தனர் மர்மந்தன்னை.

ஆசையின் வழியேமாந்தர் அறிவினி லமர்மெய்ஞ்ஞான
நேசமாய் இறையைக்கண்டு நித்யானந்தத்தை யெய்தார்
வாசமா மதியிற்பின்னம் வாய்ந்தவர் விஷ்க்கினுலே
ஆசையால் ஹாருத்மாருத் அமிழ்ந்தனர் நரகந்தன்னில்.

ஆசையால் மஜுனூன் லெலி அவள்தனை ஜெபமாய்ச்செப்பி
பாசமாய் உலகிற்சுற்றி பண்புற அலைக்கானகிறே
நேசமே யில்லாதாகில் நினைப்பனே கனவிற்கூட
ஆசையின் தொழிலேயல்லால் அவனியோர்க் கேதுவேலை.

ஆசையொன் றிருந்ததாலே அண்டில்கள் விளக்கில்வீழ்ந்து
நாசமாய் மடியுதன்றோ நவில்காத லற்றுப்போனுல்
கூசிடா தஞ்சுசெல்ல குறுகுமோ கிஞ்சிற்றேனும்
பாசத்தால் மாள்வதல்லாலீல் பார்தனி லழியுமோதான்.

ஆசையாற் சிட்டுப்பூவீ அன்புடன் விரும்பலாச்சு
ஆசையால் ஜுலைகாபூரும் அவர்தனை நேடலானர்
ஆகையே யவனியோரை அவதியி லாழுதசெய்து
பாசமாய் தவித்துநாளும் பதறிடச் செய்யுமன்றே.

நேசர் ஹம்ஜாவின்மீது கிலேத்தெந்த ஞவிலெல்லாம்
பேசிடும் வசனம்யாவும் பிதற்றியே லெலியைப்போல்
கூவிட்டு ளளரிச்சிந்தை குருகிய விஷ்க்கேபொங்கி
பாசிவந் தடர்ந்துமூடி படர்ந்தஹௌ ஜினுக்கொப்பானேன்.

இவ்விதம் பாடிப்புலம்பி தியங்கி அப்பகலெல்லாம் கழித்
துக்கொண்டிருந்த மலிக்காவினுடைய கோலத்தை அறிந்த தாதி
யர்கள் பித்துபானேவென்னும் தோழியைநோக்கி அம்மம்மா இப்
பொழுது நம் மலிக்கா அனுபவித்துக்கொண்டிருக்கும் கஷ்டத்தை
கவனித்தால் அவள்யாரோ ஓர் ஆஷாக்கின்மீது காதலுற்று தியங்கி
இருப்பதாய்க் காணுகின்றது, ஆசையல் பித்துபானேவே நீ போய்
உன்னுடைய தாயினிடத்தில் இந்த விஷயங்களைச் சொல்லிவிடு

மெழுகாகி, உருகி, தனுர்ரூபனே தேடி மலிக்காவினுடைய துக்கம்நீங்கச் தைரியமுடையவளாகியிடச் சொல்லா தொழிப்பாயாகில் மலிக்காவை ஏத்தில் ஆசுகாநுக் ரமையலானது, எப்படியாக்குமெனின், விட்டை விட்டும் வெளியாக்கிவிடும். மனிதர்களுடைய வெட்கம், அச்சம், என் பதைநீங்கச்செய்யாது, மானத்தைக்குலைக்கச்செய்யும் மூனையைக் கலக்கி பைத்தியம் கொள்ளச்செய்யும் பூ மாதளம்பூவைப்போன்ற மேனியை மஞ்சளைப்போல் ஆக்கிவிடும், இன்னும் தெருத் தெருவாய் அலையவிட்டு சிறுவர்களின்கல்லெறிக்குள்ளாக்கிவிக்கும், உதட்டைக் காயவைத்துவிடும் அழுகையின் மூச்சை பெருக்கச்செய்யும், ஏக்கத் தைமென்மேலும் அதிகரிக்கச்செய்யும் தன்னையறியாமல் மதங்கொண் டுசிரசைகற்களில்மோதி உடைத்தக்கொள்ளச்செயயும், உலகவெ றுப்பை உண்டாக்கிவிடும், நகையதென்னும் போதனையை காதிற் குள் ஏற்கச்செய்யாது, ஆகையால் நீ உடனே போய்ச்சொல்லி அதற்கு ஆகவேண்டிய காரியத்தை நடப்பிக்க சொல்லென் றுரைத் தார்கள். அதையுணர்ந்த பித்துபானுவென்பவள் அம்மம்மா இவ்வ பாண்டமான பெருத்தவிஷயத்தை யான் சொல்ல் என்மனம் துணி யாது. நீங்களே என் தாயினிடத்தில் சென்று சொல்லுங்கள். இன் னும் என்னுடைய சொல்லைக்காண. உங்களுடைய வார்த்தை மிகவும் உசிதமாய் காணப்படும். ஆகையால் நீங்களேபோய் சொல்லுங்கள் யென்றுரைத்தாள். அவ்வார்த்தையை யுணர்ந்த தாதியர்களில் சிலர் தூணிந்து பித்துபானுவினுடைய தாயினிடத்தில் சென்று மலிக்கா வினுடைய விஷயங்களை ஆதியோடந்தமாய் உரைத்தார்கள். அவ் வார்த்தையை யுணர்ந்த தாயானவள் மனமருண்டு திகைத்து நாவு லர்ந்து, கால்கள் தடுமாற ஓடோடியுவந்து மலிக்காவை பார்க்கை யில் அவளுடைய கோலம் அலங்கோலமாய் ஆச்சரியப்படத்தக்க விதமாய்க் கிடக்கக்கண்ட மலிக்காவினுடைய முகமுடியை நீக்கி சொல்லத் தொடங்கியதாவது யாதெனில், அம்மா வுஹஜாதியே தங்க ளுக் குற்றவையாத தேகத்திற்கு என்ன அசௌக்கியம் நேர்ந்தது? என்ன காரணம் அழுதத் தியே! வாடி இருக்கின்றீர்கள், எந்த பகைவர் தங்களை இக்கோலஞ்செய்தனர்? இம்மஞ்சத்தின்மீது இவ்வளவு துயரத்தோடு கிடக்குங் காரணம்யாது அவைகளை என்னி டத்தில் ஒளிக்காமல் சொல்லுங்கள். என்னிடத்தில் தங்கள் மனதில் அமர்ந்திருக்கும் கவலைகளாவையும் அணுவேனும் விடாமல் சொல் வீர்களாகில் அதற்குத்தக்க ஏற்பாடு செய்யக்கூடும். தங்களுடைய சிறுவயது முதலாய் யான் தங்களை வளர்த்து வாலிபமாக்கி இவ்வ

ளவுகாலம் பழகி இருக்கும் யான் தங்களுக்
கென்னும் கைமாறுத்தாகி விடுகின்றேன் யெ
யோடு வேண்டிக்கேட்டாள் இவ்வார்த்தைகளை
னவள் தாயியைநோக்கி அம்மா என்மனதிலமர்ந்திருக்கும் விஷயங்
களை தங்களிடத்தில் உரைக்க வெட்கமுடையவளாயினும், இச்ச
மயம் கட்டாயம் சொல்லத்தான் வேண்டியதாயிருக்கின்றது; அஃ
தெதுவானால் என்னுடைய துயரத்தின் குறியானது தங்களுடைய
ஹிர்தயத்தை தீய்த்துவாட்டுகின்றபடியால் அஃது யான்கொண்டிரு
க்கும் மையலைக்காண அதிகமாய் என்மனதை வாட்டுகின்றது ஆகை
யால் சொல்லிவிடுகின்றேன். தாங்கள் மனத்தையருமுவண்ணம், இரு
ந்துகேளுங்கள்; அஃது ஹஸ்ஸாம்பின் அலத்மாகைபரி யென்பவனை
குத்தி ஜெயித்த வேலானது என்னுடைய மார்பிற்தைத்து ஊடுரு
விப்பாய்ந்து ஹிர்தயத்தைத் துளைத்து புண்ணாக்கிய அவ்வேதனை
யென்னை இக்கோலமாக்கி விட்டிருக்கின்றது, இவ்விஷ்க்கின் காயமா
னது மற்றுமென்னும் மருந்தில்லாமல் எப்படி ஆறுமோ தெரிய
வில்லை யென்றுரைத்தாள். அதை யுணர்ந்த தாயி மலிக்காவை
நோக்கி அம்மா! மலிக்காவே! தங்களை பெண்பேசி எப்பேர்ப்பட்ட
உயர்குலத்தினர்களாகிய சீர்லோனிஷினர்களும், கிபரானி கிளைஞர்
களும் வெகுவாய் பிரயாசைபெடுத்து தங்களுடைய பாதங்களுக்கு
குர்பானியாக வேண்டிவந்தவர்கள் யாவரையும் வேண்டாமென்
றுதறி, மறுத்து நீக்கிவிட்டு, இந்த அந்திய இஸ்லாம் மதத்தினராகிய
ஹம்ஜாவை ஒப்புக்கொண்டீர்கள். அஃது எனக்கென்னமோ மன
திற்கு நன்றுப்தோன்றவில்லை. தங்களுடைய்க்வரவத்திர்க்கும், அவ
ருடைய கவரதைக்கும், அவருகில் தாங்
என்மனப்கலமாய் எனக்குதெரியப்படுத்தவில்லை யென்றுரைத்தாள்.
அதைக்கேட்ட மலிக்கா தாயியைநோக்கி அயே! தாயி அம்
மா தாங்களென்ன யோசிக்கின்றீர்கள், தங்களுடைய வயதிற்குத்
தக்க யோசனையுங்கூட இருக்கின்றது. இஸ்லாம் என்னும் மோகத்தி
ற்கு தன்ஜாதியென்னும் வேறே ஜாதியென்றும் என்ன வித்தியாச
மிருக்கின்றது. என்னுடைய சொல்லை நன்றுக் கவனித்துக்கொள்
ளுங்கள் அந்த சாவிப்கரான் என்னை ரைத்தவிற என்னுடைய ஆவி
யை காப்பாற்றுபவர் ஒருவரும் இவ்வுலகத்தில் பிறந்திருக்கவுமில்லை.
இனி பிறக்கப்போகிறதுமில்லை. அவரல்லாமல் என்னை மகிழச்செய்
பவர் ஒருவருமில்லை யென்றுரைத்ததோடு நன்னுடைய கழுத்தில
னித்திருந்த மூவாயிரம் அஷ்டாபிகள் விலைமதிக்கத்தக்க முத்துமாலை

மெழுகாகி உருகி, தளர்நடைய கழுத்தில்போட்டு அவளைநோக்கி, கைரியமுடைப்பு முதிய பாருட்டல்ல இதைக்கான நூறுமடங் கதிக லத்தில் ஆபரணத்தினை என்னுடைய நேசஸ்வாசமுடைய சாஹிப் கரான் அவர்களிடத்தில் நின்றும் வாங்கித்தருவேன். அதல்லாம்ல் யானும் வெகுவாய் தங்களுக்கு கொடுப்பேன் யென்றுரைத்தாள். அந்த தாயியானவள் எப்பேர்ப்பட்டவ ளெனில் ஹிர்ஸ் யென்னும் பொருளாசையில் காஜா உமரு கஞ்சர்குஜார் அவர்களை மிகைத்தவ ளாயினும் அவருக்கு ஆசைக்குத் தக்கவாறு அகப்படும் இவளுக்கோ அகப்படாத ஆசையுடையவ ளானபடியால் முத்துமாலையை பார் த்தவுடனே அவளுடைய வாய்நிறைய ஜலமூறி முன் தான் இசழ்ந் தவை யனேத்தையும் புகழ்ந்தவளாய் சரி! சரி!! அகிலரக்சண ஒருவன் உலகத்தில் அழகிலும் விரதத்துவத்திலும், ஆண்மையிலும் பயில்வான் தனத்திலும், கையிலும், குணத்திலும், அறிவிலும், வங்கிஷத்திலும், பலத்திலும், நிரத்திலும், உண்மையிலும் மிகு த்தவர்கள் ஒருவருமில்லை தான் ஆனாலும் மத வித்தியாசத்தி ற்காக சொல்லவந்தேன், ஆயினும் தாங்கள் சொல்வதுபோல் ஆசைக்கோளவில்லை. என் புத்தியும் இப்பொழுது நன்றாய் திரு ம்பிவிட்டது. என்றுரைத்தவளாய் நமக்கு வரும் லாபத்தை ஏன் கள்ளவேண்டும் யென்று நினைத்து மலிக்காவை நோக்கி தங்க ளிஷ்டம்போ லாகட்டும் எழுந்து முகங்கழுவி நன் நீராடி ஆடை ஆபரண அலங்கிர்த சொரூபியாய் உண்டுசெரித்து கண்மெகிழ்ந்து ஹர் ஹப்தென்னும் பலவித சோடனையோடு அலங்காரமாய் சிரித்து வினோயாடி சுகித்திருப்பாள். இரவானவுடனே நான் தங்களை சர்வா லங்கார சோடனையாய் ஜோடித்து அந்த சாஹிப்கரான் அவர்களிட் த்திற்கு அழைத்தேகு கிறேன், தங்களுடைய யெண்ணத்தை பூர் த்தி செய்தவைப்பேன், சபூரியென்னும் பொறுமையை கைவிடாமல் இருங்கள். அப்படி பொறுமையைக் கைவிட்டால் இரகசியம் வெளி யாகி பிரசங்கத்தில் அம்பலத்தி லவிழ்த்த ஆகாத்தை போலாகி விடுங். அப்படி வெளியாகிவிட்டால் அதனால் நமக்கு நஷ்டமே யொழிய லாபமில்லை யென்றுரைத்தாள். இவ்வசனங்களோ காய்ந் தலர்ந்த பூழியானது பாய்ந்து சென்ற ஜலத்தை அருந்திபதுபோல் செவிக்குள் ஏர்த்த மலிக்காவானாள் மன ஆறுதலை யடைந்து முகம் குளிர்ந்து, அகமகிழ்ந்து உடனே எழுந்து ஹமாமென்னும் ஸ்நான அறைக்குட்சென்று குஸல்செய்து, ஆடை ஆபரணம் சூடி அன்னம் புசித்து மின்னலைப்போல் வெளியில்வந்து மிகச் சந்தோஷமாய் இரு

க்கையில் சூரியனும் அஸ்தமானமாகி இருள் [illegible] ழுது, தாயி ஆனவள் மலிக்காவை சந்தரபிம்பம் [illegible] டிக் ஆடை ஆபரணதிகளை யெல்லாம் தரிக்கச்செய்து [illegible] அணியும் வஸ்திரங்களை அணியச் செய்து தானும் ஆண் வேஷம் தரித்துக்கொண்டு நாலேணிகட்டி அதன்வழியே மலிக்காவும்தானு கரங்கி தல்ஷாத் காம்யென்னும் கடலோரத்தில் அமீர் அவர்களின் கூடாரமிருக்கும் ஸ்தானத்தை நாடி நடக்கையில், அமீர் அவர்களின் டேராவானது இன்னும் சிலதூரம் இருக்கின்றதென்று அவ்வளவு தூரம் அதிக பிரயாசையோடு நடந்து செல்கையில் எதிரில் மூன்று பேர்கள் கறுநிற உடை யணிந்தவர்களாய் வரக்கண்டு இவர் கள் எவ்விடம் செல்பவர்களோ அவர்கள் செல்லும் வரையில் இவ் விடத்திலேயே தரித்து பின்பு நாம் செல்வோமென கருதியவர் களாய் பார்த்து நின்றார்கள். அம்மூவரும் வேறெவ்விடமும் செல் லாமல் மலிக்கா நின்றுக் கொண்டிருக்கும் திசையை நோக்கி அவர் களின் எதிரிலேயே வர்க்கண்ட மலிக்காவும், தாயியும் ஓர் மரத்தின் மறைவில் மறைந்து கொண்டார்கள். அவ்விதம் மறைந்த இரு வரின்மீது அமீர் அவர்களுடைய பார்வையும் விழுந்து, மக்பூலை நோக்கி உரத்த சத்தமாய் ஓ! மக்பூலே அம்மரத்தின் பக்கத்தில் மறைந்த இருகறுநிற உடையணிந்தவர்கள் யாரென்றறிந்து வாரும் அவர்கள் இவ்விரவு நேரத்தில் தங்கள் கணவன்மார்களின் உத்திர வின்றி வெட்கமில்லாமல் யாரிடத்திற்குச் செல்கின்றார்கள் யென் றறிந்து வாருமென் றுரைத்தார், அச்சப்தத்தை உணர்ந்த மலிக்கா இக்குரல் அமீர் அவர்களின் குரல்தானென்று கன்றாய் அறிந்தவ ளாய் நிற்கையில் மக்பூல்வபாதாரும் அவர்களருகில் சென்று பார்க் கையில் மலிக்கா மெஹரூ நிகாராக இருக்கக்கண்டு கன்றாய் கூர்க்க பார்த்து, அந்த அழகுநிறைந்த ரூபலாவண்யமுடைய சுவர்ணபது மையாயிய மெஹருன்நிகார்தானென்று நிசமாயிக் துணர்ந்தவராய், அவிடத்திற்றானே நின்றுகொண்டு உரத்த சப்தத்தோடு அமீரே தாங் கள் இவிடத்தில் வந்து இவர்கள் யாரென்று தாங்களே கண்டுண ருங்கள் யென்றழைத்தார். அச்சப்தத்தைக் கேட்ட அமீர் அவர்கள் அருகில் வந்து பார்க்கையில் அமீரைக்கண்ட மலிக்கா மெஹருன் நிகாரானவள், பிரிய நாயகரைக்கண்டு பூரிப்பினால் தன் சரீரம் விம்மி புளகாங்கிதம் கொண்டவளாய் தான் அணிந்திருக்கும் அங்கிகளை கிழித்துக் கொண்டு தேகம் வெளியிற் பிதுங்க சந்தோஷமுற்று நிற் கையில் அமீர் அவர்கள் மெஹருன்நிகாரென்றறிந்து அவரும் ஆனந்த

மெழுகாகி உருகி, தலைப்பெய்து தேகம்விம்மி தாங்க ளணிந்திருந்த சரியமுடைப்பு உறுதியினின்கண் பொத்தான்களெல்லாம் படபடென்று தில் ஆதேசுக்கனலியில் பிதங்க மகிழ்ச்சி யுடையவராய் மலிக் காவினுடைய சரத்தைப் பிடித்துக்கொண்டு தங்கள் கூடாத்தந்த நாடிச்சென்றார்கள் அவர்களிருவரும் செல்வது எவ்விதமுந்த தெனில் ஜோஹராவெனும் நகூசுச்சிரமும் மூஸ்தரியேலும் நகூத் திரமும்இரண்டும் ஓர் இராசியில் செல்வதுபோலிருந்தது.

அவ்வேளையில் உம்ருவானவர் அவர்களருகிற்சென்று அதிக மரி யாதை வணக்கத்துடன் சலாம்சொன்னவராய் நிலவசனங்க ளுரைக் கலாயினர். அஃது யாதெனில், சங்கைபொருந்திய உலகமதா வாகிய மலிக்கா அவர்கள் எங்கள்மீது கிருபைகூர்ந்து எங்களுடைய கஷ்டமாகிய கடையை நாங்கள் கடக்காமல் எங்களுக்கு உதவி செய் தார்கள். ஹஜ்ரத் அமீர் அவர்களின் பிரியமானது மலிக்காவை இவ் வளவுதூரம் வரச்செய்தது. அவர்களின் பெருட்டால் தங்களு டைய முலாகத்தென்னும் சந்திப்பு நிபு செய்தது யெங்களுடைய மன்க்குறையை நிவர்த்திசெய்து விட்டார்கள் யென்றுரைத்தார். இதையறிந்த மலிக்காவானவள் மந்திரீக்கி! இந்த மனிதன்யார்? எங்குள்ளவர்? இவர்பெயரென்ன? இவரிருப்பிடம் எங்கேயென்று கேட்டாள். அதையுணர்ந்த மக்பூல் சொல்லுகின்றார். அம்மா காஜா உம்ரு ஐயார் யென்று சொல்பவர் இவராயிருக்கும்; இக்காலத்தில் ஐயாரியுடைய வேலித்தூத்தின் புகழ்ச்சி இவருடையதாகவே திருக் கின்றது என்றுரைத்தார். அவ்வார்த்தையைக் கேட்ட மலிக்காவான வள் உம்ரு உடைப்சரீரசௌர்மையையும் அவருடைய நடைநொடி பாவ னைகளையும்பார்த்து ஹைரானென்னும்பிர்மையுடையவளாகி அடிக்கடி உம்ருவை கடைக்கண்போட்டு நோக்கினவளாய் ஓர் பைத்தி சொன் னள் அதின்பொருளாவது சூரியன் அடையும்தருவாயில் அதினுடைய பிரகாசம் எவ்விதம் இருக்குமோ அப்பிரகாசத்தையும் உம்ரே உம்மு டைய அழகானது ஜெயித்துக்கொண்டது இன்னும் பாதுஷாக்களு டைய மஹலின் அந்தப்புரத்தில் உம்முடைய ரூபலாவண்யத்தைப் பார்த்து ஆச்சரியப்பட்டு பிர்மை கொள்ளாதிருப்பவர்களும் உண் டோ? யென்றருத்தம்தரும், பைத்தைச்சொல்லி கடந்தார்கள். இவ் விதமே பலமொழிகளை வசனித்துக்கொண்டு அமீர் அவர்களின் கூடாரத்தில் போய்ச்சேர்ந்து மலிக்காவை அமீர் அவர்கள் தங்கள ருகில் உட்காரவைத்துக்கொண்டு, அதிக விநோயுயர்ந்த ஓர் இரத்தி

னத்தினால் கடைந்தெடுக்கப்பட்ட இண்ணத் வாணிபென்னும் குடிப்பை அடிக்கடி தங்கள் டிக் கொடுத்துக்கொண்டிருந்தார்கள்.

இவ்விதம் சிலகோரம் அருந்தியபின் அக்கொட்டோரானவையும் கூஜாவையும் மலிக்கா தன்னுடைய கரத்தில் வாங்கி ஷர்பத்தை நிறைத்து நிறைத்து அமீர் அவர்களுக்குபுகட்டலாயினர்கள். அப்பொ ழுது உம்ருவானவர் அவிடத்திலிருந்து அதிமதுரமான ராகமுடைய பாடல்களைபாட ஆரம்பித்தார். அவ்வேளையில் அமீர் அவர்கள் மலிக்கா மெஹருன்நிசாரை அழைத்துவந்த அவளுடைய தாயினென் பவளுக்கு பத்தாயிரம்மொஹராக்களடங்கிய பையொன்றையும் ஓர் தபக்கென்னும் பொற்றும்பாளத்தில் நிறைய வைரம், வைடூரியம், மாணிக்கம், முத்து, பச்சை, நீலம், கோமேதகம், புஷ்பராகம், பவளம், முதலாகிய நவரத்னங்களையும் நிறைத்து இனாமாய்க் கெடுத்து இன்னும் அநேக வெகுமதிகள் தருவதாய்ச் சொல்லி அவ்விரவவ்வல்லாம். ஆனந்தத்திற் கழித்துக்கொண் டிருக்கை யில் சூரியுதயமாகும் தருணமானபடியால் அமீர் அவர்களை மூக்து மக்பூல் உம்ரு இருவரையும் வரழைத்துக் கொண்டு மலிக்கா மெஹருன்நிகாரைகொண்டுபோய் அவர்களுடைய மாளிகையில்விட்டு விட்டு, மலிக்காவை பழயபடிவந்து சந்திப்பதாய் வாக்குகொடுத்து விட்டு அவர்களிருப்பிடம் வந்து சேர்ந்தார்கள். மலிக்காவும் தாயி ஆனவளும் மாளிகைக்குள் நுழையும்வேளையில் அம்மாளிகையின் கீண் இருந்த கொஜாயிக்களென்னும் ஆணுவமற்ற ஆண் பிள்ளை களில் சிலர் நித்திரை செய்துக்கொண்டு சிலர் விழித்தும் இருந்த படியால் தருணிற உடைகளைத் தரித்துக்கொண்டு சென்ற மலிக்கா வையும் தாயையும் கண்டவுடனே கள்ளன் கள்ளன் யென்று கூச் சலிட ஆரம்பித்தார்கள். பொழுது நன்றாய் விடிந்து வெளிச்சம் உண்டாகிவிட்ட படியால் அவ்விருவரையும் அடிக்க நெருங்கி பார் த்துவிட்டு சும்மா யிருந்துவிட்டார்கள்; அவ்வேளையில் கௌவாப் நாஜிர்யென்னும் கொஜ்ஜிபாக்களுக் கெல்லாம் தலைமை யானவன் மலிக்கா மெஹராங்கீர்யென்னும் நோஷேரவானுடைய மனைவியிடத் திற் சென்று சொல்லுகின்றான். அம்மா! மலிக்காவே நம்முடைய ஷெஹ்ஜாதியினுடைய மாளிகையை சுற்றிக் கொண்டிருப்பதற்காக ஓர் இராஜனை நியமிக்கவேண்டும் அவ்விதம் சுற்றிக் கொண்டிருப்

...ஞ்சி, தளர்ந்திபெய்திருக்கவேண்டுமானால் தவ...
...யை நடியபின்கண்மில்லாமல் சம்மாவிடாத ...ய மூளை...
...யுடைய வீரஞ்சுய புத்திசாலியாயும் இரவும் பகலும் ...ந்து
காவல் புரிபவனையும் இருக்கவேண்டும், என்றுரைத்தான் ...தை
யுணர்ந்த மேஹராங்கீஸ் அவனுடைய வார்த்தையை மிகவும்
என்று சம்மதித்தவளாய் பாதுஷாவினிடத்தில் தெரியப்படுத்தினாள்.
உடனே பாதுஷாவானவன் அந்த்ர்தேக்ஜன் யென்று சொல்லப்படும்
சேனாதிபதியையழைத்து அவனுடன் அதிக சுறுசுறுப்பையுடைய
சுத்தவீர பயில்வான்களில் நானூறபெயர்களை கூடச்சேர்த்து மலிக்
கா மேஹருன்நிகாருடைய மாளிகையைச் சுற்றிலும் காவல் புரி
யும்படி ஆக்ஞாபித்தான்.

இம்மிதிவ்வாறிருக்க மறுநாள் இரவான உடனே அமீர் அவர்கள்
இரவில் பாதியாகும் வரையில் மலிக்காமேஹருன்நிசார் வரும் வழி
யை யெதிர்நோக்கி இருந்தும் வாராமையால் அந்த்ர்தேக்ஜன் யென்
பவனை. மலிக்காவினுடைய மாளிகையில் காவல் வைத்திருப்பதை
அறிந்த அமீர் அவர்கள் அதிக மனத்துய ரடைந்தவர்களாய் பனி
விடையாளரை நோக்கி இரவிலாதிலும் உடைகளை கொண்டுவரும்
படியாய் ஆக்ஞாபித்தார். அதையறிந்த உம்ரு அமீருடைய நிலைமை
யை யுணர்ந்து கண்களில் நின்றும் நீர்தாலா தாரையாய்ஓட அழு
தவராய் அமீர் அவர்களின் பாதத்தில்வீழ்ந்து பற்றிப் பிடித்துக்
கொண்டு சொல்லுகின்றார். ஹம்ஜாவே தாங்கள் ஆண்டவனுக்காக
இன்றிரவில் டேராவைவிட்டும் வெளியிற்கிளம்பவேண்டாம் மனதை
அடக்கி பொறுமையோடு இருக்கவேண்டும் ஏனெனில் யான் கேள்
விப்படுகின்றேன். இன்றைபதினம் நௌஷேரவான் அந்த்ர்தேக்ஜன்
பெனும் சேனாதிபதியை மலிக்காவினுடைய மாளிகைய அதிக
வுக்கத்தோடும் காவல்புரியும்படி நானூறு சுத்தவீரர்களுடனே வைத்
திருக்கின்றான். ஆகையால், ஒருவேளை அந்த்ர் தேக்ஜன் யென்ப
வன் தங்களை கண்டுகொண்டு ஏதாவது ஓர் குற்றங்குறை செய்து
விடுவானுகில் அவ்வேளை இஜ்ஜத், மரியாதை முதலாகிய கண்
ணியக்குறைவு நேர்ந்துவிடும், இதுவரையில் தாங்கள் எடுத்திருக்
கும் பேரும் பிரபல்யியமும் மீண்டும் அழிந்து ஒழிந்துவிடும், தங்ஷ
மென்னும் பொறுமைக்காரர்களின் மனமெழ்ச்சி உண்டாகி பரிகா
சம்செய்ய ஆரம்பிப்பார்கள் இவ்வளவு நாள் பிரயாசையெடுத்த

நற்பெயர் கெட்டுப்போகும் யென்றுரைத்தா... ...ஜாஜங்க
விதவசனங்களை கேட்டுக்கொண்டிருந்த அமீர்... ...வ.
நோம் மனவருத்த முற்றவராய் குறுகிய முகத்தோடே இருந்தவர்
உம்ரு உடைய வார்த்தையைக் கேட்டவுடனே அளவுக்கு மிஞ்சிய
கைப்பாய் சிரித்துச் சொல்லுகின்றார். உம்ரே உமக்கென்ன பைத்
தியம் பிடித்திருக்கின்றதா எனக்கு மனத்தில் நின்றும் அச்சமுண்
டாக்குகின்றீரா ? நீர் அறியவில்லையா யான் "குஷிந்தயே ஹஸ்
ஸாம்பின் அலஹ்மா கைபரியென்பவனை வெட்டிப்பிளந்து ஜெய்
மடைந்த ஹம்ஜா வென்று" ஆகையால் இவ்வித அச்சமுடைய இர
வை யான் ஒருபோதும் என் மனதில் பெரிதாய் யெண்ணமாட்
டேன். இந்த நாமர்தாக்களாகிய காவல் வீரர்களின் விழிப்பினால்
என்மனம் ஒருபோதும் அச்ச மடையாது. உம்முடைய உயிர் உம
க்கு பெரிதாய் காணுமாகில் இந்த டேராவை விட்டும் வாசற்படி
வரையிலும்கூட அடி பெயர்த்து வைக்காதவராய் யென்கூட வாரும்
விரும்யென் றுரைத்தவராய் மச்சூல் வபாதார் யென்பவரை கூட
அழைத்துக்கொண்டு மலிக்கா மேஹருன்நிகாருடைய மாளிகையின்
திசையை நோக்கி நடந்தார். அவ்வேளையில் அமீர் அவர்கள் செல்
வதை பார்த்திருந்த உம்ரு அவருடைய மனம் அமீர் அவர்களைத்
தனியே விட்டிருக்க எப்படித்துணியும் எப்பொழுதாவது அவ்விதம்
தனியாய் விட்டுப்பிரிந்திருந்தார? இல்லை ஆகையால் அமீர் அவர்களை
முன்னே செல்லவிட்டு பின்னல் உம்ரு செல்பவராயினர். அமீர் அவ
ர்கள் பாகேதாத் யென்னும் தோட்டத்தை அடுத்தபொழுது என்ன
காண்கிறாரானல் மலிக்காவினுடைய மாளிகையின் புரமாய் நின்று
அநேக தீவர்த்திலாந்தர்கள் முதலாகிய பலவித வெளிச்சங்களை கரங்
களி லேந்தியவர்களாய் சில சிப்பாய்கள் உஷ்யார்! உஷ்யார்! ஜாக்
ரதை! ஜாக்ரதையென் றுரத்த சப்தத்துடனே போந்து சுற்றி
வருவதையும், அவர்களுடன் அநேக அர்க்காசென்னும் ஏவலா
ளர்களும் கூட்டங் கூட்டமாய் வருவதை யறிந்தார்கள். அவ்வேளை
யில் அத்தோட்டத்தின் ஓர் பாகத்திலே சிலமரங்கள் நெருக்மாய்
ஆடர்ந்திருக்கக்கண்டு அமீர் அவர்கள் தங்கள் சிநேகிதர்களுடனும்
மரத்தின் மறைவில் பதுங்கிக் கொண்டார்கள். அந்நகர் சோதனைக்
காரர்கள் யாவரும் அப்புறம் சென்றதின் பின் அமீர் அவர்கள் தங்
கள் நேயர்களோடு மலிக்காவினுடைய மாளிகையை அடுக்கச்செ
ன்று வளமைபோல் மச்சூலை காவலாய் நிறுத்திவிட்டு தாங்களும்

அமீர் ஹம்

[illegible]ன்வழியாய் உப்பரிகையிலேறி பார்க்கை
[illegible]னிகாரானவள் ஆடை ஆபரண அலங்கார
முடைகளைப்பிரயத்தனமாக சோடனைகளோடு அமீர் அவர்களின் வரு
கையை எதிர்நோக்கியவளாய் உட்கார்ந்துகொண்டு ஷர்பத்து வகை
கள்நிறைந்த பளிங்கு கூஜாக்கள் தபக்குகளில்நிறப்பி எதிரில்ப்ரப்பி
வைத்தும் அநேக பிரகாசம்பொருந்திய ஒளி விலங்கும் கர்ப்பூர
மெழுகுவத்திகளும் வால்ஷேட் குலோப்பு லஸ்டர்களும் டல பாகங்
களிலும் வெகு பிரகாசத்தோடு எரிந்துக் கொண்டிருக்கவும் மலிக்
காவினுடைய ஓர் பாகத்தில் தர்ராரே ஹுர் னென்னும் மக்பூல் வயா
தாருடைய மாஷுக் இருக்கவும் மற்றொரு பாகத்தில் தாயாதி
னுடைய புத்திரியாகிய பித்னு பானே வென்னும் உம்ரையாருடைய
பிரிய நாயகியும் இருக்கவும் இன்னும் இரகளியத்தை பறிந்த சில
தாதியர்கள் முன்பில் கரங்களில் பலவித வாத்தியக் கருவிகளை
ஏந்தியவர்களாய் ஆசைநாயகரின் வருகையை எதிர்நோக்கியவர்
களாய் உத்தரவை யெதிர் பார்த்து நின்று கொண்டிருந்தார்கள்.
மலிக்காவினுடைய தேகமானது அச்சமையின்கண் ஆபரணங்களா
தாலும் அவளுடைய நேத்திரங்களானது அமீர் அவர்களின் வரு
வை எதிர் சென்றழைக்க அவர் வரும்வீதியை நோக்கிச் சென்ற
தாய் சந்தோஷமாயிருந்தாள். அவ்வேளையில் மலிக்காவினுடைய
தாயினவள் மலிக்காவை நோக்கி அம்மா! இன்று அமீர் அவர்கள்
இங்குவருவது பஹாதூர்பம். அஃதேனெனில் அந்தர்தேசத்தின்
பென்பவன் நானூறு சுத்தவீரர்களுடனே நமது அரண்மனையைச்
சுற்றிலும் உருவியஆத்திரை உரையில்புகுத்தாமலும் கண் இமைமூடா
மலும் விழித்துக் காவல் புரிகின்றார்கள். நான்குபக்கங்களிலேயும்
சுற்றி சுற்றி உஷ்யார்! ஜாக்கிரதை! யென்ற சப்தத்தோடு நிரித்து
கொண்டே யிருக்கின்றார்கள் பென்றுரைத்தாள். அவ்வார்த்தையை
செவிமாந்திய மலிக்காவானவள் அத்தாயினைநோக்கி, என்னசொன்
னீர்கள் ஒருபோதும் நீங்கள் நினைக்கவேண்டாம். இக்காவல்தா
னென்ன! இதைவிட நமது பாதுஷாவினுடைய பௌஜ்கள் யெல்
லாம்வந்து இம்மாளிகையை சுற்றிலும் சர்க்கரையை மொய்த்த ஈக்
களைப்போல் சூழ்ந்து கொண்டிருந்தாலும் அமீர் அவர்கள் என்மீது
நிஜமாகவே உண்மையில் நேசம் வைத்திருப்பாராகில் இக்காவல்
களையெல்லாம் அறியாமல் ஒருநொடிப்பொழுதில் என்னிடம்வந்து
சேருவார். இன்னும் என்னுடைய மனமானது சாகஷிசொல்லுகின்

[illegible]து அவர் இதோ வெகு சீக்கிரத்தில் இங்[illegible] இருந்தா
சொல்லிக்கொண்டிருக்கின்றது யென்றுரைத்து [illegible]கும்
அவ்வார்த்தைகளை யெல்லாம் சாஹிப்கிரானவர் காதிலேகேட்டு
ழ்திக மனமகிழ்ச்சியுடையவராய் பூரிப்படைந்து படிக்கட்டின் வழி
யாய் கீழே இறங்கினர் அதையறிந்த ஷஹஜாதியானவள் தாயியை
நோக்கி தாயியே யான் புகன்றவைகளை தாங்கள் செவியுற்றிருந்தீர்
களன்றோ அஃதை திருஷ்டாந்தமாக இதோ கண்டுகொள்ளுங்கள்
அந்த சாஹிப்கிரானவர் இதோ வந்துவிட்டார். அவர் இவிடம்
வராதவரையில் அவர் மனம் எப்படி பொறுமையோடிருக்கும்
இதோ வந்துவிட்டா ரென்று மொழிந்தவளாய் யெழுந்து அமீர்
அவர்களின் கரங்களைப்பற்றிப் பிடித்து அழைத்துவந்து அதிக மரி
யாதையுடனே ஆசனத்திலிருத்தி, மிகவும் அன்பானவார்த்தைகளை
உரைத்தாள். உடனே ஷர்பத்துவகைகள் பரிமாற ஆரம்பித்தது,
ஒருவர்க்கொருவர் ஷர்பத்துகளைவாங்கி மாற்றி மாற்றி புகட்டிக்
கொண்டிருந்தார்கள். அமீர் அவர்கள் மலிக்காவினுடைய தோளின்
மீது கரத்தைபோட்டுக்கொண்டு ஒருவர்க்கொருவர் ஷர்பத்துகளை
குடித்துக்கொண்டிருந்தார்கள். இன்னும் உதட்டோடு உதடும் முகத்
தோடு முகமும் கண்ணோடுகண்ணும் மார்போடுமார்பும் சேர்த்த
ணைத்து கொஞ்சிக்குலாவிக்கொண்டு இருக்கும்போது உம்ருவானவர்
பாட ஆரம்பித்து தானென்னும் வர்ணிப்புக் கவிகள் அடிக்கடி உற்ப
பத்தி செய்து பாடிக்கொண்டிருந்தார். அவருடைய அதிவுல்லாச
மான கிமிஷக்கவிகளை செவியுற்றிருந்த மலிக்காவானவள் உம்ருவு
டைய வாக்குச் சாதுர்ய நவீன கவிகளுக்காக மனமகிழ்ந்தவளாய்
சந்தோஷமுற்று பூரிப்புடையவளாய் அவரைநோக்கி சொல்லத்
தொடங்கினள். ஹே!உம்ருஜயார்கஞ்ஜர்குஜார்ஆனவர்களே இவ்விடத்
திலிருக்கும் மாஷுக்காக்களாகிய பெண்களில் யார்மீதாவது மோகக்கி
கையுண்டா யிருக்கின்றதா? யென்றுகேட்டாள். அதையறிந்த உம்ரு
ஆனவர் மலிக்காவே யான் என்னுடைய வாயை கூசாமல் திறந்து
தங்கள் சமுகத்தில் எப்படியுரைப்பேன். யாஞ்சைப்பட்ட நாயகி
யானவர்கள் தங்களுக்கதிகபட்சமுடைய பிரியமானதோஸ்தென்னும்
முகப்பத்தையுடையவளாய் தங்களருகில் இருக்கின்றார்கள். இன்னும்
இந்தமாளிகையி லுள்ளவர்களுக்கெல்லாம் சர்தாராயும் இருக்கின்ற
படியால் இந்த மிஸ்கீனைபோய் நீனைத்து பேசமாட்டார்கள். இன்
னும் என்னை தூஷிக்க ஆரம்பிப்பார்கள் யென்றுரைத்தார். அதை

யையெரிய உருகி, கலங்கிநிற்கும் உம்மை நோக்கி ஹஜரத் ஆனவர்களே! தாங்கள் சற்றும் பீதிக கிஞ்சித்தும் அஞ்சவேண்டாம். தங்களுக்கு எம்மானின்மீது காதலற்றிருக்கின்றதோ அவர்களின் மடியின்மீது போய் கூசாமல் உட்காருங்கள் யாதொரு சங்கூச்சமில்லாமல். உயிரோடு உயிர் சேர்வதுபோல் கட்டியணைத்துக்கொள்ளுங்கள் என்று உரைத்தாள். அவ்வார்த்தை மலிக்காவினுடைய வாயில்நின்றும் பிறந்தவுடனே குதூகலிப்புடையவர்களாய் குதித்தெழுந்து மாஷூக்கினுடைய மடியிற்போய் உட்கார்ந்து, தன்னுடைய இஷ்டநாயகியாகிய தர்ராரே கூப்பானென்னும் இதரமமணிந்த சுந்தரியை உற்று நோக்கிக்கொண்டிருந்தார். அவ்வேளையில் பித்தூபாளேவென்பவள் உம்ருவை வாயில்வராத தூஷணைப்பாய் தூஷித்தவளாய் முகங்கண் சுளித்து எழுந்து நின்றாள். அதைகவனித்த மலிக்காவானவள் உம்ருவை நோக்கி காஜாவே தங்களை அம்மாதென்ன வசைவார்த்தை யுரைக்கின்றாளா? என்னசொல்லுங்களென்று கேட்டாள். அதைத்தடுத்த உம்ருவானவர் மலிக்காவை நோக்கி சஹஜாதியே சொல்வதென்ன இருக்கின்றது சும்மா தமாஷாய் விளையாடிப்பாட்டல்கள் பாடிக்கொண்டிருக்கின்றார்களே தவிற வேறொன்றுமில்லை மனதிலுள்ளே சந்தோஷம் எவ்வளவு இருக்கின்றதோ அவர்களின் மனதிற்கே தான் தெரியும் வெளிக்கு ஒன்றுமறியாத பாவனையைப்போல நடிக்கின்றார்கள் என்றுரைத்தார். இவ்வார்த்தையையுணர்ந்த மலிக்காவானவள் சிரித்தசிரிப்பினால் வெகுநேரம் வயற்றைப்பிடித்துக்கொண்டு அப்பப்பாவென் னுபாதைப்படும்படியானவிதமாய் சிரித்து சொல்லுகின்றாள். காஜாவே அவள்சொன்ன வார்த்தைகளில் எந்த வார்த்தை தங்களுடைய மனதிற்கு சந்தோஷத்தை யுண்டுபண்ணியது என்று கேட்டாள் அதற்கு உம்ருவானவர் அம்மா! எனக்கு எந்த சொல்லின் மீதும் ஆசையுண்டாகவில்லை இப்பெண்ணின்மீது அணிந்திருக்கும் விலையுயர்ந்த ஏராளமான ஆபரணாதிகளை பார்த்து யான் சந்தோஷமடைந்தேன் என்றுரைத்தார். இவ்வார்த்தையையும் கேட்ட மலிக்கா இரண்டாந்தடவையும் அளவுக்கு மிஞ்சிய சிரிப்பாய் அம்மஜ்லீலி லுள்ளவர்கள் யாவரும்கூடச் சிரிக்க நகைத்தாள். அப்பொழுது அந்த தர்ராரேகூப்பா னென்னும் பித்தூபாளேவானவள் அதிக கோபமுற்றாள், அதையறிந்த மலிக்காவானவள் அவளைநோக்கி பித்தூபாளேவே நீயென்ன கொஞ்சமும் அஞ்சில்லாத சுபாவமுடையவளாய் வெடுவெடுத்துக் கடகடத்துநிற்கின்றாய் அவ் வும்ருவை நீயா

ரென்று நினைத்தாய் அவராகிறவர் இரண்டு ஜாதி ஐயார்களுக்கும் வேடிக்கை விளைத்து செய்கிறவரும் குருவாயிருக்கும் அவருடைய மாஷூக் ஆனவள் என்னுடைய இஜ்ஜத்திலும் கவரவத்திலும் குறைவானவளல்ல இவரைக்காண சிறந்தவரும் உனக்கு தச்சவரும் இவ்வுலகத்தில் உன்னுடையசரிநிணை வேறொருவரும் கிடைக்கமாட்டார்கள் என்றுரைத்தாள்.

இவ்விதம்பேசி முடிந்தவுடனே அமீர் அவர்கள் மலிக்காவினிடத்தில் இஸ்லாமாகி ஈமான்கொள்வதற்காக வேண்டிய வாக்குதத்தம் செய்யச்சொல்லி உறுதிமொழிவாங்கி மலிக்காவுக்கு கலிமாச் சொல்லிகொடுத்து இஸ்லாத்திலாக்கினர். மலிக்கா மேஹரூன் நிகாரானவர்கள் ஈமான்கொண்டு இஸ்லாமாகி அமீர் அவர்களை நோக்கி சொல்லத் துடங்கியதாவதுயாதெனில் அமீரே! யான் இத்துனியாவில் எக்காலம்வரையில் ஹயாத்தோடு இருக்கின்றேனோ அக்காலமெல்லாம் தங்களுடைய ஊழியங்காரியாய் உத்தரவை மீறாமல் நடந்துவருவேன் என்றுரைத்தார்கள் அதையுணர்ந்த அமீர் அவர்களும் மலிக்காவை நோக்கி சொல்லுகின்றார்கள். யானும் தங்களை அதுவரையில் நிக்காகு வென்னும் விவாகம் செய்யாம லிருக்கின்றேனே அதுவரையில் யாதொரு பெண்ணையும் கண்ணெடுத்து பார்க்கவேமாட்டேன் என்றுரைத்தார். இவ்விதம் எக்ரா ரென்னும் உறுதிமொழிவாக்கியங்கள் நடந்துகொண்டிருக்கும்வேளையில் சூரியன் வருகின்றானென்று எச்சரிக்கை செய்வதற்கு முன்னி தூதன்வருவ [illegible] சட்டியைக்குடி கெடுத்தானென்று" ஜகத்தோர்வழங்கிவரும் சுபஹூக்காதாராவாகிய நகூத்திரம்உதித்துவிட்டது அதையறிந்த அமீர் அவர்கள் மலிக்காவினிடத்தில் உத்தரவுபெற்றுக்கொண்டு உம்ரு உடனே மாளிகைவிட்டும் கீழே இறங்கி மர்ளிகையை நோக்கி செல்வதாயினார். அவ்வேளையில் அந்தர்தேக்ஜன் என்பவனால் நேமிக்கப்பட்ட சில காவலாளிகள் அமீர் அவர்களைக்கண்டு கள்ளன் கள்ளனென்று துரத்திக்கொண்டு ஓடினார்கள். அதை அறிந்த அமீர் அவர்கள் வாளையுருவி சரத்தில் பிடித்து அவ்விடம்விட்டொருங்கிய சிப்பாய்களில் பத்து பதினைந்து பேர்களை வெட்டி நரகம் குடிப்புகுத்தி வைத்துவிட்டு தங்கள் தமது கூடாரம்போய்ச் சேர்ந்தார்கள். பொழுது விடிந்து சூரியனுதயமாகி எங்கும் வெளிச்ச முண்டாகி விடிவேளையானது. அவ்

பை, உருகி, தனிகிடை இறந்து கிடப்பவர்கள் யாவரும் தன்னு டைய சிப்பாய்களே தவிற வேறொருவரு மில்லாதிருக்கக் கண்டு இஃதென்ன புதுமையாயிருக்கிறதேயென்று ஒன்றும்சொல்லவழிய றவனுப் பாதுஷாவினிடத்தில் போய் அன்றிரவில் நடந்த விஷய ங்கள் யாவையும்மொழிந்தான். அதைக்கேட்டதினம் சாஹிப்கிரானுனவர் வளமைபோல் பாதுஷாவினுடைய தர்பாரில் போய்ச்சேர்ந்தார். அவ ரைக்கண்ட பாதுஷா வானவன் அமீர் அவர்களைநோக்கி ஐ! அபுல் உலாவே! இன்றிரவு நடந்திருக்குவிஷயங்களை கேள்வியுற்றீர்களா? யான் நம்முடைய மாளிகையின்கண் திருடர்கள் புறவம் காணப்படு கிறதென்று கேள்வியுற்று அந்தர்தேஜுன் பென்பவனெடு சரணாறு சுத்தவீரர்களை சேர்த்து காவல் புரியும்படி அனுப்பினேன். அவர்க ளும் பென்னுடைய உத்திரவின்படியே காவல் புரிந்திருக்கையில் இவ்விரவின் கடைசிபொழுதில் பத்தப்பதினைந்து சிப்பாய்கள் மாத் திரம் வெட்டுண்டிறந்து கிடக்கின்றார்களே. தவிற திருடனுடைய அடையாளமே காணப்படவில்லை யென்றுரைத்தோடு, இன்னும் சொல்லுகிறான். ஐ! சாஹிப்கரான்! தங்களுக்கு தக்லீப் யெண்ணும் வருத்தம் கொடுக்கக்கூடாதென்ற யெண்ணம் எனக்கிருக்கின்றது. அது இல்லாதவரையில் தங்களுடைய சிப்பாய்கள் காவல் புரிவதி லும் திருடனை அதிசிக்கிரம் கண்டு பிடிப்பதிலும் மிகவும் நல்ல சா தூர்யருடைய வீரவான்களாகிய பில்வான்களாக விருக்கும் அவர் களை நேமக்கச் செய்யலாம், தங்களுடைய தக்லீப் ஒன்றையோசித்து சும்மா யிருக்கினறேன், என்றுரைத்தான், அவ்வார்த்தையையுணர் ந்த அமீர் அவர்கள் பாதுஷாவைநோக்கி ஐ! ஜஹாம்பனுவாகிய பாது ஷாவே யான் தங்களுடைய அடிமையாருக்கும் தங்களுடைய எவ் விதமானஉத்திரவையும்சிரம்வணங்கி அங்கிகரிக்கப்பட்டவனுய் அவ லோடு எதிர்நோக்கி இருக்கின்றவனுனபடியால் இம்மிஸ்கீனுக்கு எவ் விதமான வேலையை ஊக்யாபித்தாலும் இதோசெய்ய தயாராய்இருக் கின்றேன் யென்றுரைத்தார். அதையுணர்ந்த பனிதர்கள் யாவரும் ஒருவர்க்கொருவர் பேசிக்கொள்பவ ராயினர்கள், அதெயாதெனில் பாதுஷாவானவர் மிகவும் நன்றுய்த்தெளிந்து அமீர் அவர்களை மாளி கைக்கு காவல் புரியும்படி நேமித்தார். நல்ல யோசனை செய்தார், அமீர் அவர்களின் நாமத்தைகேட்ட சாஸானியர்களும் கூட அவ்வர ண்மனையிற் காற்று வீசும் தூலிலிலும்கூட செல்ல பயப்படுவார்க

ளானுல் திருடர்க ளெங்கே வரப்போகி ஜித்த பத்விகளானுலும், துருக்கிகளானுலும், அமீர் அவர் கேட்டவுடனே காதகாதவழிதூரம் ஓடிச்செல்வார்கள் யென்று பேசிக்கொள்பவர்களாயிருந்தார்கள். ஆனல் ஹம்ஜாதனுகிய பஹ்ந் தக் கென்பவன் மாத்திரம் தன் மனதில் தனக்குத்தானே சொல்லிக் கொள்ளுகிறதாவது யாதெனில் பாதுஷாவானவர் ஆட்டுக்கிடைக்கு புலியையும், பால்பானைக்கு பூனையையும், கினிக்குஞ்சிற்குபருந்தையும் காவல் வைத்ததுபோல் ஹம்ஜாவை அரண்மனைக்குக். காவலாய் நேமித்தார் யோசனைசெய்தாலும் நல்ல யோசனைசெய்தார் தெளிந்து இவ்விதயோசனை தான் செய்யவேண்டும் யார்சொல்வார்கள். பாது ஷா! அவர்கள் வைத்ததேசட்டம்யென்று பலவாறு பையித்தியம்பிடி த்தவனைப்போல் தனக்குத்தானே புலம்பிக்கொண்டிருந்தான். பின்பு தர்பார்களிலிருந்து அவரவர்கள் தத்தம் இருப்பிடம் சென்றார்கள் அமீர் அவர்களும் அதிகசந்தோஷமுற்றவராய் தேடாமல் சஞ்சீவி தெரு டையில் கிடைத்தது யென்பதற்கொப்பாய் நம்முடைய விஷயத் திற்கு உதவியாதனே பாதுஷா! நமக்கு காவல்வேலையை நேமித்தா ரென்ற யெண்ணத்துடனே தங்கள் கூடாரம்போய் சேர்ந்து, தங்க ளுடைய சிப்பாய்களினிலும் நல்ல வீரர்களாகவும் சமர்த்திய முடையவர்களாகவும் இருநூறு வீரர்களை அழைத்து அவர்களுக் கெல்லாம் மத்பூ லென்பவனை சர்தாராக்கி மலிக்காவினுடைய மாளி கையைச் சுற்றிலும் காவல்புரிந்திருக்கும்படி நேமித்தனுப்பிவிட்டு, அன்று பொழுது அஸ்தமித்த இரவானவுடனே உம்ரு அவர்களை கூட அழைத்துக்கொண்டு வளமைபோல் பதீம்மாவினுடைய மாளி கைக்குட்சென்று மலிக்காவினிடம் போய் அவ்விரவெல்லாம் உம்ரு அவர்களின் அதிமதிப்சி பொருந்திய வினேத கஜல்களினுலும் ஷர்பத்து குடிப்பதினுலும் போக்கிக்கொண் டிருந்தார். பொழுது விடிந்தவுடனே வீட்டைபோல் தங்கள் கூடார மிருக்கும் தல்ஷாத் காம் யென்னும் ஜாகையிற்போய் சேர்ந்தார்கள். இப்பொழுது அமீர் அவர்களுக்கு யாதொரு மன் ஐயுறவு கிஞ்சித்தும் இல்லாதவ ரானபடியால் இரவெல்லாம் மலிக்காவினுடே யாதொரு அச்சமின் றியே விளையாடிக்கொண்டு காலங்கழிப்பவராயினர். மறுநாள் உத யத்திலெழுந்து வளமைபோல் பாதுஷாவினுடைய தர்பாரிற்சென்று பாதுஷாவைநோக்கி ஜஹாம்பனு இன்றிரவெல்லாம் காவல்புரிந்து சோர்ந்துசுற்றி கார்த்து வந்ததில் திருடனென்னும் வாசனையே கண

தின் பையிலிருந்து, தன்னிகரற்ற பாதுஷாவே! மெய்யுரைத்தீர்கள். திருடனைப்பிடி வருவான் தங்களுடைய பெயரை கேட்டமாத்திரத்தில் எவ்வித வன்னெஞ்சர்களும் வர அஞ்சி நடுங்குவார்கள். அப்படி வரவேணுமென்று ஒரு வேளை நினைத்தாலும் அவனுடைய பயத்தினால் ஹிர்தயம்வெடித்து, அங்கனமே மாண்டுவிடுவான் என்றுரைத்து விலையுயர்ந்த அநேகவித கில்அத் யென்னும் இனும்கொடுத்தான். இன்னும் அமீர் அவர்களை வெகுவாய் மெச்சி சந்தோஷப்படுத்தினான். அதையறிந்த பஸ்தத்க் கென்பவன் மனம்நொந்தவனாய் பாதுஷாவைநோக்கி பாதுஷாவே! இன்று அரண்மனையை காவல்புரிய நம்முடைய சுத்தவீரர்களில் யெல்லாம் அதிக பெயர்போன காஸ்வானிகளாகிய உள்ள காரன் தேவ்பந்த் யென்பவனை நீயுயங்கள் அவன்வீரத்தினும் ஜாக்கிரதையினும் பலத்தினும் மிகவும் தேர்ந்தவன். அதிஜாக்கிரதையாய் காவல் புரிவான். யென்றுரைத்தான். அதையுணர்ந்த பாதுஷா! பஸ்தத்க் உடைய சொல்லும் சரிதானென்று ஒப்புக்கொண்டு அவ்விதமே காரன்தேவ்பந்த் யென்பவனுக்கு காவல்புரியும் வேலையை ஒப்புக்கொடுத்தான். உடனே பஸ்தத்க்கென்பவன் அந்த காரன்தேவ்பந்த் யென்பவனைநோக்கி ஹே! கான்யென்னும் பயில்வானே நீயோ தேவ்பந்த் உடைய வம்சத்தில் பிறந்தவனாய் அதிவீரப்படைத்து பெயரெடுத்திருக்கின்றாய். இப்பொழுது பாதுஷாவினுடைய் உத்தரவிற்கு நீ புரியும் காவலானது எவ்விதமிருக்கவேணுமென்றால் அதிக உஷாராயும் சுறுசுறுப்பாயும் ஏற்றுக்கொண்ட வேலையில் ஊக்கமாயும் இருந்து அவ்வேலைப் நன்றாய் சாதித்து பெயரெடுக்க வேண்டும் யாராவது உன்முன்பில்வாக் காண்பாயாகில் அவர்களை உடனே கையோடு பிடித்து கைதுசெய்யவேண்டும் வாளினால் அவன் யுத்தம்செய்ய எதிர்த்தால் நீயும் வாளைக்கொண்டு யுத்தம்செய்து ஜெயித்து வெல்ல வேண்டும். கபர்தார்! தேவாளுலும் சரி! நீ! அஞ்சக்கூடாது யென்றுரைத்தான். அவ்வார்த்தையைக் கேட்ட காரன் யென்பவன் வஜீரே! நீர் நன்றாய் யுணர்ந்துகொள்ளும் யானெடுத்த வேலையை ஒருபோதும் ஏதோரவிடமாட்டேன். பாதுஷாவின் சமுகத்தில் தங்களுடைய பெயருக்கு கீர்த்திகொண்டு வருவேனேயொழிய அபகீர்த்திகொண்டு வரமாட்டேன் யென்றுரைத்தான். பின்பு தர்பார் கலைந்தது. அமீர் அவர்களும் தங்களிருப்பிடம் போய்ச்சேர்ந்தார்கள். தங்களுடைய நேசர்களும் தோஸ்துகளும் கூடவே இருந்தார்கள் அவ்.

வேளையில் காரன்தேவ்பந்த் யென்பவன் தன் நல்ல சுத்த வீரர்களாய் மூன்றூறுபேர்களை தெரிந்தெடுத்து மூன்றூறு பேர்களுடன் தானும்சென்று அன்றிரவு மாளிகையை சேர்ந்து சுற்றி காவல்புரிகின்றவர்களாய் இருந்தார்கள். அதையறிந்த மலிக்கா தன்னுடைய பால்குடிதாயியை நோக்கி இன்று காரன் தேவ்பந்த் யென்பவன் காவலாய் இருக்கின்றான் அவன் மிகவும் கொடிய வன் வளமைபோல் அமீர் அவர்கள் இன்றும் இவிடம் சட்டாயம் வருவார்கள். அப்பொழுதிக் கொடியோனுடைய காவலினால் யாதும் தீங்குற வழியில்லாவிடினும் இன்னார்தான் இவ்விடம்வந்தாரென்று பிரஸ்தாபமாகி அவருக்கும் நமக்கும் இழிவானசொல்லிற் கிடமுண்டாகிவிடும். ஆகையால் யாராகிலும் அமீர் அவர்களிடம்போக தகுதியுடையவர்கள் இருந்தால் அவர்களிடம் சொல்லியனுப்பி அமீர் அவர்களை இன்று இங்கு வரவேண்டாமென்று நிறுத்திவிடலாம் யென்றுரைத்தாள். அதை கேட்டுக்கொண்டிருந்த தாயா ஆனவள் சொல்லுகின்றாள் மல்லிக்காவே நீங்களென்ன கனவு கண்டதுபோல் பேசுகின்றீர்கள் இந்த காரன் யென்பவனல்ல .இவனைப்போல் ஆயிரம் மடங்கு அதிகவீரம்படைத்த பயில்வானுயினும் அமீர் அவர்கள் அஞ்சிவராமல் நின்றுவிடமாட்டார்கள். அவருக்கும்நம்மைப்போல் இஜ்ஜத், ஆபுருவாகிய மானமரியாதை யுடைய யெண்ணம் இருக்கின்றதை யொழிய இல்லாமற்போகவில்லை அவர்களாகவே ஒரு வேளை மானத்தையெண்ணி வராமல் நின்றுவிடவும் கூடும் யென்றுரைத்தாள்.

இம்மாதிவ்வாறிருக்க அமீர் அவர்களின் செய்தியை சொல்லுகின்றேன் கேளுங்கள் யாதெனில் அன்றிரவு முற்பாதி கழிந்தபின் அமீர் அவர்கள் வேலையாளரைநோக்கி இரவில் தூணும் உடைகளை யெடுத்துவரும்படி ஆஞ்ஞாபித்தார். அதைக்கண்டு உம்ரு உடனே பரபரத்து யெழுந்து அமீர் அவர்களைநோக்கி ஐ! ஹம்ஜாவே தாங்களென்ன பித்தம்பிடித்து போனீர்களா? ஓரிரவிற்காவது மாஷூக்கை காணுமலிருந்தால் நிசு வெடித்துவிடுமோ? அவ்வளவு சபரென்னும் பொறுமை செய்யாதவர்கள் யெந்தக்காரியத்தில் பொறுமையோடிருக்கபோகின்றார்கள் யென்றுரைத்தார் உம்ரு உடைய சொற்களை செவிமாத்திய அமீர் அவர்கள் அவரைநோக்கி சொல்வதாவது உம்ரே நீரென்ன நினைத்திருக்கின்றீர் இஷ்க்குடைய கோலமாகிறது எவ்வித

யை நீ உருகி, னிந்தாய் பார்த்து கருத்தால் மதிக்காது யென்பதை அதிலும் ஆயிரம்மடங்கு அதிகமாகிய என்னுடைய இஷ்கிற்கு எவ்வித ஆனுவமும் அச்சந்தீருதலும் மதியாமையும் எனக்குண்டா யிருக்குமென்பதை நீர் சற்று உம்முடைய சருத்தில் உன்னியோசித்து தெளிந்து ஹுஷ்யாராகி கண்ணை விழித்து பாரும் என்னை வழிமறிப்பவன் இவ்வுலகத்தில்ஒருவன்இருக்கின்றனு என்றார். அதற்கு உம்ரு அமீரை நோக்கி அமீரே காரான்தேவ்பந்த் என்பவன்மிகவும் முறடனுயிருக்கின்றன் தாங்கள். இவ்விரவில்போவது யுக்தமாகக் காணப்படவில்லை யென்றுரைத்தார். அவ்வார்த்தையை யுணர்ந்த அமீர் உம்ருவை நோக்கி உம்மே இஷ்க்கென்பதற்கும் சபர்யென்பதற்கு மிடையே பகையுண்டா யிருக்கின்றது இந்தவேளை இஷ்க்கென்னும் அக்கினியானது பற்றியெரிந்து கொண்டிருக்கின்றது. இவ்வேளையில் சபரென்னும் குளிர்ச்சி கிட்டே யணுகுமா? அணுகாது யான்செல்லும் வழியில் குறுக்கே வனுவது அணுக அவனுக்கு அப்பேர்ப்பட்ட பலத்த ஹிர்தயம் உண்டாகி இருக்கின்றதா ஒருவனும் அப்பேர்ப்பட்டவன் இருப்பான் யென்று யான் அறவே நினைக்கவில்லை யென்றுரைத்தார். அதையுணர்ந்த உம்ரு சொல்லுகிறார். காரன்தேவ்பந்து எப்பேர்ப்பட்டவனுனுல் சமயத்தில் பதுங்கி தங்களுடன் எதிர்த்து கிற்கமாட்டானென்று ஒருபோதும் தாங்கள் நினைக்கவேண்டாயென்றார். அதற்குஅமீர் உம்ரே யான்அந்த காரன்தேவ் பந்துயென்பவனுக்குப் பயந்தவனுகில் இஷ்க்யென்னும் ஆசையைமுற்றும் கூவனித்தணைத்தாப் போல்தான் என்னைப்போல் பேடியும் பலமற்றவனும் இவ்வுலகத்தில் ஒருவரு மிருக்கமாட்டார்கள் என்றேதியவராய் இராக்காலங்களில் அணியும் பிரயாண உடைகளையெடுத்தணிந்து மலிக்காவினுடைய அரண்மனையை நோக்கிநடந்தார். அதைக்கண்ட உம்ரு மக்பூல் இருவரும் கூடவே நடந்தார்கள். மாளிகையை அடுக்கச்சென்று பார்க்கையில் கிலவீரர்கள், லாந்தர், தீவட்டி முதலாகிய வெளிச்சங்கள் கொளுத்தி காத்தில் பிடித்தவர்களாய்க்கூடி பக்கியாய் மாளிகைச் சுற்றிசுற்றி திரிந்துகொண்டு இருக்கின்றார்கள். அவ்வேளையில் அமீர் அவர்கள் தோட்டத்திற்குள் நுழைந்து பார்க்கையில் காரன் பென்பவன் ஒரிடத்தில் காற்காலியின் மீது உட்கார்ந்தவனுய் சிப்பாய்களை நோக்கி ஹுஷ்யார்! ஹுஷ்யார்!! யென்று சப்தமிட்டு தாக்கீது செய்து கொண்டிருக்கின்றன். மக்பூலானவர் அமீரை நோக்கி காயசமேஉத்திரவு கொடுங்

கள் யென்னுடைய வில்லைவளைத்து காரை [illegible] விடுகிறேன் அவ் ஓரம்பினுலேயே அல்லா சுபஹான ஹுவதாலாவினுடைய உதவியைக் கொண்டும் அவன் அந்த காற்காலியை விட்டும் எழும்பாமல் அந்தாற்காலியோடு காற்காலியாய் சாத்திவிடுகிறேன் யென்றுரைத்தார் அவ்வார்த்தையைக் கேட்ட அமீர் மக்பூலை நோக்கி மக்பூலே! யார்யையாவது உயிர்வதை செய்வதனு லெனக்காவ தொன்றுமில்லை அவனப்படியே உட்கார்ந்திருக்க விட்டுவிடும். அவன் வேலையில் அதிக ஜாக்கிரதை யுடையவனு யிருக்கின்றன். யென்னுடைய காரியத்தில் குறுக்கிடுபவனை யான் பார்த்துக்கொள்வேனென்றுரைத்தவராய், ஒருவருமறியாதவிதமாய்மறைந்து, மறைந்து மாளிகையின் சுவற்றி னடிவாரத்திற்போய்ச் சேர்ந்து, வளைமைபோல் மக்பூலை வெளியில் நிறுத்திவிட்டு அமீர் அவர்களும் உம்ருவும் கமன் யென்ற சொல்லப்படும், சூசூபக் கயிற்றை சுவற்றி லெறிந்து அதைப் பிடித்துக்கொண்டே உப்பரிக்கையின்மீதேறி மலிக்காவைக் கண்டு மனம்பூரித்தவராய் ஓடோடியும் சென்று கட்டித் தழுவிக் கொண்டார். பின்பு, அவ்விரவெல்லாம் ஆடல் பாடல் முதலாகிய இன்பமான சுகத்தில் மூழ்கியவரா யிருந்தார்கள். அவ்வேளையில் பொழுதுபயமாகும் வேலையாய்விட்டபடியால் அமீர் அவர்கள் மலிக்காவினிடத்தில் உத்திரவுபெற்றுக்கொண்டு மாளிகை விட்டெழுந்து சூசூபக் கயிற்றைவிட்டு அதன் வழியே மூந்தி உம்ரு இறங்கினர். அதன்பின் அமீர் அவர்கள் இறங்கிக்கொண்டிருக்கும்வேளையில் காரன் என்பவன் அமீர் அவர்களிரங்குவதை யறிந்து திருடன் யகப்பட்டுக் கொண்டான் என்ற சப்தத்தோடுங் கிட்டேநெருங்கிவந்த வரத்திலே யேவாளையோங்கி அமீர் அவர்களைவெட்டினன் அவ்வெட்டானது அமீர் அவர்கள் தங்கள்மேலே படாமல் கலையைக்குனித்தபடியால் தலைக்கு மேலே சுவற்றில் தொங்கிக்கொண்டிருந்த சூசூபக்கயற்றில் பட்டு அக்கயறுனது வெட்டுண்டு அமீர் அவர்கள் கீழே விழுந்தார்கள். அப்படிவிழுந்த அமீர் அவர்கள் சிரசில் கல்மோதி காயமாகி இரத்தம் ஓட ஆரம்பித்தது. மூந்தி இறங்கிய உம்ரும் எற்கெனவேநின்றுகொண்டிருந்த மக்பூலும் சற்றுதூரத்தில் விலகிநின்று பார்த்துக்கொண்டிருந்தவர்களானபடியால் காவல்வீரர்கள் வந்து வெட்டியதையும் அமீர் அவர்கள் கயறறுந்துகீழேவிழுந்ததையும் கண்டு உடந் கள்ளனுலும் மக்பூல் அம்பினுலும் எய்தும் எறிந்தும் தாக்கினர்கள். அத்தாக்குதலை சகிக்கமுடியாமல் சிப்பாய்கள் யாவரும் அமீர் அவர்களைவிட்டும்

தின்

யை கிட்டருகி, னிந்தாரகேள். அமீர் அவர்களும்யெழுந்து மக்பூல் டமரு முள்ளவர்களுங்கள் கூடாரம்போய்ச் சேர்ந்து அதிக மனவருத்தத்தோடும்யாது செய்கின்றது காரியம் வெளியாகிவிட்டதே கரான் யென்பவன் பாதுஷாவினிடத்தில் போய் அறிக்கை செய்யாம லீருக்கமாட்டான். அப்படி சொன்னவுடனே நம்முடைய கவுரவத்திற்க்கும் மரியாதைக்கும் குறைவு வந்துவிடுமல்லவாவென் றேர்பக்கமும் தங்களுக் கடிபட்டிருக்கும் காயத்தின்வேதனை யொருபக்கமும் அமீர் அவர்களின் மனதை அதிக கவலை உண்டாக்கியபடியால் மிகவும் விசனமுற்றவராய் வருத்தத்தோடும் சிந்தித்துக்கொண்டிருந்து துயிலும்வேளையில் நபி இபுறுகீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அமீர் அவர்களிடம் வந்து அவர்களை நோக்கி அயே! ஐத்தியானவரே! உம்முடைய காயமெல்லாம் சவுக்கியமாய்விட்டது. தெளஷேரவான் தங்களை அழைப்பான் நீங்கள் யாதொன்றுக்கும் யோசிக்காமல் அச்சந் தீர்ந்தவராய் போங்களென்று சொல்லிவிட்டுபோய்விட்டார்கள்

இப்படிவ்விதமிருக்க கரான் யென்பவன் தோட்டத்தில் அமீர் அவர்களைக்கண்டு சாதிப்காரானென்றறிந்து உடனே ஓடோடியும் சென்று தெளஷேரவானிடத்திற் போய் நடந்தவைகளனைத்தையும் சொல்லி முறையிட்டான். அதையதிக்கம் புஜுருச்மெஹரானவர் பாதுஷாவை நோக்கி பாதுஷாவே! காரன்தேவ்பந்த் யென்பவன் சொல்லுதெல்லாம் சுத்தப் பொய்யா யிருக்கும் ஹம்ஜாவானவர் மிகவும் கவுரவமுடைய கண்ணியபுருஷன் பெரியவம்சத்தில் உள்ளவர் இவ்விதம் அற்பவிஷயங்களை ஏற்பட்டு பிரவேசிக்கமாட்டார்யென்றுரைத்தார். அவ்வார்த்தையைக் கேட்ட காரன்தேவ் பந்து யென்பவன் பாதுஷாவை நோக்கி, எங்களிறையே! யான் சொல்வது பொய்யாக இருக்குமென்று தங்கள் மனதிற்குச் சந்தேகமிருக்குமாகில் இதோ அந்த ஹம்ஜா இறங்கிய் கமன்யென்னும் கூடையக்கயறு இருக்கின்றது, அதில் அவருடைய பெயரும் வரைந்திருக்கின்றது பாருங்கள், ஏன்றித்தோடு அவர் இறங்கும்பொழுது யான்வெட்டினபடியால் இக்கயற்றில் வெட்டுப்பட்டு அவர் கீழேவிழுந்ததனால் நிசில் கல்மோதி காயப்பட்டிருக்கின்றது இக்கயிற்றைப்பாருங்கள் யான் வெட்டிய வெட்டினால் வாள்பட்டறுந்திருக்கின்றது, அவரை யழைத்துபாருங்கள் காயமும் தெரியும்யென்றான் அதைகேட்டுணர்ந்த புஜுருச்மெஹரானவர் பாதுஷாவை நோக்கி

இந்த கமன் ஆகிறது. அவருடையதல்ல பவன் அவர்மீது பொறுமையுடையவனுய் பொய் அந்த ஹம்ஜாவினுடைய பெயரும் அதில் ஏற்பாடுசெய்துகொண்டு வந்திருக்கின்றன். கர்ய மிருப்பதாய் சொல்கின்றபடியால் அந்த ஹம்ஜாவை வரவழைத்து, பார்வையிட்டால் அதுவுந் தெரிந்துவிடுமென்றுரைத்தார். உடனே பாதுஷா ஏவலாளரைவிளித்து அமீர் அவர்களை அழைத்துவரும்படி ஆக்ஞாபித்தான்! அதுபோல் அர்க்காரென்னும் சிப்பாய்கள் அமீர் அவர்களிடம் சென்று பாதுஷா அழைத்துவரச் சொன்னதென்று அழைத்தார்கள். உடனே அமீர் அவர்கள் பாதுஷாவினுடைய சமுகத்தில்வந்து ஆஜராஞர்கள். அவரை பாதுஷாவானவன் பார்த்து அவர் சிரசில் யாதொரு காயமும், காயத்தின்வடிவும் அதின் அடையாளமுதலாகிய யாதொன்றுமில்லாமலிருக்கக்கண்டு புஜுருச்மெஹர் சொல்லியது யாவும் மிகவும் சரியான வார்த்தையென்றுணர்ந்தவனுய் இந்த காருன் தேவ்பந்த் யென்பவன் சொல்வதெல்லாம் கட்டுவார்த்தையென்று தீர்மானித்து ஏடா! காரன் தென்பவனே! பொய்நிறைந்த பித்தக் காரனுகிய பசாதவிகீர்ப்பவனே நீ யென்முன்னே நில்லாதே ஓடிப்போய் விட்டாயென்று தூத்திவிட்டே, அமீர் அவர்களுக்கு அநேக வெகுமதி கொடுத்து, அனுப்பிவிட்டு இரண்டொரு தினங்கள் சென்றபின் பஹிராம் கீர்தகாக்கானேசீன் யென்பவருக்கு உற்றிருந்த வெட்டின் காயம் ஆறி சவுக்கியமடைந்து, இருந்தபடியால் தலைக்கு ஜலம் விட்டு, ஏழை எளியோர்களுக்கும் பக்கீர் பிக்காரார்த்தருக்கும் அன்னதானம் சொர்னதானம் வஸ்திரதானம் முதலாகியவைகளை சத்காக் கொடுத்து விட்டு வெளியேவந்தார். பின்பு ஒவ்வொருநாளும் அமீர் அவர்களுடனே பாதுஷாவினுடைய அரண்மனைக்கு சென்று தர்பாரில் ஆஜராய் கொண்டுவந்தார். இப்படியிருக்கும் நாட்களில் ஓர்நாள் தர்பாரில் அமீர் பஹிராம், உம்ரு, மக்பூல், ஆகிய மற்றசபையோர்கள் யாவரும் பாதுஷாவின் முன்பில் சூழ்ந்திருக்கும் வேளையில் காஜா புஜுருச்மெஹரானவர் யெழுந்து மரியாதையுடனே பாதுஷாவை நோக்கி ஹஜ்ரத் ஜில்லேசுபஹானி கலிபத்துற்றகுமானி ஆகிய பாதுஷாவே இப்பொழுது, சர்ந்தீப் பென்னும் இத்துஸ்தானச்சேர்ந்த தீவில் தக்த்திலிருந்து, அரசாகி புரிந்துவரும், லந்தர்பிச் சாதான் யென்னும் பெரிய அரசனொருவன் நமக்கு அநேககாலமாய் வரி இறை செலுத்தாமல் மமதையோடு தனக்கு மிஞ்சியவன் இவ்வுலகத்தில்

கின்ற
யை கி, உருத்திரதேவனுக்காதவனும் ஆணவம்படைத்து தாட்டிக
முடையவனும் விரத்திலும் பலத்திலும் தேகதாஷ்டியத்திலும் மிக
வும் பலத்தவனும் அவன்கரத்திலெடுக்கும் குருசென்னும் தண்டா
யுதமானது ஆயிரத்தெழுநூறு மணங்கு பாரமுடையதாயும், அத்
தீவை ஆரசர்க்கி செய்துவருகின்றான், நமக்கு அநேகவருஷங்களாய்
தொல்பாவென்னும் பகுதியை பாக்கியாய் வைத்துக்கொண்டு இருக்
கின்றான் இன்னும் அவனுடைய பலமானது ஆயிரம் பயில்வான்கள்
சேர்ந்தாலும் அவனெருவனுடைய பலத்திற்குமுன் காற்றிற்பறக்கும்
அணுக்களேபோல் பெண்ணும்படியானவனும் அவனுண்டைய தைரி
யென்னும் தேகப்பயிற்சையில் மிதமிஞ்சியவனுயும் இருக்கின்றான்.
அவன் ஏறும் சவாரியானது பெருத்த மதம்தங்கிய யானையின்மீத
யல்லாமல் வேறொன்றும் அவனே சுமக்கவும் சுமக்காது அவ்வளவு
பருத்த சரீரத்தை யுடையவனுயும் இருக்கின்றான். அவனுண்டைய
தல்லீரென்னும் உருவத்தைப்போல் ஓர் உருவமும் அவனேயும்
யானையைப்போல் ஓர் யானை உருவமும் அவன் கரத்திலெடுக்கும்
ஆயிரத்து எழுநூறு மணங்கு பாரமுடைய குருசொன்றும், அவனு
டைய கோட்டைவாசற்படியில் நிறுத்தி வைத்திருக்கின்றான். ஆகை
யால் எப்பேர்ப்பட்ட அதிவீரம்படைத்த ஜியானிக்கூட்டத்தின் அதிசூ
த்தவீரனுகிய பலமுடைய பயில்வானுயினும், அவனுடைய கோட்டை
வாசற்படியில் நிறுத்தியிருக்கும் சிலையுருவத்தைக்கண்ணுற்றால் ஒரு
போதும் அவ்வீரன் ஏறிச்செல்லும் குதிரையானது அடிபெயர்த்து
வைத்து அத்தனைதூரம் செல்லவே செல்லாது பயத்தினுல் அவ்விடத்
திலேயே விழுந்துநெடுங்கி உயிர்கீழ்கிவிடும் மிருகங்களே அவ்விதம்
பயந்து நடுங்கிச்சாகுமாகில் இன்னுனென்னும் மனிதர்களின் கதி
எப்படியாகும். அரபிக் குதிரையானலும் காஜிக் குதிரையானலும்
சரி அவ்வகளெல்லாம் அப்படியே முன்னல் அடியெடுத்து வைக்கா
மல் அவ்விடத்திலேயே விழுந்து சாகும்படியான அவ்வளவு பயங்
கரமான பருப்பமுடைய பயில்வானுய் இருக்கின்றான் என்றுரைத்
தார். அதையுணர்ந்த பாதுஷாவானவன் புஜருச்மெஹராவை நோக்கி
காஜாவே, அதற்கு தாங்கள்தான் ஏதாவதோர் யோசனை செய்யுங்கள்
என்றுரைத்தார். அப்பொழுது புஜருச்மெஹரானவர் வயதாலும்,
வங்கிஷத்தாலும், புத்தியாலும் யோசனையாலும் மிகவும், பெரியவ
ராய் இருந்தபடியால் அமீர் அவர்களை குறிப்பாலறிந்து, இவர்
யாரோ ஓர் பெண்மீது ஆசையாகி இருக்கின்றார் அப்படி எனதே

ரவானுடைய மஹலில் அழகுடைய வே
நிகாரைதவிர வேறெருவரு மில்லை அல்லாமலும்
டன் திருடனென்று கூச்சலாயிருக்கின்றது திருடனைக்கண்டு பிடித்
தவர்க ளொருவருமில்லை அப்படி அகப்படாத திருடன் அமீரைத்
தவிற உலகத்தில் ஒருவருமில்லை ஆகையால் அமீர் கொண்டிருக்கும்
மையலானது மெஹருன்நிகாரின் மீதுதான் இருக்கவேண்டும் அமீரைத்
தவிர வேறெரு திருடன் அவ்விடத்தில் செல்லவும் முடியாது. இவர்
தான் அங்கு சென்றிருக்கவேண்டும் என்று தீர்மானித்து, இன்னும்
யென்னுகிறார். அமீர் அவர்கள் பால்யபிராயமானபடியால் இஷ்க்
யென்னும் ஆசையை தணிக்கக்கூடாத வயதா யிருக்கிறபடியால்
பின்னல் விளையும் தீங்கு இன்னதென்றறியாமல் மனம்போன போக்
கெல்லாம் செய்யத்துணிகின்றார். இக்காரியத்தில் யாராவது பொரு
மையுடைய பஸ்த்தக்கைபோன்ற ஹராம் ஜாதாக்கள் உளவுபார்த்து
அரசனுக்கு அறிவித்தவிட்டால் பெயர்கெட்டு கவாவம் கெட்டு
போய்விடும் யான் அமீர் அவர்களுக்கு உதவியுடையவனுயும் இருக்
கின்றபடியால் என்க்கும் அபகீர்த்தி வந்து விளையும் யென்று
இவ்விதங்களெல்லாம் மனதில் யோசித்தவராய் மூற்கூறிய லக்
தார் பின்சானுடைய விஷயங்களை பாதுஷாவினிடத்தில் சொன்
னல் இவ்விடத்திலுள்ள சிப்பாய் வீரர்களில் அமீர் அவர்களைத்
தவிற வேறெருவரும் பயத்தினுல் யான் செல்கின்றேனென்று
துணியுமாட்டார்கள். அமீர் அவர்கள் துணிந்து யான்செல்கின்
றேனென்று புறப்படுவார். அப்படி அவர் சென்றுவிட்டால் இந்த
பலாயான இஷ்க்கில் நின்றும் தூரவிலகி யிருப்பார். அப்பொ
ழுது யாதொரு சங்கடமும் நேரிடாது யென்று யோசித்தவராய்
இக்காரியத்தை பாதுஷாவினிடத்தில் முறையிட்டதில் பாதுஷாவும்
புஜருச் மெறவர்களையே தத்பீரென்னும் யோசனை செய்யுங்க
ளென்று சொன்னபடியால் காஜா அவர்கள்பாதுஷாவை நோக்கி
பாதுஷாவே என்மனதில் ஒரு யோசனை பிறக்கின்றது அதுயாதெ
னில் நாளைப்காலையில் உம்ராக்களும், மூந்திரிகளும் சேனுபதிகளும்
தர்பாரில்வந்து ஹாஜராவார்கள். அவ்வேளையில் அவர்கள் முன்பில்
இச்செய்தியை சொல்லி அந்த சங்கல்பீபுக்கு செல்லுகின்றீவர்கள்
யாரென்று கேட்டால் அப்பொழுது யாராவது துணிந்தவர்கள்
யான்போய் வருகின்றேனென்று எழும்புவார்கள் அவர்களை அனுப்
பலாம் என்று பாதுஷாவினிடத்தில் உரைத்தார்.

இவ்வையகினிலுயர்ந்த லந்தூர்பின் சாதான்
மென்பவனுடைய சிறியதகப்பன் நௌ
ஷேரவானுக்கு கடிதமெழுதுவதும்
அமீர் அவர்கள் சங்கல்தீப்கு
செல்வதும் லந்தூரைச்
செயித்தாபெருவதையும்
பேசுகிற பாபா யிருக்கும்.

விருத்தம்.

சித்தம்மைந் தருகி நாந்து சினமுரா சங்கல்தீபோன்
நித்யமாம் மதியினுக்கு நிருபமொன் றனுப்பலானன்
உத்தமமஹம் ஜாவல்லல் உகந்தந்த சரந்தீப்கென்று
அத்தகி லந்தூர்தன்னீ அனுப்பவக்கதை சொல்வோமே.

இரதகஜதுரக பதாதிகளுடனே ஒருவர்க் கொருவர் சேனை யோடு சேனை மஹாயுத்தம் நடக்கும் வேளையில் அவர்களின் வாளாயுதம் எப்படி சுறுசுறுப்பாய் சுற்றி சுழன்று வெட்டிப்பிளந்து இன்னும் உண்டா ? வென்று தவித்து நிற்கும் சுறுசுறுப்பையுடையவனையொத்த கலமெல்லும் எழுது கோலை மூன்றுவிரலினால் பிடித்தெழுதும் எழுத்தில்வல்ல ஷாயரென்னும் வித்வான்கள் ஜங்கு செய்யும் மைதானத்தில் அதிவேகமாய்ச் சுற்றித்திரியும் குதிரைச்சவாரிக்கு நிகராய் அம்மைதான மென்னும் காயிதத்தில் முன்னுள்ள சரித்திரங்களை எழுதின்றார். அவையாதெனில் பாதுஷா நௌஷேரவானுனவன் முதல்நாள் புஜாருச் மெஹரானவர் பிரசங்கித்த லந்தூர்பின் சாதானுடைய விஷயத்தை அறிந்தவனுய் அவ் வெண்ணமே இரவெல்லாம் பாதுஷாவின் மனதை பலவிதமாய் சிந்திக்கச் செய்து கொண்டிருந்தபடியால் மறுநாட்காரிய உதயமானபின் தர்பாரில்வந்து மந்திரி பிரதானிகள் உம்ராக்கள் அக்கிம்கள், சேனைத்தலைவர்கள் படைத்தலைவர்கள் அணித்தலைவர்கள் முதலாகிய யாவரும் வந்து தர்பாரில் ஹாஜராகி நிறைந்திருக்கும் வேளையில் லந்தூர் பின் சாதானுடைய சமர்த்தையும் நீதத்தையும் பயில்வான் தனத்தையும் வல்லமையையும் உரைத்து அவன் தனக்கு சிலவருஷங்களாய் பகுதிகட்டாமல் வம்புசெய்து வருவதையும் சபையோர்களறிய

சொல்லிக்கொண்டு இருக்கும்வேளையில் திடீரென்று தர்பாரின் முன்பில் ஏக பெரிய கூச்சலுடனே பிரியாப் பிரியாத எண்னைக் காப்பாற்றுங்கள் ! என்னைக் காப்பாற்றுங்கள் என்று, பாதுஷா முதலாகிய சபையோர்கள் யாவரும்கேட்க பெருங்கூச்சலுண்டானது. உடனே பாதுஷாவானவன் பஃத்தக்கை விஸ்தரித்து, அஃது யாது கூச்சல் போய் அறிதுவாவென் றுரைத்தான். உத்திரவின்படி பஃத்தக் யென்பவன் யெழுந்து சென்று பார்க்கையில் சங்கல்தீப் அரசனுடைய பிரயாது நாகிதமொன்றை ஒருவன் கரத்தில் தாங்கியவனுய்கூச்சலிட்டு நிற்பதையறிந்த பஃத்தக்கென்பவன் அக்காயிதத்தை தன்கரத்தில் வாங்கிக்கொண்டு வந்து பாதுஷாவின் சமுகத்தில் கொண்டுவந்து முத்திரை நீக்கி உடைத்து சபையோர்களாவருக்கும் கேழ்க்கும்படி உரத்த சப்தத்தோடு வாசிக்கலாயினன். அஃதுயாதெனில்.

லாத்முனத் ராப்பில் பரேஷ் யென்னும் நம்முடைய சுவாமிகளின் அனுக்கிரகம் தங்கிய கேயேபாத், பரிகான், அத்தஷே, நம்மூத் உடைய மார்க்க விஸ்வாசந் தங்கிய மண்டலாதிபதி ஜெயவீர நிம்மாசனுதிபதி ஹப்த்தக் கிஸ்வர் பாதுஷாவாகிய நௌஷேரவான் பாதுஷா அவர்களுடைய பிரகாசம்பொருந்திய புத்தியில் அரியப்படுத்தும் சிலவிஷயங்களாவன, பாதுஷாவே தங்கள் மனதினுல் இக்கடிதத்தின் சாராம்ஸங்களை கிரகித்து, எனக்குதவி புரிவீர்களென்று மிக வணக்கமாய் அடிபணிந்து தெண்டனிட்டு யெழுதும் விண்ணப்பம், எனக்குமுன் யான்வசிக்கும் சங்கல்தீபை என்னுடைய தமயனுகிய ஷாதான்ஷா யென்பவர் அரசுபுரிந்து பரிபாலித்து வந்தார். அந்நாட்களில் ஓர்நாள் என் தமயனவர் நிம்மாசனத்தை விட்டும், வேட்டைமார்க்கமாய்ச் சென்று. இரண்டு மூன்றுநாட்கள் வேட்டையின்மீதே தங்கியிருந்து வேட்டையாடி யிருக்கும்வேளையில் அவருக்கு தாகமதிகரித்தபடியால் தண்ணீர்தேடி அக்கானகமெல்லாம், திரிந்தலையும் வேளையில் ஓர் கிணருனது இருக்கக்கண்டு அவ்விடத்திற்போய்பார்க்கையில் ஓர் பெண்ணனவள் அதிக உயரமாயும் அதற்குத்தக்க பருமனுடையவளாயும் மூன்று குடங்களில் ஜலங்களேகரப்பி ஒன்றின்மேலொன்றுய் அடுக்கி அவைகளைத்தூக்கி யெடுக்க எத்தனிக்கையில், அம்மாதினை ஷாதான்ஷா வெண்னும் பெண்தமயன் நோக்கி ! அம்மா யான் மூன்றுநாளாக ஜலத்திற்காகத்

...னங்கும் நீர் கிடைக்காமல் இங்குவந்தடுத்தேன்
...ஆகையால் மனமிரங்கி கெஞ்சம் தண்ணீர்தந்து யென்னுடைய
...ரலைக்குளிரவைத்து தாகத்தை நீக்கிவைப்புங்கள் யென்றுமிகப்பரிதா
...பத்துடனே வணங்கி கேட்டார். அதையறிந்த அப்பெண்ணானவள்
அம்மூன்று குடங்களிலுமிருந்த ஜலத்தைக் கீழே வார்த்திவிட்டு
வேறே புதிதாய் அக்கிணற்றிலிருந்தும் இறைத்திறைத்து குடங்களை
நிறைக்க ஆரம்பித்தாள். அதையறிந்த ஸாதான்ஷா யென்பவர்
இப்பெண்ணானவள் நம் தாகத்திற்கு தண்ணீர் கேட்டால் அவள்
கொடுப்பதைவிலக்கி கீழே ஊற்றுவதை மேலாகநினைத்து கொட்
டிவிட்டாளல்லவா? இப்போப்பட்ட இரக்கமற்ற கொடுநீலியின்
இரத்தத்தை அவள் கொட்டிய நேரப்போல் சித்தச்செய்து விட
லாமாவென்ற யெண்ணத்துடனே நிற்கையில், அப்பெண்ணானவள்
தன்னுடைய மூன்றுகுடங்களிலும் ஜலத்தை நிரப்பிக்கொண்டு ஓ
பாத்திரத்தில் ஜலத்தைவிட்டு யென்தமயனிடத்தில் கொடுத்தாள்.
உடனே ஸாதான்ஷா யெண்ணி அஜ்ஜலத்தை வாயில்வைத்து
இரண்டு மூன்றுமுறை குடித்தவுடனே அப்பெண்ணானவள் அவரை
ஜாமறுத்தவிடாமல் கரத்தை இழுத்துப் பிடித்துக்கொண்டு கேட்
கிறாள். யாதெனில் ஓ! மனிதனே! நீயார்? உம்முடைய பெய
ரென்ன நீரெந்தவூர்? எங்கிருந்து வருகின்றீர்? எங்கே இறங்கி
யிருக்கின்றீர் யென்றுகேட்டார். அதையறிந்த ஸாதான்ஷா வானவர்
அவளைநோக்கி அடி! மடத்தன முடையவளே உனக்கென்ன மூளை
யிருக்கின்றதா? அல்லது அம்கிருக்கும் ஸ்தனத்தில் களிமண்
ணுண்டையை வைத்திருக்கின்றதா யான் ஜலமருந்தத்தான் தாம்
தப்படக்கூடாதா? என் உயிர் போகும்படியாகிய தாகத்தினையுடைய
தருவாயில் வாயில்வைத்த ஜலத்தை குடிக்கவிடாமல் இழுத்துப்
பிடித்துக்கொண்டு ஊர்செய்தி, முதலாகிய சரித்திரங்களைக் கேட்
கின்றாயே பெண்ணரசே! என சொல்லியும் அவள்கையை
விடாமல் இழுத்துப் பிடித்துக்கொண்டே அவர் சொல்வதையெல்
லாம் காதிற்குட் செலுத்தாதவளாய் வம்புத்தனம்செய்து நின்
றாள். அப்படியிருக்கும் அவள் கையைத்திமிறி ஜலத்தைப் பிடுங்கி
பின்பு மூன்று நான்குமிடர் ஜலமருந்தி தாகந்தீர்ந்தப்பின் வாளை
உருவிக்கொண்டு அவளை ஓரேவீச்சில் இரண்டுதுண்டங்களாய் ஆக்கி
விடுகின்றேனென்று வாளோங்கி நெருங்கையில் அப்பெண்ணானவள்
ஓ! மனிதனே யாதுனக்குச்செய்த குற்றமென்ன எனதீ அனி

யாயமாய் உபகாரம் செய்ததற்கு அபகாரஞ் செ... வருகின்றாய், யென்றுரைத்தாள். அதையுணர்ந்த என்தமய
அவளைநோக்கி யான் உனக்கு முன்னமே அறிவித்தேன் மூன்றுநா
ளாகின்றது தண்ணீர்குடித்து இம்மூன்று நாட்களாய் ஜீவத்தேடித்
திரிந்தலைக்து இங்குவந்தேன், பெரு தாகத்தை தீர்த்துவையென்று
கெஞ்சிக்கேட்டபொழுது நீ மொண்டுவைத்திருந்த மூன்று குடங்க
ளின் ஜலத்தையும் சிந்திவிட்டு வெறுகுடங்களை எனக்கு காண்பித்து
விட்டு மறுபடியும் என்னுடைய தாகத்தை கவனியாமல் அக்குடங்
களை நிறைக்கும் வேலையிலேயே யிருந்துக்கொண்டு காலதாமதம்
செய்துவந்தாய் அவ்வளவு நேரமும் என்னை நாவரளுயால் தவிக்கச்
செய்திருந்தாய், அல்லாமலும் பின்பு ஜலத்தைக் கொடுத்துக் குடிக்
கும் சமயத்தில் அருந்தவிடாமல் கையை இழுத்துப் பிடித்துக்கொ
ண்டு பழையகதைகளை "வீடுவேகும்பொழுதுசுருட்டுக்குநெருப்பு
கேட்டதுபோல்" விசாரிக்க ஆரம்பித்தாய், இப்படிச்செய்த உன்னை
வெட்டியிரத்தத்தை நீ கீழேயாய்விட்ட ஜலத்தைப்போல்
ஓடச்செய்தா லென்னவென்று உரைத்தார். அதையுணர்ந்த அம்
மாது அவரைநோக்கி, நகைத்தவளாய் சொல்லத்தொடங்கினாள்.

அம்த்துயாதெனில் "நன்மைசெய்ய தீமைவிளையும்" யென்றது
போல் இருக்கின்றதே அம்திருக்கட்டும் முந்தி உம்முடைய பெயர்
ஊர் இருப்பிடம் முதலியவைகளை சொல்லுவீராகில் யான்உமக்கு
தண்ணீர்கொடுத்து ஹர்க்கத்தென்னும் காலதாமதப்படுத்திய விபரங்
களை சொல்கின்றேனென்றுரைத்தாள். அதையுணர்ந்த என் தமயன்
அவளை நோக்கி அடி! பெண்ணே என்னை நீ அறியமாட்டாயா!
யான் இத்தேசத்தையாளும் பாதுஷாவுக்கு யிருப்பேன் என்னுடைய
பெயர் ஸாதான்ஷா வென்றழைக்கப்படும், சிக்காரென்னும் வேட்டை
மார்க்கமாய் வந்தபொழுது வழிதவறிவிட்டபடியால் தாகத்திற்குத்
தண்ணீரகப்படாமல் இம்மூன்று தினங்களாய் அலைந்திரிந்து
கடைசியாய் இங்குவந்து சேர்ந்தேன் யென்றுரைத்தார். அதைக்
கேட்ட அப்பெண்ணானவள், அவரைநோக்கி கைகொடும், கைகொடும்
நீர் இப்பேர்ப்பட்டபெரிய இத்தேசத்தையாளும் சக்கரவர்த்தியா
இருக்க உமக்கும் புத்தியென்பதற்கும் அதிக தூரமாய் இருக்
கின்றதை நீனைக்க யென்மனம் அதிக வருத்தமுண்டாகி நொந்து
புண்ணாகிவிடுகின்றது யென்று சொன்னாள். அதற்கு என் தமயன்

தின்வ

னையாகிய உனக்கு இப்போழுது சொல்லிய விஷயங்களுக்குத்தக்க தாந்தரம் கொடுக்கப்போகின்றனையா? அல்லது என்னே சும் மாவாகிலும் மடையனுக்கி விட்டனையாயென்று கேட்டார். அதற்க வள் ஓ! பாதுஷாவே நீரறிந்துக்கொள்ளும் நீ சென்னிடத்தில் ஆரம்பமாய்வந்து ஜலம்கேட்கும்போதே மூன்றுதினங்களாய் தாகத் தோடு திரிந்தலைந்து இங்குவந்தேனென்று சொன்னீர்கள். அதனால் யான் நிறைத்துவைத்திருந்த ஜலங்களை ஊற்றிவிட்டு வேறேஜலம் புதுப்பித்துக்கொண்டிருந்து தாமதப்படுத்தி கடைசியாய் உமக்கு ஜலத்தைக்கொடுத்து முழுதும் அருந்துமுன் கரத்தை இழுத்துப் பிடித்துக்கொண்டு வார்த்தையாடியின்பு ஜலமருந்தும்படிவிட்டேன் அஃதெதற்காகவானால் நீர் சில தினங்களாய் தாகத்தோடிருந்தபடி யால் அத்தாகத்தின் வெப்பத்தால் ஆசையோடு நீர் கேட்டவுடனே யான் ஜலம் கொடுத்தால் அஃது காய்ந்திருக்கும் தொண்டையில் பட்டவுடனே ஜட்டென தொண்டையில் விக்குண்டு இறந்துபோய் விடுவீர். அதையறிந்து உடனே கொடுக்காமல் ஜலத்தைக்கண்டு உம்முடைய தொண்டை நரம்புகளில் ஈரமைப்புண்டாவதற்காக உம் முடைய கண்கள்காண ஜலத்தைக்கீழேகொட்டி உமக்கு மைப்புண் டாகச் செய்தேன். அப்படிச்செய்து மைப்புண்டாகி விட்டபின் ஒரே மூக்காய் உம்முடையதாகமெல்லாம் நீங்கும்படியாகிய ஜலத் தைக்கொடுத்தாலும் காய்ந்து வதங்கிவாடியிருக்கும் நாவில் ஜலத் தின் ஜிலுஜிலுப்பு தட்டிய உடனே அவ்வீரலானது உடனே மலர ஆரம்பித்தால் காய்ந்த நரம்புவெடித்து இறந்துபோய்விடுவீர். அதற்காக கொஞ்சஜலம் அருந்திய உடனே கால்வாசிதாகம் தீர்ந்தும் தீராம லும் தாமதப்படுத்தியபடியால் அவ்வீரலானது சுணங்கிநின்ற அவ் வளவுநேரத்தில் நனைந்துகுளிர்ந்து மெதுவாய்ஈரமாகி நயப்படைந்தி ருக்கும். அதன்பின் நீர்எவ்வளவு ஜலமருந்தியபோதிலும் அப்பாயமொ ன்றும்நேரிடாது இவைகளையெல்லாம் யோசித்தவளாய் யான்உமக்கு பலவிதத்திலும் காலதாமதம்செய்துவந்தேனையொழிய நீர் சொல்லி யதுபோல் எனக்கு மூளையில்லாமல் அறிவுகெட்டு செய்ததாகாதென்று உரைத்ததோடு, இன்னும் சொல்லுகின்றாள். அப்படி யான் காலதாமதஞ்செய்து ஜலம்கொடுக்காமல் நீர் கேட்டவுடனே கொடுத் திருப்பேனுகில் கண்மைசெய்ய நிமை மீளாத்தபோல் தாங்கள் ஜலத்தை குடித்திறந்து விட்டால் பார்ப்பவர் யானே தங்களைக் கொன்றுவிட்டேனென்று என்னையும் தண்டத்திற்குள்ளாக்குவென்று

டைய உயிரையும் இழந்துவிடும்படி செய்வான் அவ்விதம் செய்தேனென்றுரைத்தாள் அதையுணர்ந்தபாதுஷா ஜானவர் அத்தப்பெண்ணுடையபுத்திசாதுர்யத்தையும்மேன்மேலு சனையையும் தனக்குச்செய்த கன்றியையும்நினைத்து பைத்தியம்பிடித் தவரைப்போல் சிலகோரம் பிரமைகொண்டு நின்றுவிட்டு, தனக்கு அப்பெண்செய்த முகப்பத்தெண்ணும்பிரிய உபசாரணைக்காக அவள் மேல் இனியில்லாத ஆசையுண்டையவராய் பெண்ணே நீ! இருக்குமி டம் எங்கே உனக்கு வாரீஸ்தார் யாராகிலும் இருக்கின்றார்களா? நீ! ஒண்டியாய் தனித்திருக்கின்றாயாவென்று கேட்டார். அதற்கவள் பாதுஷாவே! எனக்கு வாரீஸ்தார் சொந்தக்காரர் உற்றார் உறவின் முறையார் யாவரும் நம்மையெல்லாம் படைத்தாளுகின்ற அல்லா சுபஹானத்தவுலா ஒருவனேதவிர எனக்காருமில்லை. என்னு டைய கைகாவினால் உழைத்து ஜீவனம்செய்துகொண்டிருக்கிறேன். என்னுடைய சுகதுக்கங்களைகேட்டு ஆதரிப்பவர்கள், அந்தஅல்லாவு டைய ஜாத்தைத்தவிற வேறில்லையென்றுரைத்தாள். அதையறிந்த எந்தமயன் அப்பெண்ணை அழைத்துக்கொண்டுவந்து நிக்காகுவென் னும் கல்யாணம் செய்துக்கொண்டார். நிக்காளைபில் அப்பெண் கர்ப் பமானுள்; என் தமயன் இறந்துவிட்டார். அப்பொழுது இராஜீ கத்தை யான் ஒப்புக்கொண்டு சிம்மாசனத்திலேறி அரசரிமை செய்துவந்தேன். அந்தாளையில் என்தமயன் பெண்சாதி பூர்ண கர்ப்பம்நிறைந்து ஓர் ஆண்குழந்தையைப் பெற்றாள். அக்குழந்தை பிறந்த அப்பொழுது ஐந்து செஜம் உயரமும் அதற்குத்தக்க பரு மனுமாய் இருந்தான். சில நாட்கள்சென்றபின் அப்பெண் பிள்ளை யும் இறந்துபோனுள். அக்குழந்தைக்குயான் வந்தூர் என்று நாம கரணமிட்டு நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் மிக அன்பேபீடு வளர்த்து வந்தேன், அக்குழந்தைக்கு மனுஷப்பால் போதாதென்று அதனுடன் அநேக ஒட்டகங்களின் பால்களையும் கொடுத்து வளர்த்தேன். அநேகபால்காரிகளும் குழந்தையை ஆத ரித்து வளர்க்கும், அநேக வேலைக்காரர்களையும் நேமித்திருந் தேன், என்றையதினத்தில் என்தமயன்மகன் வந்தூர் பிறந்தானே அன்றையதினத்தில் எனக்கும் ஓர் ஆண்பிள்ளை பிறந்து, இருந்தது. அக்குழந்தைக்கு ஜெயப்பூர்யென்று நாமகரணமிட்டேன் அவ்விரு குழந்தைகளையும் ஒன்றிற்கொன்று வித்யாசமில்லாமல் வளர்த்து வந்தேன், அவ் விருவருக்கும் வயது ஐந்து நிறைந்துவந்தது,

தின்வ

னை ... விளையாட்டு காண்பித்துக்கொண்டிரு
... வேலைக்காரி லந்தூரென்பவனை ஏதோ ஓர் குற்றத்திற்
காக ஓர்டி யடித்தாள். அதனால் லந்தூருடைய கன்னம் வீங்கிப்
போய்விட்டது. உடனே அந்த லந்தூரென்பவன் வேலைக்காரிய
இருகாலிலையும் ஓர் கரத்தால் பிடித்து வாரிசுழட்டி பூமியில்
அடித்து தயிர்க்குடம் சிதறுவதுபோல் சிதறசெய்து விட்டான்.
அதைபறிந்த மற்றவேலைக்காரர்களெல்லாம் பயந்து, ஓடோடியும்
வந்து என்னிடம்முறையிட்டார்கள். அப்பொழுது எனக்குகோபம்
பிறந்து அவனைப்பிடித்து மதங்கொண்டயானையின் முன்பில் தள்ளி
விடுங்களென்று ஆக்ஞாபித்தேன். உடனே மதங்கொண்ட பெருத்த
யானையைகொண்டுவந்து நிறுத்தப்பட்டது. லந்தூரைக்கொண்டுவந்து
அவ்வியானையின்முன்பாக விட்டார்கள், அவ்வியானையானது அவனை
தன்னுல் கூடியவரையில் தன்துப்பிக்கையால்வாரி எடுக்கமுயன்றும்
அதனால் கூடவில்லை, அப்பொழுது அவன் அவ்வியானையின் துப்பிக்
கையை இருகாங்களினுல் பற்றிப்பிடித்து சொடுக்கிஇழுத்தான். அப்
படி யிழுக்கவே அவ்வியானையின் தும்பிக்கை அடியோடறுந்து
அவன்கர்த்தில் வந்துவிட்டது, அவ்வியானையும் வீரிட்டலறிவீழ்ந்து
றந்துவிட்டது பின்புபானைகளை அடைத்துவைத்திருக்கும் கொட்
டகைக்குச்சென்று ஓர் தூணைப்பிடுங்கி, கரத்தில்பிடித்து அங்கு
நின்ற ஆயிரக்கணக்காண யானைகளையெல்லாம் அடித்து மூளைசிதறி
இறக்கச்செய்தான் உடனே ஊர்முழுவதும் பெருத்த கூக்குறலு
டனே திகில்கொண்டு யாவரும் நடுங்கித்து நின்றார்கள். அப்
பொழுதுயான் லந்தூரைபிடித்து கைகாலுக்கு விலங்கிட்டு கைதி
காணுவில்வைக்கும்படி ஆக்ஞாபித்தேன். அவனைப்பிடிப்பதற்கு ஒரு
வராவது அருகிற்செல்ல துணியவில்லை என்னுடைய ஓர் வழிர்மாத்
திரம் என்னைநோக்கி பாதுஷாவே! அவனைப்பிடித்துக்கொண்டு வரு
வது என்னுடையவேலையென்று சொல்லி ஓர் தட்டத்தில் நிறைய
ஹல்வாவைக் கொண்டுபோய் அந்த லந்தூரென்பவனின் முன்பில்
வைத்தான். அதையுணர்ந்த லந்தூர் அந்த ஹல்வாவை தின்று
புசித்தபின் நல்லவார்த்தைசொல்லி அவனைஎன்சமுசத்தில்கொண்டு
வந்துவிட்டான். அப்பொழுது லந்தூர் மந்திரியைநோக்கி என்னை
சுட்டிக்காட்டி ஓய்! மனிதனே இவன்யார் இவனுடையபெயரென்ன
வென்றுகேட்டான். அதற்கு வழீரானவன் குழந்தையே அவர் தங்க
ளுடைய கிரிய தந்தையாகிய இத்தேசத்தையாளும் பாதுஷாவாயி

ருக்கும் யென்றுரைத்தான். அதை யுணர்ந்த
நோக்கி நல்லதிருக்கட்டும் இவனுக்குமுன் இத்தேசத்தையாள
கொண்டிருந்தார்கள் அவர் பெயரென்ன யென்று கேட்டான்
அதற்கு வஜீர் ஹாஜாரே இதற்குமுன் இவ்வூரை தங்கள் பிதாவா
யும் இவருடைய தமயனையும் இருந்த ஸாதான்ஷா யென்பவர் ஆண்டு
கொண்டிருந்தார் யென்றுரைத்தான். அதற்கு லந்தூர் சொல்லுகின்
ருன், அப்படியிருக்க இவனெப்படி இச்சிம்மாசனத்தில் வந்தேறினன்
யானல்லவோ இதிலேறி யரசுபுரிய பாத்திரமுள்ளவன் இவன் அகா
லத்தென்னும் இராஜரீகம் செய்பவும்யான் இவனுடையகையின்கீழ்
சும்மா உட்கார்ந்திருக்கவும் என்னவிதிவந்தது யென்றுரைத்தான்.
அதற்கு வஜீர் அவனை நோக்கி ஹாஜாரே தடையின்றி தாங்களே
இத்தேசத்தையாளும் பாதுஷாவாயிருக்கும் தாங்களே இச்சிம்மா
சனத்திற்குடையவர் இவ்வுலகெல்லாம் தங்களுக்குடைய வர்தான
யென்றுரைத்தான். அவ்வார்த்தையைக்கேட்ட உடனே மந்திரியை
நோக்கி அப்படியிருக்கையில் இவன் இச்சிம்மாசனத்தில் உட்கார்ந்
திருக்கதாது உட்னே இவனை இச்சிம்மாசனத்தைவிட்டும் கீழே
இறக்கிவிடு யான் சிம்மாசனத்தில் உட்காருகின்றேன். இன்றையதின
முதல் இராஜரீகமாகிய சல்க்கனத்தென்னும் அதாலத்தை யான்
செலுத்திவருவேன் யென்று சொன்னன். அதையுணர்ந்த வஜீரான
வன் என்னை நோக்கி பாதுஷாவே தாங்கள் இச்சமயம் கபடமாய்
தக்தைவிட்டுமீழே இறங்கிவிடுங்களென்றுசொன்னன். உடனே
யான் சிம்மாசனத்தை விட்டும் கிழிறங்கிவிட்டேன். லந்தூரென்ப
வன் சிம்மாசனத்திலேறி உட்கார்ந்தான். பின்பு கொஞ்சநேரம்
சென்றவுடனே மந்திரியை நோக்கி எனக்கு வழீபனங் கொண்டு
வருப்படி உத்திரவுசெய்தான். உடனே என் மந்திரியானவன் வழீப
னத்தில் பயங்கம் உண்டாகத்தக்கமருந்துகளை கொண்டுவந்து
அவன்முன்பில் வைத்தான். அப்பொழுது லந்தூரானவன் என்னையும்
என்புத்திரனையும் தன்கூட வழீபன மருந்த அழைத்து வா ஒரு
வேளை வழீபனத்தில் என்னைக்கொல்ல ஏதாவது சூழ்ச்சிக் கலந்
திருப்பாய் ஆகையால் அந்த ஷாப்பாலியும் ஜெயப்பூரையும் அழை
த்துவா, பாக்கள் மூவரும்சேர்ந்து புசிக்கிறோம், யென்றுரைத்தான்.
உட்னே யென்மந்திரி என்னையும் என் புத்திரனையும் அழைத்து
அவன்கூட எங்களையும் அன்னம் புசிக்கும்படி சொன்னன். அது
போல் யாங்களிருவரும் அவனுடன்சேர்ந்து புசித்தோம். கொஞ்ச

தின்வ

யை யாகி உருவினிர்? மயக்கம் தலைக்கேறி மூவரும் விழுந்து விட்டோம். உடனே பெண்மக்திரி எதோ ஓர் சீசாவில் ஓர் மருந்தை கொண்டுவந்து எங்களிருவர் மூக்கிலும் பிடித்தான். உடனே எங்கள் மயக்கம்தெளிந்து யாமும்எண்மகனும் ஆஸ்வாசிக்கினோம்.உடனேயான் மந்திரியை நோக்கி லந்தூரேன்பவனுக்கு கைகால்களுக்கெல்லாம் அதிக பலத்த எழுதினாலாகிய ஜஞ்சீரென்னும் விலங்கிட்டு இரும்புச் சங்கி லியால் வரிந்துகட்டி விடும்படி ஆக்ஞாபித்தேன். உடனே எவளாளர் கள் அவனை அதுபோல் செய்தார்கள். அப்பொழுது யான் லக் நோட்டி யென்னும் தேசத்தை அரசாளும் அவ்ரங், கோரங் யென்னும் இரண்டு இராஜகுமாரர்களையும் வரவழைத்து, அவர்களிடத்தில் இவனை ஒப்பிவித்து விடுங்களென்று உத்திரவு செய்தேன். என் மந்திரியும் உடனே என்னுத்திரவுபோல் செய்துமுடித்தான். அவ்விரு ராஜகுமாரர்களும் வந்துசேர்ந்தார்கள். அவர்களுக்கு என்னுடைய உத்திரவைசொல்லி லந்தூரே அவர்கள் வசத்தில் ஒப்பிவித்து இவனைக்கொண்டுபோய் அதிகஜாக்கிரதையுடனே பந்தோபஸ்தாய் மிக வும் கொடுமைபொருந்திய லந்நோட்டியென்னும் தேசத்தின் மலைக் கெவிக்குள் கைதுசெய்து வைக்கும்படி அனுப்பிவிட்டேன். அது போல் அவர்களும் அவனை கொண்டுபோய் தங்கள் தேசத்தின் அதிக ஆழமாகிய இருளடர்ந்த பயங்கரமானமலைக்கெவிக்குள் அதி பந்தோபஸ்துடனே சிறையாகி அக்கெவியின் வாயை கற்களால் மூடிவிட்டு, சிலவீரர்களை அதுவாயிற்படிக்குக் காவலாய் நியமித்து, வைத்திருந்தார்கள். அக்குகையினுள் லந்தூரேன்பவனை இருபத் தைந்து வருஷங்களாய் அடைத்துவைக்கப் பட்டிருந்தது. அந்த லந்தூருடைய தாயானவள் சீமை அலெக்ஸ்ஸான்றியாமுடைய வங்கிஷத்தால் உள்ளவளாய் இருந்தாள். ஓர்நாள் அவ்ரங் கோரங் யென்பவர்களின் தங்கையானவள் நித்திரையிலிருக்கும்பொழுது கனவுகண்டாள். அஃ தெவ்விதமெனில் வானலோகத்திலிருந்து கின்றும் மிக அழகுபொருந்திய ஒளியிலங்கத்தக்கதாகிய ஓர் சிம்மாசனம் பூமியில் இறங்கவும் அதில் ஹஜ்ரத் சீஸ் அலெக்ஸ்ஸான்றியாம் அவர்கள் உட்கார்ந்திருக்கக் கண் டாள். அப்பொழுது அத்தக்கத்திலிருக்கும் மகியானவர் அப்பெண்ணை நோக்கி லந்தூரின் ஷாதான் யென்பவனை அடைத்து வைத்திருக் கும் கெவியையும் அத்தானத்தையும் அதற்குள் செல்லும் வழியை யும் காண்பித்து, மகளே! உன்னை அந்த லந்தூருக்கு நிக்காகு செய்து விட்டேன். உன் வயற்றில் ஓர் ஆண்குழந்தை பிறக்கும் அக்குழந்தை

யானது அதிக அழகுசவுந்தரிய முடையபுருஷனாயும் பெரும் பயில்வானுயும் சுறுசுறுப்புடையவனுயும் இருப்பானென்றுஜோதி தார். அவ்விதம் கனவுகண்ட பெண்ணானவள் திடுக்கிட்டு விழித் தெழுந்து ஓர் தட்டத்தில் ஆகாராதி முதலிய தின்வகைகளை யெடுத் துக்கொண்டு அக்குகைக்குள் தனிமைக்குள் தூழைந்தாள். அங்கு காவலிருக்கும் காவல்வீரர்கள் நீயார் என்னகொண்டுபோகின்றாய் இவ்வேளையில் நீ எங்கிருந்து வருகின்றாய் யென்று கேட்டார்கள். அதையுணர்ந்த அப் பெண் யான் ஓர் பெரியார்களை கனவிற் கண்டேன் அவர்களுத்திர விண்படி லந்தூர் பின் ஷாதா னென்பவருக்கு ஜோடனைகொண்டே கின்றேன் யென்றுரைத்தாள். அதையறிந்த காவல்வீரர்கள் இராஜபுத் திரி யென்றறிந்து பேசாமல் சும்மாயிருந்து விட்டார்கள் அவள் உள் ளேசென்று தான் கொண்டுபோயிருந்த ஆகாராதிகளை அந்த லந்தூ ரென்பவனுக்கு புசிக்கக் கொடுத்து விட்டுதான் கொண்டுபோயிருந்த அரத்தினுல் விலங்குகளையும் சங்கிலிகளையும் அறுத்துத் தறித்துவிட தலையாகி தான்கண்ட கனவை அந்த லந்தூரென்பவனுக்கு ஒன்றும் விடாமல் சொல்லிக்காட்டிவிட்டு தன் வீட்டுக்கு போய்விட்டாள். பின்பு லந்தூரென்பவன் சங்கிலிகளையும் விலங்குகளையும் சுருட்டி தலை யணையாய் வைத்துக்கொண்டு அக்கெவிக்குள்ளே தானே காலை நீட்டி விட்டு தூங்கினன். அப்பொழுது காவல்வீரர்கள், இஃதென்ன இர வும்பகலும் ஓயாமல் அலறி கூச்சலிட்டு சப்தித்துக்கொண்டிருந்த லந்தூர் யென்பவனுடைய சுவாசம்விடும் சப்தத்தையும் காணப்பட வில்லையே யாதுகாரணமென அக்கெவிக்குள் உற்று நோக்குகையில் இத்தனைகாட்டப்பட்ட கஷ்டத்தினாலோத்திரவினுலோ தூங்குகின்றவ னுக் காணப்பட்டான். உடனே காவலாளர்கள் பயகு நடுநடுங்கி ஓடோடியும் சென்று அவ்ரங், கோரங் யென்னும் புருஷோத்தமர் களுக்கு தெரியப்படுத்தினர்கள், அதைக்கேட்ட இராஜபுத்திரர்கள் அநேக பயில்வான்களை கூட அழைத்துக்கொண்டு ஓடோடியும் வந்து, கெவிக்குள் தூழைந்து பார்க்கையில் லந்தூரானவன் அதிக அசதியாய் தூங்கிக் கொண்டிருக்கக்கண்டு இப்பொழுதே அவன் விழிக்குமுன பழையபடி விலங்கிட்டு தளர்த்தவிடலாமென்று தின்த் தார்கள். அப்படி யோசித்து நிற்கும் வேளையில் லந்தூரென்பவன் நித்திரையில் கின்றும் விழித்தெழுந்து எதிரில் நிற்பவர்களிருவரை யும் இரண்டு கரங்களாலெடுத்து தூக்கி நிலத்திலடித்து சொல்லு கின்றன், ஐ! இராஜகுமாரர்களே உங்களிருவருடைய தங்கையான

தின்வ

யை ... கண்டு அவர் சொன்னபடி என்னை நிக்காரு ... ளும் வியாசம் செய்துகொண்டு வஸ்பனம் முதலாகிய யாவும் ... க்கச்செய்து எனக்கிட்டிருந்த தளைகளெல்லாம் அறுத்து என் னை விடுதலையாக்கிவிட்டு போயிருக்கின்றான், ஆகையால் நீங்களிரு வரும் எனக்கு மைத்துனராகபடியால் மனமிரங்கி உங்களுயிரை காப்பாற்றி உயிர்பிளைகொடுத்து விட்டுவிட்டேன். இல்லாமற்போ னால் இவ்வளவுநேரம் உங்களுடைய எலும்புகள் கூட கண்களால் கண்டு பிடிக்கக்கூடாத சிதமாய் செய்திருப்பேன் என்றுரைத்தான். அவ்வார்த்தையைக் கேட்டிருந்த இராஜகுமாரர்கள் தங்களை விடுவிகளுசெய்துகொண்ட மைத்துன ராகினிட்டபடியால் அதிக சர் தோஷமுற்று அவனை இருவரும் இறுகத்தழுவி குதூகலங்கொண்டு வெளியிலழைத்து வந்து தந்தைகள் சிம்மாசனத்தில் அந்த லந்தூரை யமர்த்திவைத்தார்கள் அன்றுமுதல் அவன் அத்தேசத்தை தீரு ண்டு பரிபாலித்துவந்தான். அந்தாளையில் அந்த லந்தூரென்பவன் தனக்காக ஓர் குருஸென்னும் கண்டாயுதம் தீர்செய்தான் அதி ன் பருப்பமானது எவ்வளவு பெரிதானால் ஆயிரத்தெழுநூறு மண ங்கு பாசமுள்ளதாய் செய்வித்து வைத்துக்கொண்டான், பின்பு அக் குருஜென்னும் கண்டாயுதத்தினைக் கரத்திற்பிடித்தவனுப் மும்மதம் கங்கிய பருத்த சண்டித்தனமுடைய காண்டியானைமீது ஏறி யவனுடு சக்கல்தீவுக்கு செல்லும் வழி பெதமென்று கேட்டுக்கொ ண்டு இருந்தான் அப்பொழுது அவ்வாய், கோரங் இருவரும் அவனை நோக்கி ஜஹாம்பரு இன்னுமு கொஞ்சகால பொறுத்துசொள்ளுங் கள் நாம் சில பல்ஜுகளை தயார்செய்துகொண்டு அவிடம் சென்று சண்டைசெய்து ஜெயிக்கலாம் என்றார்கள் மைத்துனர் சொன்ன வார்த்தைகளுக்கு லந்தூரென்பவனுக்கு அதிக கலமாய் காணப்பட்டபடி யால் அவர்கள்சொற்போல் பயணத்தைநிறுத்தி பல்ஜுகள் சேகரம் செய்யும்வேளையில் முழுசியாய் இருக்க, ஏராளமான பல்ஜு கள் தயாரானபின் அதிக ஆடம்பரத்துடனே ரதகஜதுரக பதாதி கள் சூழ பதினெட்டு ஆயுதம்தரித்து எக்காளம், காளம், நொளரி, சின்னம், பூரி, டங்கா, டக்கா, பம்பை, தாளம், மத்தளம் முகா முதலாகிய வாத்தியம் முழுங்க அதிக ஆடம்பரத்துடனே சங்கல்தீப் யென்னும் தேசத்தைநாடி சிலநாள் நடந்து, சமுத்திரக்கரையை அடுத்து கப்பல் தயார்செய்து, அதிலேறி அந்த சங்கல்தீப் யென் னும் தன்னுடைய தேசத்தின் கோட்டை எதிரில் இருக்கும் துறை

முகத்தில்வந்து சேர்ந்தான். உடனே என்னுடைய ... லுஜூத்தா வந்து இறங்கி இருக்கும் செய்தியை எனக்குவந்து சொன்னார் அவன்வந்திருக்கும் சேதிஊர்முழுவதும் பிரசித்தியாய்விட்டது. அப் பொழுதுயான் என்னுடைய புத்திரனிய ஜெயபூரேன்பவனை இரண் டிலக்கம்தளங்களுக்கு சேனதிபதியாக்கி அனுப்பினேன் அதேதூற் றுக்கணக்கான பெயர் பெற்ற வீரர்களான பலமுடைய சிப்பாய்களை யும் அனுப்பினேன். இருநிறத்தவர்களின் பல்ஜுகளும் அனிவகுக்கப் பட்டு, எதிரெதிரே நின்றார்கள் அவ்வேளையில் லந்துரென்பவனுடை யவும் ஜெயப்பூருடையவும் பௌஜுகள் ஒருவர்க்கொருவு தெரித்து சண்டைசெய்தார்கள். அப்பொழுது லந்தூரென்பவன் கையிற் பிடித் திருக்கும் குருஸென்னும் கண்டாயுதத்தினல் ஓரடியடித்தால் அவ் வடியினல் இருபது முப்பது சிப்பாய்கள் சுக்கி மண்ணெமண்ணுகி நிசைந்து சதை பெலும்பு முதலாகிய யாதொன்றும் கண்களால்காண அறிதாகியிவதைகண்ட ஜெயப்பூரென்பவன் பயந்து நடுநடுங்கி உட லயர்ந்து, மெய்வெளுத்து, நாவலர்ந்து கண்கள் சுழல தட்டுதெட்டு நடுமாறி ஓடோடியும் வந்து கோட்டைக்குள் தனைமுந்து வாயிலைமூடி பந்தனம் செய்துகொண்டு கோட்டையின் மதிளின்மேலேறி பீரங்கி குண்டுகளின் மழைபொழிவதுபோல் லந்தூர்மீதும் அவனுடைய பல் ஜுகளின் மீதும் விட்டார்கள் அப்படி சண்டமாருதம் பொழிவது போல் விடும் பீரங்குண்டுகளை லந்தூரென்பவன் காங்களினல் ஒன் றின்பின் ஒன்றுப்பிடித்து கோட்டை மதில்மேல் வாரியடித்து கொண்டே வந்து கோட்டைவாசலை அடைத்து தன்கரத்தில் பிடித் திருந்த குருஜினல் கோட்டைக்கதவை அடித்து நொறுக்கி தூள்க ளாக்கிவிட்டு பல்ஜுகளும் தானும் கோட்டைக்குள் நுழைந்து அடி த்து அடியினல் மவுத்தென்னும் பஜாரானது அதிகரிப்பு எங்கே பார்த்தாலும் பிணக்குவியலை தவிற ஜனக்குவியலை காணவே அறிதா கிவிட்டது; கோட்டை முழுவதும் இரத்தவெள்ளமானது பெருகி எங்குபார்த்தாலும் இரத்த ஆறுனது ஓட ஆரம்பித்தது. அவ்வேளை யில் அவனடிக்கும் அடியினல் சாகும் ஜனங்களின் கொதையைக் கண்ட யான் நாவுதடுமாறி கைகால் உதற ஒன்றுந் தோன்றுதவனுய் வேறே வழிதில்லாமல் அவனுடைய முன்பில்வந்து கைகட்டி மரி யாதையுடனே நின்று அல்அமான், அல்அமான், என்னைக் காப்பாற் றுங்கள்! என்னைக் காப்பாற்றுங்களென்று கெஞ்சிக் கேட்டுநின்றேன் அப்பொழுது அந்த லந்தூரானவன் என்னை நோக்கி ஏ! மனிதனே,

[illegible] அமான் என்னும் காவல் தேடுகிறாய் எந்த [illegible] பில உயிர்ப்பிச்சை கேட்கின்றாய் உன்மனதில் என்ன தீர்மானம் செய்துக்கொண்டு என்னிடம் அமான் கேட்கின்றாய் என்று கேட்டான். அப்பொழுது யான் அவனைநோக்கி இந்த ஜராஜங்கமானது ஹப்தக்லீம் கிஸ்வர் பாதஷாவாகிய கௌஷேரவானே ஆதில் என்பவருடைய ஆஞ்ஞக்குட்பட்டதாய் அவருக்கு நாம்திறைகட்டும் அரசனும் இருகின்றபடியால் அவருக்கோர் அர்ஜி என்னும் விண்ணப்ப பத்திரமெழுதி அனுப்புவோம். அதையறிந்த அவர் இச்சிம்மாசனத்தில் யாரை உட்கார்ந்து ஆசாகூடி செய்ய நேமகம் செய்கின்றாரோ அவர்கள் சந்தோஷமாய் சன்னதத்தை செய்யலாம் ஆகையால் தாங்கள் கொஞ்சநாள் பொறுமையோடு இருங்கள். யான அவருக்கு அர்ஜியெழுதி அனுப்பிவைக்கின்றேன். அங்கிருந்து என்ன பதில்வருகின்றதோ அதன்படிசெய்யலாம் என்றுரைத்தேன். அதையுணர்ந்த லந்தூரானவன் என்னை நோக்கி நீயாருக்காவது அர்ஜியெழுதிக்கொள், எவனுக்கு உனக்கு பதிலெழுதட்டும் அதுவரையில் நீபோய் ஓர்மூலையில்லாதபெண்ணைப்போல், குந்தியழுதுக்கொண்டு இரு, உன்னையும் அந்த நௌஷேரவானையும் யானென்ன பெரிதாய் நினைத்திருகின்றேனோ? எனக்கென்ன உங்களிலும் குறைந்தகர்க்கத்து, குறைந்தஜோர், குறைந்தவல்லமை இருக்கின்றதா, "யானுங்களுடைய சொல்லிற்குஉட்படிந்து வழிபார்த்திருப்பதற்கு" என்றுரைத்தான். அம்முறுடனுடைய இத்தாட்டிக வசனங்களை கேட்டு யாதுன் ஒன்றும் பேசவாயெழாதவனாய் ஊரைவிட்டு வெளியே பூப்பட்டு அதிக தூலதூரத்தில் மறைந்து பகல் புசித்தால் இரவுதூங்கிலே, இரவு புசித்தால் பகலுக்கில்லை யென்றே பட்டினியும் புலியுமாய் வெம்பி வெதும்பி என்னுயிரைக் காப்பாற்றிக் கொண்டுபனுங்கி இருக்கின்றேன். அந்த லந்தூரேன்பவன் தக்கில் அமர்ந்து இருக்கின்றான், ஆகையால் என்னுடைய்கடமை அதுவிஷயத்தை தங்களுக்கு தெரியப்படுத்திவிடவேண்டியதுஇருந்தபடியால் தெரியப் படுத்திவிட்டேன், இனி தாங்கள் சக்கிராதிபதியாய் இருக்கின்றவிஷயத்தில் எவ்விதமாவதுசெய்ய தடையொன்றுமில்லை, யானே என்னுயிரைக் காப்பாற்றிக்கொண்டு வெளியே லோடிவந்து விட்டேன். என்னுடைய வீரர்கள் யாவரும் அவனுடைய தண்டத்திற்கிறையாகி மண்ணோடு மண்ணும் பெடித்தடக்க இயலாமல் ஆகிவிட்டார்கள். இனி இருப்பது யானொருவனும் என்னுடைய குடும்பமும்

தான் தாங்களும் அவனுக்கு சரியான தண்டனை தங்களையும் மதியாமல் என்னென்ன தீங்கு விளைவிப்பானோ ஜிஜித்தாறிகிலேன் அவன் பெருமையுற்ற முறைடன் இவ்வுலகத்தில் அவனை ஜெயிக்க ஒருவருமில்லை ஆனபடியால் தாங்கள் ஜாக்கிரதையாய் அவனை அடக்கி யாளவேண்டுமாய் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இங்ஙனம்,

ஷாப்பால்.

என்றெழுதியிருந்ததை யெல்லாம் சபையோரறிய பாதஷா கேட்டு புஜருச்மெஹரவர்களை தனியே யழைத்துசென்று இரகசியமாய் ஓரிடத்தில் திருந்துகொண்டு இவ்விஷயத்தில் தாங்களென்ன யோசனை சொல்கின்றீர்கள், யென்றுகேட்டு வெளியில்வந்து சபையின் கண் இருக்கும் மற்ற மந்திரி பிரதானியர்களை நோக்கி லந்தூருடைய விஷயத்தில்உங்களுடைய யோசனைகளெல்லாம் எப்படியிருக்கின்றது சொல்லுங்கள் இப்பேர்ப்பட்ட பெரியபலவாகிய தஷ்மனை இப்பொழுதே அடக்காவிடில் பின்னால் பிரமிஞ்சிவிடுவான் அப்பொழுதுநாம் கைசேதப்படுமிடிதேரிடும் என்றுரைத்தான், அப்பொழுது புஜருச்மெஹரானவர் சபையிலெழுந்து பாதஷாவின் முன்பில்நின்று அவனைநோக்கிசொல்லுகின்றதாவது ஜவுராம்பனுவே முந்தி குஸ்தம் என்பவனை சங்கல்தீபுக்கு அனுப்பிவையுங்கள் பின்பு தர்பாரில் உள்ளவர்கள் யாவரையும் கூட்டி அவர்கள் முன்பில் சொல்லுங்கள் அவ்வாதனையில் யாராவது லந்தூரென்பவனை பிடித்துக்கொண்டு வந்தால் அவர்களுக்கு நாமுடைய வஜீறஜாகிய மெஹருன்னிகாரை கலியாணமுடித்து கொடுப்பேனென்று சொல்லுங்கள். இன்னும் அப்படி அவனை பிடித்துக்கொண்டு வருபவர்களுக்கு அநேக ஊர்களும் திரவியங்களும் இனம்தருவதாயும் சொல்லுங்கள் நம்முடைய பல்லியிலுள்ள ஸாஸானிக்கிலோஞர்களில் அவனை ஜெயித்துவெல்லதகுதியுடையகெஞ்சமைத்த பயில்வான்கள் அங்குசெல்ல தக்கவர்கள் ஒருவருமில்லை, ஹம்ஜாவானவர் அவ்வேலைக்கு இடிப்புக்கட்டி செல்வார். அப்படிச்சென்று அவர் அவனை ஜெயிக்காமல் அவன் கரத்தினால் இறந்துபோய் விடுவாராகில் தங்களுக்கு யாதொரு பழிப்பாகிய அபகீர்த்தியும் உண்டாகாமல் போய்விடும் அப்படிசாதாமல் ஜெயித்து பிடித்துக்கொண்டுவருவாராகில் இந்துஸ்தான் முழுதும் அதின்

தின்வசமாகுமென் றரைத்தார். அவ்வார்த்
தைகேட்டுச்சீட்ட பாதஷாவானவன் புஜபுருச்மேஹருடைய வார்
த்தையை மிகவும் சரியென்று ஒத்துக்கொண்டவனாய் குஸ்ரூமென்
பவன் பஹ்ராமை வெட்டிவிட்டு ஓடிப்போய் ஜாபலென்னும் சேசத்
தில் ஒளிந்திருந்தான் இவனாட்சென்றபின் அவனங்கிருப்பது தெரிய
வந்தது, ஆகையால் ஒட்டக சவாரிகாரர்களிடத்தில் பாதஷாவான
வன் ஓர் கடிதத்தில் குஸ்தமென்பவனுக்கு எழுதும் சேதியாவது
யாதெனில் உன்னுடன்கூட நாற்பதினாயிரம் சுத்தவீரர்கள் இருக்கி
ன்றபடியால் அவர்களுடனே நீ சங்கல்தீபுக்கு சென்று லந்தூர்பின்
சாதானென்பவனை ஜெயித்து பிடித்துவந்தால் உன்னுடைய குற்
றத்தை மன்னித்து உன்னை தர்பாரில் சேர்த்துக்கொள்ளப் படுமெ
ன்று எழுதியனுப்பினவுடனே வந்தான். மறுநாளே காலையில் தர்பாரில் யாவ
ரும் வந்துகூடி ஹாஜர்ர்னபின் அமீர் அவர்களும் வந்து ருஸ்தமு
டைய ஆசனத்தில் வீற்றிருந்தார். அவ்வேளையில் பாதஷாவான
வன் சபையோர்களை நோக்கி ஐ! சுத்தவீரம்பொருந்திய பெயர்பெற்ற
ஜஹாம்மர்திதனமுடைய ஸ்ரீரர்களே! பயில்வான் தனமென்னும்
வீரமாலையணிந்த இக்காந்திரின் வீரர்களே! ஹிந்துஸ்தானச்சே
ர்ந்த சங்கல்தீப் யென்னும் தேசத்தின் அரசனைய லந்தூர்பின்
சாதான் யென்பவன் எனக்கு நிரியாய் ஆகிக இடையூறு தேடிக்
கொண்டு என்னைப் பரிகாசம் செய்வதுபோல் மிதமிஞ்சித் தலைதடு
மாறி இருக்கின்றான். அவனை உங்களில்நின்றும் யாராவது, சென்று
ஜெயித்து வென்று சிரசைகொய்து, வருவீர்களாகில் அப்படிக்
கொண்டுவருபவர்களை யென்னுடைய மருமகனுக்கிக்கொண்டு அவர்
களை எனக்கு மிகவும் பற்றத துடையவர்களாய் நேசித்துக்கொள்
வேன், மஹிக்கர்திமஹருன்னிகா ரென்னும் பெண்ணை அவர்களுக்குகனி
யாணஞ் செய்துகொடுத்து ஹிந்துஸ்தான் முழுவதுக்கும் அவர்களை
தலைமையாக்கி வைப்பேனென்று சொன்னான், அப்பொழுது அச்ச
பையின்கண் இருந்த வீரர்களெல்லாம் ஒருவரும்போதொன்றும்பேசா
மலும் இருந்தவிடத்தை விட்டு அசையாமலும் வாயைத்திறந்து ஒரு
வார்த்தையும் பேசாதவர்களாய மவுனமுற்றிருந்து தங்கள்தங்கள்
மனதில் யோசிக்கின்றவர்களாயினார்கள் அது யாதெனில் சங்கல்தீ
புக்காவது எந்த பயில்வானுக்கும் செல்ல தணிவானு? முகலாவது
ஏகமாய் அகன்று பருத்து விரிந்த ஆழிய சமுத்திரம் குறுக்கேயிருக்
கின்றது. முதலில் அச்சமுத்திரத்தை கடக்க எவரால்முடியும் இர

ண்டாவது காடுமலை வனம் வனுக்திரங்கள் குறுக்கி
அவைகளை கடந்துசெல்ல அதிக கஷ்டமெடுக்கவேண்டும். மூன்
வது ஜந்துவயதில் பருத்த யானையின் தும்பிக்கையை வேரோடுபிடு
ங்கி யெறிந்து சாகச்செய்த ஜபர்தஸ்த் யென்னும் மிதமிஞ்சிய
வீரம்பொருந்திய லந்தூரானவன் இப்பொழுது சரியான இருபத்
தைந்து அல்லது முப்பது வயதையுடைய எவ்வான்வாலிப முற்று
இருக்கும் இக்காலத்தில் ஆயிரத்தியெழுநூறு மணங்கு பாரமுடைய
தண்டாயுதத்தை காத்திற் பிடித்து சுழட்டி அடிப்பவனுடைய
தேவைப் போன்ற பருத்த சரீரத்தை யுடைய அந்த லந்தூர்
பின்சாதா னென்பவனை ஜெயிக்க அப்பப்பா எவரால் முடி
யும் அவனிடம்போய் சாவதைவிட்டு இவிடத்திலேயே பாதஷாவி
னிடத்தில் எங்களால் ஆவதேது முடியாதென்று சொல்லி இவர்
காதீதால் வெட்டுண்டிறந்துபோவது மிகவும் மேலாயிருக்குமென்று
நினைத்தவர்களாய் கண்காணா தீபில் விழலாமாயென்று பலவாறு,
யோசித்து வாய்மூடி மவுனமாயிருந்தார்கள். யாவரும் அப்ப
டியிருக்கும் அவ்வேளையில் பயில்வானேஸ் ரோஜ்கார் சாஹிப்கான்
அமீர்ஹம்ஜா அவர்கள் யானையின்வாலையை முகத்த சிம்மமான்று
எகிரி யெழுந்ததுபோல் "யெழுந்து மார்பை நிமிர்த்து புஜங்களை
குலுக்கி தலைபை யசைத்து பாதஷாவை நோக்கி ஐஹாம்பனுவாகிய
பாதஷாவே இந்த அற்பமையாகிய எனக்கு உத்திரவிந்தால் மில்
லின் சென்று குஸ்ரோ இந்துஸ்தான் எனும் சங்கல்தீபை ஆளும்
அந்த லந்தூர்பின்சாதான் யென்பவனை உயிருடன் பிடித்துக்கொண்டு
வந்து தங்கள் பாதாரவிந்தத்திற்கு காணிக்கையாய் கொண்டுவந்து
சமர்ப்பிக்கின்றேன் ஆனால் மில்லினுக்கு அவிடம்போய் சேரும்
வரையில் தான் தாமதமாகும் அவிடம் சென்றவிட்டால் அவனை
பிடித்துக்கொண்டு வருவது வெகுசிக்கிரம் யான் அவன்கரத்தினால்
வெட்டுண்டிறந்து போய்விடவேணுகில் தங்களுடைய சிரசைச்சுற்றி
யுள்ள சத்தாக் கொடுத்துவிட்டேனென்று நினைத்துக்கொள்ளுங்கள்
இவ்விதம்சொன்ன வார்த்தையை கேட்டவுடனே பாதஷாவினு
டைய மனமானது விம்மிப்பூரித்து தேக புளகாங்கிதங்கொண்டு சங்
தோஷமுற்றவனாய் தானிருந்த தக்தைவிட்டு பெருந்து அமீர் அவர்
களை இறுகத்தழுவி கழுத்தோடு கழுத்து அணைத்து சொல்லுகின்
றான். ஐ! அபுல்உலாவே தாங்கள் செல்லும் விஷயத்தில் இப்பொ
முது நீங்கள் சொல்லிய வார்த்தைகளுக்குமே லதிகமாய் எனக்கு

திருப்பாயிருக்கின்றது தங்களுக்குஇப்போப்பட்ட ஹிம்மத் துணிவுகளில் இதைரியமில்லாவிடில் உங்களுடைய பயில்வான்தனத்தை எப்படிவிர்த்திக்கு கொண்டுவருவீர்கள். இவ்வளவுதைரியம் மனதில் நிறைந்திருக்கிறபடியால் நாளுக்குநாள் தங்களுடைய பெயருங் கீர்த்தியும் சிறப்புல்லியமும் ஒங்கிவளர்ந்து உயர்ந்து வருகின்றது யென்று பலவாறு புகழ்ந்த்வனுப் அநேக விலையுயர்ந்த வில்அத்தென்னும் பரிசளித்தான். பின்பு அமீர் அவர்களின் பிரயாணத்திற்காக முப்பது கப்பல்கள் ஆயிரம் ஆயிரம் சுத்தவீரர்கள் வாசஞ் செய்யும்படியாகிய விசாலமுடையதாய் தயார்செய்யும்படியு யுத்திரவுசெய்தான்பின்பு அமீர்அவர்கள்பாதுஷாவினிடத்தில் உத்திரவுபெற்றுகொண்டுதங்கள் கூட கூடாரத்திங்கண் போய்ச்சேர்ந்து பிரயாணத்திற்காக வேண்டி சாமக்கிரிவைகள்யாவும் தயார்செய்யஆரம்பித்து தங்களுடைய மனதிற்கு ஆறுதல் தேறுதல் செய்துகொண்டு தங்களுடைய பல்ஜுகளை அழைத்து நீங்கள் யாவரும் இன்றையதினமே பிரயாணமாகி பஸரா தேசத்தளவில்போய் தங்கி யான் வருமளவும் அவ்விடத்திலேயே தங்கியிருங்கள் யென்றுபாவரையும் செல்ல விண்டகொடுத்தனுப்பி விட்டு உம்ருவைபழைத்து உம்ருவே! நாம் சங்கல்தீப் அளவில் செல்வதற்கு பிரயாணமா யிருக்கின்றபடியால் இப்பொழுது ஒருமுறை சென்று நமது மலிக்காமெஹறுன்நிகாரை சந்தித்து வருவோமாகில் அது நம் மனதிற்கு அதிக ஆறுதலாய் இருக்கும் யென்றுரைத்தார். அதைசெவியுற்ற உம்ருவானவர் அமீரை நோக்கி அமீரே ஓர்கடிதம் காஜாபுஜ்ருச்மெஹ ரவர்களுக்கு இவ்விஷயத்தைக் குறித்து கேட்டெழுதுங்கள் அவர்கள் இதுவிஷயத்தில் என்னயோசனை சொல்லுகின்றார்களோ அதுபோல் நடந்துகொள்ளலாம் யென்று சொன்னார். அவ்வார்த்தை அமீர் அவர்களுக்கு அதிபசந்தாய் காணப் பட்டபடியால் உடனே அவர்கள் தங்கள்கரத்திலுலேயே காஜாபுஜ்ருச்மெஹரவர்களுக்கு ஓர்கடிதம் எழுதினார்கள் அக்கடிதத்தை உம்ருவாங்கிச்சென்று காஜாபுஜ்ருச் மெஹராவர்களுடையமாளிகையிற்சென்று அவரைகண்டு அக்கடிதத்தை அவர்கரத்திலீந்தார். அக்கடிதத்தை காஜாவானவர் வாசித்துணர்ந்து உம்ரு ஐயாரை தங்கள்கூட அழைத்துக்கொண்டு நேரே பாதுஷாவினிடம்சென்று பாதுஷாவை நோக்கி பாதுஷாவே! தங்களுடைய ஆலுகைதொடர்ந்து இந்துஸ்தான் முழுவதும் அமீர் ஹம்ஜாவானவர் பாதுஷா நௌஷேரவானை ஆகில் யென்பவரின் மருகரென்று பிரசித்தியாகும் இன்னும் உலகை

ல்லாம் அமீர் அவர்கள் தங்களுடைய மருமகனென்று ஜீஜுத்தான்னும் மமதைகொண்டு ஆணவம்படைத்தவீரர்கள் யாவரும் தங்களுக்குஞ்சிறந்துவுவார்கள். அப்போப்பட்ட மருமகனை நாம் இப்பொழுது சங்கல்தீபுக்கு அனுப்புகின்றபடியால் பார்ப்பவர்கள் கேட்பவர்கள் இஃதென்ன மருமகன் காண் அஷ்டதிக்கையும் பீரிபரிலனஞ் செய்யும் பாதுஷாவாயிருந்தும் கொஞ்சம் ஷர்பத்து கூட குடிக்கக் கொடுத்து பறிமாறுமல் இருக்கும் மருமகனும் ஓர் மருமகன் தானே யென்று பரிகாசமாய்பேசுவார்கள் நமது ஹம்ஜாவோ தம்முடைய உயிரையும் பொருட்டாயெண்ணுமல் நம்முடைய உத்திரவுக்கு தலை சாய்த்தவர்ய் உயிரை வலியக்கொடுக்க கொண்டுபோவதுபோல் தயாராயிருக்கின்றார் யென்றுரைத்தார். அவ்வார்த்தையை செவிமாந்திய பாதுஷாவுக்கு புன்நகைசெய்து இஃதென்ன ஓர் பெரிய காரியம் இப்பொழுதே ஹம்ஜாவை வரவழைத்து ஷர்பத்துகளை விதிதமாய் கரைத்து குடிப்பாட்டி அனுப்பிவைக்கலாம் யென்று சொன்னான் உடனே காஜாவானவர் பாதுஷாவின் உத்திரவைப் போல் அமீர் அவர்களை தர்பாருக்கழைத்தார்கள். அவர் வருமுன தர்பாரில் ஷர்பத்தை குலாப் முதலாகிய பலவித ஷர்பத்துகளை தயார் செய்துவைத்தார்கள் அமீர் அவர்கள் தங்கள் கூடாரத்தில் பிரயாணத்திற்காக வேஷ்டியயாவும் சித்தப்படுத்தி தயாராக்கிவைத்துவிட்டு பாதுஷாவினுடைய தர்பாரில்வந்து ஜுஜாநர்கள் அப்பொழுது பாதுஷாவானவை அமீர் அவர்களை அதிகபிரீதியோடும் முகப்பத்தோடும அருகிலிருத்தி முகமன்கூறி பலவித ஷர்பத்துகளையும் மகிலியுயர்ந்த பலவித இரத்தினங்களிழைத்த பொற்கிண்ணங்களையும் ஷர்பத்துகளையும் வரவழைத்தான். அப்பொழுது காஜாபுஜ்ருச்மெஹராவர் பாதுஷாவை நோக்கி ஜுஜாம்பஜு மருமகனுக்கு குடிப்பர்ட்டும் ஷர்பத்துதர்பாரில் வழங்குகிறதில்லை. எங்கிலும், அதை பெண்பிள்ளைகளிருக்கும் தானத்தில் அவர்கள் செய்யும் ரசமென்னும் சடங்கின்முறைப்படி நடத்திக் குடிப்பாட்டுவார்கள் யென்றும் இன்னும் இக்காரியத்தை ஜனப்பேகம் ஆகிய தங்கள் பத்தினி அவர்களுக்கு அறியப்படுத்தாமல் இவ்விடத்திற் செய்வது அறவே கூடாத காரியமென்றும் சொன்னார் இவ்வார்த்தையை யறிந்த நௌஷேரவானவன் காஜா அவர்களின் சொற்போல் சம்மதித்து புஜ்ருச்மெஹரைநோக்கி காஜாவே அமீர் அவர்களை தாங்களே அழைத்து அந்தப்புரத்தில்சென்று செய்யவேண்

திந்து முடித்துக்கொண்டு வாருங்களென்றும், இன்
யை மலிக்காமெஹருன்நிகாருடைய தாயாரானவர்கள் அமீர் அவர்க
ளுக்கு ஷர்பத்து குடிப்பாட்டும் அவ்விடத்தில்செய்யவேண்டிய சட
ங்குகள் யாவையும் ஒன்றுங் குறைவின்றியே நன்றாய் செய்யச்சொ
ல்லி உத்திரவுசெய்யுங்கள் செய்யுஞ் சடங்குகள் யாவும் தீர்ந்தபின்
அமீர் ஹம்ஜா அவர்களுக்கு வேண்டிய நல்லமரியாதையும் மிதமறச்
செய்யச்செய்யுங்கள் இன்னும்மலிக்காமெஹரங்கீவிடத்தில்சொல்லி
மலிக்காமெஹருன் நிகாரானவள் அமீர் அவர்களின் அமானிதமென்று
சொல்லச்சொல்லுங்கள் எங்களுடைய ஆபுரு இஜ்ஜத்து யாவும்
தங்களுடைய ஆபுரு இஜ்ஜத்தாக இருக்குமென்றும் தாங்கள்போ
கும் வேலையாகிய பாதுஷாவினுடைய முக்கியமான எதிரியை அதி
சீக்கிரத்தில் ஜெயமடைந்து உயிருடன் அழைத்துப்பிடித்துக் கொண்டு
வந்து மலிக்காமெகருன் நிஹாரை மணம்புரிந்து எங்களுடைய
மனதை யெல்லாம் சந்தோஷப்படுத்திவையுங்களென்றும் சொல்
லச் சொல்லுங்கள் என்று சொல்லி காஜாபுஜுருச் மெஹருடன்
அமீர் முதலாகியவர்களை அந்தப்புரத்திற் கனுப்பி வைத்தான்.
அதுபோல் காஜா அவர்களும் அமீர் அவர்களை அழைத்துக்
கொண்டு முதல்வாசற்படியில் நுழைந்து மஹலுக்குட் சென்று
பாதுஷாசொன்னவைகள் யாவையும் மலிக்காமெஹரிங்கீஸ் அவர்க
ளிடத்தில் அறியப்படுத்திக் கொண்டு இருக்கும்வேளையில் பஃத்தக்
கென்னும் அமாவாசை இருளில்பிறந்த கெடுதலைச் சித்தழுடைய
ஹராம்ஜாதனுனவன் தன்மனதில் நினைக்கின்றான் அஃதயாதெனில்
இப்பொழுது புஜருச் மெஹரவர்களோடு ஹம்ஜாவை அழைத்து
சென்றிருக்கின்றபடியால் கட்டாயம் மலிக்காமெஹரங்கீசாகிய பாது
ஷாவினுடைய மனவியை நேரே சந்திப்பார். ஆகையால் அந்த ஹம்
ஜாவுக்கு மெஹரங்கீஸுடைய நீதாவென்னும் சந்திப்பு உண்டாகாமல்
செய்துவிடவேண்டும். ஆகையால், ஏடே பஃத்தக்கென்பவனே நீ சீக்
கிரம்செல்லென்று தன்னுடைய கோவேறுகழுதையின்மீதேறி அதிக
வினாவாய் மாளிகையைநோக்கி சென்று, கர்பாரில்நுழைந்து மாளி
கையின் வாசற்படியில் போய்சேர்ந்தான். அதைகண்ட அமீர் அவர்
கள் உம்ரூவை நோக்கி ஐ! உம்ரு இதோவருகின்ற கறுத்த பலாயை
வாசற்படிக்கிப்புறம் அடியெடுத்து வைக்கவிடாமல் அப்படித்தானே
சரத்திவிடும் இந்த ஆபத்தாகிய பலாநம்மிடத்தில்வராமல் தலைத்து
விடும் அப்படிச்செய்தால் உமக்கு இருநூறு தங்கமொஹராக்களும்

கொடுத்து இன்னும் வேண்டியமரியாதையும் பி ஜ்ஜத்தா
ரைத்தார் உம்ருவானவர் அமீரை நோக்கி தங்களுடைய
யாகிய ஐயாரி வார்த்தையால் மற்றவரிபாதவண்ணமாய் தாங்கள் ஆழ
உள்ளே சென்று மஜாவென்னும் சந்தோஷக்கடலில் மூழ்கியிருங்
கள். யான் அந்த மர்தூதாகிய கழுதையை அவன் ஓடுகையில் எந்த
வழியைநாடி ஓடுகின்றானே அவ்வழியெல்லாம் செல்லாமல் அலைந்து
திரைத்து நாவுதொங்கசெய்து விடுகின்றேன் யென்றுரைத்தார்.
அதைகறிந்த அமீர் அவர்களும் காஜாவும் அரண்மனைக்குள் சென்றார்
கள். அவ்வேளையில் உம்ருவானவர் ஓடோடியும்வந்து பஃத்தக் உடைய
கோவேறு கழுதையின் கடிவாளத்தை பிடித்துகொண்டு அவனை
உள்ளே செல்ல விடாமல்நிறுத்திக்கொண்டு காஜாபக்தர்களுள்
இந்துஸ்தானே சேர்ந்தசங்கல்தீபுக்கு போகின்றோம் எங்களுடைய
ஹபீத்தானது பின்னையும் எங்களை இவ்விடத்திற்குகொண்டுவருகின்
றதோ அல்லாமல் அவிடத்தின் மண்ணுக்கிரையாகின்றோமோ அறி
போம் ஆகையால் இதோ நீங்களெழுதிக்கொடுத்த ஐந்நூறு தங்க
மொஹராக்களின் பத்திரமானது இருக்கின்றது இதை வாங்கிக்
கொண்டு மொஹராக்களை கொடுத்துவிடும் எங்களுக்கு வழிச்செல
விற்காவது உபயோகப்படும்.. தங்களுக்கும் கடன் தீர்ந்தாற்போல்
இருக்கும் என்றுரைத்தார். அதையுணர்ந்த பஃத்தக் என்பவன்
கோபமுற்று உம்ருவை நோக்கி நீயென்ன விபரீதமான மிருகமாய்
இருக்கின்றாயே இந்தவேளைதான் உன்கேழ்க்கும் சமயம் எந்த
இடத்தில் கடன்கேழ்க்கின்றது உனக்கென்ன அறிவிருக்கின்றதா?
இல்லையா? யான் இவ்வேளை ஹம்ஜாவின்கூட ஒத்தாசையாய் செல்
கின்றேன உன்னுடைய எஜமானுக்கு தூணையாய் போகின்றேன் நீ
இவ்வேளையில் குறுக்கிட்டு சகுனத்தடைபோல் மறிக்கின்றாய் கடன்
கொடுக்கும்படி சிட்டை காண்பிக்கின்றாய் நீபோய் பாதுஷாவினு
டைய தர்பாரில்பிரையாதுசெய்து கடனைபெற்றுக்கொள், இவ்விடத்
தில் யாதொன்றும்பேசாதே! நியாயஸ்தானத்தில் என்னைகொடுக்கும்
படி தீர்ப்பானால் தொடுக்கின்றேன் நீ என்னை வழிமறித்து மரியா
தைக் குறைவுசெய்து பணம்வாங்கலாமென்று நினைத்தாயா யென்று
ரைத்தான். அதை கேட்டுக்கொண்டிருந்த உம்ரு ஆனவர் அவனை
நோக்கி சொல்லுகின்றார் யாதெனில் ஒய்! சாஹிபே! நீ மொழிந்த
வார்த்தைகள் யாரிடத்தில் சொல்லும் வார்த்தையென்று நினைத்து
மொழிந்தாய் யாராகிலும் உன்னிலும் கையாலாகாத கைம்மனுட்டி

...ாய் இல்லுத்தவார்த்தைகளை உரைக்காமல் மீசை ...ணபிள்ளை சிங்கமாகிய என்னிடத்திலேயாடா உன்னு ...டைய அல்பவார்த்தையை உபயோகிக்கின்றாய், என்னை நீ இன்னும் அறியமாட்டாயா? யான் உன்னிடத்தில் பணம்வாங்க இராணிபெரு விடிலல்லோ ஹியாயஸ்தலத்தில் சென்று பிரயாதுசெய்து காசுவாங்க வேண்டும், கபர்தார்! கபர்தார்! முன்னேயென்னுடைய பணத்தைதரு வித்து கொடுத்துவிட்டு அப்புறம் வேறேபேச்சு பேசுயென் றுரைத் தார் அதையறிந்த பஃதக் யென்பவன் தன்னுடைய குலாமாகிய ...ழுக்கையர்களை விழித்து இந்த உம்ருவை அப்பால் பிடித்து விலக்கி தள்ளிவிங்கள் யான்செல்லும்வழியில் குறுக்கே மறித்துக் கொண்டுவேறு கழுதையின் கடிவாளத்தைப் பிடித்துக்கொ ண்டு தர்க்கம் செய்கின்றான் யென்றுரைத்தான். இக்கொடூரவார்த் தையைச் செவியில்கேட்ட உம்ரு ஆனவர் தங்களுடைய சித்தம் தங் களிடத்தில் இல்லாதவராய் மனம்பேதித்து கோபம் தலைக்கேறி ஒருபாய்ச்சல்பாய்ந்து பஃதக்கேறியிருக்கும் கோவேறு கழுதையின் பின்னால் ஏறி உட்கார்ந்துகொண்டு பிச்சுவாவை யுருவி பஃதக் குடைய விலாப்புறத்தில் வைத்து அடே மர்தூதானவனே உனக் கென்ன கேடுபிடித்து விட்டது இதோ உன்னுடைய உயிரை வாங்கும் பிச்சுவாவானது உன்னுடைய விலாவில் நிற்கின்றதுபார் இதோ உன்னுடைய குடல்களையெல்லாம் வெளியேபிதுங்கச்செய்து குப்பலாய்க் குவித்துவிடுகிறேன் யென்றார் அதை யறிந்த பஃதக் யென்பவன் சரீரம் நடுக்கியவனுப் பயந்து விலவிலத்து உம்ருவை நோக்கி தன்னுடைய பற்களை யெல்லாம் அவருக்கு காண்பித்து கெஞ்சி மன்றாடி உயிர்பிச்சைகேட்டான் அதையறிந்த உம்ரு ஆன வர் கோவேறுகழுதையை விட்டும் கீழேகுதித்தார். அப்படி குதிக் கும்போது தம்முடைய கரத்திலிருந்த பிச்சுவாவின் பிடங்கினால் பஃதக் உடைய சிரசை ஓரடியடித்துவிட்டு கீழே குதித்துவிட்டார் அவ்வடியினால் பஃதக் உடைய மண்டைபிளந்து இரத்தம் ஓட ஆரம் பித்தது, அப்படி ஓழுகி ஓடிக்கொண்டிருக்கும் இரத்தத்தோடு பஃதக் யென்பவன் பாதுஷாவினுடைய சமுகத்திற்குச் சென்று பாதுஷாவின் முன்பில் தன்னுடைய தலைப்பாகையைக் கழட்டி விசிரி அடித்து சொல்லுகின்றான். பாதுஷாவே! தங்களுடைய குலாம் ஆகிய அடுமையின் கதி இவ்விதமாயிருக்கின்றது ஓர் அற்பனுகிய ஜீயார்யென்பவன் என்னை அநேக ஜனங்கள் கூடியிருக்கும்படியாகிய

சபையில் இக்கெடு செய்யும்படிநேரிட்டது என்னுடைய ஜீஜத்தா னது தங்கள் சமுகத்தில் இப்படி இருக்கின்றது யென்றுசொல்லி அழு தான் அதை யறிந்த நௌஷேரவானுக்கு இக்காரியம் மனதிற்கு வரு த்தத்தை உண்டாக்கியபடியால் உம்ருவை யழைத்து கேட்கின்றான்: அஃதுயாதெனில் ஐ! உம்ரு இந்த பஃதக் யென்பவன் உமக்கென்ன கேடுசெய்தான் அதற்காக நீர் அவனை இப்படிச்செய்தீர் யென்று கேட்டான். அதை உணர்ந்த உம்ருவானவர் பாதுஷாவை நோக்கி எனதிறையே தாங்கள் யாவருக்கும் தந்தைபோலும் பிரெஞ்சும் குருவைப்போலும் மூர்ஷத்யென்னும் உபதேசியைப்போலும் உலக ரக்ஷகராய் இருக்கின்றீர்கள் தாங்களே இக்கியாயத்தை தீர்ப்புச்செய்யுங்கள் யார்மீது குற்றமிருக்கின்றதோ அவர்களை தங்க ளுடைய ஆக்ஞைக்குள் ஆக்குங்கள். அல்லது அவர்களை இருதண் டாயிவெட்டி காகம்பருந்துக் கிறையிடுங்கள் அல்லது மன்னித்துவிட் டாலும் விட்டுவிடுங்கள் இந்த பஃதக் உடைய ஐந்நூறு மொகராக்க ளுடைய அண்டிமர்ண்டு பத்திரமொன்று என்னிடத்திலிருக்கின் றது அத்தபணத்தை இப்பொழுது கொடுவென்றுகேட்டால்கொடுக்க மனமில்லாதவனுய் அதிக வருத்தப்பட்டு இல்லாதும் பொல்லாதும் நியாய வீரோதமான வசனங்களையும் சொல்லத்தகாத தூர்வார்த் தைகளையும் உபயோகித்தான். அதற்குயான் வஜீரே நாங்கள் இக் ...ல்தானைச் சேர்ந்த சங்கல்நீபுக்கு சொல்கின்றபடியால் இனி திரும் பிவருகின்றோமோ அல்லது எங்கள் வாழ்நாள் எப்படியாகுமோ தெரியவில்லை இப்பொழுது கொடுத்துவிட்டால் வழிச் செலவிற்கா வது உபயோகப்படும் யென்று கேட்டேன். அதற்கு இவன் தன்னு டைய குலாமாகிய அடுமைகளை விட்டு என்னை அடித்து உதைத்து இவ்விடத்தைவிட்டும் துரத்திவிடுங்க ளென்றுரைத்தான். அதைக் கேட்ட அடுமைகள் என்னை வாயில்வராத தூர்ப்பாஷைகளையெல்லாம் மிகவும் மனதை சஞ்சலத்திற்குள்ளாக்குபடியாய் உரைத்ததோடு என்னை அடிப்பதற்காக சுத்திவளைந்து துரத்தினார்கள் யார்செய்த புன்மையோ அல்லது எங்கள் முன்னோர்செய்த தவமோ அல்லது தங்களுடைய துஆபரக்கத்தோ யான் அவர்கள் கையில் அகப்படா மல் தப்பித்தோடிபிழைத்தேன். இல்லாதிருக்கில் என்னுடைய எதும் புகளைக்கூட இவ்வளவுநேரம் கண்களால் காணவுமாட்டீர்கள் யான் சங்கல் நீபுக்கு அமீர் அவர்களுடன் சென்று தங்களுடைய பகைவ னுகிய அந்த லந்தூர் யென்பவனை கண்களில் தூருப்புவிட்டாட்ட

வேணுமென்று எண்ணியிருக்கும் என் பெண்ணையெல்லாம் பாழாகி மண்ணோடு மண்ணுப் ஆகியிருக்குமென்பதில் யாதொரு சந்தேகமு மில்லை. ஜஹாம்பனுவாகிய தயாளகுண சிஷ்டையையுடைய பாதுஷாவே யானும் அப்படி ஓர் கண்ணியக்குறைவான அபவாதத்தித் திற்பிறந்த ஓர் சொற்பமனிதனல்ல என்னை ஆயிரக்கணக்கான ஜனக் கூட்டத்தின் நடுவே மானபங்கஞ்செய்து மரியாதைக்குறைவாய் வடிச்துத் திட்டுவதற்கு, அப்போப்பட்ட ஜனக்கூட்டத்தின் நடுவே என்ன அவமரியாதை செய்தபடியால் எனக்கொருகாலும் பிறக்காத அவ்வளவு கோபம் உண்டாகியும், அவைகளை யெல்லாம், பாதுஷா அவர்களுடைய தாக்ஷண்யத்தை மனதில் நினைந்து என் கோபத்தை யெல்லாம் அடக்கியும் பின்னும் பின்னும் ஏன்மனம் கேளாமல் என்னை யறியாமல் கோபமுண்டாகி பிச்சுவாவினுடைய பிடங்கினால் ஓர்தட்டு தட்டினேன் அவன்சிரசானது எலும்போடுகள்நிறைந்த சிரசானபடி யால் பட்டென்றுபட்ட உடியால் சட்டென்று இரத்தம் சிந்திவிட் டது. ஜஹாம்பனுவே இவ்விஷயத்தில் குற்றம் எவர்மீதிருக்கின்றது. தாங்களே யோசித்து தீர்ப்பு செய்யுங்கள் இதோ ஆவனெழுதி கொடுத்த அண்டிமாண்டு பத்திரமும். இருக்கின்றதென்று சட்டை ஜேபியிலிருந்து அப்பத்திரத்தையு மெடுத்து பாதுஷாவின் முன்பில் வைத்தார் அதையறிந்த பாதுஷா பீம்தக்கை நோக்கி, ஐ! அறிவில் லாத பீம்தக்கே. இவ்விஷயத்தில் குற்றம் உன்மீது பூர்த்தியாய் ருசுப்படுகிறபடியால், இவ்வழக்கிற்கு மூலாதாரக் காரியக் கர்த்தன் நீயேயென்று திட்டவட்டமாய் தெரிகிறது ஆகையால் இக்கூற் ணமே உம்மு இடத்தில், ஐந்நூறு மொஹராக்களும் கொடுத்துவிட்டு வேறே வேலைபார் இல்லாதவரையில் அதாலத்தில் நடத்தப்படும் நீதத்திற்குள்ளாகும்படி நேரிடும்மென்றுரைத்தான் உடனே பீம்தக் பென்பவன் தன்னுடைய கஜானாவிலிருந்து மொஹராக்களை தருவித்து உம்மு இடத்தில் கொடுத்துவிட்டு அழுக்கண்ணும் சிந்திய மூக்குமுடையவனாய் தலையைக் குனிந்துகொண்டு தன்வீடு போய்ச் சேர்ந்தான். உம்முவானவர் சந்தோஷத்தினால் பகல் தட்டிக்கொண்டு அமீர் அவர்கள் சென்றிருக்கும் பாதுஷாவினுடைய அரண்மனை அத் தப்புரத்திற்குச் செல்லப்போகையில் உம்மு ஆனவர் பீம்தக் உடனே இவ்விடத்தில் வம்புசெய்துகொண்டு வெளியில்நின்றுவிட்டபடியால் அமீர் அவர்களும் மக்பூல்உபாதாரும் மலிக்காவிருக்கும் அந்தப்புரத்திற் குள் சென்றிருந்தார்கள். அவ்வேளையில் மலிக்கா மெஹரங்கீலென்

னும் நௌஷேரவானுடைய மனைவியானவள் அமீர் அவர்களை நஸீனீயென்னும் பாதுஷாக்கள் இருக்கும்படியாகிய ஆசனத்தில்இரு க்கச்செய்து பாக்கினையும் தாகிகளையும் விளித்து அந்நேரத்திற்கு வேண்டிய சந்தோஷகரத்தின் சாமக்கிரியைகள்யாவும் கொண்டுவந்து திட்டப்படுத்தும்படி ஆக்கியாபித்துவிட்டு தானும் ஓர் ஆசனத்தில் தன்னுடைய புத்திரியாகிய மெகருன்நிகாருடனே உட்கார்ந்தாள். அவ் வேளையில் மனக்களிப்பையுண்டாக்கும் பலவித சந்தோஷகரமுடைய ஆயுத்தங்கள்யாவும் நடக்க ஆரம்பித்தது அவ்வேளையில் ஷர்பத்தும் பலமாறும் கொண்டாட்டம் நடக்க ஆரம்பித்தது.

இம்மிதிங்ஙனம் நிற்க, உம்முவானவர் பணத்தை வாங்கிக்கொ ண்டு பகலடித்தவராய் மூளிகையின் வாசற்படியில் வந்தடித்து, உள்ளேதுழைய போகும்வேளையில் வாயற் காவற்காரன் உம்முவை யென்று மரியாதையால் தனது காத்தின் தடிக்கொம்பினால் மறி த்து தடுத்து நீயார்? உள்ளேசெல்ல போகிறாய், உத்திரவில்லாமல் உள்ளேசெல்ல பார்க்கின்றாயென்று கொன்னன் உட்னே உம்முவா னவர் இரண்டு காங்களாலும் தனது கண்களை பொத்திக்கொண்டு கீழேவிழுந்து, கடகடவேனப்புரண்டு கோ கோ? இக்காவற்காரன் என் கண்களை உடைத்துக் கெடுத்துவிட்டான், யென்றலறி கூச்ச லிட்டார் இதைக்கண்ட காவற்காரன்பயுந்து சரீரம் நடுங்கியழுகை ஓ! கே! இஃதென்ன கொடுமையா யிருக்கின்றதேயென்று மனதில் பலவாறு சிந்தித்தவனாய் உம்முவை யடித்து, பாபா! தங்களை யான் அடிக்கவில்லையே தடியால் மறித்தேனேயொழிய வேறென்றும் செ ய்யவில்லை எப்படிக் கண்ணில் பட்டது யென்று பலவிதமாகிய நல்ல வார்த்தைகளை யுரைத்துக்கொண்டிருக்கும்வேளையில் உம்முடைய கூச்சலைக்கேள்வியுற்ற மலிக்கா மெஹரங்கீலானவர் இஃதென்ன வெளிவா சற்படியில் கூக்குரல் சப்தம்கேட்கின்றது அதை போய் அறிந்துவா ருங்கள் யென்றுரைத்தாள். உம்முவுடைய சப்தத்தை செவியிற்கேட் ட அமீர் அவர்கள் திடுக்கிட்டெழுந்து பதைபதைத்து ஓடினார். அமீர் அவர்கள் ஓடிவதையுணர்ந்த காஜா புஜாருக்மெஹரும் கூட நடந்தார், அமீர் அவர்களும் காஜாவும் ஓடோடியும்வந்து பார்க்கையில் உம்மு பூமியிற்கிடந்து கண்களை பொத்தியவராய் கடகடவென்று புரண்டு கூச்சலிடுவதையுணர்ந்து உம்முவின் அருகிற்சென்று அவ! உம்முகண் களில் என்ன கண்ணை நிறவும் ஏதாவது காரமுதலியவைகள் உண்

டாகயருந்திஜி அதற்காக தாஜா அவர்கள் அதற்குதக்க பரிகாரம் செய்வார்கள். கண்ணிலுற்றிருக்கும் நீங்கின்றதென்று வாயினால் சொல்லும் பெண்ணரைத்தார். என்னசொல்லியும் எவ்விதம்தேட்டும் உம்ரு ஆனவர் கண்களை திறக்காமலும் வாயினால் இன்னதென்றுரைக்காமலும் ஐ! ஐ!! என்னுடைய கண்கள்போனதே கண்கள்போனதேயென்று கூச்சலிட்டுக்கொண்டு இருந்தாரேயொழியவேறேயொன்றும் சொல்லவில்லை, பின்பு அமீரவர்கள் தங்கள்கரத்தினால் உம்ருடைய கைகளைபிடித்து அவர் கண்ணைவிட்டும் வெளியிலிழுத்து, பார்க்கையில் உம்ருவுடைய கண்களானது யாதொரு வின்னமில்லாமல் ஈசுவரனுடைய கிருபையினால் முன்போலவே ஜோலிக்கக்கண்டு, ஐ! உம்ரு இம்மாதென்னகுறும்புத்தனம்? நீரென்ன உபயோகமில்லாமல் கூச்சலிட்டு எங்களுடைய மனதையெல்லாம் வியாகுலத்தில் ஆழ்ந்தச்செய்து இருந்த இடத்தைவிட்டும் எங்களை ஓடிவரச்செய்தீர்? ஜனப்மலிக்கா மாஹாஜாமாஹிய பேகம்சாஹிபா அவர்களையும் கலங்கச்செய்தீர் யென்று கேட்டார். அதையுணர்ந்த உம்ரு அமீரே தங்களுடைய சரிசின்பேரிலாணையாக இந்தக் காலற்பாரதி என்னை அடிக்க தடியை ஓங்கினான், நிஜமாக்வே அவன் அடித்திருப்பானென்று யென்னுடைய கண்கள் போயிருக்கு மென்பதில் யாதும் சந்தேகமே இல்லை யென்றுரைத்தார். அவ்வார்த்தையைக் கேட்ட அமீர் அவர்களும் புஜாருச்மேஹரவர்களும் குலுங்க குலுங்க நகைத்தவர்களாய் உம்ருவை கரத்தைப் பிடித்தழைத்துக்கொண்டு மாளிகைக்குள் சென்று அவரவர்கள் இருக்கும் ஸ்தானங்களில் இருந்து பின் வெளியில் உம்ரு கடத்திய கோலாகாலக்கூத்துகளை மலிக்கா மெஹராங்கேலிடத்திற் சொன்னார்கள். அதையுணர்ந்த மலிக்காவும் உம்ரு உடைய தந்திரவித்தைக்காகமிகவும் கெக்கலி இட்டு நகைத்தாள். பின்பு அமீர் அவர்களுக்கு வள்ளமைபடி ஷர்பத்து குடிப்பாட்ட ஆரம்பித்தார்கள். முபாரக்கி யென்னும் மங்களவார்த்தையுடைய கோஷ்டம் நடந்தேறியது. மலிக்கா மெஹருன் நிகாருடைய தோழிப்பெண்கள் யாவரும் சந்தோஷக்கொண்டாட்டம் கொண்டாடினார்கள். அவ்வேளையில் அச்சபையின் கண் இருந்த யாவருக்கும் அவரவர்களின் இயல்புக்கு தக்கவாறு இனம் முகலாகிய பரிசளிக்கப்பட்டது. மலிக்கா மெஹராங்கிஸானவர், அமீரவர்களை நோக்கி ஐ! சாஹிப்கரான் ஆனவர்களே என்னுடைய எகபுத்திரியாகிய மலிக்கா மெஹருன்நிகாரென்னும் பெண்ணானது தங்களுடைய் அமானிதமாயிருக்கும் வெட்கம் இஜ்ஜத் முதலாகியவைகள் தங்களுடையதாயிருக்கும் எத்தவேன்பெண்ணாளை இத்தால்தாணவிட்டு திரும்பி இங்குவந் தடைகின்றீர்களோ அப்பொழுதே மலிக்காவை தங்களுக்கு உரூபதென்னும் கலியாணம் செய்துவைப்பேன். தங்களுடைய நாட்டத்தையும் பிரியத்தையும் நிறைவேற்றிவைப்பேன் யென்றுரைத்தாள். அப்பொழுது உம்ரு ஆனவர் காஜாபுஜாருச்மெஹரை நோக்கி சொல்லுகின்றார். அஜாத்தே! நல்லாயிருக்கின்றது. வ! இப்படித்தான் சம்பாஷணம் கலக்கின்றதோ? பேஷ்! பேஷ்!! நல்ல ஞாயம்! நல்ல சம்பந்தர், நல்லபரியம்! நாங்களோ பாதுஷாவிற்காக எங்களுடைய சிரசுகளை ரிப்பப்படுத்துவதற்காகப்பிரயாசையோடு செல்லுகின்றோம். அப்படியிருக்க தாங்கள் மலிக்காமெஹருன்நிகார் அவர்களை நோக்கி தங்கள் கண்களால் ஒருவித்தம் பார்த்துவிட்டுப் போகும்படி காண்பிக்கக்கூடாதோ? நாங்கள் அவ்வளவுதூரத்தை ஆலாவினுடைய கிருபையினால் அங்குசென்று அவனருளால் வந்தாரை வென்று ஜெயமடைந்து, பிடித்துக்கொண்டு வந்தபின் நீங்கள் பிரியாவது ஓர் பில்லுர்கட்டுகாரியை இவன்தான் மேலுருன்நிகாரென்று அமீர் அவர்களுக்கு விவாகம் செய்துவைத்தால் அதை நாங்கள் பார்த்துக்கொண்டிருக்கின்றோமோ? நாங்கள் என்னத்தை கண்டோம்? பாதுஷா அவர்களுடைய புத்திரி கறுப்பென்னும், சிகப்பென்னும், குட்டையென்றும் நெட்டையென்றும், கேவலி சென்றும் மொத்தமென்றும் ஆலது நடுத்தரமென்றும் இவைகளுக்கென்னதெரியும், இப்பொழுதே நாங்கள் பார்த்துவைத்துக்கொண்டால் பின்னல் துன்பத்திற்குள் சிக்காமல் விழித்துக் கொள்வோம் பாதுஷா அவர்களுடைய ஊப்பின்மேல் ஆணையாக மலிக்கா மெஹருன்நிகாரை எங்கள் கண்களால் பார்க்காதவரையில் இவ்விடத்தைவிட்டும் அடிபெயர்த்து வெளியில் வைக்க மாட்டோம் யென்றுசொன்னார். அதையுணர்ந்த மலிக்காமெஹராங்கீலானவள் உம்ருடைய சொல்லைக்கேட்டு குலுங்குநகைத்தவளாய் சொல்லுகின்றாள் எங்கிலும் ஆண்பிள்ளைகள் பெண்களைபார்ப்பது வழக்கமில்லை. பெண் பிள்ளைகள் பரியம்போடுவதென்று வழக்கம் செய்துகொண்டு அப்புகலின்பொருட்டாய் பெண்களைபார்ப்பார்களே பொழிய ஆண்பிள்ளைகள் பார்ப்பது வழக்கமில்லை யென்றுரைத்தாள். அதற்கு மெஹராங்கீஜை நோக்கி உரூபா தாங்கள் சொல்வதெல்லாம் மிகவும் சரியே ஆனால் இவ்விடத்தில் எங்களுக்கும் எத்தகாலாவர், எந்த மம்மானியும் எந்த குப்பியும் எந்த பெரியம்மாளும் எந்த

உற்றாரும் இருக்கின்றார்கள். இங்குவந்து மலிக்கா பேகம்சாஹிபா அவர்களை பார்த்துவிட்டு போவதற்கு, எங்களுக்கு முற்கூறிய யாவருக்கும் பதிலாய் தாங்களேயல்லாமல் வேறொருவருமில்லை. ஆகையால் தாங்களே எங்கள் வாரீஸ்தாரர்ய் நாங்கள் நினைத்திருக்கிறபடியால் நீங்கள் மனுவை தாங்கள் நிறைவேற்றி வைப்பிக்களென்று நினைக்கின்றேன் யென்றுரைத்தார். அதையுணர்ந்த மெஹரங்கீஜ் உம்ருவை நோக்கி சாஹிபே யான் சொல்வதை சொன்னேன். இருப்பதெல்லாம் உங்களுடைய இஜ்ஜத்து, ஆபுருயென்னும் சங்கையாயிருக்கின்றபடியால் சந்தோஷமாய் தாங்கள் பார்த்துக்கொண்டு போங்களென்று மொழிந்து காஜா புஜுருஜ்மேஹரை நோக்கி காஜாவே அமீர் அவர்களை பர்தாவிற்குள் அழைத்துச்சென்று மலிக்காவை காண்பியுங்கள் யென்றுரைத்தாள். உடனே காஜா வானவர் அமீர் அவர்களை பர்தாவிற்குள் அழைத்துசென்றார், அப்பொழுது அமீர் அவர்கள் மலிக்கா மெஹரங்கீஸைக் கண்டு ஆதரிப்தஸ்லீம் புரிந்து நஜர்யென்னும் காணிக்கைக் கொடுத்தார், அதை பெற்ற மலிக்கா பேகம்சாஹிபா? அமீர் அவர்களுக்கு மிகமிக ஆயுயென்னும் வாழ்த்துதல்செய்தாள், அப்பொழுது மெஹருன்நிகாரானவள் தலைகுனிந்தவளாய் தாயாரின் மடியின்மீது உட்கார்ந்திருந்தாள், வெட்கத்தினால் தலையை உயர்த்தி பார்க்காமல் குனிந்தேயிருந்தாள், அப்படியிருந்தாலும் அமீர் அவர்களை கண்டவுடனே ஒருபுஜம் இருபுஜமும் ஒன்றுபூரித்து சந்தோஷத்தினால் தேகபுளகாங்கிதங்கொண்டு தானணிந்திருந்த ரவிக்கையானது பட்டென்று தெறித்து மார்புதிறந்தது, அவ்வேளையில் மலிக்கா மெஹரங்கீஸானவள் மகளருகே மருகர் இருப்பதைநோக்கி சந்தோஷக்கடலில் மூழ்கியவளாய் ஆனந்தமூற்று அமீர் அவர்களை. மகளுக்குத் தக்க புருஷனென்று சம்மதப்பட்டிருந்தாள். அவ்வேளையில் புஜுருச்மேஹரானவர் மலிக்கா மெஹருன்நிகாரை நோக்கி அம்மா! மலிக்காவே! அமீர் அவர்கள் அதிக தூலதூரமாகிய சபர் செல்கின்றபடியால் ஏதாவதோர் அடையாளம் கொடுங்களென்று சொன்னார் அதையுணர்ந்த மெஹருன்நிகாரானவள் தன்னுடைய விரலில் அணிந்திருந்த ஓர் ஐம்ருத்தினாலாகிய மோதிரத்தைக் கழட்டி அமீர் அவர்களின் கரத்தில் சேர்த்தாள். அதை அமீர் அவர்கள் வாங்கி தங்கள்விரலில் அணிந்துக்கொண்டு தங்கள் விரலிலிருந்த ஓர் மோதிரத்தைக்கழட்டி மலிக்காவுக்கு கொடுத்து சொல்லுகின்றார், என்னுடைய நிஷானியாகிய அடையாளம் தங்க

விடத்திலு மிருக்கட்டும் அப்பொழுது என்னையும் எப்போதும் தாங்கள் நினைத்துக்கொண்டிருக்கும்படி நேரிடும், யென்றுரைத்தார். அவ்வேளையில் உம்ருவானவர் மலிக்கா மெஹரங்கீஸை நோக்கி தாயே உத்திரவாதல் அடியேனும் சில வார்த்தை யென்மனதில் இருக்கின்றதை தங்கள் செவிமட்டில் எத்திவைக்கின்றேன் யென்றுரைத்தார். அதையுணர்ந்த மலிக்கா மெஹரங்கீஸானவள் அப்படியானால் உம்மனதில் யாது உறைத்து கிடக்கின்றது அதனை வெளியிடும்பார்ப்போமென்று உரைத்தார், அவ்வார்த்தையை கேட்ட உம்ரு சொல்லுகின்றார். உலகமாதாவாகிய தாயே அமீர் அவர்களின் விவாகம் நடந்தேறும் காலத்தில் மிஸ்கீன் ஆகிய பெண்ணுடைய கலியாணமும் மலிக்கா அவர்களுடைய தாயாளினுடைய புத்திரியாகியபித்னுபானும் வெண்ணும் பெண்ணுடன் கட்டாயமாய் ஆகும், ஆகையால் எனக்கு ஏதாவது அடையாளம் கொடுக்கும்படியாயும் ஷர்பத்து முதலாகிய ரசமென்னும் சரத்துகளை தாயா அம்மா அவர்களைக்கொண்டும் நடப்பித்துவைக்கும்படி உத்திரவுசெய்யுங்களென்றுரைத்தார். அதை உணர்ந்த மெஹரங்கீஜானவள் தானவளோநோக்கி, ஏ! தாயியே! உம்ரு சொல்வதை அறிந்தாயா? அவர் என்சொல்லுகின்றார். அவர் சொல்வதுபோல் தனக்குபிரியமிருப்பதாய் தெரியவருகின்றதுயென்றுரைத்தாள். மலிக்காவினுடைய வார்த்தையை உணர்ந்த தாயிவானவள் மலிக்காவினுடைய அதிர்ஷ்டபாக்கியத்தினால் சீக்கிரத்தில்விவாகம்நடந்தேறும் காலம்ஆகட்டும் அந்நாட்களின் மலிக்காவினுடையபாத்தியாகிய அப்பெண் எங்கேபோய்விடுகின்றாள்நம்முடைய மலிக்காவுடைய பிரியம் எப்படி இருக்கின்றதோ அதுபோல் நடத்தட்டும் யென்றுரைத்தாள் அவ்வேளையில் மெஹருன்நிகாரானவள் மெள்ளச்சிரசை ஒருக்கணித்து கடைக்கண்ணால் தாயியை நோக்கி சம்மதப்பட்டுக்கொள்ளென்று இஷாராவென்னும் சைகைசெய்தாள் உடனே தாயி ஆனவள் உம்ருவுக்கு தன் புத்திரியை விவாகம்செய்துகொடுக்க சம்மதித்துக் கொண்டாள். உடனே பேகமாகிய மலிக்காமெஹரங்கீஜ் பித்னுபானுவை நோக்கி நீயும் ஏதாவது உம்ரு ஐயாருக்கு உன்னுடைய அடையாளம் கொடுயென்று ஆக்ஞாபித்தாள். உடனே பித்னுபானுவானவள் எத்தனையோ நூற்றுக்கணக்கான இமாஹராக்கள் பெறுமதியான அத்தர்தான் ஒன்றையெடுத்து உம்ரு ஐயார் கையில் சேர்த்தாள் உடனே மறுபடியும் மலிக்கா மெஹரங்கீஸானவள் பித்னுபானுவை நோக்கி பெண்ணேநீயும் அவ்வும்ரு இடத்திலிருந்து

வதினவசனீர் அடையாளம் பெற்றுக்கொள்ளென்று சொன்னள். அவ்வார்த்தையை கேட்டவுடனே உம்ரு ஆனவர் தாயே இதோ யானும் கொடுக்கின்றேன் யான் மாத்திரம் வாங்கிக்கொண்டு என்னுடைய மாஷூக்காவுக்கு கொடுக்காமல் இருந்து விடுவேனு அப்படியான் கொடுக்காத லோபியென்று நினைத்தீர்களா? வென்று சொல்லிக்கொண்டே சட்டை ஜேபில் கையைவிட்டு குலுக்கி குலுக்கி தடவி தடவி அதிக பிரயாசையுடனே ஓர் சொத்தைப் பேரீச்சங் காயும் இரண்டு அக்ரோட்காயையும் எடுத்து கொடுத்து இதனே பெரிய நியாஜென்னும் காணிக்கையைப்போல் வெரு ஜாக்கிரதையாய் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ளுங்களென்று பித்னபானேவினுடைய காதிலோதினார் இவ்விதமான ஆச்சரியமான ஆகல்விய வேலையை உணர்ந்த சபையோர்கள் யாவரும் சிரித்துசிரிப்பினால் அப்பப்பா வென்று வயற்றைப் பிடித்துக் கொள்ளும்படி சிரித்தார்கள். பின்பு அமீர் அவர்களும் மற்றவர்களும் அவிடம்விட்டு வெளியில் தர்பாரை நோக்கி சென்றார்கள். இப்படிச் செல்லும்வேளையில் காஜாபுஜருச் மெஹரானவர் உம்ருவை நோக்கி பாபா உம்ரோ! லஷ்கரிலுள்ளவர்கள் அமீர் அவர்கள் செல்லு வெகுதோமாகியும் இன்னும்வரக் காணுமென்று பலவிதம் யோசித்திருப்பார்கள். ஆகையால், நீர் அங்குசென்று இதோ அமீர் அவர்கள் வருகின்றார்கள் பல்லின்கண்யாவரும் பயணத்திற்கு ஆயத்தமாய் தயார்செய்து கொண்டிருங்கள் வந்தவுடனே புறப்படலாம் என்று அவர்களை சமாதானப்படுத்தி கொண்டு இரும்மென்று உம்ருவை அனுப்பிவிட்டு காஜாவானவர் அமீர் அவர்களை தங்கள் மாளிகைக்கு அழைத்துச்சென்று ஆசனத்திலிருக்கச் செய்துவிட்டு பாதுஷாவினிடத்திற் சென்று சொல்லுகின்றார். பாதுஷாவே மலிக்கா மெஹரங்கீஜானவர்களும் முழுமனத்தோடு அமீர் அவர்களை தங்கள் மருகராய் அதிக பிரியத்தோடும் மதித்து கொண்டார்கள் என்றுரைத்தார். அதீதயுணர்ந்த பாதுஷாவானவன் அமீர் அவர்களை வரவழைத்து அநேக விலையுயர்ந்த மாப்பின்னே ஜோடிப்போகிய இல்அத்து, தென்னும் உடுபிடவைகளை இனாமாய்க் கொடுத்தான். பின்பு காஜாபுஜருச் மெஹரானவர் அமீரை தங்கள் மாளிகைக் கழைத்துசென்று பலவிதமான இடைவிடா நற்போதனைகளாகிய நசியத்தென்னும் வாக்கியங்களை போதித்து ஷர்பத்து குடிப்பாட்டினர். அந்த ஷர்பத்தில் பேஹோஷ்யென்னும் ஸ்மரணையற்றுப் போகும்படியான மயக்க

முடைய மருந்தை இன்நாளையில் இங்கிலீஷ்காரர்கள் அறுத்து சிகிச்சைசெய்யும் வேளையில் உபயோகப்படுத்தும் குளோரிபார்ம் என்னும் மருந்தைபோல். அதில் கலந்திருந்த படியால் உடனே அமீர் அவர்களுக்கு மயக்கமுண்டாகி ஸ்மரணையற்று விழுந்து விட்டார். அவ்வேளையில் காஜாவானவர் அமீர் அவர்களின் திகிடனையக்கிறி ஷாமோஹராவென்னும் ஓர்வகை அற்புதபிரயோசனத்தைகொடுக்கும்படியாகியகல்லைவைத்து பழையபடிகாயத்தைதைத்து அதின்மேல் அப்பொழுதே வடுக்களில்லாமல் தானும்பாகி விடும்படியான மரஹமே தாவுதியென்னும் தாவுத் அலைகிஸ்ஸலாமுடைய காயமாற்றும் மருந்தை தடவினர். அதை அறிந்த மக்பூலானவர் காஜாவை நோக்கி ஹஜரத்தே இம்மருந்தை எதற்காக பிரயோசனப்படுத்தினதை அடியேனுக்கு தெரியப்படுத்தும்படி வினவினர், அதற்கு காஜா மக்பூலை நோக்கி மக்பூலே இப்பொழுது அமீர் பிரயாணம்மாயிருக்கும் சங்கல்தீபில் ஓர் பஞ்சிதன் அமீர் அவர்களுக்கு விஷத்தைக்கொடுத்து விடுவான் அவ்வேளையில் அவ்விஷத்தை முறிப்பதற்கு இந்த துன்பரில் இம்மருந்தை தவிற வேறொன்றும் கிடையாதாகையால் இம்மருந்தைவைத்து வைத்துவிட்டேன் கபர்தார்! கபர்தார்!! பத்திரம்! யாரிடத்திலும் இவ்விஷயத்தை வெளிப்படுத்த போகின்றீர் அறவே ஒருவரிடத்திலும் சொல்லாதீர் எப்பொழுது உம்ரு கதர்கால் நீர் அடிபடுகின்றீரோ அதுவரையில் ஒருவருக்கும் சொல்லக் கூடாது என்று தாக்கீதுசெய்துவிட்டு ஓர் தைலத்தை யெடுத்து அதில் நின்றும் இரண்டு மூன்று துளி அமீர் அவர்களின் வாயில் விட்டார் உடனே அமீர் அவர்கள் தூங்கி யெழுந் தவரைப்போல் யெழுந்தார் தடையில்லைவைத்து தைத்த மோராவின் செய்தியும் அமீர் அவர்கள் அறியாதவிதமாய் காயமும் ஆறிப்போய் சுத்தமாய் இருந்தபடியால் நடந்த விஷயங்களொன்றும் அமீர் அவர்களுக்கு அறவே தெரியாது இப்படி யிருக்கும் வேளையில் உம்ரு ஆனவரும் கூடாரத்திற்குச் சென்று கொல்ல வேண்டியவைகளை யெல்லாம் தளகர்த்தர்களிடம் சொல்லிவிட்டு திருப்பி காஜா புஜருச்மெஹரானவர்களின் மாளிகையில் வந்து சேர்ந்தார். உடனே புஜருச்மெஹரானவர் அமீர் அவர்களை டோலாவுக்கு செல்ல உத்தரவு கொடுத்து அனுப்பிவிட்டார், அமீர் அவர்கள் தங்கள் கூடாரம்போய்ச் சேர்ந்து வளமைபோல் யாவரும் தங்கள் தங்கள் சாமான்களை யெல்லாம் கட்டியெடுத்து ஒட்டகங்களின் மீதேற்றிக்கொண்டு கட

தென சமுத்திரக்கரையை நாடிசென்றார்கள். அப்பொழுது பாதுஷாவி னுடைய தர்பாரில் இருக்கும் ம்ராக்களும் வஜீர்களும் ஹக்கீம்களும் ஆலிம்களும் மற்றும் பெரிய பெரிய உத்தியோகஸ்தர்கள் யாவரும் அமீர் அவர்களோடு கூடச்சென்று வழியனுப்பி வருவதற்காக பேர் னர்கள். அவர்கள் யாவரும் அத்தேசத்தின் எல்லை கடைசி வரை யில் அமீர் அவர்களை கொண்டுபோய் பயணமனுப்பி விட்டுவிட்டு தங்கள் தங்கள் இருப்பிடம்போய்ச்சேர்ந்தார்கள். அமீர் அவர்களும் அவர்களின் பவ்ஜ்களோடு அல்லாஹுத் தஆலாவை நாடியவர்க ளாய் நடந்துசென்றார்கள்.

அவ்விதம் நடந்து சிலநாளையில் பஸரா வென்னும் தேசம்போய் சேர்ந்து, அப் பஸரா தேசத்தின் கடற்கரையருகில் விடுதி விட்டிற ங்கி யிருந்தார்கள். அவ்வேளையில் பாதுஷாவினுடைய உத்திரவின் படி மூப்பது படைக்கப்பல்கள் துறைமுகத்தில் வந்து தயாராய் நின்றுகொண்டு அமீர் அவர்களின் வரவை எதிர் பார்த்துக்கொண்டி ருந்தது, அதை உணர்ந்த அமீர் அவர்கள் தங்களுடைய முப்பதினா யிரம் பவ்ஜ்களோடு அக்கப்பல்களில் ஏறினார்கள். உடனே உம்ரு ஆனவர் கப்பலைவிட்டும் இறங்கி நின்றுகொண்டு அமீரே சலா முன் ஆலைக்கும், தாங்கள் யாவரும் போய்வருங்கள் யான் இன் களுக்கும், மாந்திரீகத்திற்கும், ஜூலத்திற்கும் மிகவும் பயந்தவனை படியால் யான் இத்துஷ்தானுக்குவாமாட்டேன் மக்கமாநகரத்திற்குச் சென்று காஜா அப்துல்முத்தலீபிடம்போய் தங்களுடைய பத்தாவை வென்னும் ஜெயத்திற்காக அல்லாஹுத் தஆலாவிடத்தில் துஆகேட்டுக் கொண்டு இருக்கின்றேன், என்றுரைத்தார், உம்ரு உடைய வார்த் தையையுணர்ந்த அமீர் அவர்கள் இஃதேது உம்ருஆனவர் நடுவழி ழியில் சோர்த்துடியை கழுத்தைவிட்டும் கீழே போட்டுவிட்ட வண்டி மாட்டைப்போல் முறுக்கிக் கொண்டாரே இவர் சரிமென்ன சொல் னாலும் வழிக்கு வராமாட்டார் இவருடைய குறும்புத்தனம் நமக்கு தெரிந்ததுதானே ஆகையால் இவரை வாயினற்சொல்லி வசப்படுத்த முடியாது தந்திரத்தினல் கொண்டுபோகவேண்டுமென்றகருதியவரா ய் உம்ருவைநோக்கி ஆ ஹா! அப்படியா தமக்கு அச்சமுடைய ஒரு விஷயத்தைச்செய்ய எனக்கும் இஷ்டமில்லை. தம்முடைய பிரியம்போல் மக்கமா நகரத்திற்குச் செல்லும் யான் ஓர் கடிதம் பெழுதி தரு கின்றேன் அதை யென்னுடைய பிதாவினிடத்தில் கொண்டுபோய்க்

கொடுத்தனிம், அக்கடிதம் பெழுதுவ்வரையில் சற்று தாமதித்து நில்லும் என்னுரைத்தார், மெய்யாகவே கடிதம் பெழுதிகரப் போ திருரென்று கம்பிய உம்ரு ஏமாந்து படகிலேறி கப்பலில் கடிதம் வாங்குவதற்காக அமீரையடைந்தார் அவர்கள் ஓர் கடிதத்தையெழுதி மடித்து முத்திரையிட்டு உம்ரு உடைய கரத்தினிலீந்து உம்ரு இனிதாம் ஒருவரையொருவர் சந்திப்பது வந்தகாலமோ அல்லாதானறிவான். ஆகையால் நாம் கட்டித்தழுவிக்கொள்வோம்என்று ஒருவரையொ ருவர் கட்டித்தழுவிக்கொண்டு தம்முடையபிரியினையின்மனவருத்தம் ஏற்பொழுது நீங்குமோயென்றுசொல்லவே உம்ரு உடைய கல்நெஞ் சமானது மெழுகைப்போல் உருகி கண்களில் நின்றும் நீர் தாரை தாரையாய் ஓட ஆரம்பித்துநின்றார் அவ்வேளையில் அமீர் அவர்கள் வும்ருவை இருகரங்களால் அணைத்து கட்டிப்பிடித்து தழுவிக்கொள் வதுபோல்பிடித்துக்கொண்டு ஐ! யாரே! நல்லசெய்தியுரைத்தீர் இப் போர்ப்பட்ட பெரியபெரிய முஹிம்மத்தாகிய யுத்தங்களிலெல்லாம் நீர் கூடவிருந்து ஈடுகொடுத்துவந்தவர் இச்சொற்பவிஷயத்தில் கலைத்து பயந்து ஓடிவிட பார்க்கின்றீர், இப்பொழுது உம்மைவிட்டுப் பிரிய னைக்கு அறிவேமனம் உண்டாகவில்லையென்று சொல்லிக்கொண்டே திரும்பிகப்பித்தானைநோக்கிசைகைசெய்ய கப்பலெல்லாம்பொத்தலிட் டும்படி உத்திரவுசெய்தார் அமீர் அவர்களின் உத்திரவைஎதிர்நோக்கி பார்த்துக்கொண்டிருந்த கல்லாசிகள் வேகமாக செய்தவுடனே அதிக சுறுசுறுப்பாய் லங்கரெடுத்து கப்பலை ஓட்டினார்கள். கரையை விட் டும் கப்பல்கள் சிலதூரம் கடலில்சென்றுவிட்டது அப்பொழுதுஅமீர் அவர்கள் உம்ருவை விட்டுவிட்டார். உடனே உம்ரு ஆனவர் கால் கை தலைஉதறிக்கொண்டு கப்பலில் அங்குமிங்கும் ஓடியோடிதிரிக்தவாயி னல் பலவிதமாய்புலம்பிக்கொண்டுசொல்லுகின்றார். யான் இந்த அரசி டத்தில்சேர்ந்த நிகேதவாழ்வையின் உறுதிப்பாட்டைவிடாம ல் நம்பி இருந்தேன் இவரோயான் கினைத்திருந்ததற்கு சேர்வோ தமாய் என்னுடைய உயிரைபோக்கடிக்கும் துஷ்மனுப்பந்துசேர்ந் தார். பென்று பலவிதம் புலம்பி அலைந்துகொண்டிருக்கும் வேளை யில் சப்பலானது சிலதூரம்சென்றுவிட்டது அவிடத்தில் தரிட்டா னது முப்பது கஜ தூரத்தில் உம்ருகண்களுக்கு தோற்றப்பட்ட படியால் அதை உம்ரு கரையென்று கினைத்து அதில் குதித்து அவ்வ ழியைப் பிடித்துக்கொண்டே தங்களூர்போய் சேர்ந்துவிடலாமென்று கருதியவராய் அத்திட்டின்மீது பாய்ந்து குதித்துவிட்டார். அது

நினைத்திருந்தேன் யானும் என்னுடைய ஆஸ்திகளுமிவ்வீணுய் அநியாயமாய் போய்விட்டதென்று,, நல்லவேளை அல்லாஹுவத் தஆலா அச்சொத்திற்கும் எனக்கும் ஹக்தாராகிய உம்மை அனுப்பிவைத்தான். பெண்ணுடைய இவ்வேளையின் பரிதாபநிலைமைக்கு இறங்கிவரும்படி உதவிசெய்தான் யென்றுசொன்னன். ஆஸ்தி யென்றால் உம்மு ஆனவருக்கு ஆசை இன்னவிதமிருக்குமென்று இச்சரித்திரத்தை வாசிக்கும் நண்பர்களுக்கு தெரிந்திருக்குமல்லவா? அப்பேர்ப்பட்ட பொருளாசையை யுடைய உம்மு ஆனவருக்கு அவன் சொன்னவுடனே மனந்திரும்பி வாயை மென்றுக்கொண்டு கண்களை வட்டமிட்டுச் சுழல பார்த்தவராய்யோசித்து நின்றார். பணமென்று மாத்திரம் அக்கிழவன் சொல்லாதிருக்கில் உம்மு ஆனவர் அடே கிழவாயானைப்படி உனக்கு மருமகனேன் போ போ நீயார் யென்று உதரிவிட்டவாய் இவ்வழிபயணத்தில் யெனக்கேன் உறவும் நேசமும் யென்று வெறுத்து போய்விட யெண்ணி யிருந்தார். பொருளி னாசையால் அவைகளை ஒன்றும் சொல்லாமல் அவரை நோக்கி மாமு! தாங்கள் எப்படி யெனக்கு மாமனுரீர்கள். அதேதனக்கு ஒன்றும் புலப்படவில்லையே யானறிய சொல்லுங்கள் யென்று கேட்டார். அதற்கவன் எனது அருமைமருமகனே நீயென்ன வாஸ்தவத்தில் அறியமாட்டாய்தான் அதேதப்படி யென்றால் நீ பிறந்த உடனே யான் சங்கல்தீப் யென்னும் தீவிற்கு போய்விட்டேன். அங்கு சென்று பல தொழிலினால் அநேக திரவியங்களை சம்பாதித்தேன். அப்படிதேடிய திரவியங்களை யெடுத்துக்கொண்டு நம்தேசத்திற்கு கப்பலேறி வந்துவிடலாமென்று நினைத்தேன நின்றதுகிற்க புயல்காற்று வீசியபடியால் கடல் உறமாகி கொந்தளிப்புக்கண்டு அதிக அலைமோதிக்கொண்டிருந்தது ஆகையால் கப்பல் இவ்விடத்திற்குச் சற்று தூரத்தில் சமுத்திரத்திற்குள் முழ்கிவிட்டது. அக்கப்பல் முழ்கும் வேளையில் அதுமுழுகும் குறிப்பறிந்த யான் மற்றவைகள் யெல்லாம் யெடுக்காமல் ஓர் பெட்டிநிறைய பலவகை இரத்தின ஆபரணங்கள் மாத்திரம் தகுந்தவைகளை யெடுத்துக்கொண்டு கடலில் குதித்து பெட்டியைப்பிடித்துக்கொண்டு நீந்திக்கொண்டே கரைவந்து சேர்ந்தேன். ஆனால் யான் அதிக கஷ்டமெடுத்து நீந்திகரையில் வந்த பார்க்கையில் யென்னுடைய கால்களானது நடக்கமுடியாமல் சோர்ந்திபோய்விட்டது நடக்கவும் யெழுந்திருக்கவும் முடியாமல் ஆகிவிட்டேன். இவ்வூரில் ஓர் பரிகாரி இருக்கின்றன் அவன் ஒருவனைத்தவிற இந்

அவர்நினைத்தபடி தரையல்லாமல் பெரிய மீனுயிருந்தபடியால் வெய்யில் படுவதற்காக தன்முதுகை ஜலத்திற்குமேல் காண்பித்து நின்று கொண்டிருந்தது அதைத் தரையென்று நினைத்து உம்மு குதித்த அதிர்ச்சியால் அம்மீனுனது ஜலத்திற்குள் முழ்கியது அப்படி மீன் முழ்கவே உம்முவும் ஜலத்தில் முழ்கி கையைகாலை ஆட்டி தத்தளித்து ஆவ்! ஆவ்! யென்று ஜலத்தை குடித்து மூச்சுத் திணறி திக்குமுக்காடி உயிர் நீங்கும் தருவாயிலிருக்கும் சமையத்தில் உடனே அமீர் அவர்கள் கப்பலிலிருக்கும் வேலையாட்களை விளித்து கபர்தார் ஜாக்கிரதை சீக்கிரம் உம்மு இரண்டாந்தடவை முழ்குமுன் உம்முவை தூக்கியெடுத்து கொண்டுவாருங்கள் அப்படி கொண்டுவருபவர்களுக்கு அநேக வெகுமதி கொடுக்கின்றேன் யென்றுரைத்தார். உடனே கப்பல் தொழிலாளிகள் இரும்புவலை சக்காத்தெப்பம் முதலாகிய பலகருவிகளை ஜலத்திலெறிந்து உம்முவை பக்குவமாய் வாரியெடுத்து அமீர் அவர்களின் முன்பில் கொண்டுவந்து உட்காரவைத்தார்கள் "முஹீபத்துடைய கஷ்டம் எப்பொழுது யாருக்கு தெரியவருமென்றால்" எவனொருவன் யெப்பொழுது அவ்வாபத்திற் சிக்கி மீண்டுவிடுகின்றனே அப்பொழுது அவனுக்கு தெரியும் யென்பதுபோல் அப்பொழுது தான் உம்மு ஆனவருக்கு ஆபத்தின்கஷ்டம் தெரியலாயிற்று ஆகையால் கடலிலிருந் தெடுக்கப்பட்ட உம்மு ஆனவர் நனையுண்ட கோழிபைப்போல் கைகால்களெல்லாம் சிலுர்த்து விடவிடத்து ஓர்மூலையில் உறங்கி உட்கார்ந்திருந்தார். இப்படியாக கப்பல்கள் செல்லும் நாட்களில் சிலநாள்சென்றபின் கப்பல்களெல்லாம் ஓர் தீவின் ஓரமாய் போய்சேர்ந்தது அப்பொழுது அவ்விடத்திலே தானே கப்பல்களை லங்கர்விட்டு நிறுத்தினர்கள் யாவருக்கும் முன்னால் உம்முவானவர் கரையிலிறங்கி அவிழ்த்துவிட்டவரைப்போல் சுயேச்சையாய் அங்குமிங்கும் ஓடியாடித் திரிந்துகொண்டிருந்தார். அவ்வேளையில் ஓர் மனிதன் மரத்தின் கீழ் உட்கார்ந்தவனுப் இடுப்பில் கயற்றைச்சுற்றி கட்டிக்கொண்டு இருந்தான் அவன் உம்முவை பார்த்தவுடனே சந்தோஷகரத்தினால் மனம்பூரித்தவனுய்தன்னுடைய முழுதென்னும் எண்ணம் நிறைவேறிற் றென்று ஆனந்தமுற்றவனுய் உம்முவை நோக்கி சொல்லுகின்றன். யாதெனில், ஏ! என்னுடைய அருமை புருமகனே உன்னுடைய சந்திப்பானது எனக்கு ஓர் குதரத்தாக இருக்கின்றது இவ்விடத்தில் நீர்வந்து சேர்ந்தானது ஆச்சரியத்திலும் ஆச்சரியமாயிருக்கின்றது நல்லவேளை வந்தீர் யான்

யென்றுரைத்தான். உம்ரு ஆனவர் அவனுடைய கால்களினுல் பின்னப்பட்டு நெறுக்குண்டு இடிபட்டு வருத்தமுற்றுக்கொண்டிருக்கும் வேளையில் இந்த மூதேவியினுடைய கால்களை பிடித்து தீக்கி கீழே போட்டுவிட்டோடிப்போய் விடலாமென்று யெண்ணியவராய், தங்கள் காதினுல் அவன்கால்களை பிடித்து இழுத்துப்பிரிக்கும் வேளையில் உம்ரு உடைய இருகரங்களையும் அதேதால்கால்களினுல் மாட்டிப் பின்னிசேர்த்துப் பிடித்துக்கொண்டு தன்னுடைய கையினுல் உம்ரு உடைய சிரசிலும் மூக்கிலும் கன்னத்திலும் பிடரியிலும் ஓங்கி ஓங்கி முளிகளினுல் குட்டி குத்திக்கொண்டு மெள்ள நடக்காதே வேகமாய் ஓடு இவ்வளவுகாள் பிருதாயில் உனக்கு தீனிபோட்டு வளர்த்தேன். இப்பொழுது தூங்கிக்கொண்டே ஏன் சளைக்கின்றாய் நீ ஓடாவிடில் உன்மூளையை கிழே சிந்தச்செய்து விடுவேனென்று ஓங்கி ஓங்கி தலையிற்குட்டி ஆஸ்தி இலவசமாய் கிடைத்துவிடுமோ எனக்கு நீ மருமகனுகி விடுவது கஷ்டமில்லாமல் இலவசமாய் அடிப்பட்டுவிடுமா? யென்று பலவிதம் மொழிந்து அடித்தான். அப்பொழுது உம்ரு ஆனவர் தம்முடைய சாலாக்கித்தனமுடைய ஐயாரி வேலையெல்லாம் அறவே மறந்து தட்டுக்கெட்டு தடுமாறி ஒன்றும் வழி அற்றவராய் அமீர் அவர்கள் இருக்கும் ஸ்தானத்தை நாடி ஓடி கப்பலிருக்கும் திசையை நோக்கிச்சென்று கிணக்கின்றார் அமீர் அவர்களிடத்தில் சென்றாலும் இந்தவாயில் நின்றும் நம்மை விடுதலையாக்கி வைப்பார்கள் யென்ற பெண்ணத்தோடு அதிவேகமாய் கம்புக்குக் கீழே ஏறத்தாழ்போனும் தம்பிக்குப் பெண்கேட்டார்போலும் சிக்கிரம் ஓடினுல் இந்தத்தொல்லையைவிட்டும் கலகமுபெறலாம் என்றும் அப்படிவேகமாய் ஓடுவதினுல் ஏடிபடாமலும் இருக்கலாமென்று நினைத்து ஓட்டம்பிடித்தார் அப்படி ஓடி சென்ற பார்வையில் அங்கிருக்கும் கஷ்டத்தை என்னென்றுரைப்பேன். தான் தான் முஸீபத்தில் முழுகிவிட்டேனென்று நினைத்தார். அதைக்காகவே அவ்விடத்தில் பெரிய முஸீபத்தில் ஆகப்பட்டவர்களாய் ஆளொன்றிற்கு விதப்படி ஒவ்வொரு தோற்கால் மனிதனே முதுகிற் சுமந்தவர்களாய் காக்குவெளியிற்றள்ள ஓடுகின்றார்கள் எவரெவர் இராஜாவாகனம் ஏற அதிகாரம்பெற்றிருந்தார்களோ அவர்களெல்லாம் இத்தோற்கால் மனிதருக்கு வாகனமாகி சுமந்துகொண்டு ஓடுகின்றார்கள். அச்சமயம் பொழுது அமீர் அவர்கள் உம்ருவை நோக்கி தங்களுடைய மர்மபாஷையாகிய ஐயாரிபாஷையால் உம்ருவே நாங்கள்தான் தெரியாமல்

காலத்தில்வேறெருவனும் இத்தீவிலில்லை ஆகையால் சிலமனிதர்கள் அதிககஷ்டத்தோடு என்னை அவனிடத்திற்கு கொண்டுபோனார்கள். அப்பரிகாரியானவன் தன்வீட்டிற்குபக்கத்தில் ஓர்விறகை எனக்கு குடிக்கூலிக்காக வாங்கிக் கொடுத்தான். யான் அதிலிருந்துவந்தேன் அவ்வைத்தியன் தன்னிடத்திலிருந்த நாக்குப்பூச்சிதைலத்தை யெடுத்துக்கொடுத்து தேய்க்கும்படிசொன்னன். ஆகையால் அத்தைலத்தின் குணமானது இவ்வளவுதூரம் மெல்லமெல்ல நகர்ந்துகொண்டேவரும்படியான ஸ்திதியில்ஆகிவிட்டேன். ஆனும் இவ்விடமிருந்து பழையபடி வீட்டுக்கு செலல முயன்றும் கூடாமல் இருக்கின்றது. நோயின்பாதையால் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்றேன். இப்படியிருக்கும் யான் எப்படி நடப்பேன் எழுந்திருக்கவே முடியாதிருக்கின்றேன். எப்படி நடக்கப்போகின்றேன். ஆகையால் நீ யென்னை முதுகில் தூக்கிக்கொண்டுசென்று வீட்டில்சேர்ப்பாயாகில் எனக்கு இரண்டு உபகாரம் செய்ததற்கொப்பாய் இருக்கும். யான் வீடுசென்றவுடனே என்னிடமிருக்கும் ஆஸ்தியாகிய அமானிதத்தை உனக்கு கொடுத்து விடுகின்றேன். அஃதெனக்கென்னத்திற்கு நீ சற்று சீதஞ்சிக்காரானபடியால் நீயே சந்தோஷமாய் ஆண்டனுபவித்துக்கொள்ளும் யானும் உன்னுடைய கிப்பலில் ஓரத்தில் இருந்து கொள்ளுகின்றேன் யென்றுரைத்தான். நிஜியத்தின் வார்த்தையை கிழவன் வாயிலெடுக்குமுன்னரெல்லாம் உம்ருவுடைய வாய்நிறைய ஜலம் ஊற ஆரம்பித்தது. இஃதும் நம்முடைய அதிர்ஷ்டவசத்தினால் தான் யெனக்கருதியவராய் பிறருடையகண்களுக்கு யான் சொந்தக்காரனுய்க்காணப்படுவதும் அல்லாவுவத ஆலாவினுடைய குமுஸ்தாதான் இலவசமான திரவியம் கைக்கு வருகின்றது யென்னுடைய அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். இதற்காகத்தான் ஆண்டவன் வரமாட்டேன் யெனறுசொன்ன யென்னை வலுவந்தமாய் வீரச்செய்தான் யென்று நினைத்தவராய் முன்பின் யோசிக்காமல் அந்த தோல்கால் மனிதனை தூக்கி முதுகினமேல் சுமந்துகொண்டார். உடனே அக்கிழவன் தன்னுடைய நீண்ட தோல்கால்களை உம்ரு உடைய இடுப்பில் வார்ப்பட்டையைப்போல் சுற்றிப்பிடித்துக்கொண்டு, தன்னுடைய முட்கால்களால் உம்ருவை நெறுக்கி இடித்துச், சொல்லுகின்றனன். நீ தினில் ஏ! யென்னுடைய வாகனமாகிய இராட்டைக்கால் துரையே சிக்கிரம் ஓடி உன்னுடைய சுறுசுறுப்பாகிய ஓட்டத்தை ஓடி சவாரிசெய்து என் மனதை சந்தோஷிக்கச் செய்

இந்த பலாவில் சிக்கிக்கொண்டோம் நீர்வந்தால் எங்களை இப்பலாயில் நின்றும், விடுவிப்பீரென்று நினைத்திருந்தோமே நீரும் எங்களைக் காண நீண்டுவெளுத்த தாடியையுடைய சவாரியை ஓப்புக்கொண்டு உலாவுகின்றீரேயென்று சொன்னர். அதையறிந்த உம்ரு மனதிலெண்ணுகின்றார் அமீர் அகப்படாமலிருந்தாலும் நம்மை விடுவிப்பார் அவரும் இதில் சிக்கிக்கொண்டிருக்கிறபடியால் இதற்கென்ன யோசனை செய்கின்றதென்று யோசித்தவர்களாய் நடக்கையில் முதுகிலிருக்கும் தோல்காலர்கள் ஆவரிகளை குட்டி அடித்து இடித்து அறைந்து ஓடு ஓடு யென்று விரட்டுவதும், சிலவேளை குதித்துக் குதித்து கூத்தாடி ஈட்டிய குதிரையைப்போல் நடந்தோடென்றும் சிலசமயம் குனுக்கி குனுக்கி சாய்ந்தாடி நடங்களென்றும் பலவித கோலங்கள் செய்துகொண்டு நடத்தினர்கள். அப்பொழுது உம்ரு உடைய முதுகிலிருப்பவன் மற்றவர்களுடைய முதுகிலிருப்பவர்களை நோக்கி ஏ! நம்மினத்தவர்களே! யென்னுடைய குதிரையை எப்படி எப்படி நட்த்தி செல்கின்றோமோ அதுபோல் நீங்களெல்லோரும் உங்கள் உங்கள் குதிரைகளை அடித்து விடித்து நடத்தி சவாரிசெய்யுங்கள் யாருடைய வாகனம் நன்றாய் வேகமாக செல்லுகின்றது பார்ப்போம் யாருடைய சவாரி பிற்றோ தங்கி உதைபடுகின்றது இவைகளையெல்லாம் நன்றாய் அனுபோகித்தபின் இவர்களை சுட்டுப் பொசுக்கி பிய்த்துப்பிடுங்கி புசித்துவிடலாம் பென்றுரைத்தான். கட்டுப் பொசிக்கித் தின்று விடுவோமென்ற வர்த்தை காதில் கேட்டவுடனே அமீர் உம்ரு முதலாகிய யாவருடைய புத்தியும் கலங்கி மனமருண்டு அயர்ந்து போய்விட்டனர்கள். உடனே முதுகிலிருக்கும் தோல் காலர்கள் தங்கள் தங்கள் பரிகளை முழங்கால்களால் நெருக்கி இடித்தும் கரங்களால் தலையிலும் பிட்டியிலும் ஓங்கி ஓங்கி குட்டிக்குத்தி நடத்தினர்கள். அவ்வேளையில் அதிகரென்பவருக்கு எல்லோரைவிட அதிகமாய் மூசிசுவாங்க ஆரம்பித்தது. ஒவ்வொரு அடியெடுத்து வைக்குந்தோறெல்லாம் பெருத்தசரீரமானபடியால் கீழேவிழுந்து விழுந்து முட்டிக்கால்களெல்லாம் உடைந்து இரத்தமயமாகிவிட்டது, உம்ருவானவர் மாத்திரம் ஓயாவேகமானது மற்றவர்கள் அவர் ஓடும் வேகத்தினால் கிளம்பும் புழுதியைகூட எட்டிக்கொள்ள முடியாமல் போய்விட்டது உம்ருமாத்திரம் எல்லோரைவிட முந்திக்கொண்டு ஆறுகாதவழி தூரம்முன்னே சென்றுவிட்டார். அதையறிந்த அவர் முதுகிலிருக்கும் தோற்காலன் அதிக

சந்தோஷமாய் மகிழ்ந்திருந்து என்னுடைய பரியானது எல்லாப் பரிகளைவிட காற்றைப்போல் பறக்கின்றது யென்னுடைய வயோதிபகாலத்திற்குதக்க வாகனம் எனக்குகிடைத்ததென்று மகிழ்ச்சிகொண்டாடினன். அவ்வேளையில் காத காத வழி தூரம் அக்காட்டில் கொடிமுந்திரிசெடிகளடர்ந்து பழுத்து குலுங்கி தேன்வடிந்துக்கொண்டிருக்கவும் அச்செடிகளுக்கிடையில் காட்டுச் சுரைகொடிகளடர்ந்து காய்கள் அதன் இடையே நெருங்கி பழுத்து நெத்தாயும், பழமாயும், முத்தலாயும், இளங்காயுமாய் பிஞ்சாயும், பூவாயும் இருக்கக்கண்ட உம்ரு மனதில் அதிக சந்தோஷமுற்றவராய் அச்சுரைகொடியின் கீழ்போய் நின்றகொண்டு முதுகிலிருக்கும் தோல் காலனை கூவியழைத்து மாரே! தாங்கள் இச்சுரைக்காய்களில் நின்றும் தேறிப் பழுத்த பெரிய நெத்தாய் ஒன்றைபறித்து அதன் காம்பு பக்கத்திலுள்ளதிறந்து உள்ளிருக்கும் விதை நூலி முதலியவைகளையெத்தமாய் நீக்கிவிட்டு இம்முந்திரி பழுத்த பழங்குலைகளில் வெந்நீர் வடியும் ரசங்களை அச்சுரைக் குடுக்கையில் நிரப்பி எனக்கு குடிப்பாட்டிக்கொண்டே செல்வீராகில் யான் இதினும் அதிவேகமாய் ஓடி உம்மனதை களிக்கச்செய்வேன் யென்றுரைத்தார். அந்தக்கேட்டுகொண்டிருந்த அறிவிழந்த தோற்காலன் உம்ரு சொல்லிய அவ்வார்த்தைகளை உறுதியாய் நம்பி உம்ரு சொன்னதுபோல் செய்ய ஆரம்பித்து முந்திரிபழச்சங்களை சுரக்குடுக்கையில் பிடித்து உம்ருவுக்கு குடிக்கக்கொடுத்து சிலபழுத்த முந்திரிப் பழங்களையும் பறித்து உம்ரு வாயில் ஊட்டி இன்னக்கொடுத்தான். அதை நின்ற உம்ரு முன் ஓடியதைப் பார்க்கிலும் அதிகமாய் குதிரைக் குதித்து கூத்தாடி கூத்தாடி வளைந்து வளைந்து காட்டியஞ்செய்து அதிக ஆடம்பரத்துடனே சவாரி செய்துக்கொண்டே பாட்டுப்பாட ஆரம்பித்து ஓடினர் அதையறிந்த தோற்காலன் உம்ருவை நோக்கி ஏ! யென்னுடைய அருமையான சினேகமே நீ சாகிறவரையில் யான் உன்னுடையவனாகவே இறங்கவேமாட்டேன் நீ மிகவும்நல்ல ஏறுவர்களனாய் என்னை மகிழவும் சிரிக்கவும் விசன முறீமலிருக்கவும் செய்து நல்ல ஓட்டம் காற்றிலும் அதிகமாய் ஓடுகின்றாய் யென்றுரைத்தான் அதை உணர்ந்த உம்ரு அவனைநோக்கி யான் உன்னை இன்னும் அதிகமாய் மகிழ்ச்செய்வேன் நீ மாத்திரம் அம்முந்திரிப்பழ ரசத்தை எனக்கு கொடுத்துக்கொண்டே வரவேண்டும் பத்திரம் நீர் குடித்துவிடப்போகின்றீர் அப்படி செய்யாமல் எனக்கே கொடுத்து வாவேண்டும் யென்றுரைத்

தார் அதை உணர்ந்த தோர்காலன் தன் மனதில் எண்ணுகின்றான். இம்முந்திரிப்பழ ரசமானது அதிக ருசியும் வெகு சீக்கிரத்தில் பலத்தையும் மனே உர்ச்சாகத்தையும்கொடுக்கின்றபோல் இருக்கின்றது ஆகையால் தான் அதைபிவன் குடித்தவுடனே எவ்வளவுதூரம் ஓடி அலுத்தவனுபினும் முன்னிலும் அதிகமாய் குதித்து ஓடுகின்றான் என்று யோசித்தவனுய் ஆகையால் தான் இவன் நம்மை குடிக்க வேண்டாமென்று வெறுக்கின்றனெனக் கருதி இரண்டு முளர் அக்கக் கொடிமுந்திரிப்பழத்தின் ரசத்தை குடித்தான். உடனே அதின் ருசியானது அவனுக்கு தெரிந்து விட்டபடியால் அச்சுரக் குடுக்கையை வாயில்வைத்து தலைகீழாய்விழ்த்த அதிலிருந்தவைகளை யெல்லாம் ஒரு துளியும் விடாமல் குடித்து விட்டான் அப்பொழுது உம்ரு ஆனவர் அதிவேகமாய் ஓட ஆரம்பித்தபடியால் அக்காட்டின் பச்சிலைகாற்று தோற்காலன் மேனியில் வீசவீச அம் முந்திரிப்பழ இரசத்தின் மஸ்தானது தலைக்கேறி வீக கால்கள் தளர்ந்து சோர்ந்து மயங்கி உம்ரு உனியை குதிரில் நின்றும் கீழே பொத்தென்று விழுந்தான். உடனே உம்ரு ஆனவர் வாளாயுதத்தை உருவி அவன் வயற்றை வெடித்து இரு துண்டமாக்கிவிட்டு மாமுனிவர்களே தூங்கிக்கொண்டிருக்கின்றனி சொல்லிவிட்டு அமீர் முதலாகியவர்கள் வரும் வழியை நோக்கிஓடி அமீரை அடுத்து ஓ! அரசியே நீர் ஓர்காபாரானவனுடைய மகளுக்காக இத்தனை முஸ்லீமானவர்களுடைய உயிரையும் தலைமேல் சுமந்துகொண்டீர், எனக்கும் இனி இல்லாத கஷ்டத்தை உண்டு பண்ணிவைத்தீர். அறிந்துகொள்ளும் இப்பாபம் சும்மாய்போய்விடாது கியாமத்து நாளையில் இதை கொண்டு உம்மை கேள்வி பலமாய் சேட்கப்படும் அப்பொழுது உம்முடைய கதி எப்படியாகுமோ அல்லாதான் அறிவான் இன்னும் இந்த சபரில் என்னென்ன நேருகின்றதோ அதுவும் அவர்தானறிவான் என்றுரைத்தார். அதையுணர்ந்த அமீரானவர் உம்ருவை நோக்கி உம்ரே நிஜம்சொன்னீர் வெளிரங்கத்தில் யான்பாவியாகவே இருக்கின்றேன் இன்னும் ஒன்றும் அறியாத இன்னுனுப் இருக்கின்றேன். நீர் இவ்வேளையில் செய்யும் உபகாரம் எவ்வானல் இத்தனை முஸ்லீம்களுடைய உயிரையும் காப்பாற்ற வேண்டியது யென்றுரைத்தார், அதைக்கேட்ட உம்ரு ஓ! ஹோ! போதும் போதும்காணும் எனக்கென்ன அக்கரை வந்தது பிரயோசனமில்லாமல் இத்தனை தோல்காலர்களை கொலைசெய்பவும் அவ்வளவு கொலைபாதகத்

தையும் என் தலையில் சுமந்துகொள்ளவும் எனக்கென்ன விதி வந்தது யென்றுரைத்தார். அதை உணர்ந்த அமீர் அவரை நோக்கி இத்தோற் காலன்களின் உயிர்வதையின் பாபமெல்லாம் யான் சுமந்து கொள்ளுகின்றேன் உமக்கு ஓர் ஆலோசனைக்கு இரண்டு அஸ்பதிகளாக கணக்கிட்டு நடுகின்றேன் இன்னும் உம்முடைய விஸ்வாசம் மறவாதவனுய் என்றும் நினைத்திருப்பேன் என்றுரைத்தார். பாதிஎன்றவுடனே உம்ரு இதோ ஆய்விட்டது தீர்த்துவிடுகிறேன் என்று சம்மதித்து ஒவ்வொரு தோற்காலன்களையும் தம்மிடமிருக்கும் காஞ்சாபுஜாருக்குள்ளே ஒரு நன்குடைபளித்த முப்பத்திரண்டு பட்டைகள்தீர்த்த சங்கை பல்லுகளென்னும் கல்லினுல் அடித்து கொன்று குவித்துவிட்டார், பின்புமுஸ்லீமானவர்கள் யாவரும் அத்தோல் காலன்களில்கின்றும் அல்லா சுப்றானஹுவத்தஆலாவினுடைய உதவியைக்கொண்டும் இச்சரிதையை தமிழில் செய்த கைக்காவூதென்பவனுடைய கனமிஜாஜரதிதனும் விடுதலைபெற்று மீண்டார்கள்.

வாழ்த்து விருத்தம்.

பூவகத்தும் நாவகத்தும் பொருளாய் நாளும்
புகழ்வதற்கே யுரியவனின் னருளிற்பூத்த
கோவகத்துக் கதிவசமா யிருக்கு நாய
குணனணிவா ஐம்முஹம்மது தர்சனுற்ற
மாவகமா யெமக்குந் தபுறோத்ர
வல்லரியா யெஅமீர் மிஜாவின்சீர்
தூவிகலாஞ் சரித்திரத்தை யாயி னின்னும்
தூலங்கும் ஹிந்தி தனிலின்றுந் தமிழிற்தந்த
வள்ளல்கலாம் கோவிந்த குடி கதீபு
வரிசைமிகும் அமீன்சாஹி பின்றதூய
பிள்ளைகளாம் ஷைகுதா வூத சாஹிப்
பிரபல்யன் ஷம்ஷுதீன் சாயிபுக்கும்
தெள்ளுதமிழ்ப் புலவோர்க்கும் படித்த மேர்க்கும்
சேர்ந்துசெவி கொடுத்தோர்க்கு பக்கிட்டோர்க்கும்
உள்ளமகிழ் வாய்ஞானச் சுகம் கொடுத்தே
உகந்தேற்றுக் கும்வாழ்வு யுதவுகோனே.

அமீர் ஹம்ஜா ஐங்கு
முதற்பாகம்.
சம்பூரணம்.

நவநீத ஞானன் ஞானசுந்தரியென்னும்

நௌபல் நாதக் நாதக் சுந்தர் சரித்திரம்,

இக்கதையின் சாரம்சங்கள் முழுவதையும் நன்குணர்ந்த நமது நண்பர்களின் அநேகர் எம்மிடம் நண்பீர்! இத்தமிழ்நாட்டின் கண் தொன்றுதொட் டிதுகாறும் நடைபெற்று வரும் கதைகள் பலவற்றி னுள்ளும் இவ்விதஅதிமேன்மை யமைந்த கதைகள் ஒன்றேனும் இல் லாததால் நீவிர் பெருங்கருணைகூர்ந்து தமிழில் யாவர்களுக்கும் எளி தில் விளங்கும் வண்ணம் மொழிபெயர்த்துத் தரவேண்டுமென்னப் பலகால் எம்மிடம் வேண்டிக்கொண்டமையால், அன்னோரின் கருத்துக் கிணங்கி இதைப் பாரசிலிருந்து தமிழில் மொழிபெயர் த்து கதையின் போக்குப்போல அவ்வவ்விடங்களுக்குத் தக்கபடி மிக வும் அழகான அனேகவித்தகிராப் படங்கள் தயைக்கப்பட்டுள் ளதுமுதல் அதிமேன்மையுடையது. வேண்டிய கர்வான்கள் நம்மி டத்தில் பிரயத்தனத்துக்குப் பெற்றுக்கொள்ளலாம். விலை நபர் 1—8—0

வயித்தியாமிர்த போதினி,

மருந்துகளின் எடை விபரங்கள் ஒழுக்கம் செய்யுஞ் இடங்களின் விபரம் கல்வங்களின் பேதபேதங்கள் கியாழம் சர்ப்பிடத்தக்க பர த்திரங்கள் இன்னின்னவிவ பென்னோய் ரோகிகளுக்கு அவஸ்தம் கொடுக்கும் காலநிர்ணயம் அக்கினிலக்ஷணமென்னும் புடம் போடும் விதம் ஔஷதபேதங்கள், வியஞ்சனஸ்தர்கள் சாப்பிடக்கூடிய பதார் த்தவிபரம் ஜீரண சக்தியைக்கொடுக்கும் பதார்த்தங்கள் ஸ்திரீகளு டைய விபரங்கள் அறியும்விதம். இப்புத்தகத்தை அனேக வித்வான் களாலும், அனேக டாக்டர்களாலும், அனேகமுறை பார்வையிடப் பட்டது. இப்புத்தகம் மானிடராகப்பிறந்த யாவருக்கும், அதிக முக்கியமான தாகையால் அவசியம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒவ் வொருபுத்தகம் இருக்கவேண்டும். [illegible]துப்பு காலிகோபைண்டு புஸ்தகம் 1-க்கு அணு 10 வி-பி-சார்ஜ்-அணு-3.

எ. எஸ். டி. [illegible]வின் சர்வரோக நிவாரன் என்னும்

வாதரோக ஹரி,

சகலவிதமான நோய்களினால் பீடிக்கப்பட்டு அநேகவித்தியர்களின் அவழ் த்தினால் எவ்விதமுமே குணகூலத்தையும் காணக்கூடாமலிருந்த அநேகரின் எல்லாவித நோய்களையும் அதிசிக்கிரத்தில் ஓட்டிவிட்டு ஆனந்தமடையச்செ ய்திருக்கும் இவ்வாதரோகஹரி யென்னும் இத்தலைப்பின் மகிமையை கண்ப ர்கள் ஒருதடவைவாங்கிப்பிரயோகித்து பரிசோதித்துப்பார்க்கள்.

விலை புட்டி 1-க்கு அணு 0 8. 0 வி-பி-சார்ஜ் அணு 0 3 0

டெஜன் 1-க்கு ரூபாய் 5 0 0 வி-பி-சார்ஜ் அணு 0 10 0

உபயோகிக்கும் விதம் புட்டிக்குமேல் காணலாம்.

எம். அஸிலாசம், அமீர்ஹம்ஸா புக் டிபோ,
நெ-27. அப்புமேஸ்திரிதெருவு,
மாபுஸ்கான்தேவடி, மதராஸ்.